வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

மாத்தளை சோமு

வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

வெளியீடு :

உதகம்

(உலகத் தமிழாய்வுக் கழகம்)

திருச்சி – சிட்னி – கோலாலம்பூர் – கொழும்பு

வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

ஆசிரியர்	:	மாத்தளை சோமு
பதிப்புரிமை	:	© ஆசிரியர்
நூல் பதிப்பாண்டு	:	2005 – சித்திரை
தாள்	:	டெம்மி 1x8, மேப்லித்தோ
பக்கங்கள்	:	280 + 16 = 296
அட்டை வடிவமைப்பு	:	விஜி வரைகலை (விஜி கிராபிக்ஸ்), சென்னை–24.
கணினி எழுத்து	:	வாஞ்சி மறுதோன்றி அச்சகம், துறையூர்.
அச்சாக்கம்	:	பரமேஸ்வரி வரைகலை (கிராபிக்ஸ்), சென்னை – 14.
வெளியீடு எண்	:	1
வெளியீடு	:	**உதகம்,** (உலகத் தமிழாய்வுக் கழகம்) (பழைய எண் : பி–5) புதிய எண் : பி–15, ஐந்தாவது முதன்மை சாலை, இராமலிங்க நகர், உறையூர், திருச்சி – 620 003. **UTHAGAM,** 1/1, CIVIL AVE, PENDLE HILL - 2145, NSW, AUSTRALIA.
விலை (புரவலர் நன்கொடையில்)	:	ரூபாய் 80
விற்பனை உரிமை	:	தமிழ்க்குரல் பதிப்பகம், பி–15, 5–ஆவது முதன்மை சாலை, இராமலிங்க நகர், திருச்சி – 3.

VIYAKKA VAIKKUM TAMILAR ARIVIYAL

❑ Author - *Maththalai Somu,* ❑ Language - *Tamil,* ❑ First Edition - *April 2005,* ❑ Paper - *Demy 1 x 8, Maplitio,* ❑ Pages - *280+16=296,* Published by - *Uthagam, P-15 (P-5) 5th Main Road, Ramalinga Nagar, Woraiyur, Trichy - 3.* ❑ Type Setting - *Vanchi Offset Printers, Thuraiyur.* ❑ Printed at - *Parameswari Graphics*, Chennai. ❑ Cover Design - *Viji Graphics*, Chennai.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் – 613 005, தமிழ்நாடு, இந்தியா

முனைவர் **இ.சுந்தரமூர்த்தி**

துணைவேந்தர்

அணிந்துரை

தமிழ் மிகப்பழமையான மொழிகளுள் ஒன்றாகும். தனிச்சிறப்புடைய இலக்கிய இலக்கண வளம் பெற்றது. இந்திய மற்றும் மேலைநாட்டு மொழியியல் வல்லுநர்கள் தமிழ் நெடிய வரலாற்றுப் பெருமை கொண்ட உயர்தனிச் செம்மொழி என்பர். வீரமா முனிவர், ஜி.யு.போப், கால்டுவெல், ரேனியஸ், ராட்லர், வின்சுலோ முதலாய பெருமக்கள் தமிழ்மொழியைப் படித்து அதன் ஆழத்தையும் செறிவையும் பெருமையையும் நன்குணர்ந்து மகிழ்ந்ததை அவர்தம் நூல்கள் கண்டு காட்டும்.

'வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்' என்னும் இந்நூலில் நூலாசிரியர் மாத்தளை சோமு அவர்கள் தமிழின் பல்வேறு வளங்களையும் உரிய தரவுகளோடு வெளிப்படுத்தியுள்ளார். தமிழரின் வரலாறு, நிலம், தொன்மை, தமிழ் மூதாதையர் எனப் பலதலைப்புகளில் அரிய தகவல்களைக் கூறியுள்ளார். உலகம் முழுவதும் சுற்றிப் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிந்த நூலாசிரியர் அப்பண்பாட்டுப் பழக்க வழக்கங்களுள் பல இன்றும் தமிழரின் நாகரிகப் பண்பாட்டு எச்சங்களாக விளங்குவதை எண்ணி எண்ணி வியக்கின்றார். ஆஸ்திரேலியாப் பழங்குடி மக்களின் பேச்சு வழக்கில் தமிழ்ச்சொற்கள் பலவும் விரவிக்கிடப்பதை பார்த்து வியந்துரைக்கின்றார்.

இலக்கண அடித்தளமுள்ள மொழியாகத் தமிழ் இருப்பதால் இன்றைய கணினி உலகத்திலும் நலிவுறாமல் கடல்தாண்டி ஒலியாகவும் ஒளியாகவும் எழுத்தாகவும் முழங்கிக் கொண்டிருக்கின்ற பெருமையை எண்ணி வியப்பார்.

தமிழ்ச்சித்தர்கள் பழங்காலத்திலேயே உடல், உயிர் என்ற இரண்டிலும் மிகத்தெளிவாக இருந்திருக்கிறார்கள். அந்தத் தெளிவுதான் மானுடம் மேம்பட அறிவியல் பார்வையுடன் சித்தர்கள் இயங்கினார்கள் என்பார்.

மண் சார்ந்த மரபின் நிலையில் இயற்கையோடு ஒட்டி உறவாடி உழவில் மேம்பட்ட திறத்தைச் சான்றுகள் வழிகண்டு விளக்கியுள்ளார். உடை, உணவு ஆகிய இன்றியமையா வாழ்க்கைக் கூறுகளிலும் பழந்தமிழர் மேம்பட்டிருந்த வாழ்வியல் நிலையை எடுத்துக் கூறுவார். மருத்துவ முன்னோடிகளாகத் தமிழர் விளங்கியிருந்தமையைச் சித்தர் இலக்கியம் கொண்டு புலப்படுத்துவார். தமிழர்களின் வாழ்வில் உண்ணுவதிலிருந்து உறங்குவதுவரை அறிவியல் ஊடுருவி நிற்பதை உணர்ந்து வியக்கின்றார். மருத்துவக் கருவிகள் இல்லாத காலத்திலும் நாடி பார்த்தறியும் கலையைப் பெற்றிருந்தனர் என்பார்.

நுண்கலைகளிலும் தமிழர் சிறந்து விளங்கியிருந்ததை இலக்கியங்கள் காட்டும். புனையா ஓவியம் என்னும் தொடரின் சிறப்பைப் புலப்படுத்துவார்.

தமிழர்களின் மரபுவழிக் கலைக்கூறுகளில் ஒன்று கோலம். இந்தக் கோலத்தைக் கலையாகத் தமிழ் உலகத்துக்கு அப்பால் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் புலப்படுத்தியுள்ளார்கள் என்பார். கனடா நாட்டில் டொரான்டோ நகரில் தமிழர்கள் வரைந்த மிகப்பெரிய கோலத்தை அந்நாட்டு ஆங்கில நாடுகள் சிறப்பாக வெளியிட்டதை நினைவு கூர்ந்து மகிழ்கின்றார்.

தமிழிசை, ஆடற்கலை, அணிகலன்கள், அளவைக்குறியீடுகள், கட்டடக்கலை, வானயியல் அறிவு, மண்ணியல் கருத்துக்கள் எனத் தமிழரின் பழந்தமிழ்ச் சிந்தனைகளை நூலாசிரியர் தொகுத்துரைக்கும்போது பழந்தமிழரின் சிறந்த வாழ்க்கை நிலையை எண்ணி மகிழ்கின்றோம்.

இன்றைய தலைமுறைக்கு நம்முடைய முந்தையோரின் பெருமை நிலையை எடுத்துச் சொல்லி அவர்கள் போற்றிய கலைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்ற சிந்தனையை இவ்வரியநூல் தரும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் மாத்தளை சோமு அவர்கள் பழந்தமிழரின் வாழ்வியல் மேம்பாட்டை நன்கு புலப்படுத்தியுள்ளார். தொன்மைச் சிந்தனைகளுள் காணலாகும் அறிவியல் பார்வையையும் இன்றைய சூழலோடு ஒப்பிட்டு உரைப்பது பாராட்டத்தக்கது.

பழந்தமிழரின் நாகரிகப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளத் துணைபுரியும் அரியநூல்.

நூலாசிரியர் திரு. மாத்தளை சோமு அவர்கட்கு இனிய பாராட்டுதல்கள்.

இ.சுந்தரமூர்த்தி,
துணைவேந்தர்,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

நாள் : 15.12.2004

மணவை முஸ்தபா,
ஆசிரியர்,
'பிரிட்டானிகா கலைக்களஞ்சியம்' – தமிழ்

முன்னுரை

இது அறிவியல் ஊழி. இன்று அணு முதல் அண்டம்வரை ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சி நம்மை வியக்க வைக்கிறது. அறிவியலின் துணையின்றி அரையங்குல வாழ்வைக்கூட இன்று நம்மால் நகர்த்த முடியாநிலை. இப்போக்குக்கு ஈடுகொடுப்பவர்களே இன்றைய வாழ்வில் வீறுநடைபோடமுடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, அறிவியல் அறிவையும், உணர்வையும் முனைந்து வளர்க்க வேண்டியது இன்றையச் சூழலில் ஒருவகைக் காலக் கட்டாயமாகும். மொழியும், கலையும், பண்பாடும் கூட அறிவியல் சார்ந்து வளர வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

மற்ற இனமக்களுக்கு வேண்டுமானால் இது ஒரு புதுவகைப் போக்காக இருக்கலாம். ஆனால், தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் அறிவியல் உணர்விலும் சிந்தனையிலும் ஒரு காலத்தில் ஆழந்தோய்ந்திருந்த இனம் என்பதை கடந்தகால வரலாறு கட்டியம் கூறிக்கொண்டுள்ளது. சங்க கால இலக்கியங்கள் எண்ணற்ற சான்றுகளை எடுத்தியம்பிக்கொண்டுள்ளன. இன்னும் சொல்லப்போனால் அறிவியல் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலக்கியம் படைத்த பெருமை தமிழனுக்கு மட்டுமே வாய்ந்த அரும்பெறும் வாய்ப்பாகும். இதை வரலாற்று வழியே நன்கு உணர்ந்து தெளியலாம்.

சங்க காலத்துக்கு முன்னதாக வாழ்ந்த தமிழன் வாழ்வில் சமயங்கள் எதுவும் தடம் பதிக்காத காலம். சமயச் சாயல்படியாத அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த தமிழன் இயற்கையோடியைந்து வாழ்ந்தான். அறிவியல் அறிவும் உணர்வுமே அவன் வாழ்க்கையை உந்திக் கொண்டிருந்தன. வானவியலிலும், பூகோளவியலிலும் திறம்பட்டவனாகத் திகழ்ந்தான். உலகெலாம் கப்பல் செலுத்தி வாணிகம் செய்து தன் வாழ்வை வளமாக்கிக்கொண்டவன்.

அன்று அறிவியல் அடிப்படையில் தன் வாழ்வுச் சக்கரத்தை நகர்த்திய தமிழன், தன் அறிவியல் சிந்தனைகளைத் தமிழில் அவ்வப்போது பதிவு செய்து வைக்கத் தவறவில்லை. சான்றாக, இந்த உலகம் ஐம்பெரும் பூதங்கள் என்றழைக்கப்படும் ஐம்பெரும் அடிப்படைத் தனிமங்களால் ஆனது என்பதை பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் மேலை உலகம் உணரத்தொடங்கியது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இதனை நன்கு உணர்ந்து தெளிந்து உலகுக்கு உணர்த்தியது தமிழினம் என்பதைக் காணும்போது, அன்றே எவ்வளவு அறிவியல் உணர்வோடும் சிந்தனையோடும் தமிழினம்

வாழ்ந்துள்ளது என்பது வியப்பூட்டும் செய்தியாக உள்ளது.

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்
என்றாங்கு ஐம்பூதத்தியற்கை"

என்பது சங்கப்பாடல்.

இங்கு உலகு ஐம்பூதங்களிலானது என்பதோடு எதிலிருந்து எது உருவானது என்ற ஐம்பூத வரலாற்றையும் நிரல்படக் கூறியுள்ளன. நிலமும் நிலத்திலிருந்து ஆகாயமும், அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும் உருவாயின என்ற ஐம்பூதத் தோற்ற வரலாறு இன்றைய அறிவியல் கண்டுபிடிப்பை அப்படியே அடியொற்றிருப்பது அன்றையத் தமிழனின் அறிவியல் அறிவின் நுண்மான் நுழைபுலத்தை விண்டுரைப்பதாயுள்ளது.

அது மட்டுமா? இந்த உலகம் எப்படி உருவாயிற்று என்ற உணர்வு மேலையுலகில் தடம் பதிக்கும் முன்பே அதன் வரலாற்றைத் தெள்ளத் தெளிவாக பாடல் வரிகளாகப் பதிவு செய்தவன் தமிழன்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சமுதாயம் உலகம் தட்டை வடிவானது என்றே கருதியிருந்தது. ஆனால், பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலிலியோ எனும் வானவியல் விஞ்ஞானி உலகம் உருண்டை வடிவானது என்பதை ஆய்வுபூர்வமாக அறிவியல் அடிப்படையில் கூறியதைக்கேட்டு, அன்றைய ஆட்சி அவரைச் சிறையிலிட்டு சித்திரவதை செய்தது. ஆனால், உலகம் உருண்டை வடிவினது. அது மாபெரும் நெருப்புக்கோளமான சூரியனிலிருந்து தெறித்து விழுந்த அனற்பிழம்பு. நெருப்பு உருண்டையாக ஒரு ஊழிக்காலம் விண்ணில் சுழன்று கொண்டிருந்தது. நாளடைவில் மேற்பகுதி வெப்பம் குறைந்து பனிபடலமாகப் படிய ஒரு ஊழிக்காலம் எடுத்துக்கொண்டது. அதன்பின், பனி உருகி நீராக மாற, தரைப்பகுதி தலைதூக்க, அதில் உயிரினங்கள் உருவாகலாயின என்று உலகத்தின் உயிரினத்தோற்ற (பரிணாம) வரலாற்றையே திருக்குறள்போல, ஒன்றேமுக்கால் அடிகளில்,

"செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தன்பெயல் தலைஇய ஊழியும்"

எனக் கூறியுள்ளது அன்றே அவன் பெற்றிருந்த அறிவியல் அறிவின் உச்சத்தை உணர்த்துவதாயுள்ளது.

இந்த அடிப்படையில் சங்கத் தமிழனின் வாழ்வியலைக் காண முற்பட்டால், அவன் பெற்றிருந்த, வளர்ந்து வளப்படுத்தியிருந்த அறிவியல்

அறிவும் அறிவியல் சார்ந்த மனப்பான்மையும் அதை அவன் சங்க இலக்கியங்களில் வெளிப்படுத்திய பாங்கையும் மீண்டும் தமிழுலகுக்கு நினைவூட்டும் முயற்சியாக, மறுமலர்ச்சி எழுத்தாளர் திரு.மாத்தளை சோமு அவர்கள் மேற்கொண்ட எழுத்து முயற்சிதான் "வியக்கவைக்கும் தமிழர் அறிவியல்" எனும் அரிய நூலாக மலர்ந்துள்ளது.

காலத்தின் போக்கையும் தேவையையும் அனுசரித்து மொழியும் மொழிசார்ந்த இலக்கியமும் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மொழியும் இலக்கியமும் வாழும் வெற்றியை வலுவாகப் பெறமுடியும் என்ற இயற்கை நியதிக்கிணங்க, அறிவியல்பூர்வமாக வாழ்ந்தவன் சங்கத்துக்குச் சற்று முன்னதாக வாழ்ந்த தமிழன். சங்க காலத் தமிழன் சமுதாயப் பூர்வமாக வாழத்தலைப்பட்டான்.

பின் வடபுலத்திலிருந்து அடுத்தடுத்துப் படையெடுத்து பௌதிக சமயமும், அதை எதிர்த்து வந்த சமண சமயமும் ஒன்றன்பின் ஒன்றாக தமிழகம் புகுந்தன. இயற்கை நியதிக்கொப்ப இச்சமயங்களின் அடிப்படையில்தான் வாழ்வையும் மொழி, இலக்கியத்தையும் வளர்க்க முற்பட்டான் தமிழன். எனவே, சமுதாயத் தமிழ் சமயச் தமிழாகியது. பின்னர், வெளிநாட்டிலிருந்து வந்த கிருஸ்தவமும், இஸ்லாமும் தங்கள் பங்களிப்பை தமிழுக்குத் திறம்படத் தரத் தவறவில்லை. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் அவர்கள் வாயிலாக வந்து சேர்ந்த சிறுகதை, புதினம், திறனாய்வு, ஓரங்க நாடகமென புதுமை இலக்கிய வடிவங்களோடு புதுமைத் தமிழாக மலர்ந்தது. இன்று, அழுத்தமாகத் தடம் பதிந்துள்ள அறிவியல் வளர்ச்சிக்கேற்ப 'அறிவியல் தமிழ்' எனும் மகுடத்தோடு தமிழ் தன்னை தகவமைத்துக் கொண்டு வீறுடன் வளரத் தொடங்கியுள்ளது. இதனால் அறிவியல் தமிழை புதுத்தமிழ் என புகழ்வதோடு 'நான்காம் தமிழ்' என்றும் கூறத் தலைப்பட்டுள்ளனர். ஆழ்ந்து நோக்கினால், சங்கத்துக்கு முன்னதாக வாழ்ந்த தமிழன் வளர்த்த அறிவியல் தமிழ்தான் முதல் தமிழ் மூத்த தமிழ். இடைக்காலத்தில் எவ்வாறோ ஏற்பட்டுவிட்ட இடைவெளியை குறுக்கி அன்றை அறிவியல் தமிழுக்கும் இன்றைய அறிவியல் தமிழுக்குமிடையே இணைப்பையும், பிணைப்பையும் உருவாக்கும் முயற்சியைத்தான் அரைநூற்றாக என் போன்றவர்கள் மேற்கொண்டுள்ளோம். அதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையிலேயே நண்பர் மாத்தளை சோமு இந்த அரிய ஆய்வுநூலை வெளிப்படுத்தியுள்ளார் என்பது மிகவும் மகிழ்வளிக்கிறது.

அன்றையத் தமிழனின் அறிவியல் அறிவையும், உணர்வையும் முழுமையாக உணர்ந்து தெளிய, நாம் அவற்றை அறிவியல் கண்ணோட்டத்துடன் காணமுற்பட்டால், அவனது அறிவியல் அறிவின் ஆழத்தை நம்மால் கண்டறிய முடியும். சான்றாக,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்பது முதற்குறள்.

'எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதன்மையாகக் கொண்டிருப்பது போன்று, உலகு இறைவனை முதன்மையாகக் கொண்டுள்ளது' என எளிய பொருள் கூறப்படுகிறது. இங்கு 'ஆதி பகவன்' என்பதற்கு எத்தனையோ வகைகளில் பொருள் கூறப்படுகிறது. அதே போன்று அறிவியல் அடிப்படையிலும் பொருள் காண முற்படலாமே!

'பகவன்' என்ற சொல்லை 'பகவு+அன்' எனப் பிரிக்கலாம். 'பகவு' என்பது ஒரு பொருளைப் பகுப்பதைக் குறிக்கும் சொல் ஆகும். எந்த ஒரு பொருளையும் பகுத்துக்கொண்டே சென்றால் மேலும் பகுக்க முடியாத ஒரு சிறு கூறு இறுதிப் பகுதியாக அமையும். இவ்வாறு அடித்தளக்கூறாக முடிவுப் பொருளாக அமைவது 'அணு' ஆகும். உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுமே அணு அடுக்குகளாலானது என்பது அடிப்படை அறிவியல் உண்மை. இந்த அறிவியல் அறிவோடும் உணர்வோடும் நோக்கும்போது அனைத்துக்கும் 'அணு' ஆதியாயிருப்பது போன்று அனைத்து மொழிகளுக்கும் அகரம் முதலாவதாக உள்ளது. அதே போன்று இறைவன் முதல்வனாயுள்ளான் எனப்பொருள் கொள்ளும்போது வள்ளுவரின் அறிவியல் அறிவும் உணர்வும் நம்மை வியப்பிலாழ்த்தியுள்ளது.

இத்தகைய அறிவியல் கண்ணோட்டத்தோடு பழந்தமிழனின் வாழ்வியலை ஆராய்ந்து, அரிய உண்மைகளைத் தன்னளவில் கண்டறிந்து கூறியுள்ளார் நூலாசிரியர். அத்துடன் நில்லாது வரலாற்றுப் போக்கில் அன்றைய காலப்போக்கை இன்றையப் போக்குடன் இணைத்துக்காட்டி, அறிவியல்பூர்வமான இணைப்புக்கும் பிணைப்புக்கும் வழிகோறுகிறார். பழந்தமிழனின் பெருமைகளை உரிய வகையில் அறிய வழிகாட்டும் ஒருவகையான புதிய உத்தி இது என்பதில் ஐயமில்லை.

பழந்தமிழர் வாழ்வியலை இருபது பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு தன் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார் ஆசிரியர். 'தமிழரின் உலகம்' எனும் முதற்பகுதி தமிழனின் உலகளாவிய சிந்தனையின் அடித்தளப் பண்பை அருமையாக ஆய்ந்து விளக்குவதன் வாயிலாக நூலுக்கு ஒரு நல்ல தொடக்கத்தைத் தந்துள்ளார் எனலாம். பழந்தமிழன் கொண்டிருந்த அளவுக்கு உலகளாவிய சமூகச் சிந்தனை, அந்த காலகட்டத்தில் உலகெங்கும் வாழ்ந்த வேறு எந்த இனத்துக்காவது இருந்திருக்க முடியுமா? அதற்கான வரலாற்றுத் தடம் ஏதேனும் உண்டா? என்ற ஆசிரியரின் கேள்வி விடை காணவியலா வினாவாகவே இருக்க நேர்வது, நம் மூதாதையரின் அன்றைய உலகளாவிய சிந்தனைக்குக் கிட்டிய மிகப்பெரும் சிறப்பாகும்.

பழந்தமிழர் இலக்கியங்களில் கூறப்படும் 'எழுபிறப்பு' எனும் சொல்லை ஏழு பிறப்புகளாகக் கொள்ளாது அறிவியலின் 'மரபணு' அடிப்படையில் 'ஏழு தலைமுறை' எனக் கொண்டு ஆய்வது சிறப்பாக உள்ளது. அதே போக்கில் கருவளர்ச்சித் தன்மைகளைப் பற்றி திருமூலர் கூறும் கருத்துக்களை இன்றைய

மரபணு அடிப்படையில் ஆராய்வது சுவையாக உள்ளது. திருமூலர் முதலாகவுள்ள தமிழ்ச் சித்தர்களின் ஆன்மீகச் சிந்தனைகளை இன்றைய அறிவியல் அடிப்படையில் விளக்கும்போது ஆன்மிகமும் அறிவியலும் மனித வாழ்வின் இரு கண்கள் என்ற உணர்வே நம் உள்ளத்தில் அழுந்தப்பதிகிறது.

தமிழ்ப் பெண்கள் புடவை அணிவது கவிதைபோல் உள்ளது எனக்கூறும் மேனாட்டார் உணர்வை நுட்பமாக விளக்கமுயலும் நூலாசிரியர் 'புடவை பக்தியை வளர்க்கிறது, அரைகுறை ஆடைமோகத்தை வளர்க்கிறது' என்று கூறுவது சிந்தனைக்குரியதாக உள்ளது.

தமிழர் பேணிய உணவுப் பழக்கவழக்கங்களைப் பற்றி இலக்கிய ஆதார அடிப்படையில் வரலாற்றுப் பூர்வமாகவும் அறிவியல் போக்கிலும் அலசும் பாங்கு படித்தின்புறத்தக்கதாகும்.

'உணவே மருந்து, மருந்தே உணவு' என்ற அடிப்படையில் அமைந்த தமிழ் மருத்துவ முறையை அறிவியல் பூர்வமாக சித்தர்தம் சிந்தனைவழி ஆராய்கிறபோது தமிழ் மருத்துவமுறையின் சிறப்பும் உயர்வும் நம்மை வியக்க வைக்கின்றன.

சித்தர் சிந்தனைகள் மறைபொருளுடையனவாக, இன்னும் சொல்லப்போனால் பூடகமாக அமைந்துள்ளனவாகும். அவற்றில் பொதிந்துள்ள கருத்து நுட்பங்களைத் திட்ப, நுட்பத்துடன் ஆசிரியர் விளக்கும்போது, அவற்றில் இலைமறை காயாக அமைந்துள்ள அறிவியல் சாரத்தை அழகு தமிழில் தெள்ளத் தெளிவாக அள்ளித்தர முயல்வது ஆசிரியரின் எழுத்தாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழ் இலக்கியங்களைப் பற்றி விரிவாகப்பேச முனையும் நூலாசிரியர் தமிழ் இலக்கிய நோக்கையும் போக்கையும் விவரிப்பதுடன் பழந்தமிழ் இலக்கியங்கள் அழிந்ததற்கான காரணங்களையும், எஞ்சியவை அச்சுவாகனமேறி வாழ்வு பெற்றதையும் வரலாற்று அடிப்படையில் விவரிக்கத் தவறவில்லை.

பழந்தமிழர் போற்றி வளர்த்த ஓவியக்கலையாக இருக்கட்டும் அல்லது சிற்பமாக, ஏன், வாசலில் போடும் கோலமாகக்கூட இருக்கட்டும் அவற்றிற்குரிய சிறப்புகளை அறிவியல்பூர்வமாக விளக்க முனையும் அதே நேரத்தில் அவற்றின் வளர்ச்சி வரலாற்றை நிரல்பட விவரிக்கும்முறை பாராட்டத்தக்கதாகும்.

தமிழிசை பற்றியும், இசைக்கருவிகள் குறித்தும், ஆடற்கலை பற்றியும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆடை, அணிகலன்களைக் குறித்தும் இலக்கியப் படைப்புகளின் வழியே விளக்கும் பாங்கு வியப்பூட்டுவதாயுள்ளது. இதற்காக நூலாசிரியர் மேற்கொண்ட முயற்சி போற்றத்தக்கதாகும். தமிழர்காலத் திறனை, அவற்றின் தனித்துவச் சிறப்பை அறிவியல்பூர்வமாக விளக்கும் ஆசிரியர், இக்காலத் தலைமுறையினர் பழந்தமிழர் காலச் சிறப்பைத் தெளிவாக அறிந்தின்புறும் வகையில் படங்களோடும் விளக்கக் குறிப்புகளோடும்

எடுத்துக்கூறி விளக்க மேற்கொள்ளும் உத்தி பாராட்டத்தக்கதாகும்.

'கடல் நாகரிகம்' குறித்த கட்டுரைபற்றி குறிப்பிட வேண்டும். தமிழரின் கடல் வாணிக வரலாற்றை இலக்கிய ஆதாரங்களோடு அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து, ஆழிய உண்மைகளைத் தக்க ஆதாரங்களோடு வெளிப்படுத்தி படிப்போர் புருவங்களை உயரச் செய்கிறார் ஆசிரியர் மாத்தளை சோமு. ரோமானியர்கட்கு கடல் வாணிக முறையைக் கற்றுக் கொடுத்தவர்களே தமிழர்தாம் என்பதை ஆசிரியர் ஆதாரபூர்வமாக நிறுவும்போது நாம் வியந்துபோகிறோம்.

மேலும், தமிழர்தம் கட்டடக்கலைச் சிறப்பையும் அவற்றைப் பேணி வளர்த்த பாங்கையும் இந்நூல் சிறப்பாக ஆய்கிறது. அதே போன்று மண்ணியல், வானவியல் அதிலும் குறிப்பாக விண்ணியல் பற்றி பல அரிய தகவல்களை அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து கூறுவது அருமை.

நூலின் இறுதிப் பகுதியாகத் தமிழர் விளையாட்டுக்களைப் பற்றி திறம்பட ஆய்கிறார் ஆசிரியர். சங்க காலம் தொட்டு இதுவரை தொடரும் தமிழர் விளையாட்டுக்களை அறிவியல் போக்கில் ஆராய்ந்து பல அரிய தகவல்களைத் தருகிறார். தமிழர்க்கேயுரிய விளையாட்டுக்களை இலக்கிய, பண்பாட்டு வழியே ஆராய்வது வரவேற்கத்தக்கதாகும். காலப்போக்கில் சில விளையாட்டுக்கள் வேறுவடிவெடுக்க நேர்ந்ததையும் ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்நூலைக் கண்ணுறும் வாசகர்கள் ஒவ்வொருவரும் அறிவியல் கண்ணாடி அணிந்தவர்களாக அன்றையத் தமிழர் வாழ்வையும் அவர்தம் வளர்ச்சி நிலைகளையும் தெளிவாக அறிந்துணரும் அரிய வாய்ப்பை இந்நூல் எளிதாக வழங்குகிறது. ஆசிரியரின் சொல்லாட்சித் திறனும் சுவைபடச் சொல்லும் பாங்கும் பாராட்டத்தக்கவையாகும். இதுபோன்ற நூல்களை நூலாசிரியர் மாத்தளை சோமு அவர்களிடமிருந்து தமிழுலகம் அதிகம் எதிர்பார்ப்பது இயல்புதானே!

5.1.2005 அன்பன்,

சென்னை-40 **மணவை முஸ்தபா,**

ஆசிரியர்,

'பிரிட்டானிகா கலைக்களஞ்சியம்' – தமிழ்

என்னுரை

மண்ணில் மனிதனின் காலடிகள் பட்ட காலம் முதல் விண்ணில் அவன் கால் வைத்த இன்றைய காலம் வரை இம்மண்ணில் மனிதன், தனக்காக உருவாக்கிய யாவுமே அறிவியலால் வந்ததுதான்.

நெருப்பை உருவாக்கக் கற்களை முதன் முதலில் மனிதன் உரசிப் பார்த்தபோதே அறிவியல் பிறந்துவிட்டது.

அறிவியல் மனிதனின் நம்பிக்கை. அதுவே மனித வாழ்க்கையை மேம்படுத்தியிருக்கிறது. அறிவியல் இல்லாமல் மனிதருக்கு வாழ்க்கை இருக்க முடியாது.

இன்று நவீனக் கருவிகளை எந்திரங்களை கையகப்படுத்திக்கொண்டு வாழ்கின்ற மனிதன் நேற்றைய மனிதனைக் கிண்டல் செய்ய முடியாது.

நேற்றைய மனிதன் நேற்றைய வாழ்க்கைக்குத் தேவையான அறிவியலைப் பெற்றிருந்தான். நேற்று என்பது தொடக்கம்; முடிவல்ல. எனவே, நேற்று தொடங்கிய அறிவியல்தான் இன்று வளர்ந்திருக்கிறது. இதைவிட அற்புதமான அறிவியல் வளர்ச்சி நாளை வரலாம்; வரும்.

தமிழில் அறிவியல் என்று பார்க்கிறபோது தமிழருக்கே சொந்தமான அறிவியல் முடக்கப்பட்டு, மேலைத்தேய அறிவியல் சிந்தனைகள் தமிழில் மொழிபெயர்த்தால் போதும் என்பதே மேம்பட்டு நிற்கிறது. பிறநாட்டு அறிவியல் தமிழில் பெயர்வது தேவையானதுதான். ஆனால் தமிழரிடம் சங்க காலத்தில் இருந்து பரிணாம வளர்ச்சியடையாமல் போன பன்முக அறிவியலை அறிந்துகொள்வது அவசியமானது அல்லவா?

சங்க கால தமிழரிடம் அறிவியல் இருந்ததை சங்ககால இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், திருமந்திரம், திருவாசகம் மற்றும் சங்க இலக்கிய நூல்களை ஆய்வு செய்து பார்க்கின்றபோது பழந்தமிழர் வாழ்க்கையில் அறிவியல் ஆழமாய் இருந்ததைத் தெளிவாக அறியமுடிகிறது. அவர்களின் பொதுவான சிந்தனைகூட உலகத்தை ஒட்டியே இருந்திருக்கின்றது. ஆகவே தமிழரின் அறிவியலை இன்றைக்கும் புறக்கணிக்க முடியாது.

தமிழரின் அறிவியல் ஒவ்வொரு தமிழரும் தெரிந்துகொள்ள வேண்டியதாகும். அவ்வாறு தமிழர் அறிவியலைத் தெரிந்துகொண்டால் உலகமயமாக்கல் என்ற போர்வையில் வருகிற அந்நியப் பண்பாட்டு ஊடுருவல்களை எதிர்கொண்டு நமது தனித்துவ அடையாளங்களைத் தற்காத்துக்கொள்ள முடியும்.

தமிழரின் அறிவியல் என்பது தமிழரின் மரபுகளை புரிந்துகொள்ள உதவும் ஒரு பாடமாகும். அந்தப் பாடத்தை நானே அறியவும் கற்றுக்கொள்ளவும் ஒரு வாய்ப்பு ஒரே ஒரு புத்தகத்தால் எனக்குக் கிடைத்தது. அந்தப் புத்தகம் அமரர் மீ.ப.சோமு எழுதிய 'நமது செல்வம்' என்பதே.

ஒரு தீபத்தால் இன்னொரு தீபத்தை ஏற்றமுடியும் என்பதுபோல் அந்த நூல் எனக்குள் தமிழர் அறிவியல் தேடலைத் தூண்டியது. அதன்பிறகு தமிழர் அறிவியல் தொடர்பான புத்தகங்களைத் தேடி என் எழுத்துப் பயணத்தைத் தொடர்ந்தேன். ஆனால் எனக்குத் தேவையான பல நூல்கள் ஆஸ்திரேலியா – சிட்னி நகரில் கிடைக்கவில்லை. ஆகவே தமிழகம் வந்து ஈராண்டுகள் தங்கி தமிழர் அறிவியலுக்கான நூல்களைத் தேடி ஆய்வு செய்து ஒரு தொடரே எழுதி முடித்தேன். அதுதான் நூல்வடிவில் உங்கள் கைகளில் இருக்கும் 'வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்' ஆகும்.

இந்நூல் எழுதுவதற்கான தேடலில் ஆலோசனை நல்கிய சிற்றிதழ் சேகரிப்பாளர் தி.மா.சரவணன், கவிஞர் ராஜா ரகுநாதன், திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழக திருச்சி மேலாளர் இரா.காளத்தீஸ்வரன், திருக்குறள் சு.முருகானந்தம், கவிஞர் வேல்முருகன், பழங்காசு சீனிவாசன், திருச்சி ராஜா கார்ப்பரேசன் ந.நாகராஜா ஆகியோருக்கும், பல்வேறு பணிகளுக்கிடையில் அணிந்துரை வழங்கிய தஞ்சைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களுக்கும், மிகச்சிறப்பான முன்னுரை நல்கிய தமிழறிஞர் பிரிட்டானிகா கலைக்களஞ்சிய (தமிழ்) ஆசிரியர் மணவை முஸ்தபா அவர்களுக்கும், இந்நூலை கணினியில் எழுத்துருவாக்கம் செய்ய உதவிய துறையூர் வாஞ்சி மறுதோன்றி அச்சகம் இராம.தொல்காப்பியன், பெ.ரஜினி, புவனேஸ்வரி, வை.புஷ்பா ஆகியோருக்கும், சிறப்பான முறையில் அச்சிட்ட பரமேஸ்வரி வரைகலைக்கும், அட்டை வடிவமைப்பில் உதவிய விஜி வரைகலைக்கும், நூல் உருவாக்கத்தில் ஆலோசனை வழங்கிய உமா பதிப்பகம் இலட்சுமணன் அவர்களுக்கும் எனது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இத்தொடர் கட்டுரை பரவலாகத் தமிழ் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கில் புகழ்பெற்ற இலங்கை தமிழ் நாளிதழான வீரகேசரி ஞாயிறு இதழிலும் மலேசிய தமிழ் நாளிதழான மலேசிய நண்பன் ஞாயிறு இதழிலும் தொடராக வெளிவந்தது. இதனை பிரசுரித்த வீரகேசரி ஞாயிறு இதழாசிரியர் திரு. வி.தேவராஜ் அவர்களுக்கும், மலேசிய நண்பன் நிர்வாக ஆசிரியர் ஆதி.குமணன் அவர்களுக்கும், மலேசிய நண்பன் ஞாயிறு இதழ் பொறுப்பாசிரியர் பாதாசன் அவர்களுக்கும் அன்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

ஒரு படைப்பு நூலாகும்போது அந்த நூல் குறைந்த விலையில் தமிழ் மக்களைப் போய்ச்சேர வேண்டும் என்ற உயரிய நோக்கில் நிதி மானியம் வழங்கி உதவிய தமிழ்ப்புரவலர்கள் :

1. மலேசிய தெலுக் இந்தான் பொ.அருணாசலம் பிள்ளை – மாரியாயி தம்பதிகள் (ஓமாந்தூர்) நினைவாக டாக்டர். புரவி M.B.B.S., F.R.C.S., அவர்கள் (கிள்ளான், மலேசியா)
2. டத்தோ. பி.சகாதேவன் அவர்கள், மலேசியா.
3. அழகர் அருள்முருகன் அறக்கட்டளை சார்பில் பட்டயக் கணக்கு தணிக்கையறிஞர் குமரசாமி (Chartered Accountant) அவர்கள்
4. அர்ச்சனா ஸ்வீட்ஸ் பி.எல்.ராஜமாணிக்கம் அவர்கள், திருச்சி.

ஆகியோருக்கும் எனது அன்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

நூல்கள் எழுதுவது, அவை வருவது நாகரிக மக்களின் அடையாளமாகும். ஒரு இனத்தின் அடையாளமே நூல்களில்தான் இருக்கின்றன. ஆகவே தமிழரின் அறிவியல் அடையாளமாக எழுதப்பட்ட இந்நூலை உதகம் சார்பாக வெளியிட முன்வந்துள்ளோம். மேலும் இந்நூல் பரவலான மக்களின் ஆதரவைப் பெறும் என்பதை வழக்கமாக எனது நூல்களை ஆதரிக்கும் வாசகர்களை நினைத்தே சொல்கிறேன். நன்றி. வணக்கம்.

முகவரி

2/1, CIVIC AVE,
Sydney - NSW.
Australia.

இவ்வண்ணம்,
மாத்தளை சோமு,
முகாம், திருச்சி.

உள்ளடக்கம்

1.	**தமிழரின் உலகம்**	**1**
	வரலாறு	
	நிலம்	
	தொன்மை	
2.	**மொழி**	**17**
	அகரம்	
	தமிழினிமை	
3.	**பிறப்பும் வாழ்வும்**	**28**
	மூதாதையர்	
	வாழ்வு	
4.	**உழவு**	**41**
	இயற்கை வேளாண்மை	
5.	**உடை**	**51**
	பண்பாட்டு உடை	
	சாயக்கலை	
6.	**உணவு**	**64**
	நோயற்ற உணவு	
7.	**உடல் அறிவியல்**	**73**
	உடல் இயக்கம்	
	பிணிகள்	
8.	**தமிழர் மருத்துவம்**	**87**
	மருந்தும் உணவும்	
	உணவு மரபு	
	சித்த மருத்துவம்	
9.	**இலக்கியம்**	**103**
	ஓலைத்தமிழ் நூல்கள்	
10.	**நுண்கலை**	**113**
	சித்திரம்	
	சிற்பங்கள்	
	கோலம்	
11.	**தமிழிசை**	**132**
	இசை ஒலிகள்	
	மண்ணிசை	
	தமிழர் இசை	
	இசைக்கருவிகள்	
12.	**ஆடல் கலை**	**161**
13.	**அணிகலன்**	**168**
	பொன்	
	முத்துக்கள்	
	ஒன்பது மணிகள்	
14.	**தாவரவியல்**	**191**
	தாவரங்கள்	
	மரங்கள்	
	தாவர அறிவியல்	
15.	**தமிழர் அளவைகள்**	**206**
	கணிதம்	
	கணித்தல்	
	காலக்கணக்கு	
16.	**கடல் நாகரிகம்**	**226**
	கடல் வாணிபம்	
17.	**கட்டடக்கலை**	**235**
	கோயில் சிற்பம்	
18.	**மண்ணியல்**	**246**
19.	**வானவியல்**	**251**
	விண்ணும், விமானமும்	
20.	**விளையாட்டு**	**261**
	தமிழர் விளையாட்டு	
	தமிழர் ஒலிம்பிக்	

ஓலைச்சுவடிகளிலிருந்த
தமிழ் இலக்கியத்தை
அச்சிலேற்ற அரும்பணி செய்த
தமிழ் அறிஞர்களுக்கு
இந்நூல் காணிக்கை...

1. தமிழரின் உலகம்

இன்றைய அறிவியல் செவ்வாய்க்கிரகத்துக்கும் அதற்கும் அப்பால் சென்றாலும், அண்ட முடியாதது இந்த அண்டவெளி என்பதை விஞ்ஞானிகளே ஒப்புவர். அந்த அண்டவெளியில் இப்பூமி ஓர் சுழலும் கிரகமாகும். இப்பூமிக் கிரகத்தில் அமைந்துள்ள நாடுகள், தீவுகள், அவற்றில் பல்வேறு மொழி, சமய, இன, பண்பாட்டு அடையாளங்களுடன் வாழ்கின்ற மனிதர்கள், ஏனைய நீர்வன, பறப்பன, ஊர்வன, நகர்வன போன்ற உயிரினங்கள், தாவரங்கள் என்பன உள்ளடங்கியதே 'உலகம்' எனப்படுவதாகும்.

ஒவ்வொரு மனிதனின் கற்பனையில் ஆன்மீக, அரசியல், கலை, இலக்கியம், இசை, மருத்துவம், விளையாட்டு, தொழில் போன்ற மேலும் பலதுறைகள் சார்ந்த 'உலகங்கள்' சொல்லப்படுகின்ற போதும், இந்தப்பூமியே உண்மையான 'உலகம்' ஆகும்.

ஆங்கிலத்தில் உலகத்தை 'வேர்ல்ட்' (World) என்றும், 'எர்த்' (Earth) என்றும் 'பிளானட்' (Planet) என்றும் பலசொற்களால் சொல்கின்றபோது, தமிழில் உலகத்தை ① பூமி, புவி, தாரணி, ஞாலம், வையம், புவனம், பார், அகிலம், அவனி, வையம், வையகம், தரணி, அண்டம், சகம், தாரகை, அகம், அகலிடம், நிலவுலகம், அசலம், பூதளம், குவலையம், பூகோளம், அம்புவி, தாலம், அனந்தை, மண்ணுலகம் எனப்பல சொற்களால் அழைக்க முடியும். உலகம் என்பதை உணர்ந்து, அதனை நேசித்து, வியந்து முந்தைய சங்கத் தமிழன் எண்ணிப் பார்த்திருக்கிறான். அதன் விளைவே உலகத்துக்காகப் பல தமிழ்ச்சொற்கள் தமிழில் உருவாகியிருக்கின்றன.

வடதுருவத்தில் உறைபனிகளுக்கிடையே வாழ்கிற 'எஸ்கிமோ' மக்களின் ②(Eskimo) மொழியில் ஐஸ் (Ice) என்ற ஆங்கில சொல்லுக்கு 33 சொற்கள் இருக்கின்றன. ஆனால் ஆங்கிலத்தில் ஐஸ் (Ice) என்ற சொல் மட்டுமே இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? உறைபனிகளுக்கிடையே 'எஸ்கிமோக்கள்' வாழ்கிறார்கள். ஆகவே அந்த வாழ்க்கை அதிக சொற்களைத் தந்திருக்கின்றன. அதுபோல் இங்கே எங்கோ ஒரு தமிழ்க் கிராமத்தில் வாழ்ந்தபோதும் பழந்தமிழரின் சிந்தனை உலகத்தோடு ஒட்டியே இருந்தது. எனவே தமிழில் இலக்கியம் படைத்த சங்ககாலத் தமிழர்கள் உலகத்தோடு ஒட்டியே சிந்தனையைத் தீட்டியிருக்கிறார்கள். அவற்றை இன்றைக்குப் பார்க்கிறபோது வியப்பாகத்தான் இருக்கிறது.

சங்க காலத்தமிழனுக்கு உலகம் என்பது அவன் வாழும் நாடு மட்டுமல்ல, அதற்குமேல் அனைத்து உயிர்களும் எல்லா மக்களும் வாழும் பூமி; அதுதான் அவன் உலகம். அந்த உலகமே தமிழில் இலக்கியம் படைக்க வந்த சங்கத் தமிழர்களின் முதற்பாடலிலேயே வருகிறது. ஈராயிரம்

ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட திருக்குறளின் முதற்குறளிலேயே உலகம் என்ற சொல்லை முன்வைக்கிறார் திருவள்ளுவர். மேலும் 1330 திருக்குறள்களில் பல்வேறு இடங்களில் உலகத்தை ஒட்டியே அவர் சிந்தனை விரிகிறது. மொத்தமாய் 45 இடங்களில் உலகம் – உலகு என்ற சொற்கள் திருக்குறளில் வருகின்றன. இதுபோக உலகைக்குறிக்கும் வேறு சொற்களும் பல திருக்குறள்களில் வருகின்றன. இவற்றை ஆய்வு நோக்கோடு பார்க்கிறபோது, 'மனிதன் மரபு சார்ந்த அடையாளங்களோடு உலகத்தோடு ஒட்டி வாழ்வதே வாழ்க்கை' என்பதை உணர்ந்து சங்ககாலத் தமிழர்கள் உலகை இலக்கியத்தில் முன்வைத்திருக்கிறார்கள் என்பது தெரிகின்றது. ஆகவே தமிழ் இலக்கியங்கள் பல "உலகம்" என்ற வார்த்தையோடு தொடங்குகின்றன.

திருவள்ளுவர் 'அகர எனத்தொடங்கி உலகு' என முடிக்கிறார் முதற்குறளிலேயே. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோ அடிகள் 'அங்கண் உலகு அளித்தலான்' என்று புகார்க் காண்டத்தில் மங்கல வாழ்த்திலேயே தொடங்குகிறார். பெரியபுராணம் தந்த சேக்கிழார், 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்று உலகை முன்னிறுத்தியே ஆரம்பிக்கின்றார். காவியக்கம்பர் தனது இராமாயணத்தை 'உலகம் யாவையும்' என முதல் செய்யுளிலேயே முழங்குகிறார். நெற்றிக்கண்ணைத் திறந்தபோதும் குற்றம் குற்றமே என வாதாடிய புலவர் நக்கீரர்

திருமுருகாற்றுப்படையில் 'உலகம் உவப்ப' என ஒப்புகிறார். மதுரைக்காஞ்சி என்ற சங்க நூலில் 'வியன்ஞாலத்து (ஞாலம்–உலகம்) என ஒரு வரி தொடக்கத்தில் தெரிகிறது. மணிமேகலை எனும் காப்பியத்தின் தொடக்கத்தில், 'உலகம் திரியா' எனும் வரிகளை வைக்கிறார் சீத்தலைச் சாத்தனார். பவணந்தி முனிவர் நன்னூலை, 'மல்தலை உலகின்' என்று சொல்லியே படைக்கிறார். நாற்கவிசார நம்பி அகப்பொருள் நூலை 'மலர்தலை உலகத்து' எனத்தொடங்கி 'உலகம்' என்ற சொல்லை முன்னிறுத்துகிறார். இவர்கள் காலத்தில் வாழ்ந்த புலவர் கபிலரோ தமது அகவலில் உலக மக்களையே ஓரினமாகக் கண்டு, 'உலகத்தீரே! உலகத்தீரே! என முதல் முழக்கம் செய்கிறார்.

அவர்களுக்கெல்லாம் 'உலகம்' என்பது தாங்கள் பார்க்கிற நாட்டு மக்களுக்கு அப்பால் முகம் தெரியாமல் வாழ்கிற மக்களுக்கும் சேர்த்துத்தான் என்பது முடிவான முடிவு. இன்றைக்கு உலக நூலாக திருக்குறள் இருப்பதற்கு திருவள்ளுவரின் உலகம் சார்ந்த சிந்தனைதான் முக்கியமானதாகும்.

உலகெங்கிலும் பல்வேறு மொழிகளில் ஆயிரக்கணக்கான நூல்கள் இருந்தும் சமயநூல்களான பைபிள், திருக்குரான், தம்மபதம், பகவத்கீதை போன்றவையெல்லாம் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அந்தந்த சமயத்தவர்களால் மட்டுமே ஏற்கப்பட்டுள்ளன. ஆனால் திருக்குறள் சமயம் கடந்து மானிட நேயத்திற்கான பொதுமை நூலாக உலகம் முழுவதும் வாழ்கிற மக்களின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றை இனம், மதம், நிறம் கடந்து உலகின் எல்லா மக்களும் ஏற்றுள்ளார்கள். அத்தகைய திருக்குறளில் தமிழ் – தமிழர் என்ற சொற்களே இல்லை. அதற்கு மேலாக முந்தையத் தமிழரின் அறிவியல் சிந்தனை இருக்கிறது; உலகத்தையே நேசிக்கிற உயர் மாண்பு இருக்கிறது. உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டும் என்பதை மானுட நேயம் இருக்கிறது. அதனை

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140 – குறள்)

என்ற குறளிலேயே சொல்லியிருப்பதே அதற்குச் சான்றாகும்.

இவ்வுயர் சிந்தனை, அறிவியல், சிறந்த பண்பாடு என்பன மேம்பாடு அடைந்த ஒரு இனத்திலிருந்தே வந்திருக்கலாம். கலை, இலக்கியம் என்பன படைத்தவனின் சொத்து என்றாலும், அவை பண்பாடு, தனித்துவ மொழிமிக்க ஒரு இனத்தின் மரபிலிருந்தே வரவேண்டும்.

இன்றைக்கு வான்வழியே மக்கள் கைகோர்க்கிற அறிவியல் வீட்டுக்குள்ளே வந்துவிட்டது. ஆனால் அந்த அறிவியல் உருவாக்கிய கருவிகள் (வானொலி, தொலைக்காட்சி, கணினி) மேலைத்தேய மொழி,

நாகரிகம், கல்வி என்பனவற்றை வர்த்தக நோக்கில் வலையென வீசுகின்றன. இவ்வலைக்குள் வீழ்ந்து, தாய்மொழி மரபு வழிப்பண்பாடு என்பனவற்றை இழந்து உலகமயமாக்கல் என்ற போர்வையில் சுயத்தை இழந்து வருவோரே இன்று அதிகமாக இருக்கின்றனர். இன்றைய மேலைத்தேச உலகமயமாக்கலின் மறைமுக நோக்கமே உலகில் வாழும் பல இனங்களின் தாய்மொழி, பண்பாடு, மரபு சார்ந்த அடையாளம் என்பனவற்றை அழித்து விடுவதேயாகும். இது உலகம் முழுமைக்கும் ஒருமொழி, ஒரு பண்பாடு, என்ற நோக்கத்தின் வெளிப்பாடாகும். இது ஏனைய இனங்களை அச்சுறுத்தும் செயலாகும்.

ஆனால் உலகின் ஒரு கோடியில் வாழ்ந்த சங்ககாலத்தமிழன் முன்னெடுத்த உலகம் சார்ந்த சிந்தனை, 'உலகத்தீரே! உலகத்தீரே!' (Global Citizen) என்ற முழக்கம் எவரையும், எந்த ஒரு இனத்தையும் அடிமைப்படுத்தவோ - எவ்வினத்திற்கும் அச்சுறுத்தலாகவோ வெளிவந்ததில்லை. மாறாக உலகப் பொதுமைக்கு வித்திட்ட சிந்தனையாகும். இச்சிந்தனை மிகமிக உயர்ந்ததாகும். எனவேதான் புறநானூற்றுப்புலவன் கலியன் பூங்குன்றனார், 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்று சொன்னான். யாவரும் கேளிர் (கேளிர்-உறவினர்) என்பது மதம், மொழி, இனம் கடந்து மனிதப்பொதுமைக்கான ஒரு சொல்; எல்லா மனிதப் பிறவிகளையும் உறவினர்களாகப் பார்க்கிற பார்வை! இப்பார்வை உலக மனித வரலாற்றில் தனித்துவமான முத்திரைப் பதித்த சிந்தனையாகும். ஆக தமிழினம் சங்ககாலத்திலேயே மனித குலத்துக்கான உயர் சிந்தனையை - உயர்ந்த பண்பைப் பெற்றிருந்தது என்பது தெளிவானது.

இவ்வுயர் பண்பு, இவ்வுயர் சிந்தனை என்பனவற்றை தமிழினம் பெற அறிவியல் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அறிவியல் இல்லாமல் பண்பாடு, உயர் சிந்தனைச் சிறப்புப்பெற முடியாது. இதனை நாள் குறித்துப் பெறமுடியுமா? ஆங்கிலம் இன்றைக்கு உலகமொழி என்று சொல்லப்பட்ட போதும் அதனை அது அடைவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கும்? அதற்கு ஒரு வரலாறு உண்டு. அதே போன்று தமிழ்மொழியும் ஒரு நீண்ட நெடிய வரலாற்றுக்குப் பிறகுதான் இலக்கணம், பண்பாடு, மரபு சார்ந்த அடையாளம், அறிவியல் என்பனவற்றைப் பெற்றிருக்கிறது.

தமிழுக்கு ஒரு நெடிய வரலாறு உண்டு. அவ்வரலாறு திருக்குறள், தொல்காப்பியம் போன்ற நூல்கள் உருவான காலத்திற்கு முந்தியதாகும்.

வரலாறு :

பிரிட்டனின் வரலாற்றைப் பார்த்தால் ③ 11ம் நூற்றாண்டில் ஆங்கில மொழி நலிந்துபோய் இருந்தது. அன்றைய பிரிட்டனின் ஆளும் வர்க்கத்தின் மொழியாக பிரெஞ்சும், மத தத்துவ மொழியாக லத்தீனும், விஞ்ஞான நீதி ஆகியவற்றின் மொழிகளாக பிரெஞ்சும், லத்தீனுமே இருந்தன. பிரெஞ்சை பிரிட்டனின் அரசமொழியாக்க இடைவிடாத முயற்சி நடந்தது. இவற்றையெல்லாம் எதிர்க்க முடியாத அளவுக்கு புகழும் வலிமையும் இல்லாத மொழியாக ஆங்கிலம் இருந்தது.

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சு எந்திரம் அறிமுகம் ஆன பிறகுதான் ஆங்கிலம் ஆழமாக காலூன்றத் தொடங்கியது. 16ம் நூற்றாண்டு ஆங்கிலத்திற்கு எழுச்சிக்காலம்; பிரிட்டனுக்குப் பொற்காலம். தொடக்கத்தில் பேச்சுமொழியாக இருந்த ஆங்கிலத்திற்கு சுயமான எழுத்துக்கள் இல்லை. எனவே ரோமர் எழுத்தைக் கடன்வாங்கி மாற்றம் செய்து ஆங்கில எழுத்துக்களை உருவாக்கினார்கள்.

இன்றும் பல மொழிகளுக்கு உலகில் சுயமான எழுத்துக்கள் இல்லை. அவை ஒலியோடு ஒய்ந்து போகிற மொழிகள் என்றாலும் பல இனத்து மக்களால் பேசப்பட்டு வருகின்றன. மலேசிய நாட்டின் தேசியமொழி ④ மலாய். ஆனால் அந்த மலாய் மொழிக்கு சுயமான எழுத்து வடிவங்கள் இல்லை. ஆனால் ஒய்ந்து போனார்களா அவர்கள்? இல்லை..! ஆங்கில எழுத்துக்களில் மலாய் மொழியை எழுதினார்கள். அவ்வாறு எழுதியே பல்கலைக்கழகம் வரை கல்விக் கதவைத் திறந்துவிட்டார்கள். ஆனால் வேறு சில மொழிகளோ பேசுவதோடு நின்றுவிட்டன. எழுத வரவில்லை. ஆனால் தமிழ்மொழி எழுதவும் பேசவும் தனித்துவமாய் திகழ்கின்றது. தமிழுக்கென்று தனியான இலக்கணம், தலை சிறந்த இலக்கியங்கள் இருக்கின்றன. இவற்றுக்கும் மேலாக தமிழுக்கென்று ஒரு வரலாறு உண்டு. அவ்வரலாறு ஆங்கில மொழிக்கு முந்தியது. அப்படியாயின் அதன் வயது என்ன?

தமிழ்மொழியின் காலத்திற்குச் சாட்சியாக திருக்குறளை எடுப்போம். திருக்குறளின் காலம் கிறிஸ்துவுக்கு முன் 31 ஆண்டு (2005 + 31 = 2036) என்கின்றனர். அப்படியாயின் திருக்குறளுக்கு முந்திய நூலான தொல்காப்பியக் காலம் என்ன? அது திருக்குறளுக்கு முந்தியது. ஆனால் அதற்கு முன்பே தமிழுக்கு வரலாறு உண்டு என்கிறது சிலப்பதிகாரம் எனும் காப்பியம்.

பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள

(சிலம்பு - மதுரைக் காண்டம் - 11;19-20)



மறைந்த லெமூரியாக் கண்டம்

என்ற செய்யுளில் இளங்கோ அடிகள் ஒரு வரலாற்றுச் செய்தி சொல்கிறார். அந்தச் செய்தி; 'இன்றைய தமிழ்நாட்டின் தென்திசையின் கண் நெடுந்தூரம் பரவி இருந்த பஃறுளி ஆறும், பலமலைத்தொடர்களும் குமரி மலையும் கடல் கொண்டு போனதாம் என்பதே!'

அவ்வாறு கடல் கொண்டதில் எஞ்சியதே கடலோரக் குமரி. அதுவே இன்றைய கன்னியாகுமரி. அதேபோன்று அந்தக் கடல் கொந்தளிப்பில் எஞ்சிய தமிழ்நூலே தொல்காப்பியம். அப்படியானால் தொல்காப்பியக் காலம்⑤ என்ன? 3000 ஆண்டுகள் என்கின்றனர் சில தமிழ் அறிஞர்கள்; 3000 ஆண்டுகளுக்கு மேல் என்கின்றனர் வேறுசில அறிஞர்கள். ஆயினும் குறித்த ஒரு ஆண்டைச் சொல்லி உங்களை நம்ப வைக்க நான் முயலவில்லை. என் கேள்வியெல்லாம் இதுதான்; தொல்காப்பியமும் சங்கத்தமிழும் திருக்குறளும் உலகம் மேவிய சிந்தனையைத் தமிழ்மொழி மூலம் முன்வைக்கிறது என்றால் அந்தத் தமிழ் பேசுகிற இனத்தின் கல்வி,

இலக்கிய, பண்பாட்டு, அறிவியல் என்பனவற்றின் வரலாற்றுக்காலம் என்ன? கல்தோன்றி மண் தோன்றாக் காலம் என்பது மிகையாகத் தெரியலாம்.

என் குழந்தை அழகானது என்றால் ஊரில் அழகான குழந்தை இல்லை என்று அர்த்தமா? அழகான பெண் என்று எண்ணி ஒரு பெண்ணை ஒருவன் காதலிக்கிறான் என்றால், உலகில் வேறு அழகான பெண்களே இல்லையென்று ஆகிவிடுமா என்ன? அவ்வகையில் தமிழை மூத்த மொழி என்பது வேறுமொழிகளைக் குறைசொல்ல அல்ல! தமிழ் மூத்த மொழிகளுள் ஒன்று என்பதும், ஆழமான இலக்கியம் தமிழுக்கு இருக்கிறது என்பதும் மொழி ஆய்வாளர்களின் முடிவாகும். ஆனால் நான் கேட்பது 2000 ஆண்டுகளுக்கு முன்பே உலகம் பற்றிய ஒருமைப்பாட்டுச் சிந்தனை தமிழில் சொல்லப்பட்டதுபோல் வேறு மொழியில் சொல்லப்பட்டிருக்கிறதா என்பதுதான்!

தமிழ் இலக்கியத்தைப் பார்த்தால் தமிழ்க் கிராமத்துக்குள் வாழ்ந்த சங்கப்புலவன் உலகைப்பற்றி ஓர்மை சிந்தனையுடன் வியக்க வைக்கிறானே! அதிலும் கபிலர் என்ற புலவர் 'உலகத்தீரே! உலகத்தீரே!' என்று உலக மக்களை ஒரே குடியாக (Global Citizen) கண்டிருக்கிறானே! இதுவெல்லாம் பொதுமைக்கான பரிமாண வளர்ச்சி அல்லவா?

இப்பொதுமைக்கானப் பரிமாண வளர்ச்சிக்கான சிந்தனை, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆகவே சங்க காலத் தமிழ்க் கவிஞர்களின் மரபு, பண்பாடு, அறிவியல் என்பன ஆழமானது, அகலித்தது, வரலாறு கொண்டது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

தமிழர் வரலாற்றைப் பார்க்கிறபோது தமிழர் சிந்தனையில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே மண்ணியல், தாவரவியல், விண்ணியல், மருந்து, அளவியல், எண்கள், உடை, அணிகலன், இசை, நாட்டியம், கட்டிடக்கலை, ஓவியம், சிற்பக்கலை என இன்னும் பலதுறைகளில் அறிவியல் வேரூன்றித் தொடர்ந்திருக்கிறது. அறிவியல் தமிழுக்குப் புதிதல்ல; தமிழர்களுக்கும் புதிதல்ல. ஆனால் நமக்குள் வலிந்து திணித்துக் கொண்டிருக்கிற இன்றைய ஆங்கிலத் திரையை நீக்கிவிட்டு தமிழர் சிந்தனையை மண் சார்ந்த மரபோடு பார்த்தோமானால் மேற்சொன்ன பலதுறைகளில் முந்தைத் தமிழனின் அறிவியலை உணர்ந்து பார்க்க முடியும்.

இலக்கியத்தில் உலகப்பொதுமையோடு சிந்தித்த சங்க காலத்தமிழர்கள் அறிவியலை வாழ்க்கையாகக் கண்டிருக்கிறார்கள்.

அறிவியல் என்பது வாழ்க்கையோடு ஒன்றிய ஒன்று என்பதையும் சங்ககாலத் தமிழரின் வாழ்க்கையில் ஆதாரமாய் இருப்பதையும் இன்றைக்கு உணரமுடிந்த ஒன்றாகும். அவர்கள் மருந்தே உணவாகக்

கண்டிருக்கிறார்கள். வீட்டுமரம், காட்டுமரம், கோயில்மரம் என தாவரங்களைப் போற்றியிருக்கிறார்கள். கட்டிடத்தில் கலையைக் கண்டார்கள், வான இயலின் அறிதலை வாசலில் வைத்தார்கள், மண்ணியலில் மகிமை கண்டார்கள். ஆடை, அணிகலன்களில் அற்புதம் சொன்னார்கள். நாட்டியத்தில், இசையில் தனித்துவ எல்லை சொன்னார்கள். எண்களில் எண்ணங்களைக் காட்டினார்கள். அளவையில் அறிவைச் சொன்னார்கள். ஓவியத்தில் ஒய்யாரம் தந்தார்கள். கடல் பயணத்தில் நாகரிகம் காட்டினார்கள். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இது இன்றைய அவசியம்.

நேற்று வாழ்ந்த பழந்தமிழரின் அறிவியலை இன்று வாழ்கிற – நாளை வாழப்போகிற தமிழர் அறியவேண்டும். அறிவதனால் அறிவு பெருகும்!

இன்றைய விஞ்ஞான அறிவியல் நாளை மாறுதலுக்கு உள்ளாகும். மாறுதலுக்கு உள்ளாவதுதான் அறிவியல். ஆனால் சங்ககாலத் தமிழரின் மாறுதலுக்குள்ளாகாத ஆணிவேர்களான அடிப்படை அறிவியல் இன்றைக்கும் வெவ்வேறு பரிணாமத்தில் பொருந்துவதும் – தேவையாக இருப்பதும் வியக்க வைக்கும் அறிவியல்தானே!

நிலம் :

சூரியன் என்ற மிகப்பெரிய நட்சத்திரத்தில் இருந்து சிதறிய அக்கினிக் குழம்பான ஒருபகுதியே பூமி என்ற கோளாக (Planet) உருமாறியதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனை 'ஒளிபரிதியியக்கத்தாற் சிதைந்துதிர்ந்ததோர் பகுதி உலகமாகி' என்று (பரிதி–சூரியன்) யாழ்நூல் சிறப்புப் பாயிரத்தின் முதற்பாடலில் உறுதி செய்யுமாப்போல சங்ககாலத்துப் புலவன் சொல்லியிருக்கிறான்.

அவ்வாறு அக்கினிக்குழம்பாக இருந்து திரள்ச்சியுற்ற பூமி குளிர்ச்சியுற்று மேற்பாகம் கல்லாகிக் கொண்டது. அந்தக் கல்லிலிருந்து மெதுமெதுவாக நிலப்பரப்பு தோன்றியது. இதற்கு எடுத்துக் கொண்ட காலம் எண்ணற்ற ஆண்டுகள். இவ்வாறு முகிழ்ந்த நிலப்பகுதியில் உருவானதுதான் குமரிக்கண்டம். அது பழந்தமிழரின் தாயகம். தொல்காப்பியம் தந்த புலவனின் மூதாதையர் பூமி; திருவள்ளுவனின் மூதாதையர் நிலம். இன்று அந்தக் குமரிக்கண்டம் இல்லை.

19ம் நூற்றாண்டின் இறுதியில் அழிந்த தனுசுகோடி (தனுசுகோடியின் பழைய பெயர் கோடிக்கரை) புயலால் அழிந்ததுபோல் எண்ணற்ற ஆண்டுகளுக்கு முன் குமரிக்கண்டமும் அழிந்தது.

குமரிக்கண்டத்தில் ஆதியில் உயிரினங்கள் தோன்றியிருக்கலாம் என்பது மானுட ஆய்வாளர்களின் கருத்து. இதனை பிரிட்டன் ஆராய்ச்சிக் கழகத் தலைவரான சர் ஜோன் ஈவான்ஸ் மானிட சமூகத்தின் தொட்டில்

தென்னிந்தியாவாக இருக்கலாம் என்று கூறியதிலிருந்து அதனை அறியலாம். அவர் தென்னிந்தியா எனக்கூறியது குமரிக் கண்டத்தைத்தான்.

ஆதியில் மனிதன் நிர்வாணமாய் வாழ்ந்திருக்கின்றான். எனவே அவன் கடுமையான குளிர் நிலவும் உறைபனி பிரதேசங்களில் வாழ்ந்திருக்க முடியாது. வெப்ப வலய நிலமே மனிதனின் தொடக்கக்காலத் தொட்டிலாக இருந்திருக்க வேண்டும். குமரிக்கண்டம் வெப்ப வலய நிலப்பகுதி. ஆகவே மனித இனம் அங்கு தோன்றியிருக்கலாம்.

உலகில் முதன் முதலில் மனித இனம் தோன்றிய நிலம் லெமூரியாக்கண்டம்தான் என்பது பேராசிரியர் ஹெகல் போன்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.



பலநூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்
உலகம் இருந்ததற்கான மாதிரி வரைபடங்கள்

முற்காலத்தில் குமரிக்கண்டத்திற்கு 'மூதாதையரின் தாய் நிலம்' என்ற பெயர் வழங்கப்பட்டதாக இன்னொரு அறிஞர் டபிள்யூ எஸ்.கோர்வே என்பவர் கூறுகிறார். அதுவே மூநாடு என்றாயிற்றாம். சேரர், சோழர், பாண்டியர் என வழங்கப்பட்டதைப்போல் மூநாட்டவர் மூவர் என வழங்கப்பட்டனர். சிலப்பதிகாரத்தில் மூநாடு என்றும் குமரிக்கண்டம் என்று அழைக்கப்படும் தமிழர் ஆதித்தாயகம் பற்றி ஒரு பாடல் வருகிறது.

வாழ்க எம்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோறு ஊழிதொறு உலகம் காக்க
அடியில்தன் அளவு அரசர்க்கு உணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள

வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி

(மதுரை - 15 - 22)

இப்பாடலின் உரைவடிவம் :

'மன்னரில் பெருமை உடைய மன்னர் பெருந்தகை வாழ்க. காலம் காலமாக அவன் இவ்வுலகைக் காத்து வளர்ப்பானாக. தெற்குக்கடல் அவன் திருவடி பணியத் தன்திறமையை – வீரத்தைப் பகையரசர் தெரியக் காட்டினான். அவன் வெற்றிவேலின் முன்நிற்கப் பயந்து பகையரசர் பயந்தோடி ஒளிந்தனர். தென்திசை நெடுந்தூரம் பரவியிருந்த பஃறுளி ஆறும், பலமலைத் தொடர்களும், குமரிமலையும் கடல்கொண்டு போனதால், தெற்கே படையெடுக்க நிலம் இல்லாமல் போக, வடதிசை சென்று கங்கை ஆற்றையும், இமயமலையையும் வென்று அரசாண்ட தென்னவன் பாண்டியன் வாழ்க'.

மேற்படி பாடல் செய்தியில் இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கே பஃறுளி ஆறும், பலமலைத் தொடர்களும், குமரிமலையும் கடலில் மூழ்கிப் போனது உறுதிப்படுத்தப்படுகிறது. இதனை ஆய்வு செய்த தமிழ் அறிஞர்கள் இன்றைய குமரி முனைக்குத் தெற்கே பெரும்நிலப்பகுதி இருந்ததாகச் சொல்கிறார்கள். அந்நிலப்பரப்பில் ஏழ்பனைநாடு ⑦ (ஏழ்பனை என்ற சொல்லே யாழ்ப்பாணம் என மாறியதாகவும் சொல்வர்). ஏழ்தெங்க நாடு என 49 நாடுகள் இருந்தன என ஆய்வுகள் சொல்கின்றன. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் இதனைப்பற்றி கூறியுள்ளார்.

குமரிமுனைக்குத் தெற்கே இருந்த நிலப்பகுதியில்தான் பாண்டியர் தலைநகரான மதுரை ⑧ (இன்றைய மதுரை அல்ல) இருந்திருக்கிறது. அம்மதுரையில்தான் முதற் (தமிழ்ச்) சங்கம் இருந்ததாம். இதனை இறையனார் களவியல் என்ற பழங்கால நூல் இயம்புகிறது. அந்நூல் மேலும் கூறும் செய்தி முதற்சங்கத்தோடு சம்பந்தப்பட்டநாடு, கடற்கோளால் அழிந்தபின், கிழக்கு கரையோரத்தில் இருந்த கபாடபுரம் என்ற நகரம் பாண்டியரின் தலைநகரமாய் இருந்தது. அங்கு இடைச்சங்கம் இருந்தது. பிறகு கடற்கோளால் கபாடபுரம் அழிய கடலே இல்லாத வைகை நதிக்கரை மதுரை பாண்டியரின் தலை நகராயிற்று.

கடலில் மூழ்கிய தமிழர் நிலப்பரப்பைப் பற்றி சிலப்பதிகாரத்துக்குப் பிறகு வந்த மணிமேகலை காப்பியத்திலும் செய்தி வருகிறது.

தீங்கனி நாவல் ஓங்மித் தீவிடை
இன்றேழ்நாளில் இருநிலமாக்கள்
நின்று நடுக்கு எய்த நீணில வேந்தே
பூமி நடுக்குறா உம்போழ்தத்து இந்நகர்

நாகநல்நாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்.

(மணிமேகலை - 9;17 - 22)

இப்பாடலின் கருத்துப்படி காவிரி பூம்பட்டினமும் நாகநன்னாட்டின் நானூறு யோசனையும் அழிந்து போனது எனத் தெரிகின்றது. யோசனை என்பது தமிழ்க்கணக்கில் தூர அளவைக் குறிக்கும். ⑨ ஒரு யோசனை என்றால் 5 மைல். எனவே 400 யோசனை என்றால் 2000 மைல். ஆக அந்தளவு நீளமான நிலப்பரப்பு கடலுக்கடியில் மூழ்கிவிட்டது. எஞ்சியதில் பழைய நாகநாட்டின் பன்னிரண்டிலொரு பாகமே இன்றைய இலங்கை.

1900ம் ஆண்டில் கேற்முதலியார் பி.குணசேகரா என்பவரால் தொகுக்கப்பட்ட ⑩ 'தெ இராசவளிய' என்ற ஆங்கில நூலில் கடற்கோளினால் இலங்கையின் பன்னிரண்டில் பதினொரு பாகம் மூழ்கியதாகச் சொல்லப்படுகிறது. வால்மீகி ராமாயணத்திலும், ஸ்கந்த புராணத்திலும் இலங்கை பாரிய நிலப்பரப்பாய் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கை யாழ்ப்பாணத்தைச் சுற்றி இருக்கின்ற புங்கிடு தீவு, அனலைத் தீவு, நெடுந்தீவு, காரை தீவு, லைடன் தீவுகள் என அழைக்கப்படும் ஊர்காவற்றுறை–சரவண வேலனை–அல்லைப்பட்டி, நயினா தீவு எனப் பலதீவுகள் அவ்வாறு மூழ்கியவற்றில் எஞ்சிய பகுதிகளே! கச்சத்தீவும் அவ்வாறானதே.

உலக வரலாற்றைப் பார்த்தால் புகழ்பெற்ற நகரங்கள் கடற்கோள்களினால் அழிந்துள்ளன. அவ்வாறுதான் தமிழரின் பெருமை வாய்ந்த குமரிக்கண்டமும் பூம்புகார்ப்பட்டினமும் அழிந்து போயின. அவற்றை கடல் ஆய்வுமூலம் அறிய முற்பட்டால் பழந்தமிழரின் அறிவியலின் சிறப்பு தெரியவரும்.

தொன்மை :

சிலப்பதிகாரம், மணிமேகலை, கலித்தொகை, புத்த சரித நூலாகிய இராசாவளி போன்ற பழந்தமிழர் நூல்களில் கடற்கோள்கள் பற்றிய செய்திகள் ஆணித்தரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆய்வாளர்களின் கருத்துப்படி பலகடற்கோள்கள் தமிழர் நிலத்தை விழுங்கியிருக்கின்றன.

தமிழர் நிலத்தோடு பாக்கு நீரிணை, வங்காள விரிகுடா, இந்து சமுத்திரம் போன்ற கடல்கள் எல்லைகளாக இருக்கின்றன. இவற்றில் வங்காள விரிகுடா ஆண்டுதோறும் புயலை உற்பத்தி செய்யும்.

கடந்த ஐம்பது ஆண்டு கால வரலாற்றைப் பார்த்தால் தமிழ்நாட்டின் பல பகுதிகளையும் இலங்கையில் குறிப்பாக தமிழர்கள் வாழும் வட, கிழக்கு மாகாணங்களையும் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளையும் பலதடவை

புயற்காற்று தாக்கியிருக்கிறது. உதாரணமாக தனுஷ்கோடியே அழிந்து போய்விட்டது. இதனால் இலங்கை தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே நடந்த கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தனுஷ்கோடி இன்று கடலின் மடியில். இதனை உறுதிசெய்வதுபோல், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி நிலநடுக்கம் என்று சொல்லப்பட்டபோதும் கடற்கோள் ஏற்பட்டது. இதனால் இலங்கை, இந்தியா, மாலைத்தீவுகள், இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, 2,00,000 பேருக்குமேல் இறந்து போனார்கள். இதுபற்றி தினத்தந்தி 27.12.2004 நாளிதழில் கன்னியாகுமரிக்கு கீழே இருந்த லெமூரியா கண்டம் மற்றும் பூம்புகார் ஆகிய பகுதிகளை கடல் விழுங்கிவிட்டதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இதுவரையில் இதை நம்புவதற்கு கடினமாக இருந்தது. ஆனால் தற்போது நடந்த கடல் கொந்தளிப்பு லெமூரியா கண்டம் அழிந்ததை நடம்பவைத்துள்ளது என்று செய்தி வெளியிட்டிருந்தார்கள். அதுபோன்று குமரிக்கண்டமும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் கடற்கோளால் அழிந்திருக்கலாம். கலித்தொகையில் முல்லைக்கலியில் **'மலிதிரை ஊர்ந்துதன் மண் கடல் வெளவலின்'** என்ற வரிகளின் மூலம் பாண்டிய நாட்டு கடற்கரைகளில் கடல் பொங்கி தன் கரைகளையே–தன் மண்ணையே கைப்பற்றி விழுங்கிக்கொண்டன் என்ற குறிப்பைப் பார்க்கின்றபோது கடற்பேரழிவு (சுனாமி) நினைவுக்கு வரும். ஆய்வாளர்களின் கருத்துப்படி குமரிக்கண்டம் ஏழு தடவை கடலில் மூழ்கியிருக்கிறது. அங்கு வாழ்ந்த மக்களால் சேகரித்து வைக்கப்பட்ட இலக்கியச் செல்வங்களில் பெரும்பகுதி கடலில் மூழ்கிப்போயின.

பலநூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகம் இருந்ததற்கான மாதிரி வரைபடம்

குமரிக்கண்டத்தின் ஒவ்வொரு அழிவுக்கும் பிறகும் எஞ்சிய நிலப்பகுதியில் தமிழ்ச்சங்கம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இறையனார் களவியல் என்ற இலக்கணநூலுக்கு உரை எழுதியிருக்கும் நக்கீரன் அந்த உரையில் மூன்று தமிழ்ச்சங்கங்களைப் பற்றிய விபரங்களை குறிப்பிட்டிருக்கிறார். இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம் முதலிய நூல்களில் பாண்டிய மன்னர்கள் ஏழு தமிழ்ச்சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்திருக்கிறார்கள் என்ற செய்திகள் இருக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் இந்துமாக்கடலை நுணுகி ஆய்வு செய்த

எழுபதுபேர் கொண்ட ரஷ்ய விஞ்ஞானிகள் குழுவின் தலைவரான 'பேராசிரியர் பெஸ்றுகௌ' (Bezrucov) வெளியிட்ட அறிக்கையில் ஆதிமனிதனின் பிறப்பிடமாகக் குமரிக்கண்டம் ❶(Lemuria) இருக்கலாம் என்கிறார்.

இன்னொரு பேராசிரியர்; ஆராய்ச்சி வல்லுனர் சி.எச்.மொனகான், சேர் யோன் இவான்ஸ், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோரும் ஆதிமனிதன் தமிழினத்தைச் சார்ந்தவனாக இருக்கலாம் என ஊகித்துச் சொல்கின்றனர். இதைத்தான் கவிதைத் தமிழில் சங்கப்புலவர் புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூலில்,

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றி மூத்தக்குடி

என்று பாடியுள்ளார். இது மிகையாக இருக்கலாம் என்று சிலர் எண்ணலாம்; சிலர் மறுக்கலாம். ஆனால் தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் ஆழமாய்ப் பதிந்திருக்கிற பண்பாட்டு மேன்மை, மானுட நேயம், நீதிமேன்மை, அறிவியல் மரபு, அரசியல் முதிர்ச்சி என்பனவற்றைப் பார்க்கிறபோது தமிழன் மூத்தகுடி மரபினன் என்றே எண்ணத் தோன்றுகிறது. அதில் என்ன தவறு இருக்கிறது? எல்லாம் நம்பிக்கை அடிப்படையில் எழுந்தவைதானே? அந்த நம்பிக்கையில்தான் மகாகவி பாரதி, 'ஆதிசிவன் பெற்றுவிட்டான்' என்று பாடினான். அதன் அர்த்தம் தமிழ் என்று பிறந்தது என்று உரைக்க முடியாத காலத்தினைச் சேர்ந்தது என்பதே! அதே போன்று பாரதிதாசன்,

முதலில் தோன்றிய மனிதன் தமிழன்
முதல்மொழி தமிழ்மொழி

என்கிறான். இவை யாவும் நம்பிக்கையில் எழுந்த முடிவே.

ஒரு தாய்க்கு இரு குழந்தைகள். அறுவைச் சிகிச்சையில் வெளியே வருகின்றன. அவற்றில் எது முதலில் வெளியே எடுக்கப்படுகிறதோ, அக்குழந்தை மூத்ததாகவும், இரண்டாவதாக எடுக்கப்படுகிற குழந்தை இளையதாகவும் மனிதர்களால் கணிக்கப்படுகின்றன.

சந்திர மண்டலத்திற்கு அமெரிக்காவிலிருந்து முதன்முதலில் மனிதர்கள் போனார்கள் என்பதும், அமெரிக்கர்களே போனார்கள் என்பதும் சரியானவைதான். இவற்றில் எதை நீங்கள் எடுக்கிறீர்கள் என்பதை வைத்தே உங்களைக் கணிக்க முடியும். ஆக தமிழர் மூத்த இனம் என்பது ஒரு கணிப்பு. அந்தக் கணிப்பு உண்மையாக இருக்கலாம் என்பதை தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய பழந்தமிழ் நூல்கள் உறுதி செய்கின்றன.

குமரிக்கண்டம் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடக்கின்றன. 1981–ல்மதுரையில் நடந்த 5–ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது குமரிக்கண்டம் பற்றிய ஒரு செய்திப் படத்தை அப்போதைய தமிழக அரசு சார்பில் தொகுத்து வெளியிட்டார்கள். 2003ம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு அமெரிக்க நிறுவனம் செயற்கைகோள் உதவியுடன் இந்தியக் கடலோரங்களில் ஆய்வு நடத்தியபோது இன்றைய பூம்புகாருக்கு 20 மைல் தொலைவில் கடலில் பூம்புகார்ப்பட்டினம் மூழ்கி இருப்பதைக் கண்டு பிடித்தது. அத்துறைமுகத்தில் கப்பல் வந்து நின்று போவதற்கான வசதிகள் இருந்ததாகவும் ஆய்வுகள் சொல்கின்றன.

நவீன நாகரீகத்தின் பிறப்பிடமாக பூம்புகார் இருக்கக்கூடும் என தொல்பொருளாய்வாளர்கள் கருதுகின்றனர். இதுவரை இருந்து வந்த ஆய்வு கருத்துப்படி 5000 ஆண்டுகளுக்கு முந்திய மொசபடோமியா (Mesopotamia) சுமேரியா (Sumeria) நாகரிகம் மிகப்பழமையானது எனக் கருதப்பட்டது. ஆனால் எடின்பர்க்கைச் சேர்ந்த கிரஹாம் ஏன்கொக் (Graham Hancock) என்ற கடல் அகல்வாய்வாளர் 5000 ஆண்டுகள்குகு முந்தியதாக கருதப்படும் சுமேரியா நாகரீகத்திற்கு முந்தியது பூம்புகார் நாகரீகம் எனக்குறிப்பிட்டுள்ளார்.

பூம்புகார் கடற்கரைப் பட்டினம் 11,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடற்கொந்தளிப்பால் மூழ்கியது என கிரஹாம் ஏன்கொக் பெங்களூர் கருத்தரங்கில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் ஆய்வின் அடிப்படையில் பூம்புகாரில் 400 அடி உயரத்தில் எழுப்பிய கடல் கொந்தளிப்பே பூம்புகாரை விழுங்கியிருக்கிறது. இது பனிக்கட்டிக் காலத்தில் (Ice Age) 17,000 ற்கும் 7,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்திருக்கும் எனக்குறிப்பிடுகிறார்.

பூம்புகாருக்கு தெற்கே சின்னவனகிரி என்ற இடத்தில் வட்டவடிவான பழங்காலக் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதே போன்ற கிணறுகள் (Ring Well) வனகிரி, தரங்கபாடி, பூம்புகார் போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டன. சங்க காலத்து செங்கல் கட்டிடம் பூம்புகாரில் கண்ணகி சிலைக்கு அருகில் காணப்பட்டன.

பூம்புகாரின் மிகப்பெரிய பகுதியே கடலில் மூழ்கிவிட்டது. பிரிட்டன், அமெரிக்க நாட்டின் ஊடகங்களின் உதவியோடு இன்றைய பூம்புகாரை கடலுக்கு அடியில் ஆய்வு செய்து செய்திச்சுருளாக பிடித்திருக்கின்றனர். ஆய்வாளர் ஏன்கொக்கின் இந்த ஆய்வை பிரித்தானிய தர்ஹாம் பல்கலைக்கழக (University of Dyrham - UK) மண்ணியல் ஆய்வாளர் கிளீன் மில்னி முழுமையாக ஏற்பதோடு ஹரப்பா (Harapan) நாகரிகத்தை விட பூம்புகார் நாகரிகம் மிகவும் பழமையானது; சிறப்பானது என்கிறார். (இதனுடைய ஆங்கில வடிவம் பக்கம் 276–ல் இணைக்கப்பட்டுள்ளது).

ஆஸ்திரேலியாவில் வாழ்கிற கறுப்பு இன ஆதிவாசிகளுக்கும் திராவிடர்களுக்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

ஆஸ்திரேலியக் கறுப்பின ஆதிவாசிகளின் பண்பாடு பழக்க வழக்கங்கள் பழந்தமிழரோடு ஒத்துப்போகின்றன. மலைகளை, பெரிய மரங்களை, பாம்புகளை, சூரியனை, சந்திரனை அவர்கள் வியந்து மரியாதை வணக்கம் செய்கிறார்கள். தேகத்தில் விபூதி போன்ற வெள்ளை நிறத்தைப் பூசிக்கொண்டு நடனமாடுவார்கள். அவர்கள் பேசுகிற மொழியே பழந்தமிழ் மொழியோடு ஒத்தது என ஆய்வாளர்கள் சொல்கின்றனர். அதற்கேற்றாற்போல் தமிழ்ச்சொற்கள் ஆஸ்திரேலிய ஆதிவாசிகளின் ❷(Aborginie) மொழிகளில் கலந்திருக்கின்றன.

ஆஸ்திரேலிய சிட்னி மாநகரின் புறநகர்ப் பகுதியின் பெயர் 'விண்மலே' (Winmalle). அந்த இடத்தைப் போய்ப் பார்த்தால் ஆகாயமும் மலைகளும் ஒட்டி நிற்பதைப்போல் தெரியும். அவ்வாறு விண்ணும் மலையும் இணைந்திருப்பதையே 'விண்மலை' என்று சொல்லலாம். அதையே 'விண்மலே' என்கின்றனர். இன்னொரு இடம் காகாடு (Kakadu). தமிழில் கா என்றால் சோலை. காடு என்றால் வனம் என்று சொல்வர். காகாடு என்றால் சோலை வனம்தான். உண்மையில் அந்த இடம் சோலை வனம்தான். ஆயிரக்கணக்கான பயணிகளை இழுக்கும் அந்த காகாடு ஓர் சோலைவனம்தான்.

இன்னொரு ஆதிவாசி வசனம். 'பூனங்கா யிங்கவா'. அதன் அர்த்தம் பெண்ணே இங்கே வா என்பதுதான். இப்போது அந்த ஆதிவாசி வசனத்தைத் திரும்பவும் படியுங்கள். 'பூனங்கா யிங்கவா'. அதன் உண்மையான உச்சரிப்பு; பூ நங்கையே இங்கே வா என்பதே! இப்படித் தமிழுக்கும் அவர்களுக்கும் ஒரு உறவு இருக்கிறது; இருக்க வேண்டும்.

அதே நேரத்தில் ❸ஆஸ்திரேலிய ஆதிவாசிகளும் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்த நாட்டுக்கு குடியேறியவர்கள் என ஆய்வு தெரிவிக்கின்றது. அவர்கள் எங்கிருந்து குடியேறினார்கள் என்பது இன்னமும் ஆய்விலேயே இருக்கிறது.

ஆப்பிரிக்க மடகாஸ்கர் தீவு பழங்குடி கறுப்பின மக்களுக்கும் ஆதித் தமிழர்களுக்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வறிஞர்கள் சொல்கிறார்கள். அம்மக்களின் மொழியில் தமிழ்ச்சொற்கள் கலந்திருக்கின்றனவாம்.

தமிழர்கள் திராவிட இனத்தின் முன்னோடிகள் என்றும் அவர்கள் இலெமூரியா கண்டத்தின் எஞ்சிய பகுதியில் தோன்றி தென்னிந்தியாவில் மற்றும் இந்தியாவில் பரவிய தொன்முதுக்குடிகள் என சோவியத் அறிஞர் ஏ.கொன்டராட்வே The Riddless of Three Oceans என்ற நூலில் கூறுகிறார். அவர், 'சிந்து ஆற்றங்கரைகளில் திராவிடர் வாழ்ந்து நாகரிகம் பரப்பியவர்கள். அவர்கள்தாம் கலம்கட்டும் தொழிலை உலகுக்கு அறிமுகம்

செய்தவர்' என்றும் அந்நூலில் கூறுகிறார். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்கிறபோது தமிழன் மூத்த இனம் என்பதில் ஐயமே இல்லை.

அந்த மூத்த தமிழ் இனம் பல கடற்கோள்களைச் சந்தித்துப் புகழ்பெற்ற நிலங்களை இழந்துள்ளது. அவ்வாறு இழந்தவற்றுக்கு வருந்திச் சோர்வடையாத தமிழ் இன்றும் எல்லை விரித்து வாழ்ந்து வருகிறது. அந்த எல்லையைத் தொல்காப்பிய பாயிரம்

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடை தமிழ்கூறும் நல்உலகத்து'

என்று அடையாளப் படுத்துகிறது. அதனையே மகாகவி பாரதி

நீலத்திரை கடலோரத்தில் நின்று
நித்தம் தவஞ்செய்குமரி எல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு!

என்று சொன்னான்.

அந்த குமரி எல்லையில், முக்கடலின் சங்கமத்தில் வான் நோக்கி எழுந்து நிற்கிற வள்ளுவனின் சிலையால் முப்பால் அடங்கிய திருக்குறளுக்கும் பெருமை – அது எழுதப்பட்ட தமிழுக்கும் பெருமை – சிலை நிற்கிற குமரிக்கடலுக்கும் பெருமை என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது முக்கடல் மட்டுமல்ல அங்கே இந்த மூன்றும் சங்கமிப்பதே வியப்பான ஒன்றுதானே!

மேற்கோள் நூல்கள் :

① தமிழ் – தமிழ் அகர முதலி 1985, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

② Eskimo History, Star Publications, Sydney - 1984.

③ The Growth of English Language (Spelling Made Easy - Book - Sydney - 1993)

④ மலேசிய இலக்கிய வரலாறு – கட்டுரை – மா.இராமையா.

⑤ தமிழின் சிறப்பு – கி.ஆ.பெ.விசுவநாதம், பாரி நிலையம், சென்னை.

⑥ South India is the cradle of the Human Civilization - Sir John Evans, London.

⑦⑧⑨⑩ யாழ்ப்பாணக்குடியேற்றம் – முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை 1982 – யாழ்ப்பாணம்.

❶ யாழ்ப்பாணக் குடியேற்றம் – முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை 1982

❷ Australian Aborginal Culture - 1973 - Sydney.

❸ Australian Aborgine - 1983, Canbera.

2. மொழி

உலகில் இருக்கின்ற பல்வேறு மொழிகளில், பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 6800 என மொழியியல் ஆய்வாளர்களின் கணக்கெடுப்புத் தெரிவிக்கின்றது. இவற்றில் எழுதவும் பேசவும் வல்லமை கொண்ட மொழிகள் எழுநூறுக்கு உட்பட்டவையாகும். சொந்த வரிவடிவத்தில் எழுதப்படும் மொழிகள் நூறு மட்டுமே. இவ்வாறு உலகில் பல்வேறு தன்மைகளுடன் மொழிகள் இருந்த போதும் இவற்றுக்கெல்லாம் தாயாகத் திகழும் மூலமொழிகள் ஆறு என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அவை எபிரேயமொழி, கிரேக்க மொழி, இலத்தீன் மொழி, சமஸ்கிருதம், சீனமொழி, தமிழ்மொழி என்பனவாகும். இவற்றுள் யேசுநாதர் பேசிய எபிரேய மொழி, சாக்ரடீஸ் பேசிய (ஆதி) கிரேக்க மொழி, சீசர் பேசிய இலத்தீன் மொழி, வால்மீகி பேசிய வடமொழி (சமஸ்கிருதம்) என்பன, இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால் கன்பூசியஸ் பேசிய சீனமொழியும், தொல்காப்பியப்புலவன், திருவள்ளுவன் ஆகியோர் பேசிய தமிழ்மொழியும் இன்றும் சிறப்புடன் திகழ்கின்றன.

இன்றைக்கு ஆதிமொழிகளான கிரேக்க மொழியிலிருந்து உருமாறிய கிறீக், எபிரேய மொழியிலிருந்து உருவான ஹீப்ரு, நவீன இலத்தீன், ஆலயங்களில் எஞ்சி இருக்கிற சமஸ்கிருதம், சீனம், தமிழ் ஆகியவைகளே பழமை மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் சமஸ்கிருதம், பார்ஸி, அரபி, இப்போது தமிழ் செம்மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இன்றைக்கு உலகில் பேசப்படும் மொழிகளை ஆய்வுக்காக மூன்றாக வகைப்படுத்தலாம். ஒன்று – எழுத்தில்லாமல் பேசமட்டும் முடிந்த மொழிகள். இரண்டு – ரோமன் எழுத்துக்களில் எழுதப்படும் மொழிகள். மூன்று – தனித்துவமான எழுத்துக்கள் கொண்ட மொழிகள்.



தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் கல்வெட்டெழுத்து

எழுத்தில்லாமல் பேசமட்டும் முடிந்த மொழிகளாக உலகெங்கும் உள்ள பல ஆதிவாசிகளின் மொழிகள் இருக்கின்றன. அவற்றுக்கு

உதாரணம் ஆஸ்திரேலிய நாட்டு (Aborginie) ஆதிவாசிகளின் மொழிகள். அவர்களிடையே நூற்றுக்கு மேற்பட்ட பேச்சுமொழிகள் இருந்தும் அவைகளை எழுதுவதற்கு சுயமான எழுத்துக்கள் இல்லை. ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதும் மொழிகள் ஐரோப்பிய, அமெரிக்க, ஆப்பிரிக்கக் கண்டங்களில் இருக்கின்றன. ஆசியாவில் மலேசியா, இந்தோனீசியா ஆகிய நாடுகளில் தேசிய மொழிகள் ரோமன் எழுத்துக்களில் எழுதப்படுகின்றன. தனித்துவமான எழுத்துக்கள் கொண்ட மொழிகளாக உதாரணத்திற்கு சீனம், தமிழ், இந்தி, அரபு என்பனவற்றைச் சொல்லலாம்.



பண்டைய தமிழ் (உயிர்) எழுத்துகளில் நூற்றாண்டுவாரியாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

தமிழ் இந்தியத்துணைக் கண்டத்தின் மிகப்பழமையான மொழிகளில் ஒன்று. தனித்துவமான இலக்கணம் இலக்கியம் கொண்டது. ஆகவே இந்திய மற்றும் மேலை நாட்டு மொழியியல் வல்லுனர்கள் தமிழின் வரலாறு நீண்டது எனச் சொல்லியிருக்கிறார்கள். கிறிஸ்தவ மரத்தைப் பரப்ப வந்த பாதர் பெஸ்கி எனப்படும் வீரமாமுனிவர், ஜி.யு.போப், கால்டுவேல் மற்றும் எல்லீஸ் ரேணியஸ், பாப்ரீசியர், ராட்லர், வின்சுலோ போன்ற பெருமக்கள் மதம் பரப்புவதற்காக தமிழ் படிக்கத் தொடங்கியபோது தமிழின் இனிமை, அதன் இலக்கியச் செழுமை, தனித்துவமான வரலாறு, மரபு சார்ந்த விஞ்ஞானம் ஆகியன படித்து மயங்கி வியந்து தமிழுக்குப் பெருந்தொண்டாற்றினார்கள்.

தமிழில் இருந்த தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, பரிபாடல், நாலடியார், திருமந்திரம், திருவாசகம் ஆகிய பழந்தமிழ்நூல்களைப் படித்து வியந்து தமிழின் மீது காதலே கொண்டார்கள் அந்த மேல்நாட்டு அறிஞர்கள்; தமிழின் இனிமை, தொன்மை, தமிழ் இலக்கணம், உயர்வான இலக்கியம் என்பன அந்த மேல்நாட்டு அறிஞர்களைத் தமிழ்ப் பக்தர்களாக மாற்றியது. இது வரலாற்று உண்மை.

தமிழ் ஒருமொழி மட்டுமல்ல, அது நேசிப்பவர்களை நேசிக்க வைக்கும் மொழி. அதனை அனுபவித்தால்தான் அதன் இனிமை புரியும். அந்த தமிழ் இனிமை புரிந்த பாரதிதாசனோ தமிழுக்கு அமுது என்று பேர் என்றான். அவன் பிறிதொரு கவிதையில்

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந்தரும்படி வாய்ந்த நல்அமுது

என்கிறான். மகாகவி பாரதியோ உச்சநிலைக்குப் போய்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்!

என்று வியந்து நிற்கிறான். அது மட்டுமல்ல அதற்கும் மேலேபோய் ஒரு கட்டளை இடுகிறான். என்ன கட்டளை?

'தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும்
வகைசெய்தல் வேண்டும்'

என்பதே அது!

மகாகவிபாரதி ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரெஞ்சு, இந்தி ஆகிய மொழிகள் தெரிந்தவன். அவற்றின் இலக்கியங்கள் படித்தவன். எனவேதான் அவன் துணிந்து, யாமறிந்த மொழிகளிலே தமிழே இனிமையானது. அதன் ஓசை உலகமெலாம் பரவ வேண்டும் என்கிறான்.

தமிழ் என்ற சொல் ஒரு மொழி என அறியப்படுகிற நேரத்தில் அச்சொல்லுக்கு அழகு, இனிமை என்ற அர்த்தமும் உண்டு. அது மட்டுமில்லாமல் சொல் இனிமை, பொருள் இனிமை, இலக்கிய இனிமை எனப்பல இனிமைகள் நிறைந்த மொழியாகவும் தமிழ் இருக்கின்றது. தமிழ் என்ற சொல்லிலேயே ஒரு பெரிய உண்மையைப் பார்க்கலாம். அந்த உண்மை தமிழ் என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களைப் பார்த்தால் தெரியும்,

தமிழ் –	த	–	வல்லினம்
	மி	–	மெல்லினம்
	ழ்	–	இடையினம்

மேற்கண்ட மூவகை எழுத்துக்களை வல்லெழுத்து (வல்லினம்) மெல்லெழுத்து (மெல்லினம்) இடையெழுத்து (இடையினம்) எனச் சொல்வர். மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளில் காரியமாய் இருப்பது எழுத்தாகும்.

தமிழ் எழுத்துக்களை முதல், சார்பு என இருவகைப்படுத்துவர். முதலெழுத்து; உயிரெழுத்துக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என பன்னிரண்டாகும். சார்பு மெய்யெழுத்துக்கள் – க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என மொத்தம் பதினெட்டாகும். இவ்விரண்டும் முப்பது எழுத்துக்களாகின்றன. சார்பு எழுத்துக்கள் தாமே இயங்கும் ஆற்றல் இல்லாமையால் முதலெழுத்துக்களின் துணையால் இயங்குபவை. அவை உயிர்மெய் எழுத்துக்கள் என அழைக்கப்படும். அதன் தொகை 216. மற்றும் ஆய்த (ஃ) எழுத்து ஒன்று. எல்லாவற்றையும் சேர்க்கும்போது 247 ஆக வரும். இது அதிகமானதாகத் தெரியும். ஆனால் சற்று உள்நோக்கிப் போனால் உயிர் எழுத்து 12ம், மெய்யெழுத்து 18ம் இணைவதனால் உருவாகிற எழுத்துக்களே 216 ஆகும். உதாரணமாக 'அ' என்ற எழுத்தும் 'க்' என்ற எழுத்தும் இணைவதனால் க என்ற உயிர்மெய்யெழுத்து உருவாகிறது. இம்முறை தமிழுக்குத் தனிச்சிறப்பைக் கொடுத்துள்ளது. மேலும் வேறு எந்த மொழிக்கும் இல்லாத இலக்கணச் சிறப்பு தமிழுக்கு உள்ளது.

தமிழ்மொழி இலக்கணமே எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் என ஐந்து பிரிவுகள் கொண்டதாக உள்ளது. இலக்கணம் தான் மொழிக்கு உயிர். தமிழ்மொழிக்கான இலக்கணம் மிகவும் சிறப்பானது. இலக்கணம் தெரியாமல் எந்த மொழியையும் சரியாக பேசவோ எழுதவோ முடியாது.

இலக்கணம் கற்காதவர்கள்தான் மொழியில் கலப்படம் செய்வார்கள். இலக்கணம் கற்றவர்கள் மொழியை முறையோடு பேசுவார்கள்.

ஒருமொழிக்கு இலக்கணமே அடித்தளம்; அடிப்படை அடித்தளம் இல்லாமல் கட்டிடம் எழும்பாது. கொட்டகைதான் எழும்பும். தமிழுக்கு அடித்தளம் ஆழமாய் இருக்கிறது. அதனால்தான் அது இன்றைய கணினி (கம்ப்யூட்டர்) யுகத்திலும், நலிவுறாமல் கடல் தாண்டி ஒலியாகவும், ஒளியாகவும் எழுத்தாகவும் முழங்கிக் கொண்டிருக்கிறது. கணினியிலும் உலக வலை பின்னலிலும் (Internet) அது பல்வேறு சாதனைகளைச் செய்து வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

அகரம் :

அ
ம்மா
ன்பு
றிவு
கிலம்

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என்பன உள்ளடங்கியதே தமிழ் நெடுங்கணக்காகும். இந்நெடுங்கணக்கில் உள்ள தமிழ் எழுத்துக்களின் முதல் எழுத்தே, அகரம் தமிழுக்குச் சிகரம் என்பதுபோல் 'அ' என்ற எழுத்தில்தான் தொடங்குகின்றது.

உயிர் எழுத்துக்களின் முதல் எழுத்தும் அந்த 'அ' என்ற எழுத்துத்தான். அந்த 'அ' என்ற எழுத்தின் மூலம் பின்னப்பட்டிருக்கிற மொழிப்புலமை, வார்த்தைச் சித்து, மொழி இளமை, அம்மொழியைப் பேசுகிற தமிழர்களின் வாழ்வியல் தொடர்பு என்பனவற்றை ஆழ்ந்து சிந்தித்தால் அவற்றில் அடங்கியிருக்கிற – தொடங்கியிருக்கிற ஒற்றுமை, பண்பாட்டு அறிவியல் என்பன வியக்க வைக்கும்.

உலகமே பொதுநூலாக ஏற்றுக்கொண்டிருக்கிற திருக்குறளின் முதல் எழுத்தே 'அ' என்ற எழுத்தில் தொடங்குகிறது. அதன் கடைசிக் குறளின் (1330 வது திருக்குறள்) கடைசி எழுத்து 'ன்' என்ற எழுத்தில் முடிகிறது. தமிழ் நெடுங்கணக்கின் கடைசி எழுத்தும் இந்த 'ன்' என்ற எழுத்துதான். இது வள்ளுவரால் திட்டமிடப்பட்டு எழுதப்பட்டதா? அல்லது அவர் அறியாது வந்து விட்டதா? ஆழ்ந்து சிந்தித்தால் திருவள்ளுவர் தமிழ் நெடுங்கணக்கில் மயங்கித்தான் அப்படி எழுதியிருக்கிறார் என்பது புரியும். ஒரு மாபெரும் தமிழ்நூல் தமிழ்நெடுங்கணக்கின் முதல் எழுத்தில் தொடங்கி முடிவெழுத்தில் முடித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது மிகவும் சிறப்பானது.

'அ' என்ற எழுத்து தமிழின் முதல் எழுத்து மட்டுமல்ல தமிழ் மனிதனின் வாழ்வியலுக்கும் 'முதலான' எழுத்தாகும். 'அ' என்ற எழுத்தில்தான் ஒரு மனிதனின் உலகமும் தொடங்குகிறது. ஒரு மனிதன் உலகிற்கு வர இருவர் தேவை. அந்த இருவரைத் தமிழில் அம்மா – அப்பா அல்லது அம்மை அப்பன் என்று அழைப்பர். அந்த அம்மா, அப்பாவுக்கு முதல் எழுத்தே 'அ' என்ற எழுத்தில்தானே தொடங்குகிறது. அவர்கள் வாழ்கிற அகிலம் – அண்டம் ஆகிய சொற்களுக்கு 'அ' என்ற எழுத்துதான் முதல் எழுத்து. அதுமட்டுமல்ல வாழ்க்கை சிறப்பாக அன்பு, அறிவு, அடக்கம் போன்றவற்றுக்கெல்லாம் முதல் எழுத்து 'அ'தான். இவ்வாறு பார்க்கிறபோது அரசு, அடக்கு, அழகு, அவசரம், அமைதி, அளவு, அதிகாரம் என மனிதனின் வாழ்க்கையோடு தொடர்புடைய வார்த்தைகளைப் பட்டியல் போட்டால் அவற்றுக்கெல்லாம் 'அ' என்ற எழுத்துத்தான் முதல் எழுத்தாக வரும்.

ஒரு தமிழ் மனிதனின் உறவுகளைச் சொல்கிற அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, அத்தை, அம்மாச்சன் (தாய்மாமன்), அக்கச்சி, அப்பாத்தாள் (தந்தையைப் பெற்ற தாய்), அப்பாத்தை (தந்தையின் தமக்கை), அப்பிச்சன் (தந்தையைப் பெற்ற தகப்பன் இதனையே அப்புச்சி என்பர்), அப்பாட்டன் (முப்பாட்டன்), அப்பாயி, அம்மாச்சி (தாயைப்பெற்ற பாட்டி), அம்மாள் (தாய்), அம்மான் (தாயுடன் பிறந்தவன்; தாய்மாமன்) போன்ற வார்த்தைகளுக்கு முதல் எழுத்தே 'அ' என்ற எழுத்துதான். ஆகவே திருவள்ளுவர் இந்த 'அ' என்ற எழுத்தில் அடங்கியிருக்கிற அற்புத ஒற்றுமையை உணர்ந்துதான் 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' எனப்போற்றினாரோ! அனேகமாக உலகில் வேறு எந்த மொழியிலும் எழுத்தின் முதல் எழுத்தை வைத்து உறவு வார்த்தைகள் உருவாகியிருக்கின்றன என்று சொல்ல முடியாது.

தமிழில் 'அ' என்ற எழுத்தின் மூலம் அம்மா, அப்பா, அகிலம் என வார்த்தைகள் இயல்பாய் தொடங்குகிறபோது ஆங்கிலத்தில் பாதர் (Father) மதர் (Mother) போன்ற வார்த்தைகளுக்கு ஆங்கிலத்தின் முதல் எழுத்தான 'A' என்ற எழுத்தே முதலில் வரவில்லை. எனவேதான் 'A for Apple' என்று படிக்கிறார்கள். ஆனால் அரிச்சுவடி படிக்க வருகிற தமிழ்க்குழந்தைகள் 'அ' என்றால் அம்மா அல்லது அப்பா எனப்படிக்கின்றனர். அம்மா அப்பா இல்லாமல் மனிதன் இல்லை. 'அ' என்ற எழுத்தில்லாமல் தமிழ் இல்லை. இந்த 'அ' என்ற எழுத்துக்குள்ளே தமிழ் நெடுங்கணக்கும், தமிழ் மனிதனின் உறவுகளும் அடங்கியிருப்பதே ஒருவகை அறிவியலே இதனைப் பண்பாட்டு அறிவியல் (Cultural Science) என்று அழைக்கலாம்.

தமிழ்மொழி பண்பாட்டுடன் கூடிய அறிவியல் மொழி. அது வாழ்க்கைக்கான வழிகொண்டது. அறிவியல் இல்லாமல் பண்பாடு இல்லை. பண்பாடு இல்லாமல் வாழ்க்கையே இல்லை. எனவே இவற்றைச் சுற்றியே வார்த்தைகள் தமிழில் வருகின்றன. தமிழ் நெடுங்கணக்கை ஆராய்ந்து பார்த்தால் இந்தப் பண்பாட்டு அறிவியல் தெரியவரும்.

'தமிழ்' என்ற வார்த்தையில் 'த' என்ற எழுத்து வல்லினமாகவும் (வல்லெழுத்தாகவும்), 'மி' என்ற எழுத்து மெல்லினமாகவும் (மெல்லெழுத்தாகவும்), 'ழ்' என்ற எழுத்து இடையினமாகவும் (இடையெழுத்தாகவும்) வருகிறது. இம்மூன்றும் அதாவது வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன தமிழுக்கு முக்கியமானதாகும். அதேபோல் அம்மா, அப்பா ஆகிய வார்த்தைகளில் இருக்கிற இலக்கணச் சித்தைப் பார்ப்போம்.

அம்மா – அ – உயிர் எழுத்து, ம் – மெய்யெழுத்து, மா – உயிர்மெய்யெழுத்து.

அப்பா – அ – உயிர் எழுத்து, ப் – மெய்யெழுத்து, பா – உயிர்மெய்யெழுத்து.

அம்மா – அப்பா ஆகிய வார்த்தைகளில் தமிழ்நெடுங்கணக்கின் முதல் எழுத்தும், உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும் அடங்கியிருப்பதே பண்பாட்டு அறிவியல்தான். பண்பாட்டு அறிவியலை அடித்தளமாகக் கொண்டு தமிழ்மொழி தனித்துவமாய் இருப்பதால்தான் இன்றைக்கும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது.

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்பன தமிழ்மொழிக்கு மிகமிக முக்கியமானது என்பதுபோல் அம்மா என்ற சொல்லுக்குள்ளேயும் அவை அடங்கியிருக்கின்றன. அம்மா என்ற சொல்லுக்குள் உயிரெழுத்து (அ) மெய்யெழுத்து (ம்) உயிர்மெய்யெழுத்து (மா) அமைந்திருப்பதுபோல் அம்மாவிற்குள் உயிரும் மெய்யும் (உடல்) உயிர்மெய்யும் (உணர்வு) கலந்திருக்கின்றன. உயிர் மட்டும் வாழாது. மெய் (உடல்) மட்டும் இருக்காது. இவ்விரண்டும் இல்லாவிடில் உயிர்மெய் (உணர்வு) இருக்காது. எனவே அம்மாவிற்குள் உயிர், மெய், உயிர்மெய் ஆகியன அடங்கி இருக்கின்றன என்பது தமிழ் மகனுக்கு அல்லது தமிழ் மகளுக்கு தத்துவமாக அமைகிறது. ஆக இத்தகை இலக்கண ஒற்றுமையை எழுத்துச் சித்தைப் பார்க்கிறபோது தமிழின் பண்பாட்டு அறிவியல் வியப்பைத்தான் எழுப்பி நிற்கிறது.

தமிழினிமை :

உலக மொழிகளிலேயே தமிழ்மொழியைத்தான் மூன்றாக வகைப்படுத்திச் சிறப்பித்து முத்தமிழ் என்றார்கள். அம்முத்தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என ஆகும். இயற்றமிழ் செய்யுள், கவிதை, உரைநடை என்பனவற்றைக் குறிக்கும். இசைத்தமிழ் பாடுதல், இசைத்தல் என்பன அடங்கியதாகும். நாடகத்தமிழ் பேச்சாலும், நடிப்பாலும், கூத்தாலும் சொல்கிற கருத்துக்களை உள்ளடக்கியதாகும்.

தமிழ்மொழிக்குள்ள சிறப்புகளுள் சொற்சிறப்பு என்பதும் ஒன்று. எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து சொல்லாகிப் பொருள்தரும். இரண்டு, மூன்று, நான்கு எழுத்துக்களால் அமைந்த சொற்கள் மிகப்பல. ஐந்து, ஆறு எழுத்துக்களால் அமைந்த சொற்கள் மிகக்குறைவு. ஓர் எழுத்துச் சொற்களும் இருக்கின்றன. ஓர் எழுத்தே சொல்லான விந்தை தமிழில்தான் இருக்கின்றது. உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

1) ஆ–பசு, 2) நா–நாக்கு, 3) கோ–மன்னன், 4) தீ–நெருப்பு, 5) ஈ–ஓர் உயிர், 6) தை–ஒருமாதம், 7) போ–விரட்டுதல், 8) வா–வரவேற்றல், 9) நீ–உன்னை, 10) கை–ஓர் உறுப்பு, 11) பூ–மலர், 12) பா–பாடல், 13) சா–சாதல், 14) மை–கண்மை, 15) மா–குதிரை.

இதேபோன்று 'ஓ! ஆ! ம்!' போன்ற ஓரெழுத்து உணர்ச்சி சொற்களும் தமிழில் இருக்கின்றன. இவை சொற்களின் சுருக்கத்தையும், சொல்லின் பெருக்கத்தையும் மொழியின் வளத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஆங்கில மொழியில் ஓர் எழுத்துச் சொல் அர்த்தம் கொண்டவையாக இருக்கின்றனவா என்றால் இல்லை என்பதே பதில். ஆனால் தமிழில் மட்டும் ஓரெழுத்து சொல்லான விந்தை உண்டு.

பிறமொழிச்சொற்கள் வெறுமனே உருவத்தை மட்டுமே காட்டுகின்றன. தமிழ்மொழிச்சொற்கள் உருவத்தையும் பருவத்தையும் சேர்த்தே காட்டக்கூடியன. 'பன்னிருப் பாட்டியியல்' என்ற தமிழ்நூல் ஆண்களின் ஏழு பருவப் பெயர்களைத் தருகிறது. ①

1. பாலன் – 7 வயதுக்கும்கீழ்
2. மீளி – 10 வயதுக்கும்கீழ்
3. மறவோன் – 14 வயதுக்கும்கீழ்
4. திறலோன் – 14 வயதுக்கும்மேல்
5. காளை – 18 வயதுக்கும்கீழ்
6. விடலை – 30 வயதுக்கும்கீழ்
7. முதுமகன் – 30 வயதுக்கும்மேல்

இந்த ஏழு பருவத்தை

1. பிள்ளை – குழந்தைப் பருவம்
2. சிறுவன் – பாலபருவம்
3. பையன் – பள்ளிப்பருவம்
4. காளை – காதற்பருவம்
5. தலைவன் – குடும்பப்பருவம்
6. முதியோன் – தளர்ச்சிப்பருவம்
7. கிழவன் – மூப்புப் பருவம்

என்றும் சொல்லலாம். இதேபோன்று பெண்களின் ஏழுபருவத்தையும் வெவ்வேறு சொற்களில் அழைக்கின்றனர்.

1. பேதை – 5 வயதுக்கும்கீழ்
2. பெதும்பை – 10 வயதுக்கும்கீழ்
3. மங்கை – 16 வயதுக்கும்கீழ்
4. மடந்தை – 25 வயதுக்கும்கீழ்
5. அரிவை – 30 வயதுக்கும்கீழ்
6. தெரிவை – 35 வயதுக்கும்கீழ்
7. பேரிளம்பெண் – 55 வயதுக்கும்கீழ்

மனிதனின் இந்த ஏழு பருவத்திற்கும் சாதாரண மக்கள் பயன்படுத்துகிற ஆங்கிலச் சொற்கள் என்ன? 'Baby'யும் 'Child'ம் ஒரே அர்த்தம் கொண்டவை. அப்புறம் 'Young Boy' என்றும் 'Adult Man' என்றும், 'Young Man' என்றும் 'Old Man' என்றும் சொல்வது தமிழைப்போல் பருவத்திற்கு ஏற்ப பொருந்துமா?

ஒரு பூவை எடுத்துக் கொண்டால்கூட உருவத்தையும் பருவத்தையும் காட்ட பலமொழிகளுக்கு சொற்பஞ்சம்; தமிழில் அவ்வாறு இல்லை.

1. அரும்பு – அரும்பும் நிலை
2. மொட்டு – மொக்கு விடும் நிலை
3. முகை – முகிழ்க்கும் நிலை
4. மலர் – பூநிலை
5. அலர் – மலர்ந்த நிலை
6. வீ – வாடும் நிலை
7. செம்மல் – இறுதி நிலை

பூவிற்குத்தான் இப்படி பருவப் பெயர்கள் என்றால் இலைகளுக்கும் பல பருவங்களுக்கேற்பத் தமிழில் சொற்கள் வருகின்றன.

1. கொழுந்து – குழந்தைப்பருவம்
2. தளிர் – இளமைப்பருவம்
3. இலை – காதற்பருவம்
4. பழுப்பு – முதுமைப்பருவம்
5. சருகு – இறுதிப்பருவம்

இந்த இலை என்ற சொல்கூட ஆல், அரசு, அத்தி, பலா, மா, வாழை போன்ற மரங்களின் இலைகளுக்கு மட்டுமே பொருந்தும்.

அகத்தி, பசலி முதலியவற்றின் இலை, இலை என அழைக்கப்படாமல் கீரை எனப்பெயர் பெருகிறது. மண்ணில் படர்கின்ற கொடிவகை இலைகளுக்குப் பூண்டு எனப்பெயர் பெரும். இவ்வாறு பல்வேறு தாவரங்களின் (அவற்றை தாவரவியல் என்ற அத்தியாயத்தில் பார்க்கலாம்) இலைகளுக்குத் தமிழில் பெயர் வைத்தவர்கள் தமிழ்மொழி வல்லுநர்களாகவும், விவசாயிகளாகவும் இருந்திருக்கிறார்கள்.

② தமிழ்மொழியில் 86,200 சொற்கள் உள்ளன என்பது மறைமலை (இப்போது அதிகமாக இருக்கலாம்) அடிகளின் கருத்தாகும். அதே நேரத்தில் அந்த சொற்கள் இலக்கணம் அர்த்தம், மூலவேர், சொற்சிறப்பு என்பன கொண்டவையாகும். ஆங்கிலமொழியில் பாதிக்குமேல் வேற்றுமொழிச் சொற்கள் ஆங்கிலமாகக் கலந்திருக்கின்றன. ③

1) Ballet - French, 2) Bonus - Latin, 3) Jungle - Indian, 4) Piano - Italian, 5) Vodka - Russia, 6) Church - Greek, 7) Cigar - Spanich, 8) Tea- China, 9) Navy-Tamil, 10) Boomerang - Australian Aborigine.

மேற்கண்ட சொற்கள்போல் ஆயிரக்கணக்கான சொற்கள் ஆங்கிலமொழியில் இருக்கின்றன. தமிழில் பிறமொழிச் சொற்கள் பொருத்தமாய்க் கலக்காது. ஆகவே பிறமொழிச்சொற்களுக்குத் தனித்துவமான சொற்கள் மெதுவாய் வந்தாலும் பலவரும். உதாரணமாக Fax என்ற ஆங்கிலசொல்லுக்கு தமிழில் தொலைப்பதிவு, தொலைஅச்சு, தொலைப்படிவம், தொலைநகல், சாயை எனப்பல சொற்கள் இருக்கின்றன. ஆனால் இவற்றை ஆராய்ந்து தமிழ் உலகமே பயன்படுத்தக்கூடிய ஒரு சொல்லை அறிமுகம் செய்கிற பரவலான செயற்பாடு தமிழர்களிடம் நிறுவன ரீதியாக இல்லை. எனவே ஒரு பிறமொழிச்சொல்லுக்கு மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தமிழில் வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதுவெல்லாம் ஒருபுறம் இருந்தாலும் தமிழில் சொற்களுக்குப் பஞ்சமே இல்லை. அறிவியலுக்கும் உகந்த மொழி. தமிழின் வரலாற்றிலேயே அறிவியல் இருந்திருக்கிறது. முறையான ஆய்வை மேற்கொண்டால் அறிவியல் சொற்கள் தமிழில் வரும்.

தமிழ்மொழியின் சிறப்பை வியந்து ஜி.யு.போப் ④ என்ற மேல்நாட்டு அறிஞர் தமது 'நாலடியார்' என்ற பழந்தமிழ் இலக்கிய நூலுக்கான உரையில் Tamil has a Wealth of Words which English lacks (தமிழ் சொல்வளம் நிரம்பிய மொழி; ஆங்கிலம் அத்துணைச் சொல்வளம் நிரம்பியது அன்று) என்று குறிப்பிட்டிருக்கிறார்.

⑤ டாக்டர் ஸ்மிட் (Dr.Schmidt) என்ற மேல்நாட்டு அறிஞர் தமிழ்மொழியைப் பற்றி The mode of collecting Its (Tamil) words follows the logical or Intellectual order more so than Even Latin or sanskrit (தமிழில் வார்த்தைகளை உருவாக்கும் விதம் தர்க்க ரீதியாகவும் அறிவுப்பூர்வமானதாகவும் அமைந்துள்ளது. இச்சிறப்பு இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைவிட உயர்வாக அமைந்துள்ளது) என்று சொல்லியிருக்கிறார்.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம் ⑥ தமிழைப் பற்றி சொல்லும்போது, சட்டத்திற்கு லத்தீன், பரிசுத்தமான சமயத்திற்கு ஈப்ரு, தத்துவத்திற்கு சமஸ்கிருதம், விஞ்ஞானத்திற்கு பிரெஞ்சு, ஜெர்மனி என்றால், தமிழ் கவிதைத்தனமான அனுபவத்திற்கும் பண்பாட்டிற்கும் உகந்த மொழி என்று சொல்கிறார்.

தேனைத்தொட்டு நாக்கில் தடவிப் பார்த்தால் அதன் ருசி புரியும். தேன் கூட்டில் இருக்கும்போது தேனை எப்படி ருசிக்க முடியும்? தமிழைப் படிக்காத தமிழர்களால் அதன் பெருமையை எவ்வாறு உணர முடியும்? சிலர் தமிழில் உள்ள தமிழ்ச் சொற்கள் புரியவில்லை என்கிறார்கள். புரியும் மொழி, புரியா மொழி என எந்த மொழியிலும் இல்லை. ஒருமொழி புரியவில்லை என்றால் அந்த மொழியைச் சரியாக கற்கவில்லை என்றுதான் அர்த்தம். தமிழைப் படித்துக் கொண்டே போனால் அதன் கதவுகள் திறந்து கொண்டே போகும்.

மொழி அறிஞர் தேவநேயப் பாவாணர் என்ற தமிழ் அறிஞர், உலகில் பலமொழிகள் இருந்தாலும் அவற்றுள் தொன்மை, முன்மை, இளமை, வலிமை, செம்மை, பெருமை, திருமை என பல்வகைச் சிறப்புகளைத் தமிழ் ஒருங்கே உடையது என்று ஆணித்தரமாகச் சொல்கிறார்.

தமிழ்மொழிக்கென தனித்துவமான இலக்கணம் இருக்கிறது. அவ்விலக்கண நூலே தொல்காப்பியம். அது தமிழின் மிக பழமையான நூல். அதற்கு முன்பும் நூல்கள் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் இலக்கணம் காணாத ஒரு மொழிக்கு இலக்கணம் வகுப்பதென்பது பண்டைய நாட்களில் காணப்படாத ஒன்று. தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கண நூல் உருவானதென்றால் அதற்கு முன்பே இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும். மேலும் தொல்காப்பியத்தில் காணப்படும் 'என்ப – என்மனார் – புலவர்' போன்ற சொற்கள், அதற்கு முன்பே இலக்கணநூல்கள் இருந்ததைத்தான் குறிக்கின்றன. ஆகவே பழமை வரலாறு, ஆழமான இலக்கணம், மரபுவழிப் பண்பாடு, மிகப்பழைய நூல்கள் கொண்ட தமிழ்மொழி தாய்மொழியானது தமிழர்களின் தாய்வழி நன்கொடையே.

அந்த இனிமைத் தமிழை மகாகவி பாரதி 'சேமமுற வேண்டுமெனில் தெருவெலாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்று உரத்துப் பாடுகின்றான். தமிழ் அவனுக்குத்தாய்மொழி. அதே நேரத்தில் பல மொழிகள் தெரியும் அவனுக்கு. எனவேதான் அவன் சொன்ன தேமதுரத் தமிழோசை இன்று உலகமெலாம் பரவி நிற்கிறது. உலகப்பந்தின் ஐந்து கண்டங்களிலும் தமிழ் ஒலிக்கிறது. இன்று தமிழ்மட்டும் தெரிந்தவன் தென்துருவ நாடுகளுக்கும் – வடதுருவ நாடுகளுக்கும் தைரியமாகப் போய்வரலாம் என்பதே வியப்பானது தானே!

மேற்கோள் நூல்கள்

①② தமிழின் சிறப்பு, கி.ஆ.பெ.விசுவநாதம், பாரி நிலையம், 1993, சென்னை.

③ Spelling made easy - hale & Iremonger - 1993 - Sydney.

④⑤⑥ தமிழும் தமிழரும் – டாக்டர் ந.கடிகாசலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 1982.

3. பிறப்பும் வாழ்வும்

சுழலும் பூகோளப்பரப்பில் இருக்கின்ற உயிர்களில் சிந்திக்கவும், பேசவும் தெரிந்த உயிரைத் தாங்குகின்ற ஒரு படைப்பு மனிதன் மட்டுமே. ஆனால் அவனும் மரணம் என்ற முடிவான நிழலைச் சுமந்து வாழ்பவனே.

இந்த பூமி கோடிக்கணக்கான மனிதர்களின் பிறப்பையும், இறப்பையும் பார்த்திருக்கிறது. அவர்களில் வெவ்வேறு காலக்கட்டங்களில் மானுடத்தை உயர்த்த வந்த ஞானிகளும் அடங்குவார்கள். ஞானிகள் சுயநலம் அற்ற பொதுநலநோக்கோடு வந்தவர்கள், அவர்கள் மானிடனுக்காகப் பேசினார்கள். அவர்கள் பிறப்பால் மனிதர்களானாலும் தன்னை அறிந்த மாமனிதர்கள். அவர்கள் ஞானிகள் என அழைக்கப்பட்டார்கள்.

ஒரு மனிதன் தன்னை உணர்ந்தாலே அவனுக்கு ஞானம் வந்துவிட்டதாகத்தான் அர்த்தம். ஞானத்தை அறிவின் உச்சம் எனக்கூடச் சொல்லலாம். ஞானத்தேடலே மனிதனின் ஊனத்தை மாற்றும், ஊனம் புற ஊனம், அகஊனம் என இருவகையானவை. புற ஊனத்தை மருத்துவத்தால், தொழில் நுட்பத்தால் மாற்றலாம். குறைக்கலாம். அக ஊனத்தை (அக=உள்) அறிவால் பெறப்படும் ஞானத்தாலே மாற்றமுடியும். ஞானத்தை எவ்வாறு பெறுவது? நான் என்பது கரைந்து போக ஞானம் வரும். அந்த ஞானத்தை தமிழில் சித்தர் இலக்கியத்தின் மூலமும் பெறமுடியும்.

சித்தர்கள் மானுடத்தை அறிந்து அதனை உயர்த்தி சித்தி பெற்றவர்கள். அவர்களில் முதன்மையான சித்தர் திருமூலர்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் – தன்னை
நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்ற திருமந்திர வரிகள் மூலம் இறைவன் தன்னைத் தமிழுக்காகப் படைத்தான் என்று ஆன்மீகம் பேசியபோதும் தமிழை மறக்கவில்லை திருமூலர்.

தமிழை நன்கு கற்றுத் தெளிந்த அவர், இறைஞானத்திலும் தெளிவு கொண்டவர். அந்தத் தெளிவுதான் அவரை 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொல்லவைத்தது.

அந்த தாரக மந்திரத்தை – மானுடன் மேம்பட சொன்ன வார்த்தையைத்தான் அறிஞர் அண்ணா தமிழ் உலகமெங்கும் முழங்கினார்.

மானுடத்தை உணர்ந்தவர்களுக்கும், ஆன்மீக ஞானம் பெற்றவர்களுக்கும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதில் மறுப்பில்லை; மாறுபாடில்லை.

மனிதகுலம் ஒன்று என்பதை வெறும் பாடலாகத் தெரிவிக்கவில்லை திருமூலர். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற மானிடப் பிறப்பு உணர்ந்த மெய்யான கருத்து. அஃதே போன்று தேவன் உண்டு என்பதில் அவருக்கு மயக்கமோ தயக்கமோ இல்லை. அவரின் இந்த அறிவு ஞானம் தான் இந்த உலகத்தை மாத்திரமல்ல, ஏழு உலகத்தையும் ஒருவனே படைத்தான் என்கிறான்.

ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளித்தான்
ஒருவனுமே உலகு ஏழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர்தானே. (திருமந்திரம் – 404)

இப்பாடலில் ஏழு உலகத்தையும் படைத்தான், காத்தான், ஒடுக்குகிறான். அவனே உலகமாகவும் உயிராகவும் இருக்கிறான். அவனே ஒருவனாகிய 'தேவன்' என்கிறார் திருமூலர்.

அந்த ஏழு உலகம் என்பதும், ஒருவனே தேவன் என்பதும் திருமூலருக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது உலகுக்கே சொந்தமானது.

சமயங்கள் வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் எனப் பிரிந்து இருந்தாலும் அவற்றின் நூல்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது இறைவன் சம்பந்தமான ஞானம் பொதுவானதாகவே இருக்கின்றது.

இந்த ஞானம் படைப்புகளுக்கான ஆதிமூலம் என்கின்றன சமயங்கள். வேதங்களும் உபநிடதங்களும் ஞானத்தில் இருந்தே எல்லாப் படைப்புகளும் தோன்றின என்று கூறுகின்றன. ரிக் வேதத்தில் 'பிரமன்' என்ற சொல் 'ஞானம்' என்ற அர்த்தத்தில் கையாளப்படுகிறது.

சைவ சித்தாந்த நூல்களும் 'ஞானம்' என்ற சொல்லில் தெளிவாகவே இருக்கின்றன. 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' எனப்பாடிய நாவுக்கரசர் 'உடம்பு' எனும் பாடலில் 'இறைமை ஞானத்தீயால் இறைவனை இதயத்தில் காணலாம்' என்கிறார்.

திருவாய்மொழியில் வரும், 'வருந்தாதே ஞானமாய் வரம்பு இன்றி முழுது இயன்றாய்' என்ற வரிகள் முதலும் முடிவும் இல்லாத பொருள் இறைமை எனச் சொல்கிறது. ஞானம் என்பது பிரபஞ்சம் பற்றிய முழுமையான திட்டம். பைபிளும் முதலில் படைக்கப்பட்டது ஞானம் எனக் கூறுகிறது.

'ஆண்டவர் ஞானத்தால் பூவுலகிற்கு அடித்தளமிட்டார். விவேகத்தால் வானங்களை நிலைபெறச் செய்தார். அவருடைய ஞானத்தால் நிலத்தின் அடியிலிருந்து நீர் பொங்கி எழுகின்றது. வானங்கள் மழையைப் பொழிகின்றன.' (நீதி – 3 – 19;20)

இது பைபிளின் நீதிமொழிகள் என்ற நூலில் உள்ள வார்த்தைகள். இதே கருத்து இஸ்லாமிய நூலிலும் காணப்படுகின்றது. முதன் முதலாகப் படைக்கப்பட்டது ஞானமே என்று இறைதூதுவர் முகமது கூறுகின்றார்.

'இறைவன் முதலில் ஒளியையே படைத்தான். அந்த ஒளியிலிருந்து படைப்புகள் யாவும் உண்டாயின' என்று கூறியிருக்கிறார். இங்கு ஞானமே ஒளி எனப்படுகிறது.

'ஏழு வானங்களையும் படைத்தான்.
அவ்வாறே பூமிகளையும் அவனது ஞானம் அனைத்தையும்
ஆழ்ந்து நிற்கிறது'

- (திருக்குர் ஆன் - 65:12)

சிலப்பதிகாரம் என்ற நூலில் இறைஞானம் பற்றி ஒரு இடத்தில் வருகிறது;

'சாரணர் வாய்மொழி கேட்டு தவமுதல்
காவுந்தியும் தன்கை தலை மேற்கொண்டு
ஒருமூன்று அவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக்கு அல்லது என் செவியகம் திறவா'

(சிலப்பதிகாரம் - நாடுகாண்காதை - 192-195)

என்ற பாடலில் 'காமம், வெகுளி, மயக்கம் என்னும் தீயகுணங்களையும் வென்றவனை அருகக் கடவுளின் அருள் ஞானமொழியைக் கேட்க அல்லாது வேறுமொழிகளை என்காதுகள் கேட்கா' என வருகிறது. ஆக, பரம்பொருளிலிருந்து முதலில் வெளிப்பட்டது ஞானமே என்றும் அதிலிருந்தே படைப்புகள் தோன்றின என்றும் எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. குறிப்பாக இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து ஆகிய சமயங்களும் கூறுகின்றன. இச்சமயங்களின் பிறப்பிடம் ஆசிய கண்டத்து மண் என்பதிலும் ஒரு ஒற்றுமை இருக்கின்றது. இந்த ஒற்றுமையோடு இம்மூன்றுக்கும் இடையே இன்னொரு ஒற்றுமை இருக்கிறது. அது இந்த உலகத்தையும் மனிதக் கூட்டத்தையும் படைத்தது ஒரு தேவன்தான் என்பதை முன்மொழிவதே. அதே நேரத்தில் மனிதனின் பிறப்பு பற்றிய பார்வையில் சமய ரீதியில் பகுத்தறிவு பார்வையிலும் வெவ்வேறு எண்ணங்கள் தெரிகின்றன.

மனிதனுக்கு எழுபிறப்பு (7) உண்டென ஆன்மீக நூல்கள் கூறுகின்றன. அதேநேரத்தில் மனிதனின் உடலுக்கு கரு, குழந்தை, பிள்ளை, சிறுவன், இளைஞன், மனிதன், முதியோன் என ஏழு பருவ பிறப்பு உண்டென்பதை பழந்தமிழ் இலக்கியம் கண்டுள்ளது.

நீதிநூலாகிய திருக்குறளில் திருவள்ளுவர்,

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு. - (107)

என்று சொல்கிறார். இக்குறளுக்கு உரை எழுதிய அறிஞர்கள் ஏழுவகைப் பிறப்பு என்றே குறிப்பிட்டுள்ளனர். இதனை பகுத்தறிவு தமிழ் அறிஞர்கள் ஏழு பிறவி என்பதையே ஒப்ப மறுக்கின்றனர்.

போன பிறப்பில் என்ன பிறப்பாய் இருந்தேன்? என்பதை அறிய முடியாத மனிதன், தனக்கு நன்மை செய்தவர் எவர் என்று எவ்வாறு அறிவான்? எனவே எழுபிறப்பு என்பது ஏழுதலைமுறையைக் குறிக்கும் எனச் சொல்வாரும் உளர். அதனை ஆராய்ந்து பார்த்தால் அதில் உண்மை இருக்கிறது என உணரலாம். எழுபிறப்பும் என்னவென்று அறிய ஒரு பிறப்பில், அப்பிறப்புகளில் பிறர் செய்த நன்மைகளை எல்லாம் நினைத்தல் என்பது சரியா?

திருக்குறள் வாழ்வு நூல். அதனை அறிவியல் பார்வையோடு பார்த்தால் ஏழு பிறவியென்பது ஏழு தலைமுறை என ஆகும் என்பதே புரியும்.

ஏழு என்ற சொல்லும், ஏழு தலைமுறை முறையும் தமிழர் வாழ்வோடு தொடர்புடையது.

வாரத்தில் ஏழு நாட்களை வைத்துக்காலத்தைக் கணித்துக் கொண்டிருக்கும் மனிதனின் உடலில் மிக முக்கியமான ஏழு : இரதம், குருதி, எலும்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம் என்பனவே.

இசைக்கு ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழே முக்சியமானது. ஏழு வண்ணங்களே வானவில்லாகின்றது. ஏழு என்ற சொல்லில் எழு என்ற அர்த்தமும் இருப்பதால் அச்சொல் மிகமுக்கியமான சொல்லாக இருக்கிறது. இலங்கையில் 'ஏழுமா' என்ற சொல் 'முடியுமா' என்ற அர்த்தத்தில் பேசப்படுகிறது.

பைபிளில் ஒரு இடத்தில் ஏழு பற்றி ஒரு செய்தி வருகிறது.

'தேவனே! எனக்கு எதிரான சகோதரனை மன்னிக்க வேண்டுமா? எத்தனை தடவை-ஏழுதடவை? என்று ஒருவன் கேட்க யேசுநாதர் பதில் சொல்கிறார். ஏழு தடவையல்ல. எழுபது முறை ஏழுதடவை மன்னிப்பு வழங்கு!

மேற்கத்திய புராண நூல்களின்படி பாவங்கள் ஏழு, புண்ணியங்கள் ஏழு. ஏழு என்பது மேல்நாட்டவரோடு மட்டுமல்ல, தமிழரின் வாழ்க்கையோடும் சுழலும் ஒன்று.

ஏழு தலைமுறைகளைத் தமிழன் நம்புகிறான். ஒரு மனிதனின் உருவமும், குணாதிசயங்களும், பண்புகளும் ஏழுதலைமுறைவரை ரத்தத்தின் வழியே பயணம் செய்யுமாம்.

அந்த ஏழுதலை முறையே ஏழு பிறவியாக இருக்கலாம். இன்றும் கிராமத்தில் ஒருசொல் உண்டு; அது 'உயிர் போகிற காரியத்துக்கு உதவி செய்தால் ஏழுதலைமுறைக்கும் அதை மறக்கமாட்டேன்' என்பதே அது! ஆகவே அந்த ஏழுதலைமுறையைத்தான் ஏழுபிறவியென்று வள்ளுவன் சொல்லியிருப்பான் என்பதை அறிவியல் நோக்கில் வியந்து பார்க்கலாம்.

மூதாதையர் :

அன்னை தந்தை இயல்பும், அதனோடு அவர்களின் முந்திய பரம்பரையினரின் இயல்பும் ஒருங்கே கூடிப் பிறக்கும் குழந்தையில் அமைகின்றன என இன்றைய விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனை இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் பெற்றோர் இயல்பு காலும், அவர் பெற்றோர் இயல்பு அரைக்காலும் எனத் தலைமுறை இயல்பே ஒருவர் இயல்பாய் அமைகிறது.



தலைமுறைப் பதிவு

ஒரு பிள்ளையின் பிறப்பில் அம்மா, அப்பா மட்டுமல்ல, அவர்களின் பெற்றோர் இயல்பு, உருவம், குணம் என்பனவும் கலந்துள்ளன. பிறந்த குழந்தை 'தாத்தா மாதிரி, பாட்டி மாதிரி இருக்கின்றதே' என்பதே தலைமுறைப் பதிவின் தொடர்ச்சியே.

மேல்நாடுகளில் ஒரு நாய்க்குட்டி விலைக்கு வாங்கினால் அதன் பரம்பரை பற்றிய வரலாறு சொல்லப்படுகிறது. குதிரை வாங்கும்போது அந்தக்குதிரையின் பரம்பரைப்பற்றிய பட்டியல் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட மனிதர்களின் தலைமுறையினர் பற்றிய தகவல் சேகரித்து வைக்க மேலைநாடுகளில் நிறுவனமே இருக்கிறது. சில தனியார் வீடுகளில் செயற்கையான குடும்ப (Family Tree) மரத்தில் தங்கள் தலைமுறையினரின் உருவங்களைத் தொங்கவிட்டு வைப்பார்கள். இன்றைய வைத்திய முறையில் தலைமுறைநோய்களைப் பற்றி விளக்கம் கேட்கிறார்கள். அதே நேரத்தில் தலைமுறைப் பதிவைத் தவறுதலாகப் புரிந்து கொள்ளக்கூடாது. திருடன் மகனும் திருடன் எனப்புரிந்துகொள்வது மிகத் தவறு. பிறக்கும்போது எவரும் திருடனாகவோ, கொலையாளியாகவோ பிறப்பதில்லை. அது இந்த சமூகத்தில் வாழும்போது 'அவர்களுக்கு' நேர்ந்த விபத்து. இதற்கும் தலைமுறைப் பதிவுக்கும் தொடர்பில்லை. இது தலைமுறையின் உருவ ஒற்றுமை. தலைமுறை நோய், நுண்ணிய உணர்வுகள் என்பனவற்றில் மட்டுமே தங்கி வெளிப்படுத்துவது. அதே நேரத்தில் கணவன் மனைவி ஆகியோர் புணரும்போது தங்கி நிற்கின்ற உணர்வுகள் இந்த பதிவிலும் அடங்கும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

திருமூலர் என்ற தமிழ்ச்சித்தர் திருமந்திரத்தில் இதைப்பற்றி ஒரு பாடலில் சொல்கின்றார்.

விடுங்காண் முனைந்திந் திரியங்களைப் போல்
நடுங்கா திருப்பானும் ஐயைந்து நண்ணப்
படுங்காதன் மாதின்பால் பற்றற விட்டுக்
கடுங்காற் கரணங் கருத்துறக் கொண்டே   திருமந்திரம் : 1942

இப்பாடலின் திரண்ட கருத்து சிற்றின்ப விருப்பத்தைக் கவர்ச்சியோடு போதையோடு வெறியோடு புணரலாகாது என்பதே.

கணவனும், மனைவியும் இணையும்போது தூய்மையான எண்ணங்களோடு இணையவேண்டும். மேலைநாடுகளில் மது, போதைப்பொருள் உட்கொண்டு இணையும் கணவன் மனைவிக்கு ஊனமான குறைந்த வளர்ச்சி கொண்ட குழந்தைகள் பிறக்கின்றனவாம். பெற்றோரின் சாயல் குழந்தையில் பதியும் என்பதற்கு இதுவொரு உதாரணமாகும். திருமூலர் இன்னொரு பாடலில் பெற்றோர்களின் சாயல்பற்றி பேசுகிறார்.

ஏயங் கலந்த இருவர் தம்சாயத்துப்
பாயும் கருவும் உருவாம் எனப்பல
காயம் கலந்தது காணப் பதிந்தபின்
மாயம் கலந்த மனோலயம் ஆனதே — திருமந்திரம் : 459

சுக்கிலமும் (Sprem), சுரோணிதமும் (Ovum) கருவாகப் பெண்ணின் கருப்பையில் பதியும்பொழுது, ஆண், பெண் இருவரின் உடம்பிலும் கலந்துள்ள பலவகை எண்ணங்களும் சேர்ந்து பாயும். மாயமாக உள்ள அவர் மனத்தின் எண்ணம், உணர்வு ஆகியவையும் பதியும். ஆக காதல் என்பதும் ஆண், பெண் சேர்க்கை என்பதும் அன்பினால் இருக்கவேண்டும். எந்த வழியிலும் வெறிகூடாது. பெண்ணோடு கூடுங்காலத்தில் கணவன் மது மற்றும் போதை உட்கொண்டு இருக்கக்கூடாது என்றும், கருவுற்ற காலத்தில் பெண்கள் மது, புகை போன்ற பழக்கங்களை கைவிடவேண்டும் என்று மேலை நாடுகளில் மருத்துவம் சொல்கிறது.

மனிதனின் பிறப்பு, இறப்பு இயற்கையானது என்றாலும் மனித உடலில் உள்ள உணர்வுகள் மனிதனாலேயே தரப்படுகின்றன. அதனைக் கையாலும் சக்தி மனிதனுக்கே தரப்பட்டுள்ளது. அதனைக் கண்டு அறிந்தவர் பழந்தமிழரான ஆன்மீக விஞ்ஞானி திருமூலர். அவர் மனிதனின் பிறப்பு பற்றி இன்றைய அறிவியல் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்தை மேல்நாட்டு விஞ்ஞானம் உருவாவதற்கு முன்னரே முன் வைத்தார். அவர் சொன்ன அறிவியல் கருத்துகள்.

1. பெற்றோரின் சாயல் உருவாகும் கருவில் இருக்கும்.
2. பெண்ணின் கருப்பையில் விந்து (சுக்கிலம்) பதியும்போது அல்லது புணரும்போது இருவருக்கும் புரள்கின்ற உணர்வும் சேர்ந்தே பதியும்.
3. ஆண், பெண் ஆகிய படைப்பை உருவாக்குகின்ற முறை விந்தின் தன்மையில் இருக்கிறது.

மேற்கண்ட கருத்துகள் திருமூலரின் பாடலில் திரண்டவை. இன்றைய விஞ்ஞானம் கருவியின் மூலம் கருவுற்ற போதே ஆணா, பெண்ணா என்று அறிதலை திருமூலரும் அறிந்து சொல்கிறார்.

ஆண்மிகில் ஆண்ஆகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூண்இரண்டு ஒத்துப் பொருந்தில் அலியாகும்
தாள்மிகும் ஆயின் தரணி முழுதுஆளும்
பாழ்நவம் மிக்கிடின் பாய்ந்ததும் இல்லையே!

திருமந்திரம் : 478

இதன் கருத்து ஆண், பெண் கலப்பில் ஆண் விந்தில் 'சுக்கிலம்' மிகுதியானால் ஆண் குழந்தையும், கருமுட்டையில் 'சுரோணிதம்' மிகுதியானால் பெண் குழந்தையும், இரண்டும் சமமானால் அலியும் பிறக்கும். ஆண் விந்தில் ஆற்றல் மிகுந்திருப்பின் ஆண்குழந்தை அரசாளும். இரண்டில் ஏதேனும் ஒன்றில் பாழ்செய்யும் பொருள் மிகுதியானால் கரு உண்டாகாது.

① 'மேல்நாட்டு மருத்துவ ஆய்வில் x குரோமோசோமும் y குரோமோசோமும் சேர்ந்து xy என்று கரு உருவானால் அது ஆணாகவும், xx என்றாகும்போது அது பெண்ணாகவும் இருக்கும்' என்று உறுதி செய்துள்ளார்கள்.

ஆன்மீகத்தைப் பற்றி பேசவந்த திருமூலர் மனிதனின் பிறப்பு பற்றி பேசுவது விந்தையல்ல. மனிதனின் மேன்மையைப் பாட வந்தவன் அவன், மனிதனின் மேல் அக்கறைகொண்ட சித்தன். எனவேதான் மனிதனின் உடம்பைப்பற்றி முன்னர் பேசியவன் இப்போது மனிதனின் பிறப்பைப் பற்றி அதனோடு கூடிய எண்ணங்கள் பற்றியும் பேசுகிறான்.

எண்ணங்கள் மாபெரும் சக்தி கொண்டவை. விதைக்கும்போது உள்ளவைதான் அறுவடையில் வரும். இவ்வுண்மையைப் புரிந்த நம் தமிழர்கள் வயலில் நாற்று நடும்போது பாடுவார்கள். கடலில் மீன் பிடிக்கும்போது கவலை மறக்க ஏலேலோ பாடுவார்கள். ஜப்பானில் தொழிற்சாலைகளில், வேலைத்தளங்களில் வானொலிகள் ஒலித்துக்கொண்டே இருக்கும். இவற்றால் உற்பத்தி அதிகரித்ததாகக் கண்டறிந்துள்ளார்கள். ஆக சூழலில் மகிழ்ச்சி வேலையில் ஏற்றம் தரும். இது வேலைக்கு மட்டுமல்ல. வாழ்க்கைக்கும் பொருந்தும். இதனை ஆன்மீகச் சித்தன் கண்டறிந்தான். அவன் 'மூச்சி'ன் மூலம் பிறப்பின் 'பேச்சை'க் கண்டான்.

ஆண், பெண் புணர்ச்சி காலத்தில் ஆணுக்கு மூச்சு வலமூக்கு வழியாக இயங்கினால் ஆண்குழந்தை பிறக்கும். இடமூக்கு வழியாக மூச்சு இயங்கினால் பெண் குழந்தை பிறக்கும். விந்துவோடு செல்லும் பிராணவாயு என்ற உயிர்வளியை அபாணாவாயு என்ற மலக்காற்று எதிர்த்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும். மூச்சுக்காற்று இடமூக்கு வலமூக்கு என ஒரே நேரத்தில் இயங்கினால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

ஆண் பெண் புணரும் காலத்தில் மூச்சை எப்பக்கம் இயங்கவைக்க முடியும் என்ற எண்ணங்கள் உறுதியானால் திருமூலர் சொன்னது சாத்தியமாகும். இது படைப்புச் சக்தியை எதிர்ப்பது அல்ல. படைப்பின் பேரால் இருக்கின்ற வசதியைப் பயன்படுத்துவதாகும்.

திருமூலரின் ஆன்மீக அறிவியலில் பிறக்கப்போகும் குழந்தையின் ஆயுளைக்கூட நாம் முயன்றால் கூட்டமுடியும்.

பாய்ந்தபின் ஐந்துஓடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நால்ஓடின் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை.
பாய்ந்திடும் யோகிக்கும் பாய்ச்சலு மாமே திருமந்திரம் : 479

சுக்கிலம் என்கிற விந்து ஐந்து விரற்கடை ஓடினால் பிறக்கப்போகும் குழந்தைக்கு ஆயுள் நூறு. விந்து நான்கு விரற்கடை ஓடினால் எண்பது. இவற்றை தான் விரும்பும் வகையில் (விந்துவை) செலுத்த வல்லவன் 'யோகி' ஆவான். அப்படியாயின் யார் யோகி?

ஒரு நேரம் உண்பவனே யோகி, உடலையும் உள்ளத்தையும் கட்டுப்பாடுடன் வைத்திருப்பவனே யோகி. அந்த யோகியே விரும்பியதைப் பெறமுடியும்.

பிறப்பும், இறப்பும் இயற்கை என்றபோதும் வாழும்போது விரும்பியதை மனிதனால் பெறமுடியும். இன்றைய விஞ்ஞானமாகிய அறிவியல் அதனையே செயல்படுத்துகிறது. அதனை திருமூலர் என்றோ தனது மெய்ஞ்ஞான அறிவியல் மூலம் சொல்லி வைத்துள்ளார்.

இன்று கருவில் இருக்கும் உயிர் நோயோடு இருக்கிறதா? அதன் வளர்ச்சி எவ்வாறு இருக்கிறது என்பதைக் கண்டறிய நவீனக் கருவிகள் வந்துள்ளன. திருமூலர் இதனையும் வேறு விதமாய்ச் சொல்கின்றார்.

பாய்கின்ற வாயு குறையின் குறள்ஆகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே திருமந்திரம் : 480

என்ற பாடல் வரிகளில் விந்துவைச் செலுத்தும் வாயு குறைந்தால் குழந்தை குள்ளமாகும். வாயு மெலிந்தால் முடமாகும். தடைப்பட்டால் கூனல் உடையதாகும் எனச் சொல்லப்பட்டுள்ளது. இன்னொரு பாடலில் (481) கருவளரும் காலத்தில் தாயின் குடலில் மலம் மிகுதியாகத் தேங்கியிருந்தால் குழந்தை அறிவு மந்தம் உடையதாக பிறக்கும். நீர் மிகுதியானால் ஊமையாகும் இரண்டும் அங்கு மிகுதியானால் குருடாகும்.

திருமூலர் தாயின் கருவில் குழந்தை வளர்தல், பத்துமாத அளவில் குழந்தை பிறத்தல், குழந்தை பிறவாமைக்குக் காரணம் குழந்தை உடற்குறையோடு பிறப்பதற்குக் காரணம் எனப் பல அறிவியல் செய்திகளை 39 பாடல்களில் எடுத்துரைக்கின்றார். இவையெல்லாம் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் நடப்பதை மனிதனே அறிவியலால் தீர்மானிக்கமுடியும் என்பதைக் காட்டுகிறது. குழந்தை பிறப்பதைக்கூட மாத்திரையின்றி, உறையின்றி இயற்கையாகத் தடுக்கமுடியும்.

இன்றைய விஞ்ஞானம் மனிதனின் மரபணு (DNA) பற்றிய ஆய்வில் முன்னேற்றம் கண்டுவருகிறது. கருவிலேயே பரம்பரை நோய்களைத் தகர்த்தறிய முடியும் என்பதைக்கண்டு பிடித்துள்ளார்கள். ஆனால் இவற்றையெல்லாம் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்த நவீன விஞ்ஞானத்திற்கு முன்பே திருமூலர் என்ற சித்தன் திருமந்திரத்தில் சொல்லியிருப்பது வியப்பாக இல்லை? திருமூலர் ஆன்மீகவாதி மட்டுமல்ல. அவர் மனித உடம்பை அதன் பிறப்பை, இயக்கத்தை ஆய்வு செய்த ஆன்மீக அறிவியல் ஞானி. அவரின் கருத்துகள் இன்று வியப்பை தருவதோடு தமிழர் அறிவியலுக்கு புகழ் சூட்டுகின்றன.

வாழ்வு :

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட கால எல்லையில் வாழ்க்கை அடங்கி விடுகின்றது. இந்த வாழ்க்கை பேசத் தெரிந்த மனிதனுக்கு ஏனைய உயிரினங்களைவிட வேறுபட்டதாய் வித்தியாசமாய் அமைகின்றது.

மரணம் நிச்சயம் எனத் தெரிந்தும் மனிதன் வாழ ஆசைப்படுகின்றான். அந்த ஆசையில்தான் உலகத்தில் நாடுகள் நகரங்கள் கிராமங்கள் விரிந்து கொண்டிருக்கின்றன.

இன்று மனிதகுலம் அனுபவிக்கும் நவீன அறிவியல் புதுமைகள் அன்று ஆசைப்பட்டு, நேற்று மரணித்துப் போனவர்கள் கண்டுபிடித்தவை. அவர்கள் நாங்கள் ஒருநாள் சாகப் போகிறவர்கள் தானே என நினைத்து, அவைகளை ஏன் கண்டுபிடிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தால் நமக்கு மின்சாரமே வந்திருக்காது. ஆனால் அவர்கள் மரணத்தை விட வாழ்க்கைக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். எனவே அவற்றைக் கண்டுபிடித்தார்கள்.

வாழ்க்கை வாழ்வதற்கு; மனிதனுக்கு வாழ்க்கை உண்டு. அதனால்தான் நமது இலக்கியங்கள் வாழ்வைப் பேசுகின்றன. ஆன்மீகம் அழிகிற உடலையும், பிரிகிற உயிரையும் காட்டி நிலையாமையைப் பேசுகிறது. திருக்குறள் மனித வாழ்வியல் நூல். அது வாழும்போது மனிதனுக்கு உள்ள கடமையைப் பேசுகிறது.

தமிழில் இருக்கும் சித்தர்களின் எழுத்துக்கள் மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோது உடம்பு அழியக்கூடியது, மனித வாழ்க்கை நிலையானதல்ல என்று சொன்னாலும் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் இருக்கின்ற வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும், அந்த வாழ்வின் போது உடம்பின் அவசியம் என்ன என்பது பற்றி ஆழமாகப் பேசுகிறது.

பிறந்தால் இறப்பு உண்டு என்று மௌனமாக இருந்து விடமுடியுமா? பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே ஒரு வாழ்க்கை உண்டு. அந்த

வாழ்க்கையை கண், வாய், மூக்கு, செவி, மெய் என்ற ஐந்து புலன் வழி ஓடவிடுவதா? இல்லை.. அதற்கு மேல் வாழ்க்கைக்கு அர்த்தம் உண்டு என்கிறார் திருமூலர்.

மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டும்.. வையகத்தில்! அவன் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும். நோயற்ற வாழ்வுக்கு உடம்பைப் பாதுகாக்க வேண்டும்.

உலகில் பெரும்பான்மையான மனிதர்கள் தங்கள் உடம்பைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. ஆசாபாசத்திற்கு அடிமையான மனிதன் செயற்கைக்குக் கொடுக்கிற மரியாதையை அதற்கு காட்டுகிற அக்கறையை தன் உடம்புக்குக் கொடுப்பதே இல்லை. உடலில் நோய் இல்லாவிட்டால் தான் வாழ்க்கை இனிக்கும்.

வாங்கிய வண்டிக்கு (கார், வேன் முதலிய) எண்ணெய்யும் (பெட்ரோல்) தண்ணீரும் ஊற்றினால்தானே அது ஓடும்? அது மட்டுமா வண்டியின் சக்கரத்தில் காற்று அளவாய் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். வேகத் தடுப்பை (பிரேக்) உறுதி செய்ய வேண்டும். மொத்தத்தில் ஓடுகிற வண்டி மீது நீ அக்கறையைக் காட்டினால் தானே அது ஓடும். அது போன்று இந்த உடல்மீது அக்கறை காட்ட வேண்டாமா?

உடலுக்கு ஒவ்வாததைச் செய்து உவாதையை (நோய்)த் தேடுகிற மனிதன் உடம்பைக் கவனிப்பதே இல்லை. உடம்பை 'இழுக்' கென்று எண்ணி விட்டானா..?

திருமூலர் அப்படித்தான் முதலில் எண்ணியிருந்தார். 'உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்' என்ற அவரின் வரிகள் அப்படித்தான் சொல்கின்றன. ஆனால் பிற்பாடு இந்த உடம்புக்குள்ளே நிற்கிற மறைந்திருக்கிற பொருளைக் கண்டுகொண்டேன். இந்த உடம்பினுள் ஆத்ம சொரூபியான உயிருக்குயிரான உத்தமன் வாசம் செய்கிறான் என்பதை பல ஆய்வுச் சோதனைகளுக்குப் பின் கண்டு கொண்டேன். எனவே உடம்பை நான் அதிக கவனத்தோடு பல நடவடிக்கைகளினால் பாதுகாக்கின்றேன் என்கிறார் திருமூலர். அதனை விளக்கும் பாடல்;

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே (திருமந்திரம் – 725)

உடம்பைப் பாதுகாத்து அதனை வலுவுடைய தாக்கி நோய் பிடிக்காமலிருக்க பலயோக முறைகளையும், பல மூலிகைகளையும் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள் சித்தர்கள். இவ்வகையில் தோன்றிய அறிவுக்கலை இயல்களே நமது சித்த வைத்தியம் ஆகும். மேலும் சித்தர்கள் மனித உடம்பையும், அதன் இயல்பையும் ஆராய்ந்து மூன்று

பிரிவுகளிலே உண்மை கண்டு மூன்று விதமான ரகசியங்களை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் உடம்பு, உயிர், உள்ளம் (தமிழ்நெடுங்கணக்கின் உயிர், மெய், உயிர்மெய் போல) என ஆகின்றன.

மனிதனின் உடம்பும், அதன் நுட்பங்களும், உயிரும் அதன் இயக்கங்களும், உள்ளமும் அதன் இரகசியங்களும் என மூன்று வகைப்படுத்தி, இம்மூன்று பிரிவுகளிலும் இன்றைய நூதன விஞ்ஞானக் கருவிகளினால் சோதித்துப் பார்த்து ஒப்புக்கொள்கிற விதமாக பல ஆழமான அறிவு நுட்பங்களை அவர்கள் கண்டார்கள்.

மனிதனின் உடல் இயக்கத்தை ஆராய்ந்து பார்த்த சித்தர்கள். இந்த உடம்பினுள் ② 96 வேதியியல் தொழில்கள் (Chemical Reactions) அல்லது செயற்பாடுகள் நடக்கின்றன என்று கண்டுபிடித்தார்கள். அதாவது இந்த உடம்பும் உள்ளமும் இதனுள் இயங்குகிற உயிரும் ஆரோக்கியமாகச் செயல்புரியும் போது ஓர் உடம்பினுள் இந்த 96 செயல்களும் பிசகின்றி சீராக இயங்குகின்றன. அவ்வாறு இயங்கி அவற்றின் வேலை சரியாக நடைபெற்றால் அம்மனிதன் எந்தக் குறைபாடுமின்றி நலமாக இருக்கின்றான் என்று அர்த்தமாகும். விழிப்பாக நனவு நிலையில் இருக்கும்போது இந்த 96 செயல்களும் சரிவர நடக்கின்றன.

ஒரு மனிதன் உறங்கும்போது இந்த 96 செயற்பாடுகளில் சில நடைபெறுவதில்லை. கனவு நிலையில் இன்னும் சில குறைகின்றன. மயக்கத்தில் ஒருவன் இருந்தாலோ மேலும் சில செயல்கள் நின்றுவிடுகின்றன. விபத்தில் அடிபட்டு விழும்போது அல்லது துயர அதிர்ச்சி தாக்கும்போது இந்தச் செயல்கள் இவ்வாறே ஒவ்வொன்றாகக் குறைகின்றன. இந்த ரகசியத்தை நமது தமிழ்ச் சித்தர்கள் கண்டார்கள். இன்றைய மிகத்திறமையான வைத்திய நிபுணர்களும், மேனாட்டு மனோதத்துவ மேதைகளும், இதய சிகிச்சை நிபுணர்களும் இன்றைய நவீனக் கருவிகள் மூலம் சோதித்துப் பார்த்து ஒப்புக்கொள்கிற விதத்தில் இந்த ரகசியத்தை சித்தர் இலக்கியம் நமக்கு கூறுகிறது. அதனை உறுதி செய்யும் திருமந்திரப்பாடல்;

'முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே!' (திருமந்திரம் – 154)

இந்தப் பாடலில் கோயில் என்பது உடலைத்தான் குறிக்கிறது. (கோயில் என்பதும் உடலே–காயமே கோயிலாக என்ற பாடலில் வருகிற காயமே உடல்தான். எனவே உடலே கோயிலாக) எனவே முப்பது, முப்பது, முப்பத்தாறு என மொத்தம் 96 செயற்பாடுகளும் ஒழுங்காக சீராக சமமாக வேலை செய்தால் தான், மனித உடம்பு நோயற்ற உடம்பாகத் திகழும். 96–ல் 80 மட்டும் வேலை செய்தால் நோய் முற்றுகிறது என அர்த்தமாகும். அந்த

80ம் 70, 60, 50 என்று படிப்படியாகக் குறையும் போது மரணம் நெருங்கி வருகிறது என்றே அறியப்படும். ஆகக் கடைசியில் மேலும் மேலும் 30, 20, 10 என்று ஆகி இந்த உடம்பு மடியும்போது இந்த (Laboratory யில்) தொழிற்சாலையில் 96 வேதியியல் செயற்பாடுகளும் (Chemical Reaction) நின்று விடுகின்றன. இது சித்தர்கள் கண்ட ஒரு மாபெரும் உடற்கூற்று நிலை. இந்த 96–யும் 96 ஆன்மீக தத்துவங்கள் என்று சொல்வது சித்தர் மரபு. ஆகவே சித்தருக்கெல்லாம் பெரும் சித்தர் திருமூலர் இந்தப் பேருண்மையை ஞானச்சிரிப்போடு பாடுகிறார்.

ஒரு வீடு. அதில் 96 பேர் குடியிருக்கிறார்கள். இந்தக் காலத்தில் அடுக்கத்து (Flat) குடியிருப்புகளில் குடியிருப்பது போல் இந்த உடம்பு என்ற அரண்மனையில், கோயிலில் தரையில் (Floor) 30 பேர், மாடியில் 30 பேர், அதற்கு மேல் (Top Floor) மாடியில் 36 பேர் ஆக மொத்தம் குடியிருப்போர் (Tenants) 96 பேர். இந்த வீடு எப்படிப்பட்ட வீடு? நல்ல மதிற்சுவர்களுடைய கோயில். இந்தக் கோயில் இடிந்து விழுந்து விட்டால் என்ன செய்வார்கள் 96 பேரும்? அத்தனை பேரும் ஏகோபித்து ஓட்டம் பிடிப்பார்கள். இதன் மூலம் சித்தர் மிகப் பெரிய உண்மையை மனிதர்களுக்குச் சொல்கிறார்.

'மனிதா! உடம்பு சரியாக இருந்தால்தான் 96 பேரும் உன் வீட்டில் (உடம்பில்) தொடர்ந்து குடியிருப்பார்கள். வீடு பழதாகிவிட்டால் வீட்டைக் காலி செய்து கொண்டு ஓடிவிடுவார்கள். எனவே இந்த வீட்டை அவ்வப்போது பராமரித்து பாதுகாத்து வா..!'

திருமூலர் என்ற சித்தர் 96 ஆன்மீகத் தத்துவங்களின் பின் இருக்கின்ற மருத்துவ நுணுக்கங்களை நன்கு அறிந்தவர். அவற்றைத் தெளிந்துதான் ஆன்மீகத்தோடு அறிவியலை முன்னிலைப்படுத்தினார்.

ஆகவே தமிழ்ச்சித்தர்கள் உடலைப் பேணிக் காக்கின்ற முறைகளைச் சொல்லிவிட்டு மரணத்தைச் சொல்கின்றார்கள். மரணம் தவிர்க்க முடியாதது. அதுபோலவே வாழும்போது தவிர்க்க வேண்டியதை சித்தர் இலக்கியம் பேசுகிறது. வெறும் உயிர் (ஆவியல்ல) இவ்வுலகில் வாழமுடியாது. உடல் இருந்தால் தான் உயிர் வாழும். உடல் மட்டும் இருக்க முடியாது. எனவே உருவமற்ற உயிர் உருவமுள்ள உடலில் சேரவேண்டும். அப்போதுதான் மனிதன் அல்லது ஓர் உயிர் இனம் வாழமுடியும்.

தமிழ்ச்சித்தர்கள் பழங்காலத்திலேயே உடல், உயிர் என்ற இரண்டிலும் மிகத் தெளிவாக இருந்திருக்கிறார்கள். அந்தத் தெளிவில்தான் மானுடம் மேம்படச் சிந்தனைத் திறனை அறிவியல் பார்வையோடு சித்தர் இலக்கியத்தின் மூலம் இன்றும் வியந்து நிற்கிற வகையில் காட்டியிருக்கிறார்கள்.

மேற்கோள் நூல்கள் :

① கட்டுரை: ஆண், பெண், குழந்தை பிறப்பு, தினத்தந்தி – 2004.

② நமது செல்வம், மீ.ப.சோமு, வானதி பதிப்பகம், 1991, சென்னை.

4. உழவு

ஆடை இல்லாமல் மனிதன் வாழ்ந்தது முதல் அறிவியல் கல்வி செழித்தோங்கும் இந்த விஞ்ஞானக் காலம் வரை மனிதன் உணவைத்தேடி அலைந்த வண்ணமேயிருக்கிறான். செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புகிற மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட நவீன எந்திரங்களால் மண்ணிலே விதைக்காமல் உணவைச் சுயமாகத் தரமுடியாது. மண்ணுள்ளே விதையாக விரிந்து மண்ணுக்குள்ளே தலைநிமிர்ந்த பயிர், செடி, கொடி, மரம் என்பனவற்றால் பெறப்படும் உணவுக்கான மூலப்பொருளை எந்திரங்கள் உணவாக்க முடியும். அணு இல்லாமல் ஓர் அணுவும் அசையாது என்பதில் அறிவியல் இருக்கிறது. அணு அணுவாக வளர்கிற தாவரங்களில் இருந்துதான் உணவை மனிதன் தேட முடியும். இன்னும் அறிவியலாய்ப் பார்த்தோமானால் உயிருள்ள தாவரங்களால் – உயிருள்ள விலங்குகள், பறவைகள், நீரினங்கள் ஆகியவற்றால் தான் உணவு கிடைக்கிறது.

கடவுளை வேண்டுகிற அடியார்கள் கூட உணவுக்காகப் பிரார்த்திக்கின்றனர். திருமங்கை ஆழ்வார்,

> **கூறை சோறு இவைதந்து எனக்கு அருளி**
> **அடியேனைப் பேணி ஆண்டுகொள் எந்தாய்**

என்ற பாடலில் 'உணவும், இருப்பிடமும் தந்து என்னை ஆட்கொள்' என்று வேண்டுகிறார்.

மனித வாழ்வின் இன்பத்தைத் துறந்தவர்களும் உணவைத் துறக்கவில்லை, துறக்க முடியாது. உணவு மிக முக்கியமானது மனிதனுக்கு. எனவேதான் குர்ஆன், பைபிள் போன்ற மதநூல்களும் மண்ணின் பரப்பில் மனிதனுக்கான உணவை உறுதி செய்கின்றன. சங்க இலக்கியத்தில் பசித்த வறியோருக்கு உணவு அளித்த மனிதனை 'பசிப்பிணி மருத்துவன்' என புகழ்ந்துள்ளனர். இதன் மூலம் பசி போக்குபவன் ஒரு மருத்துவன் என்பதை இந்த உலகத்துக்கே தந்தவர்கள் சங்கத் தமிழர். உணவின் முக்கியம் அறிந்துதான் திருவள்ளுவர் உழவு என்ற தலைப்பில் 10 குறள்களை 20 வைரவரிகளில் அற்புதமாய் எக்காலத்திற்கும் ஏற்றதாய் தந்துள்ளார்.

> **சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
> **உழந்தும் உழவே தலை. (1031)**

என்ற குறளில் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும் இறுதியில் ஏர்த்தொழிலின் பின்னாலேயே உலகம் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பமடைந்தாலும் உழவே தலையானது என்று சொல்கிறார். அவர் சொன்னதில் மிகப் பெரிய உண்மை இருக்கிறது. ஒரு டாக்டரால், ஒரு விஞ்ஞானியால், ஒரு அரசியல் தலைவனால், ஒரு பொறியாளரால் இன்னும்

பல விற்பன்னர்களால் செய்ய முடியாததை ஒரு விவசாயி உழவுத்தொழிலில் செய்கிறான். அதன் மூலமே மனிதர்களுக்கு உணவு கிடைக்கிறது. அந்த உணவு தான் மனிதனுக்கு உயிரேயாகும்; உயிரைத்தாங்கும் சக்தியாகும். எனவேதான் பழந்தமிழர் 'உண்டி கொடுத்தோர் (உண்டி-உணவு) உயிர்கொடுத்தோர்' என்றனர்.

பழந்தமிழர் வரலாற்றைப் பார்க்கிறபோது தமிழர், தமிழ் மன்னர்கள் உழவுத்தொழிலைப் போற்றி வந்திருக்கிறார்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவனின் குறளை ஏற்றிருக்கிறார்கள். சங்கப் புலவர்கள் 'உழவுத்தொழிலுக்கு வரிபோடக்கூடாது' என்று மன்னனை வேண்டியிருக்கிறார்கள். உழவு மனிதனுக்கு உணவு கொடுக்கிற தொழில். அது நலிந்தால் மனித இனமே நலியும். எனவே அதன் உண்மையை உணர்ந்திருக்கிறார்கள் சங்கத் தமிழர்கள்.

உழவுத்தொழிலின் மூலமாக நெல்லைப் பெற்றனர் தமிழர்கள். பிறகு நெல்லை அரிசியாக்கினார்கள். நெல் முளைக்கும் பருவம். அரிசி முடியும் பருவம். எனவேதான் பழந்தமிழர் திருமணத்தின்போது வாழ்த்தும் நோக்கில் மணமக்கள் மீது விதையாக இருக்கிற நெல்லைத் தூவினார்கள். நெல் முளைக்கும். எனவே மணமக்கள் வாழ்வில் பதினாறு செல்வமும் முளைக்கட்டும் என்பதன் அடையாளமாக நெல்லைத் தூவினார்கள். (இன்று அரிசியை மஞ்சள் பூசித் தூவுகிறார்கள். ஒரு காலத்தில் விதைநெல் தட்டுப்பாடு வந்ததால் இந்த வழக்கம் வந்ததாக ஒரு குறிப்பு உண்டு.) நெல்லில் இவ்வாறு பண்பாடு கண்டவர்கள் பழந்தமிழர்கள். இன்றைக்கும் குறிப்பிட்ட சில தமிழர்களிடையே திருமணத்தின்போது நெல் அளந்து போடுகிற வழக்கம் உண்டு.

தமிழனின் நெல் நாகரீகம் உலகில் முதன்மையானது. நெல்லும் அரிசியும் தமிழரின் மங்கல அமங்கல சம்பவங்களில் தொடர்பு கொண்டது. திருமணத்தின்போது நெல்லால் வாழ்த்திய தமிழர்கள் இறப்பின்போது எல்லாம் முடிந்துவிட்டது என்பதாக இனி முளைக்காத அரிசியால் இறந்தவருக்கு வாய்க்கரிசி இட்டனர். இவற்றைக் கூர்ந்து கவனித்தால் வாழ்க்கையை (விதையால்) நெல்லால் தொடங்கி (முடிந்துபோன) அரிசியால் முடித்து வைப்பதாக அர்த்தம் வருகிறது. எனவே தமிழர் பண்பாடு நெல்லோடு தொடங்கியதாக சொல்ல முடிகிறது.

நெல்லில் பண்பாட்டைத் தொடங்கிய தமிழர் நெல்லை அரிசியாக்கி அரிசியை சோறாக்கி உணவாக்கி மகிழ்ந்தனர். இன்றைக்கும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிற உணவே அரிசிச் சோறாகும். அது வறியவர் பசியைப் போக்கும் மருந்தும் ஆகும். பசி முதல் மனிதனுக்கு முதலில் வந்த ஒன்று. மனித வரலாற்றோடு பசி முக்கிய தொடர்புடையது. அரசுகள் மக்கள் பசியைப் போக்க ஆவண செய்தாலும் ஆங்காங்கே வள்ளல்கள் காலத்துக்கு

காலம் அன்னம் இட்டு வந்திருக்கின்றனர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் தொடங்கிய அன்னதானம் இன்றும் வடலூரில் நடக்கிறது.

சங்க காலத்தில் அறச்சோறு எனத் தொடங்கிய பணி இன்றும் தமிழ் மண்ணில் அன்னதானமாய் நடந்து வருகிறது. தமிழகமெங்கும் அன்னதான சத்திரங்கள் ஆங்காங்கே இருக்கின்றன. இதுபோன்ற உணவு சத்திரங்கள் மேலைநாடுகளில் இல்லை. ஆனால் உணவு தேடும் வறியவர்கள் அங்கே இருக்கிறார்கள். அமெரிக்காவில் பகல் உணவு கிடைக்காத மக்கள் தொகை ஒரு நூறு ஆயிரத்தைத் தொட்டுவிட்டதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது. அறிவியல் வளர்ந்தாலும் பொருள் குவிப்பு ஒரு பக்கமாய்ப் போக பட்டினி, பசி என்பன சில மக்களை சமூகத்தில் தாக்கவே செய்கின்றன. உலகெங்கும் பட்டினியால் தவிப்போர் உண்டு. எனவேதான்அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட மேலைநாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம், (Red Cross) வின்சன்டி போல் மற்றும் தேவாலய அமைப்புகள் என்பன ஒரு நேர உணவு அல்லது உணவுப்பொருள் வழங்குகிற 'தர்மத்தை' வருமானம் குறைந்தோருக்கு, வேலை இல்லாதோருக்கு வழங்குகின்றன. கிறிஸ்துமஸ் காலத்தில் ஏழைகளுக்காக உலகெங்கும் நிதி திரட்டப்படுகின்றன.

எவ்வளவுதான் வறுமை இருந்தாலும் தமிழர்கள் விருந்தோம்பல் பண்பை கைவிடமாட்டார்கள். தொல்காப்பியர் காலத்திலேயே விருந்தோம்பல் இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழரின் உழவுத்தொழில். அத்தொழில் எப்போதும் வறுமையைக் கொடுக்காது. எனவே விவசாயிகளை மன்னருக்கு இணையாகப் போற்றினார்கள் அந்தக் கால மக்கள்.

விஞ்ஞான எந்திர மயக்கத்தில் இருக்கிற நாடுகளில்கூட விவசாயிகள் போற்றப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் ஆண்டுதோறும் பெரிய வெள்ளிக்கிழமையோடு (Easter Friday) ஒட்டிய காலப்பகுதிகளில் விவசாயிகளைப் போற்ற ஈஸ்டர் ஷோ (Easter Show) நடத்துகிறார்கள். அந்தக் கண்காட்சியில் விவசாயத்தோடு தொடர்புடைய மாடு, ஆடு, கோழி, வான்கோழி என்பனவற்றை காட்சிக்கு வைப்பார்கள்.

உலகில் வாழ்கிற மனிதனுக்கு விவசாயம் முக்கியமானது. ஒரு மனிதன் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி இல்லாமல் வாழ முடியும். ஆனால் உணவு இல்லாமல் வாழ முடியாது. ஆகவே சங்க காலத்திலேயே உணவு உற்பத்திக்கு வழிமுறைகளைக் கண்டார்கள் தமிழர்கள். நாடோடி வாழ்க்கையில் இருந்து மீண்டும் ஒரு பரிணாம வளர்ச்சியில் இதனைச் செய்திருக்க முடியும். ஆனால் நாடோடி வாழ்க்கையில் இருந்து மீளாதவர்களும் உலகில் இருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆஸ்திரேலிய ஆதிவாசிகள். ஒரு பெரிய நாட்டுக்கே

சொந்தக்காரர்கள். அவர்களின் வரலாறு 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். ஆனால் அவர்கள் உழவுத்தொழிலோ, விவசாயத்தொழிலோ அறிந்திருக்கவே இல்லை. வரலாற்றுத் தகவல்படி வெள்ளையர்கள் கால் வைத்த 1788-ம் ஆண்டுவரை எந்த நவீன வாழ்க்கையையும் அவர்கள் அறியவே இல்லை. ஆனால் நாடோடி வாழ்க்கையில் இருந்து மீண்ட சங்கத்தமிழர் உழவுத்தொழிலில் மாடுகட்டி 'போர்' (Rick) அடிக்க முடியாமல் யானை கட்டி 'போர்' அடித்திருக்கிறார்கள்.

தமிழர் வரலாறுபடி நெல்லில் மட்டுமல்ல ஏனைய பயிர்களை உற்பத்தி செய்வதிலும் சங்கத் தமிழர்கள் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். இனிப்புக்காக 'வெல்லம்' செய்தனர். அப்படியானால் கரும்பு உற்பத்தி இருக்க வேண்டும், இருந்தது. அதற்கு எந்திரமும் இருந்திருக்கிறது.

தமிழ்நாடெங்கும் நெல்லுக்கு அடுத்த நிலையில் ① கரும்பு உற்பத்தியானது. கரும்பு பயிர் செய்யப்பட்ட இடம் கரும்பின் பாத்தி என்றும் கரும்பின் கழனி என்றும் கூறப்பட்டது. மூங்கிலைப் போல் கரும்புக்கும் கணு உள்ளது. எனவே கரும்பு கழனிகளில் பயிர் செய்யப்படுகிற மூங்கில் என்று அழைக்கப்பட்டது.

கரும்பைச் சாறு பிழியும் எந்திரங்களும் கருப்பஞ்சாற்றை வெல்லங் காய்ச்சும் ஆலைகளும் ஊர்கள் தோறும் இருந்தன. பாண்டி நாட்டுத் தேனூரில் அவைகள் இருந்தன என்று ஐங்குறுநூறு என்ற சங்க நூலின்,

'கரும்பின் எந்திரமும் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வன் கோமான் தேனூர்' (ஐங்குறுநூறு-மருதம்-55)

என்ற பாடல் தெரிவிக்கிறது.

வெல்லத்துக்கு 'விசயம்' என்று பெயர் கூறப்பட்டது. வெல்லக் கட்டியைச் சுருக்கமாகக் கட்டி என்றும் கூறினார்கள். வெல்லம் 'கரும்பின் தீஞ்சாறு' என்றும் கூறப்பட்டது. அதனை

எந்திரமும் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகைசூழ் ஆலை தொறும்
கரும்பின் தீஞ்சாறு விரும்பினார் மிசைமின்

என்ற பெரும்பாணாற்றுப்படை (260-262) பாடல் தெரிவிக்கிறது.

கரும்பு தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாகவும் இருந்திருக்கிறது. திருவிழாக்காலங்களில் வீடுகளை வாழைமரத்தாலும், கரும்புக் கழிகளாலும் (தோகையோடு கூடிய கரும்பு) கட்டி அலங்காரம் செய்தார்கள். வெல்லம், சர்க்கரை விற்ற வணிகருக்கு 'பணித வாணிகர்' என்பதே பெயர். பணித வாணிகன் நெடுமூலன் என்ற பெயரை மதுரைக்கருகில் இருக்கிற குகையொன்றில் பிராமி எழுத்தின் அமைப்பில் கண்டுபிடித்தனர் ஆய்வாளர்கள். இது கி.மு. 2200 ஆண்டுகளுக்கு

முந்தியது என கடைச்சங்கச் செய்தி தெரிவிக்கிறது. அப்படியாயின் அதற்கு முன்பே தமிழர்களுக்கு கரும்பு பயிர் செய்கையும், கரும்பிலிருந்து வெல்லம், சர்க்கரை எடுக்கிற தொழில் நுட்பமும் தெரிந்திருக்கிறது. அதே கால கட்டத்தில் ஐரோப்பியருக்குக் கரும்பு தெரியாது. கி.பி. 15-ம் நூற்றாண்டில்தான் கரும்பும் வெல்லமும் மேலைநாட்டினருக்குத் தெரிய வந்தது. அதற்குப் பிறகுதான் அவர்கள் சீனியை (Sugar) கொண்டு வந்தார்கள்.

சீனியின் வருகைக்குப் பிறகுதான் சர்க்கரை, வெல்லம் என்பனவற்றின் பாவனை தமிழர்களிடம் குறைந்தது. இதனால் சர்க்கரை, வெல்லம் என்பனவற்றால் செய்யப்படுகிற கொலுக்கட்டை, மோதகம், பயிறு உருண்டை, பொறிவிளங்காய் (கெட்டி உருண்டை) பணியாரம் போன்ற பலகாரங்கள் ஒதுக்கப்பட்டு சீனியால் செய்யப்படும் மேலைத்தேய இனிப்பு உணவுகளே (Cake) பாவனைக்கு வந்தன.

கரும்பிலிருந்து கிராமக் கைத்தொழிலில் எடுக்கப்பட்ட வெல்லம், சர்க்கரை என்பன உடல்நலத்திற்கு (இனிப்புநீர்க் [சர்க்கரை நோயாளி] காரர்களைத் தவிர்த்த ஏனையோருக்கு) நல்லது என மருத்துவ நிபுணர்களே சொல்கிறார்கள். அவர்களே வெள்ளைச் சீனியின் பரவலான பாவனை உடல் நலத்திற்கு ஒவ்வாதது என்றும் சொன்னார்கள். மேலைநாடுகளில் கருப்பு சீனியும் கடைகளில் விற்பனையாகின்றன. ஆனால் தமிழரிடையே வெல்லம், சர்க்கரை போன்ற நலம் பயக்கும் இனிப்புப் பொருட்கள் ஓரங்கட்டப்பட்டு ரசாயன உரத்தால் (Chemical Fertilizer) உற்பத்தி செய்யப்படும் வெள்ளைச் சீனியே முன்னிலைப் படுத்தப்படுகிறது. இதற்கெல்லாம் பழந்தமிழரின் உணவு, உணவுப் பொருட்கள் தொடர்பான அறிவியலை அறியாத அறியாமையும் அந்நிய மோகமுமே காரணமாகும்.

இயற்கை வேளாண்மை :

ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று தடவையாவது உணவைப் பற்றிச் சிந்திப்பான் மனிதன். உணவு இல்லையேல் உயிர் இல்லை. உடலும் இல்லை. உண்டியாகும் உணவை உழவுத்தொழில் மூலம்தான் கொடுக்க முடியும். விஞ்ஞானம் விண்வெளியை கையகப்படுத்தி விட்டபோதும் மனிதன் உண்பதற்கான உணவை மண்ணில் நட்டு வளர்த்துத்தான் பெறமுடியும். மனிதரின் உணவை அடிப்படை (விதை, வேர்) இன்றி எந்திரங்களால் உற்பத்தி செய்ய முடியாது. பால் இருந்தால் பாலைக் கெட்டியாக்கி மாவாக்கலாம். பாலையே அந்த எந்திரத்தால் தரமுடியுமா? (எந்திரம்-யந்திரத்தை சங்க புலவர்களின் வழியில் இவ்வாறு அழைக்கலாம். அதனால் இயந்திரம் என எழுத வேண்டியதில்லை.)

விவசாயி சேற்றில் கை வைக்காவிட்டால் மற்றவன் சோற்றில் கை வைக்க முடியாது. ஆயிரம் தொழில்கள் இருந்தாலும் உழுதுண்டு வாழும் வேளாண்மையே முன்னிலையானது. இதனைத்தான் திருக்குறளில்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர். (1033)

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அவர் உழவின் பெருமை உணர்ந்து ஒரு அதிகாரமே 'உழவு' என்ற தலைப்பில் பாடி உழவு பற்றி தீர்க்க தரிசனமாகப் பேசியிருக்கிறார். அவர் வேறு ஒரு குறளில் உழவியல் செயல்முறைகளை அறிந்து ஒரு அனுபவமான விவசாயி போல் ஐந்து கோணங்களை எடுத்துக்காட்டுகிறார். உழவுத் தொழிலைப் பொறுத்தவரை உழுதல் (Ploughing) உரமிடுதல் (Fertilization) களை நீக்குதல் (Weed Control) நீர்பாய்ச்சுதல் (Irrigation) பயிர்ப் பாதுகாப்பு (Crop Protection) என்ற ஐந்து கோணங்கள் மிக மிக இன்றியமையாதவை. இதனை

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு. (1038)

என்ற குறள் சொல்கிறது. இன்றைக்கு விஞ்ஞானம் விரிவடைந்தாலும் இன்றும் இதே ஐந்து கோணங்களில்தான் விவசாயம் நடக்கிறது.

அதே 'உழவு' அதிகாரத்தில்

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்து எருவும்
வேண்டாது சாலப் படும். (1037)

என்ற குறளில் திருவள்ளுவர், ஒரு பலம் புழுதி கால்பலம் வண்ணம் உழவன் நிலத்தைக் காய விடுவானானால், கைப்பிடி அளவு எருவும் இட வேண்டாமல், நிலம் செழித்து வளரும் என்று உழவுத் தொழிலுக்கு ஆலோசனை கூறுகிறார்.

உழவுத் தொழிலுக்கும் ஏனைய பயிர் செய்கைக்கும் சூரிய ஒளி, மழை, நிலம் ஆகிய மூன்றும் முக்கியமானவையாகும். இம்மூன்றும் இல்லாமல் மண்சார்ந்த தொழில் நடக்காது. ஆகவே இம்மூன்றையும் சங்ககால கவிஞர்கள் போற்றுகின்றனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்தில் 'திங்களைப் போற்றுதும்' என்ற பாடலில் ஒளியைத் தருகிற சூரியனைப் போற்றி 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்றும், மழையைப் போற்றி 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்றும், நிலத்தைப் போற்றும் வகையில் 'பூம்புகார்ப் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்' எனப் போற்றி பாடியுள்ளார். விவசாயத்திற்கு நிலமும், சூரிய ஒளியும், மழையும் வேண்டுமென்பது அறிவியலாகும்.

சங்கப் புலவர்களில் பெரும்பான்மையானோர் விவசாயம் சார்ந்த அறிவியல் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். கம்பர் இராமாயணத்தில் கழிவுப் பொருட்களை பயனுள்ள வகையில் வேளாண்மைக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்பது அறிவியலாகும்.

மூட்டில் அட்டில் முழங்குற வாக்கிய
நெட்டுலைக் கழுநீர் நெடுநீத் தன்தான்
பட்டமென்கமு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே (பால - 57)

என்ற பாடலில் கழுநீர் வீட்டுக் கழிவுப் பொருள் அண்மையில் உள்ள வயல்நாற்றை வளர்க்கிறது என்று கம்பர் சொல்லும் செய்தி உழவுக்கு வந்தனை செய்வதாகும்.



சங்ககால இலக்கிய நூல்களின் குறிப்புகள்படி அக்காலத் தமிழர் சுற்றுப்புறச் சூழல் கெடாமல், மண்தாயின் மடி சேதமாகாமல் இயற்கை (Nature) முறையில் விவசாயம் செய்திருக்கின்றனர். விவசாயத்திற்குத் துணையாக ஆடு, மாடு, கோழிகளை வளர்த்தனர். நிலத்தைப் போற்றினர். நிலத்தை வெறுமனே ஒரு மண்ணாக மட்டும் எண்ணாது அதற்குமேல் அதன் தன்மை அறிந்து கொண்டாடினர். சிறுநிலத்தில் இயற்கையின் துணையோடு அதிக அளவு விளைச்சலையும் செய்து காண்பித்தனர். இதனை புறநானூறு சொல்கிறது;

ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே! (புற–40)

என்ற வரிகள் மூலம் சோழமன்னன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவனைப் போற்றி ஆவூர் மூலங்கிழார் பாடிய பாடலில் 'ஒரு பெண்யானை படுத்துறங்கும் சிறிய இடத்தில் ஏழு ஆண் யானைகள் உண்ணத் தக்க விளைபொருள் விளையும் வளமிக்க நாட்டுத் தலைவனே!' என்று பாடுகிறார். இதிலிருந்து நமக்குத் தெரிகிற செய்தி சின்ன நிலப்பகுதியில் அதிக விளைச்சல் காணுகிற உழைப்பு ஆற்றல், வேளாண்மை அறிவியல் பழந்தமிழர்களுக்கு இருந்திருக்கிறது என்பது தான்.

பழந்தமிழர் வரலாற்றை சங்க இலக்கியங்கள் வழிப்பார்க்கிறபோது தமிழர் இயற்கையோடு ஒத்த அறிவோடு சுற்றுப்புற அறிதலோடு நிலத்தை உழுது நட்டிருக்கிறான். மண்ணுக்கு மாசு வராமல் விவசாயத்தை மேம்படுத்தியிருக்கிறான். ஆனால் இன்று நவீன விஞ்ஞானச் சிந்தனையில் எந்திரங்கள் துணையோடு செயற்கை உரம் தூவிச் செல்கின்ற விவசாயத்தில் மண்ணும் வலுவிழந்து விதையும் தேய்ந்து விவசாயிகளின் வித்தையும் மாய்ந்து தவிக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இம்மண்ணுக்கு ஒவ்வாத செயற்கை முறையிலான (ரசாயன உரத்தினால்) விவசாயத்தில் மண்ணின் இயற்கையும் மனிதனின் இயல்பும் மாறிக் கிடக்கிறது.

ஒரு ஏக்கர் பரப்பில் அதிக அறுவடை என்பதில் ரசாயன உரங்கள் போட்டதில் மண் மலடானதைப் போலாகிவிட்டது. இடைவெளி விடாமல் பிள்ளை பெற்றால் தாயின் நிலை என்ன? அதைப் போலவே அதிக அறுவடையில் தன்மை இழந்து மண்காட்சி தருகிறது. ஒன்றுக்கொன்று நேர் எதிரிகளாக வாழ்ந்தாலும் விவசாயிக்கு உதவுகிற பாம்பு, தவளை, வெட்டுக்கிளி, மண்புழுக்கள், சிட்டுக்குருவிகள் யாவும் நேற்று வரை விவசாய பூமியில் தஞ்சமாய்க் கிடந்தன. தூவப்பட்ட செயற்கை உர நஞ்சால் அவையெல்லாம் அழிந்து குறைந்து விட்டன.

நவீன விஞ்ஞான முறைகள் தனியார் நிறுவனங்களுக்குப் பொருள் சேர்த்ததே தவிர விவசாயிகளுக்குப் பொருள் கொடுக்கவில்லை. ஒரு மண்புழு செய்கிற வேலையை எந்த விவசாய எந்திரங்களும் செய்யவில்லை. எனவே இன்றைக்கு மண்ணைப் பாதுகாக்க மண்புழுக்களை வளர்த்து விட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

மேலைநாடுகளில் இன்றைக்கு இயற்கை முறை விஞ்ஞானத்திற்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக டென்மார்க், சுவீடன், நோர்வே போன்ற நாடுகள் புதிய பாடத்திட்டத்தை விவசாயத் துறையில் வரவேற்கின்றன. இது பழையது அல்ல. இயற்கையோடு ஒத்துப் போகிற முறை. விளக்கமாகச் சொன்னால் இரண்டு அடி பின்னாலும் ஓரடி முன்னாலும் (TWO STEPS BACK ONE STEPS FORWARD) என்ற முறையில் மண்மாசுபடாது இயற்கையோடு ஒத்த பழையதும் புதியதும் கலந்து உருவான விவசாய முறை. இதனைப் பின்பற்ற வேண்டும் என்ற இயக்கம் தமிழகத்திலும் இருக்கிறது.

தமிழரிடம் ஏற்கனவே இருந்த மண்சார்ந்த விவசாயத்தை சற்று மெருகு படுத்தினாலே போதும். சாதாரணப் பழமொழிகளிலேயே தமிழர்கள் இயற்கை விவசாயத்தை சொல்லியிருக்கிறார்கள். அடி காட்டுல, நடு மாட்டுல, நுனி வீட்டுல ② என்று ஒரு பழமொழி. அதனை ஆய்வு செய்தால் மிகப் பெரிய விவசாய அறிவியல் தெரியும்.

1) அடி காட்டுல – நெற்கதிர் அறுக்கப்பட்ட அடிவயற்காட்டில் நிலத்திற்கு உரமாக இருக்கும்.

2) நடுமாட்டுல – நெற்கதிர் நீக்கப்பட்ட வைக்கோல் விவசாயத்திற்கு உதவுகிற மாட்டுக்கு உணவாகிறது.

3) நுனி வீட்டுல – நெற்கதிர் வீட்டில் நெல்லாகி பிறகு அரிசியாகி மனிதனுக்கு உணவாகிறது.

இம்மூன்றும் ஒரு பழமொழியில் உள்ள அறிவியல். இது இயற்கை விவசாயம் சார்ந்தது. மாடு இல்லாத எந்திரத்தைப் பயன்படுத்துகிற விவசாயத்திற்கும் இயற்கை விவசாயத்திற்கும் வேறுபாடு அதனால் ஏற்படுகிற மாறுபாடு நிறைய உண்டு. எனவே ஒப்பீடு செய்வோம்.

மாடு :

1) இதற்கு வைக்கோலும் உணவு. இது விவசாயத்தில் கிடைக்கும்.
2) இதன் கழிவு சாணம் உரமாகிறது. எரிவாயு ஆகிறது.
3) இதனால் பூமியை உழவு செய்யலாம்.
4) அதன் மூத்திரம் பூச்சிக்கொல்லி மருந்தாகிறது.
5) அதன் பால் மனிதர்களால் குடிக்கப்படுகின்றன.
6) இதனால் சுற்றுப்புறச்சூழல் கெடாது.
7) இதனை இயற்கையாகவே உற்பத்தி செய்ய முடியும்.
8) இது இறந்தால் விவசாய பூமியிலேயே புதைக்கலாம். அது உரமாகும்.

உழவு எந்திரம் :

1) இது இயங்க எண்ணெய் ஊற்ற வேண்டும்.
2) இதைப் பராமரிக்க செலவு செய்ய வேண்டும்.
3) இதன் கழிவு மண்ணுக்கு ஆகாது.
4) இது விடுகிற புகை சுற்றுப்புறச் சூழலுக்கு கேடு விளைவிக்கும்.
5) இதன் பாகங்கள் பழுதடைந்தால் விவசாய பூமியில் புதைக்க முடியாது.

இவ்வொப்பீடு கணக்கு மூலம் மாடுகளை விவசாயத் தோழர்களாகப் பயன்படுத்தியிருப்பது புரிய வரும். எனவேதான் மாட்டுப் பொங்கலையும் கண்டான் பழந்தமிழன். அவன் மண்ணையும், விண்ணையும், நதிகளையும், ஆடு மாடுகளையும் நேசித்து இயற்கை விவசாயத்தை அறிவியல் ரீதியில் பரப்பி வந்தான். சாதாரணப் பழமொழிகளில் கூட விவசாய அறிவியலை வைத்திருந்தான்.

'பூமி திருத்தி உண், விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமோ?' ஆடிப்பட்டம் தேடி விதை. ஆடி விதைத் தேடிப்போடு, அதிர அடித்தால் உதிர விளையும், நெல்லுக்குப்

பாய்கிற நீர் புல்லுக்குப் பாயும், கோரைக் குடியைக் கெடுக்கும். குப்பையின்றி பயிர் விளையாது, அருங்காய் பிஞ்சிலே தெரியும், மாடு மேய்க்காமல் கெட்டது; பயிர் பார்க்காமல் கெட்டது, வேலி பயிரைக் காக்கும், உழுகிற நாளில் ஊருக்குப் போனால் அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும், அலை மோதும் போது தலை முழுகு, அடிக்கும் காற்றிலே தூற்ற வேண்டும். ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப் பூச்சி' ஆகிய பழமொழிகளில் ஒரு விவசாயப் பாடமே இருக்கிறது. விவசாயம் அவனைப் பொறுத்தவரையில் ஒரு வாழ்க்கை. ஆகவே அது சம்மந்தமான சகலமும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. பூச்சிக் கொல்லியாக வேப்பமரம், நொச்சிமரம் ஆகியவற்றின் தழைகளைப் பயன்படுத்தியிருக்கிறான். மாட்டின் மூத்திரம், சாணம் என்பன அவனுக்கு விவசாய மருந்தாகியிருக்கின்றன. (வேப்ப மரம் பழந்தமிழரோடு தொடர்பானது. அறிவியலை மறைத்துக் கொண்டிருக்கிற ஆன்மீகத்தோடு தொடர்புடையது.) வேம்பின் பலன், நலன் தமிழர் அறிந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகின்றது. ஆனால் 250 ஆண்டுகளுக்கு முன்பு உருவான இன்றைய அமெரிக்கா வேப்பமரத்திற்கு காப்புரிமை கேட்டது நினைவிருக்கலாம். பழந்தமிழர் அறிவியலில் புரிதலும் பரப்பலும் இல்லாமைதான் இதுபோன்ற நிலைகளுக்கு காரணமே ஆகும். வர்த்தகமான நவீன அறிவியல் மேலைநாட்டினருக்கே உரியது. அதே நேரத்தில் பழந்தமிழருக்கென்று மண் சார்ந்த மரபு சார்ந்த இயற்கையைத் தோழமை கொண்ட ஒரு அறிவியல் விவசாயத்திலும் இருந்திருக்கிறது என்பதே உண்மையானது.

மேற்கோள் நூல்கள் :

① பழங்காலத் தமிழர் வாணிகம், மயிலை சீனி, வேங்கடசாமி, என்.ஸி.பி.எச், சென்னை–1995.

② இயற்கை வேளாண்மை மாநாட்டு மலர், 2002, சென்னை.

5. உடை

எல்லா மனிதர்களுக்கும் மிக முக்கியமானது உணவு, உறைவிடம், உடை என மூன்று. அவற்றில், உணவு சமைத்தால் கிடைக்கும். உறைவிடம் அமைத்தால் கிடைக்கும். உடை நெய்தால் அல்லது தைத்தால் கிடைக்கும். உணவு பசியைப் போக்கும். உறைவிடம் வாழ்வைக் காக்கும். உடை மானத்தைக் காக்கும். ஆடை இல்லா மனிதன் அரைமனிதன் என்பது பழமொழி. நாகரிகமான உடை உடுத்தியவனின் முகவரியைப் பேசும். நாகரிகமான உடை ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கு அவசரமாக அறிமுகம் செய்யும் கண்ணாடி. எளிமையான உடை, வலிமையைக் காட்டும்.

உடையில்லாமல் நாகரிக மனிதர்கள் வெளியே வரமாட்டார்கள். உள்ளேயே உடையில்லா நிர்வாணக் கோலத்தில் இருக்கும் சில சாமியார்கள் உடலையும் மதிப்பதில்லை. உடையையும் மதிப்பதில்லை. அது அவர்களின் ஆன்மீகம். சிலர் ஆடையில்லாமல் வீதியில் ஓடுவார்கள். அவர்கள் மனநலம் இல்லாதவர்கள். ஆனால் மனநலம் சரியாக உள்ள சிலர் மேலை நாடுகளில் கடற்கரைகளில் முகாம்களை நிறுவி ஆணும் பெண்ணும் ஆடையில்லாமல் திரிகிறார்கள். அது அவர்களின் ஜனநாயகமாம். அங்கே ஆடையில்லாமல் சேரும் மனிதர்களே உறவினர்கள். ஆடையோடு போகிறவர்களுக்கு அனுமதி இல்லை. ஆடையில்லாமல் இருப்பது அவர்கள் சுதந்திரம் என்றாலும் இந்த ஆடை அணிகிற நாகரிகமே உலகில் பெரும்பான்மை மக்களின் முடிவான முடிவாகும்.

உலகம் தொடங்கியபோது மனிதன் விலங்குகள் போல் ஆடையில்லாமல் வாழ்ந்திருக்கிறான். பிறகு காற்றை அறிந்து, நீரை கலந்து, நெருப்பைக் கடைந்து, பூமியைப் பார்த்து, வானை உணர்ந்து அறிவு பெற்றபோது வெட்கம் வந்த மனிதன் இலைகள், தழைகள் ஆகியவற்றை ஆடையாக அணிந்தான். பிறகு விலங்கு தோலை உடுத்தினான். காலப் போக்கில் அவன் அறிவு வளர வளர அவன் அணிகிற ஆடையிலும் மாற்றம் ஏற்பட்டது. இன்றைக்கு நாம் அணிகிற உடை அவ்வாறு வந்ததுதான். பிறகு உலகம் தட்ப, வெட்ப (Climate) நிலைக்கு ஏற்ப மனிதர்களின் உடை மாறியது.

குளிரும், கொட்டும் பனியும் நிறைந்த மேலை நாட்டினரின் உடை உடம்பை இறுகத் தழுவுகிற கோட்டும், சூட்டும் (Coat - Suit) கம்பளங்களும் எனவாகின. வெப்பத்தோடு சமரசமாய் வாழ்ந்த தமிழர்களின் உடை அதற்கேற்ப இறுக்கமில்லாத ஆடையாயின. உலகம் முழுவதும் இவ்வாறு காலநிலைக்கும், நாகரீகப்பண்பாட்டுக்கும் ஏற்ப உடைகள் வெவ்வேறாயின.

வெள்ளையர்கள் இந்திய மண்ணில் கால்வைப்பதற்கு முன்பு இங்கிருந்த தமிழர்களுக்கு வாழும் தட்பவெட்பத்திற்கும், பண்பாட்டுக்கும்

ஏற்ப உடைகள் இருந்தன. அந்த உடைகளுக்கு வரலாறு உண்டு. சங்க இலக்கியமான தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் உடைபற்றிய குறிப்புகள் வருகின்றன. தொல்காப்பியத்தில்

உடை பெயர் பெயர்த்துடுத்தலொடு (தொல் பொருள் – 1208)

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல் (தொ.பொ. – 1209)

ஆகிய வரிகளில் உடைகள் பற்றி பேசப்படுகின்றன.

திருக்குறளில்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (788)

என்ற வரிகளில் திருவள்ளுவர் உடுப்பைப் பற்றிப் பேசுகிறார்.

இடையில் உள்ள ஆடை விலகும்போது அல்லது நழுவும்போது அதனை உடனே சரிசெய்யும் கைபோல் நண்பனுக்குத் துன்பம் வந்தால் உதவுவதே நட்பு.

இதுவள்ளுவரின் குறள் தரும் செய்தி. ஆக தமிழரின் உடை பண்பாட்டின் வயது 3000 ஆண்டுகளுக்கும் மேலானது என்பது உறுதியானது. தொல்காப்பியர் காலத்திலேயே இடுப்பில் உடுத்துகிற ஆடையை நெய்து உடுத்தியிருக்கின்றான். இலை, தழை உடுத்தியிருந்தால் தொல்காப்பியத்தில் உடை என்று சொல்லியிருக்க மாட்டார்கள். ஆகவே தமிழரின் ஆடைக்கு வயது மிகமிகப் பழமையானது எனத் துணிந்து சொல்லலாம்.

அக்காலத்தில் தமிழர் சட்டை அணியவில்லை. அரையில் (இடையில்) ஓர் ஆடையும், தோளின் மேல் ஓர் ஆடையும் ஆக இரண்டு துணிகளை, ஆடையை மட்டும் அணிந்தார்கள். 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' (புறம் : 189, 5) என புறநானூறு சொல்கிறது. இதனையே 'நல்வழி'யில் ஔவையார் 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்றார். ஆக தமிழரின் பண்பாடு சங்ககாலத்தில் இருந்தே வருகிறது.

புறநானூறு 'பருத்தி' பற்றி பல பாடல்களில் பேசுகிறது.

பருத்தி வேலிச் சீறூர் மன்னன் (புறம் : 299 – 1)

பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும் (புறம் : 324 – 7)

கோடைப் பருத்தி வீடுநிறையப் பெய்த (புறம் : 393 – 12)

ஆகிய பாடல்களில் பருத்தி செடிபற்றியும், அதன்மூலம் பஞ்செடுத்து நூல் நூற்ற கதையும் வருகிறது.

அகநாநூறு

'வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்' (அகம் : 133–6)

என்ற பாடலில் வில் அடித்துப் பஞ்சிலிருந்து கொட்டை நீக்கப்பட்டது. கொட்டை நீக்கப்பட்ட பஞ்சு வெண்மேகம் போலக் காணப்படும் என வர்ணனை வருகிறது.



அக்காலத்தில் கையினாலே கொட்டை நீக்கிய பஞ்சை நூலாக நூற்கிறார்கள். நூலை நூற்றவர் மகளிர்; ஆண்மகன் ஆதரவு இல்லாத பெண்டிர் பஞ்சை நூலாக நூற்றார்கள். அவர்கள் இரவில் சிறுவிளக்கு வெளிச்சத்தில்கூட அந்த வேலையைச் செய்தார்கள். அதனை நற்றிணை என்ற சங்க இலக்கியத்தில் 'ஆளில் பெண்டிர் தாளின் செய்த நுணங்கு நுண்பனுவல் போலக் கணங்கொள' (நற்றிணை : 353, 1, 2) என்றும் புறநானூறில் (326, 5) 'பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கத்து' என்றும் புலவர்கள் எழுதியுள்ளார்கள். அதன் அர்த்தம் தம்மைப் பேணுவதற்கு உரிய ஆடவர்கள் இல்லாப் பெண்களுக்கான தொழிலாக பருத்தி பஞ்சடித்தல் இருப்பதாகவும் அவர்கள் இரவில் பருத்தி நூற்பதாகவும் என வருகிறது. அந்தப் பருத்தி நூலாகிறது. அந்த நூலில் மெல்லிய துணிகளும், முரட்டுத்துணிகளும் நெய்யப்பட்டன. பருத்தி நெசவு முதன்முதலில் இந்திய நிலப்பரப்பில் செய்யப்பட்டதென்றும், அங்கிருந்து மேனாடுகளுக்கும் பரவின என்றும் வயவர் சாண் மார்சல் கூறுகிறார் என 'ஒப்பியன்மொழி நூலில்' தேவநேயப்பாவாணர் கூறுகிறார்.



பழந்தமிழர் (ஆண், பெண்) உடைகள்

குளத்தில் படரும் பாசி போன்ற (ஊருண் கேணிப்பகட்டிலை பாசிவேர்) நூலினால் முரட்டுத்துணி நெய்யப்பட்டது. பால் ஆவி போன்ற மெல்லிய துணிகளும், பாம்புத் தோல் போன்ற அழகான துணிகளும்,

காகிதம் போன்ற மெல்லிய துணிகளும் என பலவகையாக நெய்யப்பட்டன. அவற்றை சங்ககால இலக்கிய நூல்கள் சான்றாகப் பகர்கின்றன.

1. இழை மருங்கறியா நுழை நூற்கலிங்கம்

(மலைபடுகடாம் - 565)

மிக நுண்ணிய நூலால் இயன்ற ஆடைகளை தமது வறிய அரையில் உடுத்தி, அது மெல்லிய நூலால் நெய்த உடை.

2. பாம்பு உரித்தன்ன வான்பூங் கலிங்கமொடு

(புறம் : 397- 15)

பாம்பு உரித்த சட்டை போன்ற பூ வேலைப்பாடுகள் செய்த உயர்ந்த ஆடைகளை, அது பாம்பு தோல் போன்ற அழகான துணிகள்.

3. போதுவிரி பகன்றப் புதுமலர் அன்ன அகன்றுமடி கலிங்கம்

(புறம் : 393, 17, 18)

விரிந்து மலர்ந்த பகன்றைப் பூப்போன்ற அகலமான மடிக்கப்பட்ட தூய வெள்ளை ஆடையை, அது பால் ஆவிபோன்ற மெல்லிய துணி.

4. நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து

அரவுரி யன்ன அறுவை நல்கி. (பொருநர் ஆற்றுப்படை : 83)

இழை சென்ற வழி தெரிதல் இல்லாத நுண்மையை உடையனவும் பூத்தொழில் முற்றுப்பெற்றனவும் பாம்பின் தோலை ஒத்தனவும் ஆகிய சிறந்த ஆடைகள். அது உயர்ந்த ரகத்துணி.

5. காம்பு சொலித் தன்ன அறுவை (சிறுபாணாற்றுப்படை : 236)

மூங்கிலின் உட்பட்டையை உரித்தலொத்த தூய ஆடை; அது முரட்டுத்துணி.

இவ்வாறு பலதரப்பட்ட துணிகள் சங்க காலத்தில் தமிழர்களால் நெய்யப்பட்டன... ①

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டுநுண்வினைக் காருக ரிருக்கையும்
பாலாவி யன்ன ஆடை
கிழியினுங் கிடையினும் தொழில்பல பெருக்கியோர்

என்ற சங்க இலக்கியப் பாடலில் பழந்தமிழர் நெசவுத் தொழிலை அறியலாம். நெசவுத் தொழிலில் அக்காலத்தில் பெண்களே ஈடுபட்டிருந்தனர். பட்டுநூலாலும், எலி மயிராலும், பருத்தி நூலாலும் நெசவுத் தொழில் செய்யும் நுட்பத்தை அறிந்த நெசவாளர்களை 'நுண் வினைக்காருகர்' எனச் சிலப்பதிகாரம் பேசுகிறது.

தமிழ் அறிஞர்களின் ஆய்வுப்படி சங்க காலத்தில் 210க்கும் மேலான ஆடைகள் தமிழர்களால் அணியப்பட்டன. சிலப்பதிகாரம் 36 வகை

38025

ஆடைகளைச் சொல்கிறது. சிலப்பதிகாரத்தில் பாண்டியனுடைய பொற்கொல்லன் சட்டை அணிந்திருந்தான். அவனைக் கோவலன் (மெய்ப்பைபுக்கு விலங்கு நடைச் செலவிற்கைக் கோற் கொல்லனைக் கண்டனாகி-சிலம்பு;16-107-108) மதுரை நகரத் தெருவில் சந்தித்தான். மெய்ப்பை என்பது சட்டையே (அக்காலச் சட்டை) ஆனால் வசதி படைத்தோர் மட்டுமே மெய்ப்பை அணிந்தனர்.

அக்காலத்தில் தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் துணி ஏற்றுமதியாகி இருக்கிறது. பாடலிபுரம், காசி போன்ற கங்கைக் கரைப் பிரதேசங்களுக்குத் தமிழ்நாட்டுத் துணிகள் அனுப்பப்பட்டன. கவுடல்யரின் ② அர்த்தசாஸ்திரம் 'மாதூரம்' என்னும் துணியைக் கூறுகிறது. பாண்டி நாட்டு மதுரையிலிருந்து சென்றபடியால் அதற்கு 'மாதூரம்' என்று பெயர் கூறப்பட்டது. அர்த்தசாஸ்திரம் சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் கி.மு. 3-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பதால் அக்காலத்திலேயே தமிழ்நாட்டு ஆடைகள் வடநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. யவனர் வாழ்ந்த நாடுகளுக்கு மெல்லிய ஆடைகளும் ஏற்றுமதியாகியுள்ளன. ஆக பழந்தமிழர் தமக்கென தனித்துவமான உடைப்பண்பாட்டோடு கடல் தாண்டி ரோம் வரை போயினர் என்பது வரலாறு. அவ்வரலாறு இன்றையத் தமிழருக்கு வியப்பாய் இருக்கலாம்.

பண்பாட்டு உடை :

ஜெர்மனியில் இருந்து ஆரல்பக்பீ என்ற அறிஞரும் அவர் மனைவியும் தமிழகம் வந்தார்கள். காஞ்சிபுரத்தில் சிற்பங்களைப் பார்த்துவிட்டு ஒரு குளத்தின் கரையில் அமர்ந்தார்கள். ③

தமிழ்ப்பண்பாட்டு திருமண உடை

அப்போது தமிழ் பெண் ஒருத்தி குடம் தாங்கி நடந்து போனாள். படிக்கட்டில் குடத்தை வைத்துவிட்டு குளத்தில் இறங்கினாள். அவள் உடுத்தியிருந்த சேலையைப் பார்த்த அந்த ஜெர்மனிய அறிஞர், இந்தப் பெண் அணிந்துள்ள தமிழ்நாட்டுக் கவுன் எத்தனை அழகாய் இருக்கிறது என்று தன் மனைவியிடம் சொன்னார்.

மனைவி சொன்னாள் 'இந்த தமிழ்நாட்டுத் தையல்காரன் எத்தனை கைதேர்ந்த கலைஞன் பாருங்கள். மடிப்பு மடிப்பாக எத்தனை தட்டுகள் வைத்து இந்தக் கவுனை தைத்திருக்கிறான்..!'

அவர்கள் அப்படி பேசி முடித்த நேரத்தில் அந்தப் பெண்மணி குளத்து தண்ணீரில் இறங்கி நாகரிகமாக உட்கார்ந்து சேலையின் முந்தானையை அப்படியே தண்ணீரின்மேற்பரப்பில் ஓடவிட்டாள். அதைப் பார்த்த ஜெர்மானியத் தம்பதியர் திகைத்துப் போய்விட்டனர். பிறகு அது 'கவுன்' இல்லை; சேலை. அதனையே கலைநுணுக்கத்தோடு உடுத்தியிருந்தாள் என்பதை அறிந்த அந்த ஜெர்மனிய அறிஞர் ஆரல்பக்பீ சொன்ன வார்த்தைகள் இதுதான்; This is not a dress. This is song (இது ஓர் உடையே இல்லை; இது ஒரு கவிதை)

அவர் தமிழ்நாட்டை விட்டுப் போவதற்கு முன்பு அந்த அறிஞர் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்; **'மேல்நாட்டவராகிய எங்களைப் பின்பற்றுவதாக நினைத்து ஏதேதோ புதிய பழக்க வழக்கங்களை நீங்கள் பின்பற்றத் தொடங்கியிருக்கிறீர்கள். அதனால் உங்கள் அடையாளங்களை கலைச்செல்வங்களை இழப்பீர்கள். உங்களுடைய கலைகளில் எல்லாம் ஒப்பற்ற கலை உங்கள் பெண்கள் புடவை அணிந்து கொள்கிற அரிய கலையாதும். எதனை இழந்தாலும் இந்த உடை செல்வத்தை இழந்துவிடாதீர்கள். உங்கள் சேலை உடை ஒரு கவிதை'.**

சேலை பெண்களின் உடலுக்கு மகுடம். பெண்களுக்கு அழகும், கண்ணியமும் கொடுக்கிற சேலையைப் போன்ற ஓர் உடை இந்த உலகில் எங்குமே இல்லை. மேலைநாட்டில் அவயங்கள் தெரிய வேண்டுமென்றே உடை உடுத்துவார்கள். தொடை தெரியவும், மார்ப்புச்சதை பிதுங்கவும், தொப்புள் தெரியவும் உடுத்துவதும் உடையா? அது பார்ப்பவரின் கண்களில் சலனத்தைத் தூண்டுமே!

உடை என்பது பண்பை மானத்தைப் போற்ற வேண்டும். உடலில் உடுத்துவதே உடையாகியது என்பது சொற்பிறப்பியல் (உடல்–உடு–உடை) கருத்து. மேலைநாட்டில் பெண்கள் உடை உடலில் அரைகுறையாக பகுதி நிர்வாணமாய் (Part Naked) இருப்பதுவே மோகத்தைக் கொடுக்கும். முறையான சேலை உடை பக்தியைக் கொடுக்கும். நாகரிகம் என்ற பெயரில் பகுதி நிர்வாணத்தை நுழைத்து விட்டார்கள். வயிறு, இடுப்பு, தொப்புள் தெரிவதுபோல் உடுத்துவது முறையான சேலை உடுப்பல்ல.

உடை எப்போதுமே உடலைக் காட்டுவதற்கு அல்ல; அது உடலை மறைத்துப் பண்பைக் காட்டவே இருக்க வேண்டும். வெவ்வேறு நாட்டு உடைகளை அணிவதில்கூட நமது பண்பாட்டுக்கு ஏற்ப நாகரிகத்தைக் கடைபிடிக்கலாம்.

ஒரு இனத்தின் இலக்கியம், சிற்பம், ஓவியம், இசை என்பன அந்த இனத்தின் கலைமேதைகளின் சுயமான அழகான படைப்பாற்றல் கலந்த கலை ஆற்றலை வெளிப்படுத்துவதே ஆகும். ஆனால் அந்த இனத்து மக்களின் நடை, உடை பாவனைகள் அவர்களின் உணவு, உடை பழக்க

வழக்கங்கள் ஆகியன அவ்வினத்து மக்களின் தனித்துவமான அடையாளத்தைப் பண்பாட்டைக் காட்டி நிற்கின்றன. அவ்வகையில் தமிழர்களுக்கான தனித்துவ உடை ஒரு நீண்ட நெடுங்கலை மரபை எடுத்துச் சொல்கிறது. இதுவே ஒரு தனித்துவ அடையாளத்தைத் தமிழர்களுக்குக் கொடுத்திருக்கிறது. தமிழரின் உடை, ஆடை ஆகியவற்றின் வயது 2000 ஆண்டுகளுக்கு மேலானது என்பதை சங்க கால இலக்கியங்கள் சொல்கின்றன.

இன்றைக்கு ஆங்கிலப் பெயரோடு பயன்படுத்தப்படுகின்ற உள் மற்றும் வெளி ஆடைகளுக்கானத் தமிழ்ப் பெயர்களும் தனித்துவமும் இருக்கின்றன. அவற்றை சங்க காலத் தமிழர்கள் பயன்படுத்தி இருக்கின்றனர்.

பெண்களின் உடை : பிரா – கச்சு, மிடி – வட்டுடை, ஜாக்கெட் –வடகம், (வடகத்தோடு உடுத்த தூசும் – கம்பராமாயணம்) பெட்டிகோட் – பாவாடை, சல்வார்கமீஸ் – தழை, மினி – சிதர், சுவிமிங் டிரஸ் – புட்டகம், (நீந்துடை – புட்டகம் பொருந்துவ புனைவாதுரும் – பரிபாடல்) கவுன் – கொய்யகம், ஜட்டி – அரணம், நைட்டி – இரவணி, டூபீஸ் – ஈரணி, வெட்டிங் டிரஸ் – கூறை.

ஆண்களின் உடை : பனியன் – குப்பாயம் (துதி மயிர்த்துகில் குப்பாயம் – சீவக சிந்தாமணி) பேண்ட் – கச்சம், டை – கிழி, பெல்ட் – வார், சட்டை – மெய்ப்பை.

மேற்கண்ட தமிழ்ப் பெயர்களைக் கிண்டலடிப்பார்கள் அறிவினர்கள் (அடிப்படையில் தமிழிய எதிரிகள்); ஒரு மொழியை, ஒரு இனத்தைப் புரியாதவர்கள். இப்பெயர்கள் எல்லாம் ஆங்கிலச் சொல்லுக்கான மொழிபெயர்ப்புகள் அல்ல. சங்க கால இலக்கியங்களில் கையாளப்பட்ட சொற்கள். இவற்றைப் பயன்படுத்துவதும் விடுவதும் அவரவர் விருப்பம். ஆனால் தாய்மொழி அல்லது சோறு போட்டுக் கொண்டிருக்கிற ஒரு மொழி மீது உண்மையான பற்று இருக்குமானால் இவற்றை ஏற்பர்; போற்றுவர்.

தமிழர்களுக்கு உடைக்கான வரலாறு இருந்ததால் இதுவெல்லாம் சாத்தியமாக இருக்கிறது. சங்க காலத்தில் துணியைச் சட்டையாகத் தைத்து அணியும் வழக்கமில்லை. முனிவர்கள் மரவுரியாகிய இடுப்பாடையை அணிந்திருந்தனர். அரச ஊழியர்களில் முக்கியமானவர் மட்டுமே 'மெய்ப்பை' அணிந்திருந்தனர். சட்டைக்கு அக்காலப் பெயர் மெய்ப்பையே! சட்டைக்கு இன்னொரு பெயர் 'கஞ்சுகம்'. பெண்கள் கச்சு அணிந்திருந்தனர்.

முருகனை சிவந்த ஆடையன் என திருமுருகாற்றுப்படை பேசுகிறது. ஆடை 'ஓலியல்' என்றும் பெயர் பெற்றது. செந்நிறக்காவி ஆடையும் வழக்கில் இருந்தது. ஆண்கள் சங்க காலத்தில் மெய்ப்பை, அஞ்சுகம், படி, படம், துண்டு, அடை என்பன அணிந்திருக்கின்றனர். இவற்றை பெரும்பாணாற்றுப்படை 'படம்புக்கு–(69)', 'செறிவு அடை–(73)' என

விவரிக்கின்றது. பெண்கள் பூப்புக்காலத்தில் சிவந்த ஆடையை உடுத்தியிருக்கின்றனர். பகற்பொழுதில் பட்டாடை அணிந்த மகளிர் இரவு காலத்தில் பருத்தியாடை அணிந்தனர். சங்க நூலான பட்டினப்பாலை இவற்றைப் பகர்கின்றது. சங்க காலத்தில் பெண்கள் ஆடை அணிந்து இருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் நிறை இருக்கின்றன. 'உடுத்த கூறையும் ஒள் எரி உறாது (மணிமேகலை 16–30)' என்கிறார் சீத்தலைச் சாத்தனார். உடுத்த கூறை என்பது மேல் உடம்பை மறைத்த துணி. 'இரவுக்கோர் கோலம் கொடியிடையார் தாங்கிக் கொள்ள' என்ற இளங்கோ அடிகளின் (சிலம்பு 9–4) கூற்றிலும் பண்டைய தமிழ்ப் பெண்கள் இரவுக்கு என தனியான ஆடைகளையே அணிந்தனர் என்பது தெளிவாகிறது. சங்க இலக்கியங்களில் பாகை, கச்சு, வம்பு, மடி, புடவை எனப்பலவும் பெண்கள் அணிந்தவைகளாக கூறப்பட்டுள்ளன. இவற்றை துன்னக்காரர் (தையல்காரர்) தைத்துக் கொடுத்துள்ளனர். மேலும் அரசன் மெய்க்காப்பாளர், தூதர் முதலியோர் உடம்பில் சட்டையிடுதலும் தலையில் பாகை (தலைப்பாகை)யிடுதலும் மரபு ஆக இருந்திருக்கிறது. பிறந்த நாள் விழாவில் அவ்விழாவுக்குரியவர் (வெள்ளணிநாளிலே) வெள்ளாடை உடுத்தினர்.

தமிழரின் நில வெப்பத்திற்கு பருத்தியே சிறந்தது. அதிலும் பருத்தியில் நெய்த வெள்ளாடை வெப்பத்திற்கு மிகச் சிறந்தது. மகாத்மா காந்தி கதர் ஆடை அணிந்தது மட்டுமல்ல ஏனையவர்களும் அணியவேண்டும் என்று சொன்னது அரசியலாக இருந்தாலும் அதில் சூழலும் மக்களும் முக்கியமானதாக இருந்ததே காரணமாகும். கடல்வழித் தொடர்பினால் தமிழகத்திற்குள் பட்டு நுழைந்தது. பட்டின் பிறப்பிடம் சீனா. கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியில் இருந்து கப்பல்களில் ஏற்றி வரப்பட்ட பட்டு வந்துவிடும் என்று சிலப்பதிகாரத்தில் (சிலம்பு; 14; 106–107) ஒரு செய்தி வருகிறது.

அரசர், அவரைச் சார்ந்தோர், வணிகர் ஆகியோர் பட்டுத் துணிகளை விரும்பிய போதும் மக்கள் பருத்தித் துணிகளையே விரும்பினர். அப்பருத்தித் துணிகளுக்கு சிவப்பு, நீலம், மஞ்சள் முதலான சாயம் ஊட்டினார்கள். ஆனால் வெள்ளை உடைகளே உயர்வாக மதிக்கப்பட்டன.

சங்க காலத்தில் பருத்தி பயிர் செய்வதும், நூல் நூற்பதும், துணி செய்வதும், ஆடை விற்பதும் தொழிலாக நடந்திருக்கிறது. துணிகளை விற்ற வணிகருக்கு 'அறுவை வணிகர்' எனப் பெயர் கூறப்பட்டது. அக்காலத்தில் மதுரையில் இருந்த இளவேட்டனார் என்னும் புலவர் அறுவை வணிகன் இளவேட்டனார் எனப் பெயர் பெற்றார். அவரின் பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இருக்கின்றன. இன்றைக்கு 'அறுவை' என்பதற்கு வேறு அர்த்தம் கொள்ளப் பட்டாலும் சங்க காலத்தில் நீண்ட அளவினதாக நெய்யப்படும் ஆடை பிறகு

தனித்தனியாக அறுக்கப்படும். அவ்வாறு அறுக்கப்பட்ட ஆடையே 'அறுவை' எனக் கொள்ளப்பட்டது. துண்டிக்கப்பட்ட சிறுபகுதி 'துண்டு' எனப்பட்டது. துணிக்கப்பட்ட பகுதி 'துணி' எனப் பெயர் பெற்றது.

கால ஓட்டத்தில் நெசவுத்துறையும் வளர்ச்சி கண்டது. ஆங்கிலேயர் வருகையோடு உடை பண்பாட்டில் பாரிய மாற்றங்கள் உருவாகின. தமிழர்களும் வெள்ளைக்காரர்களைப் போல் ஆடை உடுத்த தலைப்பட்டனர். வெள்ளையர் உடையான கோட்டு சூட்டு, தொப்பி, டை என்பன மேல்நாட்டுக் குளிர் தாக்காமல் இருக்க உதவின. ஆனால் வெயில் எரிக்கும் தமிழ்மண்ணில் ஆங்கிலேயர் உடையை உடுத்துவதில் என்ன நாகரிகம் இருக்கிறதோ? ஆசைக்குப் பல நாட்டு உடைகளை உடுத்திப்பார்க்கலாம். ஆனால் ஆட்சிக்கும், தொலைக்காட்சிக்கும் மேலைநாட்டினர் உடை தேவையா? மகாத்மா காந்தி, காமராஜர், ராஜாஜி, பெரியார், பாரதியார், அண்ணா, ஜீவா போன்ற தலைவர்கள் பாரம்பரிய ஆடையில்தானே சாதனை செய்தார்கள்?

தமிழர்களுக்கென்று பாரம்பரிய உடை இருக்கிறது. அவை இந்நாட்டுச் சூழலுக்கு ஏற்றது. சூழலுக்கு ஏற்றதுதான் உடை. குளிருக்கு வெள்ளையர் உடை. பாலைவன மணலுக்கு அரேபியர் உடை, பனிமலைப் பகுதியில் எக்ஸிமோ உடை. எனவே தமிழ் மண்ணுக்கு ஏற்ற உடை தமிழருக்குப் பெருமை தரும். இன்றைக்கும் தமிழ் ஆண்களைவிட தமிழ்ப்பெண்களே தமிழரின் பாரம்பரிய ஆடையை அதிகமாக அணிகிறார்கள். தமிழ் ஆண்களில் பெரும்பான்மையானவர்கள் வேட்டியை மறந்துவிட்டார்கள். கேரளாவில் கோயில்களில் வேட்டி உடுத்தாத ஆண்களுக்கு அனுமதி இல்லை. அதில் தவறு இல்லை. இனத்தின் பாரம்பரியத்தைக் காக்க நடைமுறை தேவை. எனவே தொழிலுக்கான உடைகளைத் தவிர வீட்டில் விழாக்களில் குடும்ப நிகழ்வுகளில் வேட்டி, சேலை உடைகளோடு முன்னிற்பது தமிழரின் அடையாளத்தைக் காட்டும்.

அதே நேரத்தில் வேட்டியை 'வேஷ்டி' என்றும் சேலையை 'சாரி' என்றும் பேசுவதும், எழுதுவதும் மொழியே இல்லாதவர்களின் வேலையாகும்.

ஈராயிரம் (2000) ஆண்டுகளுக்குமேல் நெய்து துணி செய்து உடை உடுத்தத் தெரிந்த ஒரு பண்பாட்டுக்குச் சொந்தக்காரன் தமிழன் என்ற செய்தியின் வியப்பை உணர்ந்து பார்க்காமல், 200 ஆண்டு கால எல்லைக்குள் கண்ட ஆங்கிலேயனைக் கொண்டு உடையை மாற்றிக்கொள்வது தன்னம்பிக்கை இல்லாதவன் செயல். தமிழர்களின் தன்னம்பிக்கை அடையாளம் என்பன பாரம்பரிய உடையிலே இருக்கின்றன.

சாயக்கலை :

இயற்கையின் இன்னொரு நுட்பம் நந்தவனங்களில், காடு மலைகளில், காய் கனிகளில் வண்ணங்களாய் படிந்து கிடக்கின்றன. அந்த வண்ணங்களில்தான் எத்தனை வகைகள்? அந்த வண்ணங்களைப் பார்க்கிறபோது கண்கள் பேரின்பம் அடையும்.

தினம் தினம் சூரியன் என்ற ஓவியன் உதயவானிலும் மேற்றிசையிலும் கண்ணைக்கவரும் வண்ண வண்ண ஓவியங்களைத் தீட்டுகின்றான். சூரியன் கிழக்கில் உதிக்கும்போது ஒரு அழகு. மேற்கில் மறையும்போது இன்னொரு அழகு. இவ்வழகு வண்ணங்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன. பூங்காவில் பூக்கிற பூக்களில்தான் எத்தனை எத்தனை வகைகள்? அத்தனை வகைகளிலும் எத்தனையோ நிறங்கள். எல்லா நிறங்களும் பார்க்கிற கண்களைப் பரவசப்படுத்தும்.

இயற்கையின் வண்ணங்கள் விண்ணில், மண்ணில், கடலில், கரையில், மலையில், மடுவில், மணலில், கானகத்தில், மொட்டில், பூவில், காயில், கனியில் மாயவித்தைகளாய் விதவிதமாய்ப் படிந்து இயற்கைக்குப் புகழாரம் சூட்டுகின்றன. இந்த மனிதர்களையே மயக்குகின்றன. அவ்வாறு மயங்கிய மனிதர்கள்தான் இந்த நிறங்களைப் பிரதியெடுக்க முனைந்தனர். அதன் தொடர்ச்சியாக நாள்தோறும் காலடியில் கைக்கு எட்டியதூரத்தில் கிடக்கின்ற வண்ணங்களைப்பார்த்து ரசித்த இந்த மனிதன் அந்த வண்ணங்களை கையகப்படுத்த முனைந்தான். அதன் முடிவு? சாயும்கலையாக சாயக்கலையைக் கண்டான். விரும்பிய நிறமூட்டும் வேலையைத் தொடங்கினான்.

பருத்திச் செடியில் பஞ்சை எடுத்து நூல் ஆக்கிய தமிழனுக்கு அந்த நூலுக்கு வண்ணம் தீட்டும் சாயம் முயற்சியின் திருவினையால் கைக்கு வந்தது. அந்த சாயத்திற்காக தொடக்கத்தில் மலர்களைப் பிழிந்து செடி, கொடி, தழை, இலைகளை அரைத்து தண்ணீரில் அந்த வண்ணங்களை ஏற்றித் துணிகளிலே பதித்து பார்த்தார்கள். பிறகு அவற்றைக்காயவைத்து பிறகு தண்ணீரிலே முக்கிப் பார்த்தார்கள். ஏற்றிய சாயம் ஒடியது. 'சாயம் வெளுத்துப் போச்சே' என்று சோர்ந்து விடவில்லை. உத்திகளை மாற்றினார்கள். முயற்சியைத் தொடர்ந்தார்கள். அவ்விடாமுயற்சியினால் ஒடிய நிறம் நின்றது.

பருத்திச்செடி நூலுக்கு உதவியதுபோல் இந்த சாயத்திற்கு ஒருசெடியே தமிழனுக்கு ஆதியில் கைகொடுத்தது. மிகப்பழங்காலத்தில் தமிழகத்தில் சாயக்கலவைக்குப் பயன்பட்டு வந்த அந்த செடி ④'அவுரி' யாகும்.

அவுரிச் செடியில் இருந்து எடுக்கப்பட்ட சாயம் பிற்பாடு ஐரோப்பியர்களால் மிகவும் விரும்பப்பட்டது. கிழக்கிந்திய கம்பனிமூலம் அவுரிச்சாயம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகியது. இந்த அவுரிச்சாயத்தை இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஆராய்ந்து பல புதுமைகளைப் புரிந்தார்கள். ஆனாலும் அவற்றுக்கு அடிப்படை 'அவுரி' என்பதும் அது தமிழகம் உட்பட்ட இந்தியாவில் இருந்து வந்தது என்பதாலும் அவற்றுக்கு 'இன்டிகோ' (Indigo) எனப் பெயரிட்டனர்.

தமிழகத்தில் அதிகமாக பயிராகி வந்த அந்த அவுரிச்செடி சுண்ணாம்பு சத்துள்ள மண்ணில் நன்கு வளர்ந்தது. வேனில் காலத்தில் விதைத்து ஆவணி, புரட்டாசி மாதங்களில் அறுவடை செய்தார்கள். இந்தச் செடிகளில் எப்போது பூ தோன்றுகிறதோ அதுதான் அறுவடைக்காலம். அறுவடை செய்ததும் பெரிய பெரிய தொட்டிகளில் இரவு முழுவதும் ஊற வைப்பார்கள். இப்படி ஊறும்போது அந்தத் தண்ணீர் மஞ்சள் நிறமாக மாறும் உடனே வடிகட்டி அதை வேறு தொட்டிக்கு மாற்றுவார்கள். அபபோது அது காற்றிலுள்ள பிராணவாயுவுடன் கலந்து உருவான ரசாயனச் சேர்க்கையினால் நீலச்சாயமாக மாறுகிறது என்பதை தமிழர்கள் விஞ்ஞானமுறையில் கண்டு பிடித்தார்கள். அதனை ஆங்கில மொழியிலே சொல்வதனால் இந்த ரசாயனப் பொருளுக்கு $C_{16}H_{10}N_2O_2$ என்று தொழில்நுட்ப பெயர் சொல்லலாம். இது தண்ணீரில் கலங்காத ரசாயன அமைப்புடன் தண்ணீரில் அடிமட்டத்தில் படிகிறதை ஆராய்ந்து கண்டார்கள். இதுவே தமிழகத்து நீலிச்சாயம் என்கிற இண்டிகோ. தமிழகத்தின் இந்த செயற்கைமுறை பற்றி ஜெர்மானியர்கள் பல ஆய்வுக்குறிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழக வரலாற்றை ஆராய்ந்தால் மதுரையில் இந்த சாயக்கலை உலகமே வியக்கும் அளவுக்கு மகோன்னதமான நிலையில் இருந்தது என அறிகிறோம்.

சாயக்கலையில் இன்னொரு நுட்பமும் கண்டார்கள் தமிழர்கள். பஞ்சுத்துணிக்கு சாயம் ஏற்றும் முறைவேறு. அதற்குப் பயன்படுத்துகிற துணிப்பொருட்கள் வேறு. கம்பளித் துணிக்கும், பட்டுத்துணிக்கும் பயன்படுத்துகிற முறைகள் வேறு. இந்த முறைகளையும் ரசாயனச் சோதனைகள் மூலம் கண்டுபிடித்து அந்தச் சாயங்களையும், அவ்வாறு சாயமேற்றிய துணிகளையும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தமிழகம் அனுப்பியது என்பதே நமது சாய விஞ்ஞானத்தின் சரித்திரம்.

பண்டைக்காலத்தில் அவுரியோடு வேறுபல செடிகொடிகளும் சாயக்கலையில் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டன. கொன்றை மரத்துடன் ஒருசில ரசாயனப் பொருட்களைச் சேர்த்து ஒருவகையான கறுப்பு நிறத்தைத் தமிழர்கள் கண்டு பிடித்தார்கள். செயற்கைச் சாயங்களின் கறுப்பைவிட இந்தக் கறுப்புநிறம் எழில்மிக்கது. இதுபோலவே கடுக்காயும்,

கொன்றையும் கலந்து வேறொரு நிறத்தைக் கண்டுபிடித்தார்கள். சாயவேரையும், காசுகட்டியையும் சேர்த்து நல்ல சிவப்பு நிறச் சாயத்தைச் செய்தார்கள். அவுரி, குங்குமப்பூ, மஞ்சள், கடுக்காய், அரக்கு முதலியவற்றை வெவ்வேறு அளவைகளில் வெவோறு ரசாயன முறையில் கலந்து பற்பல வண்ணங்களைத் துணிகளிலே ஏற்றுகிற சாயக்கலை அறிவியல் காஞ்சியிலும், மதுரையிலும், மாயூரத்திலும் புகழோடு வளர்ந்தது.

தமிழ் மண்ணில் பழங்கால சாயத்தொட்டிகள் பல அகலாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன.

பொருநர் ஆற்றுப்படை, மதுரைக்காஞ்சி பெரும்பானாற்றுப்படை போன்ற சங்ககால நூல்களில் பழந்தமிழரின் சாயக்கலைப்பற்றிய வர்ணனைகள் வருகின்றன. பொருநர் ஆற்றுப்படை எனும் சங்க இலக்கியத்தில்

நோக்குநுழைகல்லா நுண்மைய, பூக்கனிந்து
அரவுரியன்ன அறுவை (பொரு - 82, 83)

என்ற வரிகளில் கண்ணால் காணமுடியாத அவ்வளவு மெல்லிய நூலால் நெய்யப்பட்டது. அழகான பூ வேலைகள் செய்யப்பட்டது. பாம்பின் தோலைப்போலவே அவ்வளவு மென்மையும், வழவழப்பும், பளபளப்பும் அமைந்தது இத்தகைய மெல்லியதுணி என்று அக்காலத்தின் நெய்யப்பட்ட துணியைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதே பாடலில் கொட்டைக்கரை போட்ட பட்டாடை பற்றி 'கொட்டைக் கரைய பட்டுடை நல்கி' என்ற வரிகளில் வருகிறது. ஆக இப்பாடல் மூலம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே நெசவுத் தொழில் பழந்தமிழரிடையே இருந்திருக்கிறது. தமிழர்கள் பருத்திநூல் நெசவிலும், பட்டுநூல் நெசவிலும், தலைசிறந்திருந்தனர். அத்தோடு சாயக்கலையும் சிறந்திருந்தது.

பெரும்பாணாற்றுப்படையில்

'ஆவியன்ன அவிர்நூற்கலிங்கம்' (பெரும் - 469) என்ற வரிகளில்

திருமுருகாற்றுப்படையில்,

பாலாவியைப் போலவும் ஆடை

'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' (திருமுருகு - 15) என்றவரிகளில்

நெந்நிறம் கொண்ட பூவாடை

போது வரி பகன்றறைப்புதுமலர் அன்ன
அகன்று மடி கலிங்கம் (புறம் - 343) என்ற வரிகளில்

பகன்றை மலர் போன்ற வடிவங்கள் அமைக்கப்பட்ட ஆடை

நீலக்கச்சைப் பூவார் ஆடை என்ற வரிகளில்

நீலநிறத்தில் அழகான ஆடை

போன்ற ஆடைகளெல்லாம் சாயக்கலை சிறந்து விளங்கியதை விளக்குகின்றன. சாயம் இருந்தால்தான் வண்ண ஆடைகளைக் கட்டமுடிந்தது.

பருத்தித் துணியில் சாயக்கலை ஏற்றும் நுட்பம் தெரிந்ததால்தான் அன்றைய அரசர், மங்கையர் உடுத்த வண்ண வண்ண ஆடைகளை நூற்கமுடிந்தன. பல மலர்களின் நிறங்களை மங்கையின் துணிகளில் கண்டவன் தமிழன். வானவில்லின் நிறங்களையும் மானம் காக்கும் ஆடையில் ஏற்றியவன் தமிழன். ஆடும் மயிலின் அழகையும், நிறத்தையும், சூடும் ஆடையில் சூடியவன் தமிழன். பூக்களின் நிறத்தைப் பதித்து பூவாடை புனைந்தவன் தமிழன். ஆக சாயக்கலையில் சரித்திரம் கண்டவன் தமிழன்.

சாயக்கலையின் நுட்பம் தமிழர்களுக்குக் கைவரப்பட்டதால்தான் கோயில் சுவர் ஓவியங்கள், சிலைகளில் பல நிறங்களைத் தீட்டமுடிந்தன. கோபுரத்தில் பூசப்பட்ட அந்தக்கால நிறங்கள் பலநூறு ஆண்டுகள் இருந்திருக்கின்றன.

இன்று நவீனமுறையில் எத்தனையோ வகை செயற்கைச் சாயங்களை பெரும் அளவில் மலிவான விலையில் கிடைக்கச்செய்துள்ளமை என்பது உண்மையே! ஆனாலும் பழந்தமிழரின் சாயக்கலையில் நாம் காண்கிற அழகும் அவை தருகிற இன்பமும் அதில் பொதிந்துள்ள ரசாயன விஞ்ஞானமும் வியப்பில் ஆழ்த்துகின்றன.

ஹோல்டர் (Holder) என்ற ஆங்கிலேய விஞ்ஞானி தமிழரின் சாயக்கலையைப் புகழ்ந்து எழுதியிருக்கின்றார். ⑤

'இந்தச் சாயங்கள் ஏற்றிய தமிழரின் துணிகள் அயல்நாட்டுச்சாயங்களைப்போல் கண்ணை உறுத்துவதில்லை. குளுமையாக இருக்கின்றன'. ஆங்கிலேயரைப் போலவே மேலும் பல ஐரோப்பியர்கள் அந்தக் காலத்தில் சோழமண்டலக்கரையில் மிகவும் முன்னேறியிருந்த தமிழரின் சாய விஞ்ஞான கலையழகைப் பற்றி வியந்து எழுதியுள்ளார்கள். ஆக பழந்தமிழரின் சாயக்கலையில் பொதிந்திருக்கிற ரசாயன அறிவியல் இன்றைக்கு நினைத்தாலும் வியப்பூட்டும் ஒன்றே!

மேற்கோள் நூல்கள்

① ஞானத்தமிழ்; மே.வெங்கடேசன், NCBH, 1993.

② பழங்காலத் தமிழர் வாணிகம்; மயிலை சீனி.வேங்கடசாமி, NCBH, 1995.

③ நமது செல்வம் - மீ.ப.சோமு, வானதி பதிப்பகம் - 1991.

④⑤ நமது செல்வம், மீ.ப.சோமு. வானதி பதிப்பகம், சென்னை - 1991.

6. உணவு

உணவு, நீர், காற்று ஆகிய மூன்றுமே மனிதனுக்கு மிக அவசியமானது. அதிலும் சத்தான உணவு, சுத்தமான நீர், தூய்மையான காற்று மிக மிக அவசியமானது. நீர், காற்று இரண்டையுமே மனிதன் உற்பத்தி செய்வதில்லை. மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. ஆனால் விரும்பிய உணவை மட்டும் அவனால் சமைத்துக்கொள்ள முடியும்.

உணவு மனிதனுக்கு அவசியமானது. அது உடல் வலிமை பெற வளர்ச்சியுற இன்றியமையாதது. அதனால்தான் புறநானூறு என்ற பழந்தமிழர் நூலில்

நீரின்றி யமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம் (புற - 18;17-20)

எனச் சொல்லப்பட்டது. உண்டி கொடுத்தோரை (உணவு) உயிர் கொடுத்தவர் என்பதே அப்பாடலின் கருத்து. அது முற்றிலும் உண்மை. பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் தன் உயிரோடு ஊனில் சுரந்து வரும் தாய்ப்பால் கொடுத்தல்லவா குழந்தையைக் காக்கிறாள். நாகரிகம் என நினைத்து குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்காதவர்களை மருத்துவம் பால் கொடுக்கச் சொல்கிறது. பிறக்கிற குழந்தைக்கு முதல் உணவே தாயின் மார்பில் முதன் முதலாகச் சுரக்கும் பால். அதுவே மருந்தாகும் எனவும் சொல்லப்படுகிறது.

தாயின் கட்டுப்பாட்டில் இருக்கிறவரை குழந்தைக்கோ, சிறுவருக்கோ அவள் கொடுக்கிற உணவு தான் உணவாக இருக்கிறது. தாயின் கட்டுப்பாட்டை விட்டு வெளியே வருகிறபோது வாய் ருசிக்கு ஏற்ப மாறுபட்ட உணவு கிடைக்கிறது. உணவு மனிதன் உண்ணுவதோடு மட்டும் தொடர்பு கொண்டதல்ல. நாட்டை ஆளும் அரசோடு தொடர்பு கொண்டது. மழை பெய்யாவிட்டால் வானத்தை வேண்டுகிறோம். இறைவனைக் கேட்கிறோம். காற்று வீசாவிட்டால் இயற்கையைக் கேட்கிறோம். உணவு இல்லாவிட்டால் அல்லது கிடைக்காவிட்டால்?

ஒரு வீட்டில் உணவு இல்லாவிட்டால் தலைவனைக் கேட்பார்கள். பிள்ளைகள் தாயைக் கேட்கும். தாய் கணவனைக் கேட்பாள். ஒருநாட்டில் உணவு இல்லையென்றால் ஆளும் அரசைத்தான் கேட்க வேண்டும். ரொட்டி (Bread) என்ற உணவு கிடைக்காததால் பிரான்ஸ் நாட்டில் மன்னரை எதிர்த்துப் பெரிய புரட்சியே நடந்தது.

உலகெங்கும் பலநாடுகளின் ஆட்சிகள் மக்களின் உணவில் மட்டுமல்ல, அது விற்கிற விலையைப் பொறுத்தும் வீழ்ந்திருக்கிறது. இது மேலை நாடுகளுக்கும் பொருந்தும். எனவே இந்த உணவு மனிதனோடு மட்டுமல்ல நாட்டோடு, ஆட்சியோடு தொடர்பு உடையது. அதனைத்தான் மகாகவி பாரதி வேறுவிதமாகக் கோபமாக 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' எனப் பாடினார். ஒரு அமெரிக்க ஐரிஸ் நாவலாசிரியர் ஜே.பி.டொன்லெவி என்பவர் உன்னிடம் பணம் இல்லாவிட்டால் உணவே பிரச்சனை. 'உன்னிடம் பணம் இருந்தால் காதலே சுகம். ஆனால் இரண்டும் இருந்தால் அதுவே சுகவாழ்வு' என்றார். ஆகவே உணவு மிக மிக முக்கியமானது.

நீரில்லாவிட்டால் உலகம் இல்லை. உணவு இல்லாவிட்டால் மனிதன் மட்டுமல்ல உயிரினங்களே இல்லை. உணவு மனிதனுக்கு மிக முக்கியமானது. அந்த உணவு உலகில் வாழ்கிற வெவ்வேறு இனங்களுக்கு வெவ்வேறு விதமாய் இருக்கிறது.

ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் அரிசியே உணவில் கோலோச்சுகிறது. ஐரோப்பிய, அமெரிக்க, ஆஸ்திரேலிய கண்டங்களில் உள்ள நாடுகளில் கோதுமை கோலோச்சுகிறது. ஆக அரிசி, கோதுமை (Rice, Wheat) என்ற இரு தானியங்களே உலகின் மக்கள் உணவாக இருக்கிறது. அவற்றோடு சேர்ந்து உலகம் முழுவதும் தாவர உணவும், ஊன் உணவும் இருக்கிறது. தாவர உணவை மட்டும் உண்பவர்கள் சைவ உணவாளர்கள் என்றும் ஊன் உணவை (மாமிச) உண்பவர்கள் மாமிச உணவாளர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். தமிழர்களிடம் இவ்விரு பழக்கங்களும் இருக்கின்றன.

சங்க காலத்தில் அறுசுவை உண்டி தமிழர்களால் உண்ணப்பட்டது. நெய்போட்டு பல கறிகள் செய்தனர். மேலும் சங்க காலத்தில் வாழும்

நிலத்தின் வழியே உணவும் மக்களுக்கு வேறுபட்டது.

குறிஞ்சி நிலம்	:	தேன், தினைமா, கிழங்கு, பறவைகள், ஊன், வேட்டையில் கிடைத்த விலங்குகள்.
முல்லை நிலம்	:	சோளம், கேழ்வரகு, நெய், தயிர், வெண்ணெய், மோர், அவரை, துவரை.
மருத நிலம்	:	பல்வகைச் சோறு, காய்கறிகள்.
நெய்தல் நிலம்	:	மீன், நண்டு, இறால், கணவாய், காய்ந்த மீன் (கருவாடு)

சங்க காலத்திலேயே தமிழர்கள் ஆடு, மாடு, மான், உடும்பு போன்றவற்றின் இறைச்சியைப் பலவகையாக பொரித்து உண்டனர். இறைச்சி கலந்து தயாரிக்கப்பட்ட சோறு ஊன் சோறு (பிரியாணி) என அழைக்கப்பட்டது.

அக்காலத்தில் பண்டமாற்று இருந்ததனால் ஒரு நிலத்து மக்கள் தங்கள் நிலப்பொருட்களைக் கொடுத்து பிறநிலப் பொருட்களை உணவின் பொருட்டு வாங்கினர். இடையர்கள் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தை மாற்றிக் கொண்டதை குறுந்தொகை என்ற சங்க இலக்கியத்தில் 'பாலோடு வந்து கூழொடு பெயரும் யாடுடை இடையன்' என்று (குறுந்-221;3-4) கூறப்படுகிறது. பாலுக்குப் பதிலாக கூழ் கை மாறுகிறது. கூழ் என்பது அரிசி, கேழ்வரகு, வரகு, தினை முதலிய தானியங்கள். புறநானூற்றில் (புற-33;1-8) வேடன் தான் வேட்டையாடிய மான் இறைச்சியை உழவனிடம் கொடுத்து அதற்கு ஈடாக நெல் வாங்குகிறான். அதனை பாடலில் சொல்கிறார் புலவர்.

> **கான்உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்**
> **மான் தசை சொரிந்த வட்டியும், ஆய் மகள்**
> **தயிர்கொடு வந்த ததும்பும் நிறைய**
> **ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்**
> **குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெய்**

அதேபோன்று பிடித்த மீனுக்காக தானியம் பெற்றதை ஐங்குறுநூறு சொல்கிறது. இன்னொரு பாடலில் ஓர் ஆண்டு பழமையான நெல்லுக்கு விரால் மீன் கைமாறியிருக்கிறது. கொற்கைக் கடலில் மீன் பிடித்தபோது அதனுடன் முத்துச் சிப்பிகளும் கிடைக்க அவற்றைக் கொடுத்து கள்ளு, மது குடித்தனர் என அகநானூறில் ஒரு செய்தி வருகிறது. குறுந்தொகை (100;3-5)யில் கொல்லி மலைமேல் வாழ்ந்த சிறுகுடி மக்கள் தங்களிடமிருந்த யானைத் தந்தங்களைத் தானியத்துக்கு மாற்றிச் சோறு சமைத்து உண்டனர் என கபிலர் சொல்கிறார்.

இவற்றிலிருந்து சங்க காலத்தில் பண்டமாற்று வாணிபம் நடந்ததை அறிகிறோம். ஆனால் பண்டமாற்று நடந்த காலத்தில் காசு அல்லது நாணயம் புழக்கத்தில் இல்லை எனக் கருதக்கூடாது. அதே காலத்தில் செம்பு, வெள்ளி, பொன் காசுகளும் வழங்கி வந்தன. அந்தக் காசுகள் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

ஒரு நிலத்து மக்கள் தங்கள் நிலப் பொருட்களைக் கொடுத்துப் பிற நிலப்பொருட்களை உணவின் பொருட்டு வாங்கிக் கொண்டனர்.

சங்க காலத்தில் அறுசுவை உண்டி உண்ணப்பட்டது. நெய் பெய்து பல கறிகள் செய்யப் பெற்றன. சோறை சொன்றி என்றனர். நெல்லரிசி, வரகு, அரிசி, மூங்கில் அரிசி முதலியவற்றை அடிசில் ஆக்கினர். கஞ்சி, வரகு, நெல் தானியங்களையும் கீரைகள், பழங்கள், பால், தயிர், மோர் முதலியவற்றை வீணாக்கிவிடாமல் உண்டனர். முயல், மான், உடும்பு, காட்டாடு, காட்டெருமை முதலியவற்றையும் வேட்டையாடி உண்டனர். தேன், மது, கள் குடித்தனர். நெய் கலந்த ஊன், வறுத்த ஊன், சுட்ட மான், பால் சோறு, நெய்சோறு என அறுசுவை உணவையும் உண்டனர். இது போக 'ஈழத்துணவும் வந்ததாகப் பட்டினப்பாலை' பகர்கிறது. இதிலிருந்து இருசெய்திகள் தெரிகின்றன. ஒன்று உணவு வகைகள் சங்க காலத்தில் இறக்குமதியாகி இருக்கின்றன. இன்னொன்று ஈழத்தில் இருந்து தமிழர்களே தமிழர்களுக்கு உணவு ஏற்றுமதி செய்திருக்க வேண்டும்.

திருவள்ளுவர் புலாலை மறுத்த போதிலும் புலால் தமிழர்களின் உணவாக ஆதியில் இருந்தே இருக்கின்றது. இன்று இறைச்சி கலந்து சோற்றை பிற மொழியில் 'பிரியாணி' என்கிறோம். அப்படியானால் தமிழில் பெயர் இல்லையா? உண்டு பழந்தமிழர் அழகு தமிழில் ஊன்சோறு (ஊன்-இறைச்சி, புலால்) என்றனர் ஒரு அர்த்தத்தோடு. அதேபோல் சீ ஃபுட் (Sea Food) என்பதை தமிழில் எவ்வாறு அழைப்பது? கடல் உணவு என்பது சரியா? கடல் உணவென்றால் கடலே உணவாகிற அர்த்தம் வருகிறது. கடலில் மீன்களைத் தவிர கடற்செடிகள், வேறு வேறு உயிரினங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் கடல் உணவாகுமா? ஆகாது. அப்படியானால் தமிழில் அழகான சொல் இருக்கிறது. அது கடற்புலவு (Sea Food) என்பதுதான். இச்சொல்லை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கையாண்டிருப்பது வியப்பான செய்திதானே?

நோயற்ற உணவு :

பழந்தமிழர் காலத்தில் இருந்தே தமிழர் உணவு பல்வகையாய் இருந்ததோடு அவை உடல் நலத்திற்கு 'அற்றது போற்றி உண்பார்க்கு' மருந்து வேண்டுவதில்லை என்பார் திருவள்ளுவர். பசித்தும், செரித்தும் அளவாக உண்பார்க்கு வாத, பித்த, சிலேட்டுமம் முந்நாடிகளும் முறையாய் இயங்கும். காலநிலைக்கு ஏற்ப உண்ணல் நலம். காலைச் சிற்றுண்டியும்,

நண்பகல், மாலைப் பேருண்டியும் உண்பது வழக்கம். ஆயினும் பாகற்காய் கசப்பு, காரவடை உறைப்பு, தயிர், புளி ஆகியவற்றின் புளிப்பு, மாதுளங்காய் துவர்ப்பு, முக்கனி இனிப்பு, உப்பின் உவர்ப்பு என்பன உடலுக்கு உறுதி கொடுக்கும் என்பதைக் கண்டு அவற்றை உணவில் சேர்த்தனர் பழந்தமிழர்.

பழந்தமிழர் ஒரேவிதமான உணவையே உண்டனர் எனச் சொல்ல முடியாது. அவரவர் பொருளாதாரத்திற்கும் வாழ்விடங்களுக்கும் ஏற்பவே உணவு வகைகள் முதலியனவற்றை உணவில் சேர்த்தனர். தினமும் பகலில் மட்டும் ஒரு கீரை உண்ணுவதை வழக்கமாகக் கொண்டனர். விலங்குகளின் இறைச்சியையும் விரும்பியே உண்டனர். அக்காலத்தில் நெல்லரிசி, காடைக் கண்ணியரிசி, குதிரைவாலியரிசி, சாமையரிசி, தினையரிசி, வரகரிசி எனப் பலவகைகள் இருந்தன. இவை யாவும் நெல்லரிசிக்கு ஈடாகா; நெல்லரிசிச் சோறு போன்று வேறொன்றும் சுவையாய்க் குழம்போடு பொருந்துவதில்லை. பச்சரிசி புழுங்கலரிசி என்னும் இருவகையினுள் தமிழர் விரும்பி உண்பது புழுங்கலரிசியாகும். இது சூட்டைத் தணிப்பதால் வெப்பமான நாட்டிற்கு ஏற்றதாகும். குழம்பின் சுவையையும் மிகையாய்க் காட்டும். இதனை சிறுபாணாற்றுப்படை (193–194)

இருங்காழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமான் அரிசி அமலை வெண்சோறு

என்று சொல்கிறது.

உழவர் மங்கலநாள், விழா நாள், நாளணி நாள் முதலான சிறப்பு நாளிலன்றி மூன்று வேளையும் நெல்லரிசிச் சோற்றை உண்பதில்லை. அவ்வக் காலத்தில் விளைந்த தானியங்களான வரகு, சாமை, கம்பு, சோளம், கேழ்வரகு முதலானவற்றைப் பகலுணவாய் உண்பர். மேலும் அக்காலங்களில் காய்கனி உணவையும் புலால் உணவையும் தமிழர்கள் விரும்பி உண்டனர். இலக்கியங்களின் தகவல்படி பட்டியல் போட்டால் அவர்கள் அரிசிச்சோறு, தயிர்ச்சோறு, காய்கறிச்சமையல், நண்டுக்கறி, வரால் மீன் குழம்பு, ஊறுகாய், உடும்புக்கறி, வரகுச்சோறு,கோழிக்கறி, பன்றி இறைச்சி, ஈயல் உணவு, ஆட்டுக் கடாயினை அறுத்து உண்ணல் என பல்வகை உணவு வகைகளை உண்பது தெரிய வருகின்றது.

சங்க இலக்கிய நூல்களில் காணப்படும் உணவு வகையினை கீழே பார்க்கலாம்;

புறநானூறு : நன்கு புளித்த மோரில் ஈயலை ஊறப்போட்டு புளிச்சக் கறி சமைத்து உண்டனர். மாம்பழங்களில் பிசைந்து செய்த சுவையான புளிக்குழம்பும், பெரிய கருப்பு வரால் மீன் இறைச்சியும் கொம்புடைய சுறாமீன் துண்டங்களும் (ஓங்கு தினை மாவின் தீங்களி நறும்புளி மோட்டிரு வராஅல் கோட்டு மீன் கொழும் முறை) வள்ளைக்கீரையும், பாகற்காயும் சமைத்த சோற்றையும் உண்டனர். மான் இறைச்சியைச் சமைத்து உண்டனர்.

பெரும்பாணாற்றுப்படை : மாதுளங்காயுடன் மிளகுப்பொடி மற்றும் கறிவேப்பிலைப்பொடி இட்டு பசுவின் வெண்ணெய்யில் பொரித்து உண்பது. வெண்ணெய் சோற்றைக் கோழி இறைச்சியின் வற்றலோடு உண்பது; மேட்டு நிலத்து நெல்லினை சோறாக்கி உடும்புக் கறியோடு உண்பது; வரகுச் சோற்றை அவரைப் புழக்கோடு உண்பது; கொழியலரிசிக் கூழினால் ஆக்கிய கள்ளினை மீனுடன் உண்பது; பன்றி இறைச்சியை உண்பது; தினைச் சோற்றை பாலுடன் கலந்து உண்பது எனப்பட்டியலே (பெரும்; 130–132, 192–196, 275–276, 111–116, 167–168, 306–308) பாடல்களில் தெரிகின்றன.

சிறுபாணாற்றுப்படை : மருத நில நெல்லை இரும்பு உலக்கையால் அரிசியாக்கி அதனை சோறாக்கி நண்டுக்கறியுடன் (சிறு–193–195) உண்டனர்.

பொருநராற்றுப் படை : கறித்துண்டுகளை கம்பியில் கோர்த்து நெருப்பில் வாட்டி (பொரு–105) உண்டதை பாடல் சொல்கிறது. குறுந்தொகையில் தயிர்க்குழம்பு வைத்து தலைவி உணவு பரிமாறியது பாடலில் வருகிறது. வேடுவர்கள் இறைச்சிக்காகப் பன்றியை வேட்டையாடியதை இந்நூலே பேசுகிறது.

சிலப்பதிகாரம் : மருவூர்ப்பாக்கத்தில் (சிலம்பு–5; 21–28) அவரை, துவரை என்பனவோடு நெல், கடலை, கொள், எள் போன்ற கலப்பொருட்கள் விற்கின்ற கலக்கடை வணிகர், பிட்டு வணிகர், அப்பம் சுட்டு விற்பவர், மீன் விற்கின்ற பரதவர், வெள்ளை உப்பு விற்கிற உமணர், பலவகை இறைச்சி விற்பவர், எண்ணெய் வணிகர் ஆகியோர் இருந்ததாக சொல்கிறது.

இனி வேறுவகை உணவு வகைகளைப் பார்க்கலாம்.

அமலைச்சோறு : சமைத்த சோறை இறைச்சியோடு சேர்த்துக் கொடுத்தல். இதனை ஊன் சோறு (பிரியாணி) என்பர். 'அமலைக் கொழுஞ்சோறு' என்ற பிறிதொரு பெயரிலும் அழைப்பர்.

அறச்சோறு : பசியுடன் வரும் சிறுவர்களுக்கு வள்ளல்கள் கொடுக்கும் உருண்டைச்சோறு.

பெருஞ்சோறு : பெரிய விருந்து.

எச்சோறு : ஒரிடத்தை வந்து பார்வையிடும் அலுவலருக்கு வழங்கும் நாட்படி.

நெய்ச்சோறு : நெய் கலந்த சோறு.

புளியங்கூழல் : புளியைக் கரைத்துக் கொடுத்தல்.

இறைச்சி வருவல் : செம்மறிக்கடாவின் வேகவைத்த தொடையின் தசையை நெய்யிலே தோய்த்து இரும்புக் கம்பியிலே கோர்த்து நெருப்பில் வாட்டி தேனிலே நனைத்து உண்பது. (இதுதான் மேல்நாட்டிலே சில மாற்றங்களுடன் Barbecue என அழைக்கப்படுகிறது.)

உணவு உட்கொள்ளும் முறையைக்கூட பன்னிரண்டாக வகுத்துள்ளனர். அவை ① ;

1)	அருந்தல்	–	மிகச் சிறிய அளவே உட்கொள்ளுதல்.
2)	உண்ணல்	–	பசிதீர உட்கொள்ளுதல்.
3)	உறிஞ்சல்	–	வாயைக் குவித்துக்கொண்டு நீரியிற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளுதல்.
4)	குடித்தல்	–	நீரியல் உணவை (கஞ்சி போன்றவை) சிறிது சிறிதாகப் பசி நீங்க உட்கொள்ளுதல்.
5)	தின்றல்	–	தின்பண்டங்கள் உட்கொள்ளுதல்.
6)	துய்த்தல்	–	சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளுதல்.
7)	நக்கல்	–	நாக்கினால் துலாவி உட்கொள்ளுதல்.
8)	நுங்கல்	–	முழுவதையும் ஓர் வாயில் ஈர்த்துறிஞ்சி உட்கொள்ளுதல்.
9)	பருகல்	–	நீரியிற் பண்டத்தை சிறுகக் குடிப்பது.
10)	மாந்தல்	–	பெருவேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளுதல்
11)	மெல்லல்	–	கடிய பண்டத்தைப் பல்லால் கடித்துத் துகைத்து உட்கொள்ளுதல்.
12)	விழுங்கல்	–	பல்லுக்கும் நாக்கிற்கும் இடையே தொண்டை வழி உட்கொள்ளுதல்.

உண்ணும் முறையில்கூட இலக்கணம் வகுத்திருக்கின்றனர் பழந்தமிழர்கள்.

இவ்வாறு சங்க இலக்கிய நூல்களைப் பார்க்கிறபோது பழந்தமிழர் அறுசுவை உணவு சமைத்துச் சுவையாக உண்டனர் என்பதும் கலைச் சுற்றத்தாராகிய புலவர், பாணர், விறலியர், பாடினியர், கூத்தர் ஆகியோரை உபசரித்து நல்லுணவு கொடுத்தனர் என்பதும் அழுத்தமாகத் தெரிகிறது. விருந்தோம்பலிலும், பசித்தோருக்கு உணவு இடுவதிலும் பழந்தமிழர் முன்னோடிகளாய் இருந்திருக்கின்றனர். எனவேதான் உண்டி கொடுத்தோர் (உண்டி–உணவு) உயிர் கொடுத்தோரே என்கிறது தமிழ் இலக்கியம். புறநானூற்றிலே ஈகையின் சிறப்பினால் 'பசிப்பிணி மருத்துவன்' என்ற பெயரைப் பெறுகிறான் சிறுகுடி கிழான். அவன் பசித்தோருக்கு நாள்தோறும் சோறு வழங்கியவன்.

ஆக இவற்றையெல்லாம் பார்க்கிறபோது பழந்தமிழர்களுக்கு மரபு சார்ந்த, மண் சார்ந்த, பண்பாடு சார்ந்த உணவு முறை இருந்திருப்பது துல்லியமாகத் தெரிகிறது.

தமிழர் பயன்படுத்திய உணவு வகைக்கான சில தானியங்கள் மருந்தாகவும் இருந்திருக்கின்றன. அவ்வகையில் தமிழரின் வாழ்வியலோடு

தொடர்பு கொண்டவை அவரை, பயறு, உழுந்து, நெல், எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை, துவரை ஆகிய நவதானியங்களாகும். அதே போன்று அஞ்சறைப் பெட்டியில் இருக்கின்ற தானியங்களும் மருந்தாகும் உணவாகும். மருந்தாகவும் விருந்தாகவும் பயன்படுகின்ற மிளகு (PEPPER) பழந்தமிழர் சமையலில் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆனால் இப்போது 15–ம் நூற்றாண்டிற்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்கக் கண்டத்தில் இருந்து வந்த மிளகாய், தமிழரின் மருந்தும் காரமுமான மிளகைப் புறந்தள்ளிவிட்டது. மிளகாய் தென் அமெரிக்காவில் இருந்து பரவியது. மிளகாயின் சிவந்த நிறமும் காரமும் பலரைக் கவர்ந்திருக்கலாம். ஆனால் மருத்துவ ஆய்வின்படி மிளகாயை விட மிளகே நல்லது எனத் தெரிய வருகிறது. மேலைநாட்டில் ஐந்து நட்சத்திர உணவு விடுதியில் கறுப்பு, வெள்ளை மிளகுத்தூள் அழகிய சிறுகுவளையில் அலங்கரிப்பதை இப்போதும் காணலாம். அங்கு வாய் திறந்து கேட்டாலும் மிளகாய்ப்பொடி கிடைக்காது.

ஆங்கிலேயரின் ஆட்சி மற்றும் ஆங்கில மொழிக் கல்வியினால் அவர் சார்ந்த உணவு வகைகளை உண்ணத் தலைப்படுகின்றனர் இன்றைய தமிழர். எப்போதாவது ஆசைக்கு உண்பது வேறு. ஆனால் அவற்றையே முக்கிய உணவாக கொள்வதே ஆய்வுக்கு உரியதாகும். ஆங்கிலேயர் உணவு குளிர்பிரதேசத்திற்கு உகந்த உணவு. மேலும் அவர்கள் மது குடிப்பவர்கள். ஆகவே அதற்கேற்ற உணவு உண்பார்கள். ஆனால் மேல்நாட்டு மோகத்தில் நம்நாட்டு சீதோஷ்ணத்திற்கு விரோதமான உணவு வகைகள் உடல்நலத்திற்கு கேடானது.

நீராவியினால் சுடப்படுகிற இட்லி, பிட்டு, மோதகம், கொலுக்கட்டை, அப்பம், இடியாப்பம் போன்ற சிற்றுண்டிப் பலகாரங்கள் சுவையோடு கூடிய சுகாதாரமானவை. இட்லியில் இருக்கிற உழுந்து குளுமையானது. மோதகத்தின் உள்ளே இருக்கிற பாசிப்பயிறும் குளுமையானது. இக்குழுமை வெப்பவலய நாடான தமிழ் மண்ணுக்குப் பொருத்தமானது. மேலும் வெல்லம், சர்க்கரை (சீனி அல்ல) கலந்த உணவு, எண்ணெய் இல்லாத சிற்றுண்டி யாவும் (சர்க்கரை வியாதிக்காரர்கள் தவிர்ந்த) உடல் நலத்திற்கு நல்லது. உலகில் வேறு எந்த இனத்தவரும் தமிழர்களைப்போல் கீரைவகைகளைக் கண்டு உண்டவர் இல்லை. அக்கீரைகள் மருந்தாகவும் பயன்படுகின்றன. ஒரு தமிழரின் உணவு விருந்தை எடுத்தால் முதலில் சோற்றோடு சாம்பார், புளிக்குழம்பு, ரசம், பாயசம், மோர் என வரிசைப்படுத்தியதில் மருத்துவ உண்மை இருக்கிறது. பல்வேறு ருசி, பல்வேறு குணம் என்பனவற்றை சமப்படுத்தவே இந்த முறையைத் தமிழர் கண்டனர். பேருண்டி உணவானால் ரசம் அவசியம் என்பது தமிழர் விருந்து முறை. ஒரே பழம் அல்லது காயின் நீரை (சூப்பை) குடிப்பதைவிட பலமருந்துகள் அடங்கிய உண்ட உண்வை சீரணிக்க வைக்கிற ரசம் முக்கியமானது. ஆனால் இன்று நாகரீகம் என்ற

மாயையில் இந்த நாட்டுக்குப் பொருந்தாத உணவு வகைகளை உட்கொள்ள ஆசைப்படுகின்றனர். இதன் விளைவு? இன்றைக்குத் தலைமுதல் கால் வரை பல்வேறு நோய்கள் பெருகியுள்ளன. உடலை அறுக்கிற சிகிச்சை பெருகிவிட்டது. பயமுறுத்தும் மருத்துவ விளம்பரங்கள் வேறு நிறைந்து விட்டன. அறிவியல் வளர்ந்து விட்டது என்றால் பிறகு ஏன் இத்தனை மருந்துகள்? மேல்நாட்டு வைத்திய முறையில் உணவுக்கட்டுப்பாடு இல்லை. எனவே நோயும் இருக்கும். மருந்தும் இருக்கும். ஐந்து வயது சிறுவனுக்கு எழுத்துக் கண்ணாடி போட வேண்டியிருக்கிறது. கண்ணுக்கு மருந்து போட்டுக்கொள்கிறார்கள். ஆனால் கண்களுக்கு ஊட்டச்சத்தை வழங்கக்கூடிய கீரை வகைகளைச் சாப்பிட வேண்டும் என்பதையும் அவை இம்மண்ணிலே விளைகிறதென்பதையும் எவரும் அறிய மாட்டார். எனவேதான் பழந்தமிழர் வியாதிகளை வராமல் காக்கவும் நோயைத் தடுக்கவும் மண்சார்ந்த உணவை உட்கொண்டனர். உலகில் வேறு எந்த இனத்தவரும் இம்முறையைப் பின்பற்றவே இல்லை. ஆகவே நோயற்ற வாழ்வு வாழ நோய் தராத உணவுகளை உண்ணும் முறையே பழந்தமிழர் உணவியல் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மேற்கோள் நூல் :

① செந்தமிழ்ச்செல்வி – 2002, மே இதழ், கட்டுரைத் தகவல்.

7 - உடல் அறிவியல்

ஆன்மீகத்தில் பற்று இருந்துபோதும் உயிர் வாழ்கிற உடம்பைப் பாதுகாப்பதன் அவசியத்தையும், அந்த உடம்பால் மகத்தான பல செயல்கள் செய்ய வேண்டியதையும் சித்தர்கள் மிகவும் ஆராய்ந்து கண்டுபிடித்தார்கள். மனித உடம்புக்குள் பல்வேறு ரகசியங்கள் இருக்கின்றன என்பது அவர்களின் அறிவியல் பார்வை கலந்த ஆன்மீக வெளிப்பாடு.

இந்த உடம்பை 96 ஆன்மீகத் தத்துவங்கள் தான் இயக்குகின்றன என்பதையும், இந்த 96ம் 96 வகையான வேதியியல் தொழில்கள் (Chemical Reaction) என்பதையும் ஏற்கனவே அறிந்துள்ளோம். இந்த 96–க்கும் அடிப்படையாக மூன்று அடிநிலை ஆற்றல்கள்தான் மனித உடம்பிலே மையம் கொண்டு துடிக்கின்றன என்பதை அனுபவபூர்வமாகக் கண்டார்கள் சித்தர்கள். இந்த மூன்று அடிநிலை ஆற்றல்கள் தான் 96 வேதியியல் தொழில்களையும் ஆட்டிப்படைக்கின்றன. இந்த மூன்றும் மாறும்போது உடம்பினுள் நடைபெறுகிற 96 செயல்களும் குறைகின்றன, மாறுகின்றன. உடனே உடலில் நோய் வருகிறது என்று கண்டுபிடித்தார்கள். இம்மூன்றுக்கும் வாதம், பித்தம், கபம் என்று பெயரும் வைத்தார்கள்.

மனித உடம்பில் ஆயிரக்கணக்கான கோளாறுகள் உண்டாகின்றன. ஆனால் இவற்றுக்கெல்லாம் அடிப்படை இந்த மூன்றுதான். இந்த மூன்றையும் சரிக்கட்டிவிட்டால் நோய் எதுவானாலும் அது சரியாகிவிடும் என்ற உண்மையை சித்தர்கள் கண்டார்கள். அதேநேரத்தில் இந்த மூன்றையும் இவற்றின் நிலையையும் எளிதாகக் கண்டு கொள்வதற்காகவே நாடிச் சோதனை முறை என்ற அரிய, அதேசமயம் எளிய முறையை ஆராய்ந்து கண்டார்கள்.

இன்றைய விஞ்ஞான முறையிலே ஏதேதோ கருவிகளை உட்செலுத்தி ஆராய்கிறார்கள். கதிர்களை (X-Ray) உள்ளே செலுத்திப் படம் எடுத்துப் பார்க்கிறார்கள். இவையெல்லாம் பெரிய சாதனைகள் என்பதில் சந்தேகமில்லை. இத்தனைச் சாதனை மற்றும் சோதனைகளும் முடிவில் மூன்று அடிநிலை ஆற்றல்களை சரிசெய்வதில்தான் வந்து முடியும் என்பது சித்தர்கள் கண்ட நுட்பமாகும். அதோடு இன்னொரு நுட்பத்தையும் நம் சித்தர்கள் கண்டார்கள். வெளியிலுள்ள காற்றுக்கும் உடம்பினுள் இயங்குகிற வாத ஆற்றலுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. இதுபோலவே புறவெளியின் சூட்டிற்கும் நம் உடம்பினுள் உள்ள பித்த நாடிக்கும் ஒரு சம்பந்தம் இருக்கிறது. இவ்வாறே உலக வெளியில் உள்ள தன்மை நீர்ப்புக்கும் நம் உடம்பினுள் இயங்குகிற சிலேப்பினம் என்ற வாத நாடி ஆற்றலுக்கும் ஒரு இணைப்பு இருக்கிறது. இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்தவர்கள் எந்தெந்த காரணங்களால் கூடுகின்றன அல்லது

குறைகின்றன என்பதை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள். Humoral Pathology ① என்று இன்றைய விஞ்ஞான முறையிலே அழைக்கப்படுகிற இந்த முறை நமது சித்தர்களினதும் முன்னோர்களினதும் ஆராய்ச்சியிலே பல கிளைகளோடும் கொடிகளோடும் விரிந்து பரந்து படர்ந்திருக்கிறது.

நமது சித்தர்கள் கண்டுபிடித்த இன்னொரு ரகசியம், மனித உடம்புக்குள் புகுந்தும் வெளிவந்தும் மீண்டும் புகுந்தும் இயங்கிக் கொண்டிருக்கிற மூச்சு முறையாகும். இந்த மூச்சின் இயக்கத்தை மிகமிகத் துல்லியமாக ஆராய்ந்து, அதைக்கொண்டு உடம்பு, உள்ளம், உயிர்நிலை இந்த மூன்றையும் கட்டுப்படுத்தி ஆளலாம் என்பதைக் கண்டு அதற்கான வழிகளைக் கூறுகிறது சித்தர் இலக்கியம்.

தமிழர் வைத்தியத்தில் நாடி பார்க்கும் முறை

சித்தர்கள் மனித உடலுக்குள்ளே இயங்குகிற மூன்று அடிநிலை ஆற்றல்களை சீர்தூக்கிப் பார்க்க மணிக்கட்டிலே விரலைப் பொருத்தி நுட்பமாக உணர்கிற நாடிச் சோதனை முறையையும் கண்டுபிடித்தார்கள். நாடிப்பரிசோதனை சித்தர்களின் முறை. நூற்றுவரை சித்தமான முறை. ஒரு பெண் கர்ப்பமானதைக் கூட வேறு பரிசோதனைகள் இன்றி நாடியைப் பார்த்துச் சொல்ல முடியும். அனுபவமான வைத்தியர்கள் நாடியைப் பார்த்து வியாதியைச் சொல்வார்கள். ஆங்கில மருத்துவத் துறையிலும் நாடி பார்க்கிற முறைகள் இருக்கின்றன. வரலாற்றைப் பார்க்கிறபோது கிரேக்க

வைத்திய மேதையான காலன் என்பவர் ஆர்வத்தோடு இந்த நாடிப் பரிசோதனை முறையைக் கற்றார் என்றும் அவர் மூலம் நம்முடைய அறிவியல் அங்கே செல்வாக்குப் பெற்றது தெரியவருகிறது.

மனித உடம்பை ஆராய்ந்த சித்தர்கள் உடம்பில் 72,000 நாடி நரம்புகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவற்றில் மிக முக்கியமானவை 24. 72,000த்தில் இந்த 24க்கு அத்தனை முக்கியம் ஏன்? இந்த 24 நாடி நரம்புகளும் மற்ற நரம்புகளைப் போல் அல்லாமல் எப்போதும் உறங்கிக் கொண்டிருக்குமாம். அதிலும் 24 நாடி நரம்புகளில் 10 நாடிகள் மேல்நோக்கியும், 10 நாடிகள் கீழ்நோக்கியும் மீதி நான்கும் இரண்டு இரண்டாக இருபக்கத்திலுமாக ஒரு பாம்பைப் போல் சுற்றி வளைத்துக்கொண்டு கிடக்கின்றன. இதில் மனித உயிரின் ஜீவஆற்றல் அறிதுயில் செய்கிறது.

இந்த 24 நாடிகளிலே 10 மிகவும் முக்கியமானவையாகும். இந்தப் பத்தில் 2 மிகமிக முக்கியமானவை. Catalespy என்னும் ② Suspended Animation என்னும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியிலே ஆராய்ந்து வருகிற ரகசியமாகிய உறக்கம் இம்மூன்றுக்குள் பொதிந்து கிடக்கிறது. இந்த மூன்றுமே நமது உயிரை உடம்போடு இணைத்துக்கொண்டு இருக்கின்றன. இந்நாடிகளின் மூன்று வாயுக்களுக்கு இடமூச்சு, வலமூச்சு, நடுமூச்சு என்று பெயராகும். இந்திரன், சந்திரன், சூரியன், அக்கினி என்று அழைப்பதுண்டு.

இடமூச்சு என்பது இடது பக்க மூக்கிலே இழைக்கிற மூச்சு. வலமூச்சு என்பது வலது பக்க மூக்கிலே இழைகிற மூச்சு. நடுமூச்சு என்பது இரண்டு மூக்கிலும் வந்து போய் இயங்குகிற சுவாசம். இம்மூன்று மூச்சுகளின் இயக்கத்தைப் பற்றி நமது சித்தர்கள் கண்டு சொல்லியுள்ள இரகசியங்களை தற்போது தான் மேல்நாட்டினர் ஆராயத் தொடங்கியுள்ளனர்.

மூச்சு வித்தையின் இரகசியங்களைக் கண்டு கொண்ட சித்தர்கள் பல நாட்கள் மூச்சுவிடாமல் உடம்பில் எவ்வித உயிர்ப்பின் அறிகுறியும் இல்லாமல் மரக்கட்டையாக உயிர் இருந்தும் இல்லாதது போல் இருந்திருக்கிறார்கள். இதனை அவர்கள் புலன்களை வென்றதன் மூலம் - மூச்சின் இயக்கத்தைப் புரிந்துகொண்டு அதனைக் கையாளும் நுட்பத்தைத் தெரிந்ததன் மூலம் சாதித்தார்கள். இத்தகைய மூச்சு இயக்க ரகசியங்கள் மூலம் தூங்காமல் தூங்கி அதேபோல் சாகாமல் சாவு என்ற நிலைக்குப் போய் உயிருக்கும் விடுமுறை கொடுத்தார்கள்.

இம்மூன்று மூச்சுகளைப் பற்றி இன்னொரு பெரிய ரகசியமும் சித்தர்களால் கண்டு சொல்லப்பட்டுள்ளது. அமாவாசை கழித்து மூன்று நாட்களில் வருகிற வளர்பிறையில் காலையில் எந்த மூக்கு எப்படி இயங்கும் என்ற கணக்கைக் கண்டு சொல்லியிருக்கிறார்கள். அது நான்காம் நாள்

முதல் ஆறாம் நாள் முடிய மாறும். பிறகு ஏழாம் நாளில் முதல் மூன்று நாட்கள் போல் மறுபடி இயங்கும். இப்படியே மும்மூன்று நாட்களுக்கு இந்த இடமூச்சு, வலமூச்சு மாறி மாறி ஒரு நியதியின்படி இயங்குகின்றன. இதுதான் சாதாரண இயல்பான சுகமான மனிதனின் உடல்நிலை.

இந்த இரண்டு தவிர நடுமூச்சு, அதாவது மூன்றாவது மூச்சு எப்படி இயங்குகிறது என்பதற்கும் ஒரு அட்டவணை இருக்கிறது.

ஒரு நிமிடம்	–	15 மூச்சு
ஒரு மணி நேரம்	–	900 மூச்சு
60 நாழிகை	–	ஒருநாள்
1 நாழிகை ஒன்றுக்கு சுவாசம்	–	360
60 நாழிகைக்கு	=	21,600 சுவாசம்

மனிதனின் ஒருநாள் சுவாச எண்ணிக்கை 21,600 ஆகும். இது கூடுதலும் குறைதலும் நல்லதல்ல. இவ்வாறு 21,600 மூச்சை தினமும் விட்டால் ஒரு மனிதன் 120 ஆண்டுகள் வாழமுடியும். ஆனால் இன்றைய கால கட்டத்தில் விஞ்ஞானச் செயற்கை முறைகளினால் மனித வாழ்க்கை ஓடுவதால், அதிக நேரம் தூங்குவதால், போகம் அதிகமாகச் செய்வதால் சுவாசம் அதிகரிப்பதனால் ஆயுள் குறைகிறதாம். இதனை திருமூலரின் பாடல் விளக்குகிறது.

நூறும் அறுபதும் ஆறும் வலம் வர
நூறும் அறுபதும் ஆறும் இடம் வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே **(திருமந்திரம் – 729)**

100 நாடிகளும் 60 தத்துவங்களும், ஆறு அத்துவாக்களும் முறையே வலமூச்சு, இடமூச்சு, நடுமூச்சு ஆகியவற்றைச் சாரும் இயல்புடையன. நடுமூச்சைச் சார்ந்துள்ள நிலையை எய்தினால் 166 ஆண்டுகள் வாழலாம் என்கிறார். அது மட்டுமில்லாமல் திருமூலர் மூச்சை குதிரையாக உருவகப்படுத்தி அஃது உண்மையானவரை ஏற்றிக் கொள்ளும், பொய்யரைத் தள்ளும் என்கிறார்.

எல்லா உயிரினங்களுக்கும் மூச்சு முக்கியமானது. மூச்சு விடாத உயிரினம் இருக்க முடியாது. மூச்சு பற்றிய ஒரு பட்டியல்.③

	சுவாசம் – ஒரு நிமிடம்	வாழும் ஆண்டுகள்
தேரை	1 – 1	500 – 1000
திமிங்கலம்	3 – 4	200 – 250
ஆமை	4 – 5	150 – 155
யானை	11 – 12	100 – 120
பாம்பு	7 – 8	126 – 130
குரங்கு	31 – 32	20 – 30
முயல்	38 – 39	8 – 10
பண்டைய மனிதர்	12 – 13	100 – 120
இக்கால மனிதர்	16 – 17	60 – 80

மூச்சை இழுத்து வலிமையால் உள்ளே நிறுத்தினால் உடல் முதுமையிலும், இளமையாய் பளிங்குபோல் இருக்கும்.

மூச்சை இழுக்கும்போது தொண்டை, இதயம், வயிறு ஆகியவை பருக்க வேண்டும். இரண்டுக்கும் இடையே மூச்சை உள்ளே நிறுத்த வேண்டும். இவைகளைச் செய்தால் உடல் ஆரோக்கியம் ஏற்படுவதோடு ஆயுள் அதிகரிக்கும். சித்தர்கள் ஆன்மீக நம்பிக்கை கொண்டவர்கள் என்ற போதும் உடல் ஆரோக்கியம் பற்றியும் இவ்வாறு பேசுகிறார்கள்.

நாடி நரம்புகளின் இயக்க நிலையைக் கொண்டு சித்தர்கள் அரிய பெரிய செயல்கள் செய்தார்கள். அவர்களால் காலையில் எழுந்ததும் மூச்சு எந்த நாசியில் (நாசி–மூக்கு) எப்படி இழைகிறது என்பதை அறிய முடிந்தது. பிறகு அதற்கேற்ப அதனை சீர்தூக்கித் தெரிந்துகொள்ள விதிமுறைகளை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஓர் இரவு முழுவதும் ஒரே நாசியில் (மூக்கின் ஒரு பகுதி) மூச்சு இயங்கினால் அந்த உடம்புக்கு மூன்று ஆண்டுக்கு மேல் உயிராற்றல் இல்லை. இரவு முழுவதும் இடமூச்சும் பகல் முழுவதும் வலமூச்சும் மாறாமல் நடந்தால் அந்த மனிதன் ஆறுமாதத்தில் மரணத்தை நெருங்குகிறான் என்று அர்த்தமாகும்.

மற்றவர் புருவத்தைப் பார்த்தால் தெரியாதவர்களுக்கும் (நோய் வாய்ப்பட்டவர்களுக்கு) ஒன்பது நாளிலும், காது கேளாதவர்களுக்கு (கடைசி நேரத்தில் காது கேட்காத நிலை) ஏழு நாளிலும், நட்சத்திரம் தெரியாதவர்களுக்கு ஐந்து நாளிலும், மூக்கு நுனி தெரியாதவர்களுக்கு மூன்று நாளிலும், இரண்டு கண்களையும் கையால் அமுக்கினால் தண்ணீர் வராதவர்களுக்குப் பத்து நாளிலும் மரணம் வரலாம் என்பது சித்தர்களின் எண்ணம்.

சித்தர்கள் நாடி மருத்துவத்தில் கரை கண்டிருக்கிறார்கள். ஆயுளைக் கூட்ட உதவும் வழிகளைச் சொன்ன அவர்கள் உயிர் உடலிலிருந்து பிரியும் காலம் நேரம் அறியும் வழிகளையும் சொன்னார்கள். பழைய மருத்துவத்தில் நாடித் துடிப்பைத் தொட்டும் பார்த்து நோய் அதற்கான மருத்துவம் என இரண்டையும் வியக்கத்தக்க வகையில் சொல்லியிருக்கிறார்கள்.

உடல் என்கிறபோது பிறப்பும், இறப்பும் தவிக்க முடியாது. பிறப்பின் அடிப்படை ரகசியங்களைத் தெரிந்து கொண்டிருக்கிற மனிதனால் இறப்பின் ரகசியங்களின் எல்லையை தொடமுடியவில்லை.

மனிதனுக்கு பல்வேறு ரகசியங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தபோதும், தெரிந்துகொள்ள முடியாத ரகசியங்களே அதிகமாக இருக்கின்றன. மரணம் என்பது மாபெரும் ரகசியம். அதை வெல்ல முடியுமா என்பது ஒரு கேள்வி. ஆனால் அபாய அறிவிப்புகளைப் புரிந்து கொண்டால் மனித முயற்சியினால் செய்யக் கூடியதையெல்லாம் செய்யலாம் அல்லவா? அந்த முயற்சிக்கு உறுதுணையாக அமைவதே இந்த மூச்சு இயக்கங்களைப் பற்றிய இரகசியங்கள். இந்த இரகசியங்களையெல்லாம் இல்லறத்தில் இருப்போருக்கு என்றே சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீண்ட ஆயுளும் மன அடக்கமும் அமைதியும் வேண்டுமானால் உடல் நலமாக இருக்க வேண்டும். அதனைத்தான் சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சித்தர்கள் ஆன்மீகவாதிகளாக வெளிப்பார்வைக்குத் தெரிந்தபோதும் அவர்கள் உடலுக்கான விஞ்ஞானத்தை மெய்ஞானத்தோடு இணைந்து ஆராய்ந்தார்கள். அதனை நாடி வைத்திய முறையில் சொல்லியிருப்பது இன்றைக்கு வியப்பானதாய் தெரியலாம். ஆனால் அந்த நாடி வைத்தியத்தின் பின்னால் ஒரு மாபெரும் வைத்திய முறை இருப்பது மருத்துவத்துறையில் சித்தர்கள் வழங்கிய நன்கொடையே.

உடல் இயக்கம் :

மனித உடலானது அவரவர் கையால் எட்டு சாண் அளவு உயரமும் (எறும்பும் தன் கையால் எண்சான்) நான்கு சாண் அளவு பருமனும், 96 விரற்கடைப் பிரமாணமும் உள்ளதாகும். இந்த மனித உடம்பில் 96 வகையான செயல்கள் ஒரே நேரத்தில் நடந்து வருகின்றன. இவற்றை மருத்துவக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தால் பல உண்மைகள் தெரிய வரும். மனித உடலின் உள் செயற்பாடுகளுக்கு மருத்துவரீதியாக வெவ்வேறு பெயர்கள் மேல்நாட்டினர் மொழியில் சொன்னபோதும் அவற்றை பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து, புரிந்து அவற்றை ஆன்மீகப் பெயர்களில் அழைத்திருக்கிறார்கள்.

மனித உடல் சம்பந்தமாக சித்தர்கள் கண்ட தத்துவங்கள் 96. அவற்றைச் சித்தர்கள் ஆன்மீக மொழியில் அழைத்தார்கள்.

ஆன்ம தத்துவங்கள்	–	24	
உடலின் வாசல்கள்	–	9	
தாதுக்கள்	–	7	
மண்டலங்கள்	–	3	
குணங்கள்	–	3	
மலங்கள்	–	3	
வியாதிகள் (பிணிகள்)	–	3	
விகாரங்கள் (ராகங்கள்)	–	8	
ஆதாரங்கள்	–	6	
வாயுக்கள்	–	10	
நாடிகள்	–	10	
அவத்தைகள்	–	5	
ஐவுடம்புகள்	–	5	= 96

ஆன்ம தத்துவங்கள்

ஆன்ம தத்துவங்கள் 24. அவையாவன; பூதங்கள்–5, ஞானேந்திரியங்கள் – 5, கர்மேந்திரியங்கள் – 5, தன்மாத்திரைகள்–5, அந்தக்கரணங்கள் – 4 என வருகின்றன. இனி இவற்றைத் தனித்தனியாகப் பார்ப்போம்.

பூதங்கள் – 5

இவ்வுலகம் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் ஐம்பூதங்களால் ஆனவை. மனித உடலும் ஐம்பூதங்களால் ஆனவை. இரண்டையும் ஒப்பீடு செய்தால் புரியும்.

நிலம்	உலகம்	நீரில்லாத மண்
	மனிதன்	எலும்பு, மாமிசம், தோல், நரம்பு, உரோமம்
நீர்	உலகம்	தண்ணீரைக் குறிக்கும்
	மனிதன்	உமிழ் நீர், சிறுநீர், வியர்வை, இரத்தம், விந்து.
காற்று	உலகம்	உலகில் காணப்படும் வாயுக்கள்
	மனிதன்	சுவாசம், வாயு ஆகியவை.
ஆகாயம்	உலகம்	அண்டவெளியாகிய வானம்
	மனிதன்	வானவெளியைப் போல் விசாலமான மனித மூளை.
நெருப்பு	உலகம்	உலகில் காணப்படும் வெப்பம்– சூரிய வெப்பம்
	மனிதன்	பசி, தூக்கம், தாகம், உடலுறவு, அழுகை என்பன நிகழும்போது உடலில் அதிகமாகும் வெப்பம்

மேற்சொன்ன ஐம்பூதங்கள் மனித உடலில் சரிவர இயங்காவிடில் நோய் வரும். உதாரணமாய் மனிதனின் உடலிலிருந்து வெளியாகும் நீர் அளவாய் இருக்க வேண்டும். தேக வெப்பம் அளவாய் இருக்க வேண்டும். மூச்சு சரிவர இயங்க வேண்டும். மூளை சரிவர இயங்க வேண்டும். எலும்பு, மாமிசம், தோல், நரம்பு, உரோமம் என்பன சரிவர இயங்க வேண்டும். மேற்சொன்ன ஐந்து சம்பந்தமானவைகளில் கோளாறு ஏற்படுமாயின் நோய் உருவாகும். எனவேதான் உடலில் இந்த ஐம்பூதங்கள் ஒழுங்காய் இருக்க வேண்டும் என சித்தர்கள் சொன்னார்கள்.

ஞானேந்திரியங்கள் (ஐம்பொறிகள்) – 5

1) மெய் (உடம்பு) 2) வாய் 3) கண் 4) மூக்கு 5) செவி இவற்றின் சிறப்புகள் மருத்துவ ரீதியான உண்மைகள்.

1) மெய் (உடம்பு) : காற்றின் அம்சமாகையால் அதன் தன்மைகளான குளிர்ச்சி, வெப்பம், மென்மை, வன்மை என்னும் நான்கு வித உணர்வுகளையும் உணர்ந்தறியுய.

2) வாய் (அல்லது நாக்கு) : நீரின் அம்சமாகையால் உப்பு, புளிப்பு, இனிப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்னும் அறுசுவைகளையும் உணர்ந்தறியும்.

3) கண் : நெருப்பின் அம்சமாகையால் நிறம், நீளம், குட்டை, பருமன், மெலிவு என பத்துவித ஒளி உருவங்களைப் பார்த்தறியும்.

4) மூக்கு : மண்ணின் அம்சமாகையால் வாசனைகளை நுகர்ந்தறியும்.

5) செவி : ஆகாசத்தின் அம்சமாகையால் அதன் குணங்களான பலவித ஓசைகளையும் ஒலிகளையும் கேட்டறியும்.

கர்மேந்திரியங்கள் – 5

1. வாய், 2. கை, 3. கால், 4. மலவாய், 5. கருவாய் (மர்மக்குறி) இவற்றின் செயல்கள் முறையே 1. சொல்லல், 2. ஏற்றல், 3. நடத்தல், 4. விடுதல், 5. மகிழ்தல்.

1. வாய் : இது ஆகாசத்தின் அம்சமாகையால் அதன் குணமாக நின்று சொல்வது ஆகும்.
2. கை : இது காற்றின் அம்சமாகையால் கொடுக்கல், வாங்கல், பிடித்தல், ஏற்றல் முதலியவற்றைச் செய்யும்.
3. கால் : இது நெருப்பின் அம்சமாகையால் நடத்தல், நிற்றல், அமர்தல், எழுந்திருத்தல் முதலானவற்றைச் செய்யும்.
4. மலவாய் : இது மண்ணின் அம்சமாகையால் மலநீர்களை வெளியே தள்ளும்.
5. கருவாய் (மர்மக்குறி) : இது நீரின் அம்சமாகையால் சிறுநீர் கழிப்பதோடு ஆணின் இன்பச்சுரப்பான விந்தையும், பெண்ணின் இன்பச் சுரப்பான சுரோணிதத்தையும் வெளிப்படுத்தும்.

தன்மாத்திரைகள் – 5

இவை முறையே : 1. சுவை, 2. ஒளி, 3. ஊறு, 4. ஓசை, 5. நாற்றம் என வகுக்கப்பட்டு ஐந்து நுண்ணிய பொருட்கள் என வழங்கப்படும் அவற்றின் இயல்புகள் :–

1. சுவை – ருசிகளை அறியும் (நாக்கு)
2. ஒளி – பத்துவிதமான உருவங்களையும் காணும் (கண்)
3. ஊறு – தீண்டுதல், உணர்வுகளை அறிதல் (உடம்பு)
4. ஓசை – காதின் உட்புறத்திலுள்ள மெல்லிய ஜவ்வின் வழியாக ஓசையைக் கேட்டல் (காது)
5. நாற்றம் – மூக்கின் வழியே வாசனைகளை அறிதல்(மூக்கு)

அந்தக் கரணங்கள் (அகக் கருவிகள்) – 4

இவை முறையே 1. மனம், 2. அறிவு, 3. நினைவு, 4. முனைப்பு என வகுக்கப்பட்டு அகக்கருவிகள் நான்கு என வழங்கப்படும். இவற்றின் இயல்புகள்

1. மனம் : இது காற்றின் அம்சமாகையால் நினைப்பு, மறப்பு எனும் எண்ணங்களோடு காற்றைப் போலவே அலைந்து திரியும்.

2. அறிவு : இது நெருப்பின் அம்சமாகையால் நன்மை தீமைகளை ஆராய்ந்து உணரும்.

3. நினைவு : இது நீரின் அம்சமாகையால் ஐம்புலன் வழியே இழுத்துச் செல்லும்.

4. முனைப்பு : மண்ணின் அம்சமாகையால் நான், எனது என்ற முனைப்பில் புண்ணிய பாவங்களை செய்யவல்லது. இந்த நான்கும் கண்ணால் காணமுடியாமல் நடப்பதால் அவற்றிற்கு அகக்கருவிகள் என்றுபெயர்.

2. உடலின் வாசல்கள் – 9

(1). கண்கள் – 2, (2). செவிகள் – 2, (3). மூக்குத் துவாரங்கள் – 2, (4). வாய் – 1, (5). மலவாயில் – 1, (6). குறிவாசல் – 1 ஆகமொத்தம் –9. இவையே நமது உடலில் காணப்படும் ஒன்பது ஓட்டைகள் அல்லது வாசல்கள்.

3. தாதுக்கள் – 7

அவை 1. சாரம் (இரசம்), 2. செந்நீர் (இரத்தம்), 3. ஊன் (மாமிசம்), 4. கொழுப்பு, 5. எலும்பு, 6. மூளை, 7. வெண்ணீர் (விந்து, சுரோணிதம்) என வழங்கும்.

4. மண்டலங்கள் – 3

இவை முறையே தீ மண்டிலம், ஞாயிறு மண்டிலம், திங்கள் மண்டிலம் என வழங்கலாம். இவை மனித உடலில் இருப்பவை.

1. அக்கினி மண்டிலம் : பிறப்புறுப்புக்கும், மலவாய்க்கும் இடையில் உள்ள நான்கிலைத் தாமரை போலிருக்கும் சக்கரம்.

2. ஞாயிறு மண்டிலம் : வயிற்றுக்கும் மேலே இருதய கோடிச்சந்திரர்கள் உதித்ததுபோல் பிரகாசத்தோடு கமலத்தின் அறுகோணமாய் எட்டு இதழ்க் கமலமாக இருக்கும்.

3. திங்கள் மண்டிலம் (சந்திரன்) : தலையின் நடுவே அக்கினி மண்டலத்தை நோக்கியவாறு கோடிச்சந்திரர்கள் உதித்ததுபோல் பிரகாசத்தோடு நிலையாக இருக்கும்.

5. குணங்கள் – 3

இவை முறையே : 1. மனவெழுச்சி, 2. மயக்கம், 3. நன்மை இவற்றின் இயல்புகள்

1. மனவெழுச்சி : அதிகக்களிப்பு, அகங்காரம், போகம், வீரம், ஈகை என்பன.

2. மயக்கம் : உலக இன்பங்களில் பற்று, தூக்கம், சம்போகம், திருட்டுத்தனம், கள்ளுண்ணல், மோகம், கோபம் என்பன.

3. நன்மை : வாய்மை, கருணை, பொய்யாமை, கொல்லாமை, களிவின்மை, கோபமின்மை, அன்பு, அடக்கம் என்பன.

6. மலங்கள் – 3.

இவை முறையே : 1. ஆணவம், 2. மாயை, 3. வினை

இவற்றின் இயல்புகள் :

1. ஆணவம் : நான், எனது எனும் ஆணவத்தில் ஆத்மாவைச் சிதைத்து, ஆசை, கனவு உண்டாக்கிக்கொண்டே இருக்கும்.

2. மாயை : பிறர் பொருட்களை அபகரிக்க எண்ணுவதும் அதற்காக முயல்வதும்.

3. வினை : முன் சொன்ன இரண்டையும் அனுசரித்திருக்கும். இதனால் புண்ணிய பாவங்கள்உண்டாகும்.

அடுத்து பிணிகளைப் (வியாதிகள்) பார்ப்போம்.

பிணிகள் :

மனித உடம்பில் உள்ளே உருவாகும் எல்லாப் பிணிகளுக்கும் மூன்றே மூன்று மையமாகின்றன. அவை வாதம், பித்தம், கபம் எனப்படுகின்றன.

7 – பிணிகள் – 3

1) வாதம் : காற்றினால் உற்பத்தியாகி பிராணவாயு மிகுந்து வலிவுற்று நீரும் நெருப்பும் (வெப்பம்) கலந்தால் அது வாதம் எனப்படும்.

2) பித்தம் : உடலில் சுரக்கும் ஒவ்வாத நீர்.

3) கபம் : நீர், காற்று, வெப்பம் என மூன்றும் கலவாமல் கலங்கினால் அது கபமாகும்.

8 – விகாரங்கள் (ராகங்கள்) – 8

இவை 1) ஆசை 2) வெகுளி 3) கருமித்தனம் 4) மயக்கம் 5) வெறி 6) பொறாமை 7) ஈறிசை (தனக்கு நேர்ந்த துன்பம் பிறருக்கும் வரவேண்டும் என்று எண்ணுவது) 8) டம்பம் என்பன.

9 – ஆதாரங்கள் – 6

இவை ஆறுவகைப்படும். அவை 1) மூலம் 2) தொப்புள் (வயிறு) 3) மேல்வயிறு 4) நெஞ்சம் 5) கழுத்து 6) புருவநடு என்பனவே.

1. மூலம் : உடம்பிலுள்ள மலவாய். இது உடலுக்கு முதல் ஆதாரம் ஆனதால் மூலாதாரம் என்றாகிறது.
2. தொப்புள் : உந்தி எனப்படும் வயிறு. வயிற்றின் வெப்பம் வாழ்வைக் கெடுக்கும் என்பார்கள். வயிறு உண்பதையே வாய்உண்டால் பினி இல்லை.
3. மேல்வயிறு : வீங்காத வயிறு நோய்க்கு ஏங்காது. தொப்பை வயிறு தொல்லை கொடுக்கும்.
4. நெஞ்சம் : நெஞ்சுக்குள் ஓடும் வாய்வு நெறியோடு இருந்தால் அச்சம் தேவையில்லை.
5. கழுத்து : வலதுநாசியிலும், இடது நாசியிலும் இழுக்கும் மூர்ச்சை உள்ளுக்குள் இழுக்கும்படி செய்வது.
6. புருவநடு : புருவம் நரைத்தால் பருவம் நரைத்தது என அர்த்தம். இரு புருவங்களுக்கு நடுவே புத்தி, மனோதத்துவம், எண்ணம் ஊடுருவும் இடமாகும்.

10. வாயுக்கள்

மனித உடம்பில் வாயுக்கள் பத்து.

1. உயிர்க்காற்று, 2. மலக்காற்று, 3. தொழில்காற்று, 4. ஒலிக்காற்று, 5. நிரவுக்காற்று, 6. விழிக்காற்று, 7. இமைக்காற்று, 8. தும்மல்காற்று,

9. கொட்டாவிக்காற்று, 10. வீங்கல்காற்று எனப்படும். இவை பத்து வளிகள் (காற்று) எனப்படும். இதில் முதல் ஐந்தும் முக்கியமானவையாகும். மற்ற ஐந்தும் உபவாயுக்கள் ஆகும். இவை மனிதன் உடலில் இயங்க அவசியமானவை.

1. உயிர்க்காற்று : மூச்சுப்போனால் பேச்சு போச்சு என்று சொல்வதுபோல் இது பிராணவாயுவை மையப்படுத்தியது. இது மிக முக்கியமானது.

2. மலக்காற்று : இது மலவாசலையும், மர்மக்குறிகளையும் பற்றிநின்று மல மூத்திரங்களையும், ஆண், பெண் இன்பச்சுரப்பிகளான விந்துவையும், வெண்ணீரையும் வெளியே தள்ள உதவுகிறது.

3. தொழில்காற்று : இஃது உடலின் பாகங்கள் அனைத்திலும் வியாபித்து உணர்த்தும். உண்ட உணவை திப்பி வேறு, சாறு வேறாகச் செய்யஉதவும்.

4. ஒலிக்காற்று : இது ஒலி எழுப்ப உதவும். தூங்கும்போது ஐம்பொறிகளையும் (கண், மூக்கு, வாய், காது, மேல்தோல்) அமுந்தச் செய்து தூங்கி எழுந்தவுடன் அந்தந்தப் பொறிகளை அதனதன் இடத்தில் இருக்கும்படி செய்யும்.

5. நிரவுக்காற்று : இது ஒலிக் காற்றினால் அனுப்பப்படும் உணவில் சாரத்தை நாடி நரம்புகளுக்குச்சமமாகப் பங்கிட்டு நிரவலாக்கி உடலை வளர்க்கும்.

மேற்கண்ட ஐந்தும் உடலில் உலவுவதால்தான் மனிதன் உயிரோடிருக்கிறான். எனவே இந்த ஐந்தும் முக்கியமான காற்றாகும்.

6. விழிக்காற்று : கண்களினால் பார்க்கச்செய்யும் முக்கல், சோம்பல், திமிரல் என்பனவற்றையும் உண்டாக்கும்.

7. இமைக்காற்று : இது கண்களை திறக்கவும், மூடவும் செய்யும். சிரிப்பு, மயிர்க்கூச்சல், முகலட்சணம் முதலானவற்றை உண்டாக்கும்.

8. தும்மற்காற்று : இது மூக்கிலிருந்து தும்மலை உண்டாக்கும்.

9. கொட்டாவிக்காற்று : இது மார்பிலிருந்து கபத்தை சேர்த்துக் கட்டிக்கொட்டாவியையும், விக்கலையும் உண்டாக்கும்.

10. வீங்கல்காற்று : இது கர்ப்பத்திலுள்ள பிண்டத்தை வெளியே தள்ளும். உயிர்போன பிறகும் உடலை விட்டு நீங்காமல் பற்றி நின்று உடம்பை வீங்கச்செய்தும், விரிவித்தும், புழுவைத்தும், நாற்றமெடுக்கும்படி செய்தும் தகனம் செய்யும்வரை உடம்பிலேயே இருந்து இறுதியில் கபாலத்தை பிளந்து கொண்டுபோகும்.

இப்பத்து காற்றுகளும் பத்து நாடிகளில் திரிந்து கொண்டிருக்கும்.

11. நாடிகள் – 10

இந்த நாடிகளுக்கும் பத்து காற்றுகளுக்கும் தொடர்பு இருக்கின்றன. நாடிகள் பத்து ஆகும். அவை,

1) இடமூச்சு அல்லது இடது பக்க நரம்பு 2) வலது மூச்சு அல்லது

வலது பக்க நரம்பு 3) நடுமூச்சு அல்லது நடுநரம்பு 4) உள்நாக்கு நரம்பு 5) வலக்கண் நரம்பு 6) இடக்கண் நரம்பு 7) வலச்செவி நரம்பு 8) இடச்செவி நரம்பு 9) கருவாய் நரம்பு 10) மலவாய் நரம்பு என ஆகும்.

1) இடமூச்சு : இடது மூக்கில் நடக்கும் மூச்சு. இதைச் சந்திர நாடி என்றும் சொல்வார்கள். பெண்நாடி என்றும் சொல்வார்கள்.

2) வலமூச்சு : வலது மூக்கில் நடக்கும் மூச்சு. இதைச் சூரிய நாடி என்றும் ஆண்நாடி என்றும் சொல்வார்கள்.

3) நடுமூச்சு : இது மூலம் முதல் தலைவரை திரியும் நாடி. இதனை விசேடமூச்சு என்றும் சொல்வர்.

4) உள்நாக்கு நரம்பு : இந்நாடி மூலத்தில் தொடங்கி உள்நாக்கிலே நின்று அன்னபானங்களை விழுங்கச்செய்யும்.

5) வலக்கண் நரம்பு : இதுவும் மூலாதாரத்தில் தொடங்கி வலது கண்வரை வந்து நிற்கும்.

6) இடது கண் நரம்பு : இதுவும் மூலாதாரம் தொடக்கம் இடது கண்வரை வந்து நிற்கும்.

7) வலச்செவி நரம்பு : இதுவும் மூலாதாரம் தொடங்கி வலது காது வரை நிற்கும்.

8) இடது செவி நரம்பு : இதுவும் மூலாதாரம் தொடங்கி இடது காது வரை நிற்கும்.

9) கருவாய் நரம்பு : இதுவும் மூலாதாரம் முதல் கருவாய் (ஆண், பெண் இனக்குறி) வரை வந்து நிற்கும்.

10) மலவாய் நரம்பு (அல்லது எருவாய்) : இது மனித மலங்களை மட்டுமல்ல ஆண், பெண் இன்பச் சுரப்புகளான விந்து மற்றும் வெண்ணீரை வெளியே தள்ளச் செய்யும். மனித மலங்கள் தாவரங்களுக்கு எருவாகப் பயன்படுவதால் மலவாயை எருவாய் என்பர்.

12) அவத்தைகள் (மனநிலை) – 5

இந்த ஐந்தும் மனநிலையோடு தொடர்புடையவை. அவை,

1) நனவு 2) கனவு 3) உறக்கம் 4) பேருறக்கம் 5) உயிர் அடக்கம்

1) நனவு : விழித்திருக்கும் நிலை. ஐம்புலன்கள் வழியே அறியப்படும் சுகதுக்கங்களின் வெளிப்பாடு.

2) கனவு : சொப்பன சுகம் தரும் கனவு நிலை

3) உறக்கம் : கண்டவை, கேட்டவை, உணர்ந்ததை எதுவும் சொல்லப் புலப்படாத நித்திரை நிலை.

4) பேருறக்கம் : விபத்தில், வியாதியில் மூர்ச்சை அடையும் நிலை உணர்வு இல்லா நிலை.

5) உயிர் அடக்கம் : பற்றற்று, உணர்வற்று எதையும் அறியாமல் நிற்கும்

உயிர்ப்படக்க நிலையே இது. சுருக்கமாக கோமா அல்லது ஆழ்மயக்க நிலை எனலாம்.

13 – ஐவுடம்புகள் – 5

இவை 1) உணவுடம்பு அல்லது பருவுடம்பு 2) காற்று அல்லது வளியுடம்பு 3) மன உடம்பு 4) அறிவுடம்பு 5) இன்ப உடம்பு என ஐந்து ஆகும். இவ்வைந்தோடு ஆத்மா சேர்ந்திருப்பதாலும் ஒடும் புளியும் போல் ஆத்மா வேறு ஐவுடம்பு வேறு என்றாகிறது. ஒரு மனித உடம்புக்குள் உடம்பு, ஆத்மா என இரண்டு இருப்பதைச் சித்தர்கள் ஆழமாகவே உணர்ந்திருக்கின்றனர். அதன் அடிப்படையில் இதுவரை சொல்லப்பட்ட 96 தத்துவங்கள் ஆன்மீக ரீதியில் சொல்லப்பட்ட போதிலும் அவை உடற்கூறு மருத்துவ ரீதியிலும் பொறுந்தக்கூடியவையே!

இந்த 96 தத்துவங்கள் என்று சொல்லக்கூடிய வேதியியல் தொழில்களில் குறைபாடு ஏற்படும்போது பல்வேறுவிதமான நோய்கள் உடலுக்கு வருகின்றன. மருத்துவ ரீதியாக பல்வேறு பெயர்கள் அவற்றுக்கு கொடுக்கப்படுகின்றன. அவற்றை உறுதி செய்யுமாப்போல் இன்றைக்குத் தலையில் இருந்து கால் வரைக்கும் உறுப்புகளில் கோளாறு ஏற்பட்டால் அவற்றுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவர்கள் (Specialist) இருக்கிறார்கள். காலுக்கு ஒரு மருத்துவ நிபுணர் (டாக்டர்), கைக்கு ஒருவர், முதுகுக்கு ஒருவர், எலும்புக்கு ஒருவர், காதுக்கு ஒருவர், இதயத்துக்கு ஒருவர், மூளைக்கு ஒருவர் என மருத்துவ நிபுணர்கள் விரிவடைந்து இருக்கிறார்கள். மருத்துவமும் நவீன கருவிகளோடு விரிந்துள்ளது.

நோய் வந்தால் மருத்துவரைப் பார்க்கத்தான் வேண்டும். ஆனால் சித்தர்கள் நோயற்ற வாழ்வைப் பற்றி சிந்திக்கிறார்கள். நீண்ட ஆயுளும் மன அடக்கமும் வேண்டுமானால் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். எனவேதான் சித்தர்கள் என்ற தமிழ் ஆன்மீக விஞ்ஞானிகள் மனித உடல் பற்றியும், அதனுள் நடக்கிற செயற்பாடுகள் குறித்தும், மூச்சு பற்றியும் மிகத் தெளிவாக எழுதி வைத்தார்கள். அவற்றை இன்றைய மேல்நாட்டு மருத்துவத்தோடு ஒப்பீடு செய்யும்போது, மேல்நாட்டு மருத்துவம் வருவதற்கு முன்பே சித்தர்கள் அவற்றை சிந்தித்திருக்கிறார்கள் என்பது வியப்பாகத் தெரிந்தாலும் சித்தர்களின் இந்த அறிவியல் ஆய்வு செய்ய வேண்டிய மாபெரும் உடல் விஞ்ஞானக் கல்வியாகும்.

மேற்கோள் நூல்கள் :

①② நமது செல்வம், மீ.ப.சோமு, வானதி பதிப்பகம் – 1991, சென்னை.

③ நோயின்றி வாழ சித்த வைத்தியம் – டாக்டர் ஸ.கிருஷ்ணன், பாவை பப்ளிகேஷன்ஸ் – 2002

8. தமிழர் மருத்துவம்

தமிழர்கள் மருத்துவத்திலும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று தனியான மருத்துவம் இருந்திருக்கிறது. அந்த மருத்துவம் மிக மிகப் பழமையானது. பழமையானது என்பது காலத்தைக் கணக்கிட்டுச் சொல்வதாகும். அப்படியானால் தமிழரின் மருத்துவம் தொடங்கிய காலம் என்ன? தமிழ் மருத்துவம் பிறந்த காலத்தை உறுதியாகச் சொல்ல வேண்டுமானால் தமிழரின் மண்ணில் செடி, கொடிகள் தோன்றிய காலமே தமிழ் மருத்துவம் தோன்றிய காலம் என்று துணிந்து கூறலாம். இவ்வாறு தமிழ் அறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் 'தமிழின் சிறப்பு' என்ற நூலில் எழுதியுள்ளார்.

ஆங்கில மருத்துவ முறையைத் தவிர்ந்த ஏனைய மருத்துவ முறைகளை நாட்டு வைத்தியம் என்பர். நாட்டு வைத்தியம் என்ற சொல் மேனாட்டு ஆங்கில மருத்துவ முறை வந்த பிறகே வந்தது. நாட்டு வைத்தியம் என்ற சொல்லில் 'நாட்டின் வைத்தியம்' என்பதே மேலோங்கி நிற்கின்றது.

இன்றைய நாட்டு வைத்தியத்தில் தமிழ் மருத்துவமும் அடங்கும். நாட்டு வைத்தியம் மூன்று பிரிவுகளாகும்.①

ஒன்று : தமிழ் (சித்த) மருத்துவம்

இரண்டு : ஆயுர்வேதம்

மூன்று : யுனானி

தமிழ் மருத்துவமும் சித்த மருத்துவமும் ஒன்று. அதன் மொழி தமிழ். திசை தெற்கு. ஆயுர்வேதம்–அதன் மொழி வடமொழி. திசை வடக்கு. யுனானி–அதன் மொழி உருது. திசை மேற்கு.

தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம் தமிழ் மண்ணின் தட்ப வெப்ப நிலைக்கு (Climate) ஏற்பவும் அதனால் தோன்றும் பிணிகளுக்குத் தமிழகத்து மண்ணில் முளைக்கின்ற செடி கொடிகளை வேர்களை மருந்தாகத் தருகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் மருத்துவர் இருந்தார் என்பதை, **'ஊரும், அயலும் சேரியோரும் – நோய் மருங்கு அறிஞரும்'** என்ற வரிகள் (தொல்–பொருள்–செய்–188) உறுதி செய்கின்றன.

சங்க காலத்தில் மருத்துவர் தாமோதரனார் என்ற புலவர் இருந்தார். எனவே அக்காலத்தில் மருத்துவர் இருந்தனர் என்பது தெளிவாகின்றது. மருத்துவர் இருந்தார் என்றால் மருந்தும் மருத்துவமும் இருந்திருக்கிறது என்றுதான் அர்த்தமாகிறது. சிலப்பதிகாரத்தில் பட்டினப்பாக்கத்தை

வர்ணிக்கிறபோது இளங்கோவடிகள் 'ஆயுள் வேதர்' அங்கே இருந்ததாகச் சொல்கிறார். அந்த ஆயுள்வேதர் மருத்துவரே. சங்க கால நூல்களான திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகியவற்றின் பெயர்களே மருந்துகளைக் குறிக்கும் பெயர்களாகும்.

தமிழ் மருத்துவத்தில் பச்சிலைகளும் வேர்களும் சிறப்பானவை. பெரும்பாலும் இம்மருந்துகள் பொடியும் கியாழமுகமாக (மருந்து ஊறல் நீர்) இருக்கும். இதனை பசுபம் (பொடி) என்றும் கசாயம் (கியாழம்) என்றும் சொல்வர்.

இரும்பு, தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்கள் ஒன்பது. முத்து, பவளம், மணி முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாசானங்கள் ஒன்பது. இவைகளை நவலோகம், நவமணிகள், நவபாசாணங்கள் (மருந்தாகப் பயன்படும் நஞ்சுகள்) என்பர். இம்மூன்றையும் அதாவது (9 x 3 = 27) இருபத்தேழையும் பஸ்பமாக்கும் முறை (CALCINE POWDER) சித்த வைத்தியத்தில் மட்டுமே உண்டு. பிற மருத்துவ முறைகளில் கூட இவற்றை பஸ்பமாக்க சித்த வைத்திய முறையையே பின்பற்றுகின்றனர். ஆங்கில மருத்துவ முறையிலும் பஸ்பமாக்கும் முறை உண்டு. ஆனால் அவை விலை உயர்ந்த எந்திரத்தில் அதிக செலவில் செய்யப்படும். சித்த வைத்தியத்தில் குறுகிய நேரத்தில் மிகக் குறைந்த செலவில் பஸ்பமாக்கும் முறைகள் இருக்கின்றன.

பழந்தமிழர் சித்த வைத்தியத்தில் மருந்து அரைக்கும் முறை

சித்த வைத்தியத்தில் 'ஒத்தை மருந்து' (ஒற்றை மருந்து) உண்டு. அது பூண்டு ஒரு மருந்து. கடுகு ஒரு மருந்து. வெங்காயம் ஒரு மருந்து. தேங்காய் ஒரு மருந்து. தேன் ஒரு மருந்து. இந்த ஒன்றையும் எதையும் சேர்க்காமல், அரைக்காமல், காய்ச்சாமல், உருக்காமல் அப்படியே கொடுக்கச் சிற்சில நோய்கள் தீரும். மேலும் தமிழர் வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாக அமைத்திருப்பது வியப்புக்குரியது. காய், கனிகளெல்லாம் மருந்து. கீரை

வகைகளெல்லாம் மருந்து. கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், சுக்கு, திப்பிலி முதலிய கடைச்சரக்குகளெல்லாம் மருந்தாகின்றன. எள், கடலை, இலுப்பை, வேம்பு முதலியவற்றில் கிடைக்கும் எண்ணெய் வகைகளெல்லாம் மருந்து. எனவே மருந்தாக அமைகின்ற இவையே தமிழ் அல்லது சித்த வைத்திய முறையாகும்.

உண்ணும் உணவுப் பொருட்களே மருந்தாக அமைகின்ற இம்முறை பிறநாடுகளில் இல்லாத ஒன்று. தமிழர்களிடையே 'ஆளும் சரக்கு அறுபத்திநாலு' எனச் சொல்லக் கூடியதாக தானியங்கள், கீரைகள், காய்கள், கனிகள் என 64 வகை உணவுப்பொருட்கள் இருக்கின்றன.

உணவிற்குச் சுவையும் மணமும் ஊட்ட உதவும் இஞ்சி, சீரகம், கடுகு, சுக்கு என்பன மிகச் சிறந்த மருந்துகளாகவும் உடலில் வேலை செய்கின்றன. எனவே உணவு செரிக்க உதவுகின்றன.

காலை இஞ்சி கடும் பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டலம் உண்பவர்
கோலை வீசிக்குலாவி நடப்பாரே!

என்னும் பழம்பாடல் மேற்கண்ட கருத்தைச் சொல்கின்றன. (மண்டலம் – 48 நாட்கள்)

பண்டைத் தமிழர் உணவைக் குறிக்க உணா, உண்டி, உறை, ஊட்டம், வல்சி, அடிசில், இரை, பதம் எனப் பல பெயர்களை வழங்கினர்.

சங்க காலத் தமிழர்கள் தாம் வாழும் இடங்களுக்கேற்ப உணவுப் பழக்கங்களைக் கொண்டிருந்தனர். அக்காலத்திலேயே வாழும் நிலப்பரப்பை ஐந்து இயற்கைக் கூறுகளாகப் பிரித்தனர். அவை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன. இவ்வைந்து நிலப்பகுதிகளுக்கேற்ப உணவு முறைகளைக் கொண்டனர் தமிழர்கள். அவை

முல்லை – வரகு, சாமை, அவரை

குறிஞ்சி – ஐவனம் எனப்படும் மலை நெல்லும், மூங்கில் அரிசியும், திணையும்.

மருதம் – செந்நெல், வெண்ணெல்.

நெய்தல் – உப்பு, மீன், மாவினம்.

பாலை – ஆலனைத்தும் சூறையாடியும் கொண்ட பொருட்கள்.

மேற்கண்ட ஐந்து வகை நிலத்து உணவுகள் நிலத்தின் தட்ப வெப்பத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளன.

நாம் உண்ணும் உணவு திண்ம உணவு – நீர்ம உணவு என இருவகைப்படும். காய்கள், பழங்கள், மீன், இறைச்சி, அரிசி, கோதுமை போன்றவை திண்ம உணவுகள். நீர்ம உணவுகள் தேன், பால், இளநீர், பழச்சாறு போன்றவையாகும்.

மனித உடல் பலவகையான உயிரணுக்களால் (Cell) ஆக்கப் பெற்றுள்ளது. எனவே உண்ணும் உணவு அவ்வுயிரணுக்களை இயக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நரம்பு, எலும்பு, குருதி, தோல், தசை முதலிய பல பகுதிகளுக்கும் ஒழுங்காகச் செயல்படுவதற்கேற்ப உணவு சத்துள்ளதாகவும் அமைதல் வேண்டும்.

நம்மில் பலர் உடலின் தேவைக்கேற்ப பலவகைச் சத்துக்கள் (MULTI VITAMIN) அடங்கிய உணவை உண்பதில்லை. அதனால் உயிரணுக்களின் திறன் குறைந்து நோய் ஏற்படுகின்றது. பசியைப் போக்கவே உணவு என்பதும் வாய்க்கு ருசியாக உணவு இருக்க வேண்டும் என்பதும் தவறானதாகும். எனவே உணவு பசியைப் போக்குவதோடு மருந்தாகவும் பயன்படவேண்டும். இதனை திருவள்ளுவர்,

மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறு பாடில்லை உயிர்க்கு. (திருக்குறள் - 945)

என்ற குறள் மூலம் ஒரு வைத்தியராக மருத்துவம் சொல்கிறார். என்ன மருத்துவம்? மாறுபாடு இல்லாத உணவை அளவு மீறாமல் மறுத்து அளவோடு உண்டால் உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் இல்லை என்பதே அம்மருத்துவம். ஆக உண்ணும் உணவிலேயே மருத்துவம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இன்று நடப்பதென்ன?

ஓடுகிற ஒட்டத்தில் நின்றும், நடந்தும், இருந்தும், எண்ணெயில் 'குளித்தக்' கொழுப்பான அவசர உணவை (FAST FOOD) அதாவது மாறுபாடான உணவை வயிறு முட்ட உண்பது நாகரிகம் (!) என ஆகிவிட்டது. இதனால் உணவே நோய்க்கு வழிவகுத்து வருகின்றது. மேலும் வீதியோரக் கடைகளில் (திறந்த) விலை குறைவு என்ற காரணத்துக்காக உண்ணுகிற உணவில், வாகனங்கள் ஓடுவதால் எழும்புகிற தூசிபடிவதையும், ஈக்கள் மொய்ப்பதையும் எவரும் கவனிப்பதில்லை. இவ்வகை உணவுகளால் நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. எனவே ஆஸ்திரேலியாவில் வீதியோர, திறந்தவெளிக்கடைகளுக்குத் தடை உண்டு. உணவகங்களில் கடுமையான சுகாதார விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. பிற நாடுகளிலிருந்து சமைக்கப்பட்ட உணவு பொருட்கள் அங்கு கொண்டு போகவும் தடை விதிக்கப்பட்டுள்ளன.

உணவு அமிர்தமே ஆனாலும் அளவு மீறி உண்ணக்கூடாது. வாய்க்கு ருசியானதெல்லாம் வயிற்றுக்குக் கேடானது. இவற்றையெல்லாம் விளக்க 'அளவு மீறினால் அமுதமும் நஞ்சு'; 'வாய்க்கு ருசி வயிற்றுக்குக் கேடு' ஆகிய பழமொழிகள் இருக்கின்றன. அதேபோன்று இன்னொரு பழமொழியைப் பார்ப்போம். அது வேடிக்கையானது. ஆனால் விவேகமானது.

'வீங்கியவன் சாவான், தூங்கியவன் பிழைப்பான்'; அதன் அர்த்தம் அளவுக்கு மீறி உண்பதால் வயிற்றில் தொந்தி விழுந்துவிடும். எனவே வயிறு

வீங்கியதுபோல் இருக்கும். வயிறு வீங்கக்கூடாது. அது உடல்நலக்கேட்டிற்கு ஒப்பானது. உடல்நலக்கேடு மரணத்துக்கான அழைப்புதானே? எனவே 'வீங்கியவன் சாவான்' என்றனர் பழந்தமிழர் பழமொழியில். இந்த பழமொழிகளில் மருத்துவம் சொல்லியிருப்பது தமிழரின் மருத்துவ அறிவியலுக்கு உதாரணமாகும்.

மருந்தும் உணவும் :

உண்ணும் உணவு அளவோடும் செரிமானம் செய்ய இலகுவானதாகவும் இருத்தல் தமிழரின் சித்த மருத்துவத்தில் முதற்படியாகும்.

'நொறுங்கத்தின்னால் நூறு வயசு' என்பது பழமொழி. ஆனால் அதில் மிகப்பெரிய மருத்துவம் அடங்கியிருக்கிறது. நாம் உண்ணும் உணவை வாயில், பற்களால் நொறுங்கத்தின்றால் குடல் சிரமப்பட்டு செரிமானம் செய்ய வேண்டியதில்லை. அவசரகதியில் அள்ளி விழுங்குவது உடல் நலத்திற்குக் கேடானது. எனவேதான் நம் முன்னோர்கள் இருந்து ஆறஅமர உட்கார்ந்து நொறுக்கத்தின்று உண்பார்கள். ஆனால் இன்று சாப்பிடக்கூட நேரம் இல்லையென்று சொல்லிக்கொண்டு கிடைத்ததை அள்ளிப்போட்டுக் கொண்டு போகிறார்கள். சிலர் எந்நேரமும் எதையாவது மென்று கொண்டே இருப்பார்கள். அது தவறானது. ஆகக் குறைந்தது உணவு இடைவெளி நான்கு மணி நேரமாக இருக்கவேண்டும். ஏற்கனவே உண்ட உணவு வயிற்றில் இருக்கும்போது உண்ணக்கூடாது. உண்ணும் உணவுகூட அவரவர் கையில் 32 கவளத்திற்குள்ளேயே இருக்கவேண்டும். குடிக்கிற நீர்கூட எட்டுவாய் தண்ணீராக இருக்கவேண்டும்.

மேலும் மேலும் உண்பதைவிட முன்னர் உண்ட உணவு செரிப்பதே நல்லது. அதனை இன்பம் என்கிறார் திருவள்ளுவர்.

உணலினும் உண்ட அறல் இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது (திருக்குறள் - 1326.)

முன்னர் உண்ட உணவு செரிப்பது இன்பமானது. அதுபோல் காமத்தில் கூடுவதைவிட ஊடுதல் இன்பமானது என்கிறார் குறள்மூலம்.

திருவள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் மருந்து, மருத்துவம், வைத்தியன், நோய் என்பன பற்றியெல்லாம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவ அறிவியலை அறிந்து பத்து திருக்குறளில் பதிவாகச் சொல்கிறார். இன்றைய மருத்துவ உலகம் பல்வேறு பெயர்களில் பல்வேறு நவீன நடைமுறைகளை விளக்குவதை திருக்குறளும் தெளிவாகச் சொல்கிறது.

இதோ அந்தத் குறள்.

நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (திருக்குறள் - 948)

இந்தக்குறளில் வள்ளுவர் கூறும் மருத்துவச் செய்தி என்ன? நோய் இன்னதென ஆராய்ந்து, நோய் வந்த காரணத்தை ஆராய்ந்து, நோயைத் தீர்க்கிற வழியை ஆராய்ந்து அவ்வழியில் தவறாமல் மருத்துவம் செய்யவேண்டும். இதனைத்தான் இன்றைய மருத்துவம் செய்கின்றது.

இன்றைய மேல்நாட்டு மருத்துவம் அவ்வாறே நோயுற்ற ஒருவனுக்குச் சிகிச்சை அளிக்கும்போது அறிகுறிகளினால் (Signs and Symptoms) நோய் எதுவென அறிந்து (Diagosis) நோய் காரணிகளை (Aetiology) ஆராய்ந்து, அதற்கேற்ப நோயின் அறிகுறிகளுக்கும் காரணிகளுக்கும் சிகிச்சை (Treatment of Cause) யினை நிர்ணயித்துள்ளது. அத்தோடு இன்று இன்னும் மேலே ஒருபடி சென்று, மேற்சொன்னவற்றை சரியாக அறிந்துகொள்ள (Investigations) சோதனைகளும் நடத்தப்படுகின்றனவே தவிர குறள் சொன்ன அடிப்படையில் பெரிய மாற்றம் இல்லை.

மருத்துவமனைகள் பற்றி திருக்குறளில் சொன்னதும் இன்றைக்கும் பொருந்தியிருக்கிறது. ஒரு மருத்துவமனைக்கு அல்லது பிணிக்கு மருந்து, நோயாளி, வைத்தியர் (டாக்டர்) தாதி (நர்ஸ்) என நான்கு பிரிவுகளை உள்ளடக்கியதே முக்கியமானது. இதனை இன்னும் தெளிவாகப் பார்ப்போமானால் நோயுற்றவன் (Sick Person) நோயறிந்து மருத்துவம் செய்யும் வைத்தியன் (Doctor) மருந்தை தரும் மருந்தாளன் (Pharmacist) மருந்தை அருகிலிருந்து கொடுப்பவர் அல்லது கவனிப்பவர் (Nurse) என மருத்துவத்துறை நான்குவகை பிரிவுகளை உடையது. இன்றைய மருத்துவமனை அவ்வாறுதான் இயங்குகிறது. அதனை திருவள்ளுவர்

உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான்என்று
அப்பால்நால் கூற்றே மருந்து (திருக்குறள் - 950)

என்ற குறளில் சொல்லி வைத்தது வியப்பானது அல்லவா?

நோய், மருந்து, வைத்தியன், பணியாளன் என நான்கிலுமே ஆழமான நுண்ணறிவே தமிழர் மருத்துவத்துறையிலும் பதிந்திருந்தது என்பதைச் சொல்ல இதைத்தவிர வேறு என்ன சான்று வேண்டும்? இதே போன்று

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் (திருக்குறள் - 949)

என்ற திருக்குறளில் இன்னொரு சான்று இருக்கிறது. அது மருத்துவம் கற்றவன், நோயுற்றவனது உடல், வயது பற்றிய விபரத்தையும், நோயுற்ற காலத்தையும் கருதி மருத்துவம் செய்தல் வேண்டும் என்பதே. இதனை

இன்றும் மேல்நாட்டு மருத்துவத்துறையில் பின்பற்றுகின்றனர்.

ஒரு நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் முகமாக மருந்து வழங்கும்போது நோயாளியின் அளவு (வயது, எடை) நோயுள்ள காலம் (Duration Timing) நோயின் தீவிரம் (Severity of Disease) என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே என்ன மருந்தை எந்த அளவில் (Dose) எப்போது தொடக்கம் எவ்வளவு காலத்திற்கு (Duration) வழங்கவேண்டும் என்பவை இன்றும் தீர்மானிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளை (antibiotics) கண்டு பிடித்தனர். அவற்றை அவரவர் வயதுக்கு ஏற்ப தகுந்த நேரத்தில் உரிய நாட்களுக்குள் சரியான அளவில் வழங்கினாலன்றி நோய் குணமாகாது எனக்கண்டனர். எனவே உரிய காலத்திற்குள் உரிய மருந்தை உட்கொள்ளச் சொன்னார்கள். இவற்றையெல்லாம் தெளிவாகப் பேசிய திருவள்ளுவர் உடலில் நோய் உண்டாவதற்கான முக்கிய காரணங்கள் மூன்றே என 'அடித்துச்'சொல்கிறார். சித்தர்களும் அதனையே சொன்னார்கள். சித்தர்களுக்கு முந்திய தமிழ்ச்சித்தர் திருவள்ளுவர் ஒரு குறளில் சொல்கிறார்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (திருக்குறள் - 941)

இந்தக்குறளில் உடலில் காற்று (வாய்வு அல்லது வளி), பித்தம், கோழை என மூன்று மிகுந்தாலும் குறைந்தாலும் உடலில் பல்வேறு நோய்கள் உண்டாகும் என்று ஒரு மருத்துவரைப்போல் சொல்கிறார். இதனையே இன்றைய மருத்துவர்களும் சொல்கிறார்கள். ஆனால் திருவள்ளுவர் ஆங்கில மருத்துவப்படிப்பு உண்டாவதற்கு முன்பே இவற்றைச் சிந்தித்திருப்பது பழந்தமிழரின் மருத்துவ அறிவியலுக்கு ஆதாரமானதுதானே!

திருவள்ளுவர் திருக்குறளில் (941 முதல் 950 வரை) மருந்து என்ற அதிகாரத்தில் மனிதனுக்கு வருகிற நோய்கள் பற்றி, மருத்துவர் பற்றி, மருந்து பற்றி, மருத்துவமனையின் நான்கு கூறுகள்பற்றி உண்ணும் உணவு பற்றி ஒரு மருத்துவப் பேராசிரியர்போல் மிக அற்புதமாக பேசுகிறார். நோயற்ற வாழ்வைக் குறித்துச் சிந்திக்கிறார். மனித உடல் குறித்த தெளிவு அவருக்கு இருந்தது.

மனித உடலில் (உடலுக்கு) எது கூடியனாலும் ஆபத்து. அதிகமான உடற்பயிற்சி சிறு நீரகங்களைப் பாதிக்கும். உடற்பயிற்சி இல்லாவிடில் மாரடைப்பு, நீரிழிவு, குருதிக் கொழுப்பு என்பன ஏற்படலாம். உண்ணும் உணவு அளவு மீறினாலும் உடலுக்கு ஆகாது. எனவே உண்ட உணவு செரித்ததை அறிந்து பின் மிகவும் பசித்து, தன் உடலுக்கு மாறுபாடு ஆகாத உணவைத் தெரிந்து கவனித்து உண்ணவேண்டும் என்று சொல்வது

(திருக்குறள் – 944) இன்றைய மனிதர்களுக்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. உடலுக்கு ஒவ்வாததை நாவின் ருசிக்கு அடிமையாகி உண்ணக்கூடாது. எனவே உடலுக்கு ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். மாறுபட்ட உணவும் அளவுக்கு அதிகமான உணவும் உடல்நலத்திற்குத் தீங்கானது. கண்ட கண்ட நேரங்களில் உண்பதும் தீங்கனாது. எனவே தான் தவஞானிகள் உள்ளத்தையும், உடலையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். அவர்கள் உணவில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தார்கள். அவர்கள் ஒரு வேளையே உண்பார்கள்.

ஒருவேளை உண்பான் யோகி
இருவேளை உண்பான் போகி
மூவேளை உண்பான் ரோகி

இம்மூன்று வரிகளில் மிகப்பெரிய மருத்துவ உண்மை இருக்கிறது. ஆகவே உணவில் கவனமாக இருத்தல் வேண்டும். அளவாக உண்ணவேண்டும். அளவு மீறி உண்பதால் அமிர்தமும் நஞ்சாகும். கண்ட கண்ட நேரத்தில் மலம் கழிக்கவேண்டி வரலாம். கண்ட கண்ட நேரத்தில் மலம் கழித்தல் உடல் நலத்திற்கு தீங்கானது. பழந்தமிழர் மலம் கழித்தல் ஒரு நாளைக்கு இருதடவை என வகுத்தனர்.

பழந்தமிழர் உடலில் அனைத்து வியாதிகளுக்கும் காரணம் உடல் கழிவுப் பொருட்களை சரிவர வெளியேற்றாததே என அறிந்துள்ளனர். எல்லாவற்றுக்கு 'மூலம்' அதுதானே? அதனால் தான் அதனால் வரும் நோய்க்கு 'மூலநோய்' எனப் பெயரிட்டனர். கழிவறையில் வடக்கு தெற்காக உட்காரவேண்டும் என்பது அவர்களின் அறிவியல் கருத்தே. பூமியின் காந்த சக்தி தெற்கு வடக்காகப் பாய்வதால் மலம் கழிக்கும்போது துன்புற நேரலாம். முக்குவதால் வியாதிகள் வரும். மேலும் ஒவ்வொரு மனிதனும் வருடம் இருமுறை குடல் சுத்தம் (பேதிக்கு மருந்து சாப்பிடுவது) செய்யவேண்டும். முழுநிலா (பௌர்ணமி) அமாவாசை, கிருத்திகை போன்ற நாட்களில் பூமியின் காந்த சக்தி வழமையைவிட அதிகமாக இருக்கும். கடல் அலைகள் இக்காலங்களில் மேல்மேல் எழுந்து வரும். கடலே கொந்தளிப்பாக இருக்கும். எனவே இக்காலங்களில் இரைப்பையில் அதிக கனம் கூடாது என்பது சித்தர்களின் அறிவியல். ஆகவேதான் முன்னோர்கள் இந்தநாட்களில் உண்ணாவிரதம் இருந்தனர்.

பொதுவாக விரதம் இருப்பது (உண்ணாவிரதம் – மௌன விரதம்) மருத்துவரீதியாக உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது என நிரூபிக்கப்பட்டுள்ளது. அது அறிவியல். ஆனால் இன்று அந்த அறிவியல் மறைக்கப்பட்டு ஆன்மீக அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆன்மீக அர்த்தத்தை ஆய்வு செய்தால் பழந்தமிழரின் அறிவியலே மேலோங்கி நிற்கும்.

உணவு மரபு :

தொன்மைக்காலத்தில் இருந்தே தமிழர்களின் வாழ்வில் உண்ணுவதிலிருந்து உறங்குவதுவரை பல்வேறு முறைகளில் மரபு வழியானப் பண்பாட்டுப் பழக்கங்களில் அறிவியல் ஊடுருவி நிற்பதைப் பகுத்தறிவுச் சிந்தனையோடு பார்க்கிறபோது இன்றைக்கும் வியப்பாக இருக்கும்.

உணவுக்காக அன்றாடம் பழந்தமிழர் சமையல் அறைக்குள் நுழையும் உணவுப் பொருட்கள் உடலுக்கும். வாழும் மண்ணின் தட்ப, வெப்ப நிலைகளுக்கும் ஏற்றதாய் தெரிவு செய்ததில் அறிவியல் மேம்பட்டே இருக்கின்றன. அந்த அறிவியலில் தாவர விஞ்ஞானம் (Botany) தெரிகின்றது.

தமிழர் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்துகிற காய் வகைகளைப் பாருங்கள். கத்தரிக்காய், அவரைக்காய், பூசணிக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், முருங்கைக்காய், வெண்டைக்காய், வாழைக்காய், (இன்னும் பல) என ஒரு பெரிய பட்டியலே நீளும். இவற்றை நாட்டுக்காய் என்பார்கள். (நாட்டுக்காய் – இந்த நாட்டின் காய்) இவற்றில் உதாரணத்திற்கு கானகத்தில் கத்திரிக்காய் என்றால் கத்தரிக்காய் போல் தோற்றம் தருகிற காய்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் தாவர அறிவியல் முறையிலே ஆய்வு 'சோதனை' (Experiment) செய்து பார்த்த பிறகல்லவா ஒரு கத்தரிக்காய் நம் சமையலுக்குள் வந்திருக்கவேண்டும். இதேபோன்று ஏனைய பழவகைகள், தானிய வகைகள், பயறு வகைகள், கீரை வகைகள், எண்ணெய் வகைகள் என்பன சமையலுக்கு வந்திருக்கவேண்டும்.

நாம் இன்று உணவுக்காகப் பயன்படுத்தப்படும் கீரை வகைகளைப் பட்டியல் போட்டால் பழந்தமிழர்தான் அதிக எண்ணிக்கையிலான கீரை வகைகளை சமையலுக்குக் கொண்டு வந்தனர் என்பது புரியும். கீரைகளைப் பட்டியல் போட்டால் அரைக்கீரை, முருங்கைக்கீரை, முளைக்கீரை, புளிச்சக்கீரை, பொன்னாங்கன்னி கீரை, வல்லாரைக்கீரை, வெந்தயகீரை, அகத்திக்கீரை என (இன்னும் பல) நீளும். கிழங்கு வகைகளை எடுத்தால் நம்மிடம் இருக்கிற கிழங்கு வகைகள் மேல் நாட்டினரிடம் இல்லை. நாம் உண்ணும் பயறு வகைகள், தானிய வகைகள், மருந்தாகவும், உடம்புக்கு ஊட்டமாகவும் உணவாகவும் இருக்கின்றன.

'எள்' என்ற தானியத்திலிருந்து ஆட்டி எடுக்கின்ற எள் எண்ணெயை 'நல்லெண்ணெய்' என்று உறுதிப்படுத்தியது எந்த ஆய்வில்? குளிரில் உறையாத எள் எண்ணெய் ஆகிய நல்லெண்ணெய் மனிதர்களின் இதயத்துக்கு கேடு செய்யாது என்றும் இதை உணவில் சேர்ப்பதோடு மேனியில் தேய்த்துக் குளிக்கலாம் என்றும் ஆராய்ந்து கண்டு வழங்கியது தமிழரின் அறிவியல் அல்லவா! இந்த அறிவியல் தமிழரின் சமையற்கலையில்

நாவுக்கு ருசியையும் உடலுக்கு ஆரோக்கியத்தையும் இரண்டையும் இணைத்த பல நன்மைகள் தந்திருக்கிறது.

உடல் ஆரோக்கியத்திற்காக தமிழ் ஞானிகள் தாவரங்களை, தாதுப்பொருட்களை, தானியங்களை, கனிகளை, பயறுகளை நுட்பமாக ஆராய்ந்தே பல மருந்துகள் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளார்கள். மரம், செடி, கொடிகளின் வேர், கிழங்கு பட்டை, காம்பு, இலை, காய், பழம் என்பனவற்றையெல்லாம் பல ஆண்டுகளாக ஆய்வு செய்து அவற்றின் தன்மைகளை ஆயிரக்கணக்கான பாடல்களில் எழுதித்தந்துள்ளார்கள். மேதைகளாகிய சித்தர்கள். இத்தகைய செய்யுள் நூல்களில் ஒன்றுதான் 'அற்புத சிந்தாமணி' என அழைக்கப்பட்ட 'பதார்த்தகுண சிந்தாமணி'. எவருக்கும் புரிகிற எளியதான சொற்களிலே பாடல்களாக சுவடியில் இருந்த இந்நூல் அழிந்து போனதாக சுவடி ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

தமிழில் பயன்பட்டுவரும் பழமொழிகளில் **கூட** மருத்துவம் இருக்கிறது. அவற்றைப் பார்ப்போம் ; ②

1. சுத்தம் சோறுபோடும்
2. பட்டினியே நன் மருந்து
3. உண்டி சுருங்குதல் பண்டிக்கு (வயிறு) அழகு. (இதுவே பிற்பாடு திரிந்து பெண்டிர்க்கு அழகு என வந்துவிட்டது.)
4. ஆயிரம் வேரைக்கொணர்ந்தவன் அரை வைத்தியன். (இதுவே ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என மருவியது).
5. கொழுத்தவனுக்கு கொள்; இளைத்தவனுக்கு எள்.
6. நீர் சுருக்கி, மோர் பெருக்கி, நெய்யுருக்கி உண்ணின் பிணிபோம்.
7. வில்வ பழம் பித்தம், பனம் பழம் பசி போக்கும்.
8. மாலை வெய்யில் மனிதனுக்கு நல்லது.
9. அகப்பை குறைய கொழுப்புக் குறையும்.
10. உண்ட பின் நூறு அடி உலாவி உறங்கு.

இதே போன்று 300க்கும் மேற்பட்ட மருத்துவம் சம்பந்தமான பழமொழிகள் இருக்கின்றன. அவற்றில் வேறு சிலவற்றைத் தருகின்றேன்.

1. சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை; தாய்க்கு மிஞ்சிய உறவும் இல்லை.
2. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
3. சீந்திற் சர்க்கரையையும் சுக்குத்துண்டையும் தேனோடு கலந்து முகர்ந்து பார்த்தால் தலைவலி போய்விடும்.
4. மாதுளை தூதுவளை வளர்ந்த வீட்டில் வயிற்றிலும் நெஞ்சிலும் களங்கமில்லை.
5. பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.
6. வயிறு சுருங்கினால் வாழ்வு பெருகும்.
7. குடலின் சுத்தமே உடலின் சுத்தம்.
8. தொந்தி வந்தால் தொல்லை வரும்.

இப்பழமொழிகளே மருத்துவம் சொல்கின்றன ; இவை சாதாரண மனிதர்களின் வார்த்தைகளாக வழிவழியாக வந்த மருத்துவம். ஆனால் எத்தகைய வார்த்தைகள்? வாழ்க்கையோடு தொடர்பானவை; இலக்கியத்தரமானவை. குழந்தையைத் தாலாட்டும்போதுகூட ஒருதாய், 'இஞ்சியும் ஏலமும் அரைத்து எட்டு சொட்டுத்தருவேன் கண்ணா! உன் வயிற்றுவலி போகும் மன்னா!' என்று தாலாட்டுப் பாடுகிறாள். அதில்கூட இலக்கியம் கலந்த மருத்துவம் இருக்கிறது.

உலகில் 4448 நோய் வகைகளுள்ளன எனக்கூறுவர். ஒரு வியாதிக்கு மருந்து கண்டால் புதுவியாதி வேறு வழியில் வரும். காரணம் இன்றைய வாழ்க்கை முறையும் நவீன மருத்துவமும் ஆகும்.

ஒரு காலத்தில் மனிதகுலத்தை வாட்டிய பாலியல் நோய்க்கு (Venereal Disease) மருந்து கண்ட மருத்துவ விஞ்ஞானி சொன்ன வார்த்தைகள்;

"நான் பால்வினை நோய்க்கு மருந்து கண்டுபிடித்து விட்டேன். கடவுள் இனிமேல் புதிய வழியைத்தான் தேட வேண்டும்!" அது இறைவனுக்கு அல்லது இயற்கைக்கு எதிராக விடப்பட்ட சவால். ஆனால் இது நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு வேறொரு பால்வினை (AIDS) நோய் உலகத்தையே பயமுறுத்துகின்றது. இந்த 'பால்வினை' நோயைப்பற்றி ஒரு குறிப்பு தமிழில் இருக்கிறது;

'பட்டமரம் போலாகும் மாந்தரால் வந்த
வெட்டை வன் மேகம்'

வெட்டை வந்தால் கட்டையோடு போக வேண்டியதுதான் என்பதே அக்குறிப்பு.

ஒழுக்கம் தவறிய மனிதரால் சமூகத்தை ஒட்டிக்கொண்ட நோய் இந்த எய்ட்ஸ் (AIDS). இது மருத்துவத்துறைக்கு (2004வரை) சவாலாக இருக்கிறது. உலக அளவில் இலட்சக் கணக்கான மக்களின் உயிரைக் குடித்த நோய். இந்நோய் உலகில் உள்ள எல்லா மருத்துவமுறைகளுக்கும் பெரும் சவாலாகவே இருக்கிறது.

உலக அளவில் எல்லா மருத்துவ முறைகளுக்கும் சவால்விடும் இன்னொரு பிணி 'ஒற்றைத் தலைவலி'. இந்த 'ஒற்றைத் தலைவலி'க்குச் சித்த மருத்துவம் மூலமாக 'சீத்தலைச் சாத்தனார்' என்ற புலவர் சங்ககாலத்தில் மருந்து சொல்லியிருக்கிறார். அது 'திருவள்ளுவமாலை' என்ற நூலில் காணப்படுகிறது.

ஆயுளை நீடிக்க காயகற்பம் என்ற மருந்தை உருவாக்கித் தமிழ்ச் சித்தர்கள் சாதனை செய்திருக்கிறார்கள்.

சங்க காலத்தில் போரில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு அத்திப்பாலை பயன்படுத்தியிருக்கிறார்கள். காயத்தின்மேல் அப்படியே அத்திப்பாலை அப்பியதால் காயமும் ஆறியது; காயத்தின் வடுவும் நீங்கியதாகச் சங்ககாலப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

மேலும் சித்த மருத்துவம் அகமருந்து–32, புறமருந்து – 32 என உள்ளது. பொடி (சூரணம்) குடிநீர், வடகம், தைலம், பற்பம், செந்தூரம், இளகம், இரசாயனம், அடை என்பன அகமருந்தாகும். நசியம், மை, நாசிகாபரணம், வேது, ஒத்தடம், கட்டு, கொம்புக் கட்டல், உறிஞ்சுதல், பூச்சு என்பன புறமருந்தாகும். இவையெல்லாம் தமிழர் மருத்துவத்தின் உட்கூறுகளாகும்.

நவீன அறிவியல் வளராத காலத்தில் மருத்துவக் கருவிகள் இல்லாதபோது பழந்தமிழ் வைத்தியர்கள் நாடி பார்த்தே (கைநாடி) நோய் பற்றி சொல்லி மருந்தும் கொடுத்தார்கள். பெண் கருவுற்றதைக்கூட கைநாடி பார்த்தே இன்றைக்கும் சொல்லக்கூடிய மூதாட்டிகள் தமிழ் மண்ணிலே இருக்கிறார்கள். இவர்களை அரவணைத்து ஆதரிக்க வேண்டும். ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னர் நாடி வைத்தியமே தமிழர்களிடையே புகழ் பெற்று இருந்தது. நாடி பார்த்து, கண்களைப் பார்த்து, முகம் பார்த்து நோய் சொன்ன வைத்தியர்கள் சித்தர்கள் வழியில் இருந்திருக்கிறார்கள். இன்றைக்கும் இருக்கிறார்கள். அவர்களின் வைத்திய முறை வியப்பானதாக இருந்தாலும் அவையெல்லாம் தமிழர் வைத்திய அறிவியலுக்கு சான்றுகளாகும்.

சித்த மருத்துவம் :

சித்தர் என்ற சொல்லுக்குச் சித்தமானவர்கள் என்றும் பொருள் உண்டு. அவர்கள் அறிவியலை ஞானமாக்கியவர்கள். அவர்கள் மனித வாழ்க்கைக்குச் சித்தமானதைக் கண்டு சொன்னார்கள். உணவை உண்பதில் மருத்துவம் சார்ந்த நெறிமுறைகளை ஏற்படுத்தினார்கள். சுக வாழ்வுக்காக அறிவியல் ரீதியான சில வழக்கங்களை ஏற்படுத்தினார்கள். அவ்வாறு வந்தது தான் மனிதனின் தலைமுடி அளவு குறைவாய் இருத்தல் என்பது ஆரோக்கியமானது என்பது அவர்களின் கண்டுபிடிப்பு. மேலைநாடுகளில் பெரும்பாலான ஆண்கள் தலையில் அதிக முடியையும் பெரிய மீசையையும் வைப்பதே இல்லை.

தமிழகத்தில் சிலர் 'சாதி' ரீதியாக தலையில் இருந்து கால்வரை ஆண்கள் முடி வெட்டிக்கொள்வர். வேறுசிலர் மீசை வைத்துக் கொள்வதில்லை. முடி குறைவாய் இருத்தல் ஆரோக்கியமானது எனத் தெரிந்துதான் அவ்வாறு செய்தனர். வேறு சிலரிடம் 'மொட்டை' போடுகிற பழக்கம் இருந்தது. தொடக்கத்தில் இறந்து போன தாய், தந்தையருக்காகப் போட்டனர் மொட்டை. பிறகு குலதெய்வத்துக்கு மொட்டை போட்டனர்.

பிறகு விருப்பத் தெய்வத்துக்காக மொட்டை போட்டனர். இன்று இறை நேர்த்திக் கடனாக மொட்டை போட்டனர். அரசியல் தலைவரின் வெற்றி தோல்விகளுக்காகவும் மொட்டை போட்டனர். சிலர் வெய்யில் காலங்களில் மொட்டை போட்டனர். எது எப்படியோ தொடக்கத்தில் அறிவியல் ரீதியில் மலர்ந்த முடி குறைக்கும் இப்பழக்க வழக்கங்கள் பிற்பாடு வேறு வேறு அர்த்தங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆடவர்கள் இடுப்பில் கட்டுகிற அரைஞாண்கயிறு ஒரு நோய் தடுப்பு முறையாக வந்திருக்கிறது என்பது இன்று பலருக்குத் தெரியாது. ஆடவர்களுக்குப் பொதுவாக 90 விழுக்காடு குடல் இறக்க நோய் (Hernia) வருவதுண்டு. அந்நோயைத் தடுக்கவே இடுப்பில் அரைஞாண்கயிறு முன்பெல்லாம் கட்டுகிற பழக்கம் தமிழர்களிடையே இருந்தது. பிறகு அக்கயிறு வெள்ளிக்கொடியாக மாறியது. இன்றைக்கு அநாகரிகம் எனக் கருதி அரைஞாண்கயிறும் கட்டுவதும் குறைந்து விட்டது. பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே இந்நோய் வரும் என்பதால் அவர்கள் அரைஞாண்கயிறு கட்டுவதில்லை.

தாய்ப்பால் குழந்தைக்கு மிக அவசியம் எனக் கண்டவர்கள் பழந்தமிழர்கள். தாய்ப்பாலைத் தவிர வேறு எந்த பாலுமே அதற்கு ஈடாகாது. இன்றைக்கு மேல்நாடுகளில் தாய்ப்பால் குழந்தைக்குக் கொடுக்கும்படி வலியுறுத்தி வருகின்றார்கள். ஆடும், மாடும், நாயும் தாய்ப்பாலை தம் குட்டிகளுக்குக் கொடுக்கிறபோது மனிதர் மட்டும் ஏன் மாற்றுப்பால், மாட்டுப் பால் தேடுகின்றனர். குழந்தை பிறந்ததும் இயற்கையாகவே தாயின் மார்பில் பால் சுரக்கும். அது குழந்தை குடிக்கத்தான். அதனைக் கொடுக்காமல் விடுவது நாகரிகம் என்றும் மேனி அழகுக்கு நல்லது என்றும் நினைக்கின்றனர் சிலர். ஆனால் இவ்வாறு பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்காமல் விடுவதால் மார்பக புற்றுநோயே வருகிறதாம். இது எதனைக் காட்டுகிறது? இயற்கையாகவே உடலில் இயங்கும் செயற்பாடுகளுக்கு எதிரான முயற்சிகள் எதிர்விளைவுகளை உண்டாக்கும் என்பதைத்தான்..!

நிலத்தின் இயற்கையை எதிர்ப்பதால் மழை குறையும். உடலின் இயற்கையை எதிர்ப்பதில் நலம் குறையும். உடலின் இயற்கைத் தன்மையோடு ஒத்துப் போனால் வாழ்வு இனிக்கும்.

இயற்கையான ஆண், பெண் உறவுக்குக்கூட போதை மருந்துகளை உட்கொள்கிறார்கள். இது தொடக்கத்தில் அதீத இன்பமாக இருந்தாலும் அந்தப் போதை வாழ்க்கையின் நலப்பாதையையே முடக்கிவிடும். கர்ப்பம் தரிக்காமல் இருக்க இயற்கைக்கு எதிராக ஊசி போட்டுக் கொள்கிறார்கள். மாத்திரை சாப்பிடுகிறார்கள். இவற்றால் உடலில் பக்க விளைவுகள் ஏற்படும். ஆனால் இந்த உடலே கர்ப்பம் தரிக்காமல் இருக்க இயற்கையான முறையில் சில வழிகளைச் சொல்லியிருக்கிறது.

வாரத்தில் ஒருநாள் மாதத்தில் பலநாள் பட்டினி(சிலநோயாளிகள் தவிர்ந்த)யாய் இருப்பது உடலுக்கு நல்லது என்பது பழந்தமிழரின் மருத்துவம். பட்டினி இருப்பதால் உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற முடிகிறது. நோய் எதிர்ப்பாற்றலை மிகுதிபடுத்தலாம். நோய்க்கிருமிகள் பரவாமல் தடுக்கலாம். உடலில் உள்ள மோசமான கிருமிகளை அழிக்கலாம் என்பது ஒரு நம்பிக்கை. இவற்றை நினைவில் கொண்டு தான் தவஞானிகள் உண்ணா விரதத்தையும் பேசா விரதத்தையும் ஒருநாள் (வாரம் ஒருமுறை) பின்பற்றினர்.

அதிகாலை துயில் எழுதல் உடல் நலத்திற்கு நல்லது. நீண்ட வயது வாழ்ந்தவர்கள் பெரும்பாலானவர்கள் அதிகாலை எழுபவர்களாகத்தான் இருப்பார்கள். அதிகாலையில் காற்று தூய்மையாக இருக்கும். சுத்தமான பிராண வாயு தெருக்களில் அப்போது கிடைக்கும். குறிப்பாக மார்கழி, தை மாதங்களில் மிக நல்ல தரமான பிராணவாயு கிடைக்கும். இது பூமி சுழற்சியினால் ஏற்படும் செயல். எனவேதான் இதனை சுவாசிக்கும் பொருட்டு ஆண்கள் மார்கழி பஜனைக்குப் போக வைக்கப்பட்டார்கள். பெண்களை வீட்டு வாசலில் கோலம் போட வைத்தார்கள்.

கோலம் போடுவது பண்பாட்டு மரபு. அதே நேரத்தில் நம் கண்ணுக்குத் தெரியாத சிறிய உயிரினங்களுக்கு உணவுக் கொடை இடுவதே முக்கியமானது. ஆனால் இன்று தானிய மாவைத் தவிர்த்து வெள்ளைக்கல்லை அரைத்து மாவாக்கி கோலம் போடுகிறார்கள். இதனால் எறும்புகள் ஏமாந்தது நமக்குத் தெரியுமா என்ன? அதே நேரத்தில் இந்த வெள்ளைக் கல் மாவு காற்றிலே கலந்து மனிதர்களின் மூச்சிலே இணைந்து நலத்திற்கு கேட்டை விளைவிக்கும். எத்தனை பேர் இதனை உணர்ந்தோம்?

நம்மை அறியாமலே நம் தெருக்களில் வளரும் வேப்பிலை மரம் செய்யும் நன்மை தெரியுமா? அது காற்றைத் தூய்மைப் படுத்துகிறது. நிழல் தருகிறது. தொற்று நோய்களைத் தடுக்க உதவுகிறது. அம்மை நோய் கண்டவர்களுக்கு வேப்பிலைப் படுக்கை சுகமானது. வயிற்றுப்புண், குஷ்டம், சர்க்கரை நோய்களுக்கு அதன் இலைகள் அருமருந்து. எனவே தான் தமிழர்களோடு வேப்பமரம் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது.

வில்வ இலையில் மருத்துவம் இருக்கிறது. உடலில் உள்ள ஐம்பூதங்களை சமநிலைப்படுத்துவது அதன் தீர்த்தம். எனவேதான் சில கோயில்களில் வில்வ இலை தீர்த்தம் வழங்கப்படுகிறது. வாழைப்பழம் புத்திசாலிகள் சாப்பிடும் பழம். ஏழைகளின் ஆப்பிள். உண்பவருக்கு பல நன்மைகள் இப்பழத்தால் கிடைக்கின்றன. இது பழந்தமிழரின் பண்பாட்டுப் பழமாகவும் இருக்கிறது. அதேபோன்று அந்தப் பழம் தரும் வாழைமரம் தமிழர்களின் பண்பாட்டு மரமாகயிருக்கிறது. அதன் இலையில் உண்பது சுவைக்கு மட்டுமல்ல நலத்திற்கும் உதவுகிறது. சுற்றுப்புறச் சூழலுக்கும் நண்பனாக இருக்கிறது. தொடர்ந்து வாழை இலையில் உண்பவர்களின்

கண்களுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். அதன் தண்டுகள் சிறுநீர்க்கல் அடைப்புகளை நீக்கும். எனவே தான் மருந்தாகப் பயன்படுகிற மரங்களை பழந்தமிழர் வீட்டுத் தோட்டத்துக்குள் கொண்டு வந்தனர்.

தமிழரின் வீட்டுத் தோட்டத்து மரங்கள், செடிகள், கொடிகள் உணவிற்கும் மருந்திற்கும் பயன்படுகின்றன. ஆனால் இன்றைய மேல்நாட்டு நாகரிகத்தில் வெறும் அழகுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்ட மரம், செடி, கொடிகளே வீட்டுத் தோட்டத்தில் இருக்கின்றன. வீட்டுத் தோட்டத்தில் கறிவேப்பிலை இருந்தால் சாம்பாருக்கு உதவும். துளசிச் செடியின் இலைகள் வாயில்போட்டுமெள்ள உதவும். இஞ்சிச் செடியில் கிடைக்கும் இஞ்சி செரிமானத்திற்கு உதவும். மஞ்சள் செடியின் மஞ்சள் பூசிக்குளிக்க உதவும். மஞ்சள் சிறந்த ஒரு கிருமி நாசினி (Antiseptic). ஆகவேதான் மஞ்சள் தூளைத் தண்ணீரில் கரைத்து வீட்டு வாசலில் தெளிப்பார்கள். கிராமத்து திருவிழாக்களில் மஞ்சள் நீராட்டுதல் ஒரு அர்த்தத்தோடு வந்ததுதான்.

வீட்டுத் தோட்டத்தில் நிற்கும் முருங்கைக்கீரை ஆண்மையைப் பெருக்கும். கீழாநெல்லி மஞ்சள்காமாலை நோய்க்கு மருந்தாகும். அந்த மருந்து ஆங்கில மருந்தைவிட பலனை அள்ளித்தரவல்லது. அதன் சக்தி உணர்ந்த மேல்நாட்டு விஞ்ஞானிகள் கீழாநெல்லியை மாத்திரையில் கொண்டு வந்துள்ளனர். இது தமிழர் மருத்துவத்திற்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

தமிழர் மருத்துவம் (சித்த மருத்துவம்) என்பது தமிழ் மண்ணோடு தமிழர் பண்பாட்டோடு இணைந்தது. மேல்நாட்டினர் இந்த தமிழ் மண்ணில் கால் வைக்கும் வரை தமிழர்களுக்கு சித்தமான மருத்துவம்தான். உண்மை இவ்வாறு இருக்க நாகரிகம் என்று சொல்லிக்கொண்டு மேல்நாட்டுப் பண்பாட்டை கண் மூடித்தனமாகப் பின்பற்றுவது அறிவான செயலாக இருக்காது. நாகரிகம் என்ற சொல்லே தவறுதலாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பது கூட நாகரிகக் குறைவு இன்று என நினைக்கிறார்கள். நடவாதவன் நசலாளி (நோயாளி) என்பது தமிழர் மொழி; நடப்பவன் திடமானவன். ஏறினால் வண்டி. இறங்கினால் வண்டி, என்பது ஆடம்பரத்திற்கு உதவும். உடல் நலத்திற்கு உதவாது. நடப்பதே மிகப் பெரிய பயிற்சி.

ஜப்பானில் வேலை முடிந்து வீட்டுக்குப் போகிறவர்கள் பேருந்தில் இறங்கி நடப்பதற்காக இரண்டு அல்லது மூன்று தரிப்புக்கு (Bus Stop) முன்னே இறங்கி விடுவார்களாம். வைத்தியர்கள் கணிப்பில் நடைப்பயிற்சியே சிறந்ததாகும். நடக்கத் தெரிந்தவன் பிணியைக் கடக்கத் தெரிந்தவன்.

ஆக தமிழர்கள் மருத்துவத்தில் முன்னோடிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள். சுண்டைக்காய் தொடக்கம், வல்லாரை, துளசி, வாழைத்தண்டு, வேப்பிலை, கற்பூரவல்லி, சுக்கு, இஞ்சி, மிளகு, மஞ்சள்,

பூண்டு, தேன் என மேலும் நீளும் பட்டியலில் இருப்பவை உணவாகவும் மருந்தாகவும் கண்டறிந்தவர்கள் பழந்தமிழர்கள்.

தமிழர் மருத்துவமாகிய சித்த மருத்துவம் 2,50,000 மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் பேசுகிறது. இவற்றை நாம், ஆங்கில மருந்து என்பனவற்றை மட்டும் நம்பிக்கொண்டு புரிந்து கொள்ளாதது பெரிய தவறு. சித்த மருத்துவம் பக்க விளைவும் (Side Effect) அல்லது பின்விளைவு (Reaction) இல்லாத மருத்துவம். இந்த நாட்டின் இயற்கை சூழலுக்கேற்ப தட்ப–வெப்பநிலைகளுக்கேற்ப, கால மாற்றங்களுக்கேற்ப இயற்கையாகக் கிடைக்கின்ற இலைகள் அல்லது பொருள்களையே மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளே அவைகள். அதே நேரத்தில் இயற்கை விதிகளுக்குட்பட்டு இயற்கை நெறியோடு உணவினை உண்ணுவதே உடலுக்கு நலம் சேர்க்கும் என்கிறது சித்த மருத்துவம். எனவே தமிழ்ச் சித்தர்களின் சித்த மருத்துவத்தைப் பயன்படுத்த சித்தமானால் அது நம்மை நிச்சயம் வாழவைக்கும்.

சித்த மருத்துவம் ஆதித்தமிழரோடு வந்த மருத்துவ அறிவியல்; அதனை இன்னும் தமிழர்கள் பரவலாக புரிந்துகொள்ளாமையே வியப்பானது.

மேற்கோள் நூல்கள்

① தமிழின் சிறப்பு, கி.ஆ.பெ.விசுவநாதம், பாரிநிலையம், சென்னை – 1993.

② பழமொழிகள், கி.வா.ஜ தொகுப்பு, சென்னை.

9 - இலக்கியம்

இலக்கியம் ஒருமொழிக்கு மிகமிக அவசியமானது. இலக்கியம் இல்லாத மொழியைப் பார்க்கமுடியாது. எழுத்துக்கள் இல்லாத மொழிகளில்கூட புராணக்கதைகள், பாடல்கள், குட்டிக்கதைகள் என்பன இலக்கியமாக வாய்வழியே சொல்லி செவிவழியே கேட்டுப்பாதுகாத்து வருகிறார்கள்.

இலக்கியம் என்றால் பலர் பண்டிதர்களுக்கும், தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் உரியது என நினைக்கிறார்கள். அத்தகைய நினைப்பினால் வைத்தியம், பொறியியல், கணக்கியல், கணினியியல் போன்ற துறைகளில் படித்த தமிழர்கள்கூட இலக்கியத்திற்கும் நமக்கும் தொடர்பில்லை என முடிவுகட்டிவிட்டார்கள். எனவே அவர்கள் இலக்கிய விழாக்களை எட்டிப்பார்ப்பதில்லை. அவர்கள் பழந்தமிழ் இலக்கிய நூல்கள் வெண்பா வடிவத்தில் இருப்பதால் படித்துப் புரிந்து கொள்ளவில்லை என்று ஒதுங்கியதில் நியாயம் இருக்கலாம். ஆனால் அதே வெண்பா இலக்கியம் புரியும் உரைநடையில் வந்தும் அவற்றை ஒதுக்குவதில் நியாயம் உண்டா?

இலக்கியம் என்றால் என்ன? ஒரு குறிக்கோளுடன் இயம்புவது அல்லது சொல்வது என்று அர்த்தமாகும். இலக்கியம் என்ற சொல்லைப் பிரித்தால் அது இலக்கு + இயம்பு என வரும். அதாவது குறிப்பிட்ட ஒரு இலக்கை வைத்து இயம்புவது, குறிப்பிட்ட ஒன்றை பற்றிய விவரணம்; அல்லது கலைநயம் தோன்ற ஏதேனும் ஒரு வடிவத்தில் எழுதி வெளிப்படுத்துவதும் படைப்பு என்று கொள்ளலாம். தமிழில் அரும்பெரும் இலக்கியங்கள் இருக்கின்றன. அதனால் தமிழ் மொழியின் இலக்கியச்சிறப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது.

தமிழ் இலக்கியத்தின் வரலாறு 25 நூற்றாண்டுகளாகும் என இந்திய சாகித்திய அகடமி வெளியிட்ட பேராசிரியர் மு.வதராசனார் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூல் சொல்கிறது. வேறு பல தமிழ் ஆய்வறிஞர்கள் தமிழ் இலக்கியத்தின் வரலாறு 3000 ஆண்டுகளுக்குமேல் என்று சொல்கின்றனர். தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழ் நூல்கள் இருந்தன என்ற ஆய்வுச் செய்தி அதனை உறுதி செய்கிறது.

① 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதியாக நம்பப் பெறுகிற நூல்களில் அகத்தியம் முக்கியமானது. அது ஓர் இலக்கண நூல். அந்நூலும் அதுபோன்று பல நூல்களும் கடற் கோள்களினால் அழிந்துவிட்டன. தென்னிந்தியாவின் மற்ற திராவிட மொழிகளின் இலக்கியங்கள் கி.பி.எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு உருவானவை. ஆனால் அதற்கு முன்னரே தமிழ் இலக்கியம் சிறப்புற்று இருந்ததை உறுதியாகச் சொல்லலாம். இந்தியாவில் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இருமொழிகளுக்கு

மட்டுமே மிகப் பழமையான இலக்கியங்கள் இருக்கின்றன. மேலும் இந்தியாவிலேயே தமிழ் மொழியில் மட்டுமே சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிருஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களின் இலக்கியங்களும் இருக்கின்றன. தமிழ் மொழி இலக்கியத்தை வளர்த்ததில் இந்த ஆறு சமயத்திற்கும் சமயம் சார்ந்தவர்களுக்கும் பெரும்பங்கு இருக்கின்றன.



தம்பிரான் வணக்கம் புத்தகத்தின் முகப்பு

கிறிஸ்தவ மதம் பரப்ப வந்த மேல்நாட்டு பாதிரியார்கள் தமிழர்களோடு தமிழில் உரையாடி தமது நோக்கத்தை நிறைவேற்றவே தமிழ் கற்கத் தொடங்கினார்கள். அவர்களின் நோக்கம் தமிழ் படித்து தமிழர்களிடையே கிறிஸ்தவத்தைப் பரப்புவது மட்டுமே என்பதே. ஆனால் தமிழ்ப் படிக்க முனைந்த மேல்நாட்டு பாதிரியார்கள் தமிழ் இலக்கியத்தில் மயங்கி குறிப்பாக திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றில் வியந்து தங்களை தமிழ் அறிஞர்களாகவே உயர்த்திக் கொண்டார்கள். அவர்கள் தமிழ் படித்தபோது இன்றைய உரைநடை இல்லை. ஆயினும் தமிழ்ப் படித்து தேர்ச்சி பெற்று தமிழில் நூல்கள் எழுதுமளவுக்கு உயர்ந்தார்கள். அவர்களில் ②போர்ச்சுகல் நாட்டு அண்டிறிக்கி பாதிரியார் (1520–1600) என்பவரால் தம்பிரான் வணக்கம் என்னும் நூல் 20.02.1557 அன்று தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு 20.10.1578 அன்று கொல்லம் சேவியர் கல்லூரியில் முதன்முதலில் அச்சிடப்பட்டது. தமிழ்மொழியில் அச்சிட்ட முதல்நூல் 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூலேயாகும். (மூலநூல் போர்த்துக்கீசிய மொழியில் புனித சேவியர் என்னும் கிறித்துவ பாதிரியாரால் எழுதப்பட்டது). அவ்வாறு கிறிஸ்துவ பாதிரியார்கள் எழுதிய நூல்களும் தமிழ் இலக்கியமாகப் போற்றப்படுகின்றன. ஆக இலக்கியம் மக்களைச் சார்ந்தது. மக்களுக்காக மக்களை உயர்த்துவதே இலக்கியம்.

ஒரு பிரெஞ்சு பேராசிரியரிடம், 'எது இலக்கியம்?' என்று கேட்டபோது வந்த பதில்; 'நாட்டை, மொழியை, மக்களை முன்னே வைத்து செய்யப்பெறும் எழுத்துக்களே தலைசிறந்த இலக்கியங்கள்' என்பதே. தமிழில் தமிழை மனிதர்களை உயர்த்தும் இலக்கியங்களே அதிகமாக இருக்கின்றன. ஆகவேதான் அதன் ஆளுமை இன்றைய விஞ்ஞான எந்திரமய வாழ்விலும் ஊடுறுவ முடிகிறது.

தமிழின் சிறப்பு இயல், இசை, நாடகம் என மூன்றாய் மிளிர்கிறது. மூன்றும் தமிழுக்கு நெருக்கமானது. நெடுங்கணக்கு உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து என மூன்றாகிறது. மெய்யெழுத்துக்களில் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றில் மிளிர்கிறது. திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என மூன்றே முக்கியமாகிறது. இவ்வாறு தமிழில் மூன்றாய்ப் பார்க்கிற சிறப்பு இனிமையானது. மொழிக்கு வலிமையானது. கீழே உள்ளவை அவற்றைச் சிறப்பாய் உறுதி செய்யும்.

மூவேந்தர்	–	சேர, சோழ, பாண்டியன்
முக்கொடி	–	வில், புலி, மீன்
முப்பழம்	–	மா, பலா, வாழை
முப்பொருள்	–	அறம், பொருள், இன்பம்
முந்நீர்	–	மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர்
முப்படை	–	குதிரைப்படை, யானைப்படை, ஆட்படை
முச்சங்கம்	–	முதல், இடை, கடை

மும்முரசு – வெற்றிமுரசு, கொடைமுரசு, நியாயமுரசு

முப்புலவர் – வள்ளுவர், கம்பர், இளங்கோ

இவையெல்லாம் தமிழின் சிறப்பை வகைப்படுத்திச் சொல்லப்பட்டவையாகும்.

முதல், இடை, கடை எனச் சொல்லப்பட்ட மூன்று சங்கங்களில் புலவர்கள், நாடாளும் மன்னர் தலைமையில் கூடித் தமிழின் வளம் பெருக்கியுள்ளனர். அக்காலத்தில் மன்னர், மந்திரி, தளபதி சகிதம் கூடி தமிழ் வளமை பேசுவது அரசசபை வழக்கமாகும்.

இத்தமிழ்ச்சங்கங்கள் மூலம் அரங்கேறிய தமிழ் நூல்கள் பல. ஆனால் முதல், இடைச் சங்கங்களை நடத்தி வந்த தலைநகரங்கள் கடற்கோள்களால் அறிவுற்றதனால், அக்காலத்தில் இருந்த நூல்களும் மறைந்து போயின. இன்று நமக்குப் பெருஞ்செல்வமாய் எஞ்சியிருப்பது மூன்றாம் சங்ககால நூல்களும் எஞ்சிய நூல்களுமே.

அக்காலத்தில் தமிழ் நூல்களை முன்னோர் பனைஓலைகளில் எழுதிவைத்தனர். ஒவ்வொரு புலவரிடமும் சிலநூல்கள் பனைஓலைப் பிரதிகளாய் இருக்கும். எனவே அவற்றை அவர்கள் எளிதில் பிறருக்குக் கொடுக்கமாட்டார்கள். அவர்களின் மறைவுக்குப் பிறகு குடும்பத்தில் தமிழறிவு இல்லாதபோது அந்த ஓலைச்சுவடிகள் பரணிமீது ஏறும். பிறகு அவற்றை எடுத்துப் பிரிப்பார் இல்லாமையினால், அவை மடிந்து மக்கிப் போதலும் பூச்சியால் அழிவுற்றதும் உண்டு. இவ்வாறு கவனக்குறைவினால் அழிந்த தமிழ்நூல்கள் கணக்கில் அடங்காது. எஞ்சியிருந்த ஓலைச்சுவடிகளும் தமிழகத்தில் ஆங்காங்கே கோயில்களில் வீடுகளில் குகைகளில் மறைந்து கிடந்தன. அவற்றைத் தேடிப்பிடித்து அச்சுக்குக் கொண்டுவந்த தமிழ் அறிஞர்கள் பலர். அவர்களில் சி.வை.தாமோதரன் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர் ஆகியோர் முன்னணி வகித்தவர்கள். அவர்களின் பங்கு அளப்பரியது.

ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சுக்கு வந்த இலக்கிய வரலாறு பற்றிய சரியானத் தகவல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த தகவல் அடிப்படையில் பார்க்கிறபோது ③கி.பி.1812–ல் சென்னையில் வாழ்ந்துவந்த தஞ்சை மாநகரைச் சேர்ந்த மலையப்பன் என்பவரின் மகன் ஞானப்பிரகாசன் என்பவரால் **'திருக்குறள் மூலபாடம்'** என்னும் தலைப்பில் 'மாசதினசரிதை'யின் அச்சகத்தில் மர அச்செழுத்துக்களால் பதிக்கப்பட்ட இத்திருக்குறள் நூல்தான் முதன்முதலாக சுவடியிலிருந்து அச்சேறிய பண்டைத்தமிழ் இலக்கியமாகும். இத்திருக்குறளுடன் நாலடியாரும் சேர்த்தே பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இத்திருக்குறள் அச்சேறியதிலிருந்து ஏறத்தாழ 43 ஆண்டுகள் கழித்த பின்னே (1855ல்) உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் பிறந்தார்கள். இக்கால இடைவெளியில்

பல்வேறு தமிழ் அறிஞர்களால் நன்னூல், திருவாசகம் (1836) கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணத்தில் பால, ஆரண்ய காண்டங்கள் (1844) என்பன சுவடியிலிருந்து அச்சேற்றப்பட்டன, ஆக பலதமிழ் அறிஞர்கள் இப்பணியில் ஈடுபட்டிருந்தாலும் சி.வை.தாமோதரம்பிள்ளை மற்றும் உ.வே.சாமிநாத ஐயர் ஆகியோரின் பணி பெரும் போற்றுதலுக்குரியது.



கி.பி.1812–ல் முதன்முதலில் அச்சான திருக்குறள் – மூலபாட முகப்பும் கடவுள் வாழ்த்துப் பகுதியும்

அவர்கள் யாவரும் பொருட்செல்வம் சேர்த்தவர்கள் அல்லர். தமிழ்ச்செல்வம் சேர்த்த செம்மல்கள். அவர்களோடு வாழ்ந்த ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் வேறு எதையோ தேடிக்கொண்டிருக்க இந்தத் தமிழ் அறிஞர்கள் ஓலைச்சுவடிகளில் அழிந்துகொண்டிருந்த தமிழ்க் காவியங்களை மீட்டனர். அவ்வாறு மீட்டு இந்தத் தமிழ் மக்களுக்கு விட்டுச்சென்ற சொத்து இன்று தமிழ் இனமே படித்து வியந்து கொண்டிருக்கும் சங்கத்தமிழ் நூல்களே!

ஓலைத்தமிழ் நூல்கள் :

தமிழ்மொழியின் சங்க இலக்கியத்தில் பழந்தமிழ் நூல்கள் பல இருந்ததற்கான ஆதாரங்களும் குறிப்புகளும் இருக்கின்றன. ஆனால் அவற்றில் பல நூல்கள் கிடைக்கவில்லை. சில அரைகுறையாகவே

கிடைத்துள்ளன. ஒரு அகத்தியம், முத்தொள்ளாயிரம், செயிற்றியம் ஆகிய நூல்கள் கிடைக்காதா என்ற ஏக்கம் தமிழ் அறிஞர்களுக்கு இருக்கிறது. இன்னும் கோயில்களில், குகைகளில் வீடுகளில் அற்புதமான பழந்தமிழ் இலக்கியங்கள் ஏடுகளில் உறங்கிக்கிடக்கின்றவோ? அவ்வாறு உறங்கிக் கிடந்த பல தமிழ்க் காவியங்கள் மொழிச்சொத்தாக தமிழ் அறிஞர்களால் வந்து சேர்ந்தன. இல்லாவிட்டால் அவைகள் கரையான் அழித்ததாகவும், தீயில் எரிந்ததாகவும், வெள்ளத்தில் போய்விட்டதாகவும் சொல்லிக் கொண்டிருப்போம்.



பழங்கால ஓலைச்சுவடிகள்

தமிழகத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு தைப்பொங்கலுக்கு இதுபோன்ற ஏடுகளை, வெள்ளத்தில் ஓடவிட்டு பலர் வேடிக்கைப் பார்த்திருக்கிறார்கள். சிலர் தீயில்போட்டு குளிர் காய்ந்திருக்கிறார்கள். இவ்வாறு எத்தனைக் காவியங்களைப் பறிகொடுத்தோமோ? ஆனால் அவ்வாறு பலதமிழ்க்காவியங்களை சங்ககால பாடல்களை பறிபோகாமல் தேடிஎடுத்துப் பாதுகாத்த தமிழ் அறிஞர்கள் சிலரே. அவர்களில் உ.வே.சாமிநாதஐயர் அவர்களுக்கு முன்னதாக 1868-ல் தொல்காப்பியத்தின் சில பகுதிகளை ஓலைச்சுவடியிலிருந்து அச்சில் பதிப்பித்தவர் சி.வை.தாமோதரம் பிள்ளை. அவர் இலங்கை

யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரி. சென்னையிலேயே தங்கியவர். அவர் புதுப்பித்த நூல்கள் பத்து. அவருக்கு முன்பாக 1847ல் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை முதலில் அச்சுக்கு கொணர்ந்தவர் மழவை மகாலிங்கம் ஐயர் அவர்கள்.

தமிழறிஞர் அ.பாண்டுரெங்கன் தமிழின் முதுபெரும் ④ இலக்கியமான தொல்காப்பியத்தையும் கலித்தொகையையும் கரையான்கள் வாயிலிருந்து மீட்டவர் சி.வை.தாமோதரம் பிள்ளை என்கிறார். அது முற்றிலும் உண்மை. அதனை கலித்தொகை பதிப்புரையில் அவரே எழுதுகிறார்;

'சிறு பிராயத்தில் எனது தந்தையார் கற்பித்த சில நூல்கள் இப்போது தமிழ்நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலையைத் தொட்டுப்பார்த்தால் அன்றோ தெரியவரும். கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகின்றது. ஏடுஎடுக்கும்போது ஓரம் சொரிகின்றது. ஒன்றைப் புரட்டும்போது துண்டாய்ப்பறக்கின்றது. இனி எழுத்துக்களோடு என்றால் வாலும் தலையும் இன்றி நாலுபுறமும் பானைக் கலப்பை மறுத்து மறுத்து உழுதுகிடக்கின்றது.'

அவர் (சி.வை.தா.) காலத்தில் அறிஞர்களும், தமிழ் அன்பர்களும், செல்வந்தர்களும் பழந்தமிழ் நூல்களின் பதிப்புப் பணியில் நாட்டம் செலுத்தவில்லை. பழைய ஏடுகளில் இருந்ததை புதிய ஏடுகளில் பெயர்த்து எழுதிவைக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கவே இல்லை. அவை அப்படியே பழைய ஏடுகளாக இருந்து மக்கி மடிந்து கொண்டிருந்தன. இந்நிலையைக் கண்டு சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் கண்ணீர்விட்டு எழுதுகிறார்.

'எத்தனையோ திவ்வியக் கிரத்தங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அழிகின்றன சீமான்களே! இவ்வாறு மறையும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சர்யம்! ஆச்சர்யம்! அயலான் அழியக்காண்கினும் மனம் தளும்புகின்றதே! தமிழ்மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்ன என்று வாளா இருக்கின்றீர்களே! தேசாபிமானம், மனிதாபினம், பாஷா(மொழி)பிமானம், இல்லாதோர் பெருமையும் பெருமையா? இதனை தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக!'

இவ்வாறு சொல்லில் அடங்காத துன்பங்களைச் சுமந்து சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர் ஆகியோர் பழந்தமிழ் நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து வெளியே கொண்டு வந்தார்கள். உ.வே.சாமிநாத ஐயர் பழந்தமிழ் இலக்கியம் எழுதப்பட்ட பனை ஓலைச் சுவடிகளைத் தேடி இன்றைக்குப் பலபத்து ஆண்டுகளுக்கு முன் தமிழகத்து கிராமங்கள், நகரங்கள்தோறும் வண்டியிலும் (மாட்டுவண்டி மற்றும் குதிரைவண்டி) கால்நடையாகவும் கடும்பயணம் மேற்கொண்டார். 1887-ல் சீவக சிந்தாமணியை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சு நூலாக்கினார்.

அதனைத் தொடர்ந்து அவர் பல நூல்களை இவ்வாறு அச்சேற்றினார். அவருடைய இடையறா முயற்சியால் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, பத்துப்பாட்டு, பரிபாடல், புறநானூறு, குறுந்தொகை எனப் பல அரிய, சங்ககால நூல்கள் ஓலைச்சுவடிகளிலிருந்து விடுதலையாகி அச்சுவாகனம் ஏறின. அவரின் இந்தப் பெரிய அரிய முயற்சியை நாமக்கல் கவிஞர். வெ.இராமலிங்கம் பிள்ளை நன்றியுடன் கவிதை மலர்களில் வாழ்த்துகிறார்.

அல்லும் பகல் நினைவெல்லாம் அது வேயாக
அலைந் தலைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடித் தேடிச்
சேகரித்து செருகலின்றி செம்மம் செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கி
சோர்வறியா(து) உழைத்த ஒரு சாமிநாதன்
இல்லையெனில் அவன் பதித்த தமிழ் நூலெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்திடாதே!

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பார்க்கின்றபோது தமிழ் இனமே சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர் போன்ற தமிழ் அறிஞர்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறது. அவர்கள் அந்நிய ஆட்சியில் சுயநலமாய் வாழாது தமிழ்நலமாய் வாழ்ந்தவர்கள். அவர்களின் வரலாற்றை தமிழை நேசிக்கத் தெரிந்த நெஞ்சங்கள் அறிந்திருக்க வேண்டும். அவர்களின் வரலாறு தமிழக்கு புகழாரம் சூடியது. அவர்களின் ஓட்டமும் நடையுமான முயற்சியில் கிடைத்த சங்ககால நூல்கள் தமிழின் புகழை உச்சிக்கு கொண்டு சேர்த்தன. அதே நேரத்தில் கடற்கோள்களினாலும், கரையான்களினாலும் அழிந்த அகத்தியம், ஆட்சிநூல், கணக்கியல், மந்திரநூல், கோள்நூல் (வானஇயல்), சிற்பநூல், பஞ்சமரபு, வளையாபதி, குண்டலகேசி என்பன நமக்கு கிடைக்கவில்லை.

இன்று பல்வேறு வகையான அழிவுகளுக்குப் பிறகும் நமக்குக் கிடைத்திருக்கும் நூல்கள் முப்பத்தாறு. அவை. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதிணென்கீழ்க்கணக்கு என்பனவாகும். இவை மூன்றாம் சங்க காலத்தில் உருவானவை.

பத்துப்பாட்டில் அடங்கிய நூல்கள் திருமுருகாற்றுப்படை, பெருநாராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவையே எட்டுத்தொகை. அடுத்து பதிணென்கீழ்க்கணக்கு. இதில் நாலடியார், நான்மணிக்கடிகை,

இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணை மொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பன உள்ளன. இது போக சைவ, வைஷ்ணவ, சமண, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்கள் சார்ந்த பல நூல்கள் சமய இலக்கியங்களாகத் தமிழுக்குப் பெருமை சேர்ந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் சமய கண்ணோட்டத்தோடு பார்க்காது இலக்கியமாகப் பார்க்கிறபோது தமிழின் இனிமை அதன் ஆழம் புரியும்.

கிறிஸ்தவ சமயப் பணிசெய்ய தமிழ்நாட்டுக்கு வந்த ஜி.யு.போப் தனது 80வது வயதில் மாணிக்கவாசகரின் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். அவர் அதனை சைவ சமய நூலுக்கு அப்பால் தீந்தமிழ் நூலாகக் கருதினார். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகாதவர்' என்ற வாய்மொழியை அவரும் படித்திருக்கலாம். உருகிவிட்டார். இல்லையேல் மதப்பணி செய்ய வந்த அவர் திருவாசகத்தை மொழிபெயர்க்க ஏன் காதல் கொண்டார்?

தமிழில் சங்ககால இலக்கியங்களாக 36 நூல்கள் இருக்கின்றன. இவை தமிழின், தமிழரின் மூல வேர்கள். இவை ஊடாகத்தான் பழந்தமிழரின் அரசியல், நீதி, கொடை, வீரம், பண்பாடு, காதல், சமூகவியல், வணிகம், வானவியல், ஆடை, கட்டிடக்கலை, மண்ணியல், நாட்டியம், இசை, மருத்துவம், அணிகலன், அளவியல், கடல்நாகரிகம், சிற்பக்கலை என பலதுறைகளைப் பார்க்கின்றோம். அவற்றில் எல்லாம் அறிவியலின் பரிணாமமும் கலந்தே இருக்கிறது. பழந்தமிழ் நூல்கள் அடங்கிய இலக்கியங்கள் தமிழ்மொழியின் அடித்தளம். அவற்றில் மிக உன்னதமான கருத்துக்கள் குவிந்துள்ளன. ஆனால் இன்று ஆங்கில மற்றும் பிறமொழி மாயையில் தமிழர்கள் அவைகளைத் தொடுவதே தேவையில்லாத வேலை என்ற உணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்கள். தாய்மொழி என்பது மரபுவேர் கொண்டது. பழந்தமிழ் இலக்கியம் இல்லாமல் தமிழ் இல்லை. இலக்கியம் மக்களுக்காக மக்கள் மேம்பட எழுதப்பட்டவை.

கண்ணகி என்ற பெண் போராளியை முன்னிறுத்தியது சிலப்பதிகாரம். கண்ணகி மனித உரிமைக்காகப் போராடிய முதல் பெண். இராமன் என்ற மானுடனை அறிமுகம் செய்தது கம்பராமாயணம். மானுடனை உயர்த்தியது திருக்குறள். வாழ்க்கைச் சித்தங்களைச் சொன்னது திருமந்திரம். மாதவி என்ற மாமங்கையின் புதல்வி மணிமேகலையின் துறவுத்தொண்டைச் சொன்னது மணிமேகலை. தொண்டர்களின் கதையைச் சொன்னது பெரிய புராணம். சங்கத்தமிழர்களின் வாழ்க்கையை விளக்கியது பத்துப்பாட்டு. சங்கத்தமிழர்களின் அகத்தைக் காட்டியது அகநானூறு; புறத்தைக் காட்டியது புறநானூறு. இல்ற வாசகத்தை தமிழ் வாசகமாக்கியது திருவாசகம். இப்படியே

மற்ற தமிழ் இலக்கியங்கள். எனவே தமிழ் இலக்கியங்களை உரைநடையிலாவது படித்துப் பார்க்கவேண்டும்.

வாசிப்பு மனிதனை பூரணமாக்கும். மேலைநாட்டில் நேரம் கிடைக்கும்போது நூல் படிப்பார்கள். நூல் படிக்கப் படிக்க அறிவின் வேல் கூர்மையாகும். அந்த அறிவைப் பெறுவதற்கு தாய்மொழி தமிழ் மிகமிக அவசியமாகும்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் அந்நூலின் முன்னுரையில் எழுதியதை இங்கே பொருந்திப் பார்க்கிறேன். 'வழக்கொழிந்து மாண்டுபோன மொழிகளாலும், பயன்மிக்க உள்ளது. சாம்பலின் தலைபோல் அவற்றின் தன்மை வாழ்கின்றது. ஆயினும் இன்றும் வாழும் பண்டைய மொழிகளே சிறப்புடையன. வைரம் பாய்ந்த அம்மரங்களிலிருந்து பூக்க இருக்கும் கனிகள் எத்தனையோ! எனவே தமிழர்கள் தங்கள் மொழி குறித்துக் கொண்டுள்ள தாழ்வு மனப்பான்மையினை ஒழிக்கவேண்டும்.'

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் அந்த மேல்நாட்டுத் தமிழ் அறிஞர் கூறிய அறிவுரை இன்றைய தமிழர்களுக்கும் பொருந்துவதாகும். இந்த தாழ்வு மனப்பான்மையால்தான் ஒப்பற்ற உயர்ந்த கருத்துக்கள் கொண்ட பழந்தமிழ் இலக்கிய நூல்களை உணராமல் இருக்கிறோம். வியக்காமல் இருக்கின்றோம்.

மேற்கோள் நூல்கள் :

① தமிழின் சிறப்பு : பாரிநிலைய வெளியீடு – 1993, சென்னை. கி.ஆ.பெ.

② தமிழ்மொழியின் முதல் அச்சுப்புத்தகம்–தமிழ்நாடன், செட்டியார் பதிப்பகம்–2001

③ ப.சீனிவாசன், கட்டுரை, நாளை விடியும் – சனவரி, பிப்ரவரி – 2004.

④ கட்டுரை : அ.பாண்டுரெங்கன், 5.1.97 தினமணி.

10. நுண்கலை

ஆயகலைகள் அறுபத்தி நான்கு; அவற்றில் ஒன்றான ஓவியக் கலையை 'கலைகளிலே ஓவியம்' என்றார் ஒரு திரைப்படப் பாடலில் கவிஞர் கண்ணதாசன். இந்த ஓவியக்கலை மிகப் பழமையான கவின் கலைகளில் ஒன்றாகும்.

பழங்கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்திய போது, தாம் கண்ட விலங்குகள், பறவைகள், மரங்கள், ஏனைய உயிரினங்கள் என்பனவற்றின் உருவங்களை வரைந்து மகிழ்ந்தனர். அவர்கள் தொடக்கத்தில் வெறும் கோடுகளால் வடிவங்களைத் தீட்டினார்கள். பிறகு இக்கோடுகளை இணைத்து ஓவியங்களை உருவாக்கினார்கள். சீன, ஜப்பான் எழுத்துக்கள் ஓவியம் போலவே இருக்கும். ஓவியம் என்பது கோடுகளின் நடனமாகும்.

ஆதிகால மனிதர்கள் குகைகளிலும், கற்பாறைகளிலும் வாழ்ந்தபோது வரிவடிவங்களை ஓவியங்களாகத் தீட்டினார்கள். பல ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட ஆஸ்திரேலிய ஆதிவாசிகளுக்கு இன்றும் கற்பாறை, மலைக்குகை ஓவியங்கள் மற்றும் வரிவடிவங்களே வரலாற்றுச் சின்னங்களாக இருக்கின்றன. அவர்கள் கற்பாறைகளில் மிருகங்களை பாம்புகளை கோடுகளால் ஆன ஓவியங்களாக தீட்டியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் கற்காலக் குகைகளிலே மிருகங்களை வேட்டையாடுவதையும் வேறுசில குறியீடுகளையும் காணக்கிடைக்கின்றன.

சங்க காலத்திலேயே தமிழர்களிடையே ஓவியக் கலைவளர்ச்சி நிலையில் இருந்ததற்கான சான்றுகள் சங்ககால நூல்களிலே சான்றுகளாய் இருக்கின்றன.

தமிழர் சம்பந்தப்பட்ட ஓவியங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே. அதாவது சுவரில் எழுதப்பட்ட ஓவியங்கள். மிகச்சில மரப்பலகைகளிலும், கிழி (துணிச்சீலை) களிலும் எழுதப்பட்டன. படம் என்று இப்போது வழங்குகிற தமிழ்ச்சொல், ஆதிகாலத்தில் துணியில் சித்திரம் எழுதப்பட்டதைத் தெரிவிக்கின்றது. படம் அல்லது படாம் என்பது சித்திரம் எழுதப்பட்ட துணிச்சீலை என்றும் அர்த்தமுடையது.

ஆதிகாலத்தில் உலகம் முழுவதும் ஓவியத்தைச் சுவர்களில் வரைந்தார்கள். அதனால்தான் 'சுவரை வைத்தல்லோ சித்திரம் எழுத வேண்டும்' என்றும் 'சுவரில்லாச் சித்திரம் பாழ்' என்றும் பல பழமொழிகள் உண்டாயின.

சங்க காலத் தமிழர்கள் ஓவியம் பற்றிய கலை சார்ந்த தெளிவு பெற்றவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அவர்கள் இசை, நாட்டியம்,

சிற்பம், கட்டிடம் என பல கலைகளைப் போற்றி வளர்த்தது போல் ஓவியக் கலையையும் வளர்த்தார்கள். எல்லா கலைகளிலும் ஈடுபாடு, ஆழமான அறிவு கொண்டதைப் போலவே ஓவியக் கலையிலும் அக்கறைக் காட்டினார்கள். அது பற்றிய குறிப்புகள் சங்க கால இலக்கியத்தில் இருக்கின்றன.

சித்திரம் வரையும் கோலுக்கு துகிலிகை (Brush) என்பது பெயர். நேர்க்கோடு, வளைந்த கோடு, கோணக்கோடுகளை வரைந்து சித்திரம் எழுதப்பட்டது. கோட்டினால் வரைந்த சித்திரத்துக்குப் பெயர் புனையா ஓவியம் (outline drawing) என்பது பெயர். புனையா ஓவியத்தைப் பலவித வண்ணங்களினால் புனைந்து அமைப்பது சித்திரம் என்று பெயர் பெறும். பழந்தமிழர் காலத்தில் சுவர் ஓவியங்களே சிறப்பாக வரையப்பட்டன. எனவே அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள் முதலான கட்டிடங்களின் சுவர்களின் மேல் சித்திரங்கள் எழுதப்பட்டன. வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கறுப்பு வண்ணத்தால் புனையா ஓவியம் வரைந்து, அப்புனையா ஓவியத்தைப் பல நிறங்களினால் புனைந்து, சுவர் ஓவியங்கள் வரையப்பட்டன.

அக்காலத்தில் கோயில்கள் யாவும் சுடுமண்ணால் அமைக்கப்பட்டவை ஆகும். அங்கிருந்த திருவடிவங்களும் சுதையினால் செய்யப்பெற்று வர்ணங்கள் தீட்டப்பட்டவையாக இருந்தன. அத்தகைய கோயில் வாயில்களில், கோபுரங்களில் வர்ணம் தீட்டப்பெற்ற உருவங்கள் இருந்ததை மணிமேகலையில் 'மலர் வனம் புக்க' காதையில் (மணிமேகலை– 3; 130–131) வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம் கண்டு' என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. ஆகவே மணிமேகலை காலத்தில் கண்கவர் ஓவியம் இருந்ததற்கான சான்று இதன் மூலம் தெரிகின்றது.

ஓவியம் என்ற சொல்லை மிகுந்த அழகு மிக்க பொருள் கொண்டதாக அன்றைய சான்றோர் வழங்கினர். ஓவியம் என்ற சொல்லுக்கு ஓவம், ஒவு ஆகிய சொற்களும் அதே கருத்தில் இருக்கின்றன.

அழகிய வீடுகட்கு ஓவியங்களை உவமை கூறினர். 'ஓவத்தன்ன இடனுடை வரைப்பு' எனப் பாரியின் அரண்மனையினைக் கபிலர் (பதிற்றுப்பத்து–61) பாராட்டினார். அதே போல் 'ஓவத்தன்ன உருகெழு நெடுநகர்' (பதிற்–88) 'ஓவத்தன்ன இடனுடை வரைப்பின்' (புறம்–251) 'ஓவத்தன்ன வினைபுனை நல்லில்' (அகம்–98) எனப் பல புலவர்களும் கூறியுள்ளனர். அழகிய பெண்களைப் பாராட்டிய புலவர்கள் ஓவியத்தின் அழகுக்கே ஒப்பீடு செய்துள்ளனர். 'வல்லோன் எழுதியன் காண்டகு வனப்பின் ஐயன் மாயோன்' என்று ஒரு பெண் வர்ணிக்கப்படுகிறாள். அழகிய இயற்கைக் காட்சிகட்கும் ஓவியமே உவமையாக்கப்பட்டது.

பூம்புகார் நகரத்து மாட மாளிகைகளில் அழகிய ஓவியங்கள் இருந்தன. அத்தகு மாளிகையாம் வெண் கோயில்கள், தேர்கள் ஓடுவதனால் எழும் தூளியால் மாசு படிந்து நீராடிய களிறு போன்று காட்சியளித்தன என்று பட்டினப்பாலை பாடுகிறது. மன்னரின் அரண்மனைகளில் சித்திரங்கள் வரையப்பட்ட மாடங்கள் இருந்தன. அத்தகைய சித்திர மாடத்தில் மாறன் வழுதி என்னும் பாண்டிய மன்னர் உயிர்விட்டான் என்பதை 'சித்திரமாடத்துஞ்சிய' என்னும் அடைமொழி காட்டி நிற்கிறது.

ஓவியம் புனையா ஓவியம், புனைந்த ஓவியம் என இருவகைப்படும். வண்ணம் தீட்டப்படாதது புனையா ஓவியம். வெள்ளாடை உடுத்தி எளிமையாக் காட்சியளித்த மணிமேகலையைப் 'புனையா ஓவியம் புறம் போந்தன்ன' என்று குறிப்பிடுவார் மணிமேலையை எழுதிய சீத்தலைச் சாத்தனார். ஆதிரையின் இல்லின் கண் அமுத சுரபியைக் கையிலேந்தி நின்ற மணிமேகலை புனையா ஓவியம் போலத் தோன்றினாள் என்பார் அவர். ஓவியம் அந்நாளில் வட்டிகைச் செய்தி எனப்பட்டது. (வட்டிகை – சித்திரம் எழுதும் கோல்) எட்டிக் ① குமரன் என்பவன் தன் காதலியுடன் யாழ் வாசித்துக் கொண்டிருந்தபோது ஏதோ சிந்தனையில் அசைவற்றிருந்தான் எனக் கூற வந்தவர்,

தகரக் குழலாள் தன்னொடு மயங்கி
மகரயாழி வான்கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்
எட்டிக்குமரன் இருந்தனன் என்றார்.

ஓவியக் கலைஞர்கள் 'கண்ணுன் வினைஞர்' என்றும் ஓவமாக்கள் என்றும் கூறப்பட்டனர். மேலும் பழந்தமிழர் சிறந்த ஓவியங்கள் வரைவதில் திறமையானவர்களாக, நுட்பம் தெரிந்தவர்களாக இருந்தார்கள் என்பதற்கு சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் என்பவர் ஓவிய நூல் இருந்ததாகத் தெரிவிக்கிறார். ஓவிய நூல் இருந்தால் ஓவியக்கல்வியும் இருந்திருக்கும். அதனை மணிமேகலைக் காப்பியம்,

நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்று துறைபோகிய பொற்றொடி நங்கை (மணி–2;30–32)

என்ற பாடல் வரிகளில் உறுதி செய்கிறது. இப்பாடல் வரியின் கருத்து; 'நாடகப் பெண்களுக்கென நன்முறையிலே வகுக்கப் பெற்ற ஓவியச் செந்நூல், உரைநூல் ஆகிய யாவையுமே கற்று அவற்றுள் கை தேர்ந்தவளாகி பொன்னால் ஆன தொடியினை அணிந்த நங்கையே' என்பதாகும். இதிலிருந்து பழந்தமிழகத்தில் ஓவிய நூலும் இருந்திருக்கின்றன என்பது உறுதியாகிறது.

தஞ்சை பெரியகோவில் ஓவியம்

ஓவிய உருவங்களில் நாட்டிய அபிநயங்கள் விரல் முத்திரைகள் வரையப்பட்டதால் பழங்கால நாடக மகளிர் ஓவியத்தில் பயிற்சியும் தெளிவும் பெற்று ஓவிய நூலையும் கற்றனர். இக்காலத்தில் அழகு மிக்க நிழல் படங்களை புகைப்படக் கருவி எடுத்துத் தள்ளும். ஆனால் அக்காலத்தில் நிழல்படங்களை கை தேர்ந்த ஓவியர்களே வரைந்தனர்.

சிலப்பதிகாரத்தில் பாண்டியன் (சிலம்பு – 22;8–11) அரியணையில் மடிந்ததை அறியாத ஆசிரியன், நிமித்திகன் மற்றும் பலரும் அவையில் பேச்சற்று திகைத்து நின்றதை 'ஓவியர்கள் வரைந்த நிழற்படங்களாய் இருந்தனர்' என்று பாடல் மூலம் இளங்கோ அடிகள் வர்ணிக்கின்றார் என்றால் ஓவியர்கள் நிழற்படங்களையும் வரைந்தனர் என்றுதானே அர்த்தம்?

மாதவி அரங்கேற்ற காதையில் மண்டபத்தின் மேல் விதானத்தில் ஓவியங்கள் இருந்ததாக (ஓவியவிதானத்து உரை பெறுநித்திலத்து) இளங்கோ அடிகள் எழுதியிருக்கிறார். மணிமேகலையில் ஓவியனின் ஓவியம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பாடல் வரிகள் சொல்கின்றன. அப்பாடலின்படி (மணிமேகலை – 5;3–8) கதை இதுதான் 'பளிங்கு சுவரின் புறத்தே அழகிய பூங்கொடி மணிமேகலையின் ஒளி பொருந்திய மேனி தெரியக் கண்டான் இளவரசன் உதயகுமாரன். முதலில் அதனை ஓவியப்பாவை என நினைத்தானாம் அவன். பிறகு அது ஓவியமன்று மணிமேகலை எனக் கண்டானாம்.

அப்படியானால் அழகான ஓவியங்கள், அவற்றை வரைய ஓவியர்கள் இருந்திருக்கிறார்கள் என்றுதான் நாம் இதன் மூலம் எண்ணத் தோன்றுகிறது.

கடைச் சங்க நூலான நற்றிணை சிலப்பதிகாரத்திற்கு முந்தியது. அதில் ஓவியங்களைப் பற்றி ஓவியர்களைப் பற்றி எதனால் ஓவியம் வரைந்தார்கள் என்றெல்லாம் (நற்றிணை–118) வருகின்றன. நற்றிணை ஓவியர்களுக்கு 'ஓவிய மாக்கள்' என்று பெயர் கொடுத்திருக்கிறது. இன்னொரு சங்க நூலான பரிபாடலில் சூரிய மண்டலம் பற்றியும், ரதி மன்மதன் கதை பற்றியும் ஓவியங்கள் உள்ளடங்கிய மண்டபத்தை 'எழுத்து நிலை மண்டபம்' எனச் சொல்கின்றனர். அதாவது ஓவியங்கள் அடங்கிய சித்திரமண்டபம் அல்லது ஓவிய மன்றம் இருந்திருக்கலாம். அவ்வாறானால் சங்க காலத்திலேயே ஓவியங்களுக்கு 'எழுத்து நிலை மண்டபம்' இருந்தது என்பதே பழந்தமிழரின் ஓவியக்கலை உச்சத்திற்கான அடையாளமாகும்.

சித்திரம் :

ஓவியங்கள் தூரிகையால் எழுதப்படும் கவிதை என்றான் ஒரு கவிஞன். ஓவியத்துக்குச் சித்திரம் என்றும் பெயர் உண்டு. ஒரு ஓவியம் பார்த்த மாத்திரத்திலேயே பார்ப்பவர் மனதைத் திருடிக் கொண்டால் அதுவே மிகச் சிறந்த ஓவியமாகும்.

ஓவியமும் சிற்பமும் மிக நெருங்கிய தொடர்புடையனவாகும். சிற்பக் கலைஞன் ஓவியக் கலைஞனாகவும் இருக்க வேண்டும். தாம் வடிக்க விரும்பும் உருவத்தினை உள்ளத்தில் நிறுத்தித் தம் கைவண்ணத்தைக் காட்டுதல் இருவருக்கும் பொதுவானது. செதுக்க விரும்பும் உருவத்தினை முதலில் கல்லில் ஓவியமாக வரைந்து கொள்வது அவர்களின் இலக்கணமாகும்.

ஓவியம் என்பது ஒன்றைப் பார்த்து வரைவது. ஏற்கனவே இருந்ததை வரைவது என எண்ணி விடக்கூடாது. ஓவியம் என்பது வரைதல் இலக்கியம். பேனாவில் எழுதுகிற எழுத்தைப் போல தூரிகையால் வரைகிற எழுத்து. அது மேலை நாடுகளில் ஒப்பற்ற கலையாகப் போற்றப்படுகிறது. இனி வரும் காலங்களிலும் மாபெரும் ஓவியனாகத் திகழப்போகிறவன் மைக்கல் ஏன்ஜலோ என்று ரோம் நாட்டு ஓவியனைப் புகழ்ந்தார்கள் ஆய்வாளர்கள்.

ஓவியம் ரசிப்பவரோடு மெதுவாகப் பேசும். மனித உள்ளத்தைப் பேனாவைப் போல் ஓவியனின் தூரிகையும் வருடும். மகாகவி பாரதி ஓவியர் இரவிவர்மாவை 'மன்னர் மாளிகையில் ஏழை மக்களின் குடிலில் எல்லாம் உன்னருந் தேசு வீசி உளத்தினைக் களிக்கச் செய்வான்' என்று பாராட்டிப் போற்றினான். பாரதிக்கு ஓவியக்கலை பற்றிய செய்திகள் நன்கு தெரியும்.

மேலை நாடுகளில் ஓவியக்கலைக்கு நன்கு மதிப்புண்டு. சாதாரண வீடுகளில் கூட ஓவியர்கள் வரைந்த ஓவியங்கள் மாட்டிவைக்கப்படுகின்றன. பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரியா போன்ற நாடுகளில் மிகச் சிறந்த ஓவியர்கள் தேசியப் புதல்வர்களாக மதிக்கப்படுகிறார்கள்.

நவீனக் கண்டுபிடிப்பால் புகைப்படக்கலை அறிமுகமாகி எங்கே ஓவியக் கலையே அழிந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்ட போது ஓவியக்கலையில் பல நவீனங்களைப் புகுத்தி ஓவியக் கலைக்குப் ② புத்துயிர் அளித்து நவீன ஓவியக் கலைக்கு வித்திட்டவர் 'பிக்காஸோ'. அவர் எந்த ஓவியமாக இருந்தாலும் சரி அதற்கு ஒரே ஓர் அர்த்தம்தான் உண்டு. அந்த அர்த்தம் அதை வரைந்த ஓவியர் கொடுத்த அர்த்தம் மட்டுமே என்கிறார்.

கோட்டோவியத்தில் தஞ்சை இசைக்கலைஞர்கள்

ஓவியக்கலை பழமையான இனங்களுக்கு சொந்தமானது. தமிழரின் ஓவியக்கலையும் பழமையானது. தமிழரின் ஓவியக் கலைக்கு ஒரு மரபு சார்ந்த பாரம்பரியம் இருந்திருக்கிறது. எனவே தான் அக்கால இலக்கியங்களில் அதன் மேன்மை உரத்துப் பேசப்படுகிறது.

சங்க காலத்தில் ஓவியக்கலை மேல் எழுந்து சிறப்புற்று இருந்ததற்கான ஆதாரம் இலக்கிய நூல்களில்தான் இருக்கின்றன. ஓவியம் வரைந்தார்கள் ஓவியத்திலே வளர்ச்சி பெற்றார்கள் என்பதெல்லாம் சங்க கால புலவர்களின் பாடல்களில் தெரிகின்றன. ஆனால் அக்கால ஓவியங்கள் இருந்த கோயில்கள், மண்டபங்கள் யாவும் கால ஓட்டத்தில் அழிந்து போயின.

இன்றைக்கு பழந்தமிழரின் ஓவியக் கலைக்குப் பேர் சொல்லும் ஓவியங்கள் பனைமலை ஓவியத்தில், காஞ்சி கோயிலில், திருமலைப்புரக் கோயிலில், சித்தண்ணவாசல் குகையில், தஞ்சை பெரியகோயிலில், மதுரை நாயக்கர் கால மண்டபங்களில் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. இவற்றில் பல ஓவியங்கள் உலக ஓவியங்களோடு போட்டி போட்டு நிற்கக் கூடிய சிறப்பு வாய்ந்தவையாகும்.

சங்க இலக்கியங்களைப் பார்க்கிற போது பழந்தமிழர் குகையில் கற்பாறையில், துணிகளில் ஓவியம் வரைவதில் ஒரு நுட்பத்தைக் கையாண்டுள்ளனர். அதே போன்று மனித உடலில் அதுவும் பெண்களில் உடலில், மார்பில் ஓவியம் வரைவதில் வியக்கத்தக்க நுட்பத்தைக் கையாண்டுள்ளனர். இவ்வாறு வரைவதை 'தொய்யில் கொடி' என பழந்தமிழர் அழைத்தனர். இதுபற்றி சங்ககால இலக்கியங்களில் குறிப்புகள் இருக்கின்றன.

நற்றிணை என்ற இலக்கிய நூலில் (நற்றிணை–225;5–7)

பூவொடு துயல்வரும் மால்வரை நாடனை
இரந்தோர் உளர்கொல், தோழி? திருந்திழைத்
தொய்யில் வனமுலை வரிவனப்பு இழப்ப

என்ற பாடல் வரிகளில் தொய்யில் குழம்பாலே எழுதப் பெற்ற (குழம்பு–ஒருவகை வண்ணக்கலவை) அழகினைக் கொண்ட வனப்புடைய முலைகளது இரேகையின் அழகெல்லாம் இழந்து போகும்படியாகப் பசலை நோய் பரவுகிறது என்ற அர்த்தம் வருகிறது. தொய்யில் என்பது கொடிபோல் மணச் சாந்தால் வரைவது; அதனை 'விரித்தல்' என்றும் கூறுவதுண்டு.

இதே 'தொய்யில்' செய்தி நாலடியார் நூலிலும் வருகிறது. பாடல்;

ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர்
மாலைப்பொழுதில் மணந்தார் பிரிவு உள்ளி
மாலை பரிந்திட்டு அழுதாள் வனமுலைமேல்
கோலம் செய்சாந்தம் திமிர்ந்து. (நாலடியார் – 397)

பாடலின் கருத்து : ஓலையில் எழுதும் கணக்கருடைய ஓசையெங்கும் சிறிய செவ்வானத்தையடைந்த மாலைக் காலத்தில், தன் கணவன் பிரிவை எண்ணி, தன் அழகிய கொங்கைகளின் மீது அலங்காரம் செய்திருந்த கலவைச் சந்தனத்தையும் உதிர்த்து, மாலைகளை கழற்றி எறிந்து புலம்பி நின்றாள்.

இங்கேயும் தொய்யில் தான் வருகிறது. ஒருவகை வண்ணக்கலவையால் பெண்கள் தொய்யில் எழுதியிருக்கின்றனர். இதில் பெண்கள் கை தேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். பெண் மார்பில் பெண்தானே தொய்யில் வரைய முடியும்?

சங்கத் தமிழரின் 'தொய்யில்' போல இன்றைக்கு மேலைநாடுகளில் உடலிலே சித்திரம் தீட்டிக்கொள்கிற முறை உண்டு. அதனைப் பச்சைக் குத்துவதற்கு ஒப்பாகவும் சொல்ல முடியும். தமிழரிடையேயும் பச்சைத் குத்தல் பழக்கம் உண்டு. இதனை மேலைநாடுகளில் 'டாட்டு (TATTOO)' என அழைப்பர். ஆனால் சங்கத் தமிழரின் தொய்யில் எழுதலுக்கு இணையானது அல்ல. 'தொய்யில்' வரைந்து பிறகு கழுவிப் போக்க முடியும். பிறகு புதிய ஓவியத்தை வரைய முடியும். ஆனால் ஒரு முறை 'டாட்டூவை' தோலில் வரைந்து விட்டால் கழுவினாலும் போகாது. பிறகு தோலில் அறுவைச் சிகிச்சை செய்துதான் அதனை அகற்ற முடியும். பச்சைக் குத்தலும் அப்படியே. ஒரு முறை குத்திக் கொண்டால் சாகிற வரைக்கும் அது அப்படியே இருக்கும்.

சென்ற தலைமுறை வரை நெற்றியில் பச்சைப் பொட்டு வைத்தவர்கள் இருந்தார்கள். அவ்வாறு பச்சைப் பொட்டுக் குத்திக் கொண்ட தமிழர்களை இனக்கலவரத்தில் இலங்கையில் அடையாளம் கண்டு அடித்துக் கொன்ற வரலாறு உண்டு. தமிழகத்தில் கட்சிகளின் சின்னங்களை, தலைவரின் பெயரை கையில் எழுதியவர்கள் இருக்கிறார்கள். பழங்காலத்தில் அடிமைகளை அடையாளம் காண பச்சை ஓவியம் குத்திய வரலாறு இருக்கிறது.

சங்க காலத்திற்குப் பிறகும் தமிழரின் ஓவியக் கலை மன்னர்களைச் சார்ந்தே வளர்ந்து வந்திருக்கிறது. கி.பி. 2–ம் நூற்றாண்டைச் சேர்ந்த பனைமலை ஓவியம் அமராவதிச் சிற்பம் போலவும் உள்ளதாக அறிஞர் கூறுவர். இவ்வோவியத்தைத் தீட்டிய ஓவியன் நீல வண்ணத்தில் குடையையும், கறுப்பு நிற மென்கோட்டால் மகுடத்தையும் இளமஞ்சல் வண்ணத்தால் முகத்தையும் இளஞ்சிவப்பு நிறத்தால் உடலையும் சிவப்பும் மஞ்சளும் கலந்த வண்ணத்தால் மேலாடையையும் வரைந்துள்ளான்.

இவ்வாறு சேரர், சோழர், பல்லவர், மதுரைநாயக்கர் ஆகிய அரசர்களால் அவரவர் காலத்தில் அவரவர்களால் கட்டிய கோயில்களில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

சித்தண்ணவாசல் குகையிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஓவியம் தமிழர் வாழ்வின் பண்பாட்டோடு தொடர்புடையது. ஆகவே அதற்கு ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு.

ஓவியத்தைப் போற்றியவர்கள் பழந்தமிழர்கள். ஓவியருக்கு பல சொற்கள் கண்டவர்கள் அவர்கள். ஆனால் இன்று ஓவியரை ஓவியர் என்றோ, ஓவமாக்கள் என்றோ, கண்ணுள் வினைஞர் என்றோ, ஓவ விளையாளர் என்றோ சொல்லாமல், எழுதாமல் ஆர்டிஸ்ட் (Artist) என்கிறார்கள். (ஓவியனையும், சித்திரக்காரனையும், கலைஞனையும், நடிகரையும் Artist என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.) தமிழில் சொற்களுக்கா பஞ்சம்? எல்லாவற்றையும் ஆங்கில வழி சிந்திப்பது ஒரு மனிதன் கோவணம் இழந்ததற்கு சமானம். கோவணம் போனால் மானம் பறக்கும். ஆவணம் இல்லையென்றால் ஆய்வும் பறக்கும். எனவே தமிழர்கள் மத்தியில் பழந்தமிழர் மரபில் வந்த ஓவிய விதைகள் இருக்கின்றன. அவற்றை அடையாளம் கண்டு தனித்துவத்தைப் பேணி போற்றினால் ஓவியத் தமிழின் ஒப்பனையை எழிலை உயிரைப் பார்த்து ரசித்து வியக்க முடியும்.

சிற்பங்கள் :

உலகில் பலநாடுகளில் சிற்பங்கள் இருந்தபோதும் இத்தாலி, கிரீக் போன்ற ஐரோப்பிய நாடுகளில் வரலாற்றைச் சொல்கிற சிற்பியின் கை விரல் நளினம் சொல்கிற சிற்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. எங்கு அதிக சிலை இருக்கிறதோ அது ரோம் நகராக இருக்கலாம் என்பது ஆங்கிலப் பழமொழி.

இந்தியாவில் தமிழகத்தில் தான் கோயில்களில் பழங்கால நினைவுச் சின்னங்களில் அதிகமான சிற்பங்கள் இருக்கின்றன என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அவர்களின் ஆய்வு அடிப்படையில் தமிழரின் கலைப்பாணி தற்சார்புடைய தனி இயல்புகளையும் அழகு உணர்வுகளையும் உடையதாய் இருந்துவருகிறது. கலை உருவாக்கத்தில் தனிச்சிறப்பு மிக்க கலைப்பாணிகளும், உருவச்சிலை அமைப்பில் இந்தியாவில் வேறு எங்கும் காண இயலாத இயக்கமும் நெகிழ்வும் நுண்மையும் கொண்ட சிறப்பியல்புகள் தமிழரின் சிற்பக்கலையில் பார்க்கலாம்.

சிற்பக்கலை நுண்கலைகளில் ஒன்று. கட்டடக் கலையைவிட சிற்பக் கலை மிக நுட்பமானது. அது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனதிற்கு இன்பம் கொடுக்கும் ஓர் கலையாகும். எழுத்தாளர்கள், கவிஞர்கள் கற்பனைகளை அழகியல் உணர்வுகளை வடித்து நூல் எழுதுவது போல சிற்பக்கலைஞர் தமது கற்பனைகளினாலே பலவகையான சிற்பங்களை அமைக்கிறார்கள்.

சங்க காலத்தில் தமிழர் கல், உலோகம், மண், மரம், தந்தம் ஆகியவற்றால் சிற்பங்களை அமைக்க அறிந்திருந்தனர். மணிமேகலையில் (மணி–21;125–126)

மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க

என்ற வரிகளிலும்,

வழுவறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவையும் பேசாவென்பது (மணி–21;115–116)

என்ற வரிகளிலும் சிற்பம் சம்பந்தமான செய்தி கூறப்பட்டுள்ளது. வழுவறு மரனும், மண்ணும், கல்லும் எழுதிய பாவையும் பேசாவென்பது என்பதன் அர்த்தம்; குற்றம் ஏதுமற்ற மரமும் கண்ணும் கல்லும் கொண்டு எழுதப் பெற்ற பாவைகள் எல்லாம் பேசாது என்பதே.

காவிரி பூம்பட்டினத்திலிருந்து மாளிகைகளிலே சுதையினால் செய்யப்பட்ட சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டிருந்ததை இந்திர விழாவிலே அந்நகரத்துக்கு வந்த மக்கள் கண்டுகளித்தனர் என்று மணிமேலை கூறுகிறது. அந்த பாடல் இது;

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா,
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து, வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநரும்

(மணிமேகலை–3;126–131)

③ சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் புடைப்புச் சிற்பங்கள் என்றும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். முழுஉருவச் சிற்பம் என்பது, பொருள்களின் முன்புறம் பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவிது. புடைப்புச் சிற்பம் (BAS-RELIEF) என்பது பொருள்களின் ஒருபுறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும் பலகைகளிலும் அமைக்கப்படுவது. இவ்விரண்டு விதமான சிற்ப உருவங்களும் கோயில்களிலே அமைக்கப்படுகின்றன.

உலோகத்தினாலும் கல்லினாலும் அமைக்கப்பட்ட உருவங்களை (1) தெய்வ உருவங்கள் என்றும், (2) இயற்கை உருவங்கள் என்றும் (3) கற்பனை உருவங்கள் என்றும் (4) உருவ உருவங்கள் என்றும் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் தெய்வ உருவங்கள் சமய வழிபாட்டில் உருவானவை. இயற்கை உருவங்கள் என்பது மனிதன், மிருகம், பறவை, பாம்பு, மீன் ஆகும். கற்பனை உருவங்கள் என்பது இயற்கையில்

இல்லாத கற்பனையில் உருவானவையே ஆகும். உருவ உருவங்கள் மனிதர்களின் உருவத்தைத் தத்ரூபமாக அமைப்பது, இந்த நான்குவிதமான சிற்பங்களை பழந்தமிழர் கோயில்களிலும் தமிழர் சிற்பங்களிலும் காணலாம்.



ஒரே கல்லினால் செய்யப்பட்ட பழந்தமிழரின் சிற்பங்கள்

தமிழர் சிற்பங்கள் உள்ளதை உள்ளபடியே காட்டும் நோக்கமுடையனவல்ல. சிற்ப உருவங்களின் மூலமாக ஏதேனும் ④ கருத்தை அல்லது உணர்ச்சியைக் காட்டும் நோக்கம் உடையன. தமிழரின் சிற்ப உருவங்களில் அமைக்கப்பட்ட தெய்வ உருவங்களோ அத்தகையன அல்ல. தமிழரின் சிற்ப உருவங்களில் கிரேக்கச் சிற்பங்களைப் போன்று, இயற்கையோடியைந்த அழகிய உடலமைப்பு காணப்படாதது உண்மைதான். ஆனால் இச்சிற்பங்களைக் காணும்போது பார்ப்பவரின் உள்ளமும், கருத்தும் இவ்உருவங்களில் மட்டும் நின்றுவிடவில்லை. இச்சிற்பங்கள் பார்ப்பவர்கள் கருத்தை எங்கேயோ இழுத்துச் சென்று ஏதேனும் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் ஊட்டுகின்றன. ஆகவே தமிழரின் சிற்பங்கள் அயல்நாட்டுச் சிற்பங்களைப் போன்று, வெறும் அழகிய காட்சிப் பொருளாக மட்டும் இல்லாமல், காட்சிக்கும் அப்பால் சென்று கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் ஊட்டுகின்றன.

பண்டைக்காலத்தில் தமிழர் கோயில்களில் ⑤ தெய்வத்தை வழிபட்டபோது இப்போது வைத்து வணக்கப்படுகிற தெய்வ உருவங்களை வைத்து வணங்கவில்லை. அந்தந்தத் தெய்வங்களின் அடையாளங்களை மட்டும் வைத்து வணங்கினார்கள். உதாரணமாக முருகனின் சிலைக்குப் பதிலாக வேலை மட்டும் வைத்து வணங்கினார்கள். இதுபோன்று ஏனைய தெய்வ வழிபாட்டிலும் உருவ வழிபாட்டிற்குப் பதிலாக அடையாளச்சின்னமே இருந்தது. சிலப்பதிகாரத்தில் வேற்கோட்டம் எனப்படுவது வேலை அடையாளப்படுத்தியதே ஆகும். அருணகிரிநாதர் திருப்புகழில்

பாடிப்புகழ்ந்த இலங்கை கதிர்காமக்கந்தன் கோயிலின் மூலஸ்தானத்தில் சிலைகளே இல்லை. அங்கு வேல்தான் வழிபடப்படுவதாக கூறுகின்றனர். எனவே இப்போது கோயில்களில் வைத்து வணங்கப்படும் தெய்வ உருவங்கள் பண்டைக்காலத்தில் அமைக்கப்படவில்லை. அவை பிற்காலத்தில்தான் அமைக்கப்பட்டவை ஆகும். அதுகூட சிற்பக்கலைக்கு உயிர்கொடுக்கும் முகமாக அமைக்கப்பட்டவை.

கோயில்களில் அமைக்கப்பட்ட தெய்வச்சிலைகளின் சிற்ப அழகு கண்மூடித்தனமான பக்தியால் பின்தள்ளப்பட்டுவிட்டது. சிற்பிகள் தெய்வ உருவங்களை வடித்தபோது நிர்வாணமாக அமைக்கவில்லை. உடை உடுத்தியதுபோல் சிலைகளை செதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இன்று அச்சிற்பங்களின் மீது துணிகளை உடுத்தி அவற்றின் அழகு, சிற்பியின் சிற்ப நுணுக்கம் என்பன மறைக்கப்பட்டுவிட்டது. ஆயினும் இவற்றை மீறி தமிழர் சிற்பக்கலை வளர்ச்சி பெற்றுள்ளது.

பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து சிற்பக்கலை போற்றி வளர்க்கப்பட்டதன் விளைவாக யாதொரு கட்டுப்பாடும் இன்றி வடிவங்களை அமைக்கத் தமிழகச் சிற்பிகள் கற்றனர். அவர்களின் சிற்பங்கள்; பார்ப்போரை மயக்கவைக்கும் நுட்பம், அழகு என்பன இடம் பெற்றிருக்கின்றன. சங்க காலத்திலேயே உருவச்சிலை இருந்ததை உறுதி செய்கிறது புறநானூறு.

ஓவத்தன்ன இடன் உடை வரைப்பின்
பாவை அன்ன குறுந்தொடி மகளிர் (புற-251)

என்ற பாடலில் கொல்லிமலையில் உருவச்சிலை இருந்துள்ளதை அறிய முடிகிறது.

குறுந்தொகையில் வருகிற ஒருகதையில் பொன்னாலான சிலை இருந்ததையும் அறிய முடிகிறது;

ஒன்பதிற் கொன்பது களிற்றோடு அவள் நிறை
பொன்செய் கொடுப்பவும் கொள்ளாலன்

என்ற பாடலில் ஒரு கதை ;

நன்னனுக்குச் சொந்தமான கனி ஒன்று நீரிலே மிதந்து வருகிறது. அதை நீராடிக்கொண்டிருந்த பெண் எடுத்து உண்கிறாள். அதைக்கண்ட நன்னனின் ஆட்கள் நன்னன் (குறுநில மன்னன்) முன்னே அந்தப் பெண்ணை நிறுத்தி மன்னனுக்குச் சொந்தமானக் கனியைத் தின்றதாக குற்றம் சுமத்துகிறார்கள். நன்னன் அவளைக் கொன்றுவிடும்படி உத்தரவு போடுகிறான். பெண்ணின் தந்தை ஓடிவந்து மன்னனிடம் 'பெண்ணின் நிறையுள்ள பொன்பாவையும் எண்பத்தொரு யானைகளும் அபராதமாகக் கட்டுகிறேன் பெண்ணை விடுதலைசெய்' என்று கேட்கிறான். நன்னன்

கேட்கவில்லை. பெண்ணைக் கொலைசெய்யச் சொல்கிறான். இந்த குறுநில மன்னன் நன்னன் மிகக்கொடூரமானவன் என்பது இக்கதையிலேயே தெரிகிறது. ஆனால் இத்தலைப்புக்குப் பொருத்தமானதை ஒப்பீடு செய்து பார்க்கிறபோது ஒரு கனி உண்டதற்கு மாற்றாக 81 யானைகளும் பொன்னால் ஆன பாவையும் வருகின்றன. எனவே அக்காலத்தில் பொன்னால் சிற்பம் செய்கிற வரலாறு தெரிகிறது.

பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில்

பைஞ்சோறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை (பெரு-298)

என்ற பாடலில் தமிழரின் பெரும் இல்லங்களில் சாணியால் மெழுகப்பெற்ற அறையில் வணங்கப்பெறும் தெய்வ உருவங்கள் வைக்கப்பெற்றிருந்தன எனத் தெரிகின்றது. இவ்வாறு சிற்பங்கள் கல்லால், மண்ணால், உலோகங்களால், மரங்களால் செய்யப்படுகிற வரலாறு தமிழரின் ஏனைய கலைகள் வளர்ச்சி பெற்றதைப்போல் வளர்ந்து வந்திருக்கின்றன.

சிற்பங்கள் சங்ககாலத்துக்கு முன்பிருந்ததாக ஆய்வாளர்கள் சொல்கின்றனர். ஆதிச்சநல்லூரில் தொல்பொருள்களாக வெண்கலத்தால் செய்யப்பெற்ற தாய்த்திருமேனி உருவமும், முருகனின் ஓரிலை வேலும், சிவனின் மூவிலைச் சூலமும் கிடைத்துள்ளன. இவற்றின் காலம் கி.மு. 7ம் நூற்றாண்டாகும். திருவண்ணாமலை மாவட்டம் மோட்டூர் என்னுடத்தில் பெருங்கல் வட்டங்களின் நடுவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம். கி.மு.1000 ஆக இருக்கலாம்.

சிற்பங்களில் உருவங்களின் உருவாக்கத்தை அமைப்பதற்கான அறிவினை ஒரே நாளில் பெற்றிருக்க முடியாது. பலதலைமுறையினரின் அறிதல் கற்றல் மூலம் கைமாறி வந்திருக்கும் கலையாக இருந்திருக்க முடியும். அப்படியானால் அதற்கு கல்வி அல்லது நூல் இருந்திருக்க வேண்டும். இருந்தது; அதுவும் தமிழில்.

சிற்பக்கலை என்றாலே அதற்கு அடிப்படை மொழி தமிழ்தான் என்று துணிந்து கூறமுடியும் என அறிஞர் மு.அருணாசலம், சிற்பக்கலை அறிஞர் கணபதி ஸ்தபதி ஆகியோர் தங்கள் நூல்களில் கூறியுள்ளனர்.

பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பார்க்கிறபோது ஓவியம், நடனம், சிற்பம், கட்டடக்கலை போன்ற கலைகளுக்கு தமிழர்கள் முக்கியத்துவம் கொடுத்திருப்பது தெரிகிறது. கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் என்பன தமிழர் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகின்றன. பழந்தமிழர் சிற்பக்கலைக்கு தஞ்சை பெரியகோவில், கங்கை கொண்ட சோழர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில் என்பனவற்றைச் சொல்லலாம்.

கோயில் என்றால் மூல தெய்வத்திருவைப் பார்ப்பதோடு முடிகிறது என்பது தவறானது. அந்தக் கோயிலின் சிற்ப வேலைப்பாடுகளை சிறிது நேரம் நின்று ரசிக்க வேண்டும். எத்தனை அற்புதமான சிற்பங்கள் ஆலயங்களில் இருக்கின்றன. அவற்றை உருவாக்க எத்தனையோ நாட்கள் ஆகியிருக்கலாம். சில ஆலயங்களின் தூண்களைப் பார்க்கின்றபோது இவ்வளவு பெரிய கல்லை எப்படித் தூக்கி வைத்திருப்பார்கள் என்ற எண்ணம் வரவில்லையா? வந்திருக்கலாம். ஒரே கல்லில் யானையும், பசுவும் கன்றும் என சிற்பங்களை வடித்திருக்கிறார்களே அதன் நுணுக்கம் தெரிகின்றதா?

முதன்முதலில் மகாபலிபுரச் சிற்பங்களைப் பார்க்கப் போனேன். என்னோடு வந்தவர்களில் சிலர் கடலோரச் சிற்பங்களைப் பார்த்துவிட்டு உதிர்த்த வார்த்தைகள்; 'கடலோரத்தில கல்லுல கட்டியிருக்கான்!' ஆனால் அந்த சிற்பங்களை வெள்ளைக்காரர்களில் சிலர் நின்று நிதானமாகப் பார்த்துக் கொண்டே ரசித்தார்கள். இருதரப்பாரும் பார்த்தார்கள்; ஆனால் அவர்கள் பார்வையில் வித்தியாசம் இருக்கிறது!

ஓவியத்தைப் பார்க்க ஒரு பார்வை; சிற்பங்களைப் பார்க்க ஒரு பார்வை. அந்தப் பார்வையில் கலை உணர்வு இருக்க வேண்டும். அது இருப்பதால்தான் மேல்நாட்டினர் பழந்தமிழர் கட்டிய கோயில்களைப் பார்க்கிறார்கள். அமெரிக்காவில் இல்லாத கட்டடமா? கட்டடம் வேறு, கற்சிலை வேறு. கட்டடம் விண்நோக்கிப் போவது (வர்த்தகத்திற்காக). கற்சிலை மனதின் உள்நோக்கிப் போவது (மகிழ்ச்சிக்காக). கற்சிலையில் கலை மட்டுமல்ல, வரலாறு, பண்பாடு, நாகரிகம் என்பன இருக்கின்றன. கம்பனைப்போல், இளங்கோவைப்போல் சிற்பக்கம்பன், சிற்ப இளங்கோ தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். இல்லாவிடில் இத்தனை அழகோடு, நுணுக்கத்தோடு, மெய்யோடு சிற்பங்கள் வந்திருக்குமா? சிற்பங்கள் உருவாவது உளியோடு இணைந்த கரங்களால். உளியால் அம்மியையும் கொத்த முடியும். அதே உளியால் தாயிடம் பால் குடிக்கிற குழந்தையை உணர்வோடு தீட்டமுடியும்.

நோர்வே வடதுருவ நாடு. பனிமலைகளே சிற்பங்களாய் இருப்பதால் கல்சிற்பங்கள் குறைந்த நாடு. ஆனாலும் அங்கு கஸ்டேவ் விஜிலேண்ட் (Gustav Vigiland) என்பவன் கருங்கல்லில் மனிதர்களின் வெவ்வேறு பருவங்களை சிற்பங்களாய் செய்தான். அதன் பெருமை நோர்வே நாட்டை உயர்த்தியுள்ளது. ஆனால் அதே கல்லில் உள்ளத்து வார்த்தைகளை முகத்தில் தேக்கி சிற்பங்கள் செய்திருக்கிறானே தமிழன் அவற்றைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தச் சிற்பங்கள் பேசுகின்றன! எவரோடு? சிற்பங்களோடு பேசத்தெரிந்தவர்களோடு. நீங்கள் பேசத் தெரிந்தவர் தானே?

கோலம் :

இயற்கையிடம் மனிதன் தானாகக் கற்றது அல்லது தெரிந்துகொண்டது ஏராளம். அவ்வகையில் வந்ததுதான் கோலம் இடுதல். கோலம் என்றால் அழகு, ஒப்பனை என அர்த்தமாகிறது.

எழுத்துக்கள் வருவதற்கு முன்னரே கோடுகள், குறியீடுகள் இருந்தன என வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். தொடக்கத்தில் மனிதன் வெறும் கோடுகளைப் போட்டிருக்கிறான். பிறகுதான் அவற்றை வளைத்து கோலமாக இட்டிருக்கிறான். குகைகளில் வாழ்ந்த ஆதிகாலமனிதன் பச்சிலைச்சாற்றால் கற்பாறைகளில் முதலில் தான் வாழ்ந்த இடங்களைச் சித்திரமாகத் தீட்டினான். பிறகு படிப்படியாகக் கோடுகளைக் கொண்டு கோலங்களை வரைந்தவன் புள்ளி வைத்து இணைக்கும் கோலங்களையும் கண்டுபிடித்தான்.

ஆஸ்திரேலியாவில் ஆதிவாசியினர் தங்கள் உடல்மீது பலகோலங்களை வரைந்து நடனம் ஆடினர். இன்றும் அதனைச் செய்கின்றனர் அவர்கள். சுவர்களின் ஓவியங்கள் பெரும்பாலும் கோடுகளால் ஆனவையே ! ⑥

ஆற்றங்கரையிலும் கடற்கரையிலும் வாழ்ந்த மனிதன் கரைகளில் நண்டுகள், பூச்சிகள் ஊர்ந்து செல்வதால் உண்டான கோடுகளைக் கண்டு மகிழ்ந்து போயிருக்கிறான். அதேபோன்று நடந்து போகிற ஆடு, மாடுகளின் அடிச்சுவடுகளைக்கண்டு ரசித்திருக்கிறான். விளைவு? அவனே மண்ணில் மணலில் கோடுகளைப் போட்டான். பெருங்கதை என்ற சங்ககால இலக்கியத்தில்

ஊறுகளி யானை ஒருங்குடன் ஏற்றி
வீறுபடு கோலமொரு வியனகர் விழவணி

(பெருங்கதை – 55, 78 – 79)

என்ற பாடல்வரிகளில் புள்ளினங்கள் அடிச்சுவடிக்கண்டு ரசித்தாகச் சொல்லப்படுகிறது.

தொடக்கத்தில் மாட்டு தொழுவத்தில் சாணத்தால் மெழுகிய பகுதிகளில் பூச்சிப்பொட்டுகள் வராமலிருப்பதையும் கவனித்தவர்கள் வீட்டினுள்ளே இம்முறையைப் பயன்படுத்தினர். பிறகு அதில்

வரிவடிவங்களை வரைந்திருக்கலாம். அதுவே பிறகு கோலமாக மாறியிருக்கலாம்.

இயற்கையிடம் இருந்து பலவற்றை அறியும் அறிவைக்கொண்ட மனிதனின் கலை உணர்வின் வெளிப்பாடுதான் கோலம். அது தொடக்கத்தில் வாசல் கோலமாகப் பரிணமித்திருந்தது. இவ்வாசல் கோலம் இல்லங்களில் வாழ்பவர்களின் மகிழ்ச்சியைக் குறியீடாகக் காட்டும் விதமாகவும் இருந்திருக்கலாம். மன்னர் காலங்களில் ஆட்சியின் மேல் வைத்திருக்கின்ற எண்ணங்களோடு தொடர்புடையதாக இக்கோலம் போடப்பட்டிருக்கலாம். கோலங்களில் மக்கள் தங்கள் மகிழ்வையும், எதிர்ப்பையும் காட்டலாம். ஆகவேதான் தமிழர் இல்லங்களில் அக்காலத்தில் இந்த வாசல் கோலம் முக்கியமானதாக இருந்திருக்கிறது. மேலும் மண்ணில் ஊறும் உயிரினங்களுக்கு உணவாக ஆகும் என்பதால் அரிசிப் பொடியால் கோலம் போடப்பட்டிருக்கிறது.

தமிழ் இலக்கியநூல்களில் கோலம் பற்றிய பாடல்கள் வருகின்றன. கம்பரின் ராமாயணத்தில்

நீர்க்கோல வாழ்வை நச்சி (கம்ப - 6, 15, 155)

நீர்மேலை கோலமெனும் நிலைமைத்தே (கம்ப - 6, 36, 202)

என்று கம்பரும்

தரைமொழுகிக் கோலமிடு (மீனா, குறம், 25)

என்று குமரகுருபரரும்

வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில்
விசித்திரப்பட வீதிவாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்
அழித்தி யாகிலும் உன்றன் மேல்
உள்ள மோடி யுருக லல்லால்
உரோட மொன்று மிலோம் கண்டாய்

என நாச்சியார்திருமொழியில் பெரியாழ்வாரும் கோலம் பற்றி கூறியிருக்கிறார்கள்.

சீவக சிந்தாமணியில்

கொடியனார் செய் கோலமும் வைகல்
தொறும் ஆயிரம்

என்ற வரிகளும் கோலத்தை விளக்குகின்றன.

எறும்புகள், பறவைகள் போன்றவை வீட்டிற்குள் வந்து பொருட்களை உண்டு சேதப்படுத்தும் வழக்கம் ஏற்படாமல் இருக்கவே அரிசி மாவினால் கோலமிட்டிருக்கலாம். இது ஒரு கருத்து. இதிலும் உண்மை இருக்கலாம்.

கோலம் என்ற சொல்லுக்கு சங்க இலக்கியங்களில் வேறு அர்த்தமும் வழங்கப்படுகிறது.

1. அழகு – கோலவரிச் சிற்றாடை கொய்துடுத்த ஒப்பனையும் (பவளக்–மாலை–65)
2. வேடம் – கொற்றவை கோலம் கொண்டு (பரிபாடல் – 11, 100)
3. சரீரம் – ஒதி உலவாத கோலம் (திருமந்தரம் – 1099)
4. தன்மை – ஊடற் கோலமோடு இருந்தோன் உவப்ப (சிலம்பு – 6, 15)
5. நிறம் – மதன் கோலத்தை யொத்த கருங்கூந்தலாள் (மதுரைச் – உலா 342)
6. கோலம் – நிலக்கோலம் இட்டார்கள் நிலத்தின்மேல் பூத்தெளித்தார்

தமிழ் இலக்கியநூல்களில் பெரியாழ்வார் திருமொழியும், ஆண்டாளின் நாச்சியார் திருமொழியுமே முதன்முதலில் வாசல் கோலம் குறித்துப் பேசுகின்றன. பெரியாழ்வார்

'பொங்குவேன் மணல் கொண்டு சிற்றிலும் முற்றத் திழைக் கலுறில்
சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லும்
அல்ல திழைக் கலுறாள்'

பெரியாழ் - தி. 31, 3)

என ஆண்டாள் திருமாலின் பஞ்சாயுதங்களை வாசலில் உருவக்கோலங்களாக இட்டதை உரைக்கின்றார்.

கோலம் புள்ளியாய் இருந்து கோடாய் வளர்ந்து சிறப்பாய் வளர்ந்த கலை. அவை அரங்கக் கோலம், மணல் கோலம், புனல் கோலம், அனல் கோலம் எனப்படும். அக்காலங்களில் நடன அரங்கில் அரங்கக்கோலம் போடப்பட்டது. அரங்கம் + கோலம் = அரங்கக்கோலம். அது ரங்ககோலம் என மருவி ரங்கோலி என பெயர் மாறி வடநாடுகளில் பரவின. இதனை மைசூர் தலைமைக்கல்வெட்டு ⑦ ஆராய்ச்சி மைய இயக்குநர் ஆர்.வி.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

புள்ளிகளையும், கோடுகளையும் கொண்டு உருவாக்கப்படும் கோலங்கள் நம்பிக்கையின் வெளிப்பாடாக பண்பாட்டின் அடையாளமாக தமிழர் வாழ்க்கையில் திகழ்ந்தன. ஆண்டுதோறும் அமங்கலநாட்கள் தவிர ஏனைய நாட்களில் வாசலில் கோலம் போட்டாலும் மார்கழி மாதத்தில் போடுகிறகோலம் சிறப்பானவை. மாதங்களில் மார்கழி என ஆன்மீக ரீதியில் சொன்னாலும் அறிவியல் ரீதியாகவும் தைமாதத்தை எதிர்நோக்குகிற மிகச்சிறந்த மாதமாகும். மார்கழி மாதம் என்பதனால் விவசாயப் பொருட்களைச் சேகரிக்கிற பழக்கம் தமிழர்களிடையே இருந்தது. எனவே அம்மாதத்தில் திருமணம் செய்யாமல் தைமாதத்தை எதிர்நோக்கிய சிந்தனையோடு அவர்கள் இருந்தார்கள். நிலத்தை உழுதுண்டு வாழ்ந்தவர்கள். எனவே நிலம் சார்ந்த மரபுவழிச் சிந்தனை

அவர்களுக்கு இருந்தது. மார்கழி மாதம் பனிமழை பெய்யும் மாதமானதால் அக்காலத்தில் பசியில் தவிக்கக்கூடாதென்று, சிற்றுயிர்கள் குறிப்பாக எறும்புகளுக்கு உணவிடுவது போல் அரிசிப்பொடியில் வாசல்கோலம் இட்டனர். அவ்வாறு இடுகிற அரிசியை எறும்புகள் உண்ணுவது உண்மையாகும். கோலம் வரைகிற பண்பாட்டு நடைமுறையில் கூட நுண்ணுயிர்களின் பசிப்போக்குகின்ற உயர்ந்த பண்பாட்டை அக்காலத்தமிழர் கொண்டிருந்தனர் என்பது வியப்பானதுதான்? ஆனால் இன்று நாகரிகம் என்ற உணர்வில் உண்பதற்கு உதவாத வேறுவகை (கற்களின்)ப் பொடிகளில் கோலம் இடுதல் பழந்தமிழர் கோலப் பண்பாட்டை உள்வாங்கவில்லை என்று அர்த்தமாகிறது.

கோலம் என்றால் அழகு என அர்த்தமாகிறது. அதே நேரத்தில் அது பண்பாட்டின் சின்னம். நேர்புள்ளி வரிசையில் நூறாயிரம் புள்ளிகள் அமைத்து அதனை ஓரிடத்தில் தொடங்கி அந்த நூறாயிரம் புள்ளிகளையும் சுற்றி வளைத்து தொடங்கிய இடத்திலேயே வந்துமுடியும். அந்தாதி கோல வகைகள் (அந்தாதி – முதலும் முடிவும்) உலகில் எங்கும் காணமுடியாத அரிய கலைச்செல்வமாகும். மேலும் நான்கு பக்கத்தில் இருந்து பார்த்தாலும் அதன் வடிவம் மாறுபடாது. இத்தகைய கலைஉணர்வுமிக்க கோலக்காட்சியைத் தமிழர்களிடமே காணலாம்.



மதுரையில் அங்கையற் கண்ணி மணிமாடத்தில் கோயிலின் நுழைவாயிலின் உள்ளே 5625 புள்ளிகள் அடங்கிய பெரியகோலம் 'அந்தாதி' முறையில் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்ட கலைநுணுக்கம் அறிந்த அயல்நாட்டு மக்கள் அதனை வியந்து ரசித்து படமெடுத்துச் செல்கின்றனர். அதேபோன்று பொங்கல் மாதத்தில் தமிழகம் வருகிற வெளிநாட்டுப் பயணிகள் தமிழர் வீடுகளில் போடப்பட்டிருக்கிற அழகான மாக்கோலங்களில் மயங்கி ரசித்துப்போகின்றனர். ஒரு வீட்டில் போடப்பட்டிருந்த மாக்கோலத்தை வரைந்த பெண்மணியிடம் ஒரு வெள்ளைக்காரர் கேட்டகேள்வி; 'நீங்கள் ஓவியம் படித்திருக்கிறீர்களா?' 'இல்லை. இதனை என் அம்மாவிடம் கற்றேன். அதற்காகப் பள்ளிக்குச் சென்றதில்லை' என்றாள் அந்தப் பெண்மணி.

அந்த வெள்ளைக்காரர்க்கு வியப்பு; 'பள்ளிக்குப்போகாமல் கற்ற கலையே இவ்வளவு அழகானதா?' என்று நினைத்தார் அவர். அவர்

நினைப்பில் தவறு இல்லை. தமிழர்களிடம் மரபுவழி, உறவுவழி பண்பாட்டுக்கலைகள் நிறைய இருக்கின்றன. அவற்றில் ஒன்று கோலம். இந்தக்கோலத்தைக் கலையாக தமிழ் உலகத்துக்கு அப்பால் இன்றைக்குத் தமிழர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

கனடா நாட்டில் ரொரன்டோ நகரில் உலகிலேயே மிகப்பெரிய கோலத்தை தமிழர்கள் வரைந்து சாதனை செய்தார்கள். அதனைச் செய்தியாக கனடாநாட்டு ஆங்கில ஏடுகள் வெளியிட்டுச் சிறப்பித்தன. அதற்குப்பிறகு கோலம் என்றகலை தமிழர்கலையாக அங்கு புகழ்பெறத் தொடங்கியது.

துணை நூல்கள் :

① தமிழர் நாகரிகமும் பண்பாடும்

② கட்டுரை, ஓம் சக்தி, 2004, அக்டோபர்.

③④⑤ தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் – மயிலை சீனி வேங்கடசாமி

⑥ Australian Aboriginal Culture, Common Wealth Australia, 1989.

⑦ தமிழர் பண்பாட்டில் கோலங்கள். ந.சாந்தி இரவிச்சந்திரன், உலகத்தமிழப்பண்பாட்டுக் களஞ்சியம், மலேசியா.

11. தமிழிசை

ஆதிகாலத்தில் மனிதன் காட்டு பிராண்டியாக வாழ்ந்த காலத்தில் தங்க வீடும், உடுக்க உடையும், உண்ண உணவும் ஏற்பாடு செய்து கொள்ளத் தெரியாமல் மிருகம் போல அலைந்து திரிந்தபோது அவன் அறிந்தது ஓசையே.

மொழிக்கு உருவம் காணும் முன்பே அன்றைய மனிதன் பெய்கிற மழையில், இடிக்கிற வானத்தில், ஓடுகிற நீரில், காட்டு மரங்களின் அசைவில், பறவைகளின் ஒலியில், மிருகங்களின் குரலில் எழுந்த ஓசையைக் கண்டான் அவன். இவ்வாறு கேட்ட ஓசையே அவன் வளர்ச்சியில் இசையாக உருவகப்படுத்திக்கொள்ளப்பட்டது. அசைகின்ற மூங்கிலின் வண்டுகள் துளைத்த துளைகளின் வழியாகக் கோடைக்காற்று புகும்போது எழுந்த இயற்கையான இசை ஒலியே ① மனிதன் செவிமடுத்திய முதல் இசை என்பது ஆய்வாளர்களின் முடிவு. இதனை பழந்தமிழ் இலக்கியமான அகநானூறு இதனை

ஆடுஅமைக் குயின்ற அவர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக (அகம் 82; 1-2)

என்னும் பாடல் வரிகளில் தெரிவிக்கிறது. வரலாற்றைப் பார்க்கிறபோது உலகத்திலேயே முதன் முதலில் தமிழகத்தில் இசைக்கலை தோன்றுவதற்கு அந்த மூங்கில் குழல்தான் அடிப்படையாயிருந்தது. அந்த முதல் இசைக்கருவி 'புல்லாங்குழல்' ஆகும். மூங்கில் புல் வகையைச் சேர்ந்தது என்பது இன்றைய தாவர இயல் அறிஞர்களின் முடிவு. ஆனால் அந்த தாவர அறிவியல் பண்டைத் தமிழர்களுக்கு தெரிந்திருக்கிறது. எனவேதான் மூங்கிலில் உருவான இசைக் கருவியாகிய குழலைப் புல்லால் ஆன குழல் (புல்+ஆம்+குழல்) என்ற கருத்தில் 'புல்லாங்குழல்' என்று அழைத்தனர்.



புல்லாங்குழல்

புல்லாங்குழலில் தோன்றிய இசை நாளடைவில் தமிழர் வாழ்க்கையின் இசைவில் வாழ்க்கை இசையாகியது. மனித வரலாற்றைப் பார்க்கிறபோது பண்டைத் தமிழர் இசையைப் போற்றியதைப் போல் வேறு

எவரும் முனையவில்லை. தமிழரின் வாழ்க்கை முறைகளைப் பார்க்கிறபோது உலகில் வேறு எந்த இனத்திற்கும் இல்லாத இசையுறவு தமிழினத்திற்கு உள்ளது தெளிவாகத் தெரிகிறது.

தமிழர்கள் வாழ்க்கையில் தாயின் வயிற்றில் கருக்கொண்டதுமே நலுங்குப் பாடல், மண்ணில் உதித்ததுமே குழந்தைக்குத் தாலாட்டுப்பாடல், சிறுவர்களுக்கு நிலாப்பாடல், இளைய வயதில் வீரப்பாடல் மற்றும் காதல் பாடல், திருமணத்தில் திருமணப்பாட்டு, உயிர் துறந்தபின் ஒப்பாரிப்பாட்டு என மனித வாழ்க்கையின் அனைத்துப் பருவங்களிலும் தமிழ்ப்பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் யாவையிலும் இசையும் முக்கியமாக உள்ளன. இசையோடு இயைந்த பாடல்கள். இது தமிழ் இனத்திற்கு மட்டுமேயுள்ள தனித்துவமான இசை அடையாளம். இதனை மேலும் உறுதி செய்வதாக திருமணத்தில் மங்கல வாத்தியமும் இறப்பின்போது முழங்கும் பறையின் ஓசையும் இருக்கின்றன. ஆகவேதான் தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று வகையில் ஆய்ந்து அளந்து மகிழ்ந்து பெருமை செய்தனர் பண்டைத் தமிழர்.

இசைத்தமிழில் உச்சம் தொட்டனர் தமிழர். உலக இசை வரலாற்றில் இதனால் தமிழிசையின் பெருமை மேம்பட்டது. உலகின் மூத்த இசையே தமிழிசையே என சொல்வது புகழ்ச்சிக்காக அல்ல புரிந்துணர்வினாலேயே!

பண்டைத் தமிழர் இசைக்குப் பண்ணிசை என்று பெயர் வைத்ததில் அர்த்தம் இருக்கிறது. அதாவது பண்பட்ட சமூக அமைப்பில் இருந்து வெளிவந்த இசை மரபு என்றும் பொருள்படும். இவ்விசை மரபு பண்டைக் காலந்தொட்டு வளர்ந்திருந்தது என்பதை தமிழில் உள்ள சங்ககால இலக்கிய நூல்கள் சான்றுகளாய் பகிர்கின்றன. அவற்றில் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பரிபாடல், பஞ்ச மரபு, பிங்கல நிகண்டு, கல்லாடம், பெருங்கதை, சீவக சிந்தாமணி, திவ்விய பிரபந்தம், தேவாரம், திருவாசகம் உட்பட பன்னிரு திருமுறைகள், கருணை மிர்தசாகரம், யாழ்நூல் என்பன முக்கியமானவையாகும்.

தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் தமிழிசை பற்றிய இசைக் குறிப்புகள் ஏராளமாய் இருக்கின்றன. அவற்றில் ஒன்று

'அளவு இறந்து இசைத்தலும் ஒற்று இசை நீடலும்
உளஎன மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்' (தொல்-எழுத்து; 33)

இவ்வரிகளின் கருத்து. அளவு கடந்து ஒலித்தலும் ஒற்றுக்கள் இசையில் நீளலும் உண்டு. இசையோடு பொருந்திய யாழ்நூலில் என்று கூறுவர் அறிவுடையோர். எழுத்துக்களுக்கும் இசைக்கும் இடையே உள்ள தொடர்பினைச் சொல்கிற வரிகள் இவைகள். இதே போன்று

'தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப

(தொல்-பொருள்-அகத்திணை)

என்ற தொல்காப்பிய வரிகளில் தெய்வம், உணவு, விலங்குகள், மரம் செடி கொடிகள், பறவை, தோற்கருவிகள், தொழில், யாழ் போன்ற நரம்புக் கருவிகள், ஊர், நீர், பூ போன்றனவும் கருப்பொருள் என்று கூறுவர் என வருகிறது. இவற்றில் (பறை) தோற்கருவிகள், யாழ் போன்ற நரம்புக்கருவிகள் ஆகிய இசைக்கருவிகள் சொல்லப்படுகின்றன. ஆகவே தொல்காப்பியர் காலத்திலேயே தமிழர் தனித்துவமான இசை நுட்பம் அறிந்து இசைக்கருவிகள் மீட்டிருக்கின்றனர் என்பது உறுதியாகிறது.


யாழ்


பறை


ஆதிகால யாழ்

பண்டைத் தமிழர்கள் ஒலியை ஏழாகப் பகுத்து முறைப்படுத்தி அவற்றை ஏழிசையென அழைத்து அவற்றினின்று பண்களை உருவாக்கியிருக்கின்றனர். சங்க காலத்திலேயே ஏழிசை பற்றி அறிந்திருந்தனர் என்பதை

'வடிவம் பலநின்றானும் அன்றொருகால்
ஏழிசை நூற்சங்கம் இருந்தானும்'

எனும் வரிகள் உறுதி செய்கின்றன.

தமிழ் நிலத்தில் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ள இவ்வகையான இசை, இராகங்களில் ஒலி வரலாற்றை ஆய்வு செய்தால் பண்கள் என்று அழைக்கப் பெற்ற இராகங்கள் இசைஞானியாரின் நாதக் கருவிலே சூலாகி, உரம் பெற்று, வடிவம் தாங்கி, வெளி வந்து செவிப்புலனிலே தவழ்ந்தும் தளர்நடை நடந்தும் ஓடியும், ஆடியும், நடனம் புரிந்தும் கலையின்பத்தை அள்ளிக் கொடுத்துள்ளன. பண்டைக் காலத்தில் இருந்தே இராக முறையை பண்முறை என்றும், இராகங்களைப் பண்கள் என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். முழு வடிவமும் முழுமையான அகல நீளமும் கொண்டதான இராகங்களைப் பண்கள் என்றும், இவற்றில் இருந்து பிறக்கிற சேய் ராகங்களைப் பண்திறம், பண் திறத்திறம் என்றும் நம் முன்னோர்கள் அழைத்தார்கள்.

பண் என்ற சொல் பண்ணுதல், இயற்றுதல் என்ற செயலின் அடியாகத் தோன்றியப் பெயர்ச்சொல். தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'பண்' என்ற சொல் பேசப்படுகிறது. பண்கள் ஒலிக்கிற களமாகிய சபை அல்லது அரங்கத்தைப் 'பண்ணை' என்றே தொல்காப்பியம் சொல்கிறது. பண் கலந்த பாடல்களைப் பண்ணத்தி என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். பண்ணத்தி என்ற சொல்லே இனிய இசைப் பண்பாடு கூடிய ஒரு சொல். பண் ஒலிக்கிற சொல் பண்ணத்தி. கண் உடையதைக் 'கண்ணி' என்கிறோம். அதுபோலவே பண் உடையதைப் 'பண்ணி' என்று சொல்ல முடியுமா? எனவே 'அத்தி' என்று ஒரு சாரியை சேர்த்துப் பண்ணத்தி என்றனர் நம் முன்னோர்கள். பண்ணத்தி என்ற சொல்லுக்குப் பொருள் கூறுகிற இளம்பூரணார் பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுட்களே பண்ணத்தி என்கிறார். அதோடு இந்த பண்ணத்திப் பாடல்களுக்கு உதாரணமும் கூறுகிறார் அவர்.

பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின்இயல் பண்ணத்தி இயல்பே (தொல்-பொருள்-செய்; 482)

கருத்து : பாட்டிடைக் கலந்த பொருளையுடையனவாய் சிற்றிசையும், பேரிசையும் ஆகி இசைத்தமிழில் கூறப்பெறுவன பண்ணத்தியின் இயல்பு.

இசைத்தமிழில் ஆய்வு செய்த அமரர் வீ.ப.கா. சுந்தரம் என்ற அறிஞர் 'பண்ணத்தி' என்ற சொல்லை பண்+அத்தி+ஈ = பண்ணத்தி), அத்துதல் பெற்றிருத்தல் என்று பிரித்துக்கொண்டு பண்ணை உடையது என்றும் பண்ணிற்குரிய சிறப்பான இசை, ஓசைகளைப் பெற்றிருக்கும் சிறுபாடல் என்று பொருள்படுவது பண்ணத்தி என்றும் விளக்கியுள்ளார். ஆகவே பண்ணோடு கலந்த இந்த வகையான இசைப்பாடல்கள், சங்க கால நாடக அரங்குகளிலும், இசை அரங்குகளிலும் ஏராளமாக வழங்கிவந்தன.

(கிரேக்கத்திற்குப்போன தொன்மையிசை – பக்கிரிசாமி பேட்டி – ஒப்புரவு – 2002 ஜனவரி).

மங்கலம், சூடாமணி, திவாகரம் போன்ற நிகண்டுகளில் பண்களின் பெயர்கள் வருகின்றன.

ஒரு பாடலுக்கு பண்ணோடும் தாளம், நடை, காலம் என்பனவும் முக்கியமாகின்றன. ஒரு பாடலில் நடை பிசகினால் பாடலே பிசகிவிடும். எனவே நடைகள் பற்றியும் தமிழர் குறிப்பிட்டுள்ளனர். அவை ஒன்பதாகும்.

1. **தவளைத்தத்து :** தவளை இடைவெளி விட்டுத் தத்திச் செல்வதுபோல் செல்வது.
2. **இடப நடை :** இடபம் ஏரி நிமிர்ந்து இரு புறத்தும் தலையசைத்துக் கம்பீரமாக நிமிர்ந்து செல்வதுபோல் செல்வது.
3. **மயில் நடை :** மயில் அமைதியாக அடிக்கடி தலையையுங் கழுத்தையும் அசைத்தும் உள் இழுத்தும் நீட்டியும் நடப்பதுபோல் செல்வது.
4. **குக்குட நடை :** சேவல் அடிக்கடி தலையைத் தாழ்த்தியும் உயர்த்தியும் கழுத்தை அசைத்தும் நடப்பதுபோல் செல்வது.
5. **அரவினோட்டம் (அரவு–பாம்பு) :** பாம்பு உடலைை நெளித்தும் தலையை இருபுறத்தும் வளைத்தும் ஓடுவதுபோல் செல்வது.
6. **அன்னநடை :** அன்னம் அமைதியாக அழகுடன் நடப்பதுபோல் செல்வது.
7. **பிடிநடை :** பெண் யானை பின் காலிரண்டையும் மெதுவாக வைத்து, முன்காலிரண்டையும் சிறிது விரைந்து வைத்துக் குலுக்கி சொகுசாய் நடப்பதுபோல் செல்வது.
8. **பாற்றியக்கம் (பருந்தின் வீழ்வு) :** பருந்து ஒரே இடத்தில் சுழன்று நின்றும், மேலுயர்ந்தும் திடீரெனக் கீழே தாழ்ந்தும் இயங்குவதுபோல் செல்வது.
9. **ஆற்றொழுக்கம் :** தாளம் பட்ட ஓசையுடன் இடையறாது ஒழுகும் ஆற்றுநீர்போலச் செல்வது.

சிலப்பதிகாரத்தில் இசைக்குறிப்புகள் நிறைய இருக்கின்றன. பிறகு கிடைத்த பஞ்சமரபு என்ற நூலிலும் இருக்கின்றன. இதுபோக அரச்சலூர் கல்வெட்டில் இசை பற்றிய குறிப்பு உள்ளது. அது கி.மு. 2ம் நூற்றாண்டு என்கின்றனர் ஆய்வாளர்கள். உலகத்திலேயே மிகபெரிய இசைக் கல்வெட்டு என்றால் அது குடுமியான்மலைக் கல்வெட்டுதான். 30 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட மிகப்பெரிய கல்லில் வெட்டியுள்ளனர். இது 6ம் நூற்றாண்டு.

மதுரை அழகர் கோயில் சுந்தரபாண்டியனார் குறுகுமுகப்பு மண்டபத்திலல் தெற்கு – வடக்கு பகுதியில் ஒரே கல்லில் 18 தூண்கள்

செதுக்கப்பபட்டுளள்ளது. இந்த தூண்களை கைவிரலில் தட்டினாலேயே காதுக்கினிய மெல்லிசை கேட்கிறது.

சிந்து வெளி நாகரீகத்தில் உள்ள சிவன் கையில் உடுக்கை இருக்கிறது. மற்றும் ஆடல் நிலைகள், பறை வடிவங்கள் கிடைத்துள்ளன.

இசை என்றாலே குரல் இசை மட்டுமல்ல கருவிகளின் இசையும் சேர்ந்ததுதான். 'பல்லியம்' என்ற தமிழ்ச்சொல் பலவகை இசைக்கருவிகளைக் குறிக்கும். இவ்வகை கருவிகளிலும் பண்கள், பண் திறங்கள், பண் திறத்திறங்கள் கற்பனை வளத்தோடு வழங்கிவந்தன என்பதை மறக்கக்கூடாது.

'சேனுயர் நெறிமுறை திறம்பல் இன்றியே
பாணிகள் பணி செயப் பழுதில் பண்ணுடைவீணே'

என்பது கம்பரின் பாடல். வீணையிலே எப்படிப் பண்கள் செம்மையோடு ஒலித்தன என்பதைக் கவிச்சக்கரவர்த்தியின் பாடலில் பார்க்கிறோம்.

சிலப்பதிகாரத்திலே இளங்கோ அடிகள்

ஆடல்பாடல் இசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே (சி–3, 45–46)

என்று பாடுகிறார். அதன் அர்த்தம் ஆட்டம், பாட்டு, இன்னிசை, தமிழ்ப்பண், தாளம், சுரவரிசை, குறைநிறை, பண்ணடைவு, திசைச்சொல் வழக்கு என்னும் அனைத்திலும் தெளிந்த ஞானம் உடையவன். மாதவிக்கு ஆசிரியனாக இருந்தான். அப்படியானால் சிலப்பதிகார காலத்தில் தமிழிசை மிகச்சிறப்பாக இருந்தது என்று அர்த்தமாகிறது.

தமிழ் இலக்கியங்களை சங்க காலத்திலேயே பல்வகை இசைக்கருவிகள் இருந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆகவே அவர்கள் இசையை சந்தேகமறக் கற்று சிறப்பு பெற்றிருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது.

தமிழ்மொழி தோன்றிய காலம் முதலே இயல், இசை ② நாடகம் ஆகிய முக்கலைகளும் தோன்றின. இவற்றுக்கு முத்தமிழ் என சிறப்பிட்டனர். ஆயினும் இயல், இசை, நாடகம் என்ற மூன்று கலைகளையும் ஒரே சொல்லில் அடக்கிய தனிப்பெருமை தமிழுக்கே உரியது. உலகின் வேறு எந்த மொழியிலும் இச்சிறப்பு காணப்படவில்லை.

ஆதிக்காலம் முதலே தமிழ் மண்ணில் பற்பல இசை வடிவங்கள் தோன்றி வந்திருக்கின்றன. பழமையான இசை வடிவங்கள் மறைந்தும் புதிய இசை வடிவங்கள் தோன்றியும் வந்து கொண்டிருப்பது மரபு. ஆயினும் சில கருத்துகள் எள்ளளவும் மாறாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

சிந்துவெளி முதல் அசாம் எல்லைவரை இமயந்தொட்டு குமரி வரை நிலவி நின்ற முற்காலத் திராவிட இந்தியா முழுவதிலும் தமிழ் இசையும்

யாழும் குழலும் முதல் தரமான சான்றுகளாக கிடைத்துள்ளன. அதே நேரத்தில் தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் யாழ், குழல், பறை போன்ற இசைக் கருவிகள் எடுத்தாளப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபோது பழந்தமிழர் இசைக் கலையிலும் பலவகையான இசைக்கருவிகளை இயக்குவதிலும் வல்லவர்களாயிருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இசை ஒலிகள் :

இசை மிகச் சிறந்த கலை. இசைக்கு உருகாத நெஞ்சம் இருக்க முடியாது. மனித மனத்தின் ஆழத்திலிருந்து அளவற்ற உற்சாகத்தை ஊற்றெடுக்க வைத்து உடலெங்கும் பரப்புகிற ஒரு சக்தி கொண்டது இசை. இந்த இசையை உணர்ந்து தெளிந்து உலகிற்கு முதன் முதலில் வழங்கியவர்கள் தமிழர்களேயாவர்.

சங்க இலக்கிய நூல்களின் குறிப்புகள்படி இயற்கையைப் பார்த்து செயற்கை முறையில் பல இசைக்கருவிகளைச் செய்திருக்கின்றனர் பண்டைத் தமிழர். அகநானூறு என்ற சங்க இலக்கியம் இயற்கை சார்ந்த கருவிகளைச் சுட்டிக் காட்டுகிறது.



பழங்கால இசைக்கருவிகள்
யாழ் (நரம்புக்கருவி), உடுக்கை (தோல்கருவி), கொம்புசங்கு (காற்றுக்கருவி)

ஆடு அமைக்குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக,
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசைத்
தோடுஅமை முழவின் துதைகுரல் ஆகக்
கணக்கலை இருக்கும் கடுங்குரற்றூம்பொடு
மலைப்பூஞ்சாரல் வண்டுயாழ் ஆக
இன்பல் இமிழ்இசை கேட்டுக், கலிசிறந்து
மற்றிநல் அவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
நனவுப்பகு விறலியின் தோன்றும் நாடன்! (அகம்-82)

இப்பாடலிலே 'அசைகின்ற மூங்கிலின் துளையுள்ள இடங்களிலே, அழகிய மேல்காற்றினால் எழும் ஒலியானது குழலின் இசையாகவும் - இன்னொலியுடனே வீழுகின்ற அருவியின் இனிய ஓசையே தொகுதியுடைய முழவின் இசையாகவும் - கலைமான்களின் கூட்டம் தாழ ஒலிக்கும் கடுங்குரல் பெருவங்கியத்தின் ஒலியாகவும் - மலையகத்துப் பூஞ்சாரலிலேயுள்ள வண்டுகளின் ரீங்காரமே இனிய யாழிசையாகவும் இவ்வாறு பலவாகிய இசைகள் கானகத்திலே ஒலிக்கும். அவற்றை மந்திகள் ஆரவாரமாய் வியப்புடன் நோக்கின. மூங்கில் நிறைந்த மலைப்பகுதியிலே உலாவி ஆடுகின்ற மயிலினங்கள், களத்திலே புகுந்த ஆடும் விறலியாரைப் போலத் தோன்றும். அத்தகைய மலைநாட்டை உடையவன்! எனச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இப்பாடல் மூலம் குழல், முழவு, வங்கியம், யாழ் ஆகிய இசைக் கருவிகளையும், நடனம் ஆடும் விறலியாரையும் தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே இயற்கை இசைக்கு இசைவாக இருந்திருக்கிறது. அந்த இசை ஒரு நுண்கலையாக வளர்ந்ததும் அதைத்தம் இயற்கை குரலால் பாட முற்பட்டது வரலாறு. அந்த வரலாற்றில்தான் இசைத்தமிழ் தோன்றியது. பொருளுணர்வோடு பாடப்பட்ட இசை அளித்த இன்பத்தைத் தமிழர் துய்க்கத் தொடங்கினர்.

தமிழர் இயற்கை அறிவும் மொழி அறிவும் கொண்டு ஏழு இசை ஒலிகளுக்கும் தமிழில் பெயர்களைச் சூட்டினர். அவை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்பட்டன.

'தாரத் துழையு முழையிற் குரலும்
குரலி லினியு மினியிற்றுத்தமும்
துத்தத்து விளரியும் விளரியிற் கைக்கிளையுங்
கைக்கிளை யுட்டாரமும் பிறக்கு மென்ன
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே'

என்ற பாடல் வரிகளில் 'பஞ்சமரபு' எனும் இசைநூல் அந்த ஏழிசைகளின் பிறப்பைப் பற்றிக் கூறியுள்ளது.

சிந்துவெளித் திராவிட நாகரிகத்தின் முத்திரைகளில் காணப்படும் தமிழ் எழுத்துக்களை ஆராய்ந்துள்ள மொழி அறிஞர் டாக்டர் இரா.மதிவாணன் அவர்கள் தமிழ் எழுத்துக்கள் பிறக்கும்போதே இசை எழுத்துக்களாகப் பிறந்துள்ளன என்று கருத்துத் தெரிவித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாம்.

இயற்றமிழில் நீண்டு ஒலிக்கும் நெடில் உயிரெழுத்துகளாகிய ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ ஆகியவற்றை ஏழிசைகளுக்கும் குறியீடுகளாகத் தமிழர்கள் முதலில் அமைத்தனர். அதுதான் தமிழிசைக்கான அடிப்படையை ஏற்படுத்தியது. சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை திவாகரம் முதலிய நூல்களிலிருந்து அதை அறிய முடிகிறது.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ வெனும் ③
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக்குரிய

என்று திவாகரம் கூறுகிறது.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்றேழும்
ஏழிசைக் கெய்தும் அக்கரங்கள்

என்று பிங்கல நிகண்டு கூறுகிறது.

இன்றுங்கூடக் கருநாடக இசையில் இராக ஆலாபனம் செய்யும் பாடகர்கள் 'ஆ' என்று அகாரமாகவே நீட்டி உச்சரிப்பது அந்தப் பழைய முறை உயிரெழுத்துக் குறியீட்டின் அடிப்படையில் தான். உண்மையில் இன்றைய கருநாடக இசை பண்டைத் தமிழிசை முறையே என்பதற்கு இதுவுங்கூட ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். ஆலாபனத்துக்கு முற்காலத்தில் 'ஆளத்தி' என்று பெயர். ஆளத்தி இசை என்பது இசையின் சிறப்பு. ஆலம் என்றால் வட்டம். ஆலம்+தீ= ஆலத்தி = ஆளத்தி என்றாகிறது. (ஆலத்தி எடுத்தல் தமிழர் மரபில் இன்றும் உள்ள ஒன்று) அந்த ஆளத்தியே இன்று ஆலாபனை. அதுவே 'ஆலாப்' என வடமொழியில் வழங்கப்படுகிறது.

ஒரு பண்ணை எடுத்துக்கொண்டு பாடலே இல்லாமல் சொற்களும் இன்றி உயிர் எழுத்துக்களால் அ,ஆ என்று மணிக்கணக்கில், நாள் கணக்கில் அந்தப் பண்ணை விருத்தி செய்தல், ஆளத்தி எனப்படும். இந்த ஆளத்தி முறை ஐரோப்பிய இசையில் இல்லை.

பாலை என்பது யாழில் நரம்புகளை வைத்து வாசிக்கிற இசை முறையாகும். முற்காலத் தமிழகத்தில் நான்குவகையான இசைமுறைகள் இருந்தன.

1) ஆயப்பாலை : அரை அரையான (1/2) பன்னிரு சுரங்களில் இசைக்கும் பண்கள் ④

2) வட்டப்பாலை : கால் (1/4) சுரங்கள் சேர்ந்து வரும் பண்கள்.

3) திரிகோணப்பாலை : அரைக்கால் (1/8) சுரங்கள் சேர்ந்து வரும் பண்கள்.

4) சதுரப்பாலை : வீசம் (1/16) சுரங்கள் சேர்ந்து வழங்கும் பண்கள்

ஆயப்பாலை :

இந்த இசைமுறை பண்கள் எளிதில் இசை பயில உருவாக்கப்பட்டது. ஏழிசைகளுள் ஐ, ஔ ஆகிய இரு உயிர் எழுத்துக்கள் தவிர மற்ற அய்ந்தும் குறில், நெடில் என இருவகைப்பட்டன. அவைதான் இன்றைய கருநாடக இசையில் சுத்தம், பிரதி என்று அழைக்கப்படுகின்றன. ஐ, ஔ ஆகிய இரண்டும் நெடிலெனக் கொள்ளப்பட்டன. ஆக மொத்தம் 12 உயிரெழுத்துக்கள் இசைக்குறியீடுகளாக ஏற்படுத்தப்பட்டன. அவை பழந்தமிழ் இசையில் 12 வீடு அல்லது நிலம் எனப்பட்டன. அவைதான் இன்று கருநாடக இசையில் 12 நரம்புகளில் பண் அமைத்து இசைக்கும் ஆயப்பாலையாகும். தமிழரின் இந்த எளிய இசைமுறையே கருநாடக இசையாக விளங்குகிறது. இந்தப் பாலையிலிருந்து ஏழ்பெரும் பாலைகளும் மற்றும் சிறுபாலைகளும் உண்டாகும்.

12 வீடுகளிலிருந்து தமிழர் இசை வளர்ந்து 22 அலகுகளை அமைத்துக் கொண்டது. இசை ஒலி நுட்பத்தினை அளந்து கூறுவதால் அதற்கு 'அலகு' என்று பெயரிட்டனர். இதைத்தான் கருநாடக இசையில் சுருதி என்று அழைக்கின்றனர்.

ஏழு இசைகளிலிருந்து 22 அலகுகளைப் பிரித்தெடுத்தது ஒரு வட்டக் கணக்கு முறையாகும். அந்த வட்ட இசையே வட்டப்பாலை எனப்படும்.

அமைதியான தேங்கிய நீரில் ஒரு கல்லைப் போட்டால் நீர் அலைகள் வட்டம் வட்டமாக நகருகின்றன அல்லவா? அதைப்போலவே இசை ஒலி அலைகளும் பரவுகின்றன என்பதை அன்றே உணர்ந்துதான் தமிழர்கள் அவ்வாறு பெயரிட்டனர். ஒரு வட்டத்தின் குறுக்களவுக்கும் அதன் சுற்றளவுக்கும் உள்ள தொடர்பைக் கணித முறையில் 22/7 எனும் எண் குறிக்கும். அது போன்றே 7 இசை ஒலிகளுக்கும் அவற்றின் 22 அலகுகளுக்கும் உள்ள தொடர்பு பொருந்துவதாகும். எனவே தமிழரின் இசைமுறை கணித அடிப்படையில் இயற்கையாக எழுந்து வளர்ந்த உயரிய இசைமுறையன்றோ!

கிரேக்க கணக்கியல் மேதை ⑤ பித்தகோரசு (Puthagoras) தமிழகத்திற்கு வந்து தமிழர் வகுத்த ஏழ்பெரும் பாலைகளை ஆராய்ந்து தம் கிரேக்க நாட்டு இசையைத் திருத்தி அமைத்தார் என செய்திகள் கூறுகின்றன. 22/7 எனும் எண் குறியீட்டை இசையிலிருந்து தெரிந்துகொண்டு தம் கணக்கியல் கோட்டுபாடுகளுக்குப் பயன்படுத்தினார்.

கிரேக்கர் என்ற யவனரோடு மிகத்தொன்மைக் காலத்திலேயே தமிழர் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். எனவே தமிழர் இசையை யவனர் அறிய வாய்ப்பிருந்திருக்கிறது. இத்தொடர்பினாலேயே கிரேக்க கணக்கியல் மேதை பித்தகோரசு தமிழ்மண்ணுக்கு வந்திருக்கவேண்டும். அலெக்சாண்டர் (கி.மு.356) திராவிட இசை வல்லுநரைக் கூட்டிக்கொண்டார் என்ற செய்தியும் கிரேக்கரின் இசை தமிழரிடம் இருந்து பெற்றது என்றும் கிரேக்க பூகோள ⑥ வியலாளர் ஸ்டிராபோ (கி.மு.) என்பார் தமது நூலில் குறித்துள்ள செய்தியும் நம் கருத்தை அரண் செய்வனவாக உள்ளது.

இவ்வாறான அந்தப் பழம் பெரும் நுட்பமான இசைமுறைகளை எல்லாம் தமிழர் இழந்து விட்டனர்.

தமிழிசையில் ஏழிசை அமைப்பு உலக வரலாற்றில் தமிழிசையில்தான் முதன்முதலாகக் காணப்படுகின்றது. ஏழிசையின் தமிழ்ப்பண்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாகும். மேனாட்டில் இவற்றை Tonic, Supertonic, Mediant, Subdominant, Dominant, Submediant, Leading Note என அழைக்கின்றனர். ⑦ இவ்வாங்கிலச் சொற்கள் எவ்வாறு தமிழிசைச் சொற்களுடன் ஒத்திருக்கின்றன எனப்பார்க்கும்போது குரல் என்பது Tone எனும் ஆங்கிலச் சொல்லுக்கு ஒப்பானது தெரிகின்றது.

❼ ஐரோப்பிய இசையின் மூலமாக கிரேக்க இசையே உள்ளது. பழமையான கிரேக்க இசை பண்முறை இசையே. கி.பி.15ம் நூற்றாண்டுவரை ஐரோப்பிய இசை பண்ணிசையாகவே வளர்ந்து வந்தது. பண்டைய கிரேக்க இசை, ஐந்திசைப் பண்முறையால் (Pentamatric Scale) ஆனது.

கிரேக்கர் தோரியன், லித்தியன், ஐயோனியன், ஃபிரிட்சியன், ஏயோலியன் என்று தமிழரைப் போலவே நிலப்பெயர் சுட்டி அழைத்துள்ளனர்.

மேனாட்டிசையில் உள்ள DO, RE, MI, FA, SOL, LA, TI, DO எனும் சுர எழுத்துக்கள் GAIDODE ARE ZZO என்பவரால் 11ம் நூற்றாண்டில்தான் அறிமுகப்படுத்தியதாக மேனாட்டு இசை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. தமிழிசை நூல்களில் சேந்தன் திவாகரம் எனும் நூல்;

சவ்வும் ரிவ்வும் கவ்வும் மவ்வும்
பவ்வும் தவ்வும் நிவ்வும் என்றிவை

எனக் கூறுகிறது ச, ரி, க, ம, ப, த, நி எனும் ஏழு எழுத்தே இசை சுரங்களாகும். இந்த ஏழு சுரங்களே உலக இசைக்கு ஆதாரமாய் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசை நுட்பங்கள் எல்லாம் இசை இலக்கண நூல்களின் கருத்துக்களோடு ஒத்துப் போகின்றன.

சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையில் பண்ணைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அது பெருந்தானம் எட்டிலும் கிரியைகள் எட்டாலும் பண்ணப்படுவதால் பண் எனப்பட்டது. பெருந்தானம் எட்டாவன; நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணாக்கும், உதடும், பல்லும், தலையும் என அடியார்க்கு நல்லார் உரையில் கூறுகிறார். அதே போல் கிரியைகள் எட்டு; எடுத்தல், படுத்தல், நலிதம், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு.

தொல்காப்பியரும், திருவள்ளுவரும் பண்ணைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். திருவள்ளுவர்

பண்ணென்னாம் பாடற்கியை பின்றேல் கண்ணென்னாம்
கண்ணோட்ட மில்லாத கண். (குறள்-573)

என்ற குறளில் பண்ணைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தப் பண்களைக் காலத்துக்கும் பருவத்துக்கும் நிலங்களுக்கும் ஏற்ப மிகச் சிறப்பாக வகைப்படுத்திய தமிழரின் நுண்ணறிவும் சிறந்த பண்பாடும் வியப்பானது. தேவாரக் காலத்திலுங்கூடப் பண்களைப் பகற்பண்கள், இரவுப் பண்கள், பொதுப்பண்கள் எனப் பகுத்திருந்தனர். தேவாரத்திலிருந்து இப்பொழுது கிடைக்கும் பண்கள் 24. பண்களைத் தாய்ப்பண்கள் என்றும், சேய்ப் பண்கள் என்றும் பிரித்தனர். ஏழு நரம்புகளையும் கொண்ட தொகுதிகளை மட்டும் பண் என்றும், ஆறு நரம்புகளைக் கொண்ட தொகுதிகளைத் திறம் என்றும், நான்கு மரபுகளை மட்டும் கொண்ட தொகுதிகளைத் திறத்திறம் என்றும் முற்காலத்தில் பெயரிட்டு அழைத்தனர் என்று அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையிலிருந்து அறிகிறோம். அவற்றைத்தான் இன்றைய கருநாடக இசை சம்பூர்ணம், சாடவம், அவ்டவம், சதுர்த்தம் என வடமொழிப் பெயர்களால் அழைக்கின்றது.

இசை வரம்பு கடந்து செல்லும் ஆறு போன்றது. தாளங்கள் அதனுடைய கரைகளைப் போன்றவை. ஆதி மனிதன் குழல், யாழ் ஆகிய கருவிகளை இசைக்கும் பொழுது உற்சாக மிகுதியால் உணர்ச்சியுடன் காலக் கணக்குப்படி ஒழுங்குறப் பாதங்களினால் தரையைத் தட்டினர். எனவே பாதத்தின் ஒலி என்னும் பொருளில் (தாள்+அம்) ⑧தாளம் எனத் தமிழர் அதற்குப் பெயர் வைத்தனர். தாளம் எனும் சொல் நற்றிணை (95:16) பரிபாடல் (8,10,11) முதலிய சங்கக் காலத் தமிழ் நூல்களிலேயே காணப்படுகிறது.

அக்காலத்தில் இசைத்தமிழில் மொத்தம் 11,991 பண்கள் இருந்தன என அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து தெரிகின்றது. பஞ்சமரபு எனும் பழந்தமிழ் இசைநூலில் 103 பண்கள் பேசப்படுகின்றன. பல்லவர் ஆட்சிக்குப் பிறகு பிற்காலத்தில் 23 பண்களே எஞ்சி நின்றன. இன்றைய கீர்த்தனைக்கெல்லாம் தேவாரமே மூலம் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

தமிழில் தேவாரம்பாடிய அப்பர் என அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர், 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' எனப் பாடியதை தமிழிசை மீது கொண்ட பற்றை வெளிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம். ஆகவே நாவுக்கரசரை மயக்கிய தமிழிசை தமிழரோடு உறவானது. தமிழ் மண்ணோடு தொடர்பானது.

மண்ணிசை :

சின்னஞ்சிறு குழந்தை எழுப்பும் மழலை ஓசைத் தாய்க்கு இனிய இசையாக இருக்கிறது. குயில் எழுப்புகிற ஓசை ஒப்பற்ற இனிய இசையாகிறது. ஆகவேதான் குயிலிசை என்றும், இசைக்குயில் என்றும் அழைக்கிறார்கள். மரம், செடி கொடிகளிடத்தும், நாணல், புதர்களிடையே வீசும் காற்றும் ஓர் இனிய ஓசையை எழுப்பிச் செல்கிறது. இதனிலும் இனிய ஓசை சவுக்கு மரத்தோப்பில் நாம் கேட்கக்கூடும். இதுபோலவே பறவை, மிருகம், வண்டு முதலானவற்றின் ஒலியும் அன்றைய மனிதனின் இசைக்கு முதற்காரணமாயிருத்தல் வேண்டும் எனவும் துணிந்து கூறலாம். இதனைத்தான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும் தம் பாடலொன்றில்,

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு, வண்டு
கழைமூங்கில் இசைத்ததைத்தாம்
தழுவியே இசைத்ததாலே
எழும் இசைத் தமிழே எனக் கூறுகிறார்.

இவற்றைப் போலவே விலங்குகளின் ஒலியும் பறவைகளின் ஒலியும் சுரங்களின் அமைப்பிற்குத் துணை புரிந்தன என்பர் ஆய்வாளர்கள். இதனைத்தான்

வேண்டிய வண்டு மாண்டகு கிளியும்
குதிரையும் யானையுங் குயிலுந் தேநுவும்
ஆடுமென்றிவை யேழிசை யோசை...

என்ற பிங்கல நிகண்டின் வரிகள் பகிர்கின்றன. இவற்றிலிருந்து இயற்கையாக ஒலிக்கும் பறவையினங்களின் ஒலி, மிருகங்களின் ஒலி ஆகியன ஏழிசைகளுடன் ஒத்திருப்பதை நாம் உணருகிறோம்.

எங்கும் நிறைந்த ஒலியினின்று எழும் ஓசையே இசையெனப்படுகிறது. அந்த இசை ஏற்றத் தாழ்வோடு பலவித ஓசையினோடு எழுப்பப்படுகிறது. இவ்வண்ணம் இயற்கையினால் மட்டுமின்றி செயற்கையாக குரலாலும் இசைக் கருவிகள் மூலமும் இசை உண்டாக்கப்படுகிறது. இவ்விசை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு வகையான சுரங்களாக ஏழிசையாக

பழந்தமிழர்களால் பகுக்கப்பட்டது. அவற்றை அடையாளங்கான மிருகங்கள், பறவைகள் என்பனவற்றின் ஓசையைக் குறித்தனர். அவை ⑨

1)	குரல்	–	வண்டின் ஓசை	–	ச
2)	துத்தம்	–	கிளியின் கொஞ்சலோசை	–	ரி
3)	கைக்கிளை	–	குதிரை கனைத்தல் ஓசை	–	க
4)	உழை	–	யானையின் பிளிறல் ஓசை	–	ம
5)	இளி	–	மயிலின் அகவல் ஓசை	–	ப
6)	விளரி	–	பசுவின் ஓசை	–	த
7)	தாரம்	–	ஆட்டின் ஒலியோசை	–	நி

என ஆகின்றன.

இந்நாளில் வழங்கப்படுகின்ற ச, ரி, க, ம, ப, த, நி என்பன முந்நாளில் ஆ, ஈ, ஏ, ஐ, ஓ, ஔ என வழங்கப்பட்டன. மேலும் இவ்வேழும் மனித உடம்பில் எப்பாகத்தில் தோன்றுகின்றன என்பதையும் குறித்துள்ளனர். அப்பாடல் 'பிங்கல நிகண்டு' என்ற நூலில் இருக்கிறது.

'குரலடு மிடற்றில் துத்தம் நாவில்
கைக்கிளை அண்ணத்தில் சிரத்தில் உழையே
இளி நெற்றியினில் விளரி நெஞ்சினில்
தாரம் நாசியில் தம் பிறப்பென்ப'

அப்பாடல்படி **குரல்**–மிடறு, **துத்தம்** – நாக்கு, **கைக்கிளை** – உள்நாக்கு (அண்ணம்), **உழை** – சிரம், **இளி** – நெற்றி, **விளரி** – நெஞ்சு, தாரம் – நாசி என ஆகின்றன. இவ்வாறு மனித அவயங்களிலிருந்து ஏழிசையை உருவாக்கிப் பாடியவர்கள் பழந்தமிழர்கள். ஆனால் பாடுவதற்கு முன்பே கருவிகள் மூலம் ஏழிசையை எழுப்பியவர்கள் அவர்கள். அவற்றையும் இயற்கையிடமிருந்து கற்றனர். பிறகு பல்வேறு முயற்சியின் பின்னர் பல இசைக் கருவிகளைக் கண்டுபிடித்தார்கள். அவ்வாறு உருவான முதல் இசைக்கருவியே புல்லாங்குழல். குழலின் பின்னே யாழ். சிலப்பதிகாரத்தில் பேரியாழ்தான் முதன் முதலில் தோன்றியது எனவும் பிறகே சீறியாழ், சகோட யாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ் எனவும் உருவாக்கப்பட்டன. இதே போன்று காலப்போக்கில் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பாறை, தமருகம், தண்ணுமை, தவில், தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்டு விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை போன்ற தோற் கருவிகளும் துளை வழியே இசை எழுப்பக்கூடிய குழல், கொம்பு, சங்கு, மகுடி போன்ற கருவிகளும் தம்பூர், பிடில், கோட்டு போன்ற நரம்புக் கருவிகளும் உருவாகின; கூடவே உலோகக் கருவிகளும் உருவாகின. அவற்றை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என நான்காகப் (கஞ்சக்கருவி=உலோகம்) பிரிக்கலாம்.

இவ்வாறு தமிழ் இலக்கியத்தின் சங்க கால நூல்களை ஆய்ந்து பார்க்கும்போது தமிழ் இசை இயற்கையைச் சார்ந்து எழுந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், பரிபாடல் போன்ற பண்டைத் தமிழ் நூல்களில் தமிழிசை பற்றிய குறிப்புகள், இலக்கணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே தமிழிசை இந்நூல்களுக்கும் முன்பதாக உருவாகியிருக்க வேண்டும். குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியாகிய இன்றைய மடகாஸ்கர் தீவில் ஆய்ந்து, துளைக்குழல்கள் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதும் அவை பழந்தமிழ் இசைக்கருவியின் முறையிலேயே அமைந்திருக்கின்றன என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ⑩ கூறுகின்றனர் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.



ஐம்முக வாத்தியம்



உருமி



வில்லடி வாத்தியம்



மகுடி



பம்பை

ஒரு இனத்தின் பண்பாடு முதிர்ச்சியடைய வேண்டுமாயின் அதற்கு குறைந்தது பலமடங்கு காலத்துக்கு முன்பேயே அது தோன்றிப் படிப்படியாக வளர்ந்து வந்திருக்க வேண்டும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதன்படிப் பார்த்தால் தொல்காப்பியத்திற்கு முந்திய கடலில் மூழ்கிய பூம்புகார்ப்பட்டணத்திற்கு முந்திய, சிந்து வெளி நாகரிகத்தையொட்டிய காலத்தில் தமிழிசை உருவாகியிருக்கலாம்.

'பாணன் பறையன் துடியன் கடம்பனென் றிந்நான்
கல்லது குடியுமில்லை'

என்னும் பழஞ்செய்யுளிற் குறிக்கப்படும் நான்கு பெயர்களுக்குள்ளே மூன்று இசைக் கருவியாற் பெற்ற பெயர்கள். பறையினை முழக்குவோன் பறையன்; துடியினை முழக்குவோன் துடியன்; மற்றவன் கடம்பன். இதுவே பழந்தமிழ் நாட்டிலே இசையறிவு பெருகிப் பரவியிருந்ததென அறிகின்றோம் ❶ ஆனால் காலப்போக்கில் தமிழகத்து மண்ணில் நடந்த அன்னியப் படையெடுப்புகளும், அந்நிய ஆட்சியாளர்கள் தங்கலும் தமிழரின் பல கலைகளைத் திட்டமிட்டு இருட்டடிப்பு செய்தன. ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அவ்வினத்தின் தனித்தன்மையைப் பாதுகாக்கும் மொழி, கலை, பண்பாட்டை சிதைப்பதும் கலப்பதும் வல்லாதிக்க சக்திகளின் நோக்கம். அதனைத் தமிழகத்தில் தங்கிய அந்நிய ஆட்சியாளர் செய்தனர். அதன் அடிப்படையில் தமிழிசை வடயிசையாக மாற்றுகிற வேலைகள் அந்நிய அரசு உதவியுடன் நடந்தன. தெலுங்கு மன்னர்களால் 'தெலுங்கில்' பாடுகிற முறை வந்தது. தமிழிசை ஓரங்கட்டப்பட்டு தமிழிசையே 'கர்நாடக இசை' என்ற பெயரில் மாற்றப்பட்டு வளர்க்கப்பட்டது. இதனைப் பாராட்டி சீராட்டியவர்கள் தமிழகத்தில் வாழ்ந்த தாய்மொழி தமிழ் அல்லாதவர்களே!

தமிழிசையைக் கற்றுணர்ந்து ஆய்ந்துதான் கர்நாடக இசையைப் பரப்பியிருக்கிறார்கள். கர்நாடக இசை அசல் அல்ல. நகல். ஆனால் நகலை தங்கள் மொழியில் அசலாக வைத்துக்கொண்டார்கள். தமிழர் வரலாற்றைப் பார்க்கிறபோது பன்னெடுங்காலமாக தழைத்து ஓங்கிய தமிழர் இசைதான் இந்தியாவெங்கும் பயிலப்பட்டு வந்துள்ளது. வடநாட்டினருக்குச் சங்கீதத்திற்கு இலக்கண நூல்கள் தனியே கிடையாது. 12ம் நூற்றாண்டு முதல் தோன்றி சமஸ்கிருத சங்கீத நூல்கள் சங்கீதத்திற்கு இலக்கணம் கூற முயன்றாலும் பழக்கத்தில் உள்ள இசை மரபிற்கும் இவர்கள் கற்பித்த இலக்கணத்திற்கும் தொடர்பின்றி இசை உலகில் பெரும் குழப்பங்கள் உண்டு பண்ணி வந்துள்ளன. ஆகவே இசையின் அடிப்படை இலக்கணத்தை நாடி நம் தமிழிசையின் பிறப்பிடத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் ஆகிறோம் என்று இசைப் பேரரசி டாக்டர் சேலம் எஸ்.விஜயலட்சுமி கூறியிருக்கிறார்.

இவரின் கருத்தை உறுதி செய்வது போல் இசைப் பேரறிஞர் வா.சு.கோமதி சங்கரய்யர் 'இசைத் தமிழ் இலக்கண விளக்கம்' எனும் நூலில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புகழ் பெற்ற தமிழ்நாட்டுப்பண்களின் சிறப்பை உணர்ந்த வடநாட்டுப் பண்டிதர் ஒருவர் முப்பத்தாறு பண்களையும் எடுத்து அவற்றிற்கு வடமொழிப் பெயரை இட்டுப் பரப்பியுள்ளார். ஆனால் ஒன்பது நிறங்களின் (இராகங்கள்) பெயர்களை மாற்றாமல் விட்டமையால் அவைகள் தமிழில் இருப்பதே, அவை தமிழிலிருந்து பெயர்ந்தது என்பது உறுதியாகின்றது என எழுதியுள்ளார்.

குண்டே என்ற அறிஞர் இதுபற்றி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

It is now positively established by documontary evidence that atleast 7000 years before christ, India has developed a system of musical notation, that the seven notes were scientifically arranged, each note being divided into three-the sharp, flat and the proper note itself. ❷

கிறிஸ்து பிறப்பதற்குக் குறைந்தது 7000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் சங்கீதச் சுரங்கள் அறிவியல் அடிப்படையில் ஒழுங்காய் அமைக்கப்பட்டிருந்தன என்றும், ஒவ்வொரு சுரமும் மூன்று பிரிவுகளாய் உள்ளதாய், அதாவது சுரமும், சுரத்துக்கு கொஞ்சம் கூடிய சுருதியும், சுரத்துக்குக் கொஞ்சம் குறைந்த சுருதியுமாக மூன்று இருந்தன என்றும் ஐயத்துக்கிடமின்றி எழுத்துச் சான்றுகள் மூலம் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. (இது போன்ற ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. எல்லாவற்றையும் எழுதினால் அது தனி நூலாகிவிடும். எனவே இது பற்றி மேலும் விபரம் அறிய ப.தண்டபாணி எழுதிய 'திராவிடர் இசை' என்ற நூலைப்பார்க்கவும்)

கர்நாடக இசையின் மூலம் 'தமிழிசை' என்பது மட்டுமல்ல பலநாட்டு இசைக்கும் அதுவே 'மூலம்' என பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்தர், வரகுணபாண்டியன், எஸ்.இராமநாதன், கு.கோதண்டபாணி பிள்ளை, வீ.ப.கா.சுந்தரம், தாமோதரனார், ஆளவந்தார் ஆகியோர் அவர்களில் முதன்மையானவர்கள்.

தமிழ் உலகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர் 'கல்கி' தமிழ்இசை பாடப்பட வேண்டும் என வற்புறுத்தி தொடர்ந்து 'கல்கி' இதழ்களில் எழுதி வந்தார். 1930களில் ராஜாஜி, டி.கே.சி., கல்கி போன்றோர் தமிழில் பாடும் இயக்கத்தைத் தொடங்கி வைத்தனர். 1940ல் அண்ணாமலை அரசர் தமிழிசை இயக்கம் அமைத்து அரும்பணிகள் செய்தார். ஆயினும் தமிழிசை பின்தங்கியே இருக்கிறது. இன்னமும் தமிழ் மண்ணில் தெலுங்கு கீர்த்தனைகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு காரணமே தமிழிசை இந்த மண்ணோடு மரபோடு தமிழ் வேரோடு பிறந்தது என்பது தமிழர்களே அறியாத ஒன்றாய் இருப்பதுதான். தமிழருக்கான தமிழ்மொழிக்கான இசையே தமிழிசை. அவ்விசையை தமிழ் மாநிலத்தின் தேசிய இசையாக்க வேண்டும். தமிழில் பாடுவதை ஆதரிக்க வேண்டும்.

ஒருமுறை திருவையாற்றில் தியாகராஜர் விழா நடந்தது. அவ்விழாவில் எம்.எம்.தண்டபானி தேசிகர் 'தாமரை பூத்த தடாகத்திலே' என்று தமிழில் பாடிவிட்டார். விழாவுக்கு வந்திருந்த பல வித்துவான்கள் உட்பட்ட பொதுமக்கள் 'தியாகராஜர் அரங்கே' தீட்டுபட்டுவிட்டது என்று வெளிநடப்பு செய்தார்கள். தண்டபானி தேசிகர் தெலுங்கில் பாடியிருந்தால் கைதட்டல் விழுந்திருக்கும். இத்தகைய நிகழ்வு தமிழகத்தில்தான் நடந்திருக்கிறது. தெலுங்கு மொழியே தமிழில் இருந்து உருவான மொழி. அம்மொழியில் பாடலாமாம்; தமிழில் பாடக்கூடாதாம்.

இன்றைக்குத் தமிழகத்தில் தெலுங்கில் பாடிக்கொண்டிருப்பதால்தான் கர்நாடக இசை பரவலாகப்போய்ச் சேரவில்லை. மேல்மட்ட மனிதர்களின் அரவணைப்பில் அது சிக்குண்டு கிடக்கிறது. அது அவ்வாறே இருக்கட்டும். ஆனால் தமிழ் இசையை மக்கள் இசையாக மாற்றி மரபு சார்ந்த உணர்வோடு ஒலிக்க வைக்க வேண்டும். தேவாரப் பண்களை உயிர்ப்பித்து உருவாக்க வேண்டும். தமிழ் எழுத்துக்களோடு தமிழ் இசைக்கல்வியையும் கொடுக்க வேண்டும்.

தமிழிசை தமிழரின் இசை; தமிழ் மண்ணின் இசை. கர்நாடக இசை நகல். எனவே கர்நாடக இசையின் மூலமான தமிழிசையை மீட்டு முன்னிலைப்படுத்த வேண்டும். வரலாற்றைப் பார்க்கின்றபோது அறிவியல் அடிப்படையில் தமிழிசையை தமிழர் உருவாக்கி இருக்கின்றனர். அதனை மறுபடியும் அறிவியல் அடிப்படையில் மீட்டு மறு உருவாக்கம் செய்ய வேண்டும்.

தமிழர் இசை :

ஒரு இனம் தனித்துவ இனமாக தம்மை அடையாளப்படுத்த தாய்மொழி, பண்பாடு, இசை, கலை, மருத்துவம், வாழ்வியல், உணவு, உடை, நாட்டியம் என்பனத் தனித்துவமானதாக இருக்க வேண்டுமென்பது இலக்கணமாகும். தமிழை தாய்மொழியாகக் கொண்ட இனத்திற்கு இவை அத்தனையும் இருந்தது என்பது வரலாற்று உண்மையாகும். ஆனால் கடந்த கால அந்நியப் படையெடுப்புகளின் தாக்கத்தினால் வேற்று மொழியும், அது சார்ந்த பண்பாடும், இசையும் வேறுபலவும் மேம்பட்டன. இதனால் தமிழினம் தனது தனித்துவத்தை மறந்து வாழப் பின்தள்ளப்பட்டது. தனித்துவமான தமிழர் இசை மறைக்கப்பட்டு, வடவர் இசையும், மின்சார நாகரிகம் அறிமுகப்படுத்திய மேனாட்டு இசையும் தமிழர் இசையாக அறிமுகம் செய்யப்பட்டன. இதற்கு வர்த்தக நோக்கம் கொண்ட திரைப்படங்கள் ஒத்தூதின.

தமிழர் இசை தொல்காப்பியக் காலத்திற்கு முற்பட்டது. அது தனித்துவமானது என்பது தமிழர்களுக்கே தெரியாத செய்தியாகும்.

கல்வி மொழியில் அந்நியம் புகுந்ததனால் கற்பதும் படிப்பதும் கேட்பதும் ரசிப்பதும் தமிழுக்கு அந்நியமாகிவிட்டது. ஒரு இனம் தாய்மொழியையும் தன் இசையையும் இழந்து விடுகிறபோது அந்த இனம் உலக வரலாற்றில் இருந்து மறைந்து போகும். 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்த வெள்ளையர்களிடம் நாட்டை இழந்த பிறகும், ஆஸ்திரேலிய ஆதிவாசிகள் அந்நாட்டின் மண்ணின் மைந்தர்கள் தாங்களே என்பதை தங்களின் தனித்துவமான இசையில் இன்றும் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். சீனர்கள் புதிய இசைக்கு அல்லது மேற்கத்திய இசைக்கு இடம் கொடுத்தால் தங்கள் கலாசாரம் கெடும் என்று இன்று வரை தங்கள் சொந்த இசையைப் போற்றி வருகின்றனர். உலகில் பல இன மக்களும் தங்களின் சொந்த இசையைப் போற்றி வருகிறார்கள். அதே நேரத்தில் வேற்று இசைக்கு அவர்கள் எதிரியல்லர்.

தமிழர்களுக்கு மண் சார்ந்த இசை தமிழ்மொழியோடு இணைந்தே வந்துள்ளது. 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என அப்பர் சுவாமிகளின் (திருநாவுக்கரசர்) வார்த்தைகளும் அதனை உறுதியாக்கியுள்ளது. தனித்துவ இசையோடு தமிழ் எழுந்து நின்றதற்கு வரலாறு உண்டு. தமிழின் முதல்நூலான தொல்காப்பியத்தில் இசை பற்றிய செய்திகள் இருக்கின்றன. இசைக்கருவிகள் பற்றிய செய்திகளும் இருக்கின்றன. **தொல்காப்பியத்தில் பறை, யாழ் என்பன வருகின்றன. எனவே இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பறையே தமிழரின் ஆதியிசைக் கருவியென்பதும் உறுதியாகிறது. இந்தப் பறையோடு யாழும் ஆதி இசைக்கருவியே. அத்தோடு குழலும் சேர்கிறது.** எனவே தான் திருவள்ளுவன் 66வது குறளில் (குழலினிது, யாழினிது) குழல் பற்றியும் யாழ் பற்றியும் பேசியிருக்கிறான். இதிலிருந்து தமிழிசை தனித்துவ மரபுகளோடு மட்டுமின்றி மரபு சார்ந்த இசைக்கருவிகளோடும் உருவானது என்பது உறுதியாகிறது.

பண்டையத் தமிழ் இசை நூல்களில் இசைக் கருவிகள் பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பறை எனப்படும் தோற்கருவியும், வங்கியம் அல்லது குழல் எனப்படும் துளைக் கருவிகளும், யாழ் எனப்படும் நரம்புக் கருவியும் மண், வெண்கலத்தால் செய்யப்படும் கஞ்சக்கருவிகள் என்பன 2000 ஆண்டுகட்கு முன்னரே அறியப் பெற்று அவற்றுக்கு இலக்கணம் எழுதப் பட்டிருக்கிறது.

உலக இசை வரலாற்றில் தமிழ் இசையே மிகத் தொன்மையான சிறந்த இசை இலக்கணப் பண்பாடுகளுடன் கூடிய இசையாகத் திகழ்ந்தது

என்பதற்கு ஆதாரமாகப் பல இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. பண்டைய தமிழ் இசை வல்லுநர்கள் தமிழில் பாக்களை இயற்றிப் பண்களை அமைத்துப் பண் சுமந்த பாடல்களாக பாடியும் தமிழ் மண்ணுக்கே உரிய பற்பல இசைக்கருவிகளைக் கூட்டிசையாகவும் தனியிசையாகவும் பயன்படுத்தியும் இவ்விசைக்கு இலக்கணங்களை உலக இசைகளின் இயல் வல்லுர்கள் வியக்கத்தகும் வகையிலும் அமைத்திருக்கின்றனர். தமிழரின்மரபு சார்ந்த தமிழ் இசைக் கருவிகளே தமிழ் இசையின் தனித்துவத்தைக் காக்கின்றன.

மத்தளம், யாழ், குழல் ஆகிய மூன்றையும் சங்க காலத்தில் இசைக் கருவிகளாகக் கொண்டிருந்தார்கள். யாழ் என்னும் இசைக்கருவி பண்டைக் காலத்தில் தமிழ் மண்ணில் சிறப்பாக வழங்கி வந்தது. அது உலக இசைக் கருவியாக இருந்தது. அந்த யாழ் எனும் இசைக்கருவி வில் எனும் போர்க் கருவியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக அறிஞர்கள் கூறுகிறார்கள்.

தொடக்கக் காலத்தில் மனித இனத்துக்கு வேட்டையாடவும், போர் செய்யவும் முக்கிய ஆயுதமாக இருந்தது வில்லும் அம்புந்தான். வில்லில் நாணைப்பூட்டி அதில் அம்பைத் தொடுத்து நாணைப் பலமாக இழுத்து அம்பை விசையாக எய்தவுடன் நாணின் அதிர்ச்சியினால் ஒருவிதமான ஓசை உண்டாகும். அந்த ஓசை வண்டுகளின் ரீங்காரம் போல் இனிய இசையாக இருந்ததனால் அக்கால மனிதர் அது உண்டான காரணத்தை நுட்பமாக ஆராய்ந்து அதன் பயனாக வில் யாழ் எனும் இசைக் கருவியை கண்டுபிடித்தனர். இந்த வில் யாழ் எனும் இசைக்கருவியை யாழ் என வடிவமைத்து அதிலே ஏழு இசைகளையும் அமைத்து வாசிக்கத் தமிழன் கற்றிருந்தான்.

பண்டைய தமிழ் இசையில் யாழுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் யாழ் மிகச் சிறந்த இசைக்கருவியாகப் போற்றப்பட்டிருக்கிறது.

யாழோசைக் கேட்கும் யானை அவ்விசைக்கு மயங்கி நிற்கும் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. துன்புற்று வருந்திய நோயாளிகளை யாழ் மற்றும் இசை மூலம் குணப்படுத்தவும், உற்சாகமூட்டவும் முயன்றனர் என்ற செய்தியை புறநானூறு பகர்கின்றது.

தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்கு மருப்பு யாழொடு பல்லியல் கறங்க
கைப்பயப் பெயர்த்து மைஇழுதுஇழுகி
ஐய விசிதறி யாம்ப லூதி
இசைமணி யெறிந்து காஞ்சிபாடி
நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி

வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே! (புறம்-281)

இப்பாடலின் கருத்து; தோழி வாராய் இரவம் வேம்பு ஆகிய இலைக்கொத்துகளை முன்வாசற்படியில் செருகி வைப்போம். யாழும் மற்ற கருவிகளும் மெல்ல இனிய இசையை இசைக்கட்டும். குழலும் இனிய மணி ஓசையும், பின்னணி கூட்ட நாம் காஞ்சிப் பண்ணைப் பாடுவோம். நறுமணம் பொருந்திய சந்தனம். அகில் இவைகளின் புகை, வீடு முழுவதும் பரவட்டும். வேந்தனின் உயிரைப் போரில் காப்பாற்றிய தீரனை நமது பணிவிடைகளால் மீண்டும் உயிர் பிழைக்கச் செய்வோம்.

இங்கு இசை நோய் தீர்க்கும் மருந்து என்ற கருத்து வெளியாகிறது. யாழும் மற்ற கருவிகளும் சேர்ந்து இசை எழுப்பியதை பல்லியம் என்று அழைத்ததும் தெரிய வருகிறது.

யாழ் கருவியை ஒரு தெய்வம் போலத் தமிழர் வணங்கினர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

சித்திரப் படத்துள் புக்குசெழுங் கோட்டின் மலர் புனைந்து
மைத்தடம்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பு எய்தி
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்கையில் தொழுது வாங்கி

(சிலம்பு-காணல் வரி 7; 1-4)

தொழுது வாங்கி என்பதே யாழினை வணங்கி வாங்குதல் என அர்த்தமாகிறது. யாழைத் தமிழர் மதித்தது போலவே வேறு பல நாடுகளிலும் யாழ்க்கருவி போற்றப்பட்டுள்ளது. இதுபற்றி யாழ்நூல் என்னும் அரிய ஆய்வு நூலிலே தவத்திரு விபுலானந்த அடிகள் எழுதியிருப்பதாவது; 'பண்டை நாளிலே சீரும் சிறப்பும் எய்தியிருந்த மிசிரம் என்னும் எகிப்து நாட்டிலும், பாரசீகக் கடற்கரையிலுருந்து அழிந்து போன சுமேரு (Sumaria) நாட்டிலும், சோழர் குடியேறியமையாலே சோழதேயம் என்னும் பெயரினை எய்திப் பிற்காலத்திலே மொழிச் சிதைவினாலே சால்தேய (Chaldea) என வழங்கப்பட்ட தொல்பதியினிலும், சேரர் குலத்தார் கலத்திற் சென்று வெற்றி பெற்றுத் தம்மானை செலுத்திய கிரேக்கத் (Crete) தீவிலும், அதற்கணித்தாகிய (Greece) யவனபுரத்திலும், உரோமர் வருவதற்கு முன் பழைய இத்தாலி (Italy) தேசத்திலும், ஐபீரியா எனப்பட்ட பழைய ஸ்பெயின் (Spain) தேசத்திலும், பிற இடங்களிலும் தமிழ்க்குலத்தார் வாழ்த்து நாகரிகம் பரப்பினார்களென மேற்றிசை அறிஞர் ஆராய்ச்சியால் கண்டு வெளியிட்டிருக்கின்றனர். இந்நாடுகளிளெல்லாம் யாழ்க்கருவியும் போற்றப்பட்டது. சிந்து நதி தீரத்திலே முன்னாளிலே, பாண்டிய மன்னரது ஆளுகையிலே, மீனாடு என்னும் பெயரோடு திகழ்ந்ததும் பின்னாளிலே இறந்தோர் மேடு என்னும் கருத்துடைய 'முகிழ்ந்தகரை' (Mohen-Jo-Daro)

என்னும் பெயரெய்தியதுமாகிய பழைய நாட்டிலே, மிதுன ராசியானது யாழ் எனும் பெயரினால் வழங்கப்பட்டு, இணை யாழ் உருவத்திலே குறியீடு செய்யப்பட்டதென அறிஞர் கூறுவர்.

யாழ் என்ற கருவி மட்டுமல்ல யாழ் என்ற சொல்லே தமிழருக்கு உரியது. வேறு மொழிகளிலே எழுத முடியாத உச்சரிக்க முடியாத ஒரு சொல் யாழ். யாழ் வாசிப்பதில் வல்லவரான பாணர் என்னும் மரபினர் தமிழ்நாட்டில் இருந்தனர். இவர்களுக்கு யாழ்ப்பாணர் என்பது ஒரு பெயராக இருந்தது. இவர்கள் பண்டைக் காலத்தில் அரசர், செல்வந்தர் முதலியவர்களிடம் யாழ் வாசித்தும் இசை பாடியும் தொழில் புரிந்தவர்கள். அத்தகைய இசைப்புலமை வாய்ந்த யாழ்ப்பாணன் ஒருவனுக்கு ஒரு அரசனால் வழங்கப்பட்ட பரிசே நிலப்பகுதியான இன்றைய யாழ்ப்பாணம் என்ற நகர் என ஒரு கதை இருக்கிறது.

யாழ், வில் யாழ், பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ், சகோட யாழ் என பலவகைப்படும். அறுவகை சிறுபொழுதிற்கும் யாழ் எதுவென குறிக்கப்பட்டுள்ளது.

வைகறை, விடியல்	–	மருத யாழ்
நண்பகல்	–	பாலை யாழ்
எற்பாடு (மாலைக்கு முன்)	–	நெய்தல் யாழ்
மாலை	–	முல்லை யாழ்
யாமம்	–	குறிஞ்சி யாழ்

கடைச் சங்க காலத்திலே அதற்கு முன்னும் தோன்றிய இலக்கியங்கள் வில் யாழ், சீறி யாழ், பேரி யாழ் என்பனவே குறிக்கப்பட்டுள்ளன. சகோட யாழும், மகர யாழும், செங்கோட்டி யாழும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவக சிந்தாமணி ஆகியவற்றில் காணப்படுவன.

தமிழிசை நூல்களில் கூறப்பட்டிருக்கும் பேரி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் ஆகியவைகளில் இன்றும் பர்மாவில் இசைக்கப்படும் சவாங் (Sawang) எனும் நமது மகர யாழை (Harp) ஒத்திருக்கிறது. கிரேக்க இசையில் 'Medievel Harp' எனும் பெயரில் செங்கோட்டி யாழ் இசைக்கப்படுவதை அறியலாம். சிலப்பதிகார காலத்தில் வீணையைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. 'நாரதன் வீணை நயந்தெரி பாடலும்' எனவும் 'மங்கலம் இழப்ப வீணை மண்மிசை' எனும் வரிகளையும் காண்கிறோம். இவ்வீணை கிழக்காசிய நாடுகளில் ஒன்றான சைனாவில் 'Weina' என அழைக்கப்பட்டு ஒரு Lyte வகையைச் சேர்ந்த இசைக்கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.



சாரங்கி



வில்யாழ்

இந்த யாழ் கருவிகளுக்கெல்லாம் மூலம் வில் யாழ். அதே போன்ற ஒரு இசைக்கருவி பின்னாளில் இருந்தது. அது வயிலினுமில்லை. வீணையுமில்லை. சாரங்கி. அது கோயில்களில் பயிலப்பட்டு வந்த ஒரு தமிழ் இசைக்கருவி. வில்யாழ் போன்றது.

மனித சரீரம் போன்று இசைக்கிற ஒரு பெரிய ஒலிச்செறிவு இந்த வாத்தியத்திற்கு உண்டு. மனிதக்குரல் ஒலிப்பது போலவே மொழிகளையும் இசை வடிவத்தையும் சேர்த்து இயக்குகிற ஆற்றல் இந்த இசைக் கருவிக்கு இயல்பாகவே ஒலிக்கும் வண்ணம் இதன் தாய் நரம்புகளும் துணை நரம்புகளும் இணைந்து அமைந்திருக்கின்றன. இது இன்றைக்கு வடநாட்டு இசைக் கச்சேரிகளில் முக்கியமான பக்க வாத்தியமாகப் பயிலப்பட்டு வருகிறது.

இந்த சாரங்கி கருவியை மீட்க வேண்டும் என்று தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கும் அளப்பரிய தொண்டு❸ செய்த யாழ்ப்பாணம் நல்லைநகர் ஆறுமுக நாவலர் முயன்றார். முடியவில்லை. சாரங்கிக்குத் தமிழகத்தில் இன்னும் மறுவாழ்வு ஏற்படவில்லை. இது சாரங்கிக்கு மட்டும் தானா? தமிழிசைக்கே மறுவாழ்வு ஏற்படவேண்டும். தமிழ் இசை முழங்கினால்தான் தமிழர் வாழ்வதாக அர்த்தம். நம் முன்னோர்கள் மண் சார்ந்தும் மரபு சார்ந்தும் தனித்துவமாக அறிவியல் பார்வையில் உருவாக்கிய தமிழ் இசையைப் புரிந்து கொள்வதே அறிவியல் பார்வை கொண்ட தமிழனின் இன்றைய முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

இசைக்கருவிகள் :

ஐந்து கருவிகளால் இசை ஆய்வாளர்களின் கருத்துப்படி இசைக்கு உரிய ஓசைகள் உண்டாகின்றன. அக்கருவிகள் தோல்கருவிகள், துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடறு என்பனவாகும். இவற்றில் உண்டாகும் ஓசைகளை ஒழுங்குபடுத்தி இசையை அமைத்தார்கள். அவற்றை வரிசையாகப் பார்க்கலாம். முதலில் ❹

1. தோற்கருவிகள் :

மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் கட்டப்பட்டவை. அவையாவன: பெரும்பறை, சிறுபறை, பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமடூகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வலையம், மொந்தை, முரசு, நிதாளம், கண்விடுதூம்பு, துடுமை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், துடி, நாளிகைப்பறை,

இவற்றில் மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, படகம், குடமுழா என்பன இசைப்பாட்டிற்குப் பக்க வாத்தியமாக உள்ளவை. இவை அகமுழா எனப்படும். தண்ணுமை, தக்கை, தருணிச்சம் என்பன மத்தியமமான கருவிகள். இவை அகப்புறமுழவு எனப்படும். கணப்பறை முதலியன அதமக் கருவிகள், புறமுழவு எனப்படும். மத்தளம், சல்லிகை, கரடிகை என்பன ஓசையினால் பெற்ற பெயர்கள். மத்து என்னும் ஓசையினால் மத்தளம் என்னும் பெயர் உண்டாயிற்று.

மத்தளம் :

இதற்குத் தண்ணுமை என்றும், மிருதங்கம் என்றும் பெயர்கள் உள்ளன. மத்து என்பது ஓசைப் பெயர். தளம் என்பது இசையிடனாகிய கருவிகளும் கெல்லாம் தளமாக இருப்பது. ஆதலால் மத்தளம் என்று பெயர் பெற்றது.

குடமுழா :

தோற்கருவிகளில் ஒன்றாகக் கூறப்படுகிற குடமுழா என்பது ஐந்துமுக வாத்தியம் என்று இப்போது பெயர் கூறப்படுகிற இசைக்கருவியாகும். இது இப்போது இசைப்பாட்டில் வாசிக்கப்பட்டாமல் மறைந்துவிட்டது.

தவுல் : இது நாகசுரத்துடன் வாசிக்கப்படுகிற தோற்கருவி. இதனை மத்தளம் என்றும் கூறுவர். ஆதியில் இதன்பெயர் 'மட்டூகம்' ஆகும். தவில் என்ற சொல்லை முதன்முதலில் உபயோகித்தவர் அருணகிரிநாதர்.

பதலை : இது தோற்கருவி. இன்றைக்கு தபலா என திரிந்து வழங்குகிறது. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டுப் பிற்காலத்தில் மறைந்துவிட்டது. ஆனால் அது வடநாட்டில் தபலாவாக புகழ்சூடி இன்றும் இருக்கிறது.

1. பறைக்கருவிகள் :

சிறுபறை, பெரும்பறை, நாளிகைப்பறை, மற்பறை.

பறை, தமிழரின் ஆதி இசைக்கருவி, சங்ககாலத்தில் கூறப்பட்ட பறை என்னும் தோற்கருவி ❺ 'கூறுதல்' என்றும் பொருள்பட அமைந்திருக்கின்றன. பறைதல் என்றால் சொல்லுதல், அறிவித்தல் எனப்பொருள். கேரளாவிலும், யாழ்ப்பாணத்திலும் அந்தப்பொருளிலேயே

சாதாரணமக்கள் (யாழ்ப்பாணம் – என்ன பறைஞ்சவன்? கேரளா – ஞான் பறையட்டோ) உரையாடுகின்றனர். இப்பறை மேற்கு ஆப்பிரிக்காவில் செய்திகள் கூறுவதாக (Talking Drums) இசைக்கின்றனர். பண்டைய தமிழ் இசைநூல்களில் கூறப்படும் இடை சுருங்கிய பறை, இன்று சீனா, ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளில் மிகப்பிரபலமாக இருப்பதையும், அவர்களின் இசை அரங்குகளில் பெண்கள் இப்பறையை இசைப்பதையும் காணலாம். சீனாவில் தமிழகத்திலிருந்து இசைக்கருவி (Tang Dynasty) கி.பி.618 – 907ல் சென்றதாக சீன இசை வரலாறு கூறுகிறது. ஜப்பானில் காகு இசையிலும், கொரியா இசையிலும் இடைச்சுருங்கு பறை பெரிய அளவில் உருவாக்கப்பட்டு இசைக்கப்படுகிறது.

2. துளைக்கருவிகள் :

புல்லாங்குழல், முகவீணை, மகுடி, சங்கு, தாரை, கொம்பு, எக்காளை, நாகசுரம் முதலியன. இவை மரத்தினாலும், உலோகத்தாலும் செய்யப்படுவன. சங்கு இயற்கையாக உண்டாவது. குழல் இதற்கு வங்கியம் என்றும், புல்லாங்குழல் என்றும் பெயர்கள் உண்டு. பெருவங்கியம் என்னும் மூங்கிலினால் செய்யப்பட்டு வந்தத் தமிழ்நாட்டில் வழங்கிவந்த இசைக்கருவி இப்போது மறைந்துவிட்டது. ஆனால் வட இந்தியாவில் கிராமிய இசைக்கருவியாக இன்றும் இருந்து வருகிறது. நாகசுரம் பிற்காலத்தில் தோன்றியது.

3. நரம்புக் கருவிகள் :

யாழ், வீணை, தம்பூரா, கோட்டுவாத்தியம், சாரங்கி முதலியன. வில் வடிவமான யாழுக்கு வீணை என்ற பெயரும் வழங்கி வந்தது. அந்தப்பெயரே இன்றைக்கு வழக்கத்தில் இருக்கிற வீணைக்கும் பெயராக அமைந்துவிட்டது. வீணை என்னும் கருவி 7ம் நூற்றாண்டில் இருந்து தமிழ் மண்ணில் வழங்கி வருகிறது. யாழ் 11ம் நூற்றாண்டிற்குப் பிறகு பயன்பாட்டில் இல்லை. மாணிக்கவாசகர் காலத்தில் யாழ், வீணை ஆகிய இரு இசைக்கருவிகளும் வழங்கிவந்தன என்பதை 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயல்பினர் ஒரு பால்' என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது.

4. கஞ்சக்கருவிகள் :

கடம் : இது மண்ணால் செய்யப்படும் இசைக்கருவி.

5. மிடறு : கழுத்தாக நிற்கிற கற்தூண்களில் இசையை அமைத்திருக்கின்றனர் சிற்பிகள் சிலர். இவ்வகை இசைத்தூண்கள் மதுரை, சுசீந்திரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இருக்கின்றன.



மேற்சொன்ன ஐவகை கருவிகளில் பெரும்பான்மையானவை இன்றைக்குப் பயன்பாட்டில் இல்லை. பல தமிழ் இசைக்கருவிகள் மருவி வட இந்தியாவிற்றும் வேறுநாடுகளுக்கும் போய்விட்டன. இன்றைக்குத் தமிழிசைக்குப் பெயர் சொல்ல பறை, வீணை, மிருதங்கம், நாகசுரம், தவில், கொம்புசங்கு, முகவீணை ஆகிய இசைக்கருவிகளே இருக்கின்றன. யாழ்நூல் என்ற தலைப்பில் இலங்கை தமிழ் அறிஞர் தவத்திரு. விபுலானந்தஅடிகள் மிகப்பெரிய ஆய்வுசெய்து ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். அந்நூலில் யாழின் பெருமை பற்றியும் சிறப்பு பற்றியும் எழுதப்பட்டுள்ளது.

அமராவதி நகரிலுள்ள சிலப்பதிகாரக்காலத்துக் கல்லோவியம் எழில்மிக்க நரம்புகளுள்ள யாழின் உருவத்தை நமக்குக் காட்டுகிறது. இவ்வோவியத்தின் நிழல் படத்தினைக் கண்ணுற்ற ஆனந்தகுமாரசாமி எனும் ஈழநாட்டுப் பேரறிஞர் பழமையான இக்கருவி சிலப்பதிகார காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ்நாட்டிலே வழங்கிவந்தது என்பதையும் மிகப்பழமையான இசை மரபொன்று தமிழகத்திலே இருந்து வந்ததென்பதையும் உலகிலுள்ள பேரறிஞர்க்கு வெளியிட்டார்.

நமது தமிழிசை பழமையானது மட்டுமல்ல. மிக இனிமையானதோடு மனித நரம்புகளையும், இதயத்தையும் தென்றலாய் வருடக்கூடியது. இது மனிதர்களால் மனிதர்களுக்கு மனிதர்களுக்காக இசைக்கப்படும் இசை. மனிதர்களின் உழைப்பால் உருவான கருவிகள். மனிதர் இசைக்கப்படும் கருவிகள். மேல்நாட்டு இசைக்கருவிகள் மின்சாரத்தால் இயங்கும் செயற்கை கருவிகள். அதிரடி இசையைக் குவிக்கும் கருவிகள். தமிழ் இசைக்கருவிகள் மனிதக் கரங்களால் இயங்கி மெல்லிய மயிலிறகாய் உணர்வையும், அறிவையும் தடவிக்கொடுக்கும். இயற்கை ஒலிகளோடு ஒத்தது. எனவேதான்

இயற்கை ஒலிகளை கற்றுக்கொண்டு அதற்கேற்ற கருவிகளையும் கண்டனர். இந்த ஒப்புவமை சங்க இலக்கியப் பாடல்களில் இருக்கின்றன. ❻

	இயற்கை ஒலி	ஒப்புமை இசைக்கருவி ஒலி
1.	வாகை நெற்று ஒலித்தல்	ஆடுகள்பறை ஒலி
2.	வறுஞ்சுனையில் காற்று ஒலி	பறை ஒலி
3.	முகிழ் ஒலி	முழவு ஒலி
4.	குடிஞை (கோட்டான்)	துடி ஒலி
5.	அருவி ஒலி	பறை ஒலி
6.	தேரை ஒலி	பறை ஒலி
7.	வண்டோசை	யாழிசை
8.	சுரும்பு (வண்டு)	யாழிசை
9.	வண்டுகளின் விட்டிசை	யாழ் நரம்பு இமிர்தல்
10.	தும்பி ஒலி	யாழ்
11.	பழத்துளையில் காற்று இயங்குவதால் ஏற்படும் ஒலி	குழல் ஒலி
12.	பூவில் தும்பி பாடல்	குழல் ஒலி
13.	குயில் கூவல்	குழல் ஒலி
14.	தும்பி ஒலி	ஏற்புழைக்குழல் ஒலி
15.	மயில் அகவல்	ஊது கொம்பின் ஒலி
16.	யானை உயிர்த்தல் (மூச்சு)	தூம்புக்கருவி ஒலி
17.	தேரை ஒலி	சிறுபல்லியை ஒலி
18.	நாரை ஒலி	வயர் என்னும் வாதுகுழல் ஒலி

இதேபோன்ற ஒப்பீட்டை 'பரிபாடல்' எனும் சங்க இலக்கியப்பாடல் சுற்றுகிறது.

ஒரு திறம், பாணர் யாழின் தீங்குரல் எழ;
ஒரு திறம், யாணர் வண்டின் இமிரிசை எழ;
ஒரு திறம், கண்ணார் குழலின் கரைபு எழ;
ஒரு திறம், பண்ணார் தும்பி பரந்திசை யூத;
ஒரு திறம், மண்ணார் குழவின் இசையெழ;

ஒரு திறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப;
ஒரு திறம், பாடல்நல் விறலியர் ஒல்குபு நுடங்க;
ஒருதிறம், வாடை உளவயின் பூங்கொடி நுடங்க;
ஒரு திறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறை குறை தோன்ற;
ஒரு திறம், ஆடுசீர் மஞ்சை அரிக்குரல் தோன்ற;
மாறுமா நுற்றன போல் மாறெதிர் கோடல்
மாறாட்டான் குன்றம் உடைத்து;

(பரிபாடல் – 17, 9, 21.)

இவ்விதம் தமிழிசை பண்பாடு சங்க காலமுதல் நடந்து வந்தவாறே சிலப்பதிகார காலத்திலும் முற்றிலும் பின்பற்றப்பட்டது என்ற உண்மையை உணரவேண்டும்.

அயல்மொழிக்கல்வி முறையினால் இன்றைக்குத் தமிழர்கள் மத்தியில் தாய்மொழி மட்டுமல்ல தாய்மண் சார்ந்த பல அந்நியமாகி வருகின்றன. அவற்றில் தமிழிசையும் ஒன்று.

தமிழிசையை மீட்கவேண்டுமானால் தமிழ் இசைக்கருவிகளை மீட்கவேண்டும். அவ்வாறு இசைக்கருவிகளை மீட்டு தமிழிசையையும் மீட்டால் தமிழிசை ஏனைய இசைகளைப்போல் ஒலிக்கும். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் வாழ்கிற எட்டு கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமிழிசையைப் போற்றவும் பரப்பவும் முன்வந்தால் தமிழிசை மேல் எழுவது சாத்தியமே. இன்றைக்கு ஒலிக்கிற கர்நாடக இசை தமிழிசையின் மருவிய வடிவமே. தமிழிசைதான் வேற்றுமொழி மன்னரின் படையெடுப்பிலும், ஆட்சியிலும் மருவி கர்நாடக இசையாயிற்று. ஆனால் அதன் உண்மையான பெயர் கரைநாட்டு இசை. பூம்புகார்ப்பட்டினக் கரையில் ஓங்கி ஒலித்த இசையே கரைநாட்டிசை. இதுபற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் வருகின்றன. காலப்போக்கில் அதுவே கர்நாடக இசையாயிற்று.

கர்நாடகம் என்பதன் தமிழ் அர்த்தமே மிகப்பழமையானது. அப்படியாயின் இன்றைக்கு ஒலிக்கிற கர்நாடக இசை தமிழிசைதான். ஆனால் அதன் கரைகளில் பதுங்கியிருக்கிற மருவல்களையும் செருகல்களையும் கண்டுபிடித்துவிடவேண்டும். அப்படி கண்டுபிடித்து அகற்றவேண்டியதை அகற்றி தமிழாய் மேல் எழுகிறபோது தமிழிசையின் வியக்கவைக்கிற உருவம் தெரியும். அதே நேரத்தில் மென்மையான தூய தமிழிசை மனிதமூளையின் செயல்பாடு அதிகரிப்புக்கு உதவும். குழந்தைப்பருவத்தில் தாய், தாய்மொழியில் தாலாட்டுப்பாடினால் அந்தப் பாடல் குழந்தையை மகிழ்விக்கும். அந்த மகிழ்ச்சி பிறமொழிப்பாடல்களில் வராது. தாய்மொழிப்பாடல், தாய்மொழிசார்ந்த இசை குழந்தையின் கல்விக்கு மட்டுமல்ல. அது மனிதனாக உயர்வுபெற மிகமிக

முக்கியமாகிறது. உலகில் பெரும்பாலான குழந்தைகள் தாய்மொழி, தாய்மொழி சார்ந்த இசை என்பனவற்றையே முதலில் படிக்கின்றன. அந்த முதலில் என்பதில் தொடக்கம் (முதல்) மட்டுமல்ல. வரவு வைக்கிற 'முதலு'ம் அடங்குகிறது. தமிழர்க்கு 'முதலாக' இருப்பது தமிழும், தமிழிசையும் அவற்றை இழக்காது பின்பற்றினால் தரணியில் தனித்துவமாய் உயரமுடியும். அதே நேரத்தில் தமிழிசையில் இருக்கிற அறிவியல் கூறுகள் அந்த உயர்வை நிச்சயம் தரும்.

மேற்கோள் நூல்கள் :

① திராவிடர் இசை, ப.தண்டபாணி, ஆபிரகாம் பண்டிதர் மன்றம், சென்னை–2001.

② டி.எஸ்.பார்த்தசாரதி, சென்னை சங்கீத வித்வத் சபையின் செயலாளர் (தமிழர் இசைநூலில்)

③ திராவிடர் இசை, ப.தண்டபாணி, ஆபிரகாம் பண்டிதர் மன்றம், சென்னை – 2001.

④ மு.ஆபிரகாம் பண்டிதர், கருணாமிர்த சாகரம்.

⑤⑥⑦ உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு

பேராசிரியர் எஸ்.கே.சிவபாலன், இசைக்கோயில், சென்னை, 2002.

⑧ தமிழர் நாகரிகமும் பண்பாடும், டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, சென்னை.

⑨ சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள், டாக்டர் எஸ்.ஜெயலட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–2000.

⑩❶ திராவிடர் இசை, ப.தண்டபானி, ஆபிரகாம் பண்டிதர், சென்னை–2001.

❷ KUNTE, HINDU MUSIC AND THE GAYAN SAMAJ.

❸ நமது செல்வம், மீ.ப.சோமு, வானதி பதிப்பகம், 1991.

❹ தமிழர் நாகரீகமும், பண்பாடும் : டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, சென்னை – 1999.

❺ உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு : பேராசிரியர் எஸ்.கே.சிவபாலன், இசைக்கோயில், சென்னை – 2000.

❻ பண்டைத்தமிழரின் ஒலி உணர்வும், இசை உணர்வும் : கோ.கண்ணன். என்ஸிபிஎச் வெளியீடு, 1994 –சென்னை.

❼ தமிழ் இசையும் ஐரோப்பிய இசையும் – நா.மம்மது – ஒப்புரவு – 2002 – சனவரி / பிப்ரவரி.

12. ஆடல் கலை

இயற்கையின் உந்துதலால் அசையும் மரங்களைப்பார்த்து, ஆடும் பறவைகளைக் கண்டு, நாகரிகம் பெறாத மனிதன் மெள்ள மெள்ள தன் அசைவுகளை வெளிப்படுத்தினான். அதுவே காலப்போக்கில் கூத்தாக விரிந்தது. இக்கூத்தே பிற்பாடு நாட்டியமாகவும், நடனமாகவும் வளர்ச்சி பெற்றன.

ஆடற்கலையைக் கூத்துக்கலை என்றனர் பண்டைத் தமிழ் மக்கள். கூத்துக்கலை மிகமிகப் பழமையானது. சங்ககாலத்தில் ஆடற்கலை செம்மையாக இருந்தது. அவற்றைப் பற்றி பழந்தமிழ் நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் பல கலைகள் மறைந்துவிட்டன. அவ்வாறு மறைந்தவற்றில் மிக முக்கியமானவை பதினோராடல். மனிதர் ஆடிய இந்த ஆடல்கள் ஆதிகாலத்தில் தெய்வங்கள் ஆடியதாகக் கருதப்படுகின்றன. அப்பதினோராடல் : 1. அல்லியக்கூத்து, 2. கொடுகொட்டியாடல், 3. குடையாடல், 4. குடக்கூத்து, 5. பாண்டரங்கம், 5. மல்லாடல், 7. துடிக்கூத்து, 8. கடையக்கூத்து, 9. பேடாடல், 10. மரக்காலாடல், 11. பாவைக்கூத்து.

இவற்றில் முதல் ஆறுஆடல்களும் நின்று ஆடுவது. பின் ஐந்தும் வீழ்ந்தாடுவது. இவற்றில் பல ஆடல்களைப்பற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

கடலுக்கடியில் மூழ்கிக்கிடக்கிற காவிரிப் பூம்பட்டினத்திலே இந்திரவிழா நடந்தபோது அந்நகரத்தின் பல வீதிகளில் பலப்பல காட்சிகள் காணப்பட்டன என்றும் அவற்றில் பேடிக்கூத்தும் ஒன்றும் (பேடாடல்) என்று

நீள்நிலம் அளந்தோன் மகன் முன்னாடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும் (மலர் வனம்புக்காதை – மணிமேகலை)

என்ற வரிகளில் மணிமேகலை கூறுகிறது.

பேடாடல் என்பது பேடு என்பது காமன் தன்னுடைய மகன் அநிருத்தனைச் சிறை மீட்பதற்காக வானினுடைய சோநகரத்தில் சென்று பேடியுருவங்கொண்டு ஆடிய ஆடல்.

ஆண்மை திரிந்து பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி யாடல்

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

இந்தப் பதினொரு வகையான ஆடல்களையும் அந்தந்த பாத்திரத்தின் உடை அணிந்து அணிகலன்கள் பூட்டி மாதவி ஆடினாள் என்பதை சிலப்பதிகாரம் அற்புதமாய்ச் செப்புகிறது.

ஏழுவயதில் ஆடற்கலை பயிலச்சென்ற மாதவி பன்னிரண்டாவது வயதில் பல ஆடல்கற்று அரங்கேறினாள். அவளின் ஆசான் பல்கலை வித்தகன். ஆடற்கலையின் ஆசான். அதனை

இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோர் ஆடலும் பாட்டும் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்கு அறிந்து ஆங்கு

(சிலம்பு – அரங்கேற்று காதை : 12. 15)

என்ற பாடல் விளக்குகிறது. விளக்கம். 'அகம் – புறம்' என்னும் இருவகையான நாட்டியத்தின் விதிமுறைகளையும் சாந்திக்கூத்து, வசைக்கூத்து என்னும் பலவகைக்கூத்து முறைகளையும் நன்கு அறிந்தவன். பதினொரு வகைக்கூத்து முறைகளையும் அதற்கென்று அமைந்த பண்முறைகளையும், தாளங்களையும் அவற்றிற்கு ஏற்ற இசைக் கருவிகளையும் இயக்கும் வல்லமை பெற்றவன். ஆடலும்–பாடலும், ஆடலுக்கேற்ற பாடலும், பாடலுக்கேற்ற இசையும், இசைக்கேற்ற தாளமும், தாளத்துக்கேற்ற கருவிகளும் இயக்கவல்ல புலமை பெற்றவன் அவன்.

இதிலிருந்து பண்டைக்காலத்தில் ஆடற்கலையில் வல்லவர்களாகவும், ஆசான்களாகவும் ஆண்களே இருந்தனர் என்பது உறுதியாகிறது.



பழந்தமிழரின்
நாட்டியக்கலை முத்திரைகள்

கூத்துநூல்கள் பலஇருந்து அழிந்தன என்பதை உரையாசிரியர்கள் மூலம் அறிகிறோம். மாதவி 'நாடக நன்னூல்' நன்கு கடைப்பிடித்து ஆடினாள். எனவே நாடக கூத்துநூல் இருந்திருக்கவேண்டும். கூத்து பற்றிய சங்க இலக்கிய நூல்களில் குறிப்புகள் இருக்கின்றன.

பெரும்பாணாற்றுப்படையில்	–	வாடாவள்ளி அல்லது வள்ளிக்கூத்து
மலைபடுகடாம்	–	குரவைக்கூத்து
புறநானூறு	–	குரவைக்கூத்து
மதுரைக்காஞ்சி	–	குரவைக்கூத்து
குறிஞ்சிப்பாட்டு	–	கயிறாட்டம்
பொருநராற்றுப்படை	–	முழவோடு ஆட்டம்

என பலகூத்துகளைப் பார்க்கமுடிகிறது. மதுரைக்காஞ்சியில் ஆடவரும் பெண்டிரும் ஆடும் 'துணங்கை' எனும் கூத்து பற்றிய (விழாவின்போது தெருக்களில் ஆடும் ஆட்டம்) குறிப்புகள் வருகின்றன.

'முழவு இமிழும் அகலாங்காண்
விழவு நின்ற வியன்மறுகில் துணங்க (மதுரை – 327, 329)

முல்லைநிலத்தில் வாழ்வோர் ஆடிய ஆய்ச்சியர் குரவை என்னும் புதுமையான கூத்தை மகளிர் ஆடியிருக்கின்றனர். தரையில் வட்டம் வரைந்து அதனைப் பன்னிரண்டு அறைகளாகப் பங்கிட்டு குரவை ஆடும் மகளிரை அவ்வறைகளில் நிறுத்தி அவருக்கு முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று எழுவருக்கு மட்டும் ஏழு பெயரிட்டு இசைபாடி ஆடுவது. இது இசையும் கூத்தும் பொருந்தி ஆடப்படும் ஆடல் என்று தோன்றுகிறது. இவ்வாடலுக்குரிய குரவை செய்யுள்களை சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் காணலாம்.

சங்ககாலத்தில் நடனமாடிய ஆடவன் ஆடுமகன் எனவும், ஆடுமகள் விறலி என்றும் பெயர் பெற்றனர். அதே காலகட்டத்தில் 'கூத்தர்கள்' நடனம் மற்றும் நாட்டியம் ஆடுவதில் சிறந்தவர்களாகவும், பாணர்கள் அதற்குப் பாடுவதிலும், இசைக்கருவிகளையும் தோற்கருவிகளையும், இசைக்கவும் தெரிந்திருந்தனர். 'விறலி' என்பவள் வீரம் வெளிப்பட நடித்துக்காட்டுபவளாக இருந்தாள். கூத்தரின் மனைவி கூத்தயர் என்றும், பொருநனின் மனைவி விரலி என்றும் அழைக்கப்பட்டனர்.

சங்ககாலத்திலிருந்த ஆடல் முறைகளை ① 'வேத்தியல்' என்றும் 'பொதுவியல்' என்றும் இரண்டுவகையாகப் பிரிக்கலாம். இதனை 'அகக்கூத்து' என்றும் 'புறக்கூத்து' என்றும் கூட அழைப்பர். பொதுமக்களுக்காக ஆடப்படும் பொதுவியல் என்ற புறக்கூத்தில் குரவைக்கூத்து, குடக்கூத்து, காளிநடனம், கரணம், தோற்பாவைக்கூத்து, வசிக்கூத்து, குடைக்கூத்து என்ற ஏழு கிராமிய நடனங்களும் இடம்பெறும். மன்னர் மற்றும் செல்வந்தர்களுக்காக ஆடப்படும் 'வேத்தியல்' என்ற அகக்கூத்து சொக்கம், மெயக்கூத்து, அபிநயம், நாடகம் எனும் நான்கு வகையும் இடம்பெறும். அக்காலத்தில் விரலியும், பொருநனும் அரசனுடன் போர்க்களம் செல்வது வழக்கமாகும். அவ்வாறு செல்லும்பொழுது அங்கு வீரர்களின் முன்பு 'வீரம் ரௌத்திரம்' போன்ற உணர்வுகள் வெளிப்படும் காட்சிகளை நடன வடிவில் நடித்துக்காட்டுவர். இதுவே பிற்காலத்தில் 'நிருத்தம்' என்று அழைக்கப்படுகின்றது. கூத்தர்கள் மக்களின் பொழுதுபோக்கினைக் கருத்தில்கொண்டு இறைவனின் செயல்களையும் அரசனின் வீரசாகசங்களையும், புராணக்கதைகளையும், நவரசங்களும் வெளிப்படுமாறு பலர் சேர்ந்து கூத்தாக நடித்துக்காட்டுவர். இதுவே பிற்காலத்தில் 'நிருத்தியம்' அதாவது 'நாட்டியம் நாடகம் அல்லது நாட்டிய நாடகம்' என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

② **சங்ககால கூத்துவகைகள் :**

மெய்க்கூத்து : உடலைத் தழுவிக்கொண்டு ஆடுவது மெய்க்கூத்து.

அவிநயக்கூத்து : கதை தழுவாமல், உளத்தில் தோன்றும் அகவுணர்வையும், புறத்தே உடலில் தோன்றும் அங்க அசைவுகளையும் கை, கால், விரல், முகம், விழி, உதடு முதலிய உறுப்புகளை அசைத்துக் காட்டி ஆடும் கூத்து அவிநயக் கூத்து.

வென்றிக் கூத்து : வேந்தனது சீர் சிறப்புகளை மிக உயர்த்திக் கூறியும், சோர்வுற்ற பகைவர்களின் தாழ்வு, அடக்கம் முதலியவற்றைக் கூறியும் ஆடுவது வென்றிக் கூத்து.

வேத்தியல் கூத்து : வேந்தன் முன்பு அரசவையில் அரசன் மகிழுமாறும், இனிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் வகையிலும் ஆடுவது வேத்தியல் கூத்து.

பொதுவியல் கூத்து : ஊரின் பொதுவிடத்தில் ஊர்மக்கள் முன்பு ஆடுவது பொதுவியல் கூத்து. தெருக்கூத்தாக நிகழ்த்தப்படும்.

சாந்திக் கூத்து : கூத்துக்கதையின் நாயகன் சாந்தத்தோடு அமைதியாய் ஆடுவது சாந்திக் கூத்து.

விநோதக் கூத்து : வேந்தன் பெற்ற வெற்றியைப் பாராட்டி விதவிதமாய் வேடம் புனைந்து, புகழ்ந்து கூறி ஆடுவது விநோதக் கூத்து.

கழைக்கூத்து : மூங்கில் கம்புகளை இருபுறம் நட்டு, அவற்றிற்கிடையே கயிறு கட்டி, அக்கயிற்றின் மேல் ஏறி ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு நடந்து சென்று வருவது. கழை என்பது மூங்கில். கழைகளைக்கொண்டு ஆடுவதால் கழைக்கூத்தாம்.

குடக்கூத்து : மண், உலோகம் ஆகியவை சேர்த்துச் செய்யப்பட்ட குடத்தின் மேல் ஏறி நின்று மக்கள் காண ஆடுவது குடக்கூத்து.

குரவைக்கூத்து : தலைமகனின் காம வேட்கை அல்லது வெற்றி கூறிப் பெண்கள் எழுவர் முதல் ஒன்பதின்மர் சூழ்ந்து நின்று, பாடி ஆடுவது குரவைக் கூத்து. ஆய்ச்சியர்கள் முல்லை நிலத்தில் திருமாலைப் போற்றி ஆடுவது ஆய்ச்சியர் குரவை என்றும், மலைநிலப்பகுதியில் முருகனைக் குறித்துக் குறவர்கள் ஆடுவது குன்றக் குரவை என்றும் கூறப்படும்.

வசைக்கூத்து : ஒருவருடைய உருவத்தைப் பலவாறு பழித்துக் காட்டி ஆடுவது வசைக்கூத்து.

தோற்பாவைக் கூத்து : தோலால் பல பாவைகள் (பொம்மை) செய்து, அவற்றைக் கயிற்றால் கட்டித் திரைச்சீலைக்குப் பின்னிருந்து ஒளி வீசச்செய்து, அவ்வொளி நிழலில் தெரியுமாறு பாவைகளைக் கயிற்றை இயக்கி ஆடச்செய்வது தோற்பாவைக் கூத்து. இது இன்றைய பொம்மலாட்டம்.

கூத்திற்குத் துணையான கருவிகள் : மேகம் இடி இடிப்பதைப் போல பேரொலி எழுப்பும் பறை; மெல்லிய நரம்புகளை மீட்டி இசை எழுப்பும் தூம்பு; வெண்கலத்தாலான தாளம்; மயில் தோகை அணிவித்து ஊதும் கொம்பு; யானையின் கை போன்று நீண்ட வங்கி; ஒலி மாத்திரை அளவையை அளக்கும் மாக்கிணை; ஊது கருவிகளான குழல், தட்டை, பதலை, சல்லி முதலியன கூத்திற்குரிய கருவிகள்.

இந்தநாட்டியம் சொல்லும் எட்டுவகையான ரசங்களையே நமது பழம்பெரும் இலக்கணநூலான தொல்காப்பியமும், எட்டு மெய்ப்பாடுகளாக சொல்கிறது. இவ்வெட்டு உணர்வுகளும் வெவ்வேறு 'வரி'களாக சிலம்பு இயம்புகிறது. சிலம்பம் என்ற கலை நாட்டியமான பரதநாட்டியத்தோடு ஒத்திருக்கிறது. அந்த வரிகளின் அடிப்படைகளையே தமிழரின் நடனத்தில் 'வர்ணம்' என்ற வரை முறைக்குள் தலைகாட்டுகின்றன.

தொடக்கத்தில் ஆண்களே கூத்துக்களை ஆடியிருக்கிறார்கள். அதை உறுதிசெய்வதுபோல் சிதம்பரத்தில் இருக்கிற சிவனுக்கு 'தில்லைக்கூத்தன்' எனப்பெயர் வைத்தனர். மணிவாசகர் சிவப்புராணத்தில் 'தில்லைக்கூத்தனே, தென்பாண்டி நாட்டானே' எனப்பாடுகிறார். இந்தக்கூத்தே இன்றைக்குப் பரதநாட்டியமாக மாறி நிற்கிறது.

பரதநாட்டியத்தின் மூலமானது தமிழகத்து மண்ணோடு சேர்ந்தது. 'இந்திய நடனங்களிலேயே பரதம் பெருமிதம் உடையது. தலைசிறந்தது' என்று இந்திய நடனக்கலையை ஆய்வு செய்த அமெரிக்கர் `Bharatanatya, The Pride of Indian Dance' என்று எழுதியுள்ளார். (The Dance in India by Faybian Bowers New York - 1955)

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, முதலிய தென்இந்தியாவில் பரதநாட்டியம் இக்காலத்தில் இருந்தாலும் இக்கலையை உண்டாக்கி வளர்த்தவர்கள் தமிழர்கள். பண்டைக்காலத்தில் கூத்தாக ஆடலாகத் தொடங்கிய இக்கலை காலப்போக்கில் பரதநாட்டியமாக உருமாறியது. இதன் மூலவேர்கள் தமிழ் மண்ணுக்கே உரியது. இக்கலையை நட்டுவர் என்னும் தலைக்கோல் ஆசான்கள் கற்றும் கற்பித்தார்கள். மாதவிக்கு நாட்டியம் சொல்லிக்கொடுத்தவனும் ஒரு ஆசானே.

தேவதாசிகள் என்னும் தேவரடியார் என்றும் பெயர்பெற்ற ஆடல் மகளிர் ③ பரதநாட்டியக்கலையைப் பயின்று கோயில்களிலும், பிற இடங்களிலும் ஆடினார்கள். அக்காலத்தில் அவர்களைத்தவிர ஏனையோர் பரதநாட்டியம் ஆடுவதில்லை. பிற்பாடு கோயில்களில் தேவதாசிகள் கூடாது என்று சட்டம் வந்தபிறகு இக்கலை மேல்மட்டத்தவர்கள் என்று சொல்பவர்கள் ஆதிக்கம் செலுத்துகிற கலையாக மாறியது.

பரதநாட்டியம் இப்போதும் தமிழர்களால் பயிலப்படுகிறது. பாடப்படும் இசைப்பாட்டிற்கேற்ப அபிநயங்காட்டி, பாவம் தோன்ற ஆடிக்காட்டுகிற இது மகளிர் மட்டும் ஆடுவதற்குரிய ஆட்டமாகிவிட்டது. இதற்குக் கைக்குறியீடுகள் இன்றியமையாதன. கைக்குறியீடுகளை முத்திரை என்பர். இந்த முத்திரைகளின் பொருளை அறியாதவர் பரதநாட்டியத்தைக் கண்டு இன்புறமுடியாது. ஆகவே பரதநாட்டியம் பார்ப்பவரும் பரதம் புரிந்தவராக அதற்கான அறிவு பெற்றவராக இருக்கவேண்டும். (இவ்விடத்தில் மேலைத்தேய Disco நடனம் ஆடுபவனுக்கும் அதைப் பார்ப்பவனுக்கும் ஆடல் அறிவே தேவையில்லை என்று சொல்லப்படுவதை நினைவில் கொள்க. Disco நடனம் உணர்வைத்தூண்டி அறிவை மயக்குகிற நடனமே).

பண்டைக்காலத்தில் நாட்டியக்கலை பயின்று தேர்ச்சிபெற்ற மகளிர் 'தலைக்கோலி' என்னும் பட்டத்தைப் பெற்றிருக்கின்றனர். தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டு ஆடற்கலையிலே தேர்ந்த தலைக்கோலிகள் பலர் இருந்தார்கள். கடைச்சங்கக் காலத்தில் இருந்த மாதவிக்கு சோழன் கரிகால்வளவன் அவளுக்கு 1008 கழஞ்சுப் பொன் மதிப்புள்ள பொன் மாலையையும், தலைக்கோலி என்னும் பட்டத்தையும் சிறப்புச் செய்தான் என்பதை சிலப்பதிகாரம் கூறுகிறது. பாடல் :

பின்னையும் அம்முறை பேரிய பின்றை
பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினாள் ஆதலின் காவல் வேந்தன்
இலைப்பூங்கோதை இயல்பினில் வழா அமைத்
தலைக்கோல் எய்தித் தலை அரங்கு ஏறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு
ஒருமுறையாகப் பெற்றனள் அதுவே. (சிலம்பு - அரங் : 156, 162)

ஆடல், பாடல் என்னும் கலைகளில் தேர்ந்த மகளிர்க்கு ④ 'தலைக்கோலி' என்னும் பட்டம் முற்காலத்தில் வழங்கப்பட்டது. இப்பட்டம் பெற்றவர்களைத் தலைக்கோல் அரிவை என்றும் கூறுவர். சோழர் காலத்துக் சாசனங்களில் தலைக்கோலிப்பட்டம் பெற்றவர்களின் பெயர்கள் சில காணப்படுகின்றன. நாட்டியக்கலையைப் பயில்விக்கும் நட்டுவருக்குத் தலைக்கோலாசான் என்னும் பெயரும் வழங்கி வந்திருக்கிறது. நாட்டியம் ஆடி முதிர்ந்த மகளிர்க்குத் 'தோரிய மடந்தையர்' என்றும் 'தலைக்கோல் அரிவையர்' என்றும் பெயர்கள் உண்டு.

மிகப்பழங்காலத்திலேயே தமிழர் பாடல், ஆடல், இசை வாசிப்பு என மூன்று பிரிவினரையும் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள். புறப்பொருள் வெண்பாமாலை

எனும் சங்க இலக்கியத்தில் யாழ்வென்றி, பாடல் வென்றி, ஆடல் வென்றி என இசைச்சார்பாக மூன்று வெற்றிகள் கூறப்படுகின்றன. (புறப் : 13, ஒழி : 15, 18)

பரதநாட்டியத்தைப்பற்றி தமிழிலும், சமஸ்கிருதத்திலும் நூல்கள் உள்ளன. வடமொழியில் இது இருப்பதால் இது வடஇந்தியக்கலை என்ற மயக்கம் உண்டு. வடவர்களின் ஆதிக்கம் இருந்தபோது தமிழில் இருந்த பரதநாட்டிய நூல்கள் வடமொழிக்குத் திட்டமிட்டு மாற்றினர். பிறகு மூலநூல்களை மறைத்து பரதநாட்டியமே வடஇந்தியக்கலை என்றனர். இது பைபிளை தமிழில் மொழிபெயர்த்துவிட்டு பைபிளே தமிழ் என்று சொல்வதற்கு ஒப்பாகும். தமிழரின் மொழி, இலக்கணம், இசை சங்ககால இலக்கியங்கள் என்பனவற்றை சுயவெறுப்பு இல்லாமல் ஆய்வுசெய்துப் பார்த்தாலே தமிழ் மொழிக்கென்று தனியான இசை, ஆடல், பாடல், நாட்டியம் என்பன இருந்தன என்பது உறுதியாகத் தெரியும். வடமொழியில் பரதநாட்டியம் கற்பிக்கப்படவில்லை. உண்மையிலேயே பரதநாட்டியம் வடமொழியில் ஆதியில் எழுதப்பட்டிருந்தால் அம்மொழியிலேயே விற்பன்னர்கள் வடஇந்தியாவில் உருவாகியிருக்கவேண்டும். நாட்டியத்தை இசையைச் சொல்கிற சிலப்பதிகாரம் போன்ற காவியநூல்கள் அம்மொழியில் இருந்திருக்கவேண்டும். ஆனால் அம்மண்ணுக்கே உரிய வேறுநாட்டியங்களே முன்னணியில் இருக்கின்றன.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய பழந்தமிழ் நூல்களில் இன்றைக்குப் பரதம் என அழைக்கப்படுகின்ற கூத்தைப் பற்றியும் குறிப்புகள் இருப்பதனால் அக்காலங்களிலேயே தமிழரிடையே ஆடல், கூத்து இருந்தன என்பது உறுதியாகின்றன.

இந்த கூத்தின் அடிப்படையில் காலமாற்றத்துடன் தோன்றி மருவிய புதிய வடிவங்கள்தான் கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் முதலியன.

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' என மகாகவி பாரதியார் புகழப்பட்ட சிலப்பதிகாரம் ஒன்றுதான் தமிழில் நாட்டியத்தையும், கூத்தையும் வர்ணித்த காவியம். தமிழ்மேல் காதல் கொண்டான் இளங்கோ அடிகள், சிலப்பதிகாரம் பிறந்தது. மாதவி என்ற நாட்டியத் தாரகைமேல் காதல் கொண்டான் கோவலன். மணிமேகலை என்ற காவியமும் உருவாகியது. ஆகவே பரதநாட்டியம் தமிழர் கலை என்பது தெளிவாகிறது. அதனை தமிழர் இசையைப் போல் மீட்டுருவாக்கம் செய்யப்படவேண்டும்; செய்யமுடியும். ஏனென்றால் அக்கலையின் மூலவேர்கள் தமிழ் மண்ணில் இருக்கின்றன.

மேற்கோள் நூல்கள் :

1. தமிழர் நாகரிகமும், பண்பாடும் : டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, யாழ்வெளியீடு, சென்னை - 1999
2. பதினோராடலும் பண்டைய கூத்தும் பெரும்புலவர் ப.அரங்கசாமி, பழனியப்பா பிரதர்ஸ்-2000.
3. நுண்கலைகள், மயிலை சீனி வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், 2001, சென்னை.
4. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் : மயிலை சீனி வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், 2000, சென்னை.

13. அணிகலன்

சூழலும் பூமிப்பந்தில் இருக்கின்ற பல்வேறு நாடுகளில் நகைகளை விரும்பாத மனித சமுதாயமே இருக்க முடியாது. இதுவரை ஒரு எழுத்தாளனாக ஐரோப்பிய நாடுகள் உட்பட பதினைந்துக்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் போய் வந்திருக்கிறேன். அங்கெல்லாம் வெள்ளியிலே செய்த ஏதாவது ஒரு நகையை அணிகின்றவர்களே அதிகம். பெண்ணியம், உச்சநாகரிகம் பேசுகிற மேலை நாட்டுப் பெண்களில்கூட நகைப் பித்தர்கள் இருக்கிறார்கள். மேலை நாடுகளில் வெள்ளி நகைகளுக்கு மதிப்பு என்றால் கீழைத்தேச நாடுகளில் தங்க நகைகளுக்கே மதிப்பு அதிகம்.

உலகம் முழுவதும் பரவியிருக்கிற தமிழர்களில் ஒரு பொட்டுத் தங்கம் இல்லாத தமிழரைத் தேட வேண்டியிருக்கும். தங்கம் தமிழர் வீடுகளில் தங்கும் செல்வம்; அது எந்த நாட்டிலும் மிகமதிப்பாய் உள்ள ஒன்று. அதனால்தான் போலும் வேறு எந்த பொருளைவிட தங்கத்துக்கான திருட்டே உலக அளவில் அதிகமாக இருக்கின்றது. குறிப்பாகத் தமிழர்களின் தங்க நகையைத் திருடுவதில் திருடர்களுக்கு ஆசை அதிகம். என் அனுபவப்படி ஆஸ்திரேலியாவில் பல மாநிலங்களில் தமிழர்களின் வீடுகளில் கொள்ளை தங்க நகைகளுக்காகவே நடந்திருக்கிறது. இதனை அறிந்த காப்புறுதி (Insurance) நிறுவனத்தினர் நகைகளை மட்டும் காப்புறுதி செய்ய மறுக்கின்றனர்.

ஆயிரம் திருட்டுகள் நடந்தாலும் தங்க நகைகளின் மதிப்பும் அதன் மீதான மோகமும் குறையவே இல்லை. அது தமிழர்களின் வாழ்க்கையோடு சேர்ந்தது. தங்கத்தில் நகை செய்து அணிவது மரபு சார்ந்த பண்பாடாகத் தொடர்ந்து வருகிறது.

பண்டைக் காலத்து தமிழர்களிலே ஆண்களும் பெண்களும் நகைகளை அதிகமாக அணிந்திருந்தார்கள். நகைகளை எவ்வளவு அதிகமாக அணிகிறார்களோ, அவ்வளவு நாகரிகமும் செல்வமும் உடையவர்களாக மதிக்கப்பட்டார்கள். இக்காலத்தில் அதிகமாக நகைகளை அணிகிறவர் அநாகரிகர் என்று கருதப்படுகின்றனர்.

பண்டைக்காலத்து மக்கள் நிறைய நகைகளை அணிந்ததற்கும் இந்தக் காலத்து மக்கள் மிகக்குறைவாக நகைகளை அணிவதற்கும் முக்கியக் காரணங்கள் உண்டு. அக்காலத்தில் ஆண்களும் பெண்களும் மிகக்குறைந்த அளவில் ஆடை அணிந்தார்கள். அரையில் மட்டும் ஆடையுடுத்தி, அரைக்குமேலே வெற்றுடம்பாக இருந்தார்கள். ஆண்களுக்கான சட்டை அக்காலத்தில் இல்லை. பெண்களுக்கும் இரவிக்கை இல்லை. எனவே பெண்களும் கீழே மட்டும் ஆடையணிந்து அரைக்கு மேலே வெற்றுடம்பாக இருந்தார்கள். உடம்பில் சட்டை அணிவதை

அநாகரிகமாக அக்காலத்தவர் கருதினார்கள். அரசர்களிடம் ஊழியம் செய்தவர்களே சட்டை அணிந்தனர். அவர்களை 'கஞ்சுகன்' என்றனர். சட்டைக்கு இன்னொரு பெயர் 'மெய்ப்பை'. தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிலிலே (பெரிய கோயில்) ① சோழர்காலத்து ஓவியங்களில் அரசன் முதல் ஆண்டி வரையில் ஆண் பெண் உருவங்கள் அரைக்குமேலே வெற்றுடம்பாகவே இருக்கின்றன. ஆனால் அந்த ஓவியங்களில் 'கஞ்சுகர்' மட்டும் சட்டை அணிந்திருந்தனர். கோவில்களில் காணப்படுகிற பழைய சிற்ப உருவங்களில் கீழே ஆடையணிந்து மேலே வெற்றுடம்பாகவே இருப்பதைக் காணலாம். ஆனால் பெண்கள் சங்ககாலத்தில் பட்டு உடுத்தியிருந்ததாக குறிப்புகள் இருக்கின்றன. பட்டினப்பாலையில்,

துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகில் உடத்தும் (பட்டினப்பாலை 106-107)

என்ற வரிகளில் இரவு பட்டு உடுத்தி கணவனோடு இருந்த மங்கையர் புணர்ச்சிக்கு முன்பு அதனைக் களைந்தனர். பின்பு இன்ப மயக்கத்தில் தங்களின் பட்டுச்சேலையை அணியாமல் பருத்தி ஆடைகளை அணிந்தனர் என்பது தெரிய வருகின்றது.

தமிழ்ப்பெண்கள் மேல்சட்டையால் (இரவிக்கை) உடம்பின் மேல்பகுதியை மறைக்கத் தொடங்கியது முஸ்லீம்களும், ஐரோப்பியரும் இந்திய உபகண்டத்திற்குள் கால்வைத்த பிறகுதான். தொடக்கத்தில் உயர்சாதிப் பெண்கள் மட்டும் மேலாடை அணியலாம் என்றும் கட்டுப்படுத்தினார்கள் 'மேல்' சாதியென சொல்லிக் கொண்டவர்கள். தாழ்த்தப்பட்டதாக சொல்லப்படுகிற சாதிப்பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்றார்கள். இதன் காரணமாக 'மார்ச்சீலைக் கலகம்' என்று கலகமும் சண்டையும் அக்காலத்தில் திருவாங்கூரில் நிகழ்ந்ததை (கேரளா) வரலாறு கூறுகிறது.

மேல்சட்டை நாகரிகம் வருவதற்கு முன்பு அக்காலத்து மக்கள் சட்டை அணியாததற்கும் அதுபற்றிய மாற்றுச்சிந்தனை தோன்றாததற்குக் காரணங்கள் இருக்கின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள். ஒன்று, வெப்பமான காலநிலை காரணமாக இருக்கலாம். மற்றது கழுத்திலே, நெஞ்சிலே இடுப்பிலே மேல் ஆடைபோல அணிந்த நகைகள், மார்பிலே உடையாய் எழுதப்பட்ட 'தொய்யில்' போன்றவை காரணமாக இருக்கலாம். இவை பெண்களுக்குப் பொருந்தக்கூடியவை. எனவே அக்காலப் பெண்கள் தலைமுதல் கால்வரையில் உடம்பு முழுவதும் நகைகளை அணிந்து பொன் காய்க்கும் மரம் போலக் காணப்பட்டனர்.

பழந்தமிழ் இலக்கியத்தைப் பார்க்கின்றபோது சங்க காலத்தமிழர் வாழ்க்கையிலும் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் செய்த நகைகள் மிகமுக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

சங்ககால அரசர் காலில் வீரக்கழலையும், கையில் தொடியையும், மார்பில் பலவகை அணிகளையும் அணிந்து வந்தனர். பொன்னில் கற்கள் வைத்து இழைக்கப்பெற்ற நகை 'இழை' எனப்பட்டது. மணிக்கற்களால் ஆன நகை 'கலன்' என அழைக்கப்பட்டது.

குழந்தை பிறந்தாலும் சில சடங்குகள் மேற்கொள்ளப்பட்டதை தொல்காப்பியம் 'புதல்வற்பயந்த புனிறுசேர் பொழுதின் நெய்யணி மயக்கம்' (தொல்–கற்பியல்–144) என்ற வரிகளின் மூலம் பிறந்த குழந்தைக்கான மங்கல வைபவத்தைப் பற்றி பேசுகிறது. அவை புதல்வன் முகம் காட்டுதல், ஐம்படைத்தாலி அணிவித்தல், பெயரிடுதல் ஆகியவையே. ஐம்படைத்தாலி என்றால் ஏதாவது ஒரு உலோகத்தில் செய்திருக்க வேண்டும். இதில் சங்கு, சக்கரம், தண்டாயுதம், வாள், வில் ஆகிய ஐந்து கருவிகள் இருக்கும். இந்த ஐந்து கருவிகளே ஐந்து படைகளாய் ஐம்படைத்தாலியாய் மருவி வருகிறது. இது தொல்காப்பியர் கால மறவர் சடங்கு, இதனை நெய்யணி மயக்கம் என்றனர்.



பழந்தமிழர் அணிகலன்கள்

பெண்களும் நகை அணிந்தனர் என்பது தொல்காப்பியர் பாடலில் தெரிகிறது;

கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடை பெயர்த்துடுத்தலோடு

(தொல்–பொருள் ; 1208)

அல்கு தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல், இருக்கையும் எடுத்தலொடு

(தொல்–பொருள்; 1209)

ஆகிய பாடல்களில் பெண்கள் அணிந்த நகைகளைப் பற்றி உடைகளைப்பற்றி குறிப்புகள் வருகின்றன. ஆக தொல்காப்பியர் காலத்திலிருந்தே நகை அணியும் பழக்கம் தமிழர்களிடையே இருந்திருக்கிறது என்பது உறுதியாகிறது.

பொதுவாக பழந்தமிழரிடம் இருபாலாரிடமும் நகை அணியும் பழக்கமும் அதனால் உண்டான ஒரு பண்பாடும் இருந்த போதும் பெண்களுக்கான நகை அணிகள்தான் அதிகம். பெண்களுக்குப் புன்னகையும் வேண்டும்; பொன்நகையும் வேண்டும் என்பார்கள். ஆனால் இன்று புன்னகை இல்லாவிட்டாலும் பொன்நகைக் கட்டாயம் வேண்டும் என்று ஆகிவிட்டது. அதனால் தொடக்கக் காலத்திலேயே விதவிதமான நகைகள் பெண்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

சங்ககாலப் பெண் ஒருத்தி என்னென்ன நகைகளை அணிந்தாள் என்பதை அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் சிலப்பதிகார கடலாடுகாதை உரையில் மேற்கோள் காட்டியிருக்கிறார். பாடல்; ②

அவ்வாய் மகரத்தணிகிளர் மோதிரம்
பைவாய் பசும்பொற் பரியக நூபுரம்
மொய்ம்மணி நாவின் முல்லையங் கிண்கிணி
கௌவிய வேனவும் காலுக் கணிந்தாள்.

குறங்கு செறியோடு கொய்யலங்கார
நிறங்கிளர் பூந்துகில் நீர்மை யினுடீஇப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
அறிந்த தமைவர வல்குற் கணிந்தாள்

ஆய்மணி கட்டி யமைந்த விலைச்செய்கைக்
காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக்
காமர் பொற் பாசங் கொளுத்திக் கவின்பெற
வேய்மருள் மென்றோள் விளங்க வணிந்தாள்.

புரைதபு சித்திரப் பொன்வளை போக்கில்
எரியவிர் பொன்பணி யெல்லன் கடகம்
பரியகம் வள்வளை பாத்தில் பவழும்
அரிமயிர் முன்கைக் கமைய வணிந்தாள்.

சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினைத்
தொங்க லருத்தித் திருந்துங் கயிலணி
தண்கடல் முத்தின் தகையொரு காழெனக்
கண்ட பிறவுங் கழுத்துக் கணிந்தாள்.

நூலவ ராய்ந்து நுவலரும் கைவினைக்
கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பிணை
மேலவ ராயினும் மெச்சும் விறலொடு
காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்.

கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகம்
சூளாமணியொடு பொன்னரி மாலையும்
தாழ்தரு கோதையுந்தாங்கி முடிமிசை
யாழின் கிளவி யரம்பையர் ஒத்தாள்.

இப்பாடலில் வருகிற நகை அணிகள் பல. அவற்றில் சிலவற்றை கீழே தருகிறேன்.

தலை அணிகள் : தெய்வ உத்தி, வலம்புரி, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி, சீதேவியார்.

சீதேவியார் என்பது சூளாமணி. இதற்கு இரத்தினச்சுட்டி, ஜடைப்பில்லை என்றும் பெயர் உண்டு. பல்லியின் உருவமாகச் செய்யப்பட்ட தென்பல்லி, வடபல்லி (இதிலிருந்து சங்கத் தமிழர்களிடம் பல்லி தலையில் விழுந்தால் பலன் பார்க்கிற சோதிடமும் அது சார்ந்த மூடநம்பிக்கைகளும் இல்லையெனத் தெரிகிறது. அவ்வாறு இருந்தால் பல்லி உருவத்தில் நகை செய்வாரோ?) எனப்படும் நகைகள். இவை தலையில் இடம் வலம் என அணியப்பட்டன. தொய்யகம், வாகுசுட்டி என்னும் நகைகள் நவரத்தினங்களால் செய்யப்பட்டவை. இவை தலையின் நடுவில் மயிரின் பிரிவில் அணியப்பட்டன. ③

காதணிகள் : வளைந்த குண்டலம், அணியைக்குழை, மரக்குழை, பொலங்குழை, ஒண்குழை, பூங்குழை, வார்க்குழை, சிறுகுழை, தோடு, பாம்படம், ஓலை.



காதிலே பெரிய துளைப்போட்டு தொங்கவிடுகிற பாம்படம் இன்றைக்கு குறைந்து விட்டது. பனை ஓலையைச் சுருட்டி அணிவதனால் ஓலை எனப்பெயர் பெற்றவையை ஏழைகள் அணிந்தனர். செல்வர்கள் பொன்னால் ஓலையைச் செய்து அணிந்தார்கள். வைரக்கற்கள் அழுத்திச் செய்யப்பட்ட வைர ஓலைக்கு 'சந்திரபாணி' எனப்பெயர். கம்மல், வைரத்தோடு பிற்காலத்தில் உருவாயின. காதிலே அணியப்பட்ட மற்றொரு நகை குதம்பை என்பது. பருத்த நீல மணியுடன் வைரக்கற்களைப் பதித்துச் செய்வது கர்ணப்பூ என்றும் செவிப்பூ என்றும் அழைத்தனர்.

கழுத்தணிகள் : வீரச்சங்கிலி, நேர்ச்சங்கிலி, ஞாண்சரப்பணி, முத்து மாலை, சவுடி, மங்கலநாண் (தாலி) முதுகு மறையவிடும் பின்தாலி.



வீரச்சங்கிலி என்பது சங்கிலிபோல் செய்யப்பட்டது. கயிறுபோல் செய்யப்பட்டது ஞாண்சரப்பணி, காசுமாலை என்பது பிற்காலத்தில் உண்டானது. அட்டிகையும் பிற்காலத்தில் வந்தது. பின்தாலி மேல்ஆடை இல்லாததால் முதுகை மறைக்கிற நகை. இது மறைந்து விட்டது.

இடையணிகள் : மேகலை, மணிமேகலை, ஒட்டியாணம்.



மேகலை என்பது பெண்மணிகள் அரையில் உடுத்த ஆடையின்மேல் அணியும் ஆபரணம். இது 32 முத்து வடங்களினால் பட்டையாக அமைக்கப்பட்ட அழகான அணிகலன். பிற்காலத்தில் இது தங்கத்தினால் வெள்ளியினால் செய்யப்பட்ட ஒட்டியாணம் எனப்பெயர் பெற்றது. (ஒரு சங்கப்பாடலில் கணவனை நீண்ட நாள் பிரிந்த மனைவியின் ஒட்டியாணம் இடைசிறுத்ததால் கீழே விழுந்ததாம்).

கையணிகள் : பொன்வளை, மணிவளை, சங்கவளை, பவழவளை, சித்திரவளை.



அக்காலத்தில் சங்கை வட்டவடிவமாக அறுத்துச் செய்யப்பட்ட சங்கு வளையல்களைப் பெண்மணிகள் அணிந்தார்கள். வளை என்றாலே சங்கு என்று அர்த்தம். ஏழைகள் சாதாரண இடம்புரிச்சங்கு வளைகளை அணிந்தனர். செல்வம் படைத்தோர் பூவேலை, கொடி வேலை நிரம்பிய பலவித வண்ணங்கள் அமைந்த சங்கு வளைகளை, வலம்புரிச்சங்கு வளைகளை அணிந்தார்கள். கண்ணாடி வளையல்கள் அணிகிற பழக்கம் இஸ்லாமியரின் வருகைக்குப் பிறகே வந்தது.

விரலணிகள் : பல்வகை மோதிரங்கள்.

அக்காலத்தில் கைவிரல்களுக்கும் கால்விரல்களுக்கும் மோதிரங்கள் அணியப்பட்டன. காலாழி கால்பெருவிரலிலும், மகரவாய் மோதிரம் கால் நடுவிரலிலும், பீலி என்பது கால்விரலிலும் அணியப்பட்டது. கையில் சுண்டு விரலுக்கு அடுத்த விரலில் அணியப்பட்ட மோதிரத்துக்குப் பெயர் பகுவாய் மோதிரம். மகரமீன் வாய்திறந்து அங்காந்திருப்பது போன்ற மோதிரம் நெளி ஆகும். மணி மோதிரம் நடு விரலில், ஆள்காட்டி விரலில் அல்லது சுட்டு விரலில் அணியப்படுவது. மரகதமோதிரம், ஏனாதி மோதிரம் என்பது படைத்தலைவர்களைப் பாராட்டி அரசர் அணிவிப்பது.

காலணிகள் : பரியகம், நூபுரம், படகம், சதங்கை, காற்கலி, சிலம்பு, வெண்சங்கு காலணிகள்.



அக்காலப் பெண்கள் காலில் அணிந்த பாடகம் என்னும் காலணி சிலம்புக்கு மேலே அணியப்பட்டது. சதங்கை என்பது காலுக்கு அணியும் ஆபரணம். குரங்குசெறி என்பது பெண்கள் காலுக்கு மேலே தொடையில் அணியும் ஆபரணம். காலணிகளில் சிலம்பு மிகமுக்கியமானது. பண்டைக் காலத்தில் பெண்களுக்குத் திருமணம் ஆனதும் 'சிலம்புகழி நோன்பு' என்னும் ஒரு சடங்கு நடைபெற்றது. அதில் சிலம்பு அணிவார்கள். அது

மறைந்து போயிற்று. ஆயினும் சிலம்பு சிலப்பதிகாரத்தில் முக்கியப் பொருளாக வருகிறது. தன் கணவன் குற்றமற்றவன் என நிரூபிக்க கண்ணகி காற்சிலம்பைக் கழற்றி நிலத்தில் அடித்து, மாணிக்கக் கற்களை உதிரவைத்து உண்மையை பாண்டிய மன்னனுக்குக் காட்டுகிறாள். இந்தக் காற்சிலம்புக் கதையே தமிழுக்கு மிகமுக்கியமான பண்டைத் தமிழ்க் காவியமாகிறது.

பொன் :

செல்வப் பொருளான தங்க நகைகளை இன்று பலர் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க விற்றுச் செல்லும் பொருளாக்கி விடுகின்றனர்; சிலர் அவற்றை ஈடுவைக்கின்றனர். அதே நேரத்தில் வேறுசிலரோ செல்வப் பொருளான தங்க நகைகளை வெளியே செல்லாப் பொருளாக வைத்துக் கொள்கின்றனர். ஒரு நாட்டின் நாணயப் பெறுமதியையும் அண்ணிய செலாவணி இருப்பையும் அந்நாட்டில் உள்ள தங்கம் நிர்ணயிக்கிறது. பெட்ரோலியத்துறை சார்ந்த உற்பத்தியில் முன்னணியில் இருக்கிற சவூதி அரேபியா அடுத்து வெளியே கொண்டுவரத் திட்டம் தீட்டியிருப்பது மண்ணில் இருந்து தங்கத்தைத் தான்.

உலக அளவில் கடத்தலிலும் தங்கம் முக்கிய பொருளாகக் கருதப்படுகிறது. அதற்கு காரணம் எந்த நாட்டிலும் செல்லும் பெறுமதி; உலகம் முழுவதும் ஏற்கும் ஒரு செல்வம். அத்தகைய இந்தத் தங்கத்தின் மூலம் பழந்தமிழர் காலத்திலேயே தமிழர்கள் அவற்றை நகைகளாக, ஆபரணங்களாக செய்கின்ற கலைநுட்பத்தைக் கற்றிருந்தனர்.

சிலப்பதிகாரத்தில் தங்கத்தைப் பற்றிய பல செய்திகள் தங்கவியலில் தமிழர்கள் முன்னோடிகள் என்பதைத் தெரிவிக்கின்றன. பொன்னில் (தங்கத்தில்) சாத்ரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் எனும் நான்கு வகைகள் இருப்பதாக

சாத்ரூபம், கிளிச்சிறை, ஆடகம்
சாம்பூநதம் என ஓங்கிய கொள்கையின்
பொலம்தெரி மாக்கள் கலங்குஅஞர் ஒழித்துஆங்கு

(சிலம்பு - 14; 201-205)

என்ற வரிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. மதுரையில் பொன் விற்க வீதியே இருந்திருக்கிறது. (இன்று இலங்கையில்தான் நகைக்கடைகள் அதிகமாக உள்ள ஒரு வீதி இருக்கிறது. அது செட்டியார் தெரு ஆகும்). அங்கு நான்கு வகைப் பொன்னின் தன்மையை ஆராயும் வணிகர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எந்தப் பொன் எங்கே விற்கிறது என்பதை மக்கள் அறியும் முகமாக பலவகைக் கொடிகளைப் பறக்கவிட்டு இருப்பார்கள்.

பழந்தமிழர் காலத்தில் காவிரி பூம்பட்டிணத்தில், மதுரையில் நகைகள் விற்க தனிவீதியே இருந்திருக்கிறது. அந்த நகைகளோடு அணிகலன்களுக்கு அழகு சேர்க்கும் நவரத்தினங்களும் விற்பனைக்கு இருந்திருக்கின்றன. நகைகளில் பொன் மட்டும் கொண்டு செய்யப்பட்ட நகைகளும், பொன்னில் கல் பதித்துச் செய்யப்பட்ட நகைகளும் என இருவகை நகைகள் குறிக்கப்பட்டுள்ளன. பொன்நகை செய்பவர் உருக்குத் தட்டார் என்றும், பொன்னில் கல்முத்துக்கள் பதித்து செய்பவர் இரத்தினப் பணித்தட்டார் என்றும் தொழில்ரீதியாக அழைக்கப்பட்டுள்ளனர். முதலில் பொன், வெள்ளி போன்றவற்றால் நகைகளைச் செய்ய பழந்தமிழர் முனைந்தனர். பிற்பாடு அந்த நகைகளின் மீது முத்து பதிக்கிற கலையிலும் முன்னேறினர். பாண்டியன் கோப்பெருந்தேவியின் காற்சிலம்பில் முத்துப் பரல்கள் இருந்தன. ஆனால் கண்ணகியின் காற்சிலம்பில் மாணிக்கப்பரல்கள் இருந்திருக்கின்றன.

பழங்காலத்தில்
ஒரு பெண் அணிந்த நகைகள்
(தலைமுதல் கால்வரை)

சிலப்பதிகாரத்தில் மாதவி எவ்வாறு தன்னை அணிசெய்து கொண்டாள் என்பதை அழகாக கூறுகிறது. பாடல் ; (சிலம்பு–கடல்–82–108)

அலந்தகம் ஊட்டிய அம்செஞ் சீறடி
நலத்தகு மெல்விரல் நல்அணி செறீஇப்
பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை
அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து

குறங்கு செறிதிரள் குறத்தினிற் செறித்து
பிறங்கிய முத்தரை முப்பத்து இருகாழ்
நிறம்கிளர் பூந்துலகில் நீர்மையின் உடீஇ
காமர் கண்டிகை தன்னோடு பின்னிய

தூமணித் தோள்வளை தோளுக்கு அணிந்து
மத்தக மணியோடு வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை
பரியகம் வால்வளை பவழுப் பல்வளை

அரிமயிர் முன்கைக்கு அமைவுற மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத்தாள் செறி
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து

சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை
அம்கழுத்து அகவையின் ஆரமொடு அணிந்து
கயிற்கடை ஒழுகிய காமர்தூமணி
செயத்தகு கோவையின் சிறுபுறம் மறைத்து ஆங்கு

இந்திரநீலத்து இடைஇடை திரண்ட
சந்திரபாணி தகைபெறு கடிப்பு இணை
அம்காது அகவையின் அழகுற அணிந்து
தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்குஅணி
மைஒர் ஓதிக்கு மாண்புற அணிந்து...

இனி என்ன என்ன நகைகள் என்பதை பார்க்கலாம்;

1) அழகிய மென் விரல்களில், நல்ல மோதிரங்கள்.
2) காலில், பரியகம், பாடகம், சதங்கை, கிண்கிணி, சிலம்பு.
3) தொடையில், குறங்குசெறி என்னும் அணி.
4) இடையில், முப்பத்திரண்டு முத்துக்களைக் கொண்டு செய்த விரிசிகை என்னும் அணியினை தனது அழகிய ஆடையின்மீது மேகலையாக உடுத்துவது.

5) தோளில், அழகிய கண்டிகை என்னும் அணியோடு சேர்த்துக் கட்டிய முத்து வளைகளைச் சாற்றுவது.

6) கை, முகப்பில் மாணிக்கமும் வயிரமும் வைத்து இழைத்த அழகிய வேலைப்பாடமைந்த கைக்கடகமும், செம்பொன்னால் செய்த கைவளையும்; கைச்சரியும், சங்கு வளையல்களும், பல்வகைப் பவழத்தாலான வளைகளும்

7) விரல், வாளை மீனின் திறந்த வாய்போல் அமைத்த முடக்கு மோதிரம், ஒளி உமிழும் செந்நிறக்கதிர் வீசும் மாணிக்க மோதிரம், 'தாள்செறி' என்னும் வளைந்த மரகதம் பதித்த மோதிரம்.

8) கழுத்து, வீரசங்கிலி, நுண்ணிய சங்கிலி, சரடு, சரப்பளி.

9) காது, இந்திரநீலக்கல்லோடு இடை இடையே பெரிய வயிரம் சேர்த்துக் கட்டிய குதம்பை என்னும் அணியை அழகிய காதிலே அணிந்து,

10) தலைஅணி – வலம்புரிச்சங்கு, தொய்யகம், புல்லகம்.

அடேயப்பா எத்தனை அணிகள்? இவ்வளவையும் சுமக்கிற சக்தி மாதவிக்கு இருந்திருக்கிறதே!

இவ்வாறு மாதவி அணிந்த நகைகளை வரிசைப்படுத்துகிறது சிலப்பதிகாரம்.



தோல் அணிகலன்கள்

அக்காலத்தில் பெண்கள் இடையில் ஆடைக்கு மேலே அணிந்த நகை மேகலை. அதில் மணிகள் பொறித்தால் மணிமேகலை (இலங்கையில் சிங்களப்பெண்கள் திருமணத்தின்போது இவ்வாறனா நகையை இடையில் அணிகின்றனர்) எனப்பெயர்பெறும். அதே போன்று பல்வேறு அணிகலன்களுக்குப் பொறுத்தமான பெயர் இட்டார்கள்.

அணி – அணிவதால் அணி.

பூண் – பூணப்படுவதால் பூண்

இழை – இழைத்துச் செய்யப்படுவதால் இழை. அது அணியிழை, ஒளியிழை, இலங்கிழை, பாசிழை, மாணிழை, ஆயிழை.

தொடி – முன் கைகளிலும் தோள்களிலும் தொட்டுக்கொண்டு இருக்கின்றவாறு அணியும் அணிகலன்களுக்குத் தொடி. அவை ஒண்டொடி, ஆய்தொடி, செற்தொடி, பைந்தொடி எனப்படும்.

குழை – காதில் அணியும் அணியைக் குழை என்பர். மகரக்குழை, பொலங்குழை, ஒண்குழை, பூங்குழை, வார்க்குழை, சிறுகுழை எனப்பல.

இவ்வாறு பெண்களுக்கான நகை ஆபரணங்கள் அணிகலன்கள் பழந்தமிழர் காலத்தில் இருக்க ஆண்களுக்கு அணிகலன்கள் இல்லையா என்ற கேள்வி எழும். பதில் ஆண்களுக்கும் இருந்தது. குறிப்பாக மன்னர்களின் நகை ஆபரணங்கள் மிக அற்புதமானவை.

பொற்கொல்லர் நூற்றுவர் பின்னேவர அந்தத் தலைமை பொற்கொல்லன் 'வேந்தர் முடிமுதற் கலன்கள் சமைப்பேன்' என்று கோவலனிடம் சொல்வதாக ஒரு செய்தி. மன்னர் முடி சமைத்தல் என்பது தொழில் நுட்பம் வாய்ந்தது. பொன்முடியில் பல்வகை உயர்ந்த கற்களைப் பதித்துச் சிறந்த வேலைப்பாடு கொண்டதாகச் செய்யப்படுவது. தாமம், முதுகுளம், பதுமம், கிம்புரி, கோடகம் என்றும் ஐந்து வகைத்தோற்றம் தெரியும்படி பலநிற மணிகளை இழைத்து, மின்னலைப்போல் ஒளிவிடும் திருவடியை முருகன் அணிந்திருந்தார் என திருமுருகாற்றுப்படையின் பாடல்மூலம் அறிய முடிகிறது.

சங்ககாலத்தில் ஆண்கள் கழுத்தில் சங்கிலி, கைவிரல்களில் மோதிரம், இடையில் அரைஞாண் கொடி, கால் விரல்களில் மிஞ்சி போன்றவற்றை அணிந்திருந்தனர். காதிலும் கடுக்கண் போன்றவை அணிந்தனர். ஆயினும் பெண்கள் அணிகின்ற நகைகளின் வர்ணனைகளே சங்கஇலக்கியங்களில் பரவிக்கிடக்கின்றன.

தங்கம் தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய சொத்தாக இன்றைக்கும் இருக்கிறது. தமிழரின் அணிகலன்களில் ஏதேனும் ஒன்று தங்கமாய் இருப்பது பழந்தமிழர்காலத்தில் இருந்து தொடரும் செய்தி. இன்றைக்கும் தமிழர் வாழ்வில் தங்கம் முக்கிய செல்வப்பொருளாக, சேமிப்புப் பொருளாக

இருப்பதுபோல்தான் சங்க காலத்தமிழர் வாழ்விலும் தங்கம் செல்வப்பொருளாகவே இருந்திருக்கிறது. மன்னர்கள் புலவர்களுக்குப் பரிசளிக்கும்போது பொன்னைத்தான் பரிசாகக் கொடுத்தார்கள். சுருக்கமாகச் சொன்னால் இனியத்தமிழுக்கு பொன் கொடுத்த காலம் பழந்தமிழர் காலம் என்பது இன்றைக்கும் வியப்பான செய்திதான்!

முத்துக்கள் :

தங்க நகைகளிலே பதிக்கின்ற ஒன்பது மணிகளில் அல்லது நவரத்தினங்களில் ஒன்றான முத்து, மணிகளிலே ராணிமுத்து என்று அழைக்கப்படும். அது உருண்டையாக முற்றுப்பெற்ற வடிவத்தில் உறுதிக்கும், மென்மைக்கும் பெண்மைக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதால் மணியரசி என்று சொல்வதும் உண்டு. ஆங்கிலத்தில் இதனை பேர்ல் (Pearl) என்று அழைப்பர்.



முத்துக்கள் பதித்த பண்டைய தமிழர் உடை

முத்து என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் முக்கியமான இடத்திலே இருப்பதற்கு அதன் சிறப்பே காரணமாகிறது. தேவதைகளின் கண்ணீர்த்துளிகளை முத்துக்கள் என்றனர். சிப்பியில் பிறந்தது முத்து என்ற உண்மையையே சொன்னார்கள் அறிஞர்கள். சிலப்பதிகாரத்திலே கண்ணகியை முதலிரவில் கோவலன் 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே' என்று சொன்னது இலக்கியமாக இருக்கிறது. சாதாரண மனிதர்கள் அழகான பெண்ணை 'முத்தே! மணியே' என்று புகழ்ந்தார்கள். உழைப்பவனின் உடலில் அரும்புகிற வியர்வையை 'முத்து முத்தாக' இருக்கிறது என்றார்கள். இவ்வாறும் இதற்கு மேலும் புகழ்பெற்ற முத்துக்களை மாலையாக அணிந்து கொள்வதே சிறப்பாகக் கருதப்பட்டது. முத்துமாலை மிக மதிப்புமிக்க அணியாகப் போற்றப்படுகிறது. தமிழ் மகளிர் முத்துமாலையை விரும்பி அணிந்து கொண்டதை சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

முத்து தமிழர் வாழ்க்கையோடு தொடர்புடையது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் முத்து விளைந்தது. கடலில் மூழ்கிய காவிரி பூம்பட்டினக்கரையே முத்துவிற்பனைக்கு உலகப் புகழ்பெற்றது. கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளில் அலெக்ஸாண்ட்ரியா நகரம்

புகழ்பெற்று விளங்கிய காலத்தில் தமிழகத்துத் துறைமுகங்களிலிருந்து முத்துக்கள் குவியல் குவியலாகக் கடல்கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்று வரலாற்றில் படிக்கின்றோம். ④

தென்னாடு முத்துடைத்து என்று அவ்வையார் சிறப்பாய் பாடுகிற பாண்டியநாட்டுக் கடற்கரையிலே முக்கியமாகக் கொற்கைத் துறைமுகத்திலே முத்துக்கள் வளங்கொழித்து ஒளிவீசிய சிறப்பையெல்லாம் பல வெளிநாட்டுப் பயணிகள் தங்கள் வரலாற்றுக் குறிப்புகளிலே வியந்து எழுதியிருக்கிறார்கள். ப்ளினி (Pliny), வில்லியம் வின்ஸெண்ட் (William Vincent) போன்றோரின் முத்துக் குறிப்புகள் முத்து முத்தாக இருக்கின்றன.

உலகப் புகழ்பெற்ற கடற்பயணி மார்க்கபோலோ இதுபற்றித் தமது பயணக்குறிப்பில் மிகவும் விரிவாகவே எழுதியிருக்கிறார் ; ⑤

'60 முதல் 70 அடிவரை ஆழமுள்ள கடற்பகுதிகளில் தமிழர்கள் முத்துக் குளிக்கிறார்கள். கப்பல், படகு முதலியவற்றைக் கடலிலே செலுத்திக் கொண்டுபோய் கப்பல்களுக்கு நங்கூரம் பாய்ச்சிவிட்டுக் கடலில் மூழ்கும் பயிற்சியிலே தேர்ந்தவர்களைக் கொண்டு பல வணிகர்கள் முத்து எடுக்கச் செய்கிறார்கள். ஏப்ரல் மாதம் முதல் மே மாதம் 15ந்தேதி வரை முத்துச்சலாபம் நடைபெறுகிறது. முத்துக் குளித்தலில் கிடைக்கிற தரமான முத்துக்கள் அரசனுக்கு வழங்கப்படுகின்றன. அரசன் அவற்றுக்குப் பரிசு வழங்குகிறான்.'

இவரைப் போன்றே வெளிநாட்டுப் பயணிகள் வேறுசிலரின் குறிப்புகளிலிருந்தும், தமிழகத்தில் அழகிலும் பருமனிலும் விலை மதிப்பிலும் மிகச் சிறந்த முத்துக்கள் ஏராளமாக விளைந்தன என்றும், கடல்கடந்த அயல்நாடுகளில் இவற்றை மிகவும் ஆசைப்பட்டு வாங்கிக் கொண்டார்கள் என்றும் அறிகிறோம். முத்துக்கள் கோத்த மிகமெல்லிய நேர்த்தியான பருத்தித் துணிகள் (Muslin) ஏராளமாக தமிழகத்திலிருந்து அயல்நாடுகளுக்குக் கடல்கடந்து சென்றன என்றும் இந்தக் குறிப்புகள் நமக்குக் கூறுகின்றன. கொற்கையைக் கொள்ளையடித்த மாலிகாபூர் 312 யானைகளில் முத்துக்களையும் பொன்னையும் டெல்லிக்கு ஏற்றிச் சென்றான் என்பது வரலாறு. இன்று காயல்பட்டினம் அருகே ஒரு சிற்றூராகக் கொற்கைச் சிறப்பிழந்து காணப்படுகிறது.

பொருள்நூல் செய்த சாணக்கியன் அதில் முத்துக்களின் வகைகளைச் சொல்லும்போது தமிழ்நாட்டு முத்துக்களை பாண்டிமுத்து என்று குறிப்பிடுகிறார். ரோமாபுரியில் இருந்த காதல் தேவதையான வீனஸ் சிலைக்கு தமிழ்நாட்டு முத்துக்களே காதணியாக விளங்கின. அரேபியர்கள் குதிரைகளைக் கொண்டு வந்து பாண்டிய மன்னர்களிடம் கொடுத்துவிட்டு அவற்றுக்கு விலையாக முத்துக்களைப் பெற்றுச் சென்றார்கள். தமிழ்நாட்டு முத்துக்களை ரோமாபுரி மன்னர்களும் வாங்கிச் சென்றார்கள். ஜெரூசலம்

நகரின் 12 வாயிற்கதவுகளிலும் முத்துக்கள் பதிக்கப்பட்டு இருந்தன என்று பைபிள் கூறுகிறது. இந்த முத்துக்கள் தமிழ்நாட்டில் இருந்து சென்றவையே.

சிலப்பதிகாரத்தில் முத்துக்கள் பற்றிய செய்தி நிறைய இருக்கின்றன. 'கண்ணகிக்கு மார்பில் தொய்யில்கொடி எழுதினாலே போதுமே! ஏன் பெரிய முத்துமாலை ஒன்றையும் சூட்டி உள்ளனர்?' என்று கேட்பதாக அதில் வருகிறது. மாதவி முற்றிய முப்பத்திரண்டு முத்துக்களைக்கொண்டு செய்த விரிசிகை என்னும் அணியினை அழகிய தனது ஆடையின்மீது மேகலையாக உடுத்தினாள் என்று ஒரு குறிப்பு வருகிறது. கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட முதல் சிங்கள அரசனான விஜயன் பாண்டிய மன்னனுடைய மகளை மணஞ்செய்து முடிசூடி அரசாண்டான். அவன் பாண்டிய அரசனுக்கு ஆண்டுதோறும் இரண்டு நூறாயிரம் பொன் மதிப்புள்ள முத்துக்களைச் செலுத்திக்கொண்டிருந்தான் என மகாவம்சம் எனும் வரலாற்றுநூல் கூறுகிறது.

பழங்காலத்தில் பல இடங்களில் முத்துக்கள் கிடைத்தன. ஆனால் அவை எல்லாவற்றையும்விட பாண்டி நாட்டு முத்துக்கள் உலகப்புகழ் பெற்றிருந்தன. துறைமுகப் பட்டினமான கொற்கையில் உண்டான பாண்டி நாட்டுமுத்து உலகப் புகழ் பெற்றிருந்தது. ரோம் தேசத்து நாகரிக மகளிர் பாண்டிநாட்டு முத்துக்களையே விரும்பி அணிந்தார்கள். பழங்காலத்து தமிழ் மகளிர் சிலம்பு எனும் அணியைக் காலுக்கு அணிந்தார்கள். சிலம்பு குடைச்சலாக அமைக்கப்பட்ட அணி. அதனுள்ளே பரற்கற்களை இட்டிருந்தால் அதனையணிந்த மகளிர் நடக்கும்போது ஓசையுண்டாகும். கொற்கைக் கடலில் முத்துக்களும் சங்குகளும் கிடைத்ததை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்துறை என்று நற்றிணை (23) கூறுகிறது.

முத்துக்குளிக்கும்போதும் சங்கு குளிக்கும்போதும் சங்கை ஊதி முழங்கித் தெரிவித்தார்கள் என்பதைச் சேந்தன்கண்ணனார் கூறுவதை இப்பாடல் தெரிவிக்கிறது;

இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்
குலவு மணல் நெடுங்கோட் டாங்கண்
உவக்காண தோன்றுமெஞ் சிறுநல்லூரே

(அகம் – 350; 10–15)

இப்பாடலில் முத்துக் குளித்தவர்கள் பரதவர் என்ற குறிப்பும் இருக்கிறது.

முத்துக்களைப் பற்றிய இவ்வகையான வரலாற்றுக் குறிப்புகளோடுகூட வேறுசில சுவையான குறிப்புகளும் தமிழ் இலக்கியங்களில் வருகின்றன. பரஞ்சோதி முனிவர் முத்துக்களில் இரண்டு வகைப்பற்றி கூறுகிறார். அவை நீரில் விளைவன, நிலத்தில் விளைவன ஆகும். முத்துக்கள் எவ்வாறு விளைகின்றன என்பது பற்றிய செய்தி ஒன்று வேடிக்கையானது. மழை பெய்யும்போது முத்துச் சிப்பிகள் கடலுக்கு மேலாக வரும் என்றும் சிப்பி வாய் திறந்து மிதக்கும் என்றும், சிப்பிக்குள் மழைத்துளி விழும் என்றும், அந்த மழைத்துளியே முத்தாக விளைகிறது என்பதே அந்தச் செய்தி; அது தவறானது. ⑥ சிப்பிக்குள் ஒருசிறுபுழு இருக்கிறது. அதற்கு ஆளி என்று பெயர். இது நத்தை இனத்தைச் சேர்ந்தது. இந்தச் சிப்பிக்குள் எப்படியோ ஒருபொடி மணல் போய்விடும். இந்த மணல் புழுவை உறுத்தும். உறுத்தல் இல்லாமல் இருக்க ஒருவித நீரை புழு சுரக்கும். அது சுண்ணாம்புச் சத்து உள்ள பளபளப்பான நீர். இந்நீர் மணலைச் சூழ்ந்து கொள்ளுகிறது. 'மெத்' என்ற உணர்வு புழுவுக்கு ஏற்படுகிறது. புழு மீண்டும் நீரைச் சுரக்கிறது. இவ்வாறு மேலே மேலே நீர் படிந்து அடுக்கு அடுக்காகக் கெட்டிப்பட்டுக்கொண்டே வருகிறது. இதுதான் பிறகு முத்தாக வருகிறது.

முத்துக்களில் பலவகை இருக்கின்றன அவை என்ன என்பதை ஒரு பழைய தமிழ் நூல் கூறுகிறது;

தந்தி வராகம், மருப்பு, இப்பி
பூகம், தனிக்கதலி,
நந்து, சலஞ்சலம், மீன்தலை,
கொக்கு, நளின மின்னார்
கந்தரம், சாலி, கழை, கன்னல்,
ஆவின்பல், கட்செவி, கார்,
இந்து, உடும்பு, கராம், முத்தம்
ஈனும் இருபதுமே!

என இருபது வகையான முத்துக்கள் சொல்லப்படுகின்றன.

வைரத்தின் மூலப்பொருள் கரி என்பது போலக்கடல் முத்தின் மூலப்பொருள் சுண்ணாம்புச் சத்தாகும். ஆகவே நாட்டு மருந்துகள் செய்யவும் முத்து பயன்படுகிறது. இக்கடல் முத்துக்களை வகைப்படுத்திய தமிழர்கள் இவற்றுக்குத் தனித்தனியே பெயரிட்டார்கள். வட்டம் என்பது உருண்டை முத்து. அனுவட்டம் ஒரளவு உருண்டது. ஒப்பு என்பது ஒளிவீசுவது. குறு என்பது சிறியது. கரடு என்பது முரட்டு முத்து, இரட்டை என்பது இரண்டும் இணைந்தது. சப்பத்தி என்றும் சக்கத்து என்றும் மேலும் இரண்டு வகைகளும் கூறப்படுகின்றன. இவை பழந்தமிழ் கொற்கை முத்துக்கள்.

மறப்போர்ப் பாண்டியர்
அறத்தின் காக்கும்
கொற்கையம் பெருந்துறை
முத்து

என்பது தமிழர்களின் இலக்கியம் மட்டுமல்ல, கடல் சார்ந்த தமிழரின் வரலாறு ஆகும். இவ்வரலாற்றில் பழந்தமிழரின் அறிவியலும் கலந்திருக்கிறது என்பதை கொற்கை முத்துக்களின் உலகப்புகழே ஆதாரமாகக் காட்டுகிறது.

பழந்தமிழர் இலக்கியம், ஓவியம், சிற்பம் என்பனவற்றில் இருக்கிற, தெரிகிற அணிநகைகளைப் பார்க்கும்போது அவர்கள் பொன்நகையிலும், அந்நகையில் முத்துக்கள் பதிப்பதிலும் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள் என்ற செய்தியே தமிழரின் அணியியலில் அறிவியல் நுட்பம் கொண்டவர்கள் என்பதைக் காட்டுகிறது.

ஒன்பது மணிகள் :

தமிழகத்து முத்துக்கள் உலகப்புகழ் பெற்றிருந்தாலும் தமிழர்கள் ஒன்பது மணிகள் (நவமணிகள்) பற்றிய விரிந்த அறிவியல் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் தங்கத்திற்கும் ஒன்பது மணிகள் என்கிற நவரத்தினக் கற்களுக்கும் ஒரு பெரிய மதிப்பு தமிழர் வரலாற்றில் பண்பாட்டு மரபுகளோடு இணைந்து காணப்படுகின்றது. அம்மதிப்பு பணமதிப்பு (பொருள் மதிப்பு) மனமதிப்பு என இரண்டாகும்.

ஒன்பது மணிகளைத் தங்கத்தில் பதித்து அணிகிற பழக்கம் நம் முன்னோர்களிடம் ஓர் அருங்கலையாகவே வளர்ந்து திகழ்ந்தது. பழந்தமிழ் இலக்கியங்களிலே இதுபற்றிய குறிப்பு இருக்கின்றது. பண்டைக்கால சிற்பங்களையும், ஓவியங்களையும் பார்த்தால் ஆடவரும், பெண்டிரும் ஒன்பது வகையான கற்களை மிகஅழகான கலைப்பாங்கோடு அணிந்து வந்திருக்கிறார்கள் என்பதைக் காணலாம்.

இந்த அணிகலக்கலை இத்தனை விரிவாக நமது சமுதாயத்தில் பரவியிருந்ததால் நகைச்சிற்பம் என்ற தொழிலோடுகூட இரத்தினப் பரீட்சை என்ற (ஒன்பது மணி சம்பந்தமாக) அறிவியல் கலையும் தமிழகத்தில் மிகநுட்பமாக வளர்ந்து வந்திருக்கிறது. ஒன்பது மணிகளை நகைகளில் பயன்படுத்துவதற்குப் பல தேர்வு முறைகளையும் கையாண்டு வந்திருக்கிறார்கள் தமிழர்கள். மணிகளின் கனத்தைச் சோதித்துப் பார்த்து அவற்றின் இரேகைகளையும் ஒளியோட்டங்களையும் ஆய்ந்து கண்டு, தனித்தனியாகப் பெயரிட்டு இவை, இவை நகைகளுக்குப் பொருந்தும் என்று வகைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒன்பது மணிகளின் கடினத்தையும், இறுக்கத்தையும் அளவிட்டுப் பார்த்து ஒன்று முதல் பத்துவரை ஓர் எண் அளவைக் கொடுத்திருக்கிறார்கள். நகைகள் செய்வதற்கு ஏற்புடைய மணி குறைந்தது எட்டு எண் அளவு கடினம் உடையதாக இருக்க வேண்டும் என்று அனுபவத்தில் கண்டு சொல்லியிருக்கிறார்கள். முத்து, பச்சை, மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம், வைரம் எனும் இந்த ஒன்பது மணிகளில் கடினம் குறைந்தது, பச்சை எனும் மரகதம் மிகவும் கடினம் உடையது வைரம், இதன அளவு எண் பத்து.

சிலப்பதிகாரத்தில் ஒன்பது மணிகளைப் பற்றி நிறைய செய்திகள் இருக்கின்றன. இந்தக் கற்களுக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றைப் பன்னிரண்டாகக் கண்டனர். அவற்றில் மோசமானது காசுபாதம் என்னும் குறைபாடு மேலும் இந்த காசுபாதம், அழுக்கு, புள்ளி, இரேகை என்னும் நான்கு வகைக்குறைகள் இல்லாதக் கற்களே சிறந்தவையாகும். இந்த ஒன்பது கற்களும் எப்படி இருக்க வேண்டும் என்பதை சிலப்பதிகாரம் ⑦ பேசுகிறது; (சில-14; 180-228)

1)	வைரக்கற்கள் (Diamond)	: நான்கு வகை நல்ல நிறமும், காசு பாதம் அழுக்கு, புள்ளி, இரேகை என்னும் நான்கு வகைக் குறைகளும் இல்லாது ஒளிசிந்த வேண்டும்.
2)	மரகதம் (Emerald)	: நீரோட்டம், கருமை என்னும் குற்றங்கள் இல்லாத பச்சை மரகதக் கற்கள்.
3)	மாணிக்கம் (Ruby)	: குறையில்லாப் பதுமம், நீலம், விந்தம், படிதம் என்னும் நான்கு வகையானவை.
4)	புட்பராகம் ((Topaz)	: பூசநட்சத்திரம் போன்று பூனைக்கண் போன்று பொன்ரேகை தெரிய வேண்டும்.
5)	வைடூரியம் (Lapis lazuli)	: தீதகன்ற சூரியனின் ஒளியும் தேனின் நிறமும் கொண்டிருத்தல் வேண்டும்.
6)	நீலம் (Sapphire)	: இருள் தெளிந்ததுபோல் ஒளிவிட வேண்டும்.
7)	கோமேதகம் (Sardonyx)	: மஞ்சளும் சிகப்பும் கலந்தவை.
8)	முத்து (Pearl)	: காற்று, மண், கல், நீர் இவற்றால் உண்டான அழுக்குகள் நீங்கப்பெற்று நல்ல ஒளிவீசும் வெள்ளையும் இளஞ்சிவப்பு நிறமும் உடையனவாய் இருக்க வேண்டும்.
9)	பவளம் (பவழம்) (Coral)	: நடுவில் துளை உள்ளவை, கல்லிடுக்கில் சிக்கியதால் வளைந்தவை, முறுக்கிக் கொண்டிருப்பவை என்னும் குறைகள் இல்லாதவை.

இவ்வாறு ஒன்பது மணிகளும் தமிழர்களின் சரித்திரத்தில் முக்கிய இடம்பெற்று ஒளிவீசுகின்றன.

இந்த ஒன்பது கற்களையும் நம் முன்னோர்கள் மேலும் ஆராய்ந்து இவற்றின் தோற்றம், சாயல்வகை, விலை மதிப்பு நவக்கோள் இயல், விஞ்ஞான முறையில் இவற்றை நீற்றி மருந்து செய்யும் முறை ஆகிய பல செய்திகளையும் நமக்குத் தந்திருக்கிறார்கள். நகைகளுக்கும், மருந்துக்கும் பயன்படுத்தியதோடுகூட இந்தக் கற்களைக் கண்ணுக்குக் கண்ணாடியாகவும் பயன்படுத்தினார்கள் என்றும், மன்னர்கள் போர் நிகழ்ச்சிகளைத் தொலைவிலிருந்து பார்த்து அறுதியிடுவதற்கு இந்த மணிகளைப் பொருத்திய தொலைநோக்கிகளை உபயோகித்தார்கள் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

தமிழரின் சங்ககால இலக்கியங்களின் குறிப்புப்படி கடல் முத்துக்கு அடுத்ததாக பவளம் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கிறது. வரலாற்றுப்படி தமிழர்கள் கடல் முத்தைக் கொண்டாடியதுபோலவே பவளத்தையும் (பவழம்) கொண்டாயிருக்கிறார்கள். இலக்கியத்தில், பக்தி இலக்கியங்களில் பவளம் முக்கியமாகிறது. கவிதைகளில் முத்தே என்று அழைத்த கவிஞர்கள் பவளம் என்றும் அழைத்தனர். பவள வாயும் பவள இதழும் காதற்கவிதைகளைப் பேசுகின்றன. இறைவனை 'பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்' என்று ஆழ்வார் பாடுகிறார். பவளக்கொடி நாடகம் ஒருகாலத்தில் புகழ்பெற்றது தமிழகத்தில். பவளத்திலும் பழுது உண்டு என்ற பழமொழியும் கண்டனர்.

பவளம் போன்ற சிவந்த எல்லாமே பவளம் என்று சிறப்புப் பெயர் பெற்றன. சித்தர்களின் இலக்கியத்தில் பவளம் குறிக்கப்படுகிறது. 'பளிங்கில் பவளம் பதித்தான் பதியே' என்கிறது திருமூலரின் திருமந்திரம். நாச்சியார் திருமொழியில் ஆண்டாள், 'திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ' என்று பாடுகிறார். பரிபாடலில் படையும் பவழக்கொடி நிறம் பெறும் என்று வருகிறது. மணியிடை பவளம் போல என்கிறது அகநானூறு. பவளத்தில் வளையல் செய்து அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறது இன்னொரு தமிழ் இலக்கியம்.

செக்கச் செவேர் என்ற பவளத்தை பெண்களின் செவ்விதழுக்கு உவமை சொல்வது இலக்கிய மரபு. பவளம் போன்ற சிவந்த எல்லாமே பவளம் என்று அடையாளப் பெயர் பெற்றன. உடலில் ஓடும் இரத்தத்திற்குப் பவளநீர் என்ற பெயர் உண்டு. மேலும் பவழமல்லிகை, பவளக்கொடி, பவளப்பூண்டு எனப் பவளத்தோடு ஒட்டிய தாவரங்கள் இருக்கின்றன. சிவந்த சோளம் பவளச் சோளம் என்றும் சிவந்த மல்லி பவளமல்லி என்றும் சொல்லப்படுகின்றன.

பவளத்திற்குச் சிறப்பு தருவதே அதன் சிவப்பு நிறமே. இது கடலில் பிறக்கிறது. முத்தைப் போலவே கடலில் வெதுவெதுப்பான நீர்ப்பகுதியில் மட்டுமே பவளம் விளையும். ஆழமும் கூடாது. ஆகவே இது ஆசியாவுக்கே உரியது என்கிறார்கள்.

⑧ பவளம் உற்பத்தி ஆவதே அதிசயமாகத்தான் தெரிகிறது. கடலில் ஒரு வகைப் பூச்சி வாழ்கிறது. அதனைப் பவளப்பூச்சி என்பார்கள். இந்தப் பவளப்பூச்சிக்கு ஏராளமான கால்கள் இருக்கின்றன. கரையான்கள், எறும்புகள், புற்றுக்கட்டி வாழ்வது போல பவளப்பூச்சிகளும் ஒருவகை புற்று கட்டுகின்றன. கடல் நீரில் உள்ள சுண்ணாம்புச் சத்தை உறிஞ்சி எடுத்து, அதைக் கொண்டு புற்று கட்டுகின்றன. மண் புற்று போல் இருக்காது மரம்போலத் தோன்றும். மான் கொம்பு போல இதற்குக் கிளைகள் இருக்கும். இதற்குப் பவளக்கொடி என்று பெயர்.



பவளத்திட்டுகள்

பவளக்கொடியின் வளர்ச்சிக்கு அளவே கிடையாது. பவளப்பூச்சிகள் கூட்டமாக வாழும் இடங்களில் புற்று விரிந்து பரந்து கடலுக்கு மேலாகவும் வந்துவிடும். அதுதான் பவளத்தீவு என்று அழைக்கப்படுகிறது. இது காலம் செல்லச் செல்ல பாறைபோல் இறுகிப் போகும். இதனைச் சுண்ணாம்புப் பாறை என்றும் பவளப்பாறை என்றும் சொல்வார்கள். இலட்சத்தீவுகளைச் சுற்றியும், பவளக்கொடிகள் இருக்கின்றன.

பவளக்கொடிகளை வெட்டித்தான் பவளம் தயாரிக்கிறார்கள். கடலுக்கு அடியில் கிடக்கும் பவளக்கொடிகளை வலைவீசி அள்ளிக்கொண்டு வருவார்கள். இவற்றைத் துண்டுகளாக வெட்டிப் பட்டைத் தீட்டுவார்கள். பட்டை தீட்டதீட்ட 'செக்கச்செவேர்' என்று அது பளபளக்கும்.

மருந்துகள் தயாரிக்கவும் பவளம் பயன்படுகிறது. குருதியில் கொழுப்பைக் (கொலஸ்டிரால்) குறைக்கவும், இதயத்தில் குருதி

உறைவதைத் தடுக்கவும், இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் பவளம் உதவுவதாக சித்த வைத்தியம் சொல்கிறது. பவளத்தின் சிறப்புக்கு ஏழு இலக்கணங்களையும் பழந்தமிழர்கள் கண்டிருக்கிறார்கள். கொவ்வைக் கனியின் நிறம், மழுமழுப்பு, அடிபடாத செம்மை, நன்முதிர்வு, நீளம், வட்டம், பரப்பு என்பனவே அந்த ஏழாகும். இவ்வேழும் பொருந்தியுள்ள பவளமே மதிப்பு மிக்கது.

பழந்தமிழர் இலக்கியங்களின் வழி தமிழர் முத்து பவளம் உட்பட ஒன்பது மணிகள் பற்றியும் அறிந்து ஆய்வு செய்து அவற்றின் தன்மைகளை அறிந்திருந்தனர். அவர்கள் ஒன்பது நிறங்களில் கிடைத்த மணிகளை நவமணிகள் என்றார்கள். இவற்றைத் தமிழில் ஒன்பான் மணிகள் அல்லது ஒன்பது மணிகள் என்றார்கள்.

பண்டை நாளில் மணிகள் நிறைந்த நாடாக தமிழ்நாடு விளங்கியிருக்கிறது. சிலப்பதிகாரம் உட்பட்ட பலதமிழ் இலக்கியங்களில் மணிகளைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. நற்றிணையில் மலைப்பன்றிகள் (வாழையம் சிலம்பில் கேழல் கெண்டிய நிலவரை விநத் பலவறு – நற்றிணை; 399) நிலத்தைத் தோண்டியபோது மணிகள் வெளிப்பட்டன எனச் சொல்லப்படுகிறது. மணிகள், முத்துக்கள், பொன் விற்கும் வணிகர் மதுரை நகரக் கடைவீதியில் இருந்ததை மதுரைக்காஞ்சி (505) 'பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு' என்று சொல்கிறது. பல ஆண்டுகளுக்கு ⑨ முந்திய ஆதித்தநல்லூர் முதுமக்கள் தாழிகளில் மணிகள் கண்டு எடுக்கப்பட்டன. கொங்கு நாட்டைச் சேர்ந்த கொடுமணம் கி.மு. 2ம் நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டின் மணிநகராக விளங்கியது. இவையெல்லாம் தமிழ் நாட்டில் மணிகள் மலிந்து கிடந்ததற்கும் சிறப்புற்று விளங்கியதற்கும் சிறந்த சான்றுகளாகும். இவற்றைப் பார்க்கின்றபோது மண்ணில் இருந்தும் கடலில் இருந்தும் ஒன்பது மணிகளைக் கொணர்ந்து அவற்றைப் பட்டைத் தீட்டி பளபளக்க வைக்கிற தொழிலில் பழந்தமிழர் முன்னோடியாக இருந்து கற்களை அறிவியல் ரீதியாக ஆராய அடித்தளம் போட்டனர் என்பது உறுதியாகிறது.

மேற்கோள் நூல்கள் :

① தமிழர் நாகரிகமும் பண்பாடும் – முனைவர் அ.தட்சிணாமூர்த்தி.

②③ நுண்கலைகள் – மயிலை சீனி வேங்கடசாமி.

④ பழங்காலத் தமிழர் வாணிகம் – மயிலை சீனி, வேங்கடசாமி – 1995 - NCBH, சென்னை.

⑤ தமிழர் நாகரிகமும் பண்பாடும், டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி – 1994, யாழ் வெளியீடு, சென்னை.

⑥ நவமணிகள் – முனைவர் அ.அய்யூப்–2002 நவமணி பதிப்பகம், சென்னை.

⑦ சிலப்பதிகாரம் – தெளிவுரை – ஞா.மாணிக்கவாசகன் – 2002 – உமா பதிப்பகம் – சென்னை.

⑧⑨ நவமணிகள் – முனைவர் அ.அய்யூப்–2002 நவமணி பதிப்பகம், சென்னை.

14. தாவரவியல்

மனிதன் ஆதிவாசியாய் வாழ்ந்த காலத்தில் காற்று, மழை, மின்னல், இடி என்பனவற்றைக் கண்டு பயந்து அவைகளின் மூலமாக தனக்குத் துன்பம் வரக்கூடாது என்பதற்காக அவற்றோடு நேசம் கொள்ளும் நோக்கோடு வணங்கத் தொடங்கினான். அதே நேரத்தில் காற்றில் அசைந்து மழையில் நனைந்து இடி, மின்னலைத் தாங்கி நின்ற பெருமரங்களின் மீதும் அவனுக்கு சிநேகம் ஏற்பட்டது. அந்த சிநேகம் வழிபாடாக மாறியது. இந்த மரவழிபாடு ஆதிகாலத் தமிழர்களிடையே பரவலாக இருந்திருக்கிறது.

இவையெல்லாம் மனிதன் தன்னிலை அறியாத காலத்தில் ஏற்பட்டவை. பிறகு அவன் தன்னைஅறிந்து, உலகை அறிந்து உலகவியல் உணர்ந்து நாகரிகம் கற்றபோது பலவற்றில் தெளிவு கொண்டான். அந்த அவன் என்பவன் தமிழன் என்று சொல்வது ஆசையின் நிமித்தம் அல்ல. அறிந்த செய்தியின் ஆழம் புரிந்தே.

மரம், செடி, கொடி, புல், பூண்டு போன்ற தாவரங்களோடு தமிழனுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல தொடர்புகள் இருந்திருக்கின்றன. அவனுடைய சமூக, பண்பாட்டு நிகழ்வுகளில்கூட தாவரங்களின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்திருக்கின்றன. இன்று தாவரவியல் (Botany) என வளர்ச்சியடைந்த தாவர அறிவியலில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் தெளிவு பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். அதற்கு தொல்காப்பியம் ஆதாரம் தருகிறது. மேல்நாட்டினர் தாவரங்களுக்கு உயிர் உள்ளது என்பதை ஒப்புவதற்கு முன்பே தாவரங்களுக்கு உயிர் உள்ளது என்பதை தொல்காப்பியம் ஒரு பாடலில் ஒப்புவிக்கிறது;

புல்லும் மரனும் ஓரறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நந்தும் முரளும் ஈரறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
சிதலும் எறும்பும் மூவறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நண்டும் தும்பியும் நான்கு அறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மாவும் மாக்களும் ஐயறிவு இனவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மக்கள் தாமே ஆறறிவு உயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே!

(தொல்காப்பியம் – பொருளதிகாரம் – 1527)

மேற்படி பாடலில் தாவரங்கள், விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள், பறவைகள், ஊர்வன மற்றும் உயிரினங்கள் பற்றியும், அவற்றின் அறிவு பற்றியும் தொல்காப்பியம் மிகத்தெளிவாகத் தாவர விஞ்ஞானத்தோடு பேசுகிறது. அவற்றை மிகத்தெளிவாகக் கீழே தருகின்றேன்.

புல், மரம் ஓர் அறிவு உயிர்கள்.

நத்தை, சங்கு இரு அறிவு உயிர்கள்.

எறும்பும் பாம்பும் மூவறிவு உயிர்கள்.

நண்டும், தும்பி நாலு அறிவு உயிர்கள்.

விலங்குகளும், மனிதர்களில் விலங்குகளும் ஐந்து அறிவு உயிர்கள்.

மனிதர்கள் ஆறு அறிவு உயிர்கள்.

இவற்றை இன்னொரு பாடலில் வேறு வகையாக மிகுந்த அறிவியலோடு பேசுகிறது தொல்காப்பியம்;

ஒன்று அறிவதுவே உற்று அறிவே
இரண்டு அறிவதுவே அதனோடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

(தொல்காப்பியம் - பொருள் - 1526)

இப்பாடலின் கருத்து;

உடம்பால் மட்டும் அறிவன ஓர்அறிவு உயிர்கள்.

உடம்பு, நாவால் அறிவன ஈரறிவு உயிர்கள்.

உடம்பு, நாவு, மூக்கு என மூன்றால் அறிவன மூவறிவு உயிர்கள்.

உடம்பு, நாவு, மூக்கு, கண் என நான்காலும் அறிவன நாலறிவு உயிர்கள்.

உடம்பு, நாவு, மூக்கு, கண், காது என ஐந்தால் அறிவன ஐயறிவு உயிர்கள்.

உடம்பு, நாவு, மூக்கு, கண், காது என ஐந்தோடும் மனத்தாலும் அறிவன ஆறு அறிவு உயிர்கள்.

ஆக இதிலிருந்து தெரிவது என்னவென்றால் தொல்காப்பியக் காலத்திலேயே தமிழன் தாவரங்களுக்கு உயிர் உண்டு எனக்கண்டு எழுதியிருக்கிறான். அதுமட்டுமில்லாமல் மரங்களின் உணர்வு, மிருகங்கள் ஏனைய உயிரினங்களின் தன்மை பற்றியும் தொல்காப்பியம் பேசுகிறது;

புறக்காழனவே புல் என மொழிப
அகக்காழனவே மரம் என மொழிப

(தொல்காப்பியம் - பொருள் - 1585)

என்ற பாடலில் மரங்களிடையே புல், மரம், என இருவகை இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

பனை, தென்னை போன்றவை புல் வகையைச் சேரும். அவற்றின் ஓரத்தில் வயிரம் பாய்ந்து இருக்கும். வேம்பு, தேக்கு என்பன மரம் வகையைச் சேரும். அவற்றின் நடுவே வயிரம் பாய்ந்து இருக்கும். இவை யாவுமே ஓர் அறிவு உயிர்கள். புயல்காற்று அடித்தால் பனை, தென்னை வீழ்ந்துவிடும். ஆனால் வேம்பு, தேக்கு போன்றவை புயலை எதிர்த்து நிற்கும்.

புல்லின் (உதாரணம் தென்னை) உறுப்புகள் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை என்பனவாகும். மரத்தின் உறுப்புகள் இலை, முறி, தளிர், கோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என்பனவாகும். காய், பழம், தோல், செதிள், விழுது போன்றவை இரண்டிற்கும் பொது.

இவ்வாறு தொல்காப்பியம் தாவர அறிவியல் பேசுகிறது. தொல்காப்பியம் தமிழ்மொழிக்கான இலக்கண நூல். அவ்வாறுதான் பெரும்பான்மையான தமிழர் நினைக்கிறார்கள். அதில் உண்மையுண்டு. ஆனால் அதற்குமேல் தொல்காப்பியம் தமிழ் இலக்கணத்தைப் பேசிக்கொண்டே தமிழர் வாழ்வியல் இலக்கணத்தையும் – தமிழரோடு தொடர்பான தாவர அறிவியலையும் பேசுகிற உண்மையைக் கவனிக்கவில்லை. தமிழ்மொழி இலக்கணத்தைப் பேசிய தொல்காப்பியம்தான் மனிதனைப்பற்றி பேசுகிறது; மரங்களைப் பற்றி பேசுகிறது; உயிர் இனங்களைப் பற்றி பேசுகிறது. ஆறறிவு கொண்ட மனிதர்களில் உயர்ந்த பண்புகளால் சிறந்த மனிதர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். அவர்களை மாமனிதர்கள் என்றும் அழைப்பார்கள். அதேபோல் தாவரங்களிலும் உண்டு என்கிறது தொல்காப்பியம். அதனை வியக்க வைக்கும் அறிவியலாய்த் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக நாய் ஐந்து அறிவுடையது. ஆனாலும் ஆறு அறிவு கொண்ட மனிதனைவிட அதற்கு ஒரு சக்தி இருக்கிறது. அதுதான் மோப்பசக்தி. அந்த மோப்ப சக்தியை வெகுநுட்பமாகப் பயன்படுத்தி மனிதன் சாதிக்க முடியாததை நாய் சாதித்து மனிதனுக்கு உதவுகிறது. அதனால் நாய் ஐந்து அறிவைவிட ஓர் அறிவு அதிகம் கொண்டது என்று சொல்ல முடியாது. ஆனால் அவற்றுக்கு மனிதனால் அறிய முடியாத நுட்பமான அறிவு உண்டு. இது சில மரம், செடி, கொடிகளுக்கும் பொருந்தும். மிக நுட்பமான உணர்வு தாவரங்கள் சிலவற்றுக்கும் உண்டு என்பதை உதாரணங்களோடு பார்ப்போம். நிலவு தோன்றுவதை முன்கூட்டியே உணர்ந்து கொண்டு மாலை நேரத்தில் அல்லி மலருகிறது;

சூரியன் தோன்றுவதை முன்கூட்டியே உணர்ந்து கொண்டு காலை நேரத்தில் தாமரை மலரும் மலருகிறது. எதுபட்டாலும் இலைகளைச் சுருக்கும் தொட்டாற்சிணுங்கிச்செடி; சூரியன் நகரும் திசை நோக்கும் சூரியகாந்தி. இவை மனிதனால் கண்டு அறிய முடியாத நுட்பமான உணர்வு; அபூர்வமான உணர்வு. அவை என்ன என்பதை மரங்களை, செடி, கொடிகளை நேசித்தவர்களுக்கே புரியும்.

தென்னை, வாழை, பனை ஆகியவை நுண்உணர்வு நிரம்பிய மரங்கள். கறிவேப்பிலை, துளசிச்செடி, தூதுவளை என இன்னும் பல மூலிகைச் செடிகளின் உணர்வு நிலை நுட்பமானது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து, அறிந்து, புரிந்து, தெளிந்துதான் தொல்காப்பியம் தாவர அறிவியல் பேசுகிறது.

19ம் நூற்றாண்டில் ஜெகதீஸ் சந்திர போஸ் என்ற இந்திய விஞ்ஞான மேதை தாவரங்களுக்குரிய உணர்ச்சி, அறிவு நிலைகளை விஞ்ஞானக் கருவிகள் கொண்டு எடுத்துக்காட்டி மெய்ப்பித்தார். அவற்றை விஞ்ஞானிகள் உலக அளவில் ஏற்றனர். ஆனால் அவருக்கு முன்பாகவே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக தொல்காப்பியம் தாவரங்களின் அறிவு பற்றியும், உயிர்பற்றியும் மற்ற உயிரினங்களின் அறிவு பற்றியும் அவைகளின் உயிர்கள் பற்றியும் விபரமாக அறிவியலோடு பேசுகிறது. அவற்றை இன்றைய தாவர அறிவியலோடு ஒப்பீடு செய்தால் பழந்தமிழர்கள் தாவர அறிவியல் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள் என்ற உண்மை தெரிய வருவதோடு அதுவே வியப்பையும் தோற்றுவிக்கும்.

தாவரங்கள் :

தொல்காப்பியத்தில் வருகிற இந்த தாவரவியல் மற்றும் அதுசார்ந்த அறிவியல் ஒரே நாளில் ஒரே மனிதர் கண்டு பிடித்து வந்ததா என்ன? இல்லை. அதற்கு முன்பே அவர் இலக்கணம் செய்யப் புகுந்த மொழியிலும் அந்த மொழியைப் பேசும் மக்கள் மத்தியிலும் அறிவியல், தாவரவியல் சம்பந்தமான ஆய்வு நெடுங்காலமாக நடந்திருக்க வேண்டும். அந்த ஆய்வு காலத்திற்கு காலம் புதுப்பிக்கப்பட்டு புதுவடிவம் பெற்று வந்திருக்கும். அந்த ஆய்வின் அடிப்படையிலேயே தொல்காப்பியத்தில் தாவர அறிவியல் மிகத்தெளிவாக வருகிறது.

பனை, தென்னை, கமுகு ஆகியவை 'புல்' என்றும் வேம்பு, தேக்கு ஆகியவை 'மரம்' என்றும் தொல்காப்பியம் சொல்வது தாவரவியலோடு சம்பந்தப்பட்டது மட்டுமல்ல நுண்ணுயிர் சம்பந்தப்பட்டது. இந்நுண்ணுயிர் தொடர்பால் சில மரங்களை அன்போடு அழைப்பதுபோல் தாவரவியல் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக வாழைக்கன்று என்றும் தென்னம்பிள்ளை என்றும் தமிழில் அழைப்பதில் தாவர விஞ்ஞானம் இருக்கிறது. இதனை அனுபவக் கதை விளக்கிச் சொல்லும்.

பிரபல தமிழக எழுத்தாளர் மீ.ப.சோமு என்று அழைக்கப்படும் மீ.ப.சோமசுந்தரம் அவர்கள் அரசமுறைப் பயணமாக அயர்லாந்து நாட்டின் பெல்பாஸ்ட் (BelPast) என்ற நகருக்குப் போயிருக்கிறார். அங்குள்ள அரசினர் தோட்டத்தில் வாழை மரங்களையும், தென்னை மரங்களையும் அவர் பார்த்தார். ஆச்சரியப்பட்டார். அயர்லாந்து குளிர் பிரதேசம். ஆனால் எவ்வாறு அம்மரங்களை வளர்த்தார்கள் என்பதை அறியமுற்பட்டபோது அவர் மேலும் ஆச்சரியம் அடைந்தார்.

அந்த தாவர தோட்டத்தின் தலைவர் ஒரு பெரிய தாவர விஞ்ஞானி. பெரிய கொட்டகை போன்ற கூடாரம் அமைத்து அதில் மின்சார விளக்குகளைப் பொருத்தி அவற்றின் மூலம் வெப்பமான சூழலை உண்டாக்கி மரங்களைக் கண்காணிப்போடு வளர்த்தாராம்.அதை நேரில் பார்த்த தமிழ் எழுத்தாளர் பாராட்டியிருக்கிறார்.

அப்போது அந்த அயர்லாந்து விஞ்ஞானி சொன்னார்; ① 'எனது தாவர விஞ்ஞான ஆராய்ச்சியில் ஒரு விந்தையான அனுபவம் என்னவென்றால் மரங்களிலேயே வாழையும், தென்னையும் மிகவும் பண்பாட்டு உணர்வு கொண்ட மரங்களாக இருக்கின்றன. வாழைமரம் ஒரு விருப்பமான வளர்ப்பு (Pet Animal) பிராணி என்றால் தென்னை மரம் ஒரு வளர்ப்புப்பிள்ளை என்றே சொல்வேன். ஒரு நாய்க்குட்டியை அல்லது ஒரு குழந்தையை வளர்ப்பதுபோல் ஒரு குறிப்பிட்ட காலம்வரை இந்த மரங்களைச் சீராட்டி தாலாட்டி வளர்த்தேன்.'



அவர் சொன்ன வார்த்தைகளில் ஒரு தந்தையின் பாசஉணர்வு இருந்தது. அவர் மேலும் சொல்கிறார்; 'வாழைமரத்தை ஒரு சிறிய பசு என்று சொன்னால் தென்னை மரத்தை ஒரு சிறிய குழந்தை அல்லது சிறுபிள்ளை என்றே அழைப்பேன். ஏனென்றால் அவற்றின் நடத்தையும் (Behaviour and Attitude) போக்கும் அப்படி இருக்கிறது.'

இதைக் கேட்டதும் வியப்படைந்த தமிழ் எழுத்தாளர் தமிழ்மொழியில் வாழைக்கும் தென்னைக்கும் உள்ள சிறப்புக் குறியீட்டுப்பெயர்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்; "எங்கள் தமிழ்மொழியில் வாழையைக் கன்று என்றும் தென்னையைத் தென்னம்பிள்ளை என்றும் பலநூறு ஆண்டுகளாக அழைத்து வருகிறோம்!".

அதற்குப்பிறகு அந்த தமிழ் எழுத்தாளர், தமிழர்களின் தாவர அறிவியலையும், பல்வேறு செடி, கொடிகளுக்கு இருக்கின்ற தனித்தனியான சிறப்புப் பெயர்களையும், புனிதமான மரங்கள் என்று குறிப்பிட்ட மரங்களை வழிபடுகிற தமிழர்களின் மரபையும் விளக்கிச் சொன்னபோது அந்த அயர்லாந்து விஞ்ஞானி சொன்னது அவரை வியப்பின் எல்லைக்கே கொண்டு போயிற்று; 'தமிழின் மொழி வல்லுநர்களும் தமிழ்ச்சமுதாயமும் தாவர விஞ்ஞானம் நிரம்பிய நாகரிகத்துக்கு உரியவர்களாகவும் முன்னோடிகளாகவும் இருந்திருக்கிறார்கள்! வேறு மொழிகளில் இது போன்ற தாவரவியலோடு ஒத்துப்போகிற சொற்களே இல்லை'.

அந்த அயர்லாந்து விஞ்ஞானி சொன்னது அத்தனையும் உண்மை. தென்னையும் வாழையும் பண்பாடு நிரம்பிய மரங்கள் என்றார் அயர்லாந்து விஞ்ஞானி. அதுபோலவே கறிவேப்பிலையும் நுண்ணுணர்வு கொண்ட ஒரு தாவரம். அதையும் கண்ணு என்றே தமிழர் அழைத்தனர். அதே போன்று மாங்கன்று. துளசியை துளசியம்மா, துளசி மாதா என்று அழைக்கின்றனர். அதேபோல் சிலவற்றை பிள்ளை என்கிறோம். புலிக்குட்டி, பூனைக்குட்டி என்கிறோம். ஆனால் அணிலை அணிற்குட்டி என்று அழைப்பதில்லை; அணிற்பிள்ளை என்கிறோம். காக்கையைக் குஞ்சு என்கிறோம். ஆனால் கிளியைக் கிளிப்பிள்ளை என்கிறோம். இதெல்லாம் இலக்கணம். ஆனால் இந்த இலக்கணத்துக்குள் தாவரவியலும், விலங்கியலும், பறவையியலும் நுட்பமாகப் பொதிந்து கிடக்கின்றன. தமிழ்மொழிக்கு இலக்கணம் சொல்லவந்த தொல்காப்பிய நூலில் தாவரவியல் (Botany) உடற்கூற்றியல் (Biology) பறவை இயல் (Ornithology) விலங்கியல் (Zoology) என்று இன்று தனித்தனியே நாம் பிரித்துக் கொண்டுள்ள பல்வேறு துறைசார்ந்த அறிவியல் பரவிக்கிடப்பது ஒரு பெரிய அதிசயமான உண்மை.

தொல்காப்பியம் தந்த தொல்காப்பியர் இத்தனை அறிவியலையும் ஒரே நாளில் ஒரே மனிதராக இருந்து கண்டு பிடித்தாரா, இல்லை? அவருக்கு முன்பே அவர் இலக்கணம் செய்யப்புகுந்த மொழியிலும், அந்த மொழியைப் பேசும் மக்கள் சமுதாயத்திலும் அத்தனை அறிவியல் இருந்து, அந்த அறிவியல் அனைத்தும் பேச்சுமொழியிலே ஏறி, கலைச்சொற்களாக வழங்கியது என்பதையே தொல்காப்பியம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

தமிழ் விவசாயிகள் எந்த எந்த பருவங்களில், காலங்களில் எந்த எந்த பயிர்களை, மரங்களை நடவேண்டும்; அதற்கு எந்த எந்தக் காலத்தில் என்னென்ன நோய்கள் வரும் என்பன போன்ற விபரங்களையெல்லாம் விரல்

நுனியில் வைத்திருந்தார்கள். அவையெல்லாம் தலைமுறைத் தலைமுறையாய் பெற்றுக்கொண்ட அனுபவக் கல்வியில் பெற்ற தாவர விஞ்ஞான அறிவேயாகும்.

தாவரங்கள் உயிருள்ளவை என்றும், அவற்றுக்கு ஓர் அறிவே உள்ளது என்றும் முன்னோடியாகத்தான் கண்டிருக்கிறார்கள். அது மட்டுமில்லாமல் தாவரங்களுக்கு பல்வேறு வகையான காரணப்பெயர்களையும் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் மரம், செடி, கொடி, புல், பூண்டு என்பன அடங்கும். இவற்றையும் தமிழனின் தாவர விஞ்ஞானம் காரணத்தோடு அறிவியல் பார்வையில் வகைப்படுத்துகிறது.

ஆல், அரசு, வேம்பு, அத்தி, மா, பலா, வாழை, பூவரசம் (இன்னும் பல) போன்ற மரங்களின் இலைகளுக்கு மட்டும் 'இலை' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அகத்தி, பசலி, வல்லாரை போன்றவற்றின் இலை இலையாகாமல் 'கீரை' ஆகின்றது.

மண்ணிலே படர்கின்ற கொடி வகை இலைகளுக்குப் 'பூண்டு' என்று பெயராகின்றது.

அறுகு, கோரை முதலியவைகளின் இலைகள் 'புல்' ஆகின்றன.

மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'தழை'.

நெல், வரகு முதலியவற்றின் இலைகள் 'தாள்' ஆகும்.

சப்பாத்தி, கள்ளி, தாழை இனங்களின் இலைகளுக்குப் பெயர் 'மடல்'.

கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகள் 'தோகை' என்றாகின்றது.

தென்னை, கமுகு, பனை முதலியவற்றின் இலைகள் 'ஓலை' என்றே சொல்லப்படுகின்றது.

இவ்வாறு தாவரங்களுக்கு வழங்கிவரும் சொற்களுக்குள்ளே இலக்கணம் மட்டுமல்ல தாவரவியல் அறிவியலும் அடங்கி இருக்கிறது. அதே நேரத்தில் இச்சொற்களை எல்லாம் விவசாயிகளும், சாதாரண மனிதர்களும் பேசிவந்திருக்கின்றனர். இதுவே தமிழரின் தாவர அறிவியல் எளிமை படுத்தப்பட்டிருப்பதற்குச் சான்றாகும்.

மேலைநாடுகளில் வீட்டுத் தோட்டங்களில் மலர்ச்செடிகளை மட்டுமே வளர்த்து வந்தார்கள். எதற்கும் உதவாத மரங்களை அழகுக்காக மட்டுமே வளர்த்தார்கள். ஆனால் தமிழர்கள் வாழை, தென்னை, முருங்கை, மாதுளை, எலுமிச்சை, கறிவேப்பிலை, மஞ்சள், துளசி, கீரை வகைகள் என பலவற்றை வீட்டுத் தோட்டங்களில் தொன்று தொட்டு வளர்த்து வந்தார்கள். இவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் காய், கனி, இலை, கீரைகள் அன்றாட வாழ்வில் மருந்தாகவும், விருந்தாகவும் தமிழர்களுக்குப் பயனாயின.

ஆனால் இன்று கள்ளிச் செடிகளையும், எதற்கும் உதவாத மரங்களையும் குப்பைக் கொடிகளையும் வீட்டுத் தோட்டமாய் வளர்ப்பதை நாகரிகம் என நினைக்கின்றனர்.

நாகரிகம் என்பதுவும் நாகரிகத்தால் வருகிற மாற்றங்களும் மனிதனுக்கு அவ்வப்போது வந்தவையாகும்; அவற்றை அவ்வாறு மாற்றிக் கொள்ள வேண்டியது அறிவியல் தெரிந்தவனின் கடமையாகும். எனவே இந்த மண்ணுக்குப் பொருத்தமான தாவரங்களை மனிதர்களுக்கு உதவுகின்ற அறிவியலில் வீட்டுத் தோட்டத்தில் நடுவதே உயர்ந்த நாகரிகமாகும். இந்த நாகரிகம் தொல்காப்பியக் காலத்தில் இருந்தது என்பதே வியப்பானது தானே?

மரங்கள் :

சங்ககாலத் தமிழர்கள், தாம் வாழ்ந்த மண்ணை ஐந்து திணை நிலங்களாக அடையாளம் கண்டதே மண்ணியல் (Geology) ஆய்வுக்கு எடுத்துக்காட்டாகும். அவை மலையும் மலை சார்ந்த குறிஞ்சி, கடலும், கடல் சார்ந்த நெய்தல், காடும் காடு சார்ந்த முல்லை, வயலும் வயல் சார்ந்த மருதம், வளம் குன்றிய பாலை என ஆகும். இந்த ஐந்தும் சங்கத் தமிழர்களின் உயிர்ச்சூழல் வட்டம் என்று குறிப்பிடலாம். இவ்வைந்து நிலப்பகுதிகளில் என்ன என்ன தாவரங்கள் வளரும் என்பதைப் பற்றியெல்லாம் சங்க காலப் புலவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக அவர்களுக்கு முன்பே தொல்காப்பியம் பேசியிருக்கிறது.

தாவரங்கள் இயற்கையின் கொடை. அவைகள் மனிதனுக்கும், மண்ணுக்கும் சுற்றுப்புற சூழலுக்கும் செய்து வரும் நன்மைகளைப் பழந்தமிழர்கள் அறிந்தே இருந்தார்கள். அவர்களின் அந்த அறிதலில் (Knowledge) அறிவியல், தாவரவியல் என்பன இருந்தன.

அக்காலத்தில் (தாவரங்கள்) மரங்கள், செடி, கொடிகளின் மகத்துவம் நன்கு உணரப்பட்டிருக்கிறது. மரங்களை ஏற்றிப் போற்றியிருக்கிறார்கள். மகிழ்ச்சியான மங்களமான வைபவங்களுக்கு மரங்களை, மலர்களை தமிழர் தெரிவு செய்திருப்பது நாகரிகத்தின் அடையாளம்தான். மங்களகரமான வைபவங்களுக்கு குலைதள்ளிய வாழைமரங்களையே ஆதிக்காலத்தில் வெட்டி பயன்படுத்தினார்கள் அவர்கள். இவ்வாறு குலைதள்ளிய வாழைமரத்தை வெட்டுவதால் மரத்துக்கோ, சுற்றுப்புறச்சூழலுக்கோ கேடில்லை.

குலை தள்ளினால் வாழைமரத்திற்கு வாழ்வு முடிந்து போகும். எனவே வெட்ட வேண்டிய மரத்தை வெட்டினார்கள். இது முடிவில் இருந்து முடிவை எய்துகிற பழக்கம், பண்பாடு. ஆனால் இன்று நவராத்திரி, சரஸ்வதி பூஜை, விநாயகர் சதுர்த்தி ஆகிய நாட்களில் குலை தள்ள வேண்டிய குட்டி

வாழைகளை வெட்டிக்கொணர்ந்து கொண்டாடுகிறார்கள். அந்த குட்டி வாழைகள் குலை தள்ளும் பருவத்தை எய்த வேண்டும். ஆனால் மனிதர்கள் நலத்துக்காக குட்டி வாழைகளை வெட்டித் தள்ளுகிறார்கள். தாவர அறிவியல் உள்ளவர்கள் இதனைச் செய்யமாட்டார்கள். தாவரங்களுக்கும் உயிர் உண்டு. எனவேதான் இந்த மரங்களைக்கூட

1) வீட்டு மரங்கள்

2) காட்டு மரங்கள்

3) கோவில் மரங்கள்

எனத் தமிழரின் தாவர அறிவியல் கண்டறிந்துள்ளது. அவற்றில், (உதாரணத்திற்கு)

வீட்டு மரங்கள்; வாழை, தென்னை, மா, பலா, முருங்கை

காட்டு மரங்கள்; தேக்கு, வாகை, பூவரசம்.

கோவில் மரங்கள்; ஆல், அரசு, வேம்பு, கொன்றை, வில்வம். இவற்றில் ஆல், அரசு, வேம்பு ஆகிய பெருமரங்கள் 'மும்மரம்' எனத் தமிழில் அழைக்கப்படுகிறது. இம்மரங்களில் ஒரு அறிவியல் மறைந்துள்ளது. இவ்வகை மரங்கள் ஏனைய மரங்களுக்கு மாறாக இரவில் 'கரியமில வாயுவை' (CARBONDIOXIDE) வெளித்தள்ளுகின்றன. பகலில் மனிதர்க்குத் தேவையான பிராண வாயுவைக் கொடுக்கின்றன. எனவே இம்மரங்களுக்கு கீழே பகலில் உறங்கச் சுகம் என்றும், இரவில் இம்மரங்களின் கீழே உறங்கக்கூடாது என்றும் பழந்தமிழர்கள் கண்டறிந்தார்கள். ஆனால் ஏன் இரவில் உறங்கக்கூடாது என்பதற்கான உண்மையான காரணத்தைச் சொல்லாமல் பேய், பிசாசு, ஆவி போன்றவற்றை இம்மரங்களோடு தொடர்பு படுத்தி புனைகதைகள் கட்டினார்கள். பிறகு சிறுதெய்வ வழிபாட்டுச் சின்னங்களை இவ்வகை மரங்களின் கீழ்வைத்தார்கள். இரவில் இம்மரங்கள் வெளித்தள்ளும் கரியமிலவாயு மனிதர்களுக்கு உகந்தது அல்ல என்பதால் அவற்றைத் தவிர்க்க மறைமுகக் கதைகள் கட்டப்பட்டன.

வீட்டு மரங்கள், கோவில் மரங்கள் என்பனவற்றில் இருந்துதான் மங்களகரமான வைபவங்களுக்கான மரங்களை, இலைகளை, கொடிகளை சேகரித்தனர் தமிழர்கள். மலர்களைக் கூட கோவில், வீட்டுப் பகுதிகளில் உள்ள செடிகளில் இருந்தே எடுத்தார்கள். முற்றிப் பழுத்த பூக்களைப் பறிப்பதனால் செடிகளுக்கு கெடுதல் இல்லை. ஆனால் இன்றைக்கு மொட்டையும் பறிக்கிறார்கள். இதனால் மலர் உற்பத்திக்கு முட்டுக்கட்டையே போடப்படுகிறது. பூத்த மலரில்தான் வண்டு மகரந்தச் சேர்க்கைக்காக அமரும். மலராத மொட்டைப் பறிப்பதால் இயற்கையாக அது பூப்பதும் மகரந்த சேர்க்கைக்கான வாய்ப்பும் இல்லாமல் போகிறது. ஆனால் பழந்தமிழர் பூத்த மலர்களையே கொய்தனர்.

மலர்கள் தமிழரின் வாழ்வில் பின்னிப் பிணைந்தது. ஒரு தமிழர் (ஆண், பெண்) வாழ்க்கையில் இருமுறை மிகப்பெரிய அளவில் மாலை சூடப்படுகின்றது. மங்கலம் என்றால் மகிழ்வோடு திருமணத்தின் போது பூமாலைகள் சூடப்படும். அமங்கலம் என்றால் சாவில் மாலைகள் சூடப்படும். அது போக பெண்ணுக்குப் பூப்பெய்தினால் மாலை சூடப்படும். தமிழரைப் பொறுத்த வரையில் கழுத்து, தலை, கூந்தல் ஆகிய மூவிடங்களே மலர்சூடும் இடம். பெண்ணின் கூந்தல் மலர், பெண்ணின் தலையில் கொண்டையில் சூடிய மலர் பார்ப்பவர்களை எழுச்சிக் கொள்ள வைக்கும். இவ்வாறு மலர்களைச் சூடுவதால் (மிகச் சிலருக்கே ஒவ்வாது) பெரும்பாலானவர்களுக்குக் கெடுதல் இல்லை. இம்மலர்களின் மணம் எவ்வித எதிர்விளைவையும் உண்டாக்காது.

பத்துப்பாட்டு என்ற சங்க கால இலக்கியத்தில் (குறிஞ்சிப்பாட்டில்) 99 பூக்களின் பெயர்கள் பட்டியலாய் வருகின்றன. இன்றைக்கு எவரிடமாவது தெரிந்த பூக்களைக் கேட்டால் மல்லிகை, முல்லை, கனகாம்பரம், தாமரை, செவ்வந்தி, செம்பருத்தி, அல்லி, தாழம்பூ, அரளிப்பூ, வாடாமல்லி, சூரியகாந்தி என்பார்கள். அதற்குமேல் வேறு பூக்களின் பெயர் உடனே வராது. சிலர் வேடிக்கையாக வாழைப்பூ என்பார்கள். இன்னும் நகர்ப்புறங்களில் ரோஜா, டிசம்பர்ப்பூக்கள், லில்லி, சன்ப்ளவர், புளூபிளவர் என ஆங்கிலத்தில் வரிசைப் படுத்துவார்கள். அவர்களின் கற்றல் அவ்வாறு சொல்ல வைக்கின்றன. அவர்களுக்கு பூக்களோடு தமிழர்கள் நெருங்கியவர்கள் என்பது தெரியாது. பூக்களைப் பூக்க வைப்பதோடு அவர்கள் அந்தப் பூக்களில் மாலை கட்டியவர்கள். மலர்மாலை என்ற பண்பாட்டு சின்னம் உலகில் வேறுநாடுகளில் இல்லை. விதவிதமான மலர்களைக் கொய்து அழகான மாலை கட்டுவதில் வித்தை செய்தவர்கள் தமிழர்கள். இன்றைக்குத் தமிழர்கள் குடியேறிய மேலைநாடுகளில் தமிழர்களால் போடப்படுகிற மாலைக்குத் தனி மரியாதை உண்டு. செவ்வாய்க் கிரகத்துக்கு கோள் அனுப்பிச் சாதனை செய்கிற அமெரிக்கன் கழுத்தில் விழுகிற பூமாலையைப் பார்த்து வியந்து போய், மாலை விழுந்த நிகழ்ச்சியில் அவன் இருக்கும் வரை அந்த பூமாலையைக் கழட்டாமல் இருக்கிறான். அதன்மூலம் மாலை கட்டிய கலைஞனையும் அவன் செயலையும் மதிக்கிறான் அவன்.

பூக்கள் இயற்கையின் ராகங்கள்; பூமாலை அந்த ராகங்களால் உருவான பாடல். பூமாலை மேல்நாட்டவருக்கு வராத கலை. அவர்களின் பூச்செண்டு கூட வேடிக்கையாக இருக்கும். ஆனால் தமிழர்களின் பூச்செண்டு கலைநயமிக்கது. தமிழர்களின் மலர் அறிவியல் மகத்தானது. எனவேதான் பாடல் பாட வந்த இலக்கியப் புலவர்கூட குறிஞ்சிப் பாட்டில் பூக்களை வரிசைப் படுத்துகிறார். அவை;

'அனிச்சம்பூ, ஆம்பல்பூ, அவரைப்பூ, அசோகம்பூ, அகிற்பூ, ஆவிரம்பூ, குறிஞ்சிப்பூ, காந்தள், குவளை, வெட்சி, செங்கொடு வேரி, தேமா, செம்மணிப்பூ, பெருமூங்கிற்பூ, கூவிளம், எறுழம்பூ, மராமரம்பூ, கூவிரம், வடவனம், வாகை, வெட்பாலைப்பூ, எருவை, செருவிளை, கருவிளம்பூ, பயனி, வாணி, குரவம், பச்சிலைப்பூ, மகிழம், காயாம்பூ, சிறுமூக்கிற்பூ, சூரைப்பூ, சிறுபூளை, குன்றிப்பூ, குருகிலை, மருதம், கோங்கம், மஞ்சாடிப்பூ, திலகம், பாதிரி, செருந்தி, அதிரல், சண்பகம், கரந்தை, காட்டு மல்லிகை, மாம்பூ, தில்லை, முல்லை, குல்லை, பிடவம், செங்கருங்காலி, வாழைப்பூ, வள்ளி, நெய்தல், தாழை, தளவம், தாமரை, ஞாழல், மௌவல், கொகுடி, சேடல், செம்மல், சிறுசெம்குரலி, வெண்கோடல், கைதை, சுரபுன்னை, காஞ்சி, கருங்குவளை, பாங்கர், மரவம், தணக்கம், ஈங்கை, இலவம், கொன்றை, அரும்பூ, ஆத்தி, பகன்றை, பலாசம், வஞ்சி, பித்திகம், கருநொச்சிப்பூ, தும்பை, துழாய், நந்தி, நறவம், தோன்றி, புன்னாகம், பாரம், பீர்க்கம், குருக்கத்தி, சந்தனப்பூ, புன்னை, நரந்தம், நாகப்பூ, நள்ளிருள்நாறி, குருந்தம், வேங்கை, எருக்கு, பாலைப்பூ' என 99 பூக்களின் பெயர்கள் பட்டியலாய் வருகின்றன. இவற்றில் பல பூக்களை நாம் இன்னும் பார்க்கவில்லை என்பது சோகமானது. அதே நேரத்தில் இம்மலர்களில் மாலையாகச் சூடவும் வேறு பண்பாட்டு வைபவங்களுக்குப் பயன்படுத்தவும் அறிவியல் பார்வையில் அழகான நல்ல மணம் வீசக்கூடிய (மலர்கள்) சிலவற்றையே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் தமிழர்கள். இலைகளை வீட்டுக்கு எடுத்து வந்ததில்கூட அறிவியல் உண்டு. உணவு உண்ணப் பயன்படும் வாழை இலை உடல்நலத்திற்கு ஒப்பானது. சுற்றுப்புறச் சூழலுக்கு நட்பானது. மணம் வீசக்கூடிய அதே நேரத்தில் மருந்தாகவும் பயன்படும் துளசி இலைகளுக்காக அதை வீட்டில் வளர்த்தார்கள்.

நோய் பரவுவதை தடுக்கும் சக்தி கொண்டது என்பதால் தானே, அம்மை போட்டவர்களின் படுக்கையிலும், தலைமாட்டிலும் வேப்பிலைகளை வைத்தார்கள். எத்தனையோ வகைச் செடிகள் இருக்க கறிவேப்பிலையை சமையலுக்குப் பயன்படுத்துவதை எந்தப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்தது? சமையலுக்கு கறிவாழை உகந்தது என எவ்வாறு மொழிந்தார்கள்? அதற்கெல்லாம் நமது முன்னோர்களுக்கு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்து வந்த அறிவியல் கலந்த தாவரவியலே அடித்தளமாகின்றது. அவற்றை அறிவியலோடு இன்றைக்கு எண்ணிப்பார்த்தால் அவற்றைப் பின்பற்றிய நமது முன்னோர்கள் வியப்புக்குரியவர்களாவார்.

தாவர அறிவியல்

உலக வரலாற்றைப் பார்த்தால் பெரிய மரங்களோடு மனிதனின் வாழ்வும் பண்பாடும் தொடங்கியிருப்பது தெரியவருகின்றது. ஆஸ்திரேலிய கறுப்பு இன ஆதிவாசிகள் மிகப்பெரிய மரங்களை அதிசய சக்தி கொண்டவையாக எண்ணிப்போற்றியிருக்கிறார்கள். அப்போற்றுதல்

ஆப்பிரிக்க, அமெரிக்க (செவ்விந்தியர்கள்) பழங்குடி மக்களிடமும் இருந்திருக்கிறது. தமிழர்களும் பெரிய மரங்களோடு நாகரிகத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். நிழல் தரும் மரங்கள் கல்விக்கூடங்களாக சமூக மன்றங்களாக இருந்திருக்கின்றன.

தமிழும் தாவரமும் ஆதித்தமிழனின் வாழ்வியற் செயற்பாடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. பிரிக்கவியலாப் பிணைப்புடையவை ② உயிர்ப்பொருளும் உயிரற்ற பொருள்களும் யாவும் அணுக்கள் இம்மிகளின் சேர்க்கையேயாகும். எல்லாப் பொருள்களும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்பவையேயாகும். மனிதன் உயிர்வாழ அடிப்படையான உயிர்வளியை (Oxygen) உள்ளிழுத்து கரியவளியை வெளியேற்றியாக வேண்டும். மனிதன் வெளிவிடும் கரிய வளியை (CARBONDIOXIDE) ஏற்றுக்கொண்டு மாந்தர்க்கு வேண்டிய உயிர்வளியை வெளியேற்றுகின்றன தாவரங்கள். மனிதரும் தாவரமும் இந்த அடிப்படையிலேயே பிணைப்புக் கொண்டியங்குவதைக் காணலாம். ஆகவே பழந்தமிழர்கள் மரங்கள் அளப்பரிய கொடை (மூச்சுக்காற்று)யை மனிதனுக்கு வழங்குகின்றன என நம்பினார்கள். அதனால் அவற்றை நேசித்தார்கள்.

மனித சமூகத்துக்கு இந்த மரங்களினால் என்ன பயன் என்பதை நவீன கருவிகளுடன் கூடிய அறிவியல் வருவதற்கு முன்னர் வாழ்ந்த தமிழர்கள் அறிந்து வியந்திருக்கின்றான். ஆனால் இன்றைய மனிதன்?

ஒரு மரம் கிளை விரித்து நிற்பதனால் இந்த மனிதனுக்கும் இந்த பூமிக்கும் கிடைக்கும் நன்மையைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரே ஒரு மரத்தினால் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை கல்கத்தா விவசாயப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி.எம்.தாஸ் நீண்ட ஆய்வுக்குப் பின் கண்டறிந்திருக்கிறார். ஒரு மரம் கூட மனித சமுதாயத்திற்குச் செய்யும் சேவையின் மதிப்பு அளப்பரியது. பல குளிர் சாதன (A/c) யந்திரங்கள் 24 மணிநேரமும் தொடர்சியாக ஓடுவதனால் ஏற்படும் குளிர்ச்சியை ஒரு மரம் தன் நிழல் மூலம் தந்து உதவுகின்றது. பதினெட்டு பேருக்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான சுவாசக் காற்றை (பிராண வாயு) ஒரு ஏக்கரில் உள்ள மரங்கள் தருகின்றன. பேராசிரியர் டி.எம்.தாஸ் அவர்கள் மரங்களின் பயன்பற்றி பட்டியலிட்டதைக் கீழே தருகின்றேன். ③

1) பிராண வாயு உற்பத்தியின் மதிப்பு	–	2,00,000.00
2) காற்றைச் சுத்தமாக்குவது	–	5,00,000.00
3) பூமியின் மேல் மண்சத்துக் குறையாமல் காப்பது	–	2,00,000.00
4) காற்றில் இருக்கும் ஈரப்பசை குறையாமல் காப்பது	–	2,50,000.00
5) பறவை, விலங்குகள் போன்றவைகளுக்கு நிழல் கொடுப்பது	–	2,50,000.00
6) உணவுச் சத்துக் கொடுப்பது	–	20,000.00
7) பூக்கள் மற்றவை வழங்குவது	–	20,000.00

(மேற்படிக் கணக்கு இந்திய ரூபாயில் தரப்பட்டுள்ளது)

மேற்படி கணக்கு ஒரு ஏக்கரில் நிற்கிற மரங்களால் ஏற்படும் நன்மைகள். ஆனால் இன்று நடப்பதென்ன? மரங்களைப் பற்றிய அறிதலே இல்லாமல் எந்தக் கவலையுமில்லாமல் அவற்றை வெட்டித் தள்ளுகிறார்கள். ஒரு ஏக்கரில் உள்ள மரங்களை அழிக்கும்போது பதினெட்டு பேர்களை கொலை செய்கிறோம் என்பதை என்றாவது நாம் உணர்ந்திருக்கின்றோமா? செத்தப் பிணங்களுக்கு ஒப்பான பிளாஸ்டிக் பூக்கள் மரங்கள் ஆகியவற்றை நேசிக்கின்ற பொய்மைக் கலாசாரம் பரவியதே மனிதன் இயற்கைக்கு எதிராகிவிட்டான் என்பதைக் காட்டுகிறது. செயற்கை இயற்கையைவிட அழகாய் இருக்கலாம். ஆனால் இயற்கைதான் மனிதனை நோய் நொடிகளின்றி வாழ வைக்கும். மரங்கள் மழையைப் பொழிய வைக்கும் சக்தி கொண்டவை என்பதையே மனிதர்கள் மறந்து ரொம்ப நாளாயிற்று.

சுற்றுப்புற சூழலைப் பாதுகாப்பதில் மற்றைய அனைத்து உயிரினங்களை விடவும் மரமே பங்கு வகிக்கின்றது. உலகம் வெப்பமடையாமல் (GLOBAL WARMING) காக்கும் கவசங்களில் ஒன்று மரம். அது மட்டுமல்ல மண் அரிப்பு, வெள்ளப் பெருக்கு போன்றவற்றைத் தடுக்கும் அரண்களாகவும் மரமே விளங்குகின்றது.

2004 டிசம்பர் ஆழிப்பேரலை (சுனாமி)யால் பலநாட்டுக் கரையோரங்களில் பேரழிவு ஏற்பட்டபோது நாகை மாவட்டத்தில் மட்டும் அலையாத்தி என்ற கடலோர கிராமத்தில் அழிவு கடற்கரையோர மரங்களால் தடுக்கப்பட்டுள்ளன.

இப்போதெல்லாம் வெப்பம், வெயில் அதிகமாகிவிட்டதாக பல்வேறு நாடுகளில் மக்கள் குமுறுகிறார்கள். காலம்மாறிவிட்டதாக முடிவும் கட்டிவிட்டார்கள். ஆனால் காலம் அவர்கள் நினைப்பது போல மாறவில்லை. பூமியில் உள்ள மரங்களை வெட்டியதாலே இது நிகழ்ந்தது. நிலத்தடிநீர் உறிஞ்சப்படுகிறது. ஆகவே சூரிய வெப்பத்தைத் தடுக்க மரங்கள் இல்லை. எனவே வெப்பம் மனிதன் மீது படுகிறது. இதை உணராமல் காலம் மாறிவிட்டது என்பது அறியாமையே!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த மரங்கள் இன்று இல்லை. ஆனால் மக்கள்தொகை இன்று மிக அதிகம். உலகம் முழுவதும் ஐம்பது ஆண்டுகளில் நட்ட மரங்களைவிட வெட்டிய மரங்களே அதிகம். மரங்கள் வெட்டப்படுவதால் ஆஸ்திரேலிய அரசு மரம் வெட்டத் தடைவிதித்து கடும் சட்டம் போட்டிருக்கிறது. மழை தரும் வனங்களை (RAIN FOREST) பாதுகாக்கிறது. வீட்டின் கூரையில் மரம் விழுந்து விடும் என்றாலும் அதனை வெட்ட உடனே அனுமதி கிடைக்காது. வெட்டியே ஆகவேண்டுமென்றால் வேதனையோடு நிபந்தனைகளோடு மரம் வெட்ட அனுமதி கொடுப்பார்கள்.

புதிய வீட்டமைப்புத் திட்டங்களை உருவாக்கும்போது மரங்கள் வெட்டுவதை தவிர்த்தே அனுமதி கொடுப்பார்கள். தப்பித்தவறி ஒரு மரத்தை வெட்ட வேண்டும் என்றால் அதற்கு ஈடாக ஒரு மரத்தை நடவேண்டும். அத்தோடு 10,000 முதல் 15,000 ஆஸ்திரேலிய டாலர் பணத்தைப் பிணைப் பணமாகக் கட்ட வேண்டும். நட்ட மரத்தின் வளர்சியில் திருப்தி ஏற்பட்டால் அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஜெர்மனி, சுவிஸ், பிரிட்டன், கனடா, நோர்வே போன்ற நாடுகள் தங்கள் நாட்டு மரங்களை வெட்டத் தடை விதித்துவிட்டு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து மரத்தை இறக்குமதி செய்கின்றன. இந்நாடுகளுக்காக மலேசியா, தாய்லாந்து, இந்தோனீசியா, பர்மா, வியட்நாம் போன்ற நாடுகளில் இருக்கின்ற மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனை பசுமை இயக்கத்தினர் கடுமையாக எதிர்க்கின்றனர். மேலைநாடுகள் தங்களை பசுமையாக வைத்துக் கொண்டு ஏழைநாடுகளைப் பணத்தால் சுரண்டுகின்றன என்பதே அவர்களின் ஏகோபித்த குரல்.

மர நடுகைக்காக நோபல் பரிசு பெற்ற
லங்காரி மாதாய்

ஆப்பிரிக்காவில் மழை இன்மையும் பட்டினி சாவும் வெப்ப மிகுதியும் காடுகள் அழிந்ததால் என ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால் ஆப்பிரிக்காவில் மரம் நடுகையை பேரியக்கமாக மாற்றி நோபல் பரிசை (2004) வென்ற முதல் சுற்றுச்சூழலியலாளர் கென்யாவைச் சேர்ந்த **லங்காரி மாதாய்** என்ற பெண்மணி. இவர் 1977ல் தோற்றுவித்த 'பசுமைப்பட்டி இயக்கம்' (Green Belt Movement) இதுவரைக்கும் கென்யா உட்பட்ட ஆப்பிரிக்க நாடுகளில் 3 கோடி மரங்களை நட்டிருக்கின்றன. எனவே இந்த லக்காரி மாதாய் 'மரங்களின் மாதா' என்று அழைக்கப்படுகிறார். ஆயினும் மரம் வெட்டுவது தொடர்கிறது. வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் காட்டு மரங்கள் பொருளாதாரத்திற்காக வெட்டப்படுகின்றன. ஆசிய நாடுகளிலும் இதே நிலைதான்.

தமிழகத்தில் நகர்ப்புற, கிராமப்புற சாலை ஓரங்களில் அறுபது ஆண்டுகளுக்கு முன் வேப்ப மரங்கள், புளிய மரங்கள் நடப்பட்டன. இன்று அவை சாலை ஓரத்தில் நிழல் தருகின்றன. அதற்குப் பிறகு அவ்வப்போது மரம் நடுகை பற்றிய பேச்சு தான் வந்து போயிற்று. தேசிய அளவில் மக்கள் பங்கு பெறுகிற மரநடுகை பரவலாக நடைபெறவில்லை. ஆனால் இருந்த மரங்கள் தொடர்ந்து வெட்டப்பட்டு வருகின்றன. தனிவீடுகள் மாடி வீடுகளாகின்றபோது இருந்த மரங்கள் வெட்டப்பட்டு மண்சாடிகளில் பூஞ்செடிகளே மிஞ்சின.

உலக நாடுகளில் சுவிட்சர்லாந்து பசுமையை நேசிக்கும் நாடு. அந்நாட்டு மக்கள் மலையையும் மரங்களையும் நேசிக்கிறார்கள். அவசியம் வெட்ட வேண்டிய மரத்திற்குக் கூட பலதடவை யோசித்தே முடிவு எடுக்கிறார்கள். திருமண நாளன்று, பிறந்த நாளன்று நினைவாக மரங்களை

நடுவதை அவசியக் கடமையாகக் கொண்டவர்கள் சுவிஸ் மக்கள்.

ஒரு மனிதனுக்குப் பத்து பிள்ளைகள் இருப்பதைவிட பத்து மரங்கள் இருப்பதைப் பெருமையாக கருதுபவர்கள் சுவிஸ் மக்கள்.

சுவிஸ் நாட்டில் எல்லா நகரங்களிலும் ஒரு விளம்பரப் பலகை கண்ணில் படுவது போல் வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள வசனங்கள் இதுதான்;

'மனிதா! உலகில் உள்ள கடைசி மீனையும் பிடித்து விட்டாய்! கடைசி மரத்தையும் வெட்டி விட்டாய்! அடுத்து என்ன செய்யப் போகிறாய்?'

கடைசி மீன் பிடிக்கப்பட்டால் நதியின் கதை முடிந்துவிடும்; கடைசி மரம் வெட்டப்பட்டால் இயற்கைக்கு முற்றுப்புள்ளி இடப்படும்! பிறகு என்ன உலகம்?

மரங்கள் மனிதனுக்குக் காற்றை விற்கவில்லை. நிழலை விற்கவில்லை. கனிகளை விற்கவில்லை. மாறாக காற்றை நன்கொடையாகச் சுத்தம் செய்து வழங்குகின்றன. நிழலை கொடுக்கின்றன. ஆனால் அந்த மரத்தையே இந்த மனிதன் வெட்டுகிறானே!

காற்று மண்டலத்தில் மாசுபாட்டை ஏற்படுத்தக் கூடியவை இருக்கின்றன. அவற்றை மரத்தின் இலைகள் உறிஞ்சிக் கொண்டு காற்றைத் தூய்மையாக்கி மனிதர்கள் சுவாசிக்கத் தேவையான உயிர்வளி (பிராண வாயு)யை வழங்குகின்றன. அத்தகைய மரங்களை வெட்டினால் விரைவில் உலகில் உயிர்வளிக் குழாய்கள் (பிராண வாயு) விற்பனைக்கு வரலாம். இந்தியாவில் பெருநகரங்களில் மக்களின் பாவனைக்காக உயிர்வளிக்கூடங்கள் வந்துவிட்டன. இன்று தண்ணீர்ப் பொட்டலம் விற்பனைக்கு வந்துவிட்டது. புகை மூட்டத்தில் தப்பிக்க சுவாசக் கவசம் வந்தாயிற்று. அடுத்து?

நாம் விடுகின்ற மூச்சின் வேர்கள் மரங்கள்; நமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து தான், மரம், செடி, கொடி, போன்றவைகளை யெல்லாம் நேசித்திருக்கிறார்கள். அந்த நேசிப்பின் அடையாளமே அவர்கள் நட்ட மரங்கள். நீங்கள் உங்கள் குழந்தைகளை உங்கள் வாரிசுகளை நேசிப்பது உண்மையானால் உங்கள் மூதாதையர் நட்ட மரங்களைக் காப்பாற்றுங்கள். புதிதாக மரங்களை நடுங்கள். அதற்கு முன்னதாக 'காங்கிரீட்' மயக்கத்தில் இருந்து விடுபட்டு நம் முன்னோர்களின் தாவர அறிவியலை அறிந்து வியந்து எண்ணிப்பாருங்கள்.

மேற்கோள் நூல்கள்

① நமது செல்வம், மீ.ப.சோமு, வானதி பதிப்பகம், 1991, சென்னை.

② சங்கத் தமிழ் விருந்து, மறக்குணத்து வே.பிரபாகரன், அழகம்மை பதிப்பகம், 1999.

③ செம்பருத்தி – மாத இதழ் – கட்டுரை, 1999, கோலாலம்பூர்.

15. தமிழர் அளவைகள்

இன்று உலகில் பல நாடுகள் பொருட்களின் ஏற்றுமதி, இறுக்குமதிக் காகவும் வர்த்தகம் விரிவாகவும் பொதுவான அளவை முறைகளைக் (Measure) கடைப்பிடித்து வருகின்றன. ஆங்கிலேயர் உலகின் பல நாடுகளைத் தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்ததனால் ஆங்கிலமொழி உலக மொழியாக உருவெடுத்ததனால், ஆங்கிலம் சார்ந்த அளவை முறைகளை பல நாடுகள் எதிர்ப்பின்றி பின்பற்றத் தொடங்கின. இந்திய உபகண்டத்திலும் அதுவே இன்று நடைமுறையாகியுள்ளது. அப்படியெனில் ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னால் தமிழர்களிடையே எவ்வகையான அளவை முறைகள் இருந்தன? இது ஒரு கேள்விதான். ஆனால் இந்தக் கேள்விக்கு நீண்ட பதிலே இருக்கிறது.

பழந்தமிழரிடையே தனித்துவமான அளவை முறைகள் இருந்ததனால்தான் கடல் கடந்தும் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்திருக்கிறார்கள். ஒரு தனித்துவமான நாடு தனது தேவைகளையும், செயல்திட்டங்களையும் வகுத்து, பகுத்து, தொகுத்துக் கணக்கெடுத்து வாழ்வதுதானே பண்பாடு, அறிவின் முதிர்ச்சி? அப்படிப் பார்க்கிறபோது தமிழர்களின் பழங்கால அளவை முறைகள் ஒரு மாபெரும் பண்பாடு, அறிவாற்றல், அறிவியல் என்பனவற்றுக்குப் பெருமை தரக்கூடிய சான்றுகளாகவே இருக்கின்றன.

சங்க கால இலக்கியக் குறிப்புகளின்படி ரோமப்பேரரசுக்கு மிளகு, வாசனைப் பொருட்கள் போன்றவற்றை அக்காலத் தமிழர் அக்காலத் தமிழரின் அளவியல் முறையிலேயே ஏற்றுமதி செய்து ரோம் நாட்டிலிருந்து தங்கம் மற்றும் பொருட்களை இறக்குமதியும் செய்தனர். அன்றைக்கு கணினி, கணிப்பான் என்பன மட்டுமல்ல இந்தப் பேனா பென்சில்கள் இல்லாமலே அந்த ஏற்றுமதி, இறுக்குமதியைத் தமிழரும் ரோம நாட்டவரும் தத்தம் நாட்டு அளவிலேயே கணக்குப் போட்டிருக்கிறார்கள்.

பழந்தமிழர் இலக்கியங்களைப் பார்த்தால் பழந்தமிழர் அறிவியல் பூர்வமான அளவை முறைகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது உறுதியாகின்றது. அந்த அளவை முறைகள் (1) எண்ணல் (2) முகத்தல் (3) பெய்தல் (4) நீட்டல் (5) நிறுத்தல் (6) தெறித்தல் (7) சார்தல் என ஏழு வகைப்படும். இந்த ஏழு விதமான அளவியலும் ஏழு விதங்களில் கணக்கிட உதவின. அவற்றை சற்று விரிவாகப் பார்ப்போம்.

1) எண்ணல் :

ஒன்று, இரண்டு, மூன்று என்றும் பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம் என்றும் ஒவ்வொன்றாகவும், தொகையாகவும் எண்ணுவது எண்ணல் அளவையாகும். பெரும்பான்மையான மனிதர்கள் தமிழில் ஒன்று, பத்து,

நூறு, ஆயிரம், பத்தாயிரம் என்று தொடங்கி கோடிவரை போகலாம். சாதாரண மனிதர் கோடி வரைக்குமே எல்லை வகுத்துச் சிந்திப்பான். ஆனால் ஒரு நாட்டின் அரச கணக்குகள் கோடி, கோடியாய் போகும். இதனைச் சொல்லத் தமிழில் தனிச்சொற்கள் இருக்கின்றன. அவற்றை அறியாதவரே கோடிக்கு மேலே எண்களைச் சொல்லத் தனிச்சொற்கள் இருக்கின்றனவா தமிழில்? என்று கேட்கின்றனர். ஒரு பிரபல பத்திரிகையாளர் ஒரு வார இதழில் தமிழ் எண்கள் சம்பந்தமான கேள்விக்குப் பதிலளிக்கும்போது மடமையுடன் கோடிக்கு அப்பால் உள்ள எண்களைத் தமிழில் சொல்ல வார்த்தைகள் இருப்பதாகத் தெரியவில்லை என்று எழுதியிருக்கிறார். இது தவறான அணுகுமுறை. அந்தப் பத்திரிகையாளர் தனக்குத் தெரியவில்லை என்றால் தமிழ்ப் பேராசிரியரிடம் அல்லது தமிழ் அறிஞரிடம் கேட்டிருக்கலாம். அல்லது தமிழ்நூல்களைத் தேடிப் பார்த்திருக்கலாம்.

பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் என்று திருப்பல்லாண்டில் தமிழில் பாடியவர்களுக்கு எண்களுக்கானத் தமிழ்ப்பெயர்கள் தெரியும். தமிழில்ஒவ்வொரு எண்களுக்கும் தனியான சொற்கள் இருக்கின்றன.

அவை; ①

1.	1	ஒன்று
2.	10	பத்து
3	100	நூறு
4.	1,000	ஆயிரம்
5.	10,000	பத்தாயிரம்
6.	100,000	நூறாயிரம்
7.	100,00,00	பத்து நூறாயிரம்
8.	100,00,000	கோடி
9.	100,00,00,00	அற்புதம்
10.	1,00,00,00,000	நிகற்புதம்
11.	10,00,00,00,000	கும்பம்
12.	1,00,00,00,00,000	கணம்
13.	10,00,00,00,00,000	கற்பம்
14.	1,00,00,00,00,00,000	நிகற்பம்
15.	10,00,00,00,00,00,000	பதுமம்
16.	1,00,00,00,00,00,00,000	சங்கம்

17. 10,00,00,00,00,00,00,000 வெள்ளம்
18. 1,00,00,00,00,00,00,00,000 அந்நியம்
19. 10,00,00,00,00,00,00,00,000 அர்த்தம்
20. 1,00,00,00,00,00,00,00,00,000 பரார்த்தம்
21. 10,00,00,00,00,00,00,00,00,000 பூரியம்
22. 1,00,00,00,00,00,00,00,00,00,000 முக்கோடி
23. 1,00,00,00,00,00,00,00,00,00,00,00,00,00,00,00,000 மகாயுகம்

மகாகோடி அல்லது மகாயுகம் என்பதை எண்களிலேயே பார்த்தால் வியப்பாய் இருக்கலாம். ஒன்றுக்குப் பின்னால் 33 பூஜ்யங்கள் அல்லது சுழியம் போட்டால் மகாகோடி அல்லது மகாயுகம் வருகின்றது.

தமிழர் உலகத்தைக் கட்டி ஆளாவிட்டாலும் கூட உலக கணக்கியலுக்கே முன்னோடியாக எண்தொகைகளுக்கான பெயர்களை வழங்கியிருக்கின்றனர். ஒன்று, இரண்டு என்று தொடங்குகின்ற எண்களுக்கு தமிழில் தனியான எழுத்துக்களையும் வழங்கியிருக்கின்றார்கள். அவை;

1–க, 2–உ, 3–ங, 4–ச, 5–ரு, 6–சு, 7–எ, 8–அ, 9–கூ, 10–க0;யீ

இவை சங்க காலத்தில் பயன்படுத்திய தமிழ் எண்கள். அதே நேரத்தில் இன்றைக்குப் பரவலாக இருக்கிற 1,2,3 போன்ற எண்களை உருவாக்கியவர்களும் பழந்தமிழர்களே என்று ஓம்சக்தி இதழாசிரியர், அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள் ஆணித்தரமாக எழுதியிருக்கிறார். ஏற்கனவே 0 என்று சுழியத்தை இந்தியர்கள் வழங்கியதாகச் சொல்லப்பட்டாலும் அது தமிழர்கள் என்பதே சரியானது என்கிறார் அவர். அதற்கான காரணத்தை வைக்கிறார். 0 என்பது எதுவுமற்றது. இதனை சூன்யம் என்றும் பூஜ்யம் என்றும் சுன்னம் என்றும் சுழியம் என்றும் பல பெயர்களால் அழைக்கிறார்கள். சங்க இலக்கியம் பாழ் எனும் அருமையான சொல்லாட்சியால் அழைக்கிறது.

② தமிழில் இருக்கும் க (ஒன்றுக்கு வருகிற உருவம்) என்ற எழுத்தின் பழைய உருவம் † ஆகும். அது காலப்போக்கில் 1 என உருவாகியிருக்கலாம். 2க்கு இருக்கிற தமிழ் உருவம் கிட்டத்தட்ட உ தான். இப்படியே 10 எண்களையும் பார்த்தால் (படம் காண்க) பழைய தமிழ் எண்ணோடு பொருந்துகிறது. பழைய முறைப்படி 10 என்று எண்ணை தமிழில் எழுதும்போது ய என்று எழுதினார்கள். (இன்று க0) காலப்போக்கில் அது 10 ஆக உருவெடுத்திருக்கலாம். ய என்ற எழுத்தைப் பார்த்தால் அது புரியும். அதுவே 10 ஆக மாறியிருக்கலாம். மாற்றத்துக்கு ஆனவைதான் எல்லாம். இன்றைக்கு நாம் எழுதுகிற தமிழே மாறியவைதான்



நவீன எண்களின் மூல எண்கள் எனக்கருதக்கூடியவற்றின் எண் குறியீடுகள்

பழந்தமிழர் கணிதத்தில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றிருந்தனர் என்பது பெருமையானது. தொல்காப்பியத்தில் எழுத்து எனப்படும். அகரம் முதல் னகரம் இறுவாய் முப்பஃது என்ப; சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே' என வருகிற முதல் பாடலில் முப்பது என்ற எண் வருகிறது. அப்படியாயின் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே அது வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். பழந்தமிழர் பத்து, நூறு, ஆயிரம், நூறாயிரம் என்று எண்ணும் வகை அறிந்திருக்கின்றனர். ஒன்பது என்ற எண் தொல்காப்பியத்தில் 'தொண்டு' என வருகிறது. 90க்கு தொம்பத்து, 900க்கு தொண்ணூறு எனச் சொல்லி இருக்கின்றனர். ஒரு பழந்தமிழ் இலக்கியத்தில்

ஏழ் ஏழோ(டு) ஐந்நூறும்
ஏழ் ஏழோடு பஃதும்
ஏழ் ஏழும் சங்கமிரீஇனார்

ஏழ் ஏழ் சேர்
நாற்பதின் நானூறு
முப்பால் ஏழ் நூறு நானூற்று
நாற்பதின் ஒன்பான் கவிஞர் நாடு

என்ற பாடலில் கணக்கு வாய்ப்பாடு வருகின்றது. புற நானூற்றில் (புற–18; 4–5) ஒன்று பத்து அடுக்கிய கோடிகடை இரீஇய என்ற வரிகளின் மூலம் ஒன்று, பத்து எனத் தொடரும் எண்ணிக்கையில் இறுதி எண்ணாகிய கடைக்கோடி (அது நூறு ஆயிரம் கோடியாக அல்லது கோடான கோடியாக இருக்கலாம்) என வருகிறது.

தமிழர் எண் கணக்கில் ஆயிரம் என்ற சொல்லையும் அதற்கடுத்தாக கோடி என்ற சொல்லையும் பயன்படுத்தினார்கள். பத்தாயிரத்துக்கு அடுத்து மிகப்பெரிய தொகையை நூறாயிரம் என்றனர். லட்சம் என்று அழைக்கவில்லை. திருப்பல்லாண்டில் கூட 'பலகோடி நூறாயிரம்' என்றே சொல்லப்படுகிறது. சங்க இலக்கியங்களில் லட்சம் என்ற சொல்லைக் காண முடியவில்லை. ஆயிரம் ஆயிரமாய் கணக்கிட்டு கடைசியாக கோடி எனக் கணக்கிட்டனர். ஆங்கிலேயர் 1,00,000 என்பதை நூறு ஆயிரம் (Hundred Thousand) என்றே கணக்கிடுவர்; சொல்வர். இதனை வேறுவிதமாய் சொல்லமாட்டார்கள். இவற்றைப் பார்க்கிறபோது ஆங்கிலேயருக்கு முன்பே தமிழர்கள் கணக்கை ஆயிரம், ஆயிரம் என்றும் பலகோடி நூறுஆயிரம் என்றும் கணக்கிட்டு இருப்பதே தமிழர் அறிவியலுக்கு எடுத்துக்காட்டாகும்.

கணிதம் :

பண்டைக்காலம் முதல் தமிழர் அறிந்து வைத்திருந்த கணிதம் ஓர் அருந்தமிழ்க் கலையாகும். இந்தக் கணிதம் இன்றைய நவீன காலத்திலும் மனித வாழ்க்கையிலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இன்றைய மனிதர் கையில் இருக்கிற கணிப்பான் (Calculator) கணிப்பொறி அல்லது கணினி (Computer) ஆகிய இரண்டும் மனிதருக்கு கணக்கைக் கணித்து உதவுகின்றன. இவை இல்லாத சங்க காலத்தில் பக்குடுக்கை நன்கணியார், கணியன் பூங்குன்றனார், கணிமேதாவியார் போன்ற கணித வல்லுநர்கள் இருந்திருக்கிறார்கள். தமிழின் மிகப் பழைய நூலான தொல்காப்பியத்தில்

ஒன்று முதலாகப் பத்து ஊர்ந்து வரூஉம் (தொல்–199)

(ஒன்று முதல் பத்து எண்கள்)

நூறு ஊர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே (தொல் – 392)

(நூறும் ஆயிரம் சேர்ந்து வரும்போது நெடு முதல் குறுகாது; ஏழ் நூறாயிரம் – தொல்காப்பியர் காலம்; எழுநூறாயிரம் – உரையாசிரியர் காலம்)

அம்பல் என வரூஉம் இறுதி, அல்பெயர் எண்ணினும்
ஆவியல் நிலையும் (தொல் 393)

(தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்கள் ஏழ் என்னும் எண்ணுப் பெயருக்கு முன்வரின் இயல்பாக நிற்கும்; ஏழ்தாமரை)

என்ற பாடல்வரிகளில் தமிழ் எண்கள் வருகின்றன. அப்படியாயின் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழில் எண்கள் பேரெண்கள் இருந்திருக்கின்றன என்றுதான் அர்த்தமாகும்.

திருவள்ளுவர்,

எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. (392)

என்ற திருக்குறளில் கணக்கும் இலக்கணமும் ஆகிய இரண்டும் மக்களுக்கு கண்போல என்று சொல்கிறார். எனவே அவரும் தமிழரின் கணக்கு அறிவியலைத் தொட்டிருக்கிறார் என்பதே உண்மை.

சங்ககால இலக்கியங்களில் தமிழைப் பாடவந்த பல புலவர்கள் கணக்கு பற்றியும் பாடினார்கள். சிலேடைக்கவி காளமேகம் என்ற புலவர்

ஒன்றிரண்டு மூன்று நான்கு
ஐந்தாறு ஏழெட்டு
ஒன்பதுபத் துப்பதி
னொன்று – பன்னி
ரண்டுபதின் மூன்றுபதி
நான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழ்பதி னெட்டு!

என்று எண்களை வரிசைப்படுத்துகிறார்.

பரிபாடல் எனும் சங்க கால நூலில் திருமால் வாழ்த்துப் பகுதியில் (பரிபாடல் –3; 40–45) கடுவன் இளவெயினனார் என்ற புலவர் பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், நூறாயிரம் என்றும் பல் அடுக்கல் ஆம்பல் (பேரெண்) என்று எண்களைச் சொல்கிறார். அதே நூலில் இன்னொரு பாடலில் கீரந்தையார் என்ற புலவர்.

நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை

(பரிபாடல் – 2; 13–15)

நெய்தல் (வெள்ளாம்பல்) குவளை (கருங்குவளை) ஆம்பல் (செவ்வாம்பல்) சங்கம், கமலம் (தாமரை) வெள்ளம் போன்ற பேரெண்கள் (கோடிக்கு மேற்பட்டவை) பலவற்றைச் சுட்டுகிறார். இவற்றில் கமலம் நூறு

ஆயிரம் கோடியையும், பத்மம் – சங்கம் பத்துநூறு ஆயிரம் கோடி (பத்து லட்சம் கோடி)யைக் குறிக்கும். வெள்ளம் என்பது கோடி கோடி என அர்த்தமாகும். நெய்தல் அல்லது குவளை நூறுகோடி எனவும், பல் அடுக்கு 'ஆம்பல்' ஆயிரங்கோடி கோடி எனவும் கருதலாம். ஆக பாழ் எனும் பூஜ்யம் முதல் பல்அடுக்கு ஆம்பலான ஆயிரம்கோடி கோடி வரையிலும் அதற்கு மேலும் பழந்தமிழரிடையே கணித முறையியல் இருந்திருக்கிறது. எண்ணல் அளவையில் பேரெண்களுக்குத் தனித்தனிப் பெயர்கள் இருப்பது போல் பின்னங்கள் (Fraction) முறையிலும் தனித்தனிப் பெயர்களைத் தமிழர்கள் கையாண்டிருக்கிறார்கள். அவை; கீழ்வாயிலக்கம் எனப்படும்.

		1/320	–	முந்திரி, முந்திரை
1/160	–	2/320	–	அரைக்காணி
1/80	–	4/640	–	காணி
1/40	–	8/320	–	அரைமா
3/80	–	12/320	–	முக்காணி
1/20	–	16/320	–	ஒருமா
1/10	–	32/320	–	இருமா
3/20	–	48/320	–	மும்மா
1/5	–	64/320	–	நான்மா
1/64	–	5/360	–	கால்மாகாணி, 1/4 வீசம்
1/32	–	10/320	–	அரைமாகாணி, 1/2 வீசம்
1/16	–	20/320	–	மாகாணி, வீசம்
1/8	–	40/320	–	அரைக்கால்
3/16	–	60/320	–	மும்மாகாணி, 3 வீசம்.
1/4	–	80/320	–	கால்
1/2	–	160/320	–	அரை
3/4	–	240/320	–	முக்கால்
1	–	320/320	–	ஒன்று

பண்டைத் தமிழர் கணிதத்தில் மிகச்சிறந்தவர் என்பதற்கு சான்றாக கீழ்க்கண்ட அளவை வாய்ப்பாடுகளை குறிப்பிடலாம்.

1/2,3238245,3022720,0000000	–	தேர்த்துகள்6½ = 1 நுண் மணல்
1/3575114,6618880,0000000	–	நுண்மணல் 100 = 1 வெள்ளம்
1/35751,1466188,8000000	–	வெள்ளம் 60 = 1 குரல்
1/395,8524436,4800000	–	குரல் 40 = 1 ஒரு கதிர்முனை
1/16,8963110,9120000	–	கதிர்முனை 20 = 1 சிந்தை
1/7448155,5456000	–	சிந்தை 14 = 1 நாகவிந்தம்
1/532011,1104000	–	நாகவிந்தம் 17 = 1 விந்தம்
1/31294,7712000	–	விந்தம் 7 = 1 பாகம்
1/4470,6816000	–	பாகம் 6 = 1 பந்தம்
1/745,11336000	–	பந்தம் 5 = 1 குணம்
1/149,0227200	–	குணம் 9 = 1அணு
1/16,5580800	–	அணு 7 = 1 மும்மி
1/2,3654400	–	மும்மி 11 = 1 இம்மி
1/2150400	–	இம்மி 21 = 1 கீழ் முந்திரி
1/102400	–	கீழ்முந்திரி 320 = 1 மேல்முந்திரி
1/320	–	மேல்முந்திரி 320 = 1



தமிழ் எண்களின் வளர்ச்சி (நூற்றாண்டுகளில்)

ஔவையார் பாட்டில் நூற்றில் ஒன்று (1/100) ஆயிரத்தில் ஒன்று (1/1000) பதினாயிரத்தில் ஒன்று (1/10000) கோடியில் ஒன்று (1/10000000) ஆகிய தசம எண்களை இயல்பாக ஆர்த்தசபை நூற்றொருவர் எனத் தொடங்கும் பாடலில் பாடுகிறார். வேறு ஒரு சங்கப் பாடல் வட்டத்தின் பரப்பளவைக் குழி எனச் சொல்கிறது.

வட்டத்தரை கொண்டு விட்டத்தரை தாக்கின்
சட்டெனத் தெரியும் குழி

என்பதே அந்தக் கணக்கு. அதாவது சுற்றளவில் பாதி (வட்டத்தரை)யும் விட்டத்தில் (வட்டக் குறுக்களவு) பாதியும் பெருக்க பரப்பு (குழி) கிடைக்கும். இன்றும் வழக்கத்திலுள்ள வட்டத்தின் பரப்பைக் காண பயன்படும் கணக்கு..

அணுவைக் கூட தமிழர் கணக்கியலில் கொண்டு வந்தனர். அதன்படி அணுக்கணக்கைப் பார்ப்போம்;

10 கோண் – 1 நுண்ணணு

10 நுண்ணணு – 1 அணு

இக்கணக்கு இன்றைய விஞ்ஞான எண்ணலுக்கும் பொருந்துகிறது. ஒரு படி நெல்லில் 14,400 நெல்லும், ஒருபடி அரிசியில் 38,800 அரிசியும் (ஒரு படியில் அவரை – 1800; மிளகு – 12,800, பயறு – 14,800 இருப்பதாகவும்) பழந்தமிழர் கணக்கு கூறுகிறது. இன்னொரு கணக்குப்படி

360 நெல்	–	1 செவிடு
5 செவிடு	–	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	–	1 படி
8 படி	–	1 மரக்கால்
21 மரக்கால்	–	1 கோட்டை

எனச் சொல்லப்படுகிறது. இதன்படி 1 கோட்டையில் 34,94,400 நெல் இருக்குமாம். இது பழந்தமிழர் எண்ணிய கணக்கு. இவ்வாறு எண்ணல் அளவியலில் அணு தொடக்கம் ஆயிரமாயிரம் கோடி வரை எண்ணுவதற்கான கணக்கு அதற்கானத் தனிக் குறியீடுகளும் தமிழில் இருக்கின்றன. இது பலருக்குத் தெரியாது. ஆனால் இவையெல்லாம் தமிழின் உட்புகுந்தவருக்கே தட்டுப்படும்.

2) அடுத்து முகத்தல் அளவை :

பால், மோர், எண்ணெய் முதலியவற்றை அளத்தல். அவை

5 செவிடு	–	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	–	1 உழக்கு
2 உழக்கு	–	1 உரி
2 உரி	–	1 படி (நாழி)
8 படி	–	1 மரக்கால் (குறுணி)
2 மரக்கால்	–	1 பதக்கு
2 பதக்கு	–	1 தூணி
3 தூணி	–	1 கலம்

என உள்ளன. இவை தமிழில் உள்ள தனித்துவமான முகத்தல் அளவைகளாகும்.

பெய்தல் அளவை :

தானிய வகைகளைக் கோபுரம் கூட்டிப் படி, மரக்கால் என்று அளப்பது. அதற்கும் தனிமுறைகள் தமிழில் இருக்கின்றன. அவை;

5 செவிடு	–	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	–	1 உழக்கு
2 உழக்கு	–	1 உரி
2 உரி	–	1 படி
8 படி	–	1 மரக்கால்
2 குறுணி	–	1 பதக்கு
2 பதக்கு	–	1 தூணி
5 மரக்கால்	–	1 பறை
80 பறை	–	1 கரிசை
120 படி	–	1 மூட்டை
4 மூட்டை	–	1 பொதி

என வழக்கில் இருந்தன.

நீட்டல் அளவை :

உயரங்களையும் எல்லைகளையும், துணிகளையும் அளக்கும் இந்நீட்டல் அளவை வழியளவை – நில அளவை என இருவகைப்படும். இவற்றுள் நிலவளவைக் குழிக்கணக்கு;

10 கோன்	–	1 நுண்ணனு
10 நுண்ணணனு	–	அணு
8 அணு	–	1 கதிர்த்துகள்
8 துசும்பு	–	1 மயிர்நுனி
8 மயிர்நுனி	–	1 நுண்மணல்
8 நுண்மணல்	–	1 சிறு கடுகு

8 சிறுகடுகு – 1 எள்
8 எள் – 1 நெல்
8 நெல் – 1 விரல்
12 விரல் – 1 சாண்
2 சாண் – 1 முழம்
4 முழம் – 1 பாகம் அல்லது கோல்
500 கோல் – 1 கூப்பிடு
4 கூப்பிடு – 1 காதம்
2000 பாகம் – 1 குரோசம் (2½ மைல்)
2 குரோசம் – 1 யோசனை
71/2 நாழிகை வழி – 1 காதம் (10 மைல்)

குழியளவை;

16 சாண் – 1 கோல்
18 கோல் – 1 குழி
100 குழி – 1 மா
240 குழி – 1 பாடகம்
20 மா – 1 வேலி

இன்றைக்கும் விவசாயிகளிடம் நிலம் சம்பந்தமான குழிக் கணக்கு இருக்கிறது. மன்னராட்சியில் மிக நுட்பமாக நிலங்கள் அளக்கப்பட்டன. அதற்கு இந்தப் பாடலே சான்று. 'ஆக இறையிலி நீங்கு நிலம் முக்காலே இரண்டு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா முக்காணிக் கீழே முக்காலே நான்குமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்குமாவினால் இறைகட்டின காணிக்கடன்..' இதில் குறிக்கப்பட்ட நில அளவு 1/52,428,800,000 வேலி. இதே போன்று நிலத்தில் கட்டப்பெறும் அரங்கத்திற்கும் அளவை முறை இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் மாதவியின் நடன அரங்கக் காதையிலே நடன அரங்கத்தை அமைக்க கையாண்ட முறைகள் அறிவியலை நமக்குச் சொல்லி வைக்கின்றன.

கணித்தல் :

பழந்தமிழரிடையே இருந்த சாண் என்ற அளவுமுறை முக்கியமானது. இதனை 'எறும்பும் தன்கையால் எண் சாண்' என்ற பழமொழி தெளிவாக விவரிக்கின்றது. ஒவ்வொரு மணிதனின் கையாலும் எண் சாண்தான் உயரமாய் வரும். அதனால்தான் எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்று சொல்லப்பட்டது. சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்பதையெல்லாம்

பழமொழியானாலும் அளவியல் ரீதியில் அறிவியல் செய்தியைச் சொல்லியது. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு என்பதுகூட தமிழர் அளவியலை சகலதுறைகளிலும் பயன்படுத்தியற்கு எடுத்துக்காட்டாகும். சிலப்பதிகாரத்தில் அரங்கம் அமைக்க சாண் அளவு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை

கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல்அளவு இருபத்திநால் விரலாக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத்து உறுப்பினது ஆகி

(சிலம்பு – 3–98–102)

என்ற பாடலில் (சிலப்பதிகாரத்தில்) இளங்கோ அடிகள் விவரிக்கின்றார்.

சிற்பக் கட்டிடக்கலை வல்லார்கள் வகுத்து வைத்துள்ளபடி சிறந்த ஓர் இடத்தைத் தெரிவு செய்து அந்த இடத்தில் அரங்கம் அமைக்க மூங்கில் கோல் அளவையே பயன்படுத்துகின்றனர். மலைகளில் உயர்ந்து வளர்ந்துள்ள மூங்கில்களில் கணுவுக்குக் கணு இடையில் உள்ள இடைவெளி ஒருசாண் உள்ளதாகப் பார்த்து மூங்கிலை வெட்டிக்கொண்டு வருகின்றனர். பிறகு அந்த மூங்கிலை சிற்பநூல் வகுத்தபடி உயர்ந்த நல்ல ஆண் மகன் ஒருவனின் கைப்பெருவிரல் அளவில் இருபத்தி நான்கு விரல் அளவு கொண்டதாக நறுக்குவர். இப்படி நறுக்கிய மூங்கில் கோள் அளவையே அளவு கோலாகக் கொள்வர். இந்த அளவு கோலில் ஒரு ஏழுகோல் அகலமும், எட்டு கோல் நீளமும் ஒருகோல் உயரமும் கொண்டதாக அரங்க மேடை அமைத்தனர்.

தூரஅளவையும் தமிழர்கள் தனித்தமிழில் அறிந்திருக்கிறார்கள். உரத்துச் சத்தமாக அழைப்பதை அதன் தூரத்தைக் கூப்பிடுதூரமாக கணக்கிட்டிருக்கிறார்கள். மிகக்கூடுதலான தொலைவை காதம் என்றார்கள். ஒருகாதம் பத்துமைல் தொலைவு. இதேபோல் தூர அளவை அளக்கும் வேறொரு முறையை மணிமேகலை காப்பியத்தில் 'நாகநன்னாட்டு நானூறு யோசனை' என்று ஒருவரி வருகிறது. யோசனை என்பது தூரத்தை அளக்கும் முறை. ஒரு யோசனை என்பது ஐந்து மைல் என சொல்லப்படுகிறது.

நளன் தேர் ஓட்டியதிலிருந்து தூரத்தைப் பற்றிய ஒரு செய்தி ; தேர் ஓட்டுவதில் நளன் கெட்டிக்காரன். அவன் மன்னவனுக்குத் தேர் ஓட்டியபோது மன்னனின் மேலாடை தவறிக் கீழே விழுந்து விட்டது. அதை எடுத்துத் தா என்று சொல்வதற்குள் தேர் ஓடிய தூரம் பத்து காதம். இதன் மூலம் தேர் ஓடிய வேகத்தையும் தூரத்தையும் பார்க்கலாம்.

நிறுத்தல் அளவை ;

அன்றாடம் சமையலுக்கு வாங்குகிற அரிசி, மளிகை, காய்கறி, மேனியை அலங்கரிக்கும் தங்கம் என்பனவற்றை நிறுத்தே வாங்குகின்றோம். இவற்றை நிறுக்க அறுவகைத் தராசுகளைப் பயன்படுத்தினர் தமிழர். அவை;

1. மணிக்கற்களை நிறுக்கும் மணித்தராசு.
2. தங்கம், வெள்ளி போன்றவைகளை நிறுக்கும் உலோகத்தராசு.
3. பொருட்களை நிறுக்கும் பண்டத்தராசு.
4. காய், கனிகளை நிறுக்கும் மரக்கம்புத் தூக்குத்தராசு.
5. மருந்து, வேர்கள் நிறுக்கும் தராசு.
6. எடை நிறுக்கும் (துலாம்) தராசு.

இந்த ஆறுவகைத் தராசுகளில் ஆறுவகைப் படிக்கற்கள் நிறுத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டன. தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களை நிறுக்கும் படிக்கற்கள் குன்றிமணி, மஞ்சாடி, பணம், கழஞ்சு, வராகன், கஃசு (காற்பலம்) பலம் எனப் பலபல நிறைகள் இருக்கின்றன. தங்கம், வெள்ளி நிறுத்தல் அளவு வருமாறு;

4 நெல் எடை	–	1 குன்றிமணி
2 குன்றிமணி	–	1 மஞ்சாடி
2 மஞ்சாடி	–	1 பணவெடை
5 பணவெடை	–	1 வராகன்
4 கழஞ்சு	–	1 கஃசு (கால்பலம்)
4 கஃசு	–	1 பலம்

பழந்தமிழ் நூலொன்றில் நவமணிகளை நிறுப்பதற்கு தமிழர்கள் கையாண்ட அளவை முறைகள் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதோடு, அது சம்பந்தமான பல சுவையான குறிப்புகளையும் பார்க்கின்றோம். அதில் நம்முன்னோர்கள் ஒன்பது வகையான நவமணிகளையும் சிற்சில நாட்களில் மாத்திரமே தேர்வுசெய்கிற ஒரு வழக்கத்தை கொண்டிருப்பது மிக முக்கியமானது. அதன்படி முன்னோர்கள் தெரிவு செய்த நாளும் மணிகளும்;

1. ஞாயிறு	–	மாணிக்கம், கோமேதகம்
2. திங்கள்	–	முத்து, வைடூரியம்
3. செவ்வாய்	–	பவளம்
4. புதன்	–	மரகதம்
5. வியாழன்	–	புட்பராகம்
6. வெள்ளி	–	வைரம்
7. சனி	–	நீலம்

இந்த ஒன்பது மணிகளில் கோமேதகத்தை நிறுப்பதில்லை. மற்ற எட்டுமணிகளையும் எடைபோட மிகவும் நுட்பமான தராசுகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக மணிக்கற்களை நிறுக்கும் மிகவும் நுட்பமான தராசை மணித்தராசு என்று அழைப்பார்கள். இத்தராசில் நிறுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் படிக்கற்கள் மிகமிக நுண்ணியவை.

சிலப்பதிகாரத்தில் நகையின் எடை பற்றிய ஒரு செய்தி வருகிறது. மாதவி அற்புதமாய் விதிமுறைப்படி ஆடினாள். அந்த ஆட்டத்தை ரசித்த மன்னன் நாட்டு வழக்கப்படி மாதவிக்கு பச்சை மாலையும், தலைக்கோல் பட்டமும் 1008 கழஞ்சுப் பொன்னும் பரிசாகக் கொடுக்கின்றான். அதனை இளங்கோ அடிகள் பெறுமதியான பொன்மாலை என்று சொல்லாமல் அதன் நிறுத்தல் எடையோடு தமிழரின் உலோக நிறுவைக்கணக்கையும் சொல்லி வைக்கிறார்.

தெறித்தல் அளவை :

நொடி, நாழிகை, யாமம், பொழுது, நாள் என கால நேரத்தைக் கணக்கிடும் கணக்கு. நேரத்தை மிகத் துல்லியமாகக் கணக்கிட ஒரு அட்டவணை பழந்தமிழரிடையே இருந்தது. அவை;

2 கண்ணிமை	–	1 நொடி
2 கைநொடி	–	1 மாத்திரை
2 மாத்திரை	–	1 குரு
2 குரு	–	1 உயிர்
2 உயிர்	–	1 சணிகம்
12 சணிகம்	–	1 விநாடி
60 விநாடி	–	1 நாழிகை
2 1/2 நாழிகை	–	1 ஓரை
3 3/4 நாழிகை	–	1 முகூர்த்தம் (1 1/2 மணிநேரம்)
2 முகூர்த்தம்	–	1 சாமம்
4 சாமம்	–	1 பொழுது
2 பொழுது	–	1 நாள்
15 நாள்	–	1 பக்கம்
2 பக்கம் / 30 நாள்	–	1 மாதம்
6 மாதம்	–	1 அயனம்
2 அயனம்	–	1 ஆண்டு
60 ஆண்டு	–	1 வட்டம்

இதே போன்று நேரத்தை அளவிடும் இன்னுமொரு முறை வருமாறு;

60 நொடி	–	1 விநாடி
60 விநாடி	–	1 நாழிகை
7 1/2 நாழிகை	–	1 சாமம்
8 சாமம்	–	1 நாள்
7 நாள்	–	1 வாரம்
15 நாள்	–	1 பக்கம்
2 பக்கம்	–	1 மாதம்
6 மாதம்	–	1 அயனம்
2 அயனம்	–	1 ஆண்டு

காலத்தைத் தமிழர் மிகநுட்பமாக கணித்தனர். காலம் என்பதைப் பொதுவாக நோக்கின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனப்பிரித்து அதன் நுட்பம் கண்டனர் பழந்தமிழர். காலநுட்பத்தில் மிகச்சிறிய பொழுது; கண் இமைக்கும் காலம். கையால் நொடிக்கும் காலம் ஒரு மாத்திரை. தொல்காப்பியம் இதனை

கண்இமை, நொடி என அவ்வே மாத்திரை
நுண்ணியதின் உணர்ந்தோர் கண்ட ஆறே (தொல் – 7)

என்ற வரிகளில் விளக்குகிறது. மாத்திரை என்பது மிகவிரைவில் நிகழும் செயலாகும். இதனை நொடி, கணம் எனவும் வழங்குவர். கடிகை, நாழிகை என்பன மாத்திரையை அடுத்து வரும் சற்றுப்பெரிய கால அளவை. இதுவே பொழுதை அளவிடும் மூலஅளவை. அல்லும் பகலும் அறுபது நாழிகை என்பது தமிழ் உலக வழக்கு. நாழிகையை அளவிட்டு உரைப்போர் 'நாழிகைக் கணக்கர்' ஆவர். இவர்கள் நீர்க்கன்னலின் உதவியால் நாழிகையைக் கணக்கிடுவர். இவர்களுக்கு கடிகையார் என்னும் பெயருண்டு. (நீர்க்கன்னல் என்பது நாழிகை வட்டில்) சங்க இலக்கியமான முல்லைப்பாட்டில் பொழுதளந்து அறியும் பொய்யா மாக்கள் (முல்லை –55) என்ற வரிகளில் நாழிகைக் கணக்கர்கள் மன்னனின் பொழுது; நேரம் சம்பந்தமான ஆலோசகராக இருந்திருக்கிறார்கள். அவர்களின் கணிப்பில் அறிவியலே மேலோங்கி இருந்திருக்கிறது.

காலக்கணக்கு :

வானத்தில் தோற்றமளிக்கும் நாள், கோள்களைக் கொண்டு காலங்கணிப்பது உலகில் தொன்று தொட்டு வரும் முறை. அதே போன்று பிற இயற்கைத் தோற்றங்களும் காலத்தை நினைவூட்டுவது உண்டு.

மனிதனை ஒட்டி வாழ்கிற சாமக்கோழியின் கூப்பீடும், காகம் கரைதலும் இவ்வாறானவை. காலை, மாலை, இரவு எனக்குறித்த நேரத்தில் மலரும் மலர்களும் காலத்தைக் கணிக்கின்றன. குறிஞ்சிமலர் மலையில் பூப்பது இவ்வாறே. அது பூப்பது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை. இப்படி எத்தனை எத்தனையோ இயற்கைத் தோற்றங்களும் நிகழ்ச்சிகளும் குறிப்புகளும் மனிதர்களுக்கு புறவாயிலாக காலங்களை நிர்ணயிக்க உதவுகின்றன. சங்க இலக்கியங்களைப் பார்க்கின்றபோது தமிழர்கள் நாள், பொழுது, நேரம் என்பனவற்றை கருவிகள் இல்லாமலே அனுபவத்தைக் கொண்டும் அறிவியல் ரீதியில் அறிந்து கணித்து வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் ஒரு பொழுதை சிறும்பொழுது, பெரும்பொழுது எனப் பிரித்தனர்.

சிறும்பொழுது அல்லது சிறுபொழுது ஆறு பகுதிகளாகும். ஒவ்வொரு சிறுபொழுதும் நான்குமணி நேரம் கொண்டது.

1. காலை	–	பகற்பொழுதின் முதற்பகுதி
2. நண்பகல்	–	பகற்பொழுதின் நடுப்பகுதி
3. மாலை	–	நாளின் பிற்பகுதி
4. ஏற்பாடு	–	சூரியன் மறையும் இரவு
5. யாமம்	–	நள்ளிரவு
6. அதிகாலை	–	சூரியன் விடியும் காலை

பெரும்பொழுது : ஒரு ஆண்டில் உரிய ஆறு பருவங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு பெரும்பொழுதும் இவ்விரு திங்களைக் (மாதங்களை) கொண்டது;

1.இளவேனிற்காலம் (Spring) சித்திரை, வைகாசி

2.முதுவேனிற்காலம் (Summer) ஆனி, ஆடி

3.கார்காலம் (Autumn) ஆவணி, புரட்டாசி

4.குளிர்காலம் (Winter) ஐப்பசி, கார்த்திகை (கூதிர்)

5.முன்பனிக்காலம் (Winter) மார்கழி, தை

6.பின்பனிக்காலம் (Spring) மாசி, பங்குனி

இதே பொழுதை ஆங்கிலேயர் நான்காக மட்டும் வகுக்க பழந்தமிழர் அறிவியல் பார்வையில் ஆறாகப் பிரித்து அவற்றுக்கு அர்த்தத்தோடு பெயரும் இட்டு முன்னோடியாக இருந்திருக்கின்றனர்.

நேரத்தை அளவிட்டதில் கூட பழந்தமிழர் முன்னோடிகளே. மனிதர் மூச்சுவிடும் நேரத்தைக்கூடத் துல்லியமாக அளந்தனர். திருமூலரின் திருமந்திரப்பாடலில்,

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமஉற்ற முப்பத்திரண்டும் இரேசித்து

என்ற வரிகளில் மூச்சுவிடும் நேர அளவை வருகிறது. மூச்சை 16 மாத்திரை காலம் உள்ளிழுத்து, மூலக்கனலையெழுப்பும் வகையாக 64 மாத்திரை உள்ளே நிறுத்தி வலமூக்கின் வழியாக 32 மாத்திரை வெளிவிட்டால் சிறந்த மூச்சை அடக்கியாளும் யோகமுறையாகும். இதுவே மூச்சையும் அளவிடும் அளவியல். இதே போன்று வானநட்சத்திரங்களுக்கு இடையேயான தூரத்தை ஒளியாண்டு எனத்தமிழர் கணக்கிட்டது இன்றைய அறிவியலுக்குப் பொருந்துவதாக இருக்கின்றது.

சூரியன் உதிக்கும் காலமே ஒரு நாளின் தொடக்கமாகத் தமிழர்களிடம் இருந்திருக்கிறது. நாள் தொடக்கம் மட்டுமல்ல ஆண்டு தொடக்கமும் சூரியன் உதிக்கும் காலத்தைப் பொறுத்தே இருந்தது. இன்றைக்கு புத்தாண்டு என்று நள்ளிரவு 12.00 க்கு ஆங்கில முறைப்படி கொண்டாடுகிறார்கள். அது தமிழரின் கணக்குக்கு மாறானது. ஆங்கிலப் புத்தாண்டு கடிகாரத்திற்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் சூரியனோ, சந்திரனோ உதயமாகாத அந்த நள்ளிரவை எவ்வாறு தொடக்கமாகக் கொள்ளமுடியும்? இது பண்பாடு அற்ற செயல். சூரியன் உதயம் ஆகவில்லையென்றாலும் கடிகாரம் ஓடும்; அது ஓடுவதால் மட்டும் இரவு, பகல் வந்து விடுமா? தமிழருக்கு கதிரவன் உதயமே காலக்கணக்குக்கு மூலம். எனவேதான் சூரியன் நகரும் திசைவழியே காலப்பொழுதுகள் கணக்கிடப்பட்டன. ஆண்டுக்கு இருதிசைப்பயணம் சூரியனுக்கு உண்டு. இதனை

'செஞ்ஞாயிற்றுச் செலவும்' (புற-30-1;2)

என்கிறார் புறநானூற்றுப்புலவன். சீவக சிந்தாமணியில் இந்தப் பயணத்தை அயனம் என்று சொல்லப்படுகிறது. சூரியனாகிய ஞாயிறு தெற்கு நோக்கிய அயனத்தால் கார், கூதிர், முன்பனி எனும் பருவங்கள் ஏற்படுகின்றன. இதே போன்று வடதிசைக்குப் பகலவன் (சூரியன்) தென்கிழக்கில் இருந்து வடகிழக்கிற்குப் பயணமாகிறான். எனவேதான் இந்தப் பொங்கல்.

இன்றைக்குப் பொழுதை, நேரத்தை காலத்தை அறிந்துகொள்ள கையிலேயே கடிகாரம் வந்துவிட்டது. தொடக்கத்தில் இதுபோன்ற மிகவிபரமான கருவிகள் இல்லையென்றாலும் அரசர்களுக்கு நாழிகையை அளவிட்டு உரைக்கும் 'நாழிகைக் கணக்கர்' இருந்தனர். இவர்களிடம் நாழிகை அளவிடும் 'கன்னல்' எனும் கருவி இருந்திருக்கின்றது. இவர்களை ③

'பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்'

என முல்லைப்பாட்டு (55-58) சொல்கிறது.

பெருங்கதையில் புலவர்

'கடிகை ஆரம் கழுத்தில் மின்ன' (பெருங் – 38;123) என்ற பாடல் வரிகளில் கழுத்தில் அணியும் ஓர் அணியைக் 'கடிகை ஆரம்' என்று குறிப்பிடுகிறார். இதற்கு நாழிகையைப் புலப்படுத்தும் கருவியையுடைய ஆரம் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. சீவகசிந்தாமணிக் காவியத்தில் 'கடிகை வாள் ஆரம் மின்ன' எனச் சொல்லப்பட்டுள்ளது. இந்தக் கடிகை ஆரம் – கடிகை வாள் ஆரம் என்பனவே கடியாரம் என இப்போது (கடிகை ஆரம் = கடிகையாரம்; கடியாரம்) வழங்குகின்றது என்று தமிழறிஞர் உ.வே.சாமிநாதையர் குறிப்பு வரைந்துள்ளார்.

பழந்தமிழர் இவ்வாறு கண்டறியும் நாழிகையே ஒரு நாளின் சிறுகாலக்கூறு என்றாகிறது. குறித்த ஒரு பொழுதை முகூர்த்தம் என்பர். (இதுவே முழுத்தம் என இலக்கிய ஆட்சி பெற்றுள்ளது). இது 3 3/4 நாழிகை அல்லது 1 1/2 மணி அளவு கொண்டது. ஆனால் சைனர்கள் 2 நாழிகை கொண்ட காலப்பகுதியே முகூர்த்தம் என்பர். இவ்வாறு பகற்பொழுதை நாழிகையாக அளந்த தமிழர்கள் இரவுப்பொழுதை 'யாமம்' என அளந்தனர். 'யாமம்' என்பது இரவில் கால்பகுதி. எனவே நான்கு 'யாமம்' இரவுக்கு உண்டு. எனவே முதல் யாமத்தை 'முந்தைய யாமம்', 'அரையாமம்' 'மூன்றாம் யாமம்', 'கடையாமம்' எனக்கொள்வர். காலப்பொழுதை கதிரவனின் அசைவில் நாழிகை கண்ட தமிழர்கள் நாள்பொழுதுக்குத் திங்களைக் கண்டனர். மாதம் என்பதே மதி என்பதிலிருந்து பிறந்த தமிழ்ச்சொல்லே என்கிறார் தேவநேயப்பாவாணர். காலத்தை மதிப்பதற்கு மதியே கருவி. அதுவே மாதமாகிவிட்டது. (திங்கள்–சந்திரன்) வானில் பிறை தோன்றிப் பதினைந்தாம் நாள் நிறைவு பெறும்வரை உள்ள நாட்கள் வளர்பிறை. மீதிதேய்பிறை நாட்கள். வளர்பிறை பக்கம் 'அலர்தரு பக்கம்' என்றும், முற்பக்கம் என்றும் குறிக்கப்படும். தேய்பிறைப் பக்கமோ வழியது பக்கம் என்றும் பிற்பக்கம் என்றும் குறிக்கப்படும். நிறைமதி நாள் பெரும்பக்கம் எனப்படும். அமாவாசை நாள் இருள் உவா எனப்படும். இதனை பரிபாடல் (பரி–11; 31–39) விளக்குகிறது.

நாள் கணக்கை முதற்பிறை, மூன்றாம்பிறை, எட்டாம்பிறை, வளர்பிறை எனக் கணக்கிட்டனர். அகநானூறு என்ற இலக்கியப்பாடலில் (அக–289–9–11) சுவரில் நாள் கணக்கு எழுதியதாகத் தெரிகிறது. அதே நூலில் (அக–61;4) நாள்இழை நெடுஞ்சுவர் என்ற வரிகளில் சுவரில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோடாக இட்டு அவற்றை எண்ணி வந்தனர் என்பது தெரிகின்றது.

நாழிகை, யாமம், நாள் எனக கடந்து செல்லும் பெரியகாலப் பகுதியே யாண்டு (ஆண்டு) ஓர் ஆண்டில் 12 மாதங்கள். அவற்றில் ஆறு பருவங்களும், அயனமும் அடக்கம். பத்தாண்டு சேர்ந்தால் மகாமகம். பன்னிரண்டு ஆண்டு சேர்ந்தால் குறிஞ்சி ஆண்டு. கால்நூற்றாண்டு

வெள்ளி விழா. ஐம்பதாண்டு பொன்விழா. 100 ஆண்டு நூற்றாண்டு. ஆண்டுகள் பலகூடி ஊழிகளாகும். இவற்றுள்ளே பதினெட்டு ஆண்டு தமிழ் இலக்கியத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படுகின்ற யுத்தங்கள் அல்லது போர் நடந்த கால எல்லை பதினெட்டைச் சுற்றி இருக்கிறது;

1. தேவர் – அசுரர் யுத்தம் – 18 ஆண்டுகள்
2. இராம – இராவண யுத்தம் – 18 மாதம்
3. பாரதப்போர் – 18 நாள்
4. சேரன் – ஆரியன் யுத்தம் – 18 நாழிகை

தமிழரின் நாழிகைக் கணக்குப்படிப் பார்த்தால் ஏழுமணி 20 நிமிடத்தில் (24x18=432 நிமிடம்) ஆரிய மன்னனை சேர மன்னன் வெற்றி கொண்டிருக்கிறான்.

அடுத்து அளவியல் சார்தல்; இது ஒலி, சுருதி, நிறம், உருவம் முதலியவற்றை வேறொரு பொருளோடு ஒப்பீடு செய்து சார்த்தி அளத்தல். இது பழந்தமிழ் இலக்கியத்திலே கையாளப்பட்டிருக்கின்றன.

இந்த ஏழுவகை அளவியலும் கணக்கு, கணிதம் ஆகிய இரண்டுக்கும் மிகத்தேவையானவை. கணக்கு, கணிதம் ஆகிய இவ்விரண்டு பதங்களுக்கும் இடையே மெல்லிய வேறுபாடு உண்டு. பெருக்கல், வகுத்தல், கழித்தல் மட்டுமே கணக்கு எனவும் அதன் அடிப்படையில் எழும் எண், வடிவம், வகை, தொகை எனும் இதரதுறைகளைக் கணிதம் என்றும் வழங்கப்படுகிறது. இந்தக் கணக்கு கணிதம் ஆகிய இரண்டிலுமே பழந்தமிழர் அறிவியல் ரீதியில் முன்னணியில் இருந்தவர்கள்.

பிங்கல முனிவர் என்ற ஞானபண்டிதர் அருளிச் செய்த தமிழ் நிகண்டையும், வேறுபலர் எழுதிய வேறுபல நிகண்டுகளையும் செய்யுள் வடிவிலே உள்ள பழந்தமிழ்க் கணக்குச் சுவடிகளையும் படிக்கும்போது பழந்தமிழர் கணித இயலிலே சகலவிதமான அளவையிலே ஆழமும் விரிவும் கொண்டவர்களாய் இருந்திருக்கிறார்கள் என்பது புரிகின்றது. இன்று நவீன கருவிகளின் துணையோடு கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்றவற்றை விரைவாகவும், எளிதாகவும் செய்ய முடிகிறது. இது தேவையானதுதான்; சாதனைதான். ஆனால் ஒரு சிறுசாதாரணக் கணக்கிற்குக்கூட இன்றைய இளைய தலைமுறையினர் தன் கணக்குத் திறமையை நம்பாமல் கணிப்பான் என்கிற கால்குலேட்டரை நாடுவது பலவீனமானது.

உலக வரலாற்றைப் பார்க்கிறபோது மணக்கணக்கு முலம் முன்னணியில் இருந்தவர்கள் தமிழர்கள். சுதந்திர இந்தியாவில்

பலநிதியமைச்சர்களைத் தமிழகமே தொடர்ந்து தந்திருக்கிறது. பழந்தமிழர்கள் மனக்கணக்கிலேயே யவனர்களோடு கடல் ஏற்றுமதி வர்த்தகத்தை நடத்தியிருக்கிறார்கள். சீனர்கள் சிலேட்டுப் பலகை வடிவில் ஒரு சட்டத்தில் மணிகளைக் கோர்த்துக் கணக்கிட்டார்கள். ஆனால் பழந்தமிழர்கள் வாய்ப்பாடு என்ற கணித முறையில் கணக்கு விபரங்களை கையிலே வைத்திருந்தார்கள். கால்குலேட்டர் என்ற கணிப்பானை நம்புகிற இன்றைய மனிதர்களுக்கு இதுவெல்லாம் வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை இதுதான்.

மேற்கோள் நூல்கள்

① செந்தமிழ்ச்செல்வி – 2002 மார்ச் இதழ்.

② உலகமொழிகளும், குமரிக்கண்டமும் – நா.மகாலிங்கம், ஓம் சக்தி, 1995, ஜூன் இதழ்

③ தமிழ் நூல்களில் காலக்கணிப்பு; மு.சண்முகம்பிள்ளை தமிழாய்வு நூல் – சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு – 1976.

16. கடல் நாகரிகம்

உலக வரைபடத்தைப் பார்த்தால் பல நாடுகளில் கடலே இல்லை. அதேபோல் இந்தியாவில் பல மாநிலங்களுக்கு கடல் இல்லை. குறிப்பாக இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்களுக்கு கடலே இல்லை. ஆனால் சேர, சோழ, பாண்டியர் எனும் தமிழ் மூவேந்தர்கள் ஆண்ட நிலப் பகுதிகளில் கடலே முக்கிய எல்லைகளாக இருந்தன. இக்கடல் எல்லைகளே தமிழரின் வரலாற்றை மட்டுமல்ல. அவர்களின் கடல் வாணிபம் மற்றும் கடல்சார்ந்த அறிவியல் என்பனவற்றைச் சொல்கின்றன.



மூவேந்தரின் நாடுகளின் நிலப்பரப்பின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்தாலும் பழந்தமிழர் இயற்கையாகவே கடற் பிரயாணம் செய்வதிலும் கப்பல் வணிகம் செய்வதிலும் தொன்றுதொட்டு ஈடுபட்டனர்.

சங்ககாலத்தில் காவிரிபூம்பட்டினம், கொற்கை, குமரி, தொண்டி, முசிறி (இன்றைய முசிறி அல்ல) மருங்கை, அரிக்கமேடு, எயிற்பட்டினம், (சோபட்டினம்) அழகன்குளம், கொல்லத்துறை எனப் புகழ்பெற்ற துறைமுகங்கள் தமிழர் நிலத்தில் இருந்தன.

பழந்தமிழர் தாம் வாழ்ந்த பூமியை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரித்தனர். அவற்றில் கடலும் கடல்சார்ந்த நிலமும் நெய்தல் என அழைக்கப்பட்டது. கடலைச் சார்ந்து வாழ்ந்த மக்களைத் தமிழர்கள் 'பரதவர்' என்றே (பரதவர் – நெய்தல் நிலமக்கள்) அழைத்து வந்தனர். கடலுக்குத் தமிழில் பரதவை என்றே பெயர் வழங்குவதால் கடலை நம்பி வாழும் மக்களை 'பரதவர்' என்று அழைத்தனர் போலும்.

தமிழர்கள் நில வழிக்கு எருமை, எருது, கழுதை, ஒட்டகம், குதிரை போன்ற மிருகங்களையும், நீர்வழிக்கு, படகு, தோணி, வள்ளம், மரக்கலம், கப்பல் போன்றவற்றைப் பயன்படுத்தியிருக்கின்றனர். கடல் வாணிபத்தில்

மேலைநாட்டினரோடு குறிப்பாக ரோம் நாட்டோடு வலுவான தொடர்பு கொண்டிருந்ததை சங்க இலக்கியங்கள் சான்று தருகின்றன. பழந்தமிழர் கடலில் பிரயாணம் செய்யும்போது தங்களுடைய மகளிரை அழைத்துக்கொண்டு போவதில்லை என்ற கொள்கையை கொண்டிருந்தனர் என்பதை தொல்காப்பியத்தின் 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை (மகடூஉ – பெண், மனைவி)' என்ற வரிகள் சுட்டுகின்றன. இன்றைக்கும் பெருங்கப்பலில் பணிபுரிகின்ற பணியாளர்கள் (Navy) தங்கள் மனைவிமார்களை கூட்டிப்போக அனுமதியில்லை. அதற்கு என்ன காரணமோ அதுவே இன்றும்... தொடர்கிறது.

பழந்தமிழர் 'வருணன்' எனும் கடல் தெய்வத்தை வழிபட்டதாக 'வருணன் மேய பெருமணல் உலகமும்' என்ற தொல்காப்பிய வரிகள் சொல்கின்றன. ஆக தொல்காப்பியம் திருக்குறளுக்கு முந்திய நூல். அப்படியானால் தமிழரின் கடல் வழிப்பயணம், வர்த்தகம் அதற்கு முன்பே இருந்திருக்கவேண்டும்....

பஃறுளியாறு முழுகும் முன்னரே கிழக்கில் சாவகம் மலையாகாழகம் (பர்மா) சீனம் முதலிய நாடுகளுடனும், மேற்கில் அரேபியா, பாபிலோனியா, சால்தேயா முதலிய நாடுகளுடனும் தமிழகம் வணிகஞ்செய்து வந்தது ① சால்தேயா நாட்டைச் சேர்ந்த ஊர் என்னும் இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஒரு தமிழ்நாட்டுத் தேக்கவுத்தரம் கி.மு.3000 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படுகிறது.

முத்தமிழ் நாட்டுக் கடற்கரையிலும் ஒரு காலத்திற்கு ஒன்றும் பலவுமாக வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு துறைமுகங்கள் அமைந்திருந்தன. சோழநாட்டிற்கு மயிலை, மல்லை, புகார், காரைக்கால், நாகை, தொண்டி முதலியனவும், சேர நாட்டிற்கு வஞ்சி, முசிறி, தொண்டி, மாந்தை, நறவூர், கொடுங்கோளூர், காந்தளூர், விழிஞம், கோழிக்கோடு முதலியனவும் துறைகளாய் இருந்துவந்தன.

சங்ககாலத்தில் காவிரிபூம்பட்டினம், கொற்கை, தொண்டி, முசிறி, முதலிய துறைமுகங்கள் புகழ்பெற்றவை. அத்துறைமுகங்களில் தோணிகள், படகுகள், கப்பல்கள் என்பன இருந்தன. குதிரைமுக ஓடம், யானை முக ஓடம், பாய்மரக்கப்பல்கள், கட்டுமரம், கலம் என்பன இருந்ததாக சங்க நூல்களில் பேசப்படுகின்றன. பெரிய கப்பல்களும் இருந்திருக்கின்றன. காற்றின் உதவியால் இயங்கிய அக்காலக் கப்பல்களில் பலநூறு மக்கள் ஏறிச் சென்றிருக்கின்றனர்.

தமிழ்மொழியில் கடலில் செலுத்தப்படும் மரக்கலத்தைக் குறிப்பதற்கு அம்பி, ஒங்கல், ஓடம், கலம், கட்டை, மரம், சதா, சொங்கு, திமில், தொள்ளை, தோணி, நாவாய், படகு, கரிசல், பாதை, மிதவை, பலாரி, பாரதி, பாறு, புணை, போதம், மதலை, வங்கம், வள்ளம், பொறி, கப்பல், மரக்கலம் போன்ற சொற்கள்

நெடுங்காலமாக வழங்கி வருகின்றன. சங்கரா், சோழந்தியா எனும் இருவகைப் பெரும் கப்பல்களைப் பண்டைத் தமிழர் கடற்பயணத்திற்குப் பயன்படுத்தியதாக பெரிபுளூஸ் எனும் யவனர் கையேடு கூறுகிறது. திருக்குறள் மூலம் (496) 'கடல் ஓடும் நாவாயும் ஓடாநிலத்து' எனும் வரிகளில் திருவள்ளுவர் காலத்திலேயேயும் கடற்பயணம் தமிழருக்கு மரபான ஒன்று. 'ஏலேலசிங்கன் (கோவலன் முன்னோரான ஏலேலசிங்கன் பெருங்கல வணிகராவர்) கப்பல் ஏழுகடல் சென்றாலும் மீளும்' என்பது பழமொழியாகும். சேரன் செங்குட்டுவன் "கடற்கடம் பெறிந்த காவலன் என்றும், கடற்பிறக்கோட்டிய செங்குட்டுவன்" என்றும் புகழ்ப் பெறுவதால் அக்காலத்தரசர் பகைவராலும் கடற்கொள்ளைக்காரராலும் விளைவிக்கப்படும் தீங்குகளைப் போக்கிக் கடல் வாணிகத்தைக் காத்தமை ஊகிக்கப்படும்.

இந்திய மக்களில் தென்னாட்டவரே குறிப்பாகத் தமிழரே கிழக்காசிய நாடுகளோடு நெருக்கமான வாணித் தொடர்பு கொண்டிருந்தனர் என்று தே.எம்.பணிக்கர் தெரிவிக்கிறார். இக்கடலக வாழ்வில் தமிழரின் சிறப்பை கருத்தில் கொண்ட ரெனே குரோசெட் எனும் பிரான்சு நாட்டு அறிஞர் 'பழந்தமிழரை வெப்பமண்டலக் கிரேக்கர்' என பாராட்டியுள்ளார்.

கிறிஸ்தவர்களின் வேதநூலான பழைய ஏற்பாட்டில் ஒபீர் ② என்ற பெயருடைய துறைமுகம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சாலமன் மன்னன் தன் மரக்கலங்களை அனுப்பி பொன், வாசனை திரவியம், மயில் தோகை, யானைத் தந்தம், குரங்கு போன்றவற்றை ஒபீர் துறைமுகத்தில் இருந்து பெற்றதாக பழைய ஏற்பாடு பேசுகிறது.

ஒபீரில் இருந்து பொன்னைக் கொண்டு வருகிற ஈராமின் கப்பல்களும், ஒபீரிலிருந்து மிகுந்த வாசனைப் பொருட்களையும், மரங்களையும், இரத்தினங்களையும் கொண்டு வந்தன. ஒபீரிலிருந்து வந்த வாசனை மரங்களைப்போல் இதற்கு முன் வந்ததில்லை எனப் பேசுகிறது பழைய ஏற்பாடு. அதன்படி பார்த்தால் இந்த உலகம் புகழும் ஒபீர் துறைமுகம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இன்றைய உவரியே ஆகும். இத்துறைமுகத்தில் இருந்தே சாலமன், சந்தனம், மயில்தோகை, யானைத்தந்தம் என்பன பெற்று இருக்கிறான்.

ஒபேரியின் வீரர்கள் கறுப்பாக இருந்தார்கள் எனவும் ஒபேரியின் நாட்டில் இருந்து முத்துக்கள் வந்ததாகவும் அசரிய வரலாற்று மூலங்கள் கூறுகின்றன. ஒபேரி மக்களின் நிறம் கறுப்பு என்றால் அவன் ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதஇடமுண்டு. **ஆனால் ஆப்பிரிக்காவில் அக்கால மக்கள் கடலோடி வர்த்தகம் செய்பவர்களாக இருக்கவில்லை. மேலும் உலகப்புகழ்பெற்ற முத்துக்கள் அங்கே கிடைக்கவில்லை. எனவே அவர்கள் தமிழகத்தில் இருந்தே பெற்றிருக்கவேண்டும்.**

இன்றைக்கு ஒபேரி அல்லது ஒபீர் தூத்துக்குடியருகே உவரியாக கடலோரக் கிராமமாக இருக்கிறது. இன்றைக்கு அங்கே மீன்பிடி நடக்கிறது. மீன் பிடிக்கிற பரதர்களே அங்கே அதிகம். ஆனால் துறைமுகம் இல்லை. ஆயினும் குமரிக்கண்டக்காலத்தில் இருந்த அத்துறைமுகம் அழித்திருக்கவேண்டும். அதே கடற்கரை வழியே இருந்த எனைய பலதுறைமுகங்கள் அழிந்ததைக் கவனிக்க வேண்டும். மேலும் கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகம் தென்கிழக்காகிய நாடுகளுக்குச் செல்லும் கடல் வழியின் மையப்பகுதியாக பயன்படுத்தப்பட்டது என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இன்று கீழை நாடுகளிலும், மேலை நாடுகளின் சில பகுதிகளிலும் தமிழ்ப் பண்பாட்டின் சின்னங்கள் பலகாணப்படுகின்றன. அவை கடல்மூலம் பண்டைத்தமிழர்களுக்கு இருந்த தொடர்பின் அடையாளங்களாகும்.

கிரேக்க வரலாற்றில் வரும் செய்தி. கி.மு.11ம் நூற்றாண்டில் ஏதன்சு நகரத்தை ஆண்ட முதல் மன்னன் செக்ராப்ஸ். அவனுக்குக் கடற்போரில் பாண்டியன் உதவி செய்த நன்றியைக் காட்டுவதற்காக தன் மகனுக்கு பாண்ட்ராசாஸ் (பாண்டியராசா) எனப் பெயரிட்டானாம். ரோமானியர்கள் கடலோடும் கலையை பாண்டியர்களிடமிருந்து கற்றனராம். அவ்வுதவிக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு ரோமானியர் வெளியிட்ட பொன் நாணயத்தில் மீன் இலச்சினை பொறித்தனர். அந்நாணயங்கள் மதுரை மாவட்ட போடிநாயக்கனூரில் கிடைத்துள்ளன.

எகிப்து, ஏடன், பொன்சியா, செங்கடல் வழியாகப் பாண்டிய நாட்டுக்கு கடல் வாணிபம் நடைபெற்றதை சரித்திர ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அரசன் சாலமன் முடிசூட்டு விழாவிற்குத் தமிழகத்தின் சந்தனம், அகில், துகில், மயிலிறகு அனுப்பப்பட்டதாக விவிலியம் கூறுகிறது. அவன் காலம் கி.மு.10ம் நூற்றாண்டு என்கின்றனர். மேலும் தமிழகத்திற்கு வந்த வெளிநாட்டு வாணிகர்கள் முத்தையும், மிளகையும், சந்தனத்தையும் பேரளவில் வாங்கிச் சென்றதைக் கிரேக்கரின் கடற்பயணக் குறிப்பு ஏடுகள் சிறப்பாகப் பேசுகின்றன.

கடல்கடந்து வந்த வெள்ளை நிற இனத்தவர்களான யவனர்கள் தமிழ் மன்னனின் கோட்டை மதில்காக்கும் சேவர்களாக அரண்மனையில் இருந்திருக்கிறார்கள். இதனை 'கடிமதில் காவலில் சிறந்த கடல்வாழ் யவனர்' என்ற சிலப்பதிகாரத்தை வரிகள் உறுதிசெய்கின்றன. கடல் வாணிகத்தை நடத்துவதற்குத் தமிழகத்தில் பல அமைப்புகள் தோன்றி இருந்தன. அவை நாநாதேச திசையாயிரத்தைநூற்றுவர் மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியார், அஞ்சுவண்ணத்தார் எனப்படும் வாணிகக் குழுக்களாகும். இவை கடல் வாணிபம் செய்ய அரசர்களின் ஆதரவை பெற்றிருந்தன.

இவ்வாறு வரலாற்றைப் பார்க்கிறபோது தமிழர் கி.மு.வுக்கு முன்பே கடல்வாணிபம் செய்து வந்துள்ளனர் என்பது உறுதியாகிறது. அதே நேரத்தில் அந்தக் கடல் வாணிபத்தின் மூலமாக எவரையும் அடிமைப்படுத்த கடலோடிய வெள்ளையர்களைப்போல் முயலவில்லை என்பதை பார்க்கிறபோது தமிழர்கள் கடல்வாணிபத்தை பொருள் வாங்கவும், விற்கவும் அறிவியல் பண்பாட்டுப் பரிமாற்றம் செய்யவும் மட்டுமே பயன்படுத்தினார்கள் என்பது உயர்ந்த நாகரிகத்தின் வெளிப்பாடாகும்.

கடல் வாணிபம் :

புகழ்பெற்ற பூம்புகார் பட்டினம் கடலிலே மூழ்கியதாக வரலாறு. ஆனால் அந்நகரின் சிதைவுகள் இன்னமும் கடலுக்குள் இருப்பதாக சமீபத்தில் செயற்கைக்கோள் மூலம் படம் பிடித்த ஐரோப்பிய வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். அவர்களின் அந்தப் படத்தில் கட்டடங்கள், வீதிகள், சிதைந்த மாளிகைகள் என்பன தெரிகின்றனவாம். அந்தக் கணிப்பு மிகச்சரியானது என்பதை தமிழரின் சங்ககால இலக்கியங்கள் சொல்கின்றன.

பூம்புகார்ப்பட்டினமே பழந்தமிழரின் புகழ்பெற்ற துறைமுகம். அத்துறைமுகம் காவிரி ஆறுகடலில் கலக்கிற புகார் முகத்தில் அமைந்திருந்தது. எனவே காவிரி ஆற்றின் முகத்துவாரம் ஆழமாகவும், அகலமாகவும் இருந்தது. 'ஆகவே அத்துறைமுகத்தில் நாவாய்கள் எனப்படும் கப்பல்கள் யானைப்பந்தியில் நிற்கும் யானைகள் அசைந்துகொண்டு நிற்பனபோல் அசைந்து கொண்டிருந்தன' என சங்க இலக்கியங்களிலே செய்திகள் வருகின்றன. அப்படிப்பட்ட சிறந்த துறைமுகத்தில் தமிழ்நாட்டுக்கப்பல் வணிகர் பலர் இருந்தனர். பல கப்பல்களையுடைய பெரிய கடல் வாணிகருக்கு 'மாநாவிகன்' எனும் சொல் திரிந்து 'மாநாய்கர்' என ஆகியது. கண்ணகியின் தந்தை ஒரு மாநாவிகன். கோவலனுடைய தந்தை பெரிய மாசாத்துவன். (சாத்து–வாணிகச் சாத்து) தரை வாணிகக்குழுவுக்கு சாத்து எனப்பெயருண்டு. கப்பலை நாவாய் எனச் சொன்னார்கள் (இந்த நாவாய் திரிந்து ஆங்கிலத்தில் நேவி (Navy) என்றாகியதாகச் சொல்லப்படுகிறது.)

அந்தப்பழமையான துறைமுகத்தில் பல பெரிய கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற வசதி இருந்தது. எனவே சங்க காலத்தில் பலநாட்டுக் கப்பல்களும் அந்ததுறைமுகத்தில் வந்து நின்றன. 'பட்டினப்பாலை' என்ற சங்க நூலிலே 'கடியலூர் உருத்திரங்கண்ணனார்' என்ற புலவர் அந்தக் கப்பல்களில் வந்து இறங்கிய பொருட்களைப் பட்டியலிடுகிறார்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி முடையும்

வடமலைப் பறிந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென் கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயக்கிய நனந்தலை மறுகின்

(பட்டினப்பாலை : 185 – 194)

இப்பாடலின் கருத்துப்படி தமிழ் மண்ணுக்கு குதிரைகள் கடல்வழியே வந்திருக்கின்றன. மிளகு மூடையும் (கருங்கறி) வந்திருக்கிறது. அக்காலத்தில் சேரநாட்டு மிளகே தரமானது. ஆனால் அது பற்றாக்குறைப்பொருளாய் இருந்ததால் சாவக நாட்டில் (ஜாவா, சுமத்ரா) இருந்து இறக்குமதி செய்தனர். அது சேரநாட்டு மிளகு போல் தரமானது அல்ல. ஆயினும் வேறுவழியின்றி இறக்குமதி செய்தனர். அதனையே கருங்கறிமூடை எனக் கூறப்பட்டது. பிறகு கங்கையாற்றின் முகத்துவாரத்தின் வழியாக பொன்னும், மணியும், சந்தனக்கட்டை, அகிற்கட்டை என்பனவும் வந்தன. அடுத்து தென்கடல் (கொற்கை) முத்து, பவழம், ஈழத்து உணவும் (ஈழநாட்டு உணவும்) காழகத்து ஆக்கமும் எனும் பர்மா தேசப்பொருட்கள் (பர்மா தேக்கு) என்பன வந்திருக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நடந்திருக்கிறது. தமிழ் வாணிகர் அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தது போலவே அயல்நாட்டு வாணிகரும் தமிழகத்துக்கு வந்து வாணிகம் செய்தார்கள். அக்காலத்தில் உலகப்புகழ்பெற்ற இத்துறைமுகத்திலே அயல்நாடுகளிலிருந்து கப்பலோட்டி வந்த வேறு மொழியினைப் பேசிய மக்கள் தங்கியிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

பயன்அறிவு அறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்தினி துறையும் இலங்குநீர் வரைப்பும்

(சிலம்பு : 5, 10, 12)

இப்பாடலில் பிறமொழி பேசுவேரை புலம்பெயர் மாக்கள் என்று அழைக்கிறார் இளங்கோ அடிகள். பட்டினப்பாலையும், அவ்வாறு அழைக்கிறது; பாடல்.

மொழிபல பெருகிய பழிதீர் தே எத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்.

(பட்டினப்பாலை : 216, 218)

சங்க காலத்திலும் அதற்குப் பிறகும் பிற்காலச் சோழர் காலத்திலும் இறக்குமதியான பொருட்கள், பட்டாடைகள், பல்வகை எந்திரப் பொறிகள், மதுபான வகைகள், குதிரை, சீனரின் பீங்கான், சந்தனம் என ஐவ்வகை வாசனைப் பொருட்கள், பவளம், ஈயம், தகரம். (இப்பட்டியல் நீளும்)

பொருட்கள் இறக்குமதியான நாடுகள் அரபுநாடு, சாவகம், சுமத்ரா, சீனா, கிரேக்கம், ரோமாபுரி, ஈழம்.

இனி தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருட்களைப் பார்ப்போம்: மிளகு (இது கிரேக்கம், ரோமாபுரி உட்பட பல நாடுகளுக்குச் சென்றது) மயில் தோகை, வாசனைத் திரவியங்கள், மிக மெல்லிய ஆடைகள், அரிசி, கருவா, இஞ்சி, நல்லெண்ணெய், தேக்கு, வாழை, சோளம், கம்பு, புளி, வெற்றிலை, பாக்கு, பல்வகை முத்துக்கள்.

இதுபோக யானைகள், புலிகள், சிறுத்தைகள், குரங்குகள், கிளிகள், மயில்கள் என்பன போயிருக்கின்றன. வேட்டைக்காக தமிழகத்து (கானுறை வாழ்க்கைக் கதநாய்) நாய்களும் போயிருக்கின்றன.

இந்தக் கடல் ஏற்றுமதி இறக்குமதி மூலமாக யவனர் (கிரேக்கர், ரோமர்), சாவகர், அரேபியர், சீனர் (பிற்காலத்தில்) ஆகியோருடனும் அந்த நாடுகளுடனும் தமிழர்களுக்கு சங்க இலக்கிய காலத்திலிருந்தே தொடர்பு இருந்திருக்கிறது. தொடக்கத்தில் அக்காலத்தில் நடுக்கடலில் பிரயாணம் செய்யாமல் யவனர்கள் கடற்கரையோரமாகவே பிரயாணம் செய்தபடியால், அவர்கள் முசிறி முதலான தமிழகத் துறைமுகங்களுக்கு வந்து போகப் பல மாதங்கள் சென்றன. அவர்கள் அரபிக்கடலின் ஊடே நடுக்கடலில் பருவகாற்றின் உதவியால் பிரயாணம் செய்ய அக்காலத்தில் அறியவில்லை. ஆனால் பருவக்காற்றின் உதவியினால் வெகுவிரைவில் நடுக்கடலினூடே பிரயாணம் செய்யத்தமிழரும் அராபியரும் அறிந்திருந்தார்கள்.

பிளைனி, தாலமி முதலான யவனர்கள் கிரேக்க மொழியில் எழுதிய நூல்களிலிருந்து தமிழர் யவனர் வணிகத்தொடர்பைப்பற்றி அறியமுடிகிறது. இத்தொடர்பின் காரணமாக சில கிரேக்க மொழிச் சொற்களான மத்திகை, கலம், கருங்கை, கன்னல் என்பன தமிழில் கலந்துவிட்டன. சங்கப் பாடல்களிலேயும் இந்த சொற்கள் இடம் பெற்றுள்ளன. கலம் என்னுஞ்சொல் கிரேக்கம், தமிழ் என்னும் இரண்டு மொழிகளுக்கும் உரியசொல். அரிசி எனும் தமிழ்ச்சொல் கிரேக்கம், லத்தீன் மொழிகளில் ஒரிஜா (Oryza) என வழக்கப்படுகிறது.

இவ்வாறு வரலாற்றுத் தகவல்களைப் பார்க்கிறபோது தமிழ் மண்ணில் விரிந்து பரந்த கடல் தமிழர்களுக்குத் தொட்டிலாக இருந்திருக்கிறது. மிகப்பெரிய வர்த்தகம் கடல் சார்ந்து நடந்திருக்கிறது. கடல் வர்த்தகத்தையே கரையோர வாணிகம் என்றும், கடல் வாணிகம் என்றும் பிரித்திருக்கிறார்கள். கடலில் ஏற்றும், இறக்கும் பொருட்களுக்கு

சுங்கம் வசூலித்திருக்கிறார்கள்.

இந்திய நாட்டில் ஆண்ட வேறெந்த அரச மரபினரும் கனவில்கூடக் கருதாத கடல் கடந்த பேரரசினைச் சோழர்குடியில் தோன்றிய மாபெரும் மன்னனான இராசேந்திர சோழன் நிறுவமுயன்றான். அவன் மலேசியாவின் ஒரு பகுதியான கடாரம் வென்றான் என்பது இன்று ஒரு வரலாற்றுத் தகவல். ஆனால் அன்று காற்றை நம்பி கப்பல் ஓடி கடாரம் போக 500 நாட்களாவது ஆகியிருக்கும். சீனா போக 1150 நாட்கள் ஆகுமாம்.

கடாரத்தைக் கைப்பற்றிய சோழர்களே, மலேசிய நாட்டிற்கு முதன்முதலாக நாகரிகத்தை அளித்தவர்கள் என மேலைநாட்டு அறிஞரான ரோவன்ட் புரொடெல் என்பார் எழுதியுள்ளார். கி.பி. 7ம் நூற்றாண்டில் தமிழகத்துத் துறைமுகத்திலிருந்து சென்ற ஒரு கப்பலில் யுவான் சுவாங் என்ற சீனவழிப்போக்கன் கீழைநாடுகளுக்குச் சென்றான். அந்தக் கப்பலில் பலநூறு மக்கள் இருந்தனர். அவர்கள் கடல்நீரை காய்ச்சி நன்னீராக்கிப் பருகினர். (அவர்கள் தமிழர்களே) என்று அவன் எழுதிய குறிப்பு கூறுகிறது. கி.மு.1000 அளவில் சீனநாட்டவரோடு தமிழர்களுக்கு வணிகத் தொடர்பு இருந்ததாக 'தமிழர் நாகரிகமும், பண்பாடும்' என்ற நூலில் தட்சணாமூர்த்தி எனும் அறிஞர் சொல்கிறார்.

தமிழரின் கடல் வாணிபத்தில் மிளகு, முத்துக்கள், வாசனைத் திரவியங்கள் மிகமுக்கிய மானவை. பாண்டிநாட்டு கொறகை முத்து உலகப்புகழ்பெற்றது. முசிறிக் கடலில் உண்டான முத்துக்கள் முசிறிப்பட்டினத்தின் (இன்றைய முசிறி அல்ல. கடலோர முசிறி) ஒரு பகுதியான 'பந்தர்' எனும் இடத்தில் விற்கப்பட்டன. அதுபற்றி

'இன்னிசை புனரி இரங்கும் பௌவத்து

நனிகல வெறுக்கை துஞ்சும் பந்தர்'

என்று பதிற்றுப்பத்து பாடல் (55–3–4) வரிகளில் வருகின்றன. 'பந்தர்' என்பது அரபு மொழிச்சொல் 'பந்தர்' என்றால் கடைவீதி என்று பொருள். ஆகவே முசிறியில் 'பந்தர்' என்ற கடைவீதி அமைந்த இடத்தில் முத்துக்கள், பொன் நகைகள் விற்கப்பட்டிருக்கலாம். இன்றைக்கு சென்னையில் பாரிமுனையில் 'பந்தர்' என்ற பெயரில் ஒரு கடைவீதியுண்டு.

தமிழகத்து முத்துக்கள் ரோமில் மிகுதியாக விலையாயின. அதே போல் தமிழக மிளகு ரோம் நாட்டிலும் எகிப்து, கிரேக்க நாடுகளிலும் புகழ்பெற்றன. ரோமர் ஆண்டுதோறும் நறுமண எண்ணெய்கள், மிளகு, முத்து, நவமணிகள் யாவற்றையும் ஏராளமாக தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்தனர். இவற்றுக்குப் பெருந்தொகை செல்வம் செலவிடப்பட்டது. இதுபற்றி ரோமநாட்டு வரலாற்று எழுத்தாளர் பிளைனி (Pliny) 'எங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கும் எங்கள் மகளிர்க்காகவும் நாங்கள் தமிழகத்துறைமுகங்களிலிருந்து ஆண்டுதோறும் 5.50 கோடி (Sesterces)

ரோம நாணயம் கொடுக்கிறோம். இதனையிட்டு ரோம அரசு கருத்தில் கொள்ளவேண்டும்.' என்று எழுதியிருக்கிறார். இது ஒன்றே பழந்தமிழர் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கியதற்கு எடுத்துக் காட்டப் போதுமானது. அதே நேரத்தில் இன்றைக்கு அவற்றை எண்ணிப் பார்க்கின்றபோது பழந்தமிழரின் கடல்வாணிபமும் அவர்களின் கடல்சார்ந்த அறிவும், தொழில்நுட்பமும் நமக்கு வியப்பைத் தருகின்றது.

மேற்கோள் நூல்கள்

① பழந்தமிழாட்சி : ஞா.தேவநேயம், கழக வெளியீடு – 1972.

② உவரியும் ஒபீரும் : மோகனரூபன், கழக வெளியீடு – 2002.

17. கட்டடக்கலை

அழகு,கற்பனை, தொழில்நுட்பம் ஆகிய மூன்றும் இணைந்த ஒப்பற்ற கலையான கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளுக்கு அடித்தளமானது. எனவேதான் பிரெஞ்சு எழுத்தாளர் ஏனெஸ்ட் டிம்நெட் (Ernest Dimnet) என்பவர், 'கட்டடக் கலை எல்லாக் கலைகளிலும் அது ஒன்றுதான் மெதுவாக வேலை செய்யும். ஆனால் மிக நிச்சயமாக ஆத்மாவோடு சேரும்' என்றார். இன்னொரு ஜெர்மன் தத்துவஞானி பிரடிரிகா வொன்ஸ்லீலிங் (Fri Edrich Von Schelling, 1775-1854) என்பவர் 'பொதுவாகக் கட்டடக்கலை உறைந்து போன இசை' (Architecture in General is Frozen Music) என்றார்.



தமிழரின் கட்டடக்கலை தமிழரின் மரபுக்கே உரியது. ① தொல்பழங்காலம் முதற்கொண்டே, தமிழர் கட்டடக்கலையைப் பேணி, தனி முத்திரைப் பதித்து வளர்த்து வந்துள்ளனர். தமிழரின் மூதாதையர்களான திராவிடப் பழங்குடி மக்கள் கட்டிப்போற்றிய, நாடு நகர அமைப்புகள், சிந்து வெளியில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்வதைக் காணுகிறோம். கி.மு.3000 அளவிலே அமைக்கப்பட்ட மொகஞ்சதாரோ ஹரப்பா நகரங்களின் கட்டடங்களும், மாளிகைகளும், மண்டபங்களும் தெப்பக்குளங்களும் திராவிடக்கட்டடக் கலையின் பாணியில் உருவானவை என சர் ஜோன் மார்ஷன், ஈராசுப் பாதிரியார் முதலிய அறிஞர்களின் கருத்தாகும்.

கடலில் மூழ்கிய பூம்புகார்ப் பட்டனம் பழந்தமிழரின் கட்டடக்கலைக்கு முதன்மையானது. அந்நகரின் அகன்ற வீதிகள் சிதைந்த தளங்கள், பெரிய கப்பல்கள் நிற்கும் கடற்தளங்கள் என்பனவற்றை அமெரிக்க செயற்கைக்கோள் மூலம் சமீபத்தில் படம் பிடித்தனர். சிலப்பதிகாரத்தில் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் எனும் தலைப்பில் இந்திரவிழா எடுத்த பூம்புகாரின் சிறப்பை இளங்கோ அடிகள் அற்புதமாய் வர்ணிக்கின்றபோது பூம்புகார் கட்டக் கலையின் சிறப்பை அறிய முடிகிறது. பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் என்ற வரிகளே அதற்கு முன்னுதாரணமாகிறது.

தொல்காப்பியத்தில் கூறப்படும் கட்டடக்கலை சம்பந்தமான கூறுகள் மிகச்சிலவே. பண்டைத் தமிழ் வேந்தர்களுடைய அரண்மனைகளைச் சுற்றி வலிமைமிக்க அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை முழுமுதல் அரணம் (தொல்–பொருள்–1011) என்ற வரிகளில் சொல்கிறார் தொல்காப்பிய புலவர். அவர் மதிலை 'ஆரெயில் மதிற்குடுமி' என அடைமொழி தந்து சிறப்பிப்பதால் அக்கால கட்டடக்கலையை அறிய முடிகிறது.

தொல்காப்பியத்தில் (தொல். புறத்திணை இயல், சூத். 10 உரை) 'முழு அரணாவது, மலையும் காடும் நீருமல்லாத அகநாட்டுள் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு புறஞ் சூழ்ந்து, அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடையதாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பலபொறிகளும் ஏனைய பொறிகளும் பதணமும் மெய்ப்புழை ஞாயிறும் ஏனைய பிறவும் அமைந்து எழுவுஞ் சீப்பும் முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற் கோபுரமும் பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம்' என நச்சினார்க்கினியார் விளக்கியுள்ளமையால் அக்காலத்து அரண்களை அமைப்பதில் வல்ல கற்கொல்லர் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது.



பழந்தமிழரின் கோட்டைகளில்
அமைக்கப்பட்டிருந்த
பாதுகாப்புப் பொறி

மதுரை கோட்டை (கடல்கொண்ட மதுரை) மீது பல்வகை எந்திரப் பொறிகள் இருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது; ②

மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்

பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சீரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனை புக்கனளால்
கோவலர் மடந்தை கொள்கையில் புணர்ந்துஎன்

(சிலம்பு – 15; 207–219)

இப்பாடலில் வலுவான அரணும் அகழியும் அந்த அகழியோடு ஒட்டிய கோட்டையும், கோட்டை மதில் மீது பலவகை யந்திரப் பொறிகள் எதிரிகளை எச்சரிக்கும் விதமாக இருந்தன என்பதைக் கவனிக்கலாம். பாடலின் முழுவிபரம்;

காவல் அரணாக காடும், அகழியும், வரும் எதிரிகளைக் கண்டவுடன் வளைந்து தானே தாக்கும் எந்திர வில்லும், கருத்த விரல்கள் உடைய கருங்குரங்கு உருவினால் பொறியும், கல் எறிந்து தாக்குகின்ற கவண் பொறியும், அருகே வந்தவர் மேல்கொட்டக் கொதிக்க வைத்த எண்ணெய்க் குண்டமும், சாணம் கரைத்துக் காய்கின்ற மிடாவும், இரும்பு உருக்கி வைத்த உலைக்கூடமும், கற்கள் நிரப்பி வைக்கப்பட்ட கூடைகளும், தூண்டில் வடிவிலான கருவியும், கழுத்தில் மாட்டி இழுக்கும் சங்கிலியும், ஆண்டலைப் பறவை (ஆண்டலைப்பறவை ; ஆண்மகன் தலை போன்ற தலையுடைய ஒரு பறவை) வடிவாகச் செய்யப்பட்ட நெருப்படுப்பும், அகழியில் இருந்து மதில் ஏறிவர முயல்பவர்களை நெட்டித்தள்ளும் கவை வடிவான கருவியும், கூரிய இரும்புக் கோலும், அம்புக் கட்டும், மறைந்து இருந்து தாக்கும் இடுக்கு வழிகளும் நெருங்கி வருபவர் தலையை நசுக்குகின்ற மரங்களும், மதில் மேல் ஏறுபவர் கையைக் குத்தித் தாக்கும் ஊசிப்பொறிகளும், பகைவர்மேல் சென்று கண்ணைக் குத்தும் கிச்சிலிப்பொறியும், மதில்மேல் ஏறுபவர்களைக் குத்திக் கிழிக்கும் பன்றி வடிவில் அமைந்த பொறியும் மூங்கில் தடிகளும் கோட்டைக் கதவுக்குப் பாதுகாப்பாக அடுக்கி வைக்கப்பட்ட பெரிய மரங்களும், வலிமை வாய்ந்த கணைய மரங்களும், எறிகோலும், முத்துக்கோலும், ஈட்டியும் நிறைந்த மதுரை மாநகரின் காவல் மதில்.

கட்டடக்கலை தொழில்நுட்பம் இருந்ததால்தான் மதுரை மாநகரின் காவல்மதில்பற்றி சிலப்பதிகாரம் பேசுகிறது. இதேபோன்று மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடைப் பாடல் என்பன தமிழரின் கட்டடக்கலை சம்பந்தமாக

குறிப்புகளைச் சொல்கிறது. பரிபாடல் என்ற சங்க இலக்கியத்தில் பாண்டியனின் அரண்மனை வாயில், தன்மீது உயர்த்தப்பட்ட கொடியோடு யானை நுழையத்தக்கதாக இருந்தது. உள்ளே அகன்ற முற்றம் இருந்தது. முற்றத்துக்கு அப்பால் மாடமாளிகைகள் உயர்ந்து நின்றன என்கிறது. மதுரை மாநகரம் தாமரை போன்ற அமைப்புடையதாய் இருந்தது. அம்மலரின் இதழ்கள் அடுக்கடுக்காகச் சூழ்ந்திருப்பதுபோல் மதுரையில் பலதெருக்கள் பலவரிசைகளாக அமைந்திருந்தன. மதுரை நகரில் நிலத்திற்கு அடியில் கழிவு நீர் செல்வதற்காக பெரிய சுரங்கப்பாதை அமைக்கப்பட்டிருந்தது. அதன் வழியே ஒரு யானை போகலாமாம். அப்படியானால் எவ்வளவு பெரியது என்பதை கற்பனைக்கே விடுகின்றேன்.

பண்டைத் தமிழ்மக்கள் கோயில்களையும், மண்டபங்களையும், மரங்களினாலும், செங்கற்களினாலுமே கட்டினர். அரசரின் மாளிகைகளும் உயர்ந்த மாடங்களும், தெய்வ நிலையங்களும் உலோகத் தட்டினாலும் சாந்தினாலும் வேயப்பட்டிருந்தன. உயர்ந்த மாடங்களில் அடுக்கு வீடுகளும் நிலா முற்றங்களும் இருந்தன.

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 13ம் நூற்றாண்டு முடிய தமிழகத்தின் பல பகுதிகளில் கற்கோயில்கள் பெருமிதத்தோற்றமுடைய விமானங்களைக் கொண்டனவாக எழுப்பப்பட்டுள்ளன. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் தமிழரின் கட்டடக்கலை ஒரு நிலையான தரத்தைப் படிப்படியாக அடைந்துவிட்டது. கோயில் கட்டடக்கலை பத்தாம் நூற்றாண்டுக்குள் ஒருவகை நிலைப்பேற்றுத் தன்மையை எய்தியது.

சோழப் பேரரசர் காலத்தில் மட்டும் சற்றேறக்குறைய 500 கற்கோயில்கள் துங்கத்திரை முதல் இலங்கையில் உள்ள ஜனநாதமங்கலம் (ரோகணம்) வரை நிருமாணிக்கப்பட்டுள்ளதாக அறிஞர் கணக்கிட்டுள்ளனர். இக்கோயில்களில் மிகமுக்கியமானதாகக் கருதப்படுவதும் தமிழரின் கட்டடக் கலைக்கு உயிராக இருப்பதுமான தஞ்சை பெரியகோயில் தமிழர் கட்டடக்கலையை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது.

மிகப்பழைய காலத்தில் கோயில் கட்டடங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல், சுண்ணாம்பு, மரம் முதலிய பொருட்களால் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. அதற்குப் பிறகு பெரிய பாறைகளைக் குடைந்து குகைக்கோயில்கள் அமைக்கப்பட்டன. கருங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுவது 'கற்றளி' எனப்படும். வெறும் மண்ணால் கட்டப்பட்ட கோயில்களுக்கு 'மண்தளி' என்று பெயர்.

மரக்கட்டடம் விரைவில் பழுதடைவதோடு எளிதில் தீப்பிடித்துக்கொள்ளும். ஆகவே பிற்காலத்தில் செங்கல், சுண்ணாம்பு, மரம்

முதலியவை கொண்டு கோயில்களைக் கட்டத்தொடங்கினார்கள். செங்கற்கட்டடங்களும் ஏறக்குறைய 200 முதல் 300 ஆண்டுகளுக்குமேல் நிலைபெறுவதில்லை. இத்தகைய செங்கற்கட்டடக் கோயில்களை அவ்வப்போது செப்பனிடாமற்போனால் அவை சிதைந்து அழிந்துவிடும் என கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர்

இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறா துறந்த மரம் சோர் மாடத்து
எழுதணிகடவுள் போகலிற் புல்லென்று

(அகம் - 167-13-15)

என்ற அகநானூறு பாடல் வரிகளில் சொல்கிறார்.

இடைச்சங்க காலத்தின் இறுதியில் இருந்த சோழன் ③ செங்கணான் சிவனுக்கும் திருமாலுக்கும் ஆக எழுபதுக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டினான் இதனை

இருக்கிலங்கு திருமொழிவாய் எணிடோ வீசற்கு
எழில்மாடம் எழுபது செய்துலக மாண்ட
திருக்குலத்து வளச் சோழன்

என்று திருமங்கை ஆழ்வார் கூறுகிறார்.

கோயில் கட்டடங்களைக் கூட உடல் உறுப்புகளைத் தொடர்புபடுத்தி தமிழர்கள் கட்டியிருக்கிறார்கள். ஒரு கோயில் கட்டடத்தில் ஆறு உறுப்புகள் உண்டு. அவை 1. அடி (பாதம்), 2. உடல், 3. தோள், 4. கழுத்து, 5. தலை, 6. முடி என்பனவேயாகும். இவற்றுக்கு சிற்பநூலில் வேறுபெயர்கள் கூறப்படுகின்றன. அப்பர் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் தமது திருஅடைவு திருத்தாண்டகத்தின் 5ம் செய்யுளில் கோயில் கட்டட வகைகளின் பெயர்களை கூறுகிறார். அச்செய்யுள்

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டு மற்றும்
கரைக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே

இப்பாடலில் சோழன் செங்கணான் கட்டிய எழுபத்தியெட்டுக் கோயில்களைக் கூறிய பின்னர் கரக்கோயில், ஞாழற்கோயில், கொடுகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என சிலவகையான கோயில்களைக் கூறுகிறார்.

'மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு இணையான கோயில் இந்தியாவில் ஏன் உலகத்திலேயே இல்லை...' இப்படிச் சொன்னவர் ஆங்கில வரலாற்று ஆசிரியர் பெர்க்கின்ஸ்.

திருக்குறளை சுவீடிஸ் மொழியில் பெயர்த்த மிரிக்கேம் என்ற அறிஞர் ஐரோப்பிய நாட்டிற்கு முற்றிலும் மாறுபட்ட கண்ணைக்கவரும் சக்திவாய்ந்த கோயில்கள் என்று தமிழரின் பழங்காலக் கோயில்களைப்பற்றி வியந்து கூறியுள்ளார். இவ்வாறான தமிழரின் கட்டடக்கலைக்கு ஆணிவேராக அமைந்தது நடுகல் வழிபாடாகும். போரில் மறைந்த மாவீரனுக்கு மரியாதைசெய்ய ஒருகல்லைத் ④ 'தேர்ந்தெடுத்து அதில் மறைந்த மாவீரனின் உருவத்தைச் செதுக்கி அரிய செயலையும் பெயரையும் எழுதிப் பொறித்து வழிபாடு செய்வர். அதுவே நடுக்கல் வழிபாடு என வந்தது. அந்த வழிபாடுதான் கோயில் வழிபாட்டிற்கும் கட்டடக்கலையின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்தது.'

கோயில் சிற்பம் :

தமிழரின் கட்டடக்கலை மரபில் தலைசிறந்த கோயிலாகக் கருதப்படுவது தஞ்சைபெரியகோயிலாகும். இக்கோயிலின் விமானம் அழகுமிக்க எகிப்து பிரமிடு போன்ற தோற்றம் உடையது. இதனுடைய சிறப்புமிகு கலையழகு, இதனுடைய உறுப்புகளின் எளிமையான அமைப்பிலே ஊற்றெடுக்கிறது. இதனுடைய உறுப்புகள் மூன்று. அவை சதுரமானதும் செங்குத்தானதுமான அடித்தளம் மற்றது உயர்ந்து கூம்பிய உடற்கட்டு. மற்றது கலசத்தோடு கூடிய சிகரம் என்பனவாகும். இவற்றுள் செங்குத்தான அடித்தளப்பகுதி 82 அடி உடைய சதுரப்பக்கங்களையும் 50 அடி கொண்ட உயரத்தையும் உடையது. இதிலிருந்து பதினாறு மாடங்களைக் கொண்ட பிரமிட் போன்ற உடற்கட்டு மேல்நோக்கி வடிவில் குறுகிக்கொண்டே செல்கிறது. இதனுடைய முடியின் பரப்பு அளவு அடித்தளத்தின் பரப்பு அளவில் மூன்றில் ஒரு பகுதியாகும். அம்முடியின் அமைப்பு சதுரமான மேடைபோல் இருக்கிறது. அதன்மீது உள்நோக்கி வளைந்த கழுத்து அமைப்போடு கூடிய சிகரம் அமைந்துள்ளதைப்போல் இச்சிகரம் விளங்குகிறது. கோயில் சிகரத்தில் பொருத்தப்பட்டுள்ள கலசத்தின் நிழல் கீழே தரையில் விழுவதில்லை. சிகரம் பொருத்தப்பட்டுள்ள பிரமதளக் கல்லிலேயே நிழல் விழுகிறது.

திராடவிடக் கலைப்பாணியின் உரைக்கல்லாகவும், கோயில்களுக்கு எல்லாம் அரசனாகவும் விளங்குவது தஞ்சைபெரிய கோயில். இதனைத் தொடக்கத்தில் தஞ்சைப் பெருவுடையார் கோயில் என அழைத்தனர். இதனைப் பார்க்கிற மேல்நாட்டினர் பழந்தமிழர் கட்டடக்கலைநுட்பங்களைக் கண்டு வியந்துபோயினர். இத்தனைக்கும் 100 மாடிக் கட்டடங்களை சொந்த

நாடுகளில் பார்த்தவர்கள். அவையெல்லாம் நவீன எந்திரங்களின் உதவியோடு கட்டப்பட்டவை என்பதும் அவர்களுக்குத் தெரியும். தஞ்சைபெரிய கோயில் கட்டிய காலத்தில் எந்திரங்கள் இல்லை. தொழில்நுட்பத்தில் வேகமான நவீனம் இல்லை. ஆனால் மாபெரும் மனிதசக்திகள் இணைந்து கட்டப்பட்டவை அவை.

தஞ்சைபெரியகோயில் இராஜராஜசோழனால் கட்டப்பட்டது. கங்கைகொண்ட சோழபுரம் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது. இரண்டு கோயிலுக்கும் நுட்பமான வேறுபாடுகள் உள்ளன. இவ்விரு கோயில்களையும் ஒப்பிட்டு பார்த்த மேல்நாட்டு அறிஞர் பெர்சி புரவுன் ⑤ இரு கோயிலின் கட்டடக்கலையை அற்புதமாக ஒப்பீடு செய்கிறார்.

தஞ்சைபெரிய கோயிலில் ஆண்மையின் ஆற்றல்சால் வீறமைதி ஒளி வீசுகிறது. கங்கைகொண்ட சோழபுரம் இன்பக்களியாட்டக் கவர்ச்சி நம்மை கவர்கிறது. முழுநிறைவுற்ற பெண்மை நலத்தின் பேரழகு பொங்கி வழிகிறது... இதுதான் அந்த மேல்நாட்டு அறிஞரின் கருத்து. இதன் அர்த்தமும் அதன் அனுபவமும் அறிந்து புரிதல் எல்லையில் நிற்பவர்கள், இவ்விரு கோயிலையும் பழந்தமிழர் கட்டடக்கலை வழியே பார்ப்பவர்கள் மட்டுமே. அவர்களால்தான் பழந்தமிழர் கட்டடக்கலை சம்பந்தமான தொழில்நுட்ப அறிவியலையும் புரியமுடியும்.

சிலப்பதிகாரத்தில் மாதவியின் அரங்கம் எவ்வாறு கட்டப்பட்டது என்பதை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். அச்செய்தியே தமிழர் கட்டடக்கலையில் முன்நின்றவர்கள் என்பதைப்புரிய வைக்கிறது. அப்பாடல் ⑥

எண்ணிய நூலோர் இயல்பினில் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல் அளவு இருபத்திநூல் விரலாக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத்து உறுப்பினது ஆகி
உத்தரப்பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநீலம் நாற்கோல் ஆக
ஏற்றவாயில் இரண்டுடன் பொலிய
தோற்றிய அரங்கில்

(சிலம்பு : 3, 95 – 110)

கணுவுக்குக்கணு இடைவெளியில் உள்ள இடைவெளி ஒருசாண் உள்ளதாகப் பார்த்து மூங்கிலை வெட்டிக்கொண்டு வந்து, அந்த மூங்கிலினை சிற்பநூல் வகுத்தபடி உயர்ந்த நல்ல ஆண்மகன் ஒருவன் கைப்பெருவிரல் அளவில் இருபத்து நான்குவிரல் அளவு கொண்டதாக நறுக்குவர். இப்படி நறுக்கிய மூங்கில் கோல் அளவையே 'அளவுகோலா'கும். இந்த அளவுகோலில் ஏழுகோல் அகலமும், எட்டு கோல் நீளமும், ஒரு கோல் உயரமும் கொண்டதாக அரங்கமேடை அமைத்து நான்கு பக்கமும் தூண்களை நிறுத்தினர். மேற்கூரை பலகைக்கும், அரங்கின் பலகைக்கும் நாலுகோல் இடைவெளி விட்டனர். இப்படி அமைத்த அரங்கின் உள்ளே வரவும், வெளியே போகவும் தனித்தனியாக இரண்டு வாயில்கள் அமைத்தனர். அவ்வாறு அமைந்த நாட்டில் அரங்கத்தில் அரசர் முதல் அனைவரும் அவரவர்களுக்குரிய இருக்கையில் அமர்ந்திருக்க மாதவி அழகு நடனம் ஆடினாள்.

இவ்வாறு கட்டடக்கலையில் மேன்நிலை எய்திய தமிழரின் கட்டடக்கலை சார்ந்த எஞ்சிய அடையாளங்களே ஆங்காங்கே தமிழ் மண்ணில் எழுந்திருக்கிற கோயில்களில் இன்றும் காணலாம். இக்கோயில்களை ஆன்மீகச் சின்னமாக பார்க்கிற சாதாரண பார்வையை விடுத்து அறிவியல் பார்வையில் பார்க்கிறபோதுதான் பல உண்மைகள் புரியவரும். இன்று தமிழரின் கட்டடக்கலையை – அதன் வரலாற்றை ஆராய்ந்து அறிவதற்குக் கோயில்களைத் தவிர வேறு எத்தகைய தொல்பொருள் சின்னங்களும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் கடலில் மூழ்கிய காவிரிபூம்பட்டணத்தைப் பற்றியும், மதுரையைப் பற்றியும் ஏனைய மாடமாளிகைகள் பற்றியும் ஆழமான குறிப்புகள் வருகின்றன. ஆனால் அவையெல்லாம் கடற்கோள்களினால் பகையரசர்களின் தாக்குதலுக்கும் பங்காளிகளின் தாக்குதலுக்கும் ஆளாகி இடிந்து மண்மேடுகளாகிவிட்டன. எஞ்சியிருக்கிற பழங்காலக் கட்டடங்களும், தொல்பொருளாக காப்பற்றப்படாமல் வர்த்தகக் கடைகளாக ஆக்கப்பட்டுள்ளன. மதுரையில் அற்புதமான சிற்பவேலைப்பாடுகளை மறைத்துக்கொண்டு கடைகளே இருக்கின்றன.

பழந்தமிழர் கோயிலை மட்டுமல்ல எதைக்கட்டினாலும் கலைநுணுக்கத்தை முன்னிலைப்படுத்தியிருக்கின்றனர். பழங்கால வீட்டைப் பாருங்கள். அதன் கதவு, யன்னல், வாசல் என்பன எத்தனை அழகானவை. கதவுகளில் காட்டப்பட்ட கலைநுணுக்கம் எத்தனை அழகானவை ! பழந்தமிழர் வீடு கட்டுகிற கலையில்கூட கலைநுணுக்கம் மட்டுமல்ல. அறிவியல், அமைப்பியல் என்பன இருந்திருக்கிறது. வீட்டு வாசலில் திண்ணை, உள்ளே நிலாமுற்றம், நிலா முற்றம் வெறுமனே நிலவுக்காகக் கட்டப்பட்டதா, இல்லை? வானிலிருந்து விழுகிற வெப்பம் வெளியே போவதற்கும், காற்று நுழையவும் நிலா முற்றம். திண்ணை, வெளியே போய்வருகிறபோது களைத்துப்போனால் பத்துநிமிட ஓய்வு எடுத்துப்போகக் கட்டியது. வெய்யிலில் அலைந்து அப்படியே வீட்டுக்குள் போனால் தேகத்தில் படிந்த வெப்பம் வீட்டுக்குள்ளே இறங்கும், அதனைத் தவிர்க்கவே ஓய்வெடுக்க திண்ணை.

பழந்தமிழர் வீடு கட்டும்போது சுற்றுப்புறச் சூழல், வெப்பதட்ப என்பனவற்றில் அறிவியல் உணர்வோடு சிந்தித்துக் கட்டினர். இன்று நடப்பது என்ன? குளிர்காலத்திற்காக, குளிருக்காக வெள்ளைக்காரர்கள் கட்டுகிற வீட்டின் மாதிரியை (Model) அழகுக்காக, கவர்ச்சிக்காகக் கட்டிக்கொள்கிறார்கள். இதனால் வீட்டுக்குள்ளேயே வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கிறது.

லண்டனில் வாழ்வதற்குக் கட்டுகிற வீட்டை சென்னையில், கொழும்பில், கோலாலம்பூரில் கட்டலாமா? லண்டன் பனிக்கட்டி பொழியும் நிலம், அந்த குளிருக்காக அங்கே வீடுகள் கட்டப்படுகின்றன. அதைப்போல், வெப்பம் மிகுந்த தமிழகத்தில் கட்டுவது விவேகமா? ஊட்டியில் கட்டப்படுகிற வீடுகளைப்போல் சென்னையில், திருச்சியில் கட்டலாமா?

வாழும் நாட்டு வெப்பத்திற்கு ஏற்ப உடைகளைக் கண்டு அணிந்தவன் தமிழன். வாழும் நாட்டு வெப்பத்திற்கு ஏற்ப உணவு வகைகளைக் கண்டு உண்டவன் தமிழன். அதேபோன்று வாழும் நாட்டு வெப்பத்திற்கேற்ப வீடுகளைக் கட்டி வாழ்ந்தவன் தமிழன். அன்று அவன் கோயிலைக்கட்டினாலும், வீட்டைக் கட்டினாலும் அவற்றில் சுற்றுப்புறச் சூழலை, வெப்ப தட்பங்களைக் கணக்கில் எடுத்து தனக்கென முத்திரையான கட்டடக் கலையை முன்நிறுத்தினான்.

இந்தியாவில் குறிப்பாக வட பகுதியைவிட தென்பகுதி குறிப்பாக தமிழர் கோயில்களே அழகானவை. பிரமிக்க வைப்பவை. தஞ்சை பெரியகோயில் 213 அடி உயரமானது. இக்கோபுரத்தின் மேல்பகுதி மட்டும் 80 தொன் (டன்) எடையுள்ள ஒரே கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே கல்லில் 19½ அடி நீளமும், 8¼ அடி அகலமும், 12 அடி உயரமும் கொண்ட நந்தி செதுக்கப்பட்டது. ஆதிகும்பேஸ்வரர் ஆலயத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கல்நாதஸ்வரம் உள்ளது. ஆயிரம்கால் மண்டபங்களை கட்டினர் பழந்தமிழர். அதனோடு ராகம் பாடும் இசைத்தூண்களையும் கட்டினர். மதுரை அழகர் கோயில் சுந்தர பாண்டியனார் குறுகு முகப்பு மண்டபத்தில் தெற்கு – வடக்கு பகுதியில் ஒரே கல்லில் 18 தூண்கள் செதுக்கப்பட்டு உள்ளது. இந்த தூண்களை கைவிரலில் தட்டினாலேயே காதுக்கினிய மெல்லிசை கேட்கும். எனவே தமிழர் கல்லிலே கலை வண்ணம் மட்டுமல்ல இசை வண்ணமும் கண்டனர் என்றே சொல்லத் தோன்றுகிறது.

கோயிலோடு குளத்தைச் கட்டியவன் பழந்தமிழன். கோயிலைச் சுற்றியுள்ள மக்களின் கிணறுகளில் நீர் ஊருவதற்காக குளத்தை வெட்டினான் தமிழன். இதனால் மழைநீரையும் சேமித்தான். அக்கால மழைநீர் சேமிப்பே இந்தக்குளங்களில் இருந்தன. திருச்சி நகரில் 47 குளங்கள் இருந்ததாக வரலாறு சொல்கிறது. இக்குளங்களுக்கிடையே நீர்வழித்தொடர்பு இருந்திருக்கின்றன. எனவே ஒரு குளத்தில் இறங்கி இன்னொரு வெளியேறிப் போகலாமாம். திருவெள்ளறை கோயிலில் இருக்கிற குளத்தின் ஒரு பகுதியில் குளித்தால் மறுபகுதிக்குத் தெரியாது. எனவே கோயில் குளங்களை ஆன்மீகப் பார்வையில் பார்க்காது பழந்தமிழர் கோயிலின் பேரில் நீர் சேமிக்கக் கட்டியவை என உணரவேண்டும்.

பழந்தமிழர் கிணறுகளை மட்டுமல்ல குளங்களை மட்டுமல்ல அணைகளையும் கட்டினர். உலகிலேயே சமதரையில் கட்டப்பட்ட அணை கல்லணையாகும். புகழ்பெற்ற அணைகள் எல்லாம் இரு மலைகளுக்கிடையே, இரு குன்றுகளுக்கிடையே கட்டப்பட்டவை. ஆனால் வெறுந்தரையில் கட்டப்பட்டு பழந்தமிழரின் பொறியியல் அறிவை பறைசாற்றுவது கரிகாலன் கட்டிய அணையே! இவ்வாறு பழந்தமிழரின் கட்டடக்கலையின் தொழில்நுட்ப, அறிவியல் வரலாறு இருக்க இவற்றைக் காப்பாற்ற தன்னுயிரையே ஈகமாக்கிய தமிழ்மறவன் வரலாறு தெரியுமா? அந்த வரலாறு முப்பாட்டன் காலத்து வரலாராக இருக்கலாம்.

காளையார் கோயில் தமிழ் நெஞ்சங்கள் அறிந்த ஒரு கோயில். தமிழரின் கட்டடக் கலைக்குச் சான்றாக இன்றும் இருக்கிறது. புறநானூற்றில் கானப்பேர் எயில் என்ற நகரின் அழகை ஐயூர் மூலங்கிழார் என்பார் குறிப்பிட்டிருக்கிறார். அந்நகரே பிற்பாடு 'காளையார் கோயில்' என வழங்கப்பட்டது.

இந்தக் கோயிலோடு தமிழரின் கட்டடக் கலையைக் காத்த மாபெரும் மனிதனின் வரலாறு இருக்கிறது. சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த பெரிய மருது ஆங்கிலேயரிடம் போரிட்டு தலைமறைவானான். அவனைக்கொண்டுவர ஆங்கிலத்தளபதி கர்ணல் ஜேம்ஸ் வெல்ஷ் பல முயற்சிகளைச் செய்தான். முயற்சி வெற்றி பெறவில்லை. கடைசியில் காளையார் கோயிலின் அழகை ரசித்த ஆங்கில தளபதி அந்தக் கோயிலையே பந்தயம் வைத்ததுபோல் ஒரு அறிவிப்பு செய்தான்.

'பெரியமருது சரணடையாவிட்டால் காளையார் கோயிலைத் தரைமட்டமாக்குவேன்' என்பதே அந்த அறிவிப்பு. தண்டோராச் சத்தம் கேட்ட பெரிய மருது தன்னால் கோயில் தரைமட்டமாகக் கூடாது! என்று ஆங்கிலேயரிடம் சரணடைந்து தமிழரின் கட்டடக்கலைச் சான்றான கோயிலைக் காப்பாற்றினான். தூக்கிலிடப்பட்ட பெரியமருதுவின் சமாதி அவனுடைய வேண்டுகோளுக்கிணங்க கோயிலின் முன்னே அமைக்கப்பட்டது.

தமிழர் வரலாற்றில் ஒரு கோயிலைக் காப்பாற்ற அரசனே சரணடைந்த செய்தி உலக வரலாற்றில் எங்கும் காணமுடியாதது. பெரியமருது என்ற அந்த மாமனிதன் தன் உயிரைவிட கோயில் கட்டடத்தை நேசித்தான் என்பது வியப்பானதுதானே!

மேற்கோள் நூல்கள் :

① தமிழகக் கலைச்செல்வங்கள் : க.த.திருநாவுக்கரசு.

② சிலப்பதிகாரம், தெளிவுரை : ஞா. மாணிக்கவாசகன் – 2002 உமாபதிப்பகம், சென்னை.

③ தமிழர் நாகரிகமும், பண்பாடும் : டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, 1999, யாழ் வெளியீடு, சென்னை.

④ தமிழ் – திருக்குறள் : தமிழ்ப்பண்பாட்டுக்கையேடு – 2000, உலகத்தமிழ் மொழி அறக்கட்டளை, அமெரிக்கா.

⑤ தமிழ் திருக்குறள், தமிழ்ப்பண்பாட்டுக்கையேடு, உலகத்தமிழ்மொழி அறக்கட்டளை – அமெரிக்கா.

⑥ சிலப்பதிகாரம், தெளிவுரை – ஞா.மாணிக்கவாசகன், 2002, உமா பதிப்பகம், சென்னை.

18. மண்ணியல்

மனிதர்கள் வாழும் உலகத்தை பூமி என்கிறோம். அந்த பூமியில் முக்கால் பங்கு நீரும், கால்பங்கு நிலமும் இருக்கின்றது. சூழ்ந்திருக்கும் நீருக்கிடையேதான் நாடுகள் இருக்கின்றன. அந்த நாடுகள் மண்ணாலும் மணலாலும் ஆனவை. மண்ணில் நேசமாய் வாழ்ந்தவர்கள் தமிழர்கள். மணலில் நேசமாய் வாழ்ந்தவர்கள் அராபியர்கள். இவை உதாரணங்களுக்குச் சொல்லப்பட்டவையாகும்.

மண்ணை நிலத்தாயே, பூமித்தாயே என்று பெருமையோடு அழைத்தவர்கள் தமிழர்கள். சங்க இலக்கியங்களில் நிலமடந்தை என்று மண் சார்ந்த நிலத்தை புகழ்ந்துள்ளனர். பேசும் மொழியை தாய்மொழி என்றும், பிறந்த நாட்டை தாய்நாடு என்றும் புகழ்ந்த நமது மூதாதையர்கள் மண்ணை தாய்மண் என்றனர்.

அந்த மண் சார்ந்த நிலத்தை ஐந்து வகையாக அடையாளப் படுத்தினான் சங்கத்தமிழன்;

1. மலை, மலை சார்ந்த நிலப்பகுதி – குறிஞ்சி
2. காடு, காடு சார்ந்த நிலப்பகுதி – முல்லை
3. வயல், வயல் சார்ந்த நிலப்பகுதி – மருதம்
4. கடல், கடல் சார்ந்த நிலப்பகுதி – நெய்தல்
5. வளம் குன்றிய நிலப்பகுதி – பாலை

இந்த ஐந்துவகையான நிலப்பகுதிகள் தமிழர் வாழ்வோடு தொடர்புடையவை. எனவே அந்நிலங்கள் தொடர்பான தெளிவான அறிவு அவர்களுக்கு இருந்திருக்கின்றது. அது மட்டுமல்ல ஒவ்வொரு மண்ணைப் பற்றியும் தமிழருக்குத் தெளிவான அறிவு இருந்திருக்கிறது. மண் சார்ந்த அறிவை மண்ணியல் (Geology) என்பார்கள் இன்று. விவசாயம் செய்யவும், குடியிருப்புகள் அமைக்கவும், பண்பாட்டு அரங்கங்கள் அமைக்கவும் மண்ணியல் தெரிந்திருக்க வேண்டும். மண்ணியல் தெளிவாகத் தெரிந்தால்தான் மண்ணோடு நேசம் கொள்ள முடியும்.

கல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழன் மண்ணிலும் பலவண்ணம் கண்டிருக்கிறான். மண்ணையே மூவகையாகப் பிரித்திருக்கிறான்;

1. எளிதில் தரையில் வெட்டி எடுக்க இயலாத கடின மண்.
2. சிறுமணல் கலந்தபடி எளிதில் வெட்டியெடுக்கும் வகையான மண்.
3. மேற்சொன்ன இரண்டுக்கும் நடுவே நடுத்தரமாக உள்ள மண்.

இந்த மண்ணியல் நுணுக்கத்தை ஒத்ததாக சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் மாதவியின் நடன அரங்கேற்ற அரங்கு அமைக்க வெகுநுணுக்கமாக நிலப்பகுதியைத் தெரிவு செய்திருக்கின்ற செய்தியைச் சொல்கின்றார். அந்த மண்ணியல் நுணுக்கம்;

எந்த நிலப்பகுதியில் வெட்டியெடுத்த மண்ணைத் திரும்ப அதே நிலப்பகுதியில் கொட்டினால் அது சரியாக அமைகிறதோ அந்நிலமே அரங்கு, மாளிகை, ஆலயம் அமையப்பொருத்தமானதாகும்.

ஆகவே எவ்வளவு மண்ணை வெளியே எடுக்கிறோமோ, பிறகு அவ்வளவு மண்ணும் அதே இடத்தில் சரியாக சேர்ந்து விடுகிறதோ அந்த நிலமே உறுதியானது; சரியானது. அந்த இடத்தில் பாரிய கட்டிடங்கள் கட்டலாம் என்பது பழந்தமிழரின் மண்ணியல்.

எந்த இடத்தில் தோண்டியெடுத்த மண்ணைத் திரும்பப்போட அது போதாமல் போகிறதோ, எந்த இடத்தில் தோண்டியெடுத்த மண்ணைப் போட்டும் அது மிஞ்சுகிறதோ அந்த இடங்களில் எல்லாம் பெரிய கட்டிடங்கள் கட்டுவது தவறானது; இதுவும் பழந்தமிழர் மண்ணியல். இது சம்பந்தமாக வேறொரு செய்தியும் உண்டு.

கோயில் கட்டப்படும் நிலத்தை நன்கு உழுது அதில் நவதானியம் விதைக்க வேண்டும். அந்த விதைகள் மூன்று நாட்களில் முளைத்தால் அது நல்ல நிலம்; ஐந்து நாட்களில் முளைத்தால் ஏறக்குறைய (சுமாரான) நல்ல பூமி; எட்டு நாட்களுக்குப் பிறகு முளைத்தால் அது மட்டமான பூமி.

பூமியை உழுதால்தான் விவசாயம் செய்ய முடியும். எந்த பூமியை உழுவது என்பதற்கு மண்ணியல் வேண்டும். அவ்வாறு தெரிவு செய்கிற பூமியையும் திருத்த வேண்டும். எனவேதான் 'பூமி திருத்தி உண்' என்றார்கள். பூமியும் சாமியும் ஒன்று என்பது விவசாய மொழி. அந்த பூமி அகல்வாரையும் தாங்கும் நிலமாகும். நிலத்தின் இயல்பு தெரியாமல் கட்டப்படுகின்ற கட்டிடங்கள் முன்னேற்றத்தைத் தராது.

தமிழகத்தில் மூவேந்தர்களால் கட்டப்பட்ட ஆலயங்கள் யாவுமே நீர் (தீர்த்தம்), நிலம் (தலம்), அழகு (மூர்த்தி) எனும் மூன்று சிறப்புகளுடன் இன்றும் இருப்பதற்கு அவற்றை மண்ணியல் அறிவோடு நிலத்தை தெரிவு செய்வதே முக்கிய காரணமாகும்.

நிலத்திற்கு நிலம் அவற்றின் இயல்பு வேறுபடும். நிலத்தின் இயல்பை அங்கே விளையும் பயிரின் முளைகாட்டி நிற்கும். ஆற்று மணலில் நெல் விளையுமா? சேற்று மண்ணில்தான் விளையும். இவற்றை அறிந்து வைத்திருப்பதே நிலத்தின் இயல்பு.

நிலத்தை ஐந்தாகப் பிரித்த தமிழர்கள் அந்த நிலங்களின் இயல்புகளையும் தன்மைகளையும் கண்டிருக்கிறார்கள் என பதார்த்த குணசிந்தாமணி சொல்கிறது;

1. குறிஞ்சி (மலைப்பகுதி); காய்ச்சல், வயிற்றுக்கட்டிகள் உண்டாகும். இங்குள்ள பொருட்கள் வன்மையுடையவை.

2. முல்லை (காடு); பித்தத்துக்கு இடம். அத்துடன் வாதமும் பொருந்தும். இவ்வற்றால் பற்பல நோய்கள் உண்டாகும்.

3. நெய்தல் (கடற்கரை நிலம்) ; பித்த வாயுவுக்கு இடமாகும். உடல் தடிப்புக்கும், யானைக்கால், குடல் அண்ட வளர்ச்சி என்பவனவற்றை உண்டாக்கும்.

4. மருதம் (வயல்நிலம்); வாதபித்த நோய்களைப் போக்கும்; நோய்கள் யாவும் அணுகா.

5. பாலை (மணல்நிலம்) முவ்வுடற் குற்றங்கட்கும், ஏனைய துன்பங்களுக்கும் இடமாகும்.

இவ்வைந்து நிலங்களில் பாலை நிலத்தைத் தவிர்த்து ஏனைய நிலங்களை 'நன்செய் நிலம்'என்றும், 'புன்செய் நிலம்' என்றும் பிரித்தனர். இவற்றில் மருதமும், நெய்தலும் 'நன்செய்நிலம்' ஆகும்; குறிஞ்சியும், முல்லையும் 'புன்செய்நிலம்' ஆகும். இந்நிலங்களில் எவ்வகைத் தாவரங்கள் நடவேண்டும் என்பதையும் அவர்கள் கண்டிருந்தனர்.

மண்ணைக்கூடப் பழந்தமிழ் மக்கள் 1) ஆற்று மண், 2) சேற்று மண், 3) காட்டு மண், 4) உதிரி மண், 5) மலை மண், 6) குளத்து மண் என வகைப் படுத்தினார்கள்.

ஆத்திசூடியில் 'பூமி திருத்தியுண்' என்று ஔவையார் சொல்வதும் மண்ணியலே. உன் விளைநிலத்தை சீர்திருத்தி பயிர்செய்து உண் என்பதே அதன் அர்த்தம். சீர்திருத்தாத நிலம், சீர்திருத்தாத நாடு, சீர்திருத்தாத வீடு, சீர்திருத்தாத சமூகம் எதுவுமே உருப்படாது. எனவே சீரான மண்ணும் மண்ணில் சீர்திருத்தமும் தேவை. இன்றைக்கும் கிராமங்களில் அனுபவ விவசாயி மண்ணைப் பார்த்தும், தொட்டும் அதன் தரம், அதில் என்ன விளையும் எனச்சொல்கிற மண் அறிவு கொண்டவனாக இருக்கிறான்.

மண்அறிவு சரிவர இல்லாததால்தான் இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயன் முதலில் காப்பி பயிர் செடிகளை நட்டுத் தோல்வியடைந்தான். பிறகுதான் தேயிலைச் செடிகளை நட்டு வெற்றி கண்டான். தேயிலைக்கு ஏற்ற மண்வளம்தான் இலங்கையில் இருந்தது.

பழங்காலத்தில் மனிதனுக்குத் தேவையான சமையல் அறைப் பாத்திரங்களை, வீட்டுப் பொருட்களை மண்ணால் செய்தார்கள். இவ்வகைப் பாண்டங்கள் தமிழர்களின் மண் அறிவையும் கைத்திறனையும் காட்டுகின்றன. இன்றைக்கு அகழ்வாராய்ச்சியில் கிடைக்கிற மண் பாண்டங்கள், முதுமக்கள் தாழிகள் யாவும் சரித்திரத்தைச் சொல்கின்றன.

ஆதிச்சநல்லூர் பண்பாட்டில் அரும்பிய மட்பாண்டங்கள் காலத்தால் 3000 ம் ஆண்டிற்கு முந்தியன என்கிறார் நுண்கலைச்செல்வர் சாத்தான்குளம் அ.இராகவன். ஆதிச்சநல்லூர் மட்பாண்டங்கள் அரப்பா காலத்து மட்பாண்டங்களைவிடச் சிறப்பானவை. 1876ல் இந்தியாவுக்கு வந்த ஜெர்மன் நாட்டு அறிஞர் முனைவர் சாகோர் (Dr.Jagore) அவர்கள் ஆதிச்சநல்லூரின் பழமை அறிந்து அங்கு வந்து அகழாய்வில் ஈடுபட்டார். பிறகு அங்கு கிடைத்த மட்பாண்டங்கள், இரும்பு பொருட்கள், வெண்கலப் பொருட்கள், தாழிகள், எலும்புகள் யாவற்றையும் பெர்லின் நகருக்குக் கொண்டுபோய் விட்டார். (அவை அனைத்தும் Berlin Museum for Volkorkunde என்ற பழம்பொருட்காட்சி சாலையில் இருக்கின்றன). தற்போது மீண்டும் அங்கு அகழாய்வு நடத்தி நூற்றுக்கணக்கான சிறியதும், பெரியதுமான பானைகள் பாத்திரங்கள், பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில்:

ஆதிச்சநல்லூரின் இடுகாடு மட்டுமே ஆய்வு செய்யப்பட்டது. இனி அப்பகுதியில் வாழ்ந்த பழந்தமிழர்களின் வாழ்விடங்கள் பற்றி ஆய்வு செய்ய இருக்கிறார்கள். அங்கு கிடைத்துள்ள ③ தடயங்கள் கிட்டத்தட்ட கி.மு.1000 வரைக்கும் (3000 வருடங்கள்) முந்தியவை. இது தமிழர்களின் மிகவும் முற்கால நாகரிகம் என்பதுடன், மனிதன் வாழ்ந்த உலகின் தொன்மையான இடங்களில் தமிழகமும் ஒன்று என்பதை உலகத்துக்குச் சொல்ல மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் அங்கு கிடைத்த பானைகளின் வகைகள் ஆதிச்சநல்லூர் கலாச்சாரத்தின் தொழில்நுட்ப மேலாண்மையைக் காட்டுகின்றன என்பது முக்கியமானது என்றார் ஆதிச்சநல்லூர் அகழாய்வில் ஈடுபட்டுள்ள சத்தியமூர்த்தி.

இன்னொரு தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் ① சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் சாதாரண மக்களும் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதற்கு மண்பாண்டங்களில் கிடைக்கும் தமிழ் பிராமி எழுத்துக்கள் சான்றாக விளங்குகின்றன என்கிறார்.

ஆக மண்ணால் செய்யப்பட்ட ஒரு பாண்டத்தினால் ஒரு இனத்தின் வரலாற்றைச் சொல்ல முடிகிறது. மண் மனிதனுக்கும் ஒரு இனத்துக்கும் முக்கியமானது. மண் சார்ந்த ஒரு இனம்தான் தலைதூக்கி வாழமுடியும். மண் மீட்புக்காக காலங்காலமாக உலக வரலாற்றில் யுத்தங்கள் நடந்திருக்கின்றன. அவை தொடரும் என்பது இன்றைய செய்தி. விண்வெளிக்கும் போனவர்கள்கூட மண்ணைக் கொண்டுவந்து ஆய்வு செய்கிறார்கள்.

மண் மனித வரலாற்றில் மிகமுக்கியமாக இருக்கிற அதே நேரத்தில் இந்த மனிதன் வணங்குகிற கடவுள், பொம்மைசிலைகள் செய்கிற

பொருளாக இருக்கிறது. கடவுள் உருவம் செய்வதற்கு பயன்படும் களிமண்ணை ஏதாவது ஒரு இடத்தில் எடுக்க மாட்டார்கள் ② எப்போதும் நீர் வற்றாததுமாகவும் தூய்மையாகவும் இருக்கும் ஆறு அல்லது குளத்தின் உள்ளே இருந்து மண் எடுப்பார்கள். அந்த மண்ணை ஒரு பாண்டத்தில் வைப்பர். அது இறுகும்வரை அப்படியே இருக்கும். அதன்பிறகு அந்த மண்ணோடு பால்வடியும் நான்கு மரங்களின் பட்டைகளைச் சேர்த்து அதிலிருந்து சாறு இறக்கி, அந்த சாறையும் கருங்காலி மரம், மருது மரம் என்பனவற்றின் பட்டைகளிலிருந்து உருவாக்கிய சாறையும் கலந்து அந்த மண்ணை நன்றாகப் பிசைவர். அதன்பிறகும் கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் என்பனவற்றைத் தூளாக்கி அவற்றை ஊறவைத்த நீரினை அந்த மண்ணோடு சேர்ப்பர். சேர்த்துப் பிசைவர். நீர்ச்சத்து சுண்டும்வரை வைப்பர். அதன் கால எல்லை?

அந்த மண்ணை கையில் பிசைந்தால் அதில் பிசைந்தவர் கைரேகை பதிந்து நன்கு தெரிய வேண்டும். அது பக்குவம். இப்படியே போகிற செய்முறையில் இன்னும் பல சேர்க்கப்பட்டு பத்து இடங்களிலிருந்து பத்துவகை மண் எடுத்து அவற்றையும் சேர்ப்பர். அந்த பத்து வகை மண் என்ன? புற்று, மலை, ஆறு, வயல், நண்டுவளை, ஏரி, கடல், யானை தந்தத்தில் ஒட்டியிருக்கும் மண், கலப்பை நுனியிலே ஒட்டியிருக்கும் மண் ஆகியனவே அவை. இறுதியாக தேங்காயை மட்டையுடன் இடித்துச் சாறு உண்டாக்கி அச்சாற்றையும் மேற்படி கலவையில் ஊற்ற வேண்டும். அதனை ஐந்து நாட்கள் அப்படியே வைத்திருக்க வேண்டும். இந்தக் களிமண்ணைக் கொண்டுதான் கடவுள் உருவங்கள் செய்யப்பட்டன. கிராமத்தில் இருக்கின்ற குலதெய்வங்களின் மிகப்பெரிய மண்சிலைகள் இவ்வாறு உருவானவைதான்.

இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது மண் என்று நாம் நினைக்கும் ஒருபொருளைப் பக்குவப்படுத்த பழந்தமிழர்கள் கையாண்ட தொழில்நுட்பங்கள் மண் சார்ந்த அறிவியல் குறிப்புகள் வியப்பில் ஆழ்த்துகின்றன.

மேற்கோள் நூல்கள்

① ஐராவதம் மகாதேவன் பேச்சு, தினமணி, 25/9/04.

② தமிழ் மண்ணில் தமிழர் கண்ட மண் – முனைவர் சு.சௌந்தரபாண்டியன், கட்டுரை, செந்தமிழ்ச்செல்வி, 2000 டிசம்பர்.

19. வானவியல்

சூரியனையும் சந்திரனையும் மனிதன் ஆதி வாசியாக வாழ்ந்தபோது அறிய முற்பட்டபோதே வானவியல் அறிவியல் தோன்றிவிட்டது. உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத்தொன்மையானது, பழமையானது வானவியல் கல்வி ஆகும். அது இன்றும் மிக விரைவான முன்னேற்றப் பாதையில் முடுக்கிவிடப்பட்டதாகும்.

வானவியல் ஆய்வில் சீன (China) நாகரிகம் மற்றும் மெசபடோமியா (Mesopotamia) நாகரிகம் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றோடு பேசுவதற்கு சான்றுகளாய் இருந்த தமிழரின் வானவியல் (கோள்நூல், கணக்கியல் மற்றும் பல நூல்கள்) அழிந்துபோயின. ஆனாலும் இன்றைக்கு இருக்கிற தொல்காப்பியம், சங்கத்தமிழ் இலக்கியம், திருக்குறள் போன்ற நூல்களில் காணப்படுகிற வானவியல் அறிவு சம்பந்தமான குறிப்புகள் தமிழர்கள் தொல்காலத்திலிருந்து வானவியல் கல்வி கொண்டவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

உலகம் என்பது நீர், நிலம், நெருப்பு, காற்றும், வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது என்றும் இஃது இயற்கையின் பாற்பட்டது என்றும் தொல்காப்பியம்

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின் (தொல் – 635 பொருள்)

என்ற பாடலில் சொல்கிறது.

இதேபோன்ற குறிப்பை புறநானூறு (புற. 2)

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என் றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல்

என்ற பாடலில் சொல்கிறது. எனவே பழந்தமிழருக்கு மிகத் தெளிவான வானவியல் அறிவியல் தெரிந்திருக்கிறது என்பது உறுதியாகிறது.

அண்ட வெளியில் சுற்றும் இந்த உலகம் பற்றிய அறிவியலும் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. உலகத்தின் சுழற்சி, அது எவ்வாறு உருவானது பற்றியெல்லாம் ஆய்வுசெய்த மேனாட்டவர் 15ம் நூற்றாண்டிற்கு முன்புவரை ① உலகம் தட்டையானது என்றே நம்பி வந்தார்கள். 15ம் நூற்றாண்டில்தான் (கி.மு.1440) போலந்து நாட்டு அறிஞர் நிக்கோலஸ்கிரப்ஸ் (Nikolaus Krebs) என்பவர் உலகம் தட்டை அல்ல,

உருண்டை வடிவமானது என்று சரியாகக் கணித்துச் சொன்னார். ஆனால் அதனை எவரும் நம்பவில்லை. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த கலிலியோ (Glalileo) என்ற ஞானி உலகம் உருண்டை என விளக்கினார். அதற்கான காரணங்களை அடுக்கினார். உலகம் நம்பியது. ஆனால் மேனாட்டில் உலகம் தட்டையானது என்று சொல்வதற்கு முன்பே உலகம் உருண்டை வடிவமானது எனச் சொல்லியது ஒரு தமிழ்க்குரல். அந்தக் குரலுக்கு உரியவர் திருவள்ளுவர். ஆவார்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (திருக்குறள் – 1031)

என்ற திருக்குறளில் 2035ம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம் உருண்டை எனும் கருத்தை நிலைநாட்டி விடுகிறார். உருண்டை வடிவம் உள்ள பொருள்தானே சுழலமுடியும்! இத்தகைய சுழலும் உலகமோ உழவுத் தொழிலால்தான் உய்யமுடியும் என்பதையும் அவர் அழுத்தமாக அறிவுறுத்துகிறார். அவருக்குப் பிறகு மிகத் தெளிவாக உலகம் உருண்டை என்பது பற்றியும் அதன் தோற்றம் பற்றியும் 10ம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் (நாயன்மார்) சொல்கிறார். அவரின் பாடல்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன் அனுப்புரையச்
சிறியவாக

இப்பாடலின் கருத்து : பரந்த வானவெளியில் பல கோடியாக உடைந்து சிதறிய நெருப்புத் துண்டின் ஒரு சிறுபகுதியே இந்த பூமி. அது உருண்டை வடிவமாகும். (உண்டை என்றால் உருண்டை என அர்த்தம். கோயில்களில் சாதத்தினால் செய்த உண்டைக் கட்டி வழங்குவார்கள்) இதேபோன்று இன்னொரு சான்று தமிழ் இலக்கியநூலில் உள்ளது. யாழ்நூல் சிறப்புப்பாயிரத்தின் 'ஒளிபரிதி யியக்கத்தாற் சிதைந்து தீர்ந்த தோர் பகுதியுலகமாகி' என்ற பாடலில் அச்சான்று உளது. சூரியனிலிருந்து சிதறிய அக்கினிக் குழம்பே பூமியாகத் திரள்சியுறுவதற்கு 20 கோடி ஆண்டுகள் பிடித்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதே செய்தியைத்தான் இந்தப் பாடல் சொல்கிறது. அச்செய்தி இதுதான். 'சூரியனிலிருந்து சிதறிய அக்கினிக்குழம்பே பூமி ஆனால் அது பூமியாக உருமாற பல கோடி ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அவ்வாறு ஆன பூமி உருண்டை வடிவமே!' இவையெல்லாம் மேல்நாட்டு விஞ்ஞானிகளுக்கு முன்னரே சொன்ன வானவியல் கருத்துக்களாகும். இதேபோன்ற இன்னொரு கருத்து சங்க இலக்கியமான பரிபாடலில் வருகிறது. அப்பாடல்

கருவளர் வானத்திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த ஊழூழ் ஊழியம்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தன்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்
றுன் முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத் தூழியும் பரிபாடல் – 2, 5–12)

இவ்வரிகள் வாயிலாக அண்டப்பெருவெளியான வானத்தில் காற்று தோன்ற, அக்காற்றின் வீசுதலால் தீ தோன்ற அத்தீயினின்று நீரும், பனி, மழை இவற்றின் செயலால் நிலம் தோன்றியது என்ற செய்தியை அறிகிறோம். இது 'நெருப்புக் கோளமாக இருந்த பகுதி நீரால் குளிர்ந்து நிலம் தோன்றியது' என்ற இன்றைய ஆய்வோடு பொருந்தி வருகிறது.

இவ்வாறான வானவியல் அறிவியல் சங்ககாலப் பாடல்களில் இலக்கிய வரிகளாய் இருக்கின்றன. இவற்றைப் பார்க்கிறபோது பழந்தமிழர் வானவியல் அறிவியலில் தெளிவானவர்களாகவே இருக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

வானவெளியில் மிகப்பெரிய விண்மீனான சூரியனைப் பழந்தமிழர் போற்றினர். சூரிய வழிபாடு என்பது வானவியல் மரபில் உண்டானது என்றே பார்க்கவேண்டியுள்ளது. சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்று சூரியனைப் போற்றியதே அதற்குச் சான்றாகும். சூரியனே தமிழரின் வான்வெளி , நாள் கோள், காலப்பொழுது ஆகிய கணக்கின் வேர்.

அந்தச் சூரியன் சுற்றிய பாதையை சூரிய வட்டம் என்றனர் பழந்தமிழர். அதனை செஞ்ஞாயிற்றுச் செலவும் என்கிறது புறநானூற்றுப்பாடல். அப்பாடல்

செஞ்ஞாயிற்றுச்செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலை இயகாயமும் என்றிவை
சென்றளந் தறிந்தார் போல (புற–30)

இப்பாடலின் கருத்து : சூரியன் செல்லும் வழியும், அச்சூரியனது இயக்கமும், சூரிய இயக்கத்தால் சூழப்பட்ட நில மண்டிலமும், காற்றியங்கும் திசையும் ஓர் பிடிப்புமின்றி அந்தரத்திலே நிற்கும் ஆகாயமும் என்றிவை எல்லாம் சென்று அவற்றின் இயல்புகளை அறிந்துணர்ந்து இவை இவை இத்தன்மை உடையன என்று கூறுமளவுக்கு அறிவியல் உணர்வுடையோர் பலபேர் இருக்கின்றனர். இந்தப் பாடல் மூலம் சூரிய வட்டம் (Soloar System)

அதன் இயக்கம், அந்தரமாய் நிற்கும் வான்வெளி மண்டலம் என்பன பற்றிய வானயியல் தெரிய வருகிறது. இப்பாடலில் சூரியன் சார்ந்த அறிவியலும், சூரியன் உலவும் மண்டலம் சென்று அறிந்துவர இயலும் என்பதை புறநானூற்றுப்புலவன் சொல்லியிருக்கிறான்.

திருக்குறளில் வானவியல் வருகிறது. வானவியல் ஆய்வுப்படி நிலவு விண்மீன், வானத்தில் விட்டு விட்டு மின்னுவதே விண்மீன் என்றாகியது. விடாமல் மின்னுவதே கோள்கள் ஆகின. ஆனால் நிலவு சுயமாக ஒளிவீசுவதில்லை. இது வானவியல் உண்மை. இந்த உண்மையை ஒரு திருக்குறள் மூலம் தருகிறார் திருவள்ளுவர். அந்தக்குறள். ②

மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி (திருக்குறள் – 1118)

இதன் பொருள் : 'நிலவே! இப்பெண்ணின் முகத்தைப்போல் ஒளிவீச உன்னால் முடியுமானால் நீயும் இவள்போல் என் காதலை வாழச்செய்யும் உரிமை பெறுவாய் என்பதே'. இதிலிருந்து நிலவுக்கு தானாக ஒளிவிடும் தன்மை இல்லை என்றும் வானவியல் உண்மை வெளிப்படுகின்றது.

சந்திரக்கிரகணம் பற்றிய சரியான அறிவியல் இருந்திருக்கிறது. அதற்கு வள்ளுவரின் குறளே சாட்சி.

கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள் – 1146)

திருவள்ளுவர் சந்திரகிரகணத்தையும் அதன் காரணத்தையும் நன்கு அறிந்திருக்கின்றார். எனவே அறிவியல் நிலையில் காதலி காதலனைக் கண்டது ஒரே ஒரு நாள். அதனால் உண்டாகிய வீண்பழி (அலர்) நிலவைப் பாம்பு கவ்விய செய்திபோல் பரவிவிட்டது என்று பேசுகிறார். இதிலிருந்து அறியவேண்டியது 'காதலி காதலனைப் பார்த்தது ஒருநாள் மட்டுமே; அது உண்மை. ஆனால் அதன் மூலம் ஊரார் எழுப்பிய பழிச்சொல் உண்மையானது அல்ல. அது திங்களைப் பாம்பு கொண்ட செய்திபோல் பரவியது. எனவே ஊரார் எழுப்பிய பழிச்சொல் பொய். நிலவை பாம்பு விழுங்குவதும் பொய்' என்பதேயாகும். இதனை இன்னும் ஆழமாய் சிந்தித்தால் திருவள்ளுவர், காதலர்கள் ஒருநாள் சந்தித்ததை உணர்ந்தும், அதைவைத்து ஊரார் எழுப்பும் தூற்றுதலை அறிந்தும் இவற்றில் தான் அறிந்த உண்மையை மக்களின் அறியாமையை நிலவு பற்றிய கல்லாத மக்கள் அறியாமையோடு அறிவியலாய் ஒப்பீடு செய்திருப்பது புரியும்.

இதிலிருந்து பூமி, சூரியன், சந்திரன் ஆகியவற்றின் சுழற்சிகளையும், கிரகணங்கள் ஏற்படும்போது அவற்றின் நிலைகளையும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழர் அறிந்து வைத்திருந்த திறனைக்கண்டு வியக்காமல் இருக்கமுடியாது.

விண்ணும், விமானமும் :

உலகிற்கு ஒளி ஊட்டும் கதிரவனையும், நிலவையும் மற்றும் கண்டறிந்த கோள்களையும் இணைத்துக் கிழமை ஆக்கி ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் (அறிவன்) வியாழன், வெள்ளி, சனி (காரி) எனக்கண்டு தன் வாழ்வியலோடு இணைத்துக் கொண்டவர்கள் பழந்தமிழர்கள். அவர்கள் விண்ணிலே மின்னும் விண்மீன்களையும், கோள்களையும் கண்டு பயப்படாமல் அறிவியல் வழியில் தெளிவான வானவியல் கண்டார்கள்.

கோள் என்றால் உருண்டை என்றுபொருள். வானில் உலவும் கோள்கள் எல்லாம் திடப்பொருளால் ஆனவை. விண்மீனும் கதிரவனும் திடப்பொருள் அல்ல. வளிகளின் (வாயுக்களின்) கூட்டுச்சேர்க்கை. எனவே அவற்றைக் கோள் என்றோ, மற்றைய பொருளிலோ குறிக்கவில்லை. விண்மீன் என்றே குறித்தான். கதிரவனும் ஒரு விண்மீன்தான். ஆயிரக்கணக்கான விண்மீன்களுடன் அண்டத்தில் கதிரவன் தோற்றம் தரும் ஒரு விண்மீன் என பழந்தமிழர் இலக்கியம் பகிர்கிறது.

பன்மீன் நடுவன் பான்மதிபோல (சிறுபானாற்று – 219)

எனவும்

பல்மீன் நடுவண் திங்கள் போலவும்

எனவும்

சங்ககாலப்பாடல்களில் சூரியன் சம்பந்தமான அறிவியல் வருகின்றது.

விண்மீன்கள், கோள்கள் பற்றிய ஆய்வுக்கு இன்று தொலைநோக்கிகளும், செயற்கைக்கோளும், நவீனத் தொடர்பு சாதனங்களும் பெருமளவில் கைகொடுத்து உதவுகின்றன. ஒருகருத்தை வெளியிட்ட நாளிலேயே அதனை ஏற்றலும் மறுப்பலும் அடங்கிய தகவல் பரிமாற்றம் இன்று இருக்கிறது– இவை எதுவுமே இல்லாதகாலத்தில் அறிவு ஞானத்தாலும், அனுபவ உணர்வாலும் பழந்தமிழர் கண்டெழுதிய வானவியல் உண்மைகள் வியப்பில் ஆழ்த்துகின்றன.

சொந்தமான ஒளிஉடைய நட்சத்திரங்கள், நாள் மீன், சொந்தமான ஒளியில்லாத கிரகங்கள் கோள்மீன் இவையாவும் வலமாக (Clockwise) சுற்றிவரும் என்பதும் தமிழரின் வானவியல் கணக்கு. நவக்கிரகங்கள் என்று சொல்லக்கூடிய ஒன்பது கோள்களைப் பற்றி பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் வருகின்றன. அன்றைக்குத் தொலைநோக்கி இல்லாமல் கண்ணால் கண்ட கிரகங்களை இன்றைய விஞ்ஞானிகள் மறுக்கவில்லை. எவ்வித கருவியும் இல்லாமல் ஒன்பது கிரகங்களின் திசைநிலை என்பனவற்றை அறிவியலோடு கணித்ததே வியப்பானது.

பழந்தமிழர் செந்நிறமாய் இருந்த கிரகத்தை செவ்வாய் என்றனர். இன்று செவ்வாய்க்கிரக மண் செம்மை நிறமாய் இருப்பதாக விஞ்ஞானிகள் செயற்கைகோள் எடுத்த புகைப்படங்களின் உதவியோடு சொல்கின்றனர். இன்னொரு கோளை வெள்ளி என்றனர் பழந்தமிழர். அதில் வெள்ளித்தாது (Silver) இருப்பதாக இன்றைய அறிவியலார் சொல்வது வெள்ளி எனப்பெயரிட்டதில் பொருந்தி நிற்கிறது. இந்த வெள்ளிக்கு ஒரு சிறப்பு உண்டு. கிழக்குத்திசையில் கதிரவன் உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடிவை உணர்த்துகிறது. எனவே இதனை விடிவெள்ளி என்றனர் பாமரத்தமிழர்.

வரலாற்றுக் காலத்தில் புதிதாகக் கண்டறிந்த கோளைப் புதன் என்று அழைத்தனர். புதன் என்பது புக்கம் என்பதின் குறுகலே. புதிதாக அறிந்ததால் அதற்கு ‘அறிவன்’ என்றும் பெயருண்டு. வியா என்றால் பெரிய–நிறைந்த எனப்பொருளாகும். வானில் பெரிய கோளாக வலம்வருவதையே வியாழன் என்றனர்.

சனிக்கோள், சனிநீராடு என்றால் சனிக்கிழமை மட்டும் குளிப்பதல்ல. உடல் நோய் நீங்க, அசதிகளைய உடல்நலமுடன் இருக்க கந்தகத் தன்மை (கந்தகம் : ஒருவகைத் தாதுப்பொருள், ஒருவகை மருந்து) கலந்த நீரில் குளி என்பதும் பொருள். சனிக்கோளில் (காரிக்கோள்) கந்தகம் (Sulphur) இருப்பதாக அறிவியலார் கூறுகிறார்கள். கோடிக்கணக்கான விண்மீன்கள் விண்வெளியில் கண்சிமிட்டுகின்றன. ④ இவற்றை உற்று நோக்கிய தமிழன் 27 விண்மீன்களையும் அதன் கூட்டத்தை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு துல்லியமாகக் கணக்கிட்டு கொடுத்துள்ளான். ஒரு மாதத்தில் நிலவு விண்ணிலே 27 நாட்கள் மட்டும்தான் பார்வையில் படுகிறது. அந்த 27 நாட்களில் அது உதயமாகிற நேரம் வேறுபடும். அப்போதெல்லாம் ஒவ்வொருநாளும் மேலே குறிப்பிட்டுள்ள 27 விண்மீன்களின் பக்கத்தில் மாறிமாறித் தோன்றும். ஒவ்வொரு மாதமும் நிலவு முதலில் சந்திக்கின்ற விண்மீன்கள் மாறி மாறி வரும் இந்த 27 விண்மீன்களையும் 12 ஆகப் பிரித்தான். அவ்வாறு பிரித்ததற்குக் காரணமே ஒவ்வொரு மாதமும் இந்த விண்மீன் வட்டங்களின் வழியாகத்தான் கதிரவன் செல்லும் பாதை அமைகிறது. ⑤ இந்த 12 வட்டங்களையே பிற்காலத்தில் ராசி என்ற பெயரில் மாற்றிவிட்டார்கள்.

பரிபாடலில் இவை பேசப்படுகிறது.

விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப;
எரிசடை எழில் வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்த மூன்று ஒன்பதிற் றிருக்கையுள்
உருகெழ வெள்வந்த தேற்றியல் சே...

இப்பாடலில் கார்த்திகை முதலாக 27 விண்மீன்கள் செல்லும் ‘சூரிய வீதி’, தெரு என்ற எளிய கலைச்சொல்லால் அழைக்கப்படுகிறது.

பௌர்ணமி நிலவு (நிறைமதி) நாள் தைத்திங்கள் பூசத்தன்றும், மாசியில் மகத்தன்றும், பங்குனியில் உத்தரத்தன்றும், சித்திரையில் சித்திரையன்றும், வைகாசியில் விசாகத்தன்றும் வருவதைக் காணலாம். இக்கணிப்பு எந்த ஆண்டிலும் மாறாது. இவற்றையெல்லாம் தமிழ் இலக்கியம் சொல்கிறது. உதாரணத்திற்கு சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா காதையில் ‘சித்திரைச்சித்திரைத் திங்கள் சேர்ந்தென’ என்ற வரிகளில் இக்குறிப்புகள் இருக்கின்றன. சித்திரை மாத சித்திரை நட்சத்திரம் என்பதே அர்த்தமாகும்.

வால்நட்சத்திரம் (Comet) பற்றியும் தமிழ் இலக்கியம் பேசுகிறது. கம்பரின் ராமாயணத்தில்

‘தூமகேது புவிக்கு எனத்தோன்றிய’

என்னும் வரிகளில் வானத்தில் வால் நட்சத்திரம் தெரிந்தால் உலகுக்கு துன்பத்தைத் தரும் எனப்பொருள்படியான அர்த்தம் வருகிறது. தூமகேது என்றாலே தீமைக்குறி என்று இன்னொரு அர்த்தம் உண்டு. உலக வரலாற்றைப் பார்க்கிறபோது வால்நட்சத்திரம் தோன்றிய காலத்தில் சிலமுக்கிய துன்பமான சம்பவங்கள் உலகில் நடந்திருக்கின்றன. இதனை உலக வரலாற்றாளர்கள் ஒப்புகிறார்கள். அதைத்தான் கம்பர் தூமகேது என்கிறான்.

முழுநிலவு தோன்றியது முதல் மறைநிலவு (அமாவாசை) வரையுள்ள 15 நாட்களைத் தமிழர் தேய்பிறை என்றனர். இதை வடபுலத்தார் கிருட்டிணபட்சம் என்றும், மறைநிலவு முதல் முழுநிலவு வரை உள்ள 15 நாட்களான வளர்பிறையைச் சுக்கிலபட்சம் என்றுத் திசை திருப்பிவிட்டார்கள். நமக்கு உரியவை வளர்பிறையும், தேய்பிறையும். முழுநிலவுக்குப் பிறகும் மறைநிலவுக்குப் பிறகும் தோன்றிக் கணக்கிட பெறுகின்ற நாட்களை தமிழர்கள் முதல்பிறை, இரண்டாம்பிறை, மூன்றாம் பிறை என்று தொடங்கிப் பதின்நான்காம் பிறைவரை கணக்கிட்டார்கள். இதையே பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்தசி என்று கூறுகின்றார்கள். இவற்றில் அஷ்டமியும் (எட்டாம் பிறை) நவமியும் (ஒன்பதாம் பிறை) நல்லதற்கு உரியதல்ல என முடக்கிவைத்திருப்பது அறிவியலுக்கு உகந்ததா என ஆய்வு செய்யவேண்டும். மேல்நாட்டினர் அஷ்டமி, நவமி என நாட்களைப் பார்ப்பதில்லை. எனவே இது ஆய்வுக்கு உரியது. அதே நேரத்தில் தமிழரின் எட்டாம்பிறையும், ஒன்பதாம்பிறையும் முடக்கத்திற்கு உரியதல்ல... நாள், நட்சத்திரம், கோள் என தமிழர் வானவியல் கால நெடுங்கணக்குச் சிந்தனை மூடப்பழக்கத்தால் முடமாகிப் போயிருக்கிறது. பஞ்சாங்கம் என்பதே வானவியல் சூத்திரம். ஆனால் அது

வணிகமாகிவிட்டது. பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கம் என அர்த்தம். விண்மீன், கதிரவன், நிலவு, கோள்கள், புவி ஆகிய ஐந்தின் செயல்பாட்டினை விளக்குவதே பஞ்சாங்கம் (சொல்லப்போனால் பழந்தமிழர் நாள், நேரக்காட்டி). ஆனால் அது இடைசெருகளால் சோதிடநூலாக மாறி மூடப்பழக்கத்தை விதைக்கிற வேராக மாறியிருக்கிறது. ஆகவே பஞ்சாங்கம் என்ற இன்றைய நூலின் மூலவடிவம் வானவியல் மட்டும் கொண்டது.

வானம், சூரியன், சந்திரன், விண்மீன்கள், கோள்கள் என்பன மனிதனுக்கு என்றைக்கும் அதிசயப் பொருட்கள்தான். ஆனால் மனிதனின் அறிவு, முயற்சி என்பன இவ்வதியசங்களின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கியுள்ளன. அதனால்தான் மனிதனால் சந்திரனுக்குப் போகமுடிந்தது. சந்திரனுக்கு அப்பால் போகின்ற கலங்களும் இருக்கின்றன. இவற்றின் தொடக்கம் ஹெலிகாப்டர் எனும் உலங்கு ஊர்தி (இன்றைய ஹெலிகாப்டர் அல்ல; பழையது); லியோனார்டோ டாவின்சி ① எனும் ஓவியர் ஒருவரின் கற்பனையில் உருவான ஓவியமேயாகும். இன்றைக்கு அதைப் பார்த்தால் அதன் பழமை வடிவம் வேடிக்கையாக இருக்கும்.

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்பது கவிஞர் கண்ணதாசனின் வரிகள். அதில் உண்மை இருக்கவே செய்கின்றன. முதலில் பறக்கமுடியுமா பறவையைப் போல் என மனிதன் கற்பனை செய்தான். அக்கற்பனை உண்மையானபோது விமானம் பிறந்தது. இவ்வகை கற்பனை தமிழ் இலக்கியத்தில் நிறைய இருக்கின்றன. இவ்வகை கற்பனை சீவகசிந்தாமணி (மயிற்பொறி), கம்பராமாயணம் (புட்பக விமானம்), புறநானூறு (வானவூர்தி), பெருங்கதை (வானவூர்தி), மணிமேகலை (வானவூர்தி) ஆகிய தமிழ் இலக்கியங்களில் நிறைய இருக்கின்றன.

கம்பராமாயணத்தில் இராவணன் செலுத்திய புட்பகவிமானம் எல்லா வகையிலும் சீவக சிந்தாமணி விவரித்த மயிற்பொறி விமானத்தைவிட பன்மடங்கு மேம்பட்டது. அவ்விமானத்தின் பயன்கள் அனைத்தையும் விலாவாரியாக விளக்கிக் கூறி தன்னை ஒரு புதுவகை விமான உருவாக்கத் தொழில்நுட்ப மேதையாகவே காட்டிக்கொள்கிறார் கம்பர். அது அவரின் கற்பனையென்றாலும் அதில் நிஜமாகிற அறிவியல் இருந்தது.

கம்பஇராமாயணத்தில் இன்னொரு இடத்தில் இந்த விமானம் சம்பந்தமானக் குறிப்பு வருகிறது. இராவண வதம் முடிந்து குறிப்பிட்ட நாழிகைக்குள் பரதனைக் காணவேண்டும். பரதன் இருப்பதோ அயோத்தியில்; பரதனைக் காணாவிட்டால் தீக்குளித்துவிடுவான். எனவே உடனடியாக பரதனிடம் போய்ச்சேர ஊர்தி உண்டா என வீடணனை நோக்கிக் கேட்கிறான் இராமன்.

ஆண்டு பத்தோடு நாலும் இன்றோடு அறும் ஆயின்
மாண்டதாம் இனி என்குலம் பரதனே மாயின்
ஈண்டுப்போக ஓர் ஊர்தி உண்டா? (யுத்த மீட்சி – 141)

என்பதே பாடல் வரிகள்.

வீடணன் உண்டு என்று சொல்லி உலக உருண்டை வடிவை ஒத்திருந்த அந்த புட்பக விமானத்திக்கொண்டு வந்து இராமனுக்குக் கொடுக்கிறான். இராமன் அதில் சீதை, இலட்சுமணனுடன் பயணிக்கிறான். வீடணன் விமானத்தைகொண்டு வந்து நிறுத்திய காட்சியே விமானத் தொழிற்நுட்பத்தைக் காட்டுகிறது. ஆயிரம் கதிரவன்கள் ஒரு சேரத் தோன்றினால் எத்தகைய பேரொளி ஏற்படுமோ அவ்வளவு ஒளி பொருந்திய அவ்விமானம் மிகப்பல மணிகள் ஒலிக்க விமானத்தை வீடணன் கொண்டுவந்தான் என்கிறான் கம்பர். ஒரு கவிஞரின் கற்பனையில் அழகாகச் சொல்லியிருந்தாலும் அப்படி ஒரு விமானம் அந்தக் காலத்தில் இருந்திருக்கலாம் என்று எண்ண இடமளிப்பதுபோல் கம்பராமாயணத்தில் மட்டுமல்ல. அதற்கு முந்திய சங்க இலக்கியமான புறநானூறு, மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்றவற்றிலும் காணப்படுகின்றன.

பெருங்கதை எனும் பழந்தமிழ்க் காவியத்தில் வானவூர்தி வடிவமும் அதனை இயக்கும் விதமும் விவரிக்கப்பட்டுள்ளன. சீவகசிந்தாமணியில் வரும் மயிற்பொறியின் (மயில் போன்ற பறக்கும் தேர்) செயல்திறன் மேலும் வியப்பூட்டுவதாக உள்ளது. அதன் பொறியினை வலஞ்சுழி, இடஞ்சுழியாக திருகுவதன்மூலம் அவ்வானவூர்தி வானமேகங்களிடைப் பறக்கவோ காண்பவர் திகைக்கும் வண்ணம் தரையில் இறங்கச் செய்யவோ முடியும்.

மணிமேகலையில் வான் வழிப் பயணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்திலும் வானவூர்தி வருகிறது. புறநானூறில் 'வலவன் ஏவா வான ஊர்தி' (புறம் – 27, 8) என்ற வரிகளில் சங்க காலத்திலேயே ஓட்டுபவர் இல்லா வானவூர்தியைக் கொண்டிருந்தான் என்கிற அரிய, பெரிய கருத்து வியக்க வைக்கும் செய்தியாக இருக்கிறது. விமானத்தை ஓட்டுகிறவனை (காப்டன்) தமிழில் 'வலவன்' என அழைக்கிற சொல்லோடு வானவூர்தியைக்கொண்ட புறநானூற்றுத் தமிழன் (வானவியல்) நமக்கு முன்னோடிதானே? ஆனால் அந்த முன்னோட்டத்தை இன்றையத்தமிழர் உணர்ந்தனரா?

தமிழ் இலக்கியங்களில் வெவேறு காலகட்டத்தில் வெவ்வேறு புலவர்கள் மூலம் வந்திருக்கிற இச்செய்திகளெல்லாம் கற்னையானது என்று ஒதுக்கிவிடமுடியுமா? வரலாறு எழுதாவிட்டால் கற்பனை ஆகிவிடும். ஆனால் ஓர் ஆங்கிலேயர் எழுதிய கற்பனையும் வரலாறாகியிருக்கிறது.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு அமெரிக்கர் சந்திரமண்டலம் போவதை ஒரு கற்பனை நாவலாக எழுதினார். அவரின் கற்பனை 19ம்

நூற்றாண்டின் பிற்பகுதியில் நனவானது. அதுபோலவே பழந்தமிழ் இலக்கியங்களில் வானில் பறக்கின்ற எந்திரத்தை விமானம் என்றும், வானவூர்தி என்றும், மயிற்பொறி என்றும் அழைத்திருக்கின்றனர். ராமாயணத்தில் இராவணனிடம் வானில் பறக்கிற விமானம் இருந்ததாக வால்மீகி, கம்பர் ஆகியோர் குறிக்கின்றனர். அப்படியாயின் தென்திசை ஆண்ட இராவணனே வானவியல் அறிவியல் போன்றவற்றில் முன்னோடியாக இருந்திருக்கிறான் என்றுதானே அர்த்தம்? ஆகவே பழந்தமிழர் நிலத்தை மட்டுமல்ல நீளவானத்தையும் கைக்குள் அடக்கியவர்கள் என்பதை உறுதி செய்வதே வானவூர்திகளாகின்றன. அவ்வானவூர்திகள் கற்பனையானாலும் இன்று நனவாகியிருக்கிற அறிவியலே அது என்கிறபோது வியப்பே தோன்றுகிறது!

மேற்கோள் நூல்கள்

①② வள்ளுவத்தில் காதல் கணிதம், பொறிஞர். இரா.சிதம்பரம் – திலகம் பதிப்பகம் – 1993.

③ அறிவியல் நோக்கில் கம்பர் – மணவை முஸ்தபா, வானதி பதிப்பகம் – 2003.

④ வானவியல் : சாஸ்திரி வெங்கட்ராமன், தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு.

⑤ வானில் பூத்த வடிவங்கள் : நெல்லை சு.முத்து ஓம்சக்தி – 1997, பிப்ரவரி.

20. விளையாட்டு

அறிவுக்கும், உடலுக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிப்பது விளையாட்டாகும். விளையாட்டு என்றால் விரும்புகின்ற ஆட்டம் என்றும், இன்பம் விளைவிக்கும் ஆட்டம் என்றும் விதிகளை வைத்துக்கொண்டு ஆடும் ஆட்டம் என்றும் சிலர் பொருள் குறித்துள்ளனர். பொதுவாக விளையாட்டின் நோக்கம் பொழுதைப் போக்குவது மட்டுமல்ல. அது அவனோடு அடுத்தவனைத் தோழமை கொள்ளவும், ஓரணிக்குள் திரள்கிற பயிற்சியையும் கொடுக்கின்றது. எல்லைகள் கடந்து நேசத்தையும் தருகிறது.

விளையாட்டு மனிதனுக்கு முக்கியமானது. அதிலும் குழந்தைப் பருவத்தில் விளையாட்டு மிக முக்கியமானது. குழந்தைகள், சிறுவர்கள் ஓடவேண்டும். குதிக்க வேண்டும். துள்ள வேண்டும். மேலை நாடுகளில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்காக விளையாடும் திட்டத்தை அறிமுகம் செய்கிறார்கள். ஆறு மாதக் குழந்தையை நீச்சல் குளத்திற்குக் கொண்டு போகிறார்கள் வெள்ளைக்காரப் பெற்றோர்கள். ஏனையோரை வயதுக்கு ஏற்ற விளையாட்டுகளில் சேர்த்து விடுகிறார்கள். வயது முதிர்ந்த மேலை நாட்டினர் கூட இருபாலரும் செயற்கை புல்தரையில் கையால் குனிந்து பந்துகளை உருட்டி விளையாடுகின்றனர். விளையாட்டு அவர்களுக்குப் பயிற்சி மட்டுமல்ல ஒரு பாடம்.

மகாகவி பாரதியார் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் 'பாப்பா பாட்டு' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் 'ஓடி விளையாடு பாப்பா' என்ற வரிகளை முதலிலேயே சொல்கின்றார். குழந்தைகள் விளையாட வேண்டும் என்பதை பாரதி உணர்ந்திருகின்றார். ஓடி விளையாடும் குழந்தைதான் உடல் நலத்திலும் கல்வியிலும், மேம்பட்டு இருக்கும் என்பது மருத்துவ அறிஞர்களின் கருத்து. இவற்றை உணர்ந்துதான் மேலைநாடுகளில் குழந்தைக்கான முதல் கல்வியையே விளையாட்டுப்பள்ளி (Play School)யில் தொடங்கினர். ஒவ்வொரு நகரத்திலும் குழந்தைகள் பூங்காவை (Children Park) மேல்நாட்டவர் உருவாக்கினர். ஆனால் தமிழகத்தில் குழந்தைகள் ஓடி விளையாட முடியாமல் தான் வாழும் இடத்திலேயே ஒரு தோழனையோ, தோழியையோ தேடிக்கொள்ள முடியாமல் கல்வி என்பதன் பேரில் சங்கிலிகளால் பிணைத்து விட்டனர். காலையில் பள்ளிக்குப் போகிற மாணவர்கள் சூரியனின் ஓய்வுக்குப் பிறகும் மாலை நேரக் கல்வி (Tuition) படித்துவிட்டு வருகிறார்கள். எனவே அவர்களால் உடலால் ஆன விளையாட்டு விளையாட முடியவில்லை.

பள்ளியிலேயே விளையாட்டு பாடமாக இருக்கிறது. ஆசிரியரின் பார்வையிலே அது நடக்கிறது. மாணவர்கள் விரும்பிய – விரும்பாத

பாடங்கள் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றன. ஆங்கில மொழிக் கல்விக்கு ஏற்ற ஆங்கிலேயரின் விளையாட்டே தமிழர் சார்ந்த கல்விக்கூடங்களில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. எனவே வேறு வழியின்றி குழந்தைகள் அவற்றைக் கற்க வேண்டியிருக்கிறது. இதுவும் ஒரு வகையான திணிப்புதான்.

பிறமொழிகளையோ, பிறநாட்டு விளையாட்டுக்களையோ கற்க வேண்டாம் என்பது என் கருத்து அல்ல. ஆனால் தமிழர்களுக்கென்று பாரம்பரிய தமிழர் விளையாட்டுகள் இருக்கின்றன. அவற்றை இளைய தலைமுறையினர் கற்க வேண்டாமா? கற்பதற்கு முன்னர் அவற்றை அறிய வேண்டாமா?

தாய் மண்ணைச் சார்ந்த மொழி, விளையாட்டு என்பது மரபு சார்ந்தது. இன்னும் இலகுவாகச் சொல்வதானால் அடித்தளம் போல். அடித்தளம் இல்லாமல் கட்டடம் எழுப்ப முடியுமா? முடியாது. ஆனால் முடியும் என்று சொல்பவர்கள் கொட்டகை தான் எழுப்ப முடியும். கொட்டகை போட அடித்தளம் தேவை இல்லை. கொட்டகை கட்டடம் ஆகாது. அதுபோலவே ஆயிரம் பிற மொழிகளைக் கற்றாலும் தாய்மொழி, தாய் மண் சார்ந்த விளையாட்டு தெரியாவிட்டால் கொட்டகை போல்தான்.

உலகப் புகழ் பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் கோடி, கோடியாய் பணம் குவிக்கும் ஒரு விளையாட்டு. அந்த விம்பிள்டன் டென்னிஸ் விளையாட்டில் அமெரிக்க வெள்ளையர்கள் வெல்கிறபோது அமெரிக்கர்கள் வென்றார்கள் என்றார்கள். ஆஸ்திரேலிய வெள்ளையர்கள் வெல்கிறபோது ஆஸ்திரேலியர்கள் வென்றார்கள் என்றார்கள். ஆனால் கறுப்பன் ஒருவனோ ஒருத்தியோ வென்றபோது அவன் சார்ந்த நாட்டைச் சொல்லாமல் விம்பிள்டனை வென்ற கறுப்பர் என்றார்கள். இதில் பேத உணர்வு இருப்பதை உணரவில்லையா? விம்பிள்டன் டென்னிஸ் வெள்ளையர்களின் விளையாட்டு. எனவே வெள்ளையர்கள் தவிர்ந்த அந்நியர் ஆடுகிறபோது வெல்கிறபோது இப்படியெல்லாம் சொல்வது அது வெள்ளையர் விளையாட்டு என்பதை மறைமுகமாகச் சொல்லத்தான்.

திறமையாக மேலைதேச விளையாட்டுக்களை விளையாடுகிற கறுப்பர்களை வெள்ளையர்கள் ஏற்கிறபோதும், இன்னொரு பக்கம் ஏற்க மறுத்த வரலாறு உண்டு. சர்வாதிகாரி ஹிட்லர் ஜெர்மனியில் ஒலிம்பிக் நடந்தபோது தங்கப் பதக்கம் வென்ற ஒரு ஆப்பிரிக்க கறுப்புநிற விளையாட்டுக் காரனோடு கைகுலுக்க மறுத்தான்.

இன்றைக்கு உலகெங்கும் பரவியிருக்கிற கிரிக்கெட் (Cricket) டென்னிஸ் (Tennis) ஹாக்கி (Hockey) பேட்மின்டன் (Badminton) உதைப் பந்தாட்டம் (Foot Ball) என பல விளையாட்டுகள் யாவுமே மேற்றிசைநாடுகளில் உருவாக்கப்பட்டவை. இவற்றைப் பரப்ப ஆங்கில

ஏகாதிபத்தியம் தனது காலணித்துவ ஆட்சியின் மூலம் உதவியது. இன்றைக்கு மேற்சொன்ன விளையாட்டுகளோடு கூடிய வர்த்தகத்தின் தொகை கணக்கிட முடியாது. இவற்றின் மூலம் நேரடியாக – மறைமுகமாக லாபம் அடைந்தவர்கள் மேல்நாட்டவரே!

மேற்சொன்ன விளையாட்டுக்களை ஆங்கிலத் திரைப்படங்கள் உலகெங்கும் அறிமுகப்படுத்தின. இதே போன்று புரூஸ்லி என்ற சீன நடிகரால் கராத்தே, குங்பூ, தேக்கேவா போன்ற விளையாட்டுகள் உலகெங்கும் பரவின. இதற்கு தமிழகம் விதிவிலக்கு அல்ல. தமிழகத்தில் சிறிய–பெரிய நகரங்களில் சீன, ஜப்பானிய விளையாட்டுக்களைச் சொல்லிக் கொடுக்கிற சிறு சிறு நிலையங்கள் உருவாகிவிட்டன. இவ்வகை விளையாட்டுக்களைத் தமிழ்த் திரைப்பட நாயகர்களும் தூக்கிப் பிடித்திருக்கிறார்கள். தமிழர்களை சுலபமாக சென்றடையக்கூடிய தொலைக்காட்சி ஒளிபரப்புகள் அந்நிய விளையாட்டுக்களைத் தூக்கிப் பிடிக்கின்றன. பெரும்பாலான நாளிதழ்களும், வார இதழ்களும் ஏனை ஊடகங்களும் இதே வழியையே பின்பற்றுகின்றன. இதன் எதிரொலியாக கராத்தே, குங்பூ, தேக்கோவா போன்றவை பயிற்சி வகுப்புகளாக இங்கு பரவி இருக்கின்றன. பெண்களும் இவற்றைப் பழகுகின்றனர். ஏனையோர் கிரிக்கெட், பேட்மிட்டன், உதைப்பந்தாட்டம், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களைப் பயின்று வருகிறார்கள். மிகக் குறைந்தோரே தமிழர் விளையாட்டுக்களைப் பயின்று வருகிறார்கள்.

தமிழர்களுக்கென்று தனித்துவமான விளையாட்டுக்கள் இருந்தன என்பதே மெள்ள மெள்ள தமிழர்களுக்கே மறந்து வருகிறது. தமிழர்களுக்கென்று விளையாட்டுகள் இல்லை என்று எண்ணக்கூடிய காலம் உருவாகியுள்ளது. ஆனால் பல துறைகளில் அர்த்தமான அறிவியலைக் கண்ட தமிழன் விளையாட்டுத் துறையிலும் தனித்துவம் கொண்டவன் என்பதே மறந்து வருகிறது.

சங்க காலத் தமிழர்களிடம் விளையாட்டு இருந்திருக்கிறது என்பதை தொல்காப்பியத்தில் வருகிற விளையாட்டு என்ற சொல் நிரூபிக்கிறது. விளையாட்டு என்றால் என்ன என்பதற்குப் பழங்காலப் புலவர்கள் இலக்கணம் ஏதும் வரையறுத்துக் கூறவில்லை. இருப்பினும் உவகை என்னும் மெய்யுணர்வு தோன்றுவதற்குரிய நான்கு வகை களன்களைக் கூறுமிடத்து தொல்காப்பியர் விளையாட்டையும் ஒன்றாகக் கூறுகின்றார்.

செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த நான்கே (தொல் – மெய் – 11)

இப்பாடலில் விளையாட்டு என்ற சொல் வருகிறது. அதனோடு ஒரு செய்தியும் வருகிறது. அச்செய்தி; ① செல்வத்தால் ஏற்படும் நுகர்ச்சியாலும், புலமையால் ஏற்படும் அறிவு முதிர்ச்சியாலும் உள்ள இணைப்பாலும் உள்ளம்

ஒத்தாரோடு கூடி ஆடும் விளையாட்டாலும் துன்பம் நீங்கிய மகிழ்ச்சி தோன்றும்.

இதிலிருந்து மனமகிழ்ச்சி ஊட்டும் ஒரு செயலே விளையாட்டு என்னும் வரைவிலக்கணத்தைப் பெறமுடிகிறது.

தொல்காப்பியத்தில் 'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு' என்னும் வரிகள் (உரி–21) வருகின்றன. இதில் வருகிற கெடவரல், பண்ணை என்னும் இரண்டும் இருவகை நில விளையாட்டுகளைக் குறிப்பதாக தமிழ் ஆய்வறிஞர் ஞா.தேவநேயப் பாவாணர் கருதுகிறார்.

தமிழில் வழங்கும் ஆடு என்னும் சொல்லும் அதிலிருந்து தருவிக்கப்படும் ஆட்டு–ஆட்டம் என்னும் சொற்களும் நடனமாடு (Dance) நடி (Act) விளையாடு (Play) ஆகிய அர்த்தங்களை உள்ளடக்கி இருக்கின்றன. எனவே தமிழரின் தொடக்க கால விளையாட்டு கூத்து, பாட்டு, இசை, ஆட்டம், போர் ஆகியவற்றின் கலவையாக இருக்க வேண்டும். காலம் செல்லச் செல்ல விளையாட்டு தனித்துறையாக வளர்ந்து வந்திருக்கிறது. குழந்தைகளின் வீதி விளையாட்டுகளும், மகளிரின் கும்மியும் கோலாட்டமும், ஆடவரின் சிலம்பும் பழங்காலக் கூட்டுப் பண்பை காட்டுகின்றன. ஆக தொல்காபியம், திருக்குறள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் இருக்கிற குறிப்புகளைப் பார்க்கிறபோது பழந்தமிழரின் விளையாட்டின் வயது தொல்காப்பியம் காலத்திற்கு முந்தியது என்று அறியமுடிகிறது. தொல்காப்பியத்தில் இருக்கிற குறிப்புகள் விளையாட்டின் இலக்கணத்தைச் சொல்வதாக இருப்பதால் விளையாட்டு சம்பந்தமான அறிவியல் அதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும்.

தமிழர் விளையாட்டு :

பழங்காலத் தமிழர்கள் உடலை வளர்க்கும் பண்பாட்டில் நன்கு கவனம் செலுத்தினர். உடலை நன்முறையில் பேணுதல் அறம் என்றும், அவ்வாறு செய்யாவிட்டால் உடல் திறனும் தேடிய செல்வமும் அழியும் என்று நம்பினர். இக்கருத்தை நற்றிணை எனும் பழந்தமிழ் இலக்கியம்

'விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்லிடத்து இற்செறித் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேயம்' (நற்றிணை–68;1–3)

எனும் பாடல் மூலம் தெரிவிக்கின்றார். ஆகவே பழந்தமிழர் இளைய பருவத்தினரை விளையாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்து அவர்களின் உடல் வளத்தைப் பெருக்குவதில் நாட்டம் கொண்டனர்.

'விளையாட்டும் வினையாகும்' என்பது தமிழர் முதுமொழி. வினை என்றால் செயல் என்றும் நல்வினை என்றும் தீவினை என்றும் அகராதி

அர்த்தங்கள் தருகின்றன. எனவே விளையாட்டு ஒரு நல்வினை அல்லது ஒரு செயல் என்றே கொள்ள முடிகிறது. (ஆனால் இப்பழமொழி வேறு அர்த்தத்தில் இப்போது சொல்லப்படுகிறது.) சங்க காலத்தில் விளையாட்டை வினைத் தொழிலாகக் கொண்ட ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். கடுவன் இள மள்ளனார், கருவன் மள்ளனார், மதுரை அளக்கர், ஞாழார் மகனார் மள்ளனார், மள்ளனார் ஆகிய நான்கு புலவர்களின் பெயர்களில் மள்ளன் என்னும் பெயரைக் கொண்டு முடிகின்றன. இவர்கள் மள்ளற் கலையைக் கற்பிக்கும் குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். ஆகவே அக்காலத்தில் இயற்றமிழிலும் உடல் பயிற்சிக் கலையிலும் வல்லவர்கள் இருந்திருக்க வேண்டும். தற்காலத்தில் உடல் பயிற்சி நிலையங்கள் இருப்பதைப் போல் சங்க காலத்தில் இருந்ததற்கான சான்றுகளாக போரவை, முரண்களரி போன்ற சொற்கள் பயிற்சிக் கூடங்களுக்காக இருந்திருக்கின்றன. பட்டினப்பாலையில் 'முரண்களரி' என்பது பயிற்சிக்கூடமே. இன்றைக்கு களரி என்ற சொல் கேரளாவில் இருக்கிறது. களரிப் பணிக்கர் என்பது உடல் பயிற்சிக் கலையைக் கற்பிக்கும் ஆசிரியரே.

சங்க கால இலக்கியங்கள் மூலமாக குறிப்புகளைப் பார்க்கிறபோது சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு சேர்ந்த வாழ்க்கை நடத்தினார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. மண் சார்ந்த வேளாண்மையும் நீர் சார்ந்த தொழிலும் அவர்கள் வாழ்க்கையில் பின்னிக் கிடந்தன. எனவே ஓய்வு கிடைக்கும்போது அவர்கள் விளையாடினார்கள். இவ்வாறு ஐந்திணை மக்களும் விளையாடினர். சில விளையாட்டுகள் குறிப்பிட்ட திணைக்கே உரியது. சங்க கால இலக்கியக் குறிப்புபடி 37–க்கும் மேற்பட்ட விளையாட்டுகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை மட்டும் விரிவாகக் காணலாம். ②

1) ஊசல் எனும் ஊசலாட்டம் :

இது இப்போது ஊஞ்சல் எனப்படுகிறது. மரக்கிளைகளில் அல்லது வீடுகளில் உயர்விட்டங்களில் கயிறுகளால், கொடிகளின் தண்டுகளால் ஊஞ்சல் கட்டி அதில் அமர்ந்து ஆடி மகிழ்தல் ஆகும். இதில் பெரும்பாலும் பெண்களே பங்கேற்பர். சங்க காலத்தில் தலைவியை ஊஞ்சலில் வைத்து ஆடியவாறு பாடியதாகக் குறிப்புகள் இருக்கின்றன. நற்றிணை எனும் நூலில் (நற்–90; 6–7)

பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க ஊங்காள்

என்ற வரிகளில் அது வெளிப்படுகிறது. மணிமேகலையில் 'மடவோர்க்கிம் பற்றிய மாமணி யூசல் (மணி;45–75) எனச் சொல்லப்படுகிறது. முப்பது வருடங்களுக்கு முன்பு வரை இருந்த ஊஞ்சல் விளையாட்டு இன்று

குறைந்து விட்டது. ஆனால் மேற்கு நாடுகளில் பொதுப்பூங்காதோறும் ஊஞ்சல்கள் அமைத்திருக்கிறார்கள்.

2) ஓரையாடல் :

மகளிர் ஆடும் ஒரு வகை விளையாட்டு. நண்டு, ஆமை என்பனவற்றைச் சிறு கோல்கொண்டு அலைத்து விளையாடும் விளையாட்டே ஓரையாடல் ஆகும். இன்றும் கடற்கரை, நதிக்கரை, குளக்கரை ஆகிய பகுதிகளில் சிறுவர்கள் ஊர்ந்து திரியும் சில பூச்சிகளைக் கோல் கொண்டு அலைத்து ஆடி மகிழ்வர்.

புறநானூறு பாடலில் (புறம்-176)

'ஓரையாயத் தொண்டோடி மகளிர்'

என்ற வரிகளில்

குறுந்தொகையில் (குறுந்-401)

'ஓரைமகளிர் அஞ்சியீர் நண்டு
கடலிற் பரிக்கும்'

என்ற வரிகளில்

நற்றிணையில் (நற்றிணை-68)

'விளையாட்டாயமொடு ஓரையாடாது'

என்ற வரிகளில் இந்த ஓரையாடல் பற்றிய குறிப்புகள் கிடக்கின்றன. இது நெய்தல் நில விளையாட்டு என இப்பாடல் வரிகளில் தெரிய வருகின்றன.

3) ஏறுகோள் :

இது ஆடவரின் வீர விளையாட்டு. கூரிய கொம்புகளை உடைய எருதுகளை ஆயுதம் ஏதுமின்றித் தம் உடல் வலிமையால் இளைஞர்கள் அடக்குவர். இது பற்றி கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் சொல்லப்படுகிறது. இதுவே இன்று சல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, எருதுக்கட்டு என உருமாறி தற்காலத்தில் நிகழ்ந்து வருகிறது.

4) குதிரை ஏற்றமும், யானை ஏற்றமும் :

குதிரை, யானை மூலம் ஓடுவது, அசைவது போன்ற விளையாட்டு. குதிரை ஓட்டமும் இதன் வழியே வந்ததுதான். இதுவும் பழங்கால விளையாட்டே!

5) சிறு தேர் :

தேரினை உருட்டியும், இழுத்தும் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு. இதற்கு உருள், சகடம், தேர் எனப் பெயரிட்டு அழைத்தனர். கிராமங்களின் தென்னை மரங்களிலிருந்து விழும் பிஞ்சு இளநீர் காய்களின் மூலம் தேர் செய்து விளையாடுவர்.

6) நீர் விளையாடல் :

நீரிலே விளையாடுவது, நீச்சலடிப்பது, உயரமான இடத்திலிருந்து குதிப்பது, படகோட்டுவது என்பன நீர் விளையாட்டு. இதனை 'புனலாடல்' என்பர். தமிழில் சங்க இலக்கியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும் மிகச் சிறப்பான இடம் பெற்றுள்ள இவ்விளையாட்டு சலவிளையாட்டு, மஞ்சனம் ஆடல், ஆய விளையாட்டு என்ற பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது. நீர் எறிந்து விளையாட சுண்ண விளையாட்டு, சுழிநீர்க்கோடு, முட்டியனை வட்டு, விசிறி, பந்து போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டதை 'பெருங்கதை' சொல்கிறது. 'நீரணி விழா' என ஓர் நீர் விளையாட்டு 'சிலப்பதிகாரத்தில்' வருகிறது. 'புறநானூறில்' புனலாடுதல் தொடர்பாக ஒரு விளையாட்டு வருகிறது. அது (243-வது)

'இனிநினைந் திரக்க மாகின்று திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத்தை இத்
தண்கயம் ஆடும் மகளிரொடு கைப்பிணைந்து'

என்ற பாடல் மூலம் சொல்லப்படுகிறது. கெட்டியான மணலில் உருவம் செய்து அதற்குப் பூப்பறித்து அணிவித்து, குளிர்ந்த நீரில் ஆடும் பெண்களோடு கைகோர்த்துக் கொண்டு ஓடி விளையாடினோம். பிறகு குளக்கரையில் நீருக்கு அருகே உள்ள வளைந்த கிளைகள் உள்ள மருத மரத்தின் உயர்ந்த கிளைகளில் ஏறி, கரையில் இருப்பவர்கள் வியக்க திடுமென குளத்தில் விழுந்து, அடிவரை சென்று மணலைக் கையில் அள்ளிக் கொண்டு வந்து கரையில் இருப்போருக்குக் காட்டி மகிழ்ந்த இளமை எங்கே? என்பதே அப்பாடலின் கருத்து.

நீர் விளையாட்டு தமிழரோடு தொடர்பானது. நேற்று குளங்களில், கிணறுகளில் நீச்சல் கற்றனர். 'சுரக்குடுக்கையை முதுகிலே கட்டி கிணற்றில் நம் முன்னோர் நீந்திப் பழகினர். ஆனால் இன்று நவீன நீச்சல் குளங்களில் மருந்து கலந்த தண்ணீரில் பழகுகின்றனர்.

7) பந்து :

உருண்டை வடிவமுள்ள விளையாட்டுப் பொருள். கை விரல் ரேகை பந்தின் மீது பதிந்துவிடும் அளவு பளபளப்பான மேற்பரப்பு கொண்டது. பந்தெற் களம், பந்தடி மேடை இருந்த விபரங்களை சங்க இலக்கியங்கள் சான்று கூறுகின்றன. பந்து என்றே சங்க இலக்கியம் விளக்குகிறது. பந்துகளை பஞ்சடைப்பந்து, செம்பொன் செய்த வரிப்பந்து, பூப்பந்து என்ற வகை இருப்பதாக அதன் மூலம் தெரிகின்றது. இருபத்தியொரு பந்துகளைப் பயன்படுத்தி 'எண்ணாயிரம் கை' பந்தடித்த மானணீகை என்ற பெண்ணைச் சீவக சிந்தாமணி குறிப்பிடுகிறது. பந்தாடும் பொழுது இடையிடையே கூந்தலை முடித்தல், பொட்டு வைத்தல், ஆடை திருத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டதும் தெரிய வருகிறது. இது பெரும்பாலும்

மாடி வீடுகளில் உள்ள மேல் மாடங்களில் ஆடக்கூடியது. இச்செய்தியை, பெரும்பாணாற்றுப்படை;

பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ் சிறந்தாலும்
பீலி மஞ்ஞையின் இயலிக்கால
தமணியப் பொற்சிலம்பு ஒலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசை இக் (பெரும்;329-333)

என்ற பாடல் வரிகளில் சொல்கிறது. அதன் உரை வடிவம் 'மணிகள் கோத்த வடங்களையுடைய அல்குலில் துகில் கிடந்து அசைய பெரிய மலையடுக்கத்து மன எழுச்சியால் ஆரவாரிக்கும் மயில் போல உலாவிக் காலிடத்தனவாகிய பொற்சிலம்பு ஒலிப்பவும், வானத்தைத் தீண்டும் மேனிலை மாடத்தின் கண்ணே பந்தாடுதலை செய்து இளைத்து' என்பதே.

சீவக சிந்தாமணியில் சீவகன் மனைவியோடு பந்தாடிய செய்தி வருகிறது. அன்று நூலினால் வரிந்து கட்டப்பட்ட பந்துகள் வழக்கிழந்து இன்று ரப்பர் மூலமான பந்துகள் பயன்படுத்தப்பட்டாலும் நூல்பந்தின் எச்சம் குமரி மாவட்டம், கேரளத்தின் சில பகுதிகளில் இருக்கின்றன. அவற்றை ஓணப்பந்து, துணிப்பந்து என்று அழைப்பர்.

8) மல் (மற்போர்) :

கருவிகளின் துணையில்லாமல் தமது உடல் வலிமையால் இருவர் தமக்குள் சண்டையிடும் ஒருவகை வீரவிளையாட்டு; போர்முனை எனலாம். இதற்கு நடுவர் நியமிக்கப்பட்டிருந்தார். மற்போரின் தொடக்கத்தை மற்பறை ஒலித்து அறிவிக்க அரசர், வீரர், பெண்டிர் அனைவரும் காண மகிழ்ந்து குழுமிய செய்தியை 'பெருங்கதை' என்ற சங்க (52;3115-3117) இலக்கியத்திலே காணலாம். சிலப்பதிகாரத்தில் இருவர் மோதிய மல்யுத்தத்தை 'அளையும் யானை போற் பாய்ந்து மல்லொற்றியும்' என்று வர்ணித்துள்ளார் இளங்கோ அடிகள். அதாவது இரு யானைகள் மோதி பொருந்துவது போல் மல்யுத்தம் நிகழ்ந்துள்ளது. நம்முடைய இந்த மல்யுத்தம் ஜப்பானில் அப்படியே விளையாட்டாக நிலவி வருகிறது. அது இங்கிருந்து போனதுதான் இன்று மல்யுத்தம் ஏனைய நாடுகளில் மேல்நாட்டினர் வகுத்த விதிமுறைகளுடன் ③ மல்யுத்தமாக (WRESTLING) நடத்தப்படுகின்றது. அதே நேரத்தில் இவ்விளையாட்டு மாற்றம் பெற்றுப் பல தற்காப்புக் கலை விளையாட்டுகளாக உருப்பெற்றுள்ளன.

9) கழங்காடுதல் :

மகளிர் விளையாட்டுகளில் கழங்காடுதல் ஒருவகை. இதைச் சுட்டிப் பிடித்தல் என்றும் வழங்குவர். வீடுகளின் திண்ணைகளில் அல்லது சற்று மேடான பகுதிகளில் 'கழங்கினை' வைத்து (கழங்கு-சூது, கழற்சி

விளையாட்டு, கழற்சிக்காய்) ஆடுவர். பொன்னாலான கழங்கினை வைத்து திண்ணைகளில் ஆடிய செய்தி,

'செறியரிச் சிலம்பின் குறுந்தொடிமகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றொற்றியாடும்..'

எனும் புறநானூறு பாடலில் (எண்-36) சொல்லப்படுகிறது. பெரும்பாணாற்றுப்படையிலும்,

முத்துவார் மணல் பொற்கழங்காடும் (327-335)

என்ற வரிகள் மூலமும் கழங்காடிய செய்தி தெரிய வருகிறது. இப்பொழுது இது பாறைகளித்தல் அல்லது சுட்டி பிடித்தல் என்று வழங்கப்படுகிறது. கழங்கிற்குப் பதில் சிறிய உருளை வடிவக் கற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

10) வட்டாடல் :

பண்டைத் தமிழர் விளையாட்டுகளில் சிறப்புற்றிருந்த ஒன்று வட்டாடுதல். (வட்டாடல்-வட்டை உருட்டிச் சூதாடுதல்) இதற்காக அரங்கம் இழைத்துக் காய்களை நகர்த்தி விளையாடும் இவ்வகை ஆட்டம் ஒருவகை சூதாட்டத்தை ஒத்தது. கல்லாத சிறுவர்கள் வேப்ப மரத்து நிழலில் வட்டரங்கிழைத்து நெல்லிக்காயை வட்டாகக் கொண்டு ஆடிய செய்தியை நற்றிணையில் (நற்றிணை-3;2-5)

'பொரியாரை வேம்பின் புள்ளிநீழல்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்
வில்லேருழவர் வெம்முனைச் சீறூர்..'

என்ற பாடலில் குறிப்பிடுகிறார் புலவர்.

பாலைநிலத்து வருணனைப் பற்றிக் குறிப்பிடும் அகநானூறு பாடலில் (பாடல் எண் - 5) பாறையில் உதிர்ந்து கிடந்த பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் வட்டுப் போல் தோன்றியதாகக் காட்டுகிறது. வட்டாடுதலை, வல்லாடுதல் என்றும் குறிப்பிடுவர். இவ்விளையாட்டை திருவள்ளுவர்,

அரங்குஇன்றி வட்டுஆடி அற்றேநிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல் (401)

என்ற திருக்குறளில் சுட்டிக் காட்டுகிறார். ஆகவே இந்த வட்டாடல் எனும் விளையாட்டு, குறள் காலத்து விளையாட்டு என்று ஆகிறபோது அதன் வயது 2036 ஆண்டுகளுக்கு மேலாகின்றன என்பது உறுதியாகத் தெரிகின்றது. எனவே பழந்தமிழரும் விளையாட்டுகளிலும் அறிவியல் வழி சிந்தனை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதே தமிழருக்கு மரபு சார்ந்த பெருமையாகிறது.

தமிழர் ஒலிம்பிக்

தொல்காப்பியத்திலே விளையாட்டு என்னும் சொல்லுக்கு இணையாகப் 'பண்ணை' எனும் சொல் கையாளப்படுகின்றது. பண்ணை என்பது நிலத்தைக் குறிப்பதாகும். விளையாட்டு எனும் சொல் முதலில் 'நிலஆட்டத்தை' மட்டும் குறித்துப் பின்பு எல்லா வகையான ஆட்டங்களைக் குறித்து வந்திருக்கிறது. மனத்திற்கு இன்பமூட்டும் நேரிடையாகப் பயன் கருதாத பொழுது போக்குச்செயலே விளையாட்டு என்பது பழந்தமிழர் கருத்தாகும். விளையாட்டானது கூத்து, இசை, பாட்டு ஆகியவற்றின் கலவையான ஒன்றிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். பழங்காலத்தமிழர் விளையாட்டுக்கள் சமய சார்பு இல்லாதவை. ஆனால் சமூகச் சார்பு, சமுதாயமாக்கல் (Socialization) என்னும் பணியைச் செய்தன. ஆனால் இன்றைக்கு ஓர் ஆட்டத்தை விளையாட்டாகக் கருதவும் விளையாட்டுக்களை வகைப்படுத்தவும், விளையாட்டுக்கள் ஏன் தோன்றின? என்பன பற்றியெல்லாம் உலக அளவில் சிந்தனைகள் தோன்றியிருக்கின்றன.



அன்றும் – இன்றும் – சிலம்பக்கலை

தற்காலத்தில் எல்லாப் பொழுதுபோக்கு ஆட்டங்களையும் (Plays) விளையாட்டுக்களாக (Games) எடுத்துக்கொள்வது இல்லை. ஒரு செயலை விளையாட்டாகக் கருத வேண்டுமானால் ஐந்து விதிகளுக்குள் அது அமைய வேண்டும். அந்த ஐந்து விதிகள் :

1) அமைப்பு கொண்ட விளையாட்டாக இருக்க வேண்டும்.

2) போட்டியை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் குழுக்களாக இருந்து பங்கேற்க வேண்டும்.

4) வெற்றியை ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகளை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

5) பாதுகாப்புக் கவசம் கொண்டதாக இருக்க வேண்டும்.

மேற்கண்ட ஐந்து விதிகள் இருந்தால் தான் நவீன உலகில் ஒரு விளையாட்டு உலக மயமாகக்கூடியதாக இருக்கும். இந்த வகையில் பார்க்கிறபோது தமிழரின் தனித்துவமான விளையாட்டுகள் உலகமயமாக்கப் படுகிறபோது பல சிக்கல்களைச் சந்திக்கும். இது அனுபவ பூர்வமான உண்மை. மேலும் பழந்தமிழர் விளையாட்டுகள் பரவலாக்கபடாமல் குறிப்பிட்ட மக்கள் சார்ந்த பகுதியில் இருப்பதால் அவை எல்லைகளைக் கடக்க முடியவில்லை. அதே நேரத்தில் அந்நிய படையெடுப்புகளினால் இவ்விளையாட்டுகள் வலுவிழந்து கரையத் தொடங்கின. சில உருமாறி பெயர் மாறத் தொடங்கியது. உதாரணத்திற்கு சிலவற்றைப் பார்ப்போம்.

1) மல், மற்போர் : மல், மற்போர் என அழைக்கப்படும் விளையாட்டு. இவ்விளையாட்டுக்காக மற்பறை என்ற இசைக்கருவியே இருந்திருக்கிறது. இவ்விளையாட்டு சங்க காலத் தமிழர்களிடம் இருந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் பதினொரு வகைக் கூத்துகளுள் ஒன்றாக மல் என அழைக்கப்படும் மல்லாட்டத்தைக் குறிப்பிடுகின்றனர். ஆகவே மல் அல்லது மல்லாட்டம் (WRESTLING) கைக்குத்துச் சண்டை (BOXING) ஆகிய இரண்டும் இருந்திருக்கின்றன. ஆனால் இன்று மல்லாட்டம் வெளிநாடுகளில் புகழ் பெற்றிருக்கின்றது.

2) வில் விளையாட்டு :

வில் விளையாட்டு என்பது அம்பினைச் செறித்துக் குறிபார்த்து எய்தல். வில் வித்தையினைக் கற்றுத்தர கை தேர்ந்த ஆசிரியர்கள் இருந்துள்ளனர். சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விற்போர், வாட்போர் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. தஞ்சையில் உள்ள கல்வெட்டில் இராஜஇராஜசோழனின் காலத்தில் நடந்த விற்போர் பற்றிய செய்தி இருக்கிறது. இந்த விற்போர் 'காரிக் குளிப்பாகை' என்பவனுக்கும் அரங்கன் காரியான சோழவிச்சாதர முத்தரையன் என்பவனுக்கும் நடைபெற்றது. இதில் குளிப்பாகை இறந்துவிட்டான். ஆங்கிலத்தில் `ARCH'ERY' (வில்வித்தை) என்று அழைக்கப்படும். இவ்விளையாட்டு நவீனப்படுத்தப்பட்டு 'ஒலிம்பிக்' வரை வந்துவிட்டது.

3) கலைக்கூத்து :

கலைக்கூத்து எனப்படும் கயிற்று நடனம். 60களிலே திரைப்படங்களிலே இருந்த இக்கலை வலுவிலந்து போய் இருக்க மேலைநாடுகளில் அது பல பரிணாமம் பெற்று உடல்வித்தையாக (GYMANATICS) மாறி நிற்கிறது.

4) கிலி கிலியாடல் :

கிலி கிலியாடல் என்பது சிறுவர்கள் கிலுகிலுப்பை என்னும் கருவியைக் கொண்டு ஒலியெழுப்பி மகிழ்கிற விளையாட்டு. சங்க காலத்தில் இருந்து இந்த வழக்கம் வேறுபாடின்றி இன்றளவும் தொடர்ந்து வருகின்றது. சிறுபாணாற்றுப்படை என்ற இலக்கியத்தில்,

கிளர்பூண் புதல்வரொடு கிலிகிலியாடும் (சிறுபா-61)

என்று வருகிறது. இன்றும் ஏழை முதல் செல்வந்தர் வீடுகளில் உள்ள குழந்தைகளின் அழுகையை அடக்க தம் தகுதிக்கேற்பவோ, தகுதிக்கு மீறியதாகவோ கிலுகிலுப்பைகளை வாங்கிக் குழந்தைகள் கைகளில் கொடுக்கப்படுவது நம் கண்கூடு.

5) கோழிப்போர் :

கோழிப்போர் – தமிழர்கள் விலங்குகள், பறவைகள் போன்றவற்றுக்கும் இடையே வீரம் இருக்கிறது என்பதைக் காட்ட அவைகளை மோதவிட்டு வேடிக்கைப் பார்ப்பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தனர். சங்க இலக்கியத்தில் குறுந்தொகையில் 'குப்பைக் கோழித் தனிப்போர் போல' என்று குறிப்பிடுவதிலிருந்து கோழிப்போர் சங்க காலம் தொட்டு வழக்கிலிருந்தமையை அறிய முடிகிறது. இன்றும் சிறிய நகரங்களில் பெரிய கிராமங்களில் சிறுசிறு கத்திகள் கட்டி பறவைகளை மோதவிடுகிறார்கள். ஆனால் இது வலுவிழந்து வருகிறது. மேலைநாடுகளில் மிருக, பறவை பாதுகாப்பு இயக்கம் என்ற தன் பேரில் இப்போட்டிகளைத் தடை செய்து விட்டனர். விதி விலக்காக கிரீஸ், இத்தாலி நாடுகளில் மட்டும் நடக்கிறது.

6) சடுகுடு :

சடுகுடு இது தமிழர்களின் விளையாட்டு. ஆனால் இந்தியாவில் பல மாநிலங்களில் இது இருக்கிறது. தமிழகத்தில் 'தினத்தந்தி' நாளிதழை நிறுவிய சி.பா.ஆதித்தனார் இவ்விளையாட்டு வளர பல முயற்சிகளை மேற்கொண்டார். 60களில் சடுகுடுவாக வந்த இவ்விளையாட்டு இப்போது 'கபடி'யாக இப்போதைய தமிழ்த் திரைப்படம் அடையாளப்படுத்துகிறது. இது திராவிட விளையாட்டு. திராவிட விளையாட்டு என்றாலே திராவிட மொழியின் தாயான தமிழுக்கே உரியது. ஆனால் இன்று இந்திய விளையாட்டாக மாறிப் போய்விட்டது. (மாற்றப்பட்டுவிட்டது)

7) தாயம் : தாயம். இது தமிழரின் பாரம்பரிய விளையாட்டு. உள்ளரங்க விளையாட்டு (Indoor Game) எனச் சொல்லலாம். பழங்கால நாகரிகத்தில் தாய விளையாட்டில் சுடுவண் காய்களைப் பயன்படுத்தி விளையாடியதாகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள்.

8) பல்லாங்குழி :

பல்லாங்குழி. இது பெண்களால் ஆடப்படும் விளையாட்டு. தரையில் அல்லது மரப்பலகையில் உள்ள பதினான்கு அல்லது இருபத்திநான்கு குழிகளுள் புளிய விதைகளை அல்லது சோழிகளை வைத்து விளையாடுவர். ஒரு சமயத்தில் இருவர் விளையாடலாம். இது கணித முறை சார்ந்த விளையாட்டாகும். சிக்கலான இவ்விளையாட்டு 'செஸ்' விளையாட்டுக்குச் சமமாகக் கருதப்படுகின்றது.

9) கிட்டிப்புள் : கிட்டிப்புள். இது ஆடவர்களால் ஆடப்படும் வெளி அரங்க (Out Door Game) விளையாட்டு. இந்த விளையாட்டில் பெரிய குச்சியும், சிறிய குச்சியும் பயன்படுகின்றன. கிராமங்களில் பரவலாக இருந்த விளையாட்டு. இதுதான் தற்கால கிரிக்கெட் விளையாட்டிற்கு மூல வடிவமாகக் கருதப்படுகின்றது. இவ்விளையாட்டை நவீனப்படுத்தினால் உலகப் புகழ் பெற வாய்ப்புண்டு.

10) சிலம்பம் : சிலம்பம். இது வயது வந்த இளைஞர்களாலும் நடுத்தர வயதுடையவர்களாலும் விளையாடப்படுகின்றது. இது ஆண்களுக்கு உரிய விளையாட்டு. இது பரத நாட்டியத்துடன் ஒத்துப் போவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். சிலம்பாட்டத்தில் முக்கியமான காலடிகள் பரதக் காலடியோடு ஒத்திருக்கிறது. சிலம்பம் பயின்ற ஒருவர் பரதமும் பயில முடியும். இச்சிலம்பாட்டத்தை நவீனப்படுத்துகிற முயற்சி மலேசியத் தமிழர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதனை யாவரும் பின்பற்றினால் சிலம்பம் உலக விளையாட்டாக முடியும்.

ஆங்கிலேயரின் ஆட்சி முறையினால் தமிழகத்திலும் தமிழர் சார்ந்த நிலங்களிலும் ஆங்கில விளையாட்டுகள் மேன்மை அடைந்து தமிழர் விளையாட்டுகள் கிராம விளையாட்டுகளாகத் தள்ளப்பட்டன. கிராமங்களிலும் அவை வலுவிழந்து தள்ளப்பட்டன. அவை ஆண்களுக்கான சல்லிக்கட்டு, பாரி வேட்டை, சிலம்பம், சடுகுடு, ஓட்டம், இளவட்டக்கல், உரிமரம் ஏறுதல், வண்டி ஓட்டம், ஆடுபுலி ஆட்டம், மல், வில் பெண்களுக்கான தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், நொண்டியாட்டம், கண்ணாமூச்சி, உயிர்மூச்சு, கிச்சு கிச்சு தாம்பலம், ஊஞ்சல் எனச் சொல்லலாம்.

நேற்றுவரை கிராமப் புறத் தெருக்களில் இருந்த தட்டாங்கல், நொண்டியாட்டம், கண்ணாமூச்சி என்பனவற்றை இன்று காணவில்லை. அதற்குக் காரணம் நகர்ப்புறக் காற்றில் கலந்துவிட்ட அந்நியக் கலாசாரமேயாகும். கண் மூடித்தனமான ஆங்கில வழிக்கல்வியுடன் கூடிய நாகரிகம் கிராமத்து தமிழ்மரபுகளை எல்லாத்துறைகளிலும் அழித்து வருகிறது இன்று. ஆங்கிலம் சார்ந்த விளையாட்டு வேண்டாம் என்பது என் கருத்தல்ல. தமிழரின் விளையாட்டும் இருக்கட்டுமே. உலகெங்கும் வாழ்கிற எட்டு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் தனித்தன்மையுடன் கூடிய தமிழர்

விளையாட்டை முன்னெடுக்க முடியாதா என்ன? தமிழர் சுய அடையாளத்தைப் பறிகொடுத்து இன்னொரு இனத்தின் அடையாளத்தைச் சுமக்க வேண்டுமா?

தமிழர் விளையாட்டு தமிழரின் விளையாட்டு. அதனைப் புறக்கணிப்பது நம்மை நாமே புறக்கணிப்பதற்கு சமமானது. மலேசியத் தமிழர்கள் சிலம்பத்தை நவீனப்படுத்தி உலகில் பலநாடுகளுக்கு அறிமுகம் செய்து வருகிறார்கள். அவ்வடிப்படையில் ஆஸ்திரேலியா, ஜெர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் சிலம்பம் அறிமுகமாகியிருக்கிறது. சிலம்பக்கலை ஒரு விளையாட்டாக (Game) மாறினால் உலக அரங்கில் தமிழுக்கு மரியாதை கிடைக்கும். அதனை உணர்ந்து மலேசியத் தமிழர்கள் சிலம்பக் கலையை நவீனப்படுத்தி வருகிறார்கள்.

சிலம்பத்தை ஒரு கலையாக முதற்சங்க காலம் முதற்கொண்டே மூவேந்தர்கள் ஆதரித்து வந்துள்ளார்கள். திருவிளையாடற் புராணத்தில் சிலம்பாட்டம் இருந்ததற்கான குறிப்புகள் இருக்கின்றன. வைத்திய நூலான 'பதார்த்த குணசிந்தாமணி'யில் சிலம்பப் பயிற்சி, குதிரைப் பயிற்சி மூலம் ஒருவரின் உடல் வலுவடையுமென்றும் பல நோய்களைத் தீர்க்கும் என்றும் சொல்லப்படுகிறது. சிலம்பாட்டத்தின் முக்கியத்துவம் அதன் அடி (கால்) வரிசையில் இருக்கிறது. ஒவ்வொரு அடிக்கும் தனித்தனிப் பெயருண்டு. இவ்வடிவரிசை பரதத்தோடு பொருந்தி வருகிறது.

சிலம்பாட்டம் என்பது கம்பை மட்டும் வைத்து விளையாடுவதல்ல. சுருள்வால், ஈட்டி, கட்டாரி, சங்கிலி, மான்கொம்பு வைத்தும் இவ்விளையாட்டை விளையாடலாம். முன்பு போர்ச்சிலம்பம் இருந்தது. அதைப் போருக்கும் மட்டும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இரண்டாவது அலங்காரச் சிலம்பம். திருவிழாக் காலங்களில் முக்கிய நிகழ்ச்சிகளில் கம்பைப் பல விதமாகச் சுழற்றுவது தீச்சிலம்பம். இரவில் சிலம்புக் கம்புடன் தீப்பந்தம் வைத்து சுழற்றுவது.

தமிழ்நாட்டில் வேலூரில் ஒரு கோட்டை இருக்கிறது. அந்தக் கோட்டையில் சிலம்பக்கூடம் இருக்கிறது. குறுநில மன்னர்களின் ஆட்சியிலும், சிலம்பம் பரவியிருந்தது. ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகு அதன் வளர்ச்சி குன்றியது.

இந்தியாவில் புத்தமதம் எழுச்சியோடு இருந்த காலத்தில் ④சீனாவில் இருந்து வந்த புத்தபிக்கு தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து சிலம்பம், மல் போன்ற விளையாட்டுக்களைப் பார்த்துக் கற்றுப் போயிருக்கிறார். விளைவு? தமிழரின் விளையாட்டு கராத்தே, குங்பூ, தேக்கோவா என உருமாறி வளர்ச்சி பெற்றுள்ளது. அந்த புத்தபிக்கு தமிழகம் வந்ததை சீனாவில் ஒரு புத்த விகாரையில் எழுதி வைத்திருக்கிறாராம்.

இன்றைக்கு சிலம்பம் உலக விளையாட்டாகப் பரிணமிக்கிற காலம் வந்து கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் மலேசியாவில் இயங்கும் சிலம்பக் கழகம். சிலம்பத்தை கலை என்ற வட்டத்தில் இருந்து மீட்டு விளையாட்டாக மாற்றியதே ஆகும். இதேபோல் ஏனைய தமிழரின் கலைகளையும் மறுசீரமைத்து விளையாட்டாக மாற்றினால் இன்றைக்கு 40 நாடுகளில் வாழ்கிற தமிழர்கள் கலந்து கொள்கிற தமிழ் ஒலிம்பிக் விளையாட்டு நடத்தலாமே!

மேற்கோள் நூல்கள் :

① தமிழர் பண்பாட்டில் விளையாட்டுக்கள், டாக்டர் அ.பிச்சை, தமிழ்ப்புத்தகாலயம்–2002.

② பழந்தமிழரின் பொழுது போக்குகள் – கட்டுரை ஆய்வாளர் செ.ந.பெ.நேசர் (உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் களஞ்சியம்–மலேசியா)

③ கட்டுரை, முனைவர் பொற்கோ நந்தன் இதழ், 1–15.7.98

④ மலேசிய சிலம்ப மலர் – 1999, கோலாலம்பூர், மலேசியா.

Poompuhar site could be cradle of modern civilisation : Study

BY R.VENKATRAMANI

Dec-17-2002 - The New Indian Express

Proyar, Dec.16 : A submerged coastal city near Poompuhar in Nagapattinam district could well be the birth place of modern civilisation, archaeologists say.

Based on research done by him in the area, Graham Hancock, an Edinburgh-born marine archaeologist, claims the Poompuhar site could pre-data Sumeria in Mesopotamia, which is where civilisation is believed to have originated 5,000 years ago.

The Poompuhar site was swallowed by the sea 11,000 years ago, he revealed during a speech at an exhibition organised by the Mythic Society, Bangalore last week.

According to some fascinating details made available to this correspondent, Graham came across evidence during an underwater exploration in the area in 2001 to show that it could have been swallowed up by a 400-foot tidal ware at the end of the last Ice Age somewhere between 17,000 and 7,000 years ago. Another Indian city similarly submerged was the Gulf of Camby, in the north west.

Citing ancient Tamil flood myths which speak of a great kingdom called Kumari Kandam that once existed in this area but was eventually swallowed up by the sea, Graham says this means the Poompuhar site could date back 11,600 years.

Prior to Hancock's findings, the National Institute of Oceanography (NIO), Goa, had conducted offshore archaeological investigations in the same area in the late 1980s using the Sidescan Scanner. One man-made structure was sing-led out for investigation in 1991 and 1993. The divers also found a horse-shoe-sha-ped object at a depth of 23 meters.

Onshore exploration near Chinnavanagiri, south of Poompuhar, revealed a ring well along with megalithic black and red wares. A few ring wells were also found near Vanagiri, Tranquebar and Poompuhar. A Sangam period brick structure was unearthed near the present Kannagi statue at Poompuhar. Another

L-shaped brick structure was also noticed at low tide, suggesting that a large part of Poompuhar must have been submerged in the sea.

Even after such findings near Poompuhar, the NIO, surprisingly, did not evince interest after 1993. In 2001, when Hancock visited South India, he caught up with the NIO and in 2001, arranged for an exploration funded by Channel 4 in Britain and the Learning Channel in the US. The remains of the submerged city were videgraphed. Further research convinced Hancock that the ruins were of great antiquity, probably dating more than 7,000 years ago. Glenn Milne, a geologist at the University of Durham, Uk, confirmed Hancok's views, which later threw up evidence that the submerged city near Poompuhar was far superior than any found in the Ha:appan sites.

Hancok's findings seem to signal the start of an exciting era in Indian archaeology. Further exploration might solve more mysteries about the origin of modern civilisation.

Ironically though, the Poompuhar findings have evoked no interest amount Indian archeologist through Poompuhar town holds a pride of place in the history of ancient Tamil Nadu as the port capital of the Cholas and the location for the epic Silapatigaram.

துணை நூற்பட்டியல்கள்

1. தொல்காப்பியம்
2. திருக்குறள்
3. சங்க இலக்கிய நூல்கள்
4. சித்தர் பாடல்கள்
5. திருமூலர் திருமந்திரம்
6. லெமூரியாக் கண்டம் அல்லது குமரிக்கண்டம் – கழகம்
7. சிந்து வெளித் தொல் தமிழக நாகரிகம் – பி.இராமநாதன்
8. தமிழ்மொழியும் தமிழரசும் – நாமக்கல் கவிஞர்
9. தமிழர் தோற்றமும் பரவலும் – புலவர் கா.கோவிந்தன்
10. நாடும் மொழியும் – வெ.சாமிநாத சர்மா
11. தமிழப் பேரரசு – சி.பா.ஆதித்தனார்
12. தமிழும் தமிழரும் – நா.கடிகாசலம்
13. கழகத் தமிழ் வினா–விடை
14. தமிழர் வரலாறும் பண்பாடும் – நா.வானமாமலை
15. தமிழர் நாகரிகமும் பண்பாடும் – டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி
16. தமிழர் பண்பாடு – புலவர் சி.அரசப்பனார்
17. தமிழர் பண்பாடு – புலவர் கா.கோவிந்தன்
18. தமிழர் நாகரிகமும் பண்பாடும் – டாக்டர் மா.இராசமாணிக்கனார்
19. தொல்லியல் நோக்கில் சங்க காலம் – முனைவர் கா.ராஜன்
20. தமிழ்ப்பண்பாடு – முனைவர் திருநாவுக்கரசு
21. தமிழியல் ஆய்வு 2003 – சோ.இராசேந்திரன்
22. நாம் தமிழர் – பொ.சங்கரப்பிள்ளை
23. ஆதிச்சநல்லூரும் பொருநை வெளி நாகரிகமும் – சாத்தான்குளம் அ.இராகவன்
24. சங்க இலக்கியத்தில் கலங்கள் – விக்டர் ராஜமாணிக்கம், வே.சா.அருள்ராஜ்
25. யாழ்ப்பாணக்குடியேற்றம் – அ.முத்துக்குமாரசாமிப்பிள்ளை
26. சங்கத்தமிழ் விருந்து – மறக்குணத்து வே.பிரபாகரன்
27. மண்ணுரிமை – குணா
28. வள்ளுவத்தின் வீழ்ச்சி – குணா
29. சங்க கால மறவர் – டாக்டர் அ.முத்தையா
30. அறிவியல் தமிழியல் – நெல்லை சு.முத்து
31. தமிழகத் தொன்மையும் சிறப்பும் – மா.கந்தசாமி
32. திருக்குறளும் திருக்குர்ஆனும் – பேராசிரியர் ப.முருகன்
33. காலந்தோறும் அறிவியல் – முனைவர் வி.உண்ணாமலை

34. தமிழின் சிறப்பு – கி.ஆ.பெ.விசுவநாதம்
35. தமிழகத் துறைமுகங்கள் – பா.ஜெயக்குமார்
36. தமிழாய்வு – பேராசிரியர் ந.சஞ்சீவி
37. பழந்தமிழாட்சி – ஞா.தேவநேயன்
38. சோழர் கலைப்பாணி – எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம்
39. தமிழர் கட்டிடக்கலை – முனைவர் கோ.தெய்வநாயகம்
40. தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள் – டாக்டர் அ.பிச்சை
41. யாழ்நூல் – ஆ.அ.வரகுணபாண்டியன்
42. தற்காலத் தமிழிலக்கியப் போக்குகள் – சோம.இராசேந்திரன்
43. நோயின்றி வாழ சித்த வைத்தியம் – டாக்டர் பெ.கிருஷ்ணன்
44. மூலிகை மருத்துவம் – திருஞானம்
45. பதார்த்தகுணசிந்தாமணி
46. அறிவியல் நோக்கில் தமிழ்ப் பழமொழிகள் – தஞ்சை இரா.இந்து
47. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் – டாக்டர் கே.கே.பிள்ளை
48. உலகத்தமிழர் பேரவை மாநாட்டு மலர் – சென்னை
49. ஐந்தாவது உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டு மலர் – சிட்னி 1992
50. காலவரையறையுடன் தமிழ்ச்சங்கங்களில் வரலாறு – அ.சிதம்பரனார்

தமிழ் அகராதிகள் - களஞ்சியங்கள்

1. அபிதான சிந்தாமணி – ஆ.சிங்காரவேலு முதலியார்
2. தமிழ் – தமிழ் அகர முதலி – ஆ.சண்முகம் பிள்ளை
3. உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் களஞ்சியம் – கா.கலியபெருமாள், மலேசியா.
4. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
5. தமிழ்மறை திருக்குறள் கையேடு, அமெரிக்கா.

ஆங்கில அகராதிகள் - நூற்கள்

1. The Oxford Dictionary of Quotations
2. Collins Soft Back English Dictionary
3. New Views on An Old Planet (Continental Drift and The History of the Earth) TJEERD H.Van Andel

பயன்படுத்திய நூலகம்

1. New South Wales Library - Sydney, Australia.
2. நூலகம் – சிட்னி தமிழ் அறிவகம், சிட்னி, ஆஸ்திரேலியா.
3. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், தஞ்சாவூர்.
4. பாரதி நூலகம், நிறுவனர் : பழங்காசு ப.சீனிவாசன், காட்டூர்.
5. சிற்றிதழ் சேகரிப்பாளர் – தி.மா.சரவணன், திருச்சி.

மாத்தளை சோமுவின் இதர நூல்கள்

சிறுகதைத் தொகுதி

1. தோட்டக்காட்டினிலே (மூவர் கூட்டுத்தொகுதி) – இலங்கை.
2. நமக்கென்றொரு பூமி – மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
3. அவன் ஒருவனல்ல – மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
4. அவர்களின் தேசம் – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.
   (தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி இலக்கிய விருது–1994)
5. கறுப்பு அன்னங்கள் – நர்மதா பதிப்பகம், சென்னை.

நாவல்

6. அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் – நர்மதா பதிப்பகம், சென்னை.
   (இலங்கை சாகித்திய விருதுபெற்ற நாவல்)
7. எல்லை தாண்டா அகதிகள் – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.
   (இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பின் சிறந்த நாவல் விருது–1995)
8. அவள் வாழத்தான் போகிறாள் – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.
9. மூலஸ்தானம், தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.
   (இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பின் சிறந்த நாவல் விருது–1998)

குறுநாவல்

10. நான்காவது உலகம் – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.

குட்டிக்கதைகள்

11. இலங்கை நாட்டுத் தெனாலிராமன் கதைகள்,
    மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
12. சீனக்கோமாளியின் கதைகள் – கௌரா பதிப்பகம்.

பயணக்கதை

13. மாத்தளை முதல் மலேசியா வரை – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.
14. லண்டன் முதல் கனடா வரை – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.
15. சிட்னி முதல் நோர்வே வரை – தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.

நூலாசிரியர் பற்றி...

மனிதன் மனிதனாக இருப்பதே ஒரு அதிசயம். அந்த அதிசயம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று எழுதி வருபவர் மாத்தளை சோமு. இவரின் மூதாதையர் நாடு தமிழகம். பிறந்த தேசம் இலங்கை. வாழும் நிலம் ஆஸ்திரேலியா.

புலம்பெயர்ந்து வாழும் இவர் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தமிழ் வார, மாத முன்னணி இதழ்களில் சிறுகதை, கவிதை, கட்டுரை எனப் பலவற்றை எழுதிப் பெயர் பதித்தவர். தமிழகத்தில் சிற்றிதழ் வட்டாரத்திலும் எழுதி வந்தவர். இதுவரை இவரின் நான்கு சிறுகதைத் தொகுதிகள், நான்கு நாவல்கள், ஒரு குறுநாவல், மூன்று பயணக் கதைகள், இரண்டு குட்டிக் கதைகள் என்பன நூலாக வெளிவந்திருக்கின்றன.

அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் என்ற நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதையும், **எல்லை தாண்டா அகதிகள்** (1994), **மூலஸ்தானம்** (1998) ஆகிய நாவல்கள் இலங்கை சுதந்திர இலக்கிய சங்கத்தின் (விபவி) சிறந்த நாவலுக்குரிய விருதுகளையும், **அவர்களின் தேசம்** என்ற சிறுகதைத் தொகுதி, சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி விருதையும் பெற்றது.

மலேசியாவில் நன்கு அறிமுகமான இவர், மலேசியத் தமிழ்ப் படைப்புகளை அறிமுகம் செய்வதில் இலக்கியப் பாலம் அமைக்கும் முயற்சியாக மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளைத் தொகுத்துத் தமிழிலும், மொழிபெயர்த்து ஆங்கிலத்திலும் வெளியிட்டார்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவுக்கும் பல முறை இலக்கிய பயணம் மேற்கொண்ட இவருக்கு கனடா நாட்டில் – உதயன் பத்திரிகை எழுத்தாளருக்கான (2000) **தங்கப் பதக்கத்தையும்,** தமிழர் தகவல் (கனடா) என்னும் மாத இதழ் வெளியிடும் அமைப்பு 2004ஆம் ஆண்டிற்கான **தமிழர் தகவல் இலக்கிய விருதையும்** வழங்கிச் சிறப்பித்தன.

இந்திய சாகித்திய அகாதமி வெளியிட்ட **அயலகத் தமிழ் இலக்கியம்** என்ற சிறுகதைத் தொகுப்பில் இவரின் சிறுகதையும் இடம்பெற்றுள்ளது.

தமிழாய்வு, மொழிபெயர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் **உதகம்** (உலகத் தமிழாய்வுக் கழகம்) என்னும் அமைப்பை நிறுவியிருக்கிறார்.